2011 ஆண்டினுள்
மூன்று கட்டங்களில் நடாத்தப்பட்ட
உள்ளூராதிகார சபைத் தேர்தல்கள் தொடர்பான
தேர்தல்கள் ஆணையாளரின் அறிக்கை

பகுதி I

முன்னுரை

2011 ஆம் ஆண்டு மூன்று கட்டங்களில் நடாத்தப்பட்ட உள்ளூர் அதிகார சபைத் தேர்தலின் முதலாம் கட்டம் அதாவது 2011.03.17 ஆம் திகதி நடாத்தப்பட்ட தேர்தல் அப்போதைய தேர்தல்கள் ஆணையாளர் திரு. தயானந்த திசாநாயக்க அவர்களின் வழிநடாத்தலின் கீழ் நடாத்தப்பட்டது. அவர் 2011.03.25 ஆம் திகதி பதவியிலிருந்து இளைப்பாறியதன் பின்னர் தேர்தல்கள் ஆணையாளராக நியமனம் செய்யப்பட்ட என்னால் 2011.07.23 ஆம் திகதி மற்றும் 2011.08.10 ஆம் திகதிகளில் நடாத்தப்பட்ட இரண்டாம் மற்றும் மூன்றாம் கட்ட இரு தேர்தல்களுக்குமான பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அக்காலப்பகுதியில் மேலதிக தேர்தல்கள் ஆணையாளராகக் (உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்) கடமையாற்றிய திரு. டப்ளிவ்.பீ. சுமனசிறி அவர்கள் இம்மூன்று கட்டங்களிலும் தேர்தலுக்கான அனைத்துப் பணிகளையும் ஒருங்கிணைப்புச் செய்ததோடு, இவ்வறிக்கையைத் தயாரிக்கும் முதன்மைப் பணியும் அவரால் ஆற்றப்பட்டது.

இத்தேர்தல்கள் நடாத்தப்பட்டமை தொடர்பான அறிக்கை 2014 ஆம் ஆண்டு நடுப்பகுதியளவில் தயாரித்து நிறைவு செய்யப்பட்டிருந்தது. இருப்பினும், 2011.01.06 ஆம் திகதி வேட்புமனுக் கோரப்பட்டிருந்த அதுவரை நிலக்கன்னி வெடிகள் அகற்றுதல் மற்றும் மக்களைக் குடியமர்த்துதல் ஆகிய பணிகள் நிறைவடையாமை காரணமாக அடிக்கடி பிற்போட நேரிட்ட முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு மற்றும் கரைத்துறைப்பற்று பிரதேச சபைகள் இரண்டுக்கான தேர்தலில் போட்டியிடுவதற்கு எதிர்பார்த்திருந்த அனைத்து அரசியல் கட்சிகளின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் 2012.03.10 ஆம் திகதி இத்தேர்தல்களை நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது. இருப்பினும், அத்தினத்தில் இத்தேர்தலை நடாத்துவதற்கு எதிராக மேற்கொள்ளப்பட்டிருந்த நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு (CA(writ)72/12 மற்றும் (CA(writ)74/12) உரியதாக வழங்கப்பட்ட இடைக்காலத் தடையுத்தரவு மற்றும் அம்முறைப்பாட்டு விசாரணைகள் நிறைவடையாமை ஆகிய காரணங்களால் 2011 ஆம் ஆண்டின் உள்ளூர் அதிகார சபைத் தேர்தலின் 4 ஆம் கட்டத்தை நடாத்துவதற்கு முடியாமல் போனமையால் இவ்வறிக்கையை 2014 ஆம் ஆண்டு நிறைவிலும் வெளியிடுவதை இடைநிறுத்த நேரிட்டது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள முறைப்பாடுகள் 2015.01.28 ஆம் திகதி கேட்டு விலக்கிக் கொள்ளப்பட்டமை காரணமாக அவ்விரு உள்ளூர் அதிகார சபைகளதும் தேர்தலை 2015.02.28 ஆம் திகதி நடாத்துவதற்கு திகதி குறிக்கப்பட்டிருந்தது. அவ்வாறு திகதி குறிக்கப்பட்டவாறு தேர்தலை நடாத்துவதற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அடிப்படை உரிமை மீறல் முறைப்பாடுகள் இரண்டிற்கு (SE/FR31/2015 மற்றும் SE/FR29/2015) உயர் நீதிமன்றத்தினால் வாக்கெடுப்பை அத்தினத்தில் நடாத்துவதைத் தடைசெய்யும் கட்டளையொன்று பிறப்பிக்கப்பட்டது. அத்தேர்தல்களையும் நடாத்தி அதனோடு தொடர்புடைய விடயங்களையும் இவ்வறிக்கையினுள் உட்சேர்க்கும் தேவைப்பாடு காரணமாக 2015 ஆம் ஆண்டு மார்ச்/ ஏப்ரல் காலப்பகுதியினுள் வெளியிடுவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த இவ்வறிக்கையை வெளியிடும் தினத்தை பிற்போடுவதற்கு நேரிட்டது. தற்போது அவ்விரு தேர்தல்களுக்குமுரிய பெயர் குறித்த நியமனப் பத்திரங்களை இரத்துச் செய்யும் சட்ட வரைவொன்றை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கையெடுக்கப்படுவதாக அறிக்கையிடப்பட்டுள்ளமையினால் முன்னர் குறிப்பிட்ட நான்காம் கட்டம் நடாத்தப்படமாட்டாதென்பதால் 2011 ஆம் ஆண்டின் உள்ளூர் அதிகார சபைத் தேர்தல் தொடர்பான இவ்வறிக்கையை மிகவும் தாமதமாகவேனும் வெளியிடுவதற்கு சாத்தியம் கிடைக்கப்பெற்றமை மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

தேர்தல் முடிவுகள் மற்றும் எண்ணிக்கை ரீதியான குறிப்புக்கள் தொடர்பில் ஆர்வம் காட்டுகின்ற அனைவருக்கும் மற்றும் தேர்தலோடு தொடர்புடைய பணிகள் தொடர்பில் ஆர்வம் காட்டுகின்ற அனைவருக்கும் இதில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் மிகவும் பயனுள்ளதாக அமையுமென எண்ணுகின்றேன்.

2017 ஆகஸ்ட் 31,
தேர்தல் ஆணைக்குழு,
இராஜகிரிய.

மஹிந்த தேசப்பிரிய,
தேர்தல்கள் ஆணையாளர்,
2011.03.25 ஆம் திகதி தொடக்கம் 2015.11.13 ஆம் திகதி வரை

உள்ளடக்கம்

I ஆம் பிரிவு 1
அறிமுகம் 1
விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறையின் ஆரம்பம் 1
முதலாவது விகிதாசார உள்ளூர் அதிகார சபைத் தேர்தல் 1979 1
அபிவிருத்தி சபைகள் தேர்தல் 1981 1
உள்ளூரதிகார சபைகள் தேர்தல் 1983 2
பிரதேச சபைகளை தாபித்தல் 2
விருப்பு வாக்கு முறையின் ஆரம்பம் 3
உள்ளூரதிகார சபைத் தேர்தல் 1987 4
முதலாவது ஒருநாள் உள்ளூர் அதிகார சபைத் தேர்தல் 1991 4
உள்ளூர் அதிகார சபைத் தேர்தல் 1994 (கிழக்கு மாகாணம் மற்றும் வவுனியா நகர சபை) 6
உள்ளூர் அதிகார சபைத் தேர்தல் 1997 6
உள்ளூர் அதிகார சபைத் தேர்தல் 1998 6
உள்ளூர் அதிகார சபைத் தேர்தல் 2002 7
உள்ளூர் அதிகார சபைத் தேர்தல் 2006 7
உள்ளூர் அதிகார சபைத் தேர்தல் 2008 மற்றும் 2009 8

II ஆம் பிரிவு 10
உள்ளூர் அதிகார சபைகள் உள்ளடக்கத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் 10

III ஆம் பிரிவு 12
பூர்வாங்க ஒழுங்கமைப்பு அலுவல்கள் 12
தேருநர் இடாப்பு 12
வாக்கெடுப்பு மாவட்டங்களை வேறுபிரித்தல் 13
வாக்கெடுப்பு நிலையங்கள் 14
பணியாட் குழு மற்றும் வாகனங்கள் கணக்கெடுப்பு 14
தெரிவத்தாட்சி அலுவலர்கள் மற்றும் உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள் 15
அரசியல் கட்சிகள் 15

IV ஆம் பிரிவு 17
பெயர் குறித்த நியமனப் பத்திரங்கள் 17
அடிப்படை பின்னணி 17
பெயர் குறித்த நியமனப் பத்திரங்களைக் கையேற்றல் 18
பெயர் குறித்த நியமனப் பத்திரங்களைப் பரீட்சித்தல் 19
முடிவுகளை அறிவித்தல் 19
பெயர் குறித்த நியமனப் பத்திரம் பற்றிய மீளாய்வு 20

V ஆம் பிரிவு 22
அவசர அச்சிடல் பணிகள் 22
வாக்குச் சீட்டுக்கள் 22
வீடுகளுக்கான அறிவித்தல் 23
வாக்கெடுப்புத் தொடர்பான அறிவித்தல் 24
45(1) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல் 24

VI ஆம் பிரிவு 26
ஏனைய பூர்வாங்க தேவைப்பாடுகள் 26
அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கான வசதிகள் 26
உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை 28
வாக்காளர் தமது ஆளடையாளத்தை உறுதி செய்வதற்கான தேவைப்பாடு 29
தோதான குறியீட்டினால் அடையாளமிடல் 30
வாக்கெடுப்பு நிலையங்களின் மேற்பார்வை 30
வாக்கெடுப்புக் கண்காணிப்பு அலுவல்கள் 31
வாக்கெடுப்பு நிலைய முகவர்கள் மற்றும் தொடர்புடைய விடயங்கள் 33
பாதுகாப்பு நடவடிக்கைகள் 33

VII ஆம் பிரிவு 35
வாக்காளர்கள் மற்றும் தேர்தலோடு தொடர்புடைய ஏனைய தரப்பினரை அறிவுறுத்தல் 35
நியதிச் சட்ட அறிவித்தல்கள் 35
பெயர் குறித்த நியமன அறிவித்தல் 35
வாக்கெடுப்புத் தொடர்பான அறிவித்தல் 35
உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை 36
அஞ்சல் வாக்காளர்களுக்கான அறிவித்தல் 36

அஞ்சல் வாக்குகள் விநியோகிக்கப்படுவதாக அறிவுறுத்தல் 36
வாக்கெண்ணல் தொடர்பான அறிவித்தல் 36
முடிவுகளை வெளியிடுதல் தொடர்பான அறிவித்தல் 37
முடிவுகளை வர்த்தமானி பத்திரிகையில் வெளியிடுதல 37
சட்ட வரையறையற்ற அறிவித்தல்கள் 37
வீடுகளுக்கான அறிவித்தல்கள் 37
ஊடக அறிவித்தல்கள் 37
ஏனைய அறிவித்தல்கள் 38

VIII ஆம் பிரிவு 40
அரசியல் கட்சிகளின் செயலாளர்கள், அதிகாரமளிக்கப்பட்ட முகவர்கள் மற்றும் குழுக்களின் தலைவர்கள் மற்றும் வேட்பாளர்களை அறிவுறுத்தல்.கட்சிச் செயலாளர்களுடனான கலந்துரையாடல் (ஆலோசனை குழுக் கூட்டங்கள்) 40

IX ஆம் பிரிவு 42
பணியாட் குழு மற்றும் போகுவரத்து தேவைப்பாடு 42
பணியாட் குழு தேவைப்பாடு 42
போக்குவரத்து தேவைப்பாடு 43

X ஆம் பிரிவு 45
தேருநர்களுக்கு விஷேட வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் 45
வலிமையிழப்பிற்குட்பட்ட வாக்காளர்களுக்குத் தனிப்பட்ட போக்குவரத்து வசதிகளை செய்து கொள்வதற்கான அனுமதியளித்தல் 45
வலிமையிழப்பொன்றிற்குட்பட்ட வாக்காளர்களுக்கான வாக்குச் சீட்டினை அடையாளமிடுவதற்காக உதவியாளர் ஒருவரை உடனழைத்து செல்வதற்காக அனுமதி வழங்கல் ....
தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்குத் தமது வாக்குகளை அளிப்பதற்கு வசதியாக விடுமுறை வழங்கல் 46

XI ஆம் பிரிவு 47
வாக்கெடுப்பை நடாத்துதல் 47
பின்னணி 47
வாக்கெடுப்பு நிலையங்களை தயார்ப்படுத்தல் 47
சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்குப் பொருட்களாகியவற்றைக் கையளித்தல் 47
வாக்கெடுப்பு நிலைய பணியாட் குழு 48
வலயப் பொறுப்பு உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள் 48
வாக்கெடுப்பு நிலைய முகவர்கள் 48
வாக்கெடுப்பு நிலைய கண்காணிப்பாளர்கள் 49
செயற்படுத்தப்பட்ட விஷேட நடவடிக்கைகள் 49

XII ஆம் பிரிவு 51
வாக்குகள் மற்றும் விருப்புகளை எண்ணல். 51
பின்னணி 51
வாக்கெண்ணல் நிலையங்களை தயார்ப்படுத்தல் 51
வாக்கெண்ணல் பணியாட் குழுக்கள் 51
வாக்கெண்ணல் முகவர்கள் 52
வாக்கெண்ணல் அறிவித்தல் 52
வாக்கெண்ணலை ஆரம்பிப்பதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் 52
வாக்கெண்ணலை ஆரம்பித்தல் 53
முதலாம் கட்டம் 53
இரண்டாம் கட்டம் 53
மூன்றாம் கட்டம் 53
வாக்கெண்ணல் பற்றிய சந்தேகங்களை நீக்குவதற்காக எடுக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் 54
மீள் வாக்கெண்ணலுக்கான கோரிக்கை 54

XIII ஆம் பிரிவு 56
பெறுபேறுகளை அட்டவணைப்படுத்தலும் பெறுபேறுகளை வெளியிடுதலும் 56
பெறுபேறுகள் தயாரிக்கப்படும் இடம் 56
பெறுபேறு தயாரிப்பின் குறிப்பான பணிகள் 56
தேர்தல் முடிவுகளின் முதலாம் வெளிப்படுத்துகை 56
தேர்தல் முடிவுகளின் இரண்டாம் வெளிப்படுத்துகை 56
மாநகர முதல்வர், பிரதி முதல்வர்/ தவிசாளர், துணைத் தவிசாளர் ஆகியோரை தேர்ந்தெடுத்தல் 57
ஒவ்வொரு கட்சி, சுயேச்சைக் குழுக்களால் ஆட்சி அதிகாரம் உரித்தாக்கிக் கொள்ளப்பட்டுள்ள உள்ளூரதிகார சபைகளின் எண்ணிக்கை மாநகர சபை, நகர சபை, பிரதேச சபை அடிப்படையில் 58

XIV ஆம் பிரிவு 59

தேர்தல் தொடர்பாக எடுக்கப்பட்ட நீதிமன்ற நடவடிக்கைகள் 59
நிராகரிக்கப்பட்ட பெயர்குறித்த நியமனப் பத்திரங்கள் தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் 59

உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் 60
தேர்தல் முடிவுகளுக்கெதிராக தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் 60
வாக்கெடுப்பு நடாத்தப்படுவதற்கெதிராக தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் 60

XV **ஆம் பிரிவு** 61
தேர்தல் சட்டங்களைச் செயல்வலுப் பெறச் செய்வதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் 61
அடிப்படை பின்னணி 61
அரச ஆதனங்களை முறையற்ற விதத்தில் அரசியல் அலுவல்களுக்காகப் பயன்படுத்துவதைத் தடுத்தல் 62
சட்டவிரோத தேர்தல் பிரச்சார அலுவல்கள் மற்றும் சட்டவிரோத ஊர்வலங்களைத் தடுத்தல் 63
ஊடக நிறுவனங்களுக்கு வழிகாட்டு நெறிகளை வெளியிடுதல் 64
சொத்துக்கள் பொறுப்புக்கள் வெளிப்படுத்துகை தொடர்பான விதிகளை நடைமுறைப்படுத்தல் 65
முறைப்பாட்டு விசாரணை நிலையங்களை தாபித்தல் 66
பின் விசாரணைப் பணிகள் 67

XVI **ஆம் பிரிவு** 69
தேர்தலுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகள் 69

XVII **ஆம் பிரிவு** 71
அவதானிப்புக்களும் பரிந்துரைகளும் 71
உள்ளூர் அதிகார சபைகளை தாபித்தல் 71
வேட்புமனு செயலொழுங்கு 73
அஞ்சல் வாக்களிப்பு செயன்முறையினுள் ஏற்படும் சிக்கல்கள் 74
வாக்கெடுப்பு மற்றும் வாக்கெண்ணலின் சிக்கலான தன்மை 76
விருப்பெண்ணலின் போது ஒவ்வொரு கட்சி/ குழு தொடர்பாக கடந்து செல்ல வேண்டிய படிமுறைகள் 77
வெற்றிடங்களை நிரப்புதல் தொடர்பான பிரச்சினைகள் 77
விருப்பு வாக்குடன் கூடிய விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறைக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள விடயங்கள் 78

XVIII **ஆம் பிரிவு** 81
மதிப்பீடு 81

XIX **ஆம் பிரிவு** 83
முடிவுரை 83

பொழிப்பு குறிப்புக்கள் 84
2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க உள்ளூரதிகார சபைத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்தின் மூலம் உள்ளூரதிகார சபைத் தேர்தல் கட்டளைச் சட்டத்தை (262 ஆம் அத்தியாயம்) திருத்தம் செய்தல் 84
பொழிப்பு குறிப்பு 84
தேருநர் இடாப்பு 84
வேட்பு மனுக்கள் 84
இளம் வேட்பாளர்களின் எண்ணிக்கை 84
அஞ்சல் வாக்குகள் 85
வாக்கெண்ணல் 86
பெறுபேறுகளை வெளியிடுதல் 87
விகிதாசார ரீதியாக தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்கள் 87
முதலாம் கட்டம் 87
தோல்வியடைந்த வேட்பாளர்கள் பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கையை எண்ணுதல் 87
இரண்டாம் கட்டம் 87
விகிதாசார அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையைத் தீர்மானித்தல் 87
மூன்றாம் கட்டம் 88
மேலதிக நபர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய வேட்பாளர்களை தீர்மானித்தல் மற்றும் வெளிப்படுத்தல் 88

பின்னிணைப்பு

1. உள்ளூர் அதிகார சபைகளின் பதவிக் காலத்தை 2011 மார்ச் 31 ஆம் திகதி வரை ஒரு வருடத்திற்கு கால நீடிப்புச் செய்தல்

1633/9 ஆம் இலக்க 2009.12.23 ஆம் திகதிய அதிவிஷேட வர்த்தமானி பத்திரம். 89

2. உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 4(1) ஆம் பிரிவின் கீழ் ஒவ்வொரு நிருவாக மாவட்டத்திற்காகவும் தெரிவத்தாட்சி அலுவலர்களையும், உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களையும் நியமனம் செய்தல்.

1687/24 ஆம் இலக்க 2011.01.05 ஆம் திகதிய அதிவிஷேட வர்த்தமானி பத்திரம். 93

3. அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பெயர்ப்பட்டியல் 2011.01.27....95

4. 27/1 ஆம் பிரிவின் கீழ் பிரதி/ சிரேட்ட உதவி/ உதவி தேர்தல்கள் ஆணையாளர்களை ஒவ்வொரு உள்ளூர் அதிகார சபைகளுக்காகவும் தெரிவத்தாட்சி அலுவலர்களாக அதிகாரத்தைக் கையளித்தல்.

1687/25 ஆம் இலக்க 2011.01.05 ஆம் திகதிய அதிவிஷேட வர்த்தமானி பத்திரம் 97

1711/03 ஆம் இலக்க 2011.06.20 ஆம் திகதிய அதிவிஷேட வர்த்தமானி பத்திரம். 103

1717/19 ஆம் இலக்க 2011.08.03 ஆம் திகதிய அதிவிஷேட வர்த்தமானி பத்திரம். 104

5. உள்ளூர் அதிகார சபைகள் 23 (மாநகர சபை 16, நகர சபை 02, பிரதேச சபை 05) பதவிக் காலத்தை 2011 யூன் 30 ஆம் திகதி வரை காலநீடிப்புச் செய்தல்.

1689/12 ஆம் இலக்க 2011.01.18 ஆம் திகதிய அதிவிஷேட வர்த்தமானி பத்திரம் 106

6. அவ்வுள்ளூர் அதிகார சபைகள் 23 இனதும் பதவிக் காலத்தை 2011 திசெம்பர் 31 ஆம் திகதி வரை காலநீடிப்புச் செய்தல்

1699/35 ஆம் இலக்க 2011.03.30 ஆம் திகதிய அதிவிஷேட வர்த்தமானி பத்திரம். 107

7. 26 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல் 108

8. ஒவ்வொரு உள்ளூர் அதிகார சபைகளுக்காகவும் போட்டியிட வேண்டிய இளம் வேட்பாளர்களின் எண்ணிக்கையைக் காட்டுகின்ற வர்த்தமானி அறிவித்தல்

1687/31 ஆம் இலக்க 2011.01.06 ஆம் திகதிய அதிவிஷேட வர்த்தமானி பத்திரம் 109

9. ஒவ்வொரு உள்ளூர் அதிகார சபைக்காகவும் போட்டியிட வேண்டிய இளம், ஏனைய மற்றும் மொத்த வேட்பாளர்களின் எண்ணிக்கை மற்றும் வைப்புச் செய்ய வேண்டிய கட்டுப்பணத்தைக் காட்டுகின்ற பத்திரிகை அறிவித்தல்

முதலாம் கட்டம் 2011.01.06 115

மூன்றாம் கட்டம் 2011.08.08 123

10. தேர்தல் நடாத்தப்படும் அனைத்து சபைகளதும் பதவிக் காலத்தை 2011.01.06 ஆம் திகதியோடு முடிவுறுத்தி விடயப் பொறுப்பு அமைச்சரினால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல்

1687/40 ஆம் இலக்க 2011.01.06 ஆம் திகதிய அதிவிஷேட வர்த்தமானி பத்திரம் 124

11. ஊடக அறிவித்தல் 01 – 2011.01.10

உள்ளூரதிகார சபைத் தேர்தல் 2011 வேட்புமனுக் கையேற்றல் 129

12. 1981 இன் 1ம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் தேர்தல் சின்னங்களை அனுமதித்து வெளியிடப்பட்ட வர்த்தமானி

1686/46 3ம் இலக்க 2010/12/31 ஆம் திகதிய அதிவிஷேட வர்த்தமானி பத்திரம் 130

13. ஊடக அறிவித்தல் 01 – 2011.05.30

வாக்கெடுப்பு தினம் குறித்தல் 132

14. ஊடக அறிவித்தல் 06 – 2011.07.11

தேர்தல் நடாத்தப்படவுள்ள உள்ளூரதிகார சபைகள் 133

15. கரைத்துறைப்பற்று பிரதேச சபைத் தேர்தலை நடாத்துவதற்கெதிராக வெளியிடப்பட்ட இடைக்கால உத்தரவு

CA writ 72/12 – 2012.03.20 134

16. புதுக்குடியிருப்பு பிரதேச சபைத் தேர்தலை நடாத்துவதற்கெதிராக வெளியிடப்பட்ட இடைக்கால உத்தரவு

CA writ 74/12 – 2012.03.20 135

17. ஊடக அறிவித்தல் 01 – 2011.12.28

புதுக்குடியிருப்பு மற்றும் கரைத்துறைப்பற்று பிரதேச சபை 136

18. ஊடக அறிவித்தல் 02 – 2012.02.08

புதுக்குடியிருப்பு மற்றும் கரைத்துறைப்பற்று பிரதேச சபை 137

19. ஊடக அறிவித்தல் 2012.03.20
வாக்காளர்கள் மற்றும் வேட்பாளர்களுக்கு வெளியிடப்பட்ட விஷேட அறிவித்தல்கள்....138

20. வீட்டு அறிவித்தல்களுக்கான மாதிரி....139

21. வாக்கெடுப்பு அறிவித்தல்
1691/43 ம் இலக்க 2011/02/01 ஆம் திகதிய அதிவிஷேட வர்த்தமானி பத்திரம்....140

22. ஊடக அறிவித்தல் 01 – 2011.08.04
பெயர்குறித்த நியமனப் பத்திரங்களைக் கையேற்றல். (3ம் கட்டம்)....183

23. ஊடக அறிவித்தல் 02 –2011.01.10
அஞ்சலில் வாக்களிப்பதற்கான வசதிகள் 184

24. ஊடக அறிவித்தல் 04 – 2011.01.14
அஞ்சல் வாக்கு விண்ணப்பப் படிவங்களை கையேற்றலுக்காக காலத்தை நீடிப்புச் செய்தல் 185

25. ஊடக அறிவித்தல் 05 – 2011.01.15
அஞ்சல் வாக்கு அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களுக்கான விஷேட அறிவித்தல் 186

26. ஊடக அறிவித்தல் 04 – 2011.07.08
அஞ்சல் வாக்கு அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்கள் மற்றும் அஞ்சல் வாக்காளர்களுக்கான அறிவித்தல்....187

27. ஊடக அறிவித்தல் – 2011.07.11
அஞ்சல் வாக்கு அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்கள் மற்றும் அஞ்சல் வாக்காளர்களுக்கான விஷேட அறிவித்தல் 188

28. ஊடக அறிவித்தல் 07 – 2011.09.21
அஞ்சல் வாக்கு அத்தாட்சிப்படுத்தும் அலுவலர் மற்றும் அஞ்சல் வாக்காளர்களுக்கான அறிவுறுத்தல் 189

29. ஊடக அறிவித்தல் 06 – 2011.01.19
அஞ்சல் மூலம் வாக்களித்தல் 190

30. ஊடக அறிவித்தல் 17 – 2011.03.01
அனைத்து அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்கள் மற்றும் அனைத்து அஞ்சல் வாக்காளர்களுக்கான அறிவுறுத்தல் 191

31. ஊடக அறிவித்தல் 02 – 2011.06.09
அனைத்து அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்கள் மற்றும் அனைத்து அஞ்சல் வாக்காளர்களுக்கான அறிவித்தல் 192

32. ஊடக அறிவித்தல் 15 – 2011.02.19
வாக்கெடுப்பு நிலையத்தில் ஆளடையாளத்தை உறுதி செய்தல் தேவைப்பாடு தொடர்பான வாக்காளர்களுக்கான விஷேட அறிவித்தல்....193

33. ஊடக அறிவித்தல் 08 – 2011.07.22
உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் மற்றும் செல்லுபடியான அடையாள அட்டைகள்....194

34. ஊடக அறிவித்தல் 11 – 2011.07.23
வாக்கெடுப்பு நிலையத்தில் ஆளடையாளத்தை உறுதிபடுத்தல் (கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்கள்)....195

35. ஊடக அறிவித்தல் 16 – 2011.02.26
66 உள்ளூர் அதிகார சபைகளின் தேர்தலை பிற்போடுதல் தொடர்பான பொதுமக்களுக்கான அறிவித்தல். 196

36. ஊடக அறிவித்தல் 18 – 2011.03.01
வாக்கெடுப்பு பிற்போடப்பட்ட உள்ளூராட்சி நிறுவனங்கள் தொடர்பாக அஞ்சல் வாக்குச் சீட்டுக்கள் விநியோகிக்கபடாமை பற்றிய அறிவித்தல். 197

37. ஊடக அறிவித்தல் 14 – 2011.02.18
அனைத்து வேட்பாளர்கள் மற்றும் அனைத்து தேருநர்கள் அறிந்து கொள்வதற்காக மேற்கொள்ளப்படும் விஷேட அறிவித்தல் 198

38. ஊடக அறிவித்தல் 19 – 2011.03.04
அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் மற்றும் அஞ்சல் வாக்கு அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களுக்கான அறிவித்தல் 199

39. ஊடக அறிவித்தல் 09 – 2011.07.21
வேட்பாளர்கள் வேறு கட்சிகளுக்கு இணைதல் மற்றும் வேட்பாளர்களின் வேட்பாண்மையை கேட்டு விலக்கிக் கொள்ளல் 200

40. ஊடக அறிவித்தல் 10 – 2011.09.26
அனைத்து வேட்பாளர்கள் மற்றும் வாக்காளர்களுக்கான விஷேட அறிவுறுத்தல் 201

41. பத்திரிகை அறிவித்தல் – 2011.03.04
வாக்களித்தல், விருப்புக்களை அடையாளமிடுதல் தொடர்பான சிறு விளக்கம் 202

42. பத்திரிகை அறிவித்தல் – 2011.09.26
வாக்களித்தல், விருப்புக்களை அடையாளமிடுதல் தொடர்பான சிறு விளக்கம் 203

43. பத்திரிகை அறிவித்தல் – 2011.07.07
வலிமையிழப்பொன்றிற்குட்பட்ட நபர்கள் விஷேட போக்குவரத்து வசதிகளைக் கோருதல் 204

44. ஊடக அறிவித்தல் 05 – 2011.07.09
வலிமையிழப்பொன்றிற்குட்பட்ட வாக்காளரொருவருக்கு வாக்குச் சீட்டை அடையாளமிடுவதற்காக உதவியாளரொருவரை அழைத்துச் செல்வதற்கு வசதி செய்தல் 205

45. ஊடக அறிவித்தல் 08 – 2011.09.21
வலிமையிழப்பொன்றிற்குட்பட்ட வாக்காளரொருவருக்கு வாக்குச் சீட்டை அடையாளமிடுவதற்காக உதவியாளரொருவரை அழைத்துச் செல்வதற்கு வசதி செய்தல் 206

46. பத்திரிகை அறிவித்தல் – 2011.07.11
தொழிலிலீடுபட்டுள்ளவர்கள் வாக்களிப்பதற்கு வசதியாக விடுமுறை வழங்குதல் 207

47. பத்திரிகை அறிவித்தல் – 2011.09.26
தொழிலிலீடுபட்டுள்ளவர்கள் வாக்களிப்பதற்கு வசதியாக விடுமுறை வழங்குதல் 208

48. பத்திரிகை அறிவித்தல்
வாக்கெடுப்பு நிலைய கண்காணிப்புக்காக அனுமதியளிக்கப்பட்டுள்ள கண்காணிப்பு நிறுவனங்கள் 209

49. ஊடக அறிவித்தல் 20 – 2011.03.07
சர்வதேச மகளிர் தின கொண்டாட்ட தேசிய வைபவம் 209

50. ஊடக அறிவித்தல் 12 – 2011.10.14
சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்துகையை சமர்ப்பித்தல் தொடர்பாக வேட்பாளர்களை அறிவுறுத்தல் 210

51. ஊடக அறிவித்தல் 22 – 2011.11.01
சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்துகையை சமர்ப்பித்தல் 210

52. ஊடக அறிவித்தல் – 2011.03.15
வாக்கெடுப்பு தின முறைப்பாடுகள் 211

53. ஊடக அறிவித்தல் 03 – 2011.06.17
தேர்தல் முறைப்பாட்டு நிலையம் 212

குறிப்புக்கள்

I. மாநகர சபை, நகர சபை, பிரதேச சபை என்பவற்றின் எண்ணிக்கை 213

II. தேருநர் இடாப்பு விற்பனை தொடர்பான தகவல்கள் (உள்ளூர் அதிகார சபைகளுக்கமைய) 214

III. ஒவ்வொரு நிருவாக மாவட்டத்திற்கமைய வாக்கெடுப்பு நிலையங்கள் தொடர்பான தகவல்கள் 223

IV. வாக்கெடுப்பு, வாக்கெண்ணல் முடிவுகளை வெளியிடல் மற்றும் பூர்வாங்க ஒழுங்கமைப்பு அலுவல்களுக்காக கடமையில் ஈடுபடுத்தப்பட்ட அலுவலர்களின் எண்ணிக்கை மாவட்ட அடிப்படையில் 224

V. ஒவ்வொரு உள்ளூரதிகார சபைகளுக்காகவும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள், சுயேச்சைக் குழுக்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற ஏற்றுக் கொள்ளப்பட்ட மற்றும் நிராகரிக்கப்பட்ட வேட்புமனுக்கள் தொடர்பான குறிப்பு 225

VI. ஒவ்வொரு மாவட்டத்திற்கமைய கிடைக்கப்பெற்ற வேட்புமனுக்கள், ஏற்றுக் கொள்ளப்பட்ட மற்றும் நிராகரிக்கப்பட்டவை 233

VII. நிராகரிக்கப்பட்ட வேட்புமனுக்கள் – முதலாம் கட்டம் 234

VIII. நிராகரிக்கப்பட்ட வேட்புமனுக்கள் – மூன்றாம் கட்டம் 235

IX. வாக்கெடுப்புக்குரிய பூர்வாங்க தகவல்கள் ஒவ்வொரு நிருவாக மாவட்ட அடிப்படையிலும் 236

X. ஒவ்வொரு கட்டத்தின் கீழ் போட்டியிட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் 237

XI. ஒவ்வொரு உள்ளூர் அதிகார சபைக்காகவும் போட்டியிட்ட கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் எண்ணிக்கை 238

XII. தேர்தல்கள் செயலகத்திற்கு வாக்கெடுப்பு தினத்திற்கு முன்னர் மற்றும் வாக்கெடுப்பு தினம் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் எண்ணிக்கை 251

XIII. தேர்தல் கடமைகளுக்காக ஈடுபடுத்தப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை தொடர்பான குறிப்பு 252
XIV. ஒவ்வொரு கட்டத்தின் கீழும் வாக்கெடுப்பு நடாத்தப்பட்ட உள்ளூரதிகார சபைகளின் எண்ணிக்கை....253
XV. சாதாரண மற்றும் அஞ்சல் வாக்கெண்ணல் நிலையங்களின் எண்ணிக்கை....254
XVI. உள்ளூரதிகார சபைத் தேர்தல் 2011.03.17 (முதலாம் கட்டம்) தகவல்கள்....262
உள்ளூரதிகார சபைத் தேர்தல் 2011.07.23 (இரண்டாம் கட்டம்) தகவல்கள்....271
உள்ளூரதிகார சபைத் தேர்தல் 2011.10.08 (மூன்றாம் கட்டம்) தகவல்கள்....274
XVII. ஒவ்வொரு நிருவாக மாவட்டத்தின் கீழ் போட்டியிட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கை....275
ஒவ்வொரு கட்சி, சுயேச்சைக் குழு நிருவாக மாவட்டத்திற்கமைய உரிதாக்கிக் கொண்டுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை....275
XVIII. ஒவ்வொரு நிருவாக மாவட்டத்தின் கீழ் வாக்களிப்பை காட்டும் உள்ளூரத்கார சபை நிறுவனங்களுக்குரிய சதவீதம்....277
XIX. வேட்புமனு தொடர்பில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மற்றும் வழங்கப்பட்ட நீதிமன்ற தீர்ப்புக்கள்....278
XX. வாக்கெடுப்பு மற்றும் வாக்கெண்ணல் தொடர்பில் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்ட முறைப்பாடுகள்....281
XXI. அஞ்சல் வாக்கு தொடர்பான அடிப்படை தகவல்கள்....283

அட்டவணை

I. சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்கு வலியுறுத்தப்பட வேண்டிய விஷேட விடயங்கள்....284
II. தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்களின் பணியாட் குழுவினர் மற்றும் கண்காணிப்பாளர்களுக்கு வெளியிடப்பட்ட ஒழுக்கநெறிக் கோவை....288
III. அரச மற்றும் அரச கூட்டுத்தாபன ஆதனங்களைத் தேர்தல் காலப்பகுதியினுள் பயன்படுத்தல்....289
IV. அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களுக்கான வழிகாட்டு நெறிகள்....292
V. தேர்தல் தொடர்பான செலவு அறிக்கை....294
VI. தேர்தல் செயலகத்திற்குக் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் தொடர்பான சுருக்கக் குறிப்பு....295

I ஆம் பிரிவு

அறிமுகம்

01. 2011 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட இத்தேர்தல் உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்கள் வரலாற்றில் முக்கியமானதொன்றெனக் குறிப்பிட முடியும். அதற்கு பிரதான காரணம் விகிதாசார பிரதிநிதித்துவ முறையின் கீழ் நடாத்தப்பட்ட இறுதி உள்ளூர் அதிகார சபைத் தேர்தல் இத்தேர்தலாக அமையவிருப்பதாகும். இதன் பின்னர் 2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைத் தேர்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்ட உள்ளூர் அதிகார சபை தேர்தல்கள் கட்டளைச் சட்டத்திற்கமைய வட்டார அடிப்படையிலும் விகிதாசார அடிப்படையிலும் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் வழிமுறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. ஆதலால், விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறையின் ஆரம்பம் அதன் பரவல் தொடர்பான கலந்தாய்வொன்றை இவ்வறிக்கையில் உட்சேர்ப்பது உசிதமென்பதால், அது தொடர்பான சுருக்கக் குறிப்பொன்று கீழே காட்டப்பட்டுள்ளது.

விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறையின் ஆரம்பம்

02. 1978 ஆம் ஆண்டில் அறிமுகம் செய்யப்பட்ட இலங்கையின் இரண்டாவது குடியரசு யாப்பின் மூலம் உள்ளூர் அதிகார சபைத் தேர்தல் தொடர்பில் பாரிய மாற்றமொன்று மேற்கொள்ளப்பட்டது. முக்கிய மாற்றம் விகிதாசார பிரதிநிதித்துவ முறையின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுவதாகும். உள்ளூர் அதிகார சபை நிறுவனங்களுக்கு உறுப்பினர்களை தெரிவுசெய்யும் போது அதுவரை காலமும் காணப்பட்ட தொகுதிவாரி முறை (வட்டார முறை) விகிதாசார முறையுடன் இரத்துச் செய்யப்பட்டது. உள்ளூர் அதிகார சபை உள்ளடக்கும் மொத்த பிரதேசமும் வாக்கெடுப்புப் பிரிவாகக் கொள்ளப்பட்டது. வட்டார முறையின் கீழ் காணப்பட்ட தனிநபர் பெயர் குறித்த நியமன முறைக்குப் பதிலாக பெயர் குறித்த பட்டியல் முறை அறிமுகம் செய்யப்பட்டது.

03. இதன் மூலம் குறித்த காலக்கெடுவொன்றிற்காக சபையின் நிருவாகத்தை மேற்கொள்வதற்காக அதிகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் வேட்பாளர் பட்டியல் தயாரிக்கப்பட்டது. போட்டியிட்ட ஒவ்வொரு கட்சி மற்றும் சுயேச்சைக் குழுக்களால் சமர்ப்பிக்கப்பட்ட வேட்புமனுவில் தேர்தல் வேட்பாண்மை, குறித்த கட்சியின் அல்லது குழுவின் தற்றுணிபின் பெயரில் தீர்மானிக்கப்பட்டது. அதற்கமைய இதுவரை நேரடியாக தமது வட்டாரத்தைப் பிரதிநிதித்துவம் செய்வதற்கு பொருத்தமானவரென தீர்மானிக்கப்பட்ட வேட்பாளருக்கு வாக்களித்த வாக்காளர் தான் விரும்பிய கட்சிக்கு அல்லது குழுவிற்கு வாக்களிக்க வேண்டியேற்பட்டது.

முதலாவது விகிதாசார உள்ளூர் அதிகார சபைத் தேர்தல் - 1979

04. 1979 ஆம் ஆண்டில் 12 மாநகர சபைகள் மற்றும் 39 நகர சபைகளுக்காக நடாத்தப்பட்ட தேர்தல் விகிதாசார பிரதிநிதித்துவ முறையின் கீழ் நடாத்தப்பட்ட முதலாவது தேர்தலாகும். இதற்காக 1977 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க (திருத்த) சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்ட உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் தேவையான சட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதுவரை வட்டாரத்திற்கு எல்லை காணப்பட்ட வாக்கெடுப்புப் பிரிவு உள்ளூர் அதிகார சபை அதிகாரப் பிரிவு வரை விருத்தியடைந்தது. உள்ளூர் அதிகார சபைகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை வேட்புமனுவில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள தொடரொழுங்கில் தேர்ந்தெடுக்கப்பட்டது. வேட்புமனுப் பட்டியலில் தொடரொழுங்கு முன்னர் தீர்மானிக்கப்பட்டதொன்றாகக் காணப்பட்டது. வேட்புமனுப் படிவத்தில் பெயரை குறிப்பிடும் போது முதலாம் மற்றும் இரண்டாம் இடங்கள் மேயர் / தவிசாளர் மற்றும் துணை மேயர், துணை தவிசாளர் பதவிகளுக்காகக் கட்சி அல்லது சுயேச்சைக் குழுக்களால் தீர்மானிக்கப்பட்ட இரண்டு வேட்பாளர்களுக்காகக் குறித்தொதுக்கப்பட்டது. உள்ளூர் அதிகார சபைகளுக்காக போட்டியிடும் கட்சிகளின் பெயர்கள், சின்னங்கள், சுயேச்சைக் குழுக்களின் வேறு பிரித்தறியும் இலக்கங்கள் மற்றும் குறித்த தேர்தல் சின்னங்கள் மற்றும் ஒவ்வொரு தேர்தல் சின்னத்திற்கு எதிரே வாக்காளருக்கு தமது வாக்கை அடையாளமிடுவதற்காக வெற்றுக் கூடொன்றும் வாக்குச் சீட்டில் குறிக்கப்பட்டன. வாக்கெண்ணல் ஒருமுகப்படுத்தப்பட்டு மேற்கொள்ளப்பட்டதோடு, ஒவ்வொரு கட்சி, சுயேச்சைக் குழு பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கைக்கமைய விகிதாசார அடிப்படையில் உறுப்பினர்களின் எண்ணிக்கை வேட்புமனுவில் பெயர்குறிப்பிடப்பட்டுள்ள தொடரொழுங்கில் தேர்ந்தெடுக்கப்பட்டது. இதற்கமைய வேட்பாளர்களின் ஒரே நோக்கமாக அமைந்தது கட்சிக்கு/ குழுவுக்கு அதிக வாக்கு எண்ணிக்கையொன்றைப் பெற்றுக் கொள்வதனூடாக தமது கட்சியிலிருந்து/ குழுவிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுகின்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்து அதன் மூலம் தமக்கு உறுப்பினர்/ அங்கத்தவர் பதவியொன்றை உரித்தாக்கிக் கொள்வதாகும்.

அபிவிருத்தி சபைத் தேர்தல் -1981

05. மாநகர சபை, நகர சபை, பட்டின சபை மற்றும் கிராம சபை என 04 வகையான உள்ளூர் அதிகார சபை கட்டமைப்பை முழுமையான மாற்றத்துக்குட்படுத்தி 1981 ஆம் ஆண்டின் அபிவிருத்தி சபை தாபிக்கப்பட்டமை விகிதாசார பிரதிநிதித்துவ முறையை அடிப்படையாகக் கொண்டு ஏற்படுத்தப்பட்ட உள்ளூர் அதிகார சபை மாற்றத்தின் முக்கிய அம்சமொன்றாக அமைந்தது. ஏற்கனவே 12 மாநகர சபைகள், 39 நகர சபைகள், 82 பட்டின நகர சபைகள், 549 கிராம சபைகள் என்ற அடிப்படையில் காணப்பட்ட உள்ளூர் அதிகார சபைக் கட்டமைப்பு 1980 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க மாவட்ட அபிவிருத்தி சபை சட்டத்தின் மூலம் பட்டின சபை மற்றும் கிராம சபை ஆகியவற்றை ஒன்றிணைத்து ஒரு நிருவாக மாவட்டத்திற்காக அபிவிருத்தி சபையொன்றை நிறுவுவதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டது. இதற்கமைய நிறுவப்பட்ட அபிவிருத்தி சபைகளின் எண்ணிக்கை 24 ஆகும். இவ்வபிவிருத்தி சபைகளின் பிரதான நோக்கம் அபிவிருத்தி செயற்பாடுகளை விருத்தி செய்வதற்காக மத்திய அரசின் திணைக்களங்கள், அமைச்சுக்கள் ஆகியவற்றின் அதிகாரத்தை மாவட்ட மட்டம் வரை பன்முகப்படுத்துவதாகும். இப்பணிகளுக்காக மாநகர சபை, நகர சபை

பிரதேசங்கள் மாவட்ட அபிவிருத்தி சபைகளுக்கு உள்ளடக்கப்பட்ட போதும் அப்பிரதேசங்களின் சேவை பணிகள் மாநகர சபை மற்றும் நகர சபைகளினால் மேற்கொள்ளப்பட்டதோடு, ஏனைய பிரதேசங்களில் அச்சேவைகள் அபிவிருத்தி சபைக்குக் கையளிக்கப்பட்டன. 1981 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க அபிவிருத்தி சபைத் தேர்தல்கள் சட்டத்தின் கீழ் நடாத்தப்பட்ட முதலாவது மற்றும் ஒரேயொரு தேர்தல் 1981 ஆம் ஆண்டு யூன் மாதம் 04 ஆம் திகதி நடாத்தப்பட்டது. விகிதாசார பிரதிநிதித்துவ முறையின் கீழ் இதுவரை மாநகர சபை மற்றும் நகர சபைகளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் நடாத்தப்பட்ட இத்தேர்தல் மூலம் மாவட்ட மட்டம் வரை விருத்தியடைந்து உள்ளூர் அதிகார சபைத் தேர்தல் வரலாற்றில் புதிய அனுபவமொன்றை வழங்கியது. இங்கு அரசியல் கட்சிகளிடமிருந்தும் சுயேச்சைக் குழுக்களிடமிருந்தும் வேட்பாளர் பெயர்ப்பட்டியல்களை கையேற்றல் மேற்கொள்ளப்பட்டதோடு, பட்டியலில் பெயர்களை உட்சேர்க்கும் போது கட்சியின் அல்லது குழுவின் முக்கியஸ்தர்களால் முன்னுரிமை தீர்மானிக்கப்பட்டது. அதற்கமைய ஒவ்வொரு கட்சியும் பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கைக்கமைய விகிதாசாரமாகக் கிடைக்கப்பெறும் உறுப்பினர் பதவிகளுக்காக மேற்குறித்த வேட்புமனுவிலிருந்து வேட்பாளர்கள் முன்னுரிமை அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டனர். கண்டி, நுவரெலியா, மாத்தறை, குருநாகல், மொணராகலை, இரத்தினபுரி, கேகாலை ஆகிய மாவட்டங்களுக்காக போட்டியின்றி உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதோடு, ஏனைய மாவட்டங்களுக்கு தேர்தல் நடாத்தப்பட்டது. ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி உள்ளிட்ட சில அரசியல் கட்சிகள் வாக்கெடுப்பை நிராகரித்தமை காரணமாக சில மாவட்டங்களில் பிரதிநிதிகள் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்படக் காரணமாக அமைந்தது.

06. இத்தேர்தலுக்குரியதாக யாழ்ப்பாண மாவட்டத்தில் நடாத்தப்பட்ட வாக்கெடுப்பு தேர்தல் வரலாற்றில் கறுப்புப் புள்ளியொன்றை ஏற்படுத்திய ஒரு தேர்தலாக அமைந்ததோடு, அந்த கசப்பான அனுபவங்களினூடாக அபிவிருத்தி சபையின் இருப்பும் ஆட்டம் கண்டது. அரசியல் அமைப்பின் ஆறாம் திருத்தத்திற்கமைய உறுப்பினர் பதவி கிடைக்கப்பெற்று ஒரு மாதத்தினுள் கையளிக்க வேண்டிய சத்தியம்/ உறுதியுரை ஒப்பமிடாமை காரணமாக பதவியைக் கைவிட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை 39 ஆகும். அவர்களில் பெரும் எண்ணிக்கையானோர் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்தி சபை உறுப்பினர்களாகக் காணப்பட்டனர். வேட்புமனுவில் காட்டப்பட்டுள்ள பெயர்களிலிருந்து அவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட போதும் குறித்த சத்தியம்/ உறுதியுரை காரணமாக அவ்வுறுப்பினர்களும் பதவிகளைக் கைவிட்டுச் சென்றனர். இச்சிக்கலான நிலைமையில் 1984 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க அவசர (அபிவிருத்தி சபை) கட்டளைகளின் இரண்டாம் கட்டளையினால் தமக்குக் கையளிக்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கமைய உள்ளூராட்சி, வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சரினால் 1984.06.22 ஆம் திகதிய 302/41 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட உத்தரவினால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்தி சபைகள் கலைக்கப்பட்டன. யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மன்னார், வவுனியா முல்லைத்தீவு மற்றும் திருகோணமலை ஆகிய அபிவிருத்தி சபைகளே இவ்வாறு கலைக்கப்பட்டன.

உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்கள் - 1983

07. 1979 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்களுக்கமைய தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் பதவிக்காலம் முடிவடைந்தமை காரணமாக 1983 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி 12 மாநகர சபைகள், 34 நகர சபைகள் என்பவற்றிற்கும் 1983 மே மாதம் 20 ஆம் திகதி 04 நகர சபைகளுக்குமான தேர்தல்கள் நடாத்தப்பட்டன. மே மாதம் 20 ஆம் திகதி 04 நகர சபைகளுக்கான தேர்தலை நடாத்துவதற்கு காரணம் அந்நகர சபை அதிகார எல்லையினுள் உள்ளடக்கப்பட்ட களுத்துறை அம்பலாங்கொடை, தங்காலை மற்றும் திஸ்ஸமகாராம ஆகிய தேர்தல் மாவட்டங்களில் இடைத்தேர்தலும் மே மாதம் 18 ஆம் திகதி நடாத்தப்படவிருந்த காரணத்தினாலேயேயாகும். இது விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறையின கீழ் நடாத்தப்பட்ட 02 வது உள்ளூர் அதிகார சபைத் தேர்தலாகும். ஏனைய பிரதேசங்கள் ஏற்கனவே மாவட்ட அபிவிருத்தி சபைகளின் கீழ் கொண்டுவரப்பட்டிருந்தன. இதற்கு முன்னர் நடாத்தப்பட்ட உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்களைப் போன்றே 1983 மே மாதம் 20 ஆம் திகதி நடாத்தப்பட்ட நகர சபைத் தேர்தலின் போது வாக்கெண்ணல் அந்தந்த வாக்கெடுப்பு நிலையங்களில் மேற்கொள்ளப்பட்டதோடு, அதன் பின்னர், இன்றுவரை இலங்கையில் நடாத்தப்பட்ட எந்தவொரு தேர்தலின் போதும் அந்தந்த வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்கெண்ணல் நடாத்தப்படவில்லையென்பது விஷேட அம்சமாகும்.

பிரதேச சபைகளைத் தாபித்தல்

08. அரசியல் யாப்பு மற்றும் தேர்தல் சட்டங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்கள் தொடர்பாக ஆராய்ந்து பரிந்துரைகளைச் சமர்ப்பிப்பதற்கு 1983 ஆம் ஆண்டின் வாக்குரிமை மற்றும் தேர்தல்கள் தொடர்பான பாராளுமன்றத் தெரிவுக்குழுவொன்று நியமனம் செய்யப்பட்டிருந்ததோடு, இத்தெரிவுக் குழுவின் விடயப்பரப்பிற்குள் உள்ளூர் அதிகார சபைத் தேர்தல் உள்ளடக்கப்படவில்லையெனினும், உள்ளூர் அதிகார சபைத் தேர்தல் தொடர்பாகவும் இத்தெரிவுக் குழுவின் கலந்துரையாடல்களில் தாக்கத்தை ஏற்படுத்தியது. ஏற்கனவே அபிவிருத்தி சபை முறை தொடர்பான எதிர்பார்ப்புக்கள் வீழ்ச்சியடைந்திருந்தமையினால், உள்ளூர் அதிகார சபைகளாக அப்போது காணப்பட்ட மாநகர சபைகள், நகர சபைகள் ஆகிய அதிகார பிரதேசங்களுக்கு மேலதிகமாக அபிவிருத்தி சபை அதிகார பிரதேசங்களுக்குப் பொருத்தமான புதிய உள்ளூர் அதிகார சபை கட்டமைப்பொன்றை அறிமுகம் செய்ய வேண்டியதன் தேவைப்பாடும் தோற்றம் பெற்றிருந்தது.

09. மாவட்ட அபிவிருத்தி சபைக்குப் பதிலாக பொருத்தமான உள்ளூர் அதிகார சபை கட்டமைப்பொன்றை ஏற்படுத்த வேண்டுமென கொண்டுவரப்பட்ட பரிந்துரைக்கமைய 1987.04.16 ஆம் திகதி 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டம் கொண்டு வரப்பட்டது. ஏதேனுமொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவு முழுமையாக மாநகர சபை அதிகார பிரதேசத்தினுள் உள்ளடங்குகின்ற சந்தர்ப்பங்கள் தவிர, ஏனைய ஒவ்வொரு பிரதேச உதவி அரசாங்க

அதிபர் அதிகார பிரதேசத்திற்கும் ஒரு பிரதேச சபை என்ற வீதம் பிரதேச சபைகள் தாபிக்கப்பட்டதோடு, ஒவ்வொரு பிரதேச சபைக்குமுரிய அதிகார பிரதேசம் அவற்றிற்கான எல்லைகள் சகிதம் உள்ளூராட்சி மற்றும் வீடமைப்பு, நிருமாணத்துறை அமைச்சரினால் 435/05 – 435/29 ஆம் இலக்கங்கள் வரையான 1987.05.11 ஆம் திகதிய அதிவிஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது.

10. அதற்கமைய பிரதேச சபை உருவாக்கப்பட்டதைத் தொடர்ந்து நாட்டில் வேறு பிரிக்கப்பட்ட உள்ளூர் அதிகார சபைகளின் எண்ணிக்கை 308 ஆகும். அதாவது, 12 மாநகர சபைகள், 39 நகர சபைகள், 257 பிரதேச சபைகளென வேறு பிரிக்கப்பட்டன.

விருப்பு வாக்கு முறையின் ஆரம்பம்

11. உள்ளூர் அதிகார சபைகள் வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு வட்டாரத்திற்காகவும் தனிநபர் வேட்புமனுக் கையேற்கப்பட்டு நடாத்தப்படும் தேர்தலொன்றின் மூலம் வட்டாரத்தில் அதிக வாக்கு எண்ணிக்கையைப் பெற்றுக் கொண்ட வேட்பாளர் உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்படும் பழைய முறையின் போது வாக்கை அடையாளமிடுவதன் மூலம் தமக்கு விருப்பமான நபர் கிராம பிரதேசத்தின் பிரதிநிதியாக தேர்ந்தெடுக்கப்பட்டமை வாக்காளர்களினாலேயே ஆகும். இருப்பினும், விகிதாசார பிரதிநிதித்துவ முறையின் கீழ் வாக்காளருக்கு தான் விரும்பிய கட்சிக்கு அல்லது குழுவுக்கு வாக்களிக்க முடிவதோடு, குறித்த கட்சி அல்லது குழு பெற்றுக்கொண்ட வாக்குகளின் எண்ணிக்கைக்கமைய விகிதாசாரமாக கிடைக்கப்பெறுகின்ற உறுப்பினர்களின் எண்ணிக்கைகளுக்காக குறித்த கட்சியின் அல்லது குழுவின் தலைமைத்துவத்தினால் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட தொடரொழுங்கிற்கமைய வேட்புமனுவில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள தொடரொழுங்கில் நபர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அதன் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதி பெரும்பாலும் வாக்காளர்களுடன் நெருங்கிய தொடர்பைப் பேணாத ஒருவராகக் காணப்பட்டார். அதற்கமைய வேட்பாளர் பட்டியலொன்றில் வேட்பாளர்களின் பெயர்களைக் குறிப்பிடும் போது முன்னுரிமை வழங்கும் உரிமை கட்சியின் அல்லது குழுவின் தலைவர்களுக்குக் கையளிக்கப்பட்டுள்ளமை காரணமாக கட்சியின் ஆதிக்கம் விருத்தியடைவதற்கும் அதன் மூலம் தமக்குப் பொருத்தமான தமது கிராம பிரதேசத்தில் நேரடியாக தமது பிரதிநிதியை நியமனம் செய்து கொள்வதற்குமெனக் காணப்பட்ட சந்தர்ப்பம் இல்லாதொழிந்தமை காரணமாக வாக்காளர்கள் இது தொடர்பில் அதிருப்தியுடன் காணப்பட்டனர். ஆதலால், வாக்கெடுப்பொன்றின் போது பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்காக தமக்கு விருப்பமான வேட்பாளருக்கு விருப்பை தெரிவிக்கும் சந்தர்ப்பத்தை வாக்காளருக்குப் பெற்றுக் கொடுக்குமாறு கோரிக்கைகள் வாக்குரிமை மற்றும் தேர்தல் தொடர்பான தெரிவுக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

12. வாக்காளர்களின் இவ்வெதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்வதற்காகத் தெரிவுக்குழு மாற்று வழிகள் சிலவற்றை ஆராய்ந்து பார்த்தது. ஏற்கனவே காணப்பட்டவாறு வட்டார அடிப்படையில் நடாத்தப்படும் தேர்தலொன்றில் ஆகக்கூடுதலான வாக்குகளைப் பெற்றுக் கொள்ளும் வேட்பாளரை தேர்ந்தெடுக்கும் முறை மற்றும் ஜேர்மனியில் காணப்படுகின்றவாறான விகிதாசார பிரதிநிதித்துவம் மற்றும் அதிக வாக்குகளைப் பெற்றுக் கொள்ளும் வேட்பாளரை தேர்ந்தெடுக்கும் முறை ஆகிய இரண்டு முன்மொழிவுகள் அதன் போது சமர்ப்பிக்கப்பட்டன. இதில் இரண்டாவது முறை பொருத்தமானதென தீர்மானிக்கப்பட்டதற்கமைய தெரிவுக்குழுவின் பரிந்துரைக்கமைய விகிதாசாரமாக ஒவ்வொரு கட்சி, குழு பெற்றுக் கொள்ளும் உறுப்பினர்களின் எண்ணிக்கையைத் தீர்மானிப்பதற்காக வாக்காளருக்கு விருப்பமான கட்சியொன்றுக்கு அல்லது குழுவொன்றிற்கு ஒரு வாக்கையும் அக்கட்சியில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களில் வாக்காளர்களுக்கு விருப்பமான மூன்று வேட்பாளர்களுக்கு ஒரு வேட்பாளருக்கு ஒரு விருப்பு வாக்கு வீதம் மூன்று விருப்புக்களையும் அளிக்கக் கூடியவாறு வாக்குச் சீட்டுக்கள் தயாரிக்கப்பட்டன.

13. பிரதேச சபை தாபிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் இவ்வாறான வாக்குச் சீட்டொன்று தொடர்பான பரிந்துரை முழுமையடைந்திருந்ததோடு, அதன் அடிப்படையில் உள்ளூர் அதிகார சபைத் தேர்தல் திட்டமிடப்பட்டது. ஏற்கனவே ஒரு தினத்தினுள் வாக்கெடுப்பை நடாத்துவதற்கு ஏற்படுத்த வேண்டிய ஏற்பாடுகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்ட வண்ணமிருந்தன. அதற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்து 1987 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் (திருத்த) சட்டம் நிறைவேற்றப்பட்டது. அதன் மூலம் ஒரு தினத்தினுள் தேர்தலை நடாத்துவதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய ஏற்பாடுகள் தொடர்பான உரிய வசதிகளும் மேற்கொள்ளப்பட்டன. அது தொடர்பான குறிப்பு கீழே காட்டப்பட்டுள்ளது.

1987 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைத் தேர்தல் (திருத்தச்) சட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகள்

உரிய பிரிவு

4மற்றும் 5	தெரிவத்தாட்சி/ உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள்
9	உறுப்பாண்மையின் தகைமைமீனங்கள்
26	வேட்புமனுக் காலக்கெடு
28	வேட்புமனுச் செய்ய வேண்டிய வேட்பாளர்களின் எண்ணிக்கை
29	கட்டுப்பண வைப்பு
36	போட்டியில்லாத தேர்தல்
38	சிங்கள அகர வரிசைக்கமைய வேட்பாளர் பெயர்ப்பட்டியல் மற்றும் வாக்கெடுப்புத் தினம்
39	அஞ்சல் மூலம் வாக்களித்தல்
45	வாக்கெடுப்பு சுவரொட்டி அறிவித்தல் (வேட்பாளர்களின் பெயர் மற்றும் இலக்கம்)
47	வாக்குச் சீட்டில் வேட்பாளர் தொடர் இலக்கம்
59	வாக்கெண்ணல் அலுவலர்
61	வாக்கெண்ணல் தொடர்பாக அறிவித்தல் மற்றும் வாக்கெடுப்பு நிலைய பெயர்ப்பட்டியல்
63	வாக்குச் சீட்டை நிராகரித்தல்
64	வாக்கெண்ணலின் பின்னர் உறைகளில் பொறியிடல்
65	மேயர், பிரதி மேயர், தவிசாளர், உப தவிசாளர் பிரகடனம் செய்தல்

65 அ	வெற்றிடங்களை நிரப்புதல்
75	வாக்கெடுப்பின் இரகசிய தன்மை
75 அ	சுயேச்சைக் குழுவின் குழுத் தலைவர்
89	பொருள்கோடல்

உள்ளூர் அதிகார சபைத் தேர்தல் - 1987

14. 1987 ஆம் ஆண்டின் உள்ளூர் அதிகார சபைத் தேர்தலை நாடளாவிய ஒரு நாள் தேர்தலாக நடாத்துவதற்கு எடுக்கப்பட்ட முயற்சி அடுத்த உள்ளூர் அதிகார சபைத் தேர்தல் 1987 ஆம் ஆண்டில் நடாத்த வேண்டுமெனினும், ஏற்கனவே மாவட்ட அபிவிருத்தி சபை முறை வீழ்ச்சியடைந்தமை, வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தோன்றியிருந்த சிக்கலான நிலைமை உச்ச நிலையை அடைந்திருந்தமை, இதன் காரணமாக இலங்கை மற்றும் இந்தியாவிற்கிடையில் ஏற்பட்ட இணக்கப்பாட்டின் பயனாக இந்திய பிரதமர் திரு. ராஜீவ் காந்தி மற்றும் இலங்கை சனாதிபதி திரு. ஜே.ஆர். ஜயவர்தன ஆகியோரிடையே ஏற்படுத்திக் கொள்ளப்பட இலங்கை இந்திய ஒப்பந்தம் மற்றும் அரசியல் யாப்பிற்குக் கொண்டு வரப்பட்ட பதின்மூன்றாம் திருத்தம் என்பவற்றிற்கமைய கொண்டு வரப்பட்ட 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டம் போன்ற பல்வேறு காரணங்களால் நாட்டில் ஏற்பட்ட இக்கட்டான நிலைமை மற்றும் வெளிச் சக்திகளின் தலையீடு போன்றே வன்முறை செயல்கள் காரணமாகவும் மேற்கொள்ள முடியவில்லை. 12 மாநகர சபைகள், 39 நகர சபைகள், 257 பிரதேச சபைகளுக்காக 1987 யூன் மாதம் 26 ஆம் திகதி தொடக்கம் யூலை மாதம் 03 ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை வேட்புமனுக்களை கையேற்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தில் 02 மாநகர சபைகள், 04 நகர சபைகள், 36 பிரதேச சபைகளுக்கான வேட்புமனுக்கள் கையளிக்கப்படவில்லை. அநுராதபுரம் மாவட்டத்தின் ரம்பாவ பிரதேச சபைக்காகச் சமர்ப்பிக்கப்பட்ட ஒரேயொரு வேட்புமனுவும் நிராகரிக்கப்பட்டது. 2 மாநகர சபைகள், 05 நகர சபைகள், 68 பிரதேச சபைகள் என்பவற்றிற்கு உறுப்பினர்கள் போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டனர். எந்தவொரு வேட்புமனுவும் கையளிக்கப்படாத வடக்கு கிழக்கு மாகாணங்களின் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் கட்டளைச் சட்டத்தின் 35(ஐ)(ஆ) பிரிவிற்கமைய குறித்த தெரிவத்தாட்சி அலுவலரினால் தேர்தல்கள் ஆணையாளரின் அறிவுறுத்தலின் பிரகாரம் 02 ஆவது வேட்புமனுக் காலக்கெடுவொன்றும் பிரகடனப்படுத்தப்பட்டது. அந்த சந்தர்ப்பத்திலும் எந்தவொரு வேட்புமனுவும் சமர்ப்பிக்கப்படவில்லை.

15. ஒன்றுக்கு மேற்பட்ட வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட 08 மாநகர சபைகள், 30 நகர சபைகள், 152 பிரதேச சபைகள் என்ற அடிப்படையில் 190 உள்ளூர் அதிகார சபைகளுக்காக 1987 ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி வாக்கெடுப்பை நடாத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்ட போதும் எதிர்பார்க்கப்பட்டவாறு 1987 யூலை மாதம் இடம்பெற்ற குடிசார் கலவரங்கள் காரணமாக இத்தேர்தலை பிற்போட வேண்டி நேரிட்டது. பிற்போடப்பட்ட சந்தர்ப்பத்தின் போது தேர்தலுக்கான பூர்வாங்க பணிகளில் அஞ்சல் வாக்காளர்களுக்குரிய வாக்குச் சீட்டுக்களை விநியோகித்தல் மாத்திரம் எஞ்சியிருந்தது. நாட்டின் 308 உள்ளூர் அதிகார சபைகளுக்காக முதல் தடவையாக ஒரு தினத்தினுள் தேர்தலொன்றை நடாத்துவதற்கு எடுக்கப்பட்ட முயற்சி 1987 ஆகஸ்ட் மாதம் நடாத்தப்படவிருந்த தேர்தல் பிற்போடப்பட்டதைத் தொடர்ந்து மறைந்துவிட்டது.

16. இக்காலப்பகுதியினுள் நாட்டின் வடக்கு, கிழக்கு மாகாணங்களைப் போன்றே தெற்கிலும் பாரிய குழப்பகரமான நிலைமையொன்று காணப்பட்டதோடு, அடிக்கடி குடிசார் கலவரங்கள் ஏற்பட்டன. 1988 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்கள் சட்டத்தின் கீழ் நடாத்தப்பட்ட 1988 உள்ளூர் அதிகார சபைத் தேர்தல் கலவர நிலைமையின் கீழ் நடாத்தப்பட்ட முதலாவது தேர்தலாகும். இத்தேர்தல்கள் 1988 ஏப்ரல் 28 யூன் 02, யூன் 09 மற்றும் நவம்பர் 19 ஆகிய தினங்களில் நடாத்தப்பட்டன. சனாதிபதியின் பதவிக்காலம் 1989 ஆம் ஆண்டு ஆரம்பப் பகுதியில் நிறைவடையவிருந்த காரணத்தால் புதிய சனாதிபதி ஒருவரை தேர்ந்தெடுப்பதற்காக 1988 ஒக்தோபர் 21 ஆம் திகதி வேட்புமனு கோரப்பட்டதோடு, கிழக்கு மாகாணத்தின் மாகாண சபைத் தேர்தல் நிறைவடைந்து ஒரு மாதத்தின் பின்னர், 1988 திசெம்பர் மாதம் 19 ஆம் திகதி சனாதிபதித் தேர்தல் நடாத்தப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட சனாதிபதி தொடர்பான இறுதி முடிவு வெளியிடப்படுவதற்கு 06 மணித்தியாலங்களுக்கு முன்னர் அப்போதைய பாராளுமன்றம் கலைக்கப்பட்டது. அதற்கமைய 1989 பெப்புருவரி 15 ஆம் திகதி பாராளுமன்றப் பொதுத் தேர்தல் நடாத்தப்பட்டது.

17. 1987 யூலை மாதம் ஆரம்பமாகிய மக்கள் கிளர்ச்சி மற்றும் வன்முறை நிலைமை ஆகியவற்றுக்கு மத்தியில் மேற்கூறப்பட்ட தேர்தல் நடாத்தப்பட்டதோடு, இலங்கையின் தேர்தல் வரலாற்றில் ஒரு போதும் இல்லாத பயமும் அச்சமும் மற்றும் உயிர் தியாகத்தோடும் அலுவலர்கள் கடமையில் ஈடுபடுவதற்கு நேரிட்டதோடு, 3 தேர்தல்களாக இத்தேர்தல் நடாத்தப்படுவதைத் தேர்தல்கள் ஆணையாளர் வெளியிட்ட தேர்தல் அறிக்கைகளில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒரு நாளில் நடாத்தப்பட்ட முதலாவது உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் -1991

18. 1987 ஆம் ஆண்டின் நடாத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட ஒரே தினத்தில் உள்ளூர் அதிகார சபைத் தேர்தல் எதிர்பாராத விதமாக காலத்தைப் பிற்போடுவதற்கு நேர்ந்தமை 1988 மாகாண சபை தேர்தல், 1988 சனாதிபதித் தேர்தல் மற்றும் 1989 பாராளுமன்றத் தேர்தல் என்பன நடாத்தப்பட்ட கலவரமிக்க பின்னணியைக் கருத்தில் கொண்டு இளைஞர் எழுச்சி தொடர்பாகவும் சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாத்தல் தொடர்பாகவும் அரசாங்கத்தின் கவனம் திரும்பியுள்ளமையினால் அது தொடர்பாக ஆராய்ந்து பார்த்து பரிந்துரைகளைச் சமர்ப்பிப்பதற்கு சனாதிபதி ஆணைக்குழுவொன்று நியமனம் செய்யப்பட்டது.

19. அவ்வாணைக்குழுவின் பரிந்துரைகளைக் கருத்தில் கொண்டு உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்களின் போது வேட்புமனுச் செய்கின்ற வேட்பாளர்களில் இளைஞர் பிரதிநிதித்துவத்தைக் கட்டாயமாக்கல், விகிதாசார பிரதிநிதித்துவ முறையின் மூலம்

சிறுபான்மையினரின் உரிமைகள் தொடர்பாக மிகப் பொருத்தமான பிரதிநிதித்துவமொன்றை வழங்கும் நோக்கோடு வாக்காளருக்கு தாம் விரும்பிய வேட்பாளர் ஒருவருக்கு மூன்று விருப்புக்களையும் வழங்கக்கூடிய விதத்திலான ஏற்பாடுகளை உள்ளடக்குதல் செய்து 1990 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் (திருத்தச்) சட்டம் கொண்டுவரப்பட்டது.

20. அதற்கமைய உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்களின் போது வேட்புமனுச் செய்ய வேண்டிய வேட்பாளர்களில் 40மூ 18-35 வயதிற்கு இடைப்பட்ட இளம் வேட்பாளர்களை உள்ளடக்கியிருப்பது கட்டாயத் தேவைப்பாடொன்றெனவும், அதற்கமைய வேட்புமனுச் செய்கின்ற இளம் வேட்பாளர்கள் அத்தேர்தலுக்காக பயன்படுத்தப்பட்ட நடைமுறை தேருநர் இடாப்பு மீளாய்வு ஆரம்பிக்கப்பட்ட வருடத்தில் யூன் மாதம் 01 ஆம் திகதிக்கு 18 வயதிற்குக் குறையாத வேட்புமனுக் கையேற்கும் இறுதித் தினத்தன்று 35 வயதிற்கு மேற்படாத ஒருவராகவிருத்தல் வேண்டுமெனவும், அதனை உறுதிபடுத்துவதற்காகப் பிறப்புச் சான்றிதழ் அல்லது பிறந்த திகதியை உறுதிசெய்வதற்கான சத்திய வெளிப்படுத்துகையொன்றை வேட்புமனுப் படிவத்துடன் கையளித்தல் வேண்டுமெனவும், அவ்வாறின்றேல், வேட்புமனு 31(1) ஆம் பிரிவின் கீழ் நிராகரிக்கப்பட வேண்டுமெனவும், சட்டம் விதிக்கப்பட்டது.

21. இத்திருத்தச் சட்டத்தைத் தொடர்ந்து 1987 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நடாத்தப்படவிருந்த பின் போடப்பட்ட உள்ளூர் அதிகார சபைத் தேர்தலுக்குரியதாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் எந்தவொரு வேட்புமனுவும் சமர்ப்பிக்கப்படாத 42 உள்ளூராட்சி சபைகளுக்கான வேட்புமனுக் கோருவதற்கும் போட்டியின்றி தெரிவு செய்யப்பட்ட 75 உள்ளூராட்சி அதிகார சபைகளின் பதவிக்காலத்தை முடிவுறுத்துவதையும் கால வரையறையின்றி தேர்தல் பின்போடப்பட்ட 190 உள்ளூராட்சி சபைகளின் வேட்புமனுக்களை செயல்வலுவற்றதாக்குவதையும் இலக்காகக் கொண்டு 1990 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் (விஷேட ஏற்பாடுகள்) சட்டம் கொண்டுவரப்பட்டது. இவ்விரண்டு சட்டங்களும் யூன் மாதம் 19 ஆம் திகதி நிறைவேற்றுவதன் மூலம் எதிர்பார்க்கப்பட்டது யாதெனில் தேர்தலை நடாத்தப்படுவதற்கெதிராகத் தோன்றியுள்ள இளைஞர் எழுச்சி மற்றும் மக்கள் கிளர்ச்சி என்பவற்றை ஓரளவுக்கேனும் சுமுக நிலைக்கு கொண்டு வருவதே ஆகும்.

22. 1990 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் (திருத்தச்) சட்டத்தினால் எதிர்பார்க்கப்பட்ட தேர்தல் சட்ட திருத்தங்கள் சுருக்கமாக அட்டவணை 1.1 இல் காட்டப்பட்டுள்ளன.

2 ஆம் பந்தி	உள்ளூர் அதிகார சபையொன்றின் உறுப்புரிமையை வகிப்பதற்கு தகைமையற்ற நபர்களாக அபிவிருத்தி சபையொன்றின் உறுப்பினர்கள் என்ற விடயம் உள்ளடக்கப்பட்டிருந்தமை நீக்கப்பட்டு பாராளுமன்ற, மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் வேறு உள்ளூர் அதிகார சபையொன்றின் உறுப்பினர்கள் உள்ளடக்கப்படல்.
3(1) உப பந்தி	வேட்புமனுச் செய்யும் மொத்த வேட்பாளர் எண்ணிக்கையில் 40மூ 18-35 வயதிற்கு இடைப்பட்ட இளம் வேட்பாளர்களாகவிருத்தல் வேண்டும்.
3(2) உப பந்தி	வேட்புமனுப் பத்திரத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய வேட்பாளர்களின் எண்ணிக்கையைக் கணக்கிடல்.
3(3) உப பந்தி	இளம் வேட்பாளரென்பதை உறுதி செய்து கொள்வதற்காக சமர்ப்பிக்க வேண்டிய எழுத்தாவணங்கள்
4 ஆம் பந்தி	சுயேச்சைக் குழுவின் கட்டுப்பணம் அரசுடமையாக்கப்படும் சந்தர்ப்பங்கள்
5(1) ஆம் பந்தி	வேட்புமனு நிராகரிக்கப்படுவதற்கான காரணங்களுக்குள் இளம் வேட்பாளர்களின் எண்ணிக்கை உள்ளடக்கப்படாமை மற்றும் இளம் வேட்பாளரொருவரென உறுதிசெய்யப்படாமை ஆகியவற்றை உட்சேர்த்தல்.
5(2) ஆம் பந்தி	வேட்புமனுக் காலப்பகுதியின் இறுதியில் நண்பகல் 12.00 மணி தொடக்கம் பிற்பகல் 01.00 மணி வரையிலான காலத்தை ஆட்சேபனை காலப்பகுதியாகப் பிரகடனப்படுத்தல்.
6 ஆம் பந்தி	இரண்டாவது வேட்புமனுக் காலப்பகுதியின் போது எந்தவொரு வேட்புமனுவும் கிடைக்கப்பெறாதவிடத்து உறுப்பினர் பதவிகளுக்காக அமைச்சரினால் பெயர் குறிக்கப்படுகின்ற உறுப்பினர்களில் 40மூ இளைஞர் பிரதிநிதித்துவம் கட்டாயமாகவிருத்தல் வேண்டும்.
7(1) உபபந்தி	போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்படுகின்ற சந்தர்ப்பமொன்றில் கட்சிச் செயலாளரினால் தவிசாளர், உப தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள் பெயர்க் குறிக்கப்படவில்லையெனில், உறுப்பினர் பதவிக்களுக்காக தேர்ந்தெடுக்கும் போது தெரிவத்தாட்சி அலுவலரினால் குறித்த வேட்புமனுப் படிவத்தில் பெயர்களை சிங்கள அகர வரிசைப்படி ஒழுங்குபடுத்துவதன் தேவைப்பாடு.
7(2) உப பந்தி	வேட்புமனுப் படிவத்தில் முதலாவதாக மற்றும் இரண்டாவதாக பெயர் காட்டப்படுவதென்பது அப்பட்டியலில் முதலாவதாக மற்றும் இரண்டாவதாக ஆவதாக பெயர் காட்டப்படுவதென திருத்தம் செய்யப்படல் வேண்டும்.
7(3) உப பந்தி	போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்படுகின்ற சந்தர்ப்பமொன்றில் வேட்புமனுப் படிவத்தில் பெயர் காட்டப்படுகின்ற விதத்திலன்றி தனியான பட்டியலில் பெயர் காணப்படுகின்ற முறையில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென
8 ஆம் பந்தி	ஒவ்வோர் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் அல்லது சுயேச்சைக் குழுவின் வேட்பாளர்களின் பெயர்கள் அவரவரால், குறிப்பிடப்பட்டுள்ளவாறு இருப்பினும், சிங்கள அகர வரிசையொழுங்கில் தனிப்பட்டியலொன்றாகத் தயார் செய்யப்படல்.
9 ஆம் பந்தி	வாக்குச் சீட்டு தயாரிக்கப்பட வேண்டிய முறையைத் தெளிவுபடுத்தல்.
10 ஆம் பந்தி	ஒன்றுக்கு மேற்பட்ட விருப்புக்களை அடையாளமிட முடியுமென
11(2) உப பந்தி	வாக்கெண்ணலின் போது தகைமையற்ற அரசியல் கட்சிகள் அல்லது குழுக்கள் என்ற விதத்தில் நீக்கப்படுவதில்லையென
14 ஆம் பந்தி	இளம் வேட்பாளரென்பது எவ்வயதுக் குழுவிற்குரியவர் என்பது
15 அம் பந்தி	வேட்புமனுப் படிவத்தின் மாதிரி
17 ஆம் பந்தி	வாக்குச் சீட்டின் மாதிரி

23. 1990 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்தின் மூலம் மீள் வேட்புமனுக் கோரலுக்குத் தேவையான ஏற்பாடுகளை செய்து கொண்டமையும் 1990 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் (திருத்த) சட்டத்தின் மூலம் அதுவரை காணப்பட்ட பொது மக்களின் கருத்து வேறுபாடு மற்றும் எழுச்சியை சமரசப்படுத்துவது எதிர்பார்க்கப்பட்டதோடு,

1990 ஆகஸ்ட் மாதம் நாடளாவிய ஒரு நாள் தேர்தலொன்றை நடாத்துவதற்கான சாத்தியங்கள் தொடர்பாக ஆராயப்பட்டது. அதன் பெறுபேறாக தேர்தல்கள் திணைக்களத்தினால் 1990 ஒக்தோபர் காலப்பகுதியில் புதிதாக வேட்புமனுக் கோருவதற்கு தீர்மானிக்கப்பட்ட போதிலும் அரசு மற்றும் எதிர்க்கட்சிகள் என்பன கூட்டாக கலந்துரையாடி அவ்வாறான தேர்தலொன்றுக்கு இச்சந்தர்ப்பம் பொருத்தமற்றதென 1990 ஒக்தோபர் மாதம் 17 ஆம் திகதி தீர்மானித்தன. இப்பின்னணியின் கீழ் வடக்கு, கிழக்கில் காணப்பட்ட குழப்பகரமான சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு வடக்கு, கிழக்கின் 08 மாவட்டங்கள் தவிர்ந்த ஏனைய 17 மாவட்டங்களில் அமையப்பெற்றுள்ள 237 உள்ளூரதிகார சபைகளுக்காக முதலாவது ஒரு நாள் உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்கள் 1991 மே மாதம் 11 ஆம் திகதி நடாத்துவதற்கென மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தை நிறைவேற்றிக் கொள்ள முடிந்தது.

24. முதல் முறையாக உள்ளூர் அதிகார சபைத் தேர்தலொன்றுக்காக அஞ்சல் வாக்களிப்பு வசதிகளை வழங்கும் முறையை நடைமுறைப்படுத்தல், இளைஞர் பிரதிநிதித்துவத்திற்கான விஷேட அவகாசமளித்தல், வாக்குச் சீட்டுக்களை அடையாளமிடும் போது 3 விருப்புக்களையும் ஒரே வேட்பாளருக்கு, வழங்க முடியுமாதலால், முதல் முறையாக உள்ளூராட்சித் தேர்தலொன்றின் வாக்கெண்ணலை ஒருமையப்படுத்தி தேர்தல் முடிவுகளையும் ஒருமையப்படுத்தி வெளியிடுதல் என்பன காரணமாக 1990 மே மாதம் 11 ஆம் திகதி நடாத்தப்பட்ட முதலாம் ஒரு நாள் உள்ளூர் அதிகார சபைத் தேர்தல், தேர்தல் வரலாற்றில் முக்கியத்துவம் பெறுகின்றது. அதேபோன்று வேட்பாளர்களுக்கு, வாக்காளர்களுக்கு மற்றும் அரசியல் அதிகாரங்களுக்கும் இத்தேர்தல் புதியதோர் அனுபவத்தை ஏற்படுத்தியது. ஒரு வேட்பாளருக்கு 03 விருப்புக்களையும் அடையாமிட முடியுமென செய்யப்பட்டிருந்த ஏற்பாடு தவிர்ந்த ஏனைய விடயங்கள் விகிதாசார அடிப்படையில் நடாத்தப்பட்ட 1988 மாகாண சபை மற்றும் 1989 பாராளுமன்றத் தேர்தல் என்பவற்றின் மூலம் கிடைக்கப்பெற்ற அனுபவங்களினூடாக அனைத்துப் பிரிவினரும் அறிந்து வைத்திருந்தமை தேர்தல் பணிகளை சிரமமின்றி நிறைவுசெய்து கொள்ள பெரிதும் உதவியதெனலாம்.

உள்ளூர் அதிகார சபைத் தேர்தல் - 1994 (கிழக்கு மாகாணம் மற்றும் வவுனியா நகர சபை)

25. 1991 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட உள்ளூர் அதிகார சபைத் தேர்தலில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ளூர் அதிகார சபைகளுக்கான தேர்தலை நடாத்த முடியவில்லை. அவற்றில் வடமாகாணத்தின் வவுனியா நகர சபை மற்றும் கிழக்கு மாகாணத்தின் உள்ளூர் அதிகார சபைகளுக்காக வேட்புமனுக் கோருவதற்கு எடுக்கப்பட்ட தீர்மானம் பல்வேறு சந்தர்ப்பங்களின் போது வேட்புமனுக் கோரல் அறிவித்தலை வெளியிடுவதோடு, மாத்திரம் வரையறுக்கப்பட்டது. அவ்வேட்புமனுக் கோரல்களை இரத்து செய்வதற்கும் நேரிட்டது. இறுதியில் 1993 திசெம்பர் மாதம் 22 ஆம் திகதி வவுனியா மாவட்டத்தின் வவுனியா நகர சபை மற்றும் கிழக்கு மாகாணத்தின் அனைத்து உள்ளூராட்சி சபைகளுக்காகவும் வேட்புமனுக் கோரும் அறிவித்தல் வெளியிடப்பட்டது. அதற்கமைய 01 மாநகர சபை, 03 நகர சபைகள், 36 பிரதேச சபைகளுடன் 40 உள்ளூர் அதிகார சபைகளுக்கான தேர்தல் 1994.03.01 ஆம் திகதி நடாத்தப்பட்டது. இத்தேர்தலின் போது கிழக்கு மாகாணத்தின் சில இடங்களில் வாக்கெடுப்புக்கு இடையூறுகள் ஏற்பட்டமை தொடர்பாக ஆராய்ந்து பார்ப்பதற்காக சனாதிபதி ஆணைக்குழுவொன்றும் தாபிக்கப்பட்டதோடு, அவ்வறிக்கையில் ஒரு சில சம்பவங்கள் இடம்பெற்றதென உறுதி செய்யப்பட்டமை காரணமாக அது தொடர்பில் பொறுப்புக்கூறவேண்டிய நபர்களுக்கெதிராக நடவடிக்கையெடுப்படல் வேண்டுமென பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

இவ்வுள்ளூர் அதிகார சபைகளின் பதவிக்காலம் 1998.04.03 ஆம் திகதி முடிவடைந்தமையால் மாகாண சபைகள், உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சரினால் ஒரு வருடத்தால் பதவிக்காலம் கால நீடிப்புச் செய்யப்பட்டதோடு, அவ்வொரு வருட காலமும், நிறைவடைந்த பின்னரும், அப்பிரதேசத்தில் நிலவிய பயங்கரவாத சூழ்நிலைகளால், 1999.04.04 ஆம் திகதிய 1073/25 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் அந்நிறுவனங்களின் பணிகளை மேற்கொள்ளும் அதிகாரம் பிரதேச செயலாளர்களுக்குக் கையளிக்கப்பட்டன.

உள்ளூர் அதிகார சபைத் தேர்தல் - 1997

26. கூட்டுறவு, மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் சுதேச வைத்திய அமைச்சரினால் 1997.01.27 ஆம் திகதிய மற்றும் 960/01 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட 1996 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க அவசர நிலைமைகள் (உள்ளூராட்சி சபைகள் பதவிகள் பதவிக்காலம்) கட்டளைக்கமைய 1997 சனவரி மாதம் 27 ஆம் திகதி பதவிக்காலத்தை நிறைவு செய்த 12 மாநகர சபைகள், 31 நகர சபைகள், 195 பிரதேச சபைகள் ஆகியவற்றுக்காக 1997 சனவரி மாதம் 22 ஆம் திகதி வேட்புமனுக் கோரும் அறிவித்தல் வெளியிடப்பட்டது. அதற்கமைய 238 உள்ளூர் அதிகார சபைகளுக்காக 8248 வாக்கெடுப்பு நிலையங்களில் 1997 மார்ச் மாதம் 21 ஆம் திகதி வாக்கெடுப்பு நடாத்தப்பட்டது. இந்த 238 உள்ளூர் அதிகார சபைகளினதும் பதவிக்காலம் 2001 ஏப்ரல் மாதம் 17 ஆம் திகதி முடிவடையவிருந்தது. இத்தேர்தலின் போது கிழக்கு மாகாணத்தின் 40 உள்ளூர் அதிகார சபைகளின் பதவிக்காலம் முடிவடையாதிருந்தது வடமாகாணத்தில் நிலவிய குழப்பகரமான சூழ்நிலை காரணமாக வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இத்தேர்தலில் உட்சேர்க்கப்படவில்லையென்பதைக் குறிப்பிட்டாதல் வேண்டும். மேலும் கம்பஹா உள்ளிட்ட சில மாவட்டங்களின் வாக்கெடுப்பு நிலையங்களில் பலவந்தமாக வாக்குகள் அடையாளமிடப்பட்டமை உள்ளிட்ட கணிசமான எண்ணிக்கையிலான முறைகேடுகள் இத்தேர்தலில் அறிக்கையிடப்பட்டிருந்தன. அதிகமான சம்பவங்கள் கம்பஹா மாவட்டத்திலேயே அறிக்கையிடப்பட்டிருந்தன.

உள்ளூர் அதிகார சபைத் தேர்தல் - 1998

27. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா மற்றும் முல்லைத்தீவு ஆகிய நிருவாக மாவட்டங்களை உள்ளடக்கிய பிரதேசங்களினுள் அமையப்பெற்றிருந்த 1 மாநகர சபை, 03 நகர சபைகள், 27 பிரதேச சபைகளுக்கான தேர்தல்களை நடாத்துவதற்கு 1987 யூன் 12 ஆம் திகதி வேட்புமனுக் கோரல் வெளியிடப்பட்ட போதும், எந்தவொரு வேட்புமனுவும் கிடைக்கப்பெறாமை மற்றும்

இரண்டாவது வேட்புமனுக் காலக்கெடுவினுள் செல்லுபடியான எந்தவொரு வேட்புமனுவும் சமர்ப்பிக்கப்படாமை காரணமாக இவ்வுள்ளூர் அதிகார சபைகளின் பதவிக்காலம் ஆரம்பமாவது, வருடா வருடம் பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் பிற்போடப்பட்டது. அந்த 31 உள்ளூர் அதிகார சபைகளில் கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி பிரதேச சபை மற்றும் யாழ்ப்பாண மாவட்டத்தின் 16 உள்ளூர் அதிகார சபைகளுக்காக 1997.12.02 ஆம் திகதி வேட்புமனுக் கோரப்பட்டதோடு, 72 வேட்புமனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டன. அதேபோன்று 12 வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டன. அதற்கமைய 1998 சனவரி 29 ஆம் திகதி திட்டமிடப்பட்டவாறு வாக்கெடுப்பை நடாத்த முடிந்தது. அவ்வுள்ளூர் அதிகார சபைகளின் பதவிக்காலம் 2002.02.17 ஆம் திகதி நிறைவடையவிருந்தது. கிளிநொச்சி, மன்னார், வவுனியா மற்றும் முல்லைத்தீவு ஆகிய நிருவாக மாவட்டங்களில் அமையப்பெற்றுள்ள 14 உள்ளூர் அதிகார சபைகளின் பதவிக்காலம் 2002.08.18 ஆம் திகதி ஆரம்பமாக வேண்டுமென பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 05 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல் 1999.02.18 ஆம் திகதிய 1067/14 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது.

யாழ் மாவட்டத்தில் நீண்ட காலமாக சிவில் நிருவாக அலுவல்கள் செயலிழந்து காணப்பட்டமையால், தேர்தலுக்கான அறிவித்தல் வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து அரசியல் கட்சிகளும் மற்றும் வெவ்வேறு பிரிவினரும் இதனை முனைப்பாக உற்று நோக்கத் தொடங்கினர். இதற்காக விஷேட பாதுகாப்பைப் பாதுகாப்புப் பிரிவுகளிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டியிருந்ததோடு, வெளி மாவட்டங்களிலிருந்து கடமைகளிலீடுபடுவதற்காகச் சென்ற அலுவலர்களுக்கும் அம்மாவட்டத்தின் அலுவலர்களுக்கும் பல்வேறு சிரமங்களுக்கு முகங்கொடுக்க நேர்ந்தது. இங்கு பூர்வாங்க ஒழுங்கமைப்பு அலுவல்கள் தவிர வேட்புமனுக் கையேற்றல் வாக்கெடுப்பை நடாத்துதல் என்பன யாழ்ப்பாணத்திற்கு வெளியிலிருந்து அனுப்பி வைக்கப்பட்ட அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்டமை விஷேட அம்சமாகும்.

உள்ளூர் அதிகார சபைத் தேர்தல் - 2002

28. உள்ளூர் அதிகார சபைத் தேர்தல் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 25 ஆம் பிரிவிற்கமைய உள்ளூர் அதிகார சபைகளுக்காகத் தேர்ந்தெடுக்கப்படவுள்ள உறுப்பினர்களின் பதவிக்காலம் ஆரம்பமாவதற்குள்ள தினத்திற்கு முன்னரான 06 மாத காலத்திற்குள் வாக்கெடுப்பை நடாத்துவதற்கான சட்ட ஏற்பாடுகள் காணப்படுவதால், மேற்குறித்த அனைத்து உள்ளூர் அதிகார சபைகளுக்காகவும் 2002 ஆம் ஆண்டில் தேர்தலொன்றை நடாத்துவதற்கான சாத்தியப்பாடுகள் தொடர்பாக ஆராய்ந்து பார்க்கப்பட்டது.

29. அதற்கமைய 18 மாநகர சபைகள், 37 நகர சபைகள், 256 பிரதேச சபைகள் என்ற அடிப்படையில் 311 உள்ளூர் அதிகார சபைகளுக்காக 2002 பெப்புருவரி மாதம் 01 ஆம் திகதி தொடக்கம் 08 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை அந்தந்த மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களில்/ மாவட்ட செயலகங்களில் மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களால் குறித்த மாவட்டத்திற்குரிய ஒவ்வொரு உள்ளூர் அதிகார சபைக்காகவும் வேட்புமனுக்கள் கையேற்கப்பட்டன.

30. மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர்ப்பற்று, போரதீவுப்பற்று ஆகிய 02 பிரதேச சபைகள் மற்றும் அம்பாறை மாவட்டத்தின் ஆலையடிவேம்பு பிரதேச சபைக்காகவும், போட்டியின்றி உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதோடு, கிளிநொச்சி மாவட்டத்தின் 03 பிரதேச சபைகள், முல்லைத்தீவு மாவட்டத்தின் 04 பிரதேச சபைகள் என்பவற்றுக்கு எந்தவொரு வேட்புமனுவும் கிடைக்கப்பெறவில்லை. இரண்டாம் முறையாகவும் வேட்புமனுக் கோரப்பட்ட போதும் எந்தவொரு வேட்புமனுவும் கிடைக்கப்பெறாமையால், உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 35 ஆம் பிரிவின் கீழ் இந்நிலைமை உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரூடாக அமைச்சருக்கு அறிவிக்கப்பட்டது.

31. யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்களின் 53 உள்ளூர் அதிகார சபைகளுக்காக உரிய அடிப்படையில் வேட்புமனுக்கள் கிடைக்கப்பெற்ற போதிலும் அவ்வமயம் அப்பிரதேசங்களில் நிலவிய யுத்த சூழ்நிலை காரணமாக 2002 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்கள் (திருத்த) சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்ட உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 38(3) ஆம் பிரிவின் கீழ் குறித்த தெரிவத்தாட்சி அலுவலர்களால் தேர்தல்கள் பிற்போடப்பட்டன.

32. உரிய விதத்தில் 2002 மார்ச் 20 ஆம் திகதி 222 உள்ளூர் அதிகார சபைகளுக்காக தேர்தல் நடாத்தப்பட்டதோடு, நிராகரிக்கப்பட்ட வேட்புமனுக்கள் தொடர்பில் நீதிமன்ற நடவடிக்கைகளுக்குச் சென்றமை காரணமாக 2002 மார்ச் மாதம் 25 ஆம் திகதி 08 உள்ளூர் அதிகார சபைகள் தொடர்பாகவும், 2002 மே மாதம் 20 ஆம் திகதி 12 உள்ளூர் அதிகார சபைகள் தொடர்பாகவும், 2003 மார்ச் 08 ஆம் திகதி அக்குரஸ்ஸ பிரதேச சபைக்காகவும் வாக்கெடுப்பு நடாத்தப்பட்டது. அக்குரஸ்ஸ பிரதேச சபைக்காக சமர்ப்பிக்கப்பட்ட வேட்புமனுவொன்று நிராகரிக்கப்பட்டமை தொடர்பில் நடாத்தப்பட்ட வழக்கு விசாரணையில் அளிக்கப்பட்ட தீர்ப்புக்கெதிராக தேர்தல்கள் ஆணையாளர் மேன்முறையீடொன்றை சமர்ப்பித்தமை காரணமாக அக்குரஸ்ஸ பிரதேச சபைத் தேர்தல் அது வரை காலதாமதம் செய்யப்பட வேண்டியேற்பட்டது.

உள்ளூர் அதிகார சபைத் தேர்தல் - 2006

33. மாநகர சபை கட்டளைச் சட்டம், நகர சபை கட்டளைச் சட்டம் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் ஆகியவற்றுக்கமைய சபையின் பதவிக்காலம் ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து 04 வருடங்கள் நிறைவடைந்ததும் சபையின் பதவிக்காலம் முடிவடையவிருப்பினும், மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டங்கள் மற்றும் பிரதேச சபை சட்டத்திற்கமைய விடயப் பொறுப்பு அமைச்சருக்கு சபையின் பதவிக் காலத்தை 01 வருடத்தால் நீடிக்கச் செய்வதற்கு அல்லது 01 வருடத்தினால் குறைப்பதற்குத் தேவையான ஏற்பாடுகள் காணப்படுகின்றன.

34. அதற்கமைய 2006 ஆம் ஆண்டில் நடாத்தப்படவிருந்த தேர்தலை அனைத்து உள்ளூராட்சி சபைகளுக்காகவும் ஒரு தினத்தில் நடாத்தக் கூடியவாறு கீழே காட்டப்பட்டுள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

அ.	வடக்கு, கிழக்கு மாகாணங்களின் உள்ளூர் அதிகார சபைகளுக்காக 2002 ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட வேட்புமனுக்கள் அனைத்தையும் விஷேட ஏற்பாடுகள் சட்டத்தின் மூலம் செயல்வலுவற்றதாக்குதல் அதற்காக 2006 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் விஷேட (ஏற்பாடுகள்) சட்டம் 2006.01.19 ஆம் திகதி நிறைவேற்றப்பட்டது.
ஆ.	அனைத்து உள்ளூர் அதிகார சபைகளதும் பதவிக்காலத்தை முடிவுறுத்தும் தினமாக 2006.04.14 ஆம் திகதியைப் பிரகடனப்படுத்தும் வர்த்தமான அறிவித்தலை வெளியிடல்.
இ.	21 உள்ளூர் அதிகார சபைகளைப் புதிதாக தாபித்தல்.
ஈ.	கலைக்கப்பட்ட நாத்தாண்டிய, ஹொரவபொத்தானை மற்றும் கங்க இஹல கோரளை பிரதேச சபையை மீள தாபித்தல்.

35. இதற்கமைய 2006 உள்ளூர் அதிகார சபைத் தேர்தலுக்கமைய அனைத்து உள்ளூர் அதிகார சபைகளுக்காகவும் தேர்தல்களை நடாத்தி 2006.04.15 ஆம் திகதிக்கு முன்னர் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல் அவசியமாகியது. குறித்த உள்ளூர் அதிகார சபைகளின் எண்ணிக்கை 18 மாநகர சபைகள், 42 நகர சபைகள், 270 பிரதேச சபைகள் என மொத்தம் 330 உள்ளூர் அதிகார சபைகளாகும். 2002 ஆம் ஆண்டாகும் போது 18 மாநகர சபைகள், 37 நகர சபைகள், 256 பிரதேச சபைகளென 311 உள்ளூர் அதிகார சபைகள் காணப்பட்டதோடு, அது 2006 உள்ளூர் அதிகார சபைத் தேர்தலின் போது புதிதாக 05 நகர சபைகள், 16 பிரதேச சபைகள் தாபிக்கப்பட்டமை காரணமாக மற்றும் ஏற்கனவே காணப்பட்ட கெஸ்பேவ மற்றும் அட்டகலன்பன்ன ஆகிய 02 பிரதேச சபைகளும் பிரிக்கப்பட்டமை காரணமாக மொத்த உள்ளூர் அதிகார சபைகளின் எண்ணிக்கை 330 ஆக உயர்ந்தது.

36. நாடளாவிய ஒரு நாள் தேர்தலொன்றாக 2006 ஆம் ஆண்டில் 18 மாநகர சபைகள், 42 நகர சபைகள், 270 பிரதேச சபைகளென 330 உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தலை நடாத்தும் நோக்கத்தோடு, வேட்புமனுக்கள் கையேற்கப்பட்ட போது 286 உள்ளூராட்சிச் சபைகளுக்கு மாத்திரமே தேர்தல்களை நடாத்த முடிந்தது. செல்லுபடியான ஒரு வேட்புமனு மாத்திரம் கிடைக்கப்பெற்றமை காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச சபை மற்றும் திருகோணமலை மாவட்டத்தில் வெருகல் பிரதேச சபை ஆகியவற்றுக்கு உறுப்பினர்கள் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டனர்.

37. குறித்த மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களினால் உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 38(3) ஆம் பிரிவின் கீழ் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மட்டக்களப்பு ஆகிய நிருவாக மாவட்டங்களின் 02 மாநகர சபைகள், 06 நகர சபைகள் மற்றும் 37 பிரதேச சபைகள் என்ற அடிப்படையில் 45 உள்ளூர் அதிகார சபைகளின் வாக்கெடுப்பு பிற்போடப்பட்டது. இவற்றில் மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடி நகர சபை, கோரளைப்பற்று மேற்கு பிரதேச சபை, ஏறாவூர் நகர பிரதேச சபை ஆகிய 03 உள்ளூராட்சி சபைகளில் தேர்தல்களை நடாத்துமாறு சில தரப்பினர் முன் வைத்த விடயங்களை ஆராய்ந்து பார்த்து தேர்தல்கள் ஆணையாளரின் அறிவுறுத்தலுக்கமைய தெரிவத்தாட்சி அலுவலர்கள் தேர்தலை நடாத்த தீர்மானித்தனர்.

38. 12 மாநகர சபைகள், 34 நகர சபைகள் மற்றும் 220 பிரதேச சபைகள் சார்பாக 2006.03.30 ஆம் திகதி தேர்தல் நடாத்தப்பட்டதோடு, தேர்தலுக்காக சமர்ப்பிக்கப்பட்ட 1883 வேட்புமனுக்களில் 217 வேட்புமனுக்கள் உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 31(1) ஆம் பிரிவிற்கு ஒத்திசையாமை காரணமாக நிராகரிக்கப்பட்டது. அவற்றில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த 11 வேட்புமனுக்கள் தொடர்பில் வழங்கப்பட்டிருந்த இடைக்கால தடையுத்தரவை உயர்நீதிமன்றம் நீக்கியமை காரணமாக அவ்வேட்புமனுக்கள் மீள ஏற்றுக் கொள்ளப்பட்டதோடு, மட்டக்களப்பு மாவட்டத்தின் 03 உள்ளூராட்சி சபைகள் அடங்கலாக 04 மாநகர சபைகள், 03 நகர சபைகள், 13 பிரதேச சபைகள் என 20 உள்ளூர் அதிகார சபைகளுக்கான தேர்தல் 2006.05.20 ஆம் திகதி நடாத்தப்பட்டது.

உள்ளூரதிகார சபைத் தேர்தல் 2008 மற்றும் 2009

39. வட, கிழக்கில் நிலவிய யுத்த சூழல் காரணமாக பாதுகாப்புக் காரணங்களின் அடிப்படையில் 2006.09.30 ஆம் திகதி வரை தேர்தல் பிற்போடப்பட்டிருந்த 42 உள்ளூராட்சி சபைகள் (02 மாநகர சபைகள், 05 நகர சபைகள், 35 பிரதேச சபைகள்) தொடர்பில் தேர்தலொன்றுக்கான பொருத்தமான நிலைமையொன்று கிடைக்கப்பெறாமையால் பல்வேறு சந்தர்ப்பங்களில் தேர்தலை பிற்போட நேரிட்டது. தேர்தல்களைப் பிற்போடும் இறுதி வர்த்தமானி அறிவித்தல் 1502/21 ஆம் இலக்க 2007.06.22 ஆம் திகதிய அதிவிஷேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது. அதன் மூலம் 2008.02.29 ஆம் திகதி வரை தேர்தல் பிற்போடப்பட்டது.

40. அதற்கிடையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் தேர்தல் பிற்போடப்பட்டிருந்த 09 உள்ளூர் அதிகார சபைகளுக்காக புதிதாக வேட்புமனுக் கோரி தேர்தலை நடாத்துவதற்குத் தேவையான சட்ட ஏற்பாடுகளை உள்ளடக்கிய 2007 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் (விஷேட ஏற்பாடுகள்) சட்டம் 2007 ஆகஸ்ட் மாதம் 08 ஆம் திகதியும், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களின் 33 உள்ளூர் அதிகார சபைகளுக்காக புதிதாக வேட்புமனுக் கோரி தேர்தலை நடாத்துவதற்கான சட்ட ஏற்பாடுகளைச் உள்ளடக்கிய 2007 ஆம் ஆண்டின் 55 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் (விஷேட ஏற்பாடுகள் சட்டம்) 2007 நவம்பர் 16 ஆம் திகதியும், 2009 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் விஷேட ஏற்பாடுகள் சட்டம் 2009 மே மாதம் 18 ஆம் திகதியும் நிறைவேற்றப்பட்டன. அவ்விஷேட ஏற்பாடுகள் சட்டங்களின் மூலம் இதுவரை தேர்தலை நடாத்த முடியாமற் போன உள்ளூர் அதிகார சபைகளுக்காக 2006 ஆம் ஆண்டில் கையேற்கப்பட்ட வேட்புமனுக்கள் செயல்வலுவற்றதாக்கப்பட்டன. இவ்விஷேட ஏற்பாடுகள்

சட்டங்களின் விஷேட அம்சமாக அமைந்தது இடம்பெயர்ந்த வாக்காளர்கள் தாம் வாக்காளர்களாக பதிவுசெய்யப்பட்டுள்ள வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்களிக்கச் செல்வதற்குள்ள அச்சம் காரணமாக வேறு வாக்கெடுப்பு நிலையமொன்றில் வாக்களிப்பதற்கு இயலுமான விதத்திலான சட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டமையாகும். அதற்கமைய மட்டக்களப்பு மாவட்டத்தில் தேர்தல் பிற்போடப்பட்ட 09 உள்ளூர் அதிகார சபைகளுக்காக 2008 மார்ச் மாதம் 10 ஆம் திகதியும் யாழ்ப்பாண மாநகர சபை மற்றும் வவுனியா நகர சபை என்பவற்றிற்காக 2009 ஆகஸ்ட் 08 ஆம் திகதியும் தேர்தல் நடாத்தப்பட்டது. யாழ்ப்பாண மாநகர சபைக்கான இத்தேர்தல் வடமாகாணத்தின் அனைத்து பிரதேசங்களதும் நிருவாகம் முழுமையாக அரச கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்ட பின்னர் நடாத்தப்பட்ட போதிலும் அச்சமயம் A-9 வீதியின் போக்குவரத்துக்காக மிக வரையறுக்கப்பட்ட தொகையினருக்கு மாத்திரம் விஷேட பாதுகாப்பு ஏற்பாடுகளின் கீழ் இடமளிக்கப்பட்டமையால், இத்தேர்தல் ஒழுங்கமைப்பு அலுவல்களுக்காக வெளியிலிருந்து அனுப்பப்பட்ட அலுவலர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டனர். 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் நடாத்தப்பட்ட இத்தேர்தல்களின் போது 2007 ஆம் ஆண்டின் 55 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்தின் மூலம் செய்யப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் இடம்பெயர்ந்த வாக்காளர்களுக்கு, வாக்காளரொருவராக அவரது பெயர் பதிவு செய்யப்பட்டுள்ள வாக்கெடுப்பு நிலையத்திற்குச் செல்வதற்குள்ள அச்சம் காரணமாக அவர் தற்காலிகமாக வதிகின்ற இடத்திற்கு அண்மித்த வாக்கெடுப்பு நிலையமொன்றில் வாக்களிப்பதற்கு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன.

41. 2006 ஆம் ஆண்டு தேர்தல் நடாத்தப்பட்ட 286 உள்ளூர் அதிகார சபைகள் மற்றும் போட்டியின்றி உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட 02 உள்ளூர் அதிகார சபைகள் அடங்கலாக 288 உள்ளூர் அதிகார சபைகளின் பதவிக் காலம் (04 வருடங்கள் நிறைவடைந்தமையால்) 2010 மார்ச் மாதம் முடிவடையவிருந்த போதும் மாகாண சபைகள், உள்ளூராட்சி விடயப்பொறுப்பு அமைச்சருக்கு மாநகர சபைகள் கட்டளைச் சட்டம, நகர சபைகள் கட்டளைச் சட்டம் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தினூடாக கையளிக்கப்பட்டிருந்த அதிகாரங்களின் கீழ் 1633/09 ஆம் இலக்க 2009.12.23 ஆம் திகதிய அதிவிஷேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தலொன்றின் மூலம் 2011 மார்ச் மாதம் 31 ஆம் திகதி வரை பதவிக்காலம் ஒரு வருடத்தினால் காலநீடிப்புச் செய்யப்பட்டது. அதற்குக் காரணம் 2010.01.26 ஆம் திகதி மற்றும் 2010.04.08 ஆம் திகதி ஆகிய இரு தினங்களிலும் முறையே சனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தல் என்பன நடாத்தப்படுவதற்காக திகதி குறிக்கப்பட்டிருந்தமையேயாகும்.
(பின்னிணைப்பு 01)

II ஆம் பிரிவு

உள்ளூர் அதிகார சபைகள் உள்ளடக்கத்தில் ஏற்பட்ட மாற்றங்கள்

42. 2011 ஆம் ஆண்டில் நடாத்தப்படவிருந்த உள்ளூர் அதிகார சபைத் தேர்தல் விகிதாசார பிரதிநிதித்துவ முறைக்கு அப்பால் வட்டார அடிப்படையிலான தொகுதிவாரி முறை, விகிதாசார முறை ஆகிய இரண்டினதும் கலப்பு முறையொன்றாக நடாத்தப்பட வேண்டுமென அரசு கொண்டுவந்துள்ள தீர்மானத்திற்கமைய உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சின் வழிகாட்டலின் கீழ் உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்கள் கட்டளைச் சட்டம் திருத்தம் செய்யப்பட வேண்டிய முறை தொடர்பாக தெரிவுக் குழு பல்வேறு சந்தர்ப்பங்களில் கலந்துரையாடியது. இறுதியாக உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சினால் தயாரிக்கப்பட்ட திருத்தச் சட்டத்தின் வரைவு 2010 ஒக்தோபர் மாதம் 04 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. இது தொடர்பில் தேர்தல்கள் ஆணையாளர் தனது அவதானிப்புக்களைச் சமர்ப்பித்து சட்ட வரைவு மீளத் தயாரிக்கப்பட வேண்டியதன் தேவைப்பாடு சுட்டிக்காட்டப்பட்டது. எவ்வாறிருப்பினும், ஏனைய வெவ்வேறு தரப்புக்களினால் இது தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்ட கருத்துக்கள் மற்றும் முன்மொழிவுகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு 2011 உள்ளூர் அதிகார சபைத் தேர்தல் விகிதாசார பிரதிநிதித்துவ அடிப்படையில் நடாத்தப்பட வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது. 2011 ஏப்ரல் மாதம் 01 ஆம் திகதிக்கு முன்னர் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்வதன் தேவைப்பாடு மற்றும் வட்டாரங்களை வேறு பிரிக்கும் செயற்பாடுகளுக்காகச் செலவாகும் காலம் இங்கு கருத்தில் கொள்ளப்பட்ட முக்கிய விடயமொன்றாகும். எவ்வாறாயினும், தேர்தல் விகிதாசார அடிப்படையில் நடாத்தப்பட வேண்டுமென தீர்மானிக்கப்பட்டதைத் தொடர்ந்து உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சினால் புதிதாக உள்ளூர் அதிகார சபைகளை தாபித்தல், உள்ளூர் அதிகார சபைகளை தரமுயர்த்துதல், கலைக்கப்பட்டுள்ள உள்ளூர் அதிகார சபைகளுக்காக தேர்தலொன்றை நடாத்தத்தக்க விதத்தில் மீளத் தாபித்தல் மற்றும் சில உள்ளூர் அதிகார சபைகளின் உறுப்பினர் பதவிகளின் எண்ணிக்கைகளை அதிகரித்தல் போன்ற பல மாற்றங்கள் உள்ளூர் அதிகார சபை கட்டமைப்பில் மேற்கொள்ளப்பட்டன.

43. விரைவாக மேற்கொள்ளப்பட்ட இம்மாற்றங்களில் சில உள்ளூர் அதிகார சபைகளை தரமுயர்த்தல் மற்றும் புதிதாக தாபித்தல் தொடர்பாக ஆராய்ந்து பார்க்கும் போது பெரும்பாலானவை பொது மக்களின் தேவைப்பாடு அல்லது அவ்வுள்ளூர் அதிகார சபைகளின் மேம்பாட்டு நிலைமை என்பன கவனத்தில் கொள்ளப்பட்டு மேற்கொள்ளப்பட்டவைகளாகத் தெரியவில்லை. அரசியல் தேவைப்பாடு முதன்மைக் காரணமாகியுள்ளதென்பது தெளிவாகும். இதற்கு உதாரணமாக கடுவலை பிரதேச சபை அதிகார எல்லைப் பிரதேசத்தை முழுமையாக கடுவலை மாநகர சபையாக தாபித்தமை மற்றும் அக்கரைப்பற்று பிரதேச சபையின் ஒரு பகுதியை அக்கரைப்பற்று மாநகர சபையாக தாபித்தமை என்பவற்றைக் குறிப்பிட முடியும். உள்ளூர் அதிகார சபை எல்லை நிர்ணயத்தை மேற்கொள்ளும் போது கூட நிரந்தரமான எல்லைகளை இனங்கண்டு கொள்ளாது நிலப்பிரதேசம் பல்வேறு விதங்களில் ஒன்றிணையும் விதத்தில் எல்லைகள் தயாரிக்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளதோடு, இதன் காரணமாக நடைமுறைப் பாராளுமன்றத் தேருநர் இடாப்பினை உள்ளூர் அதிகார சபைகளுக்கமைய வேறுபிரித்துக் குறித்தொதுக்கும் போது பல்வேறு சிக்கல்களுக்கு முகங்கொடுக்க நேர்ந்ததாகவும் சில மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களால் அறிவிக்கப்பட்டது. எவ்வாறிருப்பினும், குறித்த வர்த்தமானி அறிவித்தலுக்கமைய செயற்படுவதற்குத் தேர்தல்கள் திணைக்களம் கட்டுப்பட்டுள்ளதென்பதால், வசதியீனங்களுக்கு மத்தியிலும் தேருநர் இடாப்புத் தயாரிக்கப்பட்டது.

44. மேலே குறிப்பிடப்பட்ட உள்ளூர் அதிகார சபைகளின் உள்ளடக்கம், மாற்றம் செய்யப்பட்ட உள்ளூர் அதிகார சபைகள் தொடர்பான விரிவான தகவல்கள் என்பன கீழே காட்டப்பட்டுள்ளன. அதற்கமைய சில உள்ளூர் அதிகார சபைகளை இரண்டாகப் பிரிக்க வேண்டிய நிலையும் உருவாகியது.

நிருவாக மாவட்டம்	ஸ்தாபிக்கப்பட முன்னர் காணப்பட்ட உள்ளூர் அதிகார சபை	ஸ்தாபிக்கப்பட்ட பின்னர் உள்ளூர் அதிகார சபையின் நிலைமை	பிரிக்கப்பட்ட உள்ளூர் அதிகார சபை
கொழும்பு	கடுவலை பிரதேச சபை	கடுவலை மாநகர சபை 1639/11 2010.02.02	கடுவலை பிரதேச சபை
மாத்தளை	தம்புள்ள பிரதேச சபை	தம்புள்ள மாநகர சபை 1639/13 2010.02.02	
		தம்புள்ள பிரதேச சபை 1639/13 2010.02.02	
அம்பாந்தோட்டை	அம்பாந்தோட்டை பிரதேச சபை	அம்பாந்தோட்டை பிரதேச சபை 1639/12 2010.02.02	
		அம்பாந்தோட்டை மாநகர சபை	
	அம்பாந்தோட்டை நகர சபை	அம்பாந்தோட்டை மாநகர சபை	அம்பாந்தோட்டை நகர சபை
மட்டக்களப்பு	ஏறாவூர் நகர பிரதேச சபை	ஏறாவூர் நகர சபை 1687/23 2011.01.05	ஏறாவூர் நகர பிரதேச சபை
அம்பாறை	அக்கரைப்பற்று பிரதேச சபை	அக்கரைப்பற்று பிரதேச சபை 1687/30 2011.01.06	
		அக்கரைப்பற்று மாநகர சபை 1687/30 2011.01.06	
	அம்பாறை சம்மாந்துறை பிரதேச சபை	சம்மாந்துறை பிரதேச சபை 1675/47 2010.10.12	
		இறக்காமம் பிரதேச சபை 1605/48 2009.06.12	
குருநாகல்	அலவ்வ பிரதேச சபை	அலவ்வ பிரதேச சபை 1675/3 2010.10.12	
		நாரம்மல பிரதேச சபை 1675/3 2010.10.12	

நிருவாக மாவட்டம்	ஸ்தாபிக்கப்பட முன்னர் காணப்பட்ட உள்ளூர் அதிகார சபை	ஸ்தாபிக்கப்பட்ட பின்னர் உள்ளூர் அதிகார சபையின் நிலைமை	பிரிக்கப்பட்ட உள்ளூர் அதிகார சபை
பதுளை	பண்டாரவளை நகர சபை	பண்டாரவளை மாநகர சபை 1687/13 2011.01.04	பண்டாரவளை நகர சபை
	பண்டாரவளை பிரதேச சபை	பண்டாரவளை மாநகர சபை	
		பண்டாரவளை பிரதேச சபை 1687/13 2011.01.04	
	எல்ல பிரதேச சபை	பண்டாரவளை மாநகர சபை	
		எல்ல பிரதேச சபை 1687/13 2011.01.04	
	பசறை பிரதேச சபை	பசறை பிரதேச சபை	
		லுணுகல பிரதேச சபை 1672/8 2010.09.21	

45. அதனை தொடர்ந்து உள்ளூர் அதிகார சபைகளை மேற்பார்வை செய்யும் கொள்கைக்கமைய அந்தந்த மாகாண சபைகளின் முதலமைச்சர்களால் கலைக்கப்பட்டிருந்த கீழே காட்டப்பட்டுள்ள உள்ளூர் அதிகார சபைகள் மீள தாபிக்கப்பட்டன.

நிருவாக மாவட்டம்	கலைக்கப்பட்ட உள்ளூர் அதிகார சபைகள் மற்றும் வர்த்தமானி பத்திரிகைகளின் இலக்கம்	மீண்டும் ஸ்தாபித்தல் வர்த்தமானி பத்திரிகையின் இலக்கமும் திகதியும்
கொழும்பு	கொழும்பு மாநகர சபை 1573/10 2008.10.23	1717/13 2011.08.02
களுத்துறை	பாணந்துறை நகர சபை 1532/10 2008.01.16	1687/50 2011.01.08
கண்டி	உடபலாத்த பிரதேச சபை 1637/24 2010.01.22	1687/50 2011.01.08

46. அதற்கு மேலதிகமாக உள்ளடக்கத்தின் மாற்றங்களாக வாக்குகளின் எண்ணிக்கைக்கு விகிதாசாரமாக உறுப்பினர் எண்ணிக்கையில் தெளிவான முரண்பாடொன்று உள்ளதெனத் தெரியவந்த உள்ளூர் அதிகார சபைகள் சிலவற்றின் உறுப்பினர் பதவிகளின் எண்ணிக்கைளை அதிகரிப்பதை நோக்காகக் கொண்டு உள்ளூர் அதிகார சபைகள் மற்றும் மாகாண சபைகள் விடயப் பொறுப்பு அமைச்சரினால் கீழே காட்டப்பட்டுள்ள உள்ளூர் அதிகார சபைகள் மீள தாபிக்கப்பட்டன.

நிருவாக மாவட்டம்	உள்ளூராட்சி நிறுவனம் கடமையாற்றும்	உறுப்பினர்களின் எண்ணிக்கை
கண்டி	ஹரிஸ்பத்துவ பிரதேச சபை	உறுப்பினர்களின் எண்ணிக்கை 12 தொடக்கம் 19 வரை அதிகரிக்கப்பட்டது
அம்பாறை	சம்மாந்துறை பிரதேச சபை	உறுப்பினர்களின் எண்ணிக்கை 07 தொடக்கம் 09 வரை அதிகரிக்கப்பட்டது

47. மேலே குறிப்பிடப்பட்ட தாபனத்திற்கமைய கொழும்பு மாவட்டத்தின் கடுவலை பிரதேச சபை முழுமையாக கடுவலை மாநகர சபையாக தரமுயர்த்தப்பட்டமை மாத்தளை மாவட்டத்தின் தம்புள்ள பிரதேச சபையின் அதிகார எல்லையின் பகுதியொன்று தம்புள்ளை மாநகர சபையென வேறு பிரிக்கப்பட்டமை அம்பாந்தோட்டை மாவட்டத்தின் அம்பாந்தோட்டை பிரதேச சபை அதிகார பிரதேசத்தின் ஒரு பகுதி மற்றும் முழு அம்பாந்தோட்டை நகர சபையும் ஒன்றிணைக்கப்பட்டு அம்பாந்தோட்டை மாநகர சபையாக தாபிக்கப்பட்டமை மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர் நகர பிரதேச சபை நகர சபையாக தரமுயர்த்தப்பட்டமை, அம்பாறை மாவட்டத்தின் அக்கரைப்பற்று பிரதேச சபையின் ஒரு பகுதி அக்கரைப்பற்று மாநகர சபையாக தரமுயர்த்தப்பட்டமை, சம்மாந்துறை பிரதேச சபையின் ஒரு பகுதி இறக்காமம் பிரதேச சபையாக தாபிக்கப்பட்டமை குருநாகல் மாவட்டத்தின் அலவ்வ பிரதேச சபையின் ஒரு பகுதி நாரம்மல பிரதேச சபையாக தாபிக்கப்பட்டமை, பதுளை மாவட்டத்தின் பண்டாரவளை நகர சபை முழுவதும் பண்டாரவளை பிரதேச சபையின் ஒரு பகுதியும் எல்ல பிரதேச சபையின் ஒரு பகுதியும் ஒன்றிணைக்கப்பட்டு பண்டாரவளை மாநகர சபையாக தாபிக்கப்பட்டமை, பசறை பிரதேச சபையின் ஒரு பகுதி லுணுகல பிரதேச சபையாக தாபிக்கப்பட்டமை என்பன மேற்கொள்ளப்பட்டன. இதற்கமைய புதிதாக 09 உள்ளூர் அதிகார சபைகள் தாபிக்கப்பட்டதோடு, அதன் காரணமாக கடுவலை பிரதேச சபை, அம்பாந்தோட்டை நகர சபை, ஏறாவூர் நகர பிரதேச சபை மற்றும் பண்டாரவளை நகர சபை ஆகிய 04 உள்ளூர் அதிகார சபைகள் இல்லாதொழிந்தன. அதற்கமைய 2006 ஆம் ஆண்டில் 330 ஆகக் காணப்பட்ட உள்ளூர் அதிகார சபைகளின் எண்ணிக்கை 2011 ஆம் ஆண்டில் ஏற்புடையவாறு 335 ஆக அதிகரித்தது. இந்த 335 உள்ளூர் அதிகார சபைகளில் 23 மாநகர சபைகள், 41 நகர சபைகள், 271 பிரதேச சபைகள் என்பன உள்ளடங்குகின்றன.
(குறிப்பு 01)

III ஆம் பிரிவு

பூர்வாங்க ஒழுங்கமைப்பு அலுவல்கள்

48. உள்ளூரதிகார சபைத் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் பிரகாரம் பதவிக்காலம் ஆரம்பமாவதற்குள்ள திகத்திக்கு முன்னராகவுள்ள ஆறு மாத காலத்திற்குள் தேர்தல் நடாத்தப்படல் வேண்டுமென்ற நியதியின் பிரகாரம் தேர்தலுக்கான வேட்புமனு அறிவித்தல் வெளியிடப்படுவதற்கு முன்னர் ஆரம்ப ஒழுங்கமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது.

49. அதன் பிரகாரம் தேருநர் இடாப்புத் தயாரித்தல், வாக்கெடுப்பு மாவட்டங்கள் தொடர்பில் இறுதித் தீர்மானத்தையெடுத்தல், அலுவலர் குழாம், வாகனத் தொகைமதிப்பு, ஆரம்ப அச்சிடல் நடவடிக்கைகள், தெரிவத்தாட்சி அலுவலர்கள், உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களைப் பெயர் குறித்தல், அஞ்சல் வாக்கு அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களைப் பெயர் குறித்தல் போன்ற ஆரம்ப நடவடிக்கைகளை இதனிடையே மேற்கொள்ள முடியும்.

தேருநர் இடாப்பு

50. எந்தவொரு உள்ளூராட்சி நிறுவனத்திலும் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் அப்பணிகளுக்காக தேர்தல் அலுவலர் தேருநர் இடாப்பை சிங்களம் மற்றும் தமிழில் தயாரித்து அத்தாட்சிப்படுத்த வேண்டியதோடு, அத்தேருநர் இடாப்பு அவ்வுள்ளூராட்சி நிறுவனத்தின் வாக்கெடுப்புப் பிரதேசத்திற்கு ஒத்திசைவானதாக அதிகாரமுள்ள பாராளுமன்றத் தேர்தல் இடாப்பிலிருந்து அல்லது ஆவணங்களிலிருந்து அல்லது இடாப்பின் ஒரு பகுதியிலிருந்து அல்லது இடாப்பின் பகுதிகளிலிருந்துஅல்லது அவற்றின் கலப்பில் அமைந்திருக்க வேண்டுமென உள்ளூரதிகார சபைத் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 12 ஆ பிரிவில் காட்டப்பட்டுள்ளது.

51. எந்தவோர் உள்ளூராட்சி சபைப் பிரதேசத்திலும் அப்போது நடைமுறையிலுள்ள ஒவ்வொரு பாராளுமன்ற வாக்கெடுப்பு மாவட்டமும் அவ்வுள்ளூராட்சி சபைகளின் வாக்கெடுப்பு மாவட்டமாகக் கவனிக்கப்படல் வேண்டும். எவ்வாறாயினும் உள்ளூராட்சி அதிகார சபைத் தேர்தல்கள் சட்டத்தின் 12(1) பிரிவின் பிரகாரம் வர்த்தமானிப் பத்திரிகையில் வெளியிடப்படுகின்ற அறிவித்தலின் மூலம் பாராளுமன்ற வாக்கெடுப்பு மாவட்டங்கள் தேவையான மாற்றங்கள் செய்யப்பட முடியும். உள்ளூராட்சி சபைகளின் எல்லைகளின்படி ஒரு வாக்கெடுப்பு மாவட்டம் உள்ளூராட்சி சபைகள் இரண்டிற்குப் பிரியும் சந்தர்ப்பங்களில் அப்பிரிவுகள் இரண்டையும் வாக்கெடுப்பு மாவட்டங்கள் இரண்டாகக் கருதுவதற்கு நடவடிக்கையெடுக்க வேண்டும். 12(3) பிரிவின் கீழ் மகளிருக்காக வேறான வாக்கெடுப்பு நிலையமொன்று அமைப்பது அவசியமாயின் மாத்திரம் ஒரு வாக்கெடுப்பு மாவட்டத்திற்காக ஒரு வாக்கெடுப்பு நிலையத்தைத் தவிர அதற்கு மேலதிகமாக இருத்தலாகாது.

52. 2011 உள்ளூராட்சிச் சபைத் தேர்தலுக்கான வேட்புமனு அறிவித்தல் வெளியிடப்பட்டது 2011.01.06 ஆந் தேதி நடைபெற்றதோடு,அப்போது நடைமுறையிலிருந்த 2009 ஆம் ஆண்டிற்கான வாக்காளர் இடாப்பு இத்தேர்தலுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்டது. அதன் பிரகாரம் 2011 உள்ளூராட்சி சபைகள் தேர்தலுக்கான வாக்கெடுப்பை நடாத்துவதற்கு நியமிக்கப்பட்ட ஒவ்வோர் உள்ளூராட்சி சபைக்காகவும் வாக்காளர் இடாப்பு தயாரிக்கப்பட்டு 2011.01.07 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்துமாறும், அத்தாட்சிப்படுத்தப்பட்ட தேருநர் இடாப்பின் பிரதிகள் 60 வீதம் தயாரிக்குமாறும் அதில் ஒரு பிரதி வீதம் உள்ளூராட்சி அதிகார சபை அலுவலகங்களில் காட்சிப்படுத்துமாறும் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு அறிவூட்டப்பட்டது.

53. அதற்கு மேலதிகமாக அனைத்து நிருவாக மாவட்டங்களுக்குரிய தேருநர் இடாப்புகள் உள்ளூராட்சி சபைகளின்படி தொகுதிகளாக தலைமையலுவலகத்திற்கு தருவித்து அனைத்து மாவட்ட அலுவலகங்களுடன் பரிமாற்றம் செய்து கொள்ளும் ஒரு நாள் வேலைத்திட்டமொன்று தலைமையலுவலகத்தில் 2011.01.09 ஆந் தேதி நடைமுறைப்படுத்தப்பட்டது. அதன் பிரகாரம் அனைத்து மாவட்டங்களின் மாவட்ட செயலகங்களில் தேர்தல் நடாத்தப்படவிருந்த அனைத்து உள்ளூராட்சி நிறுவனங்களினதும் தேருநர் இடாப்புத் தொகுதியொன்று வீதம் 2011.01.10 ஆந் தேதியிலிருந்து காட்சிப்படுத்தப்பட்டது. அதற்கு மேலதிகமாக தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்கள் பலவற்றில் இவ்வாக்காளர் இடாப்பு காட்சிப்படுத்தப்பட்டது.

54. இத்தேருநர் இடாப்பைக் காட்சிப்படுத்துவதன் பிரதான நோக்கம், வேட்புமனுப் பத்திர அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 10 நாட்களுக்குள் அதாவது அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் கால எல்லைக்குள் அஞ்சல் வாக்காளர்கள் தமது பதிவு விபரங்களைப் பெற்றுக் கொள்வதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதாகும். காட்சிப்படுத்தல் நடவடிக்கைகளுக்காகவும் வாக்கெடுப்பு நடவடிக்கைகளுக்காகவும் குறைந்தளவு ஒரு தேருநர் இடாப்பில் 60 பிரதிகள் புத்தகங்களாகத் தயாரிக்கப்படுவது அவசியமாகும். இதற்கு மேலதிகமாக தேருநர் இடாப்பு காட்சிப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக இறுவட்டுக்களும் வழங்கப்பட்டன. அஞ்சல் வாக்குகளுக்கான தேருநர் இடாப்பு காட்சிப்படுத்தலின் பின்னர் இத்தேருநர் இடாப்புக்கள் மிக நியாய விலையில் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களுக்கு விற்கப்பட்டன. ஒவ்வோர் உள்ளூராட்சி சபையின் கீழும் பதிவு செய்யப்பட்டுள்ள வாக்காளர் தொகையில் பெருமளவிலான வேறுபாடொன்று காணப்பட்டமையால் பதிவு செய்யப்பட்டுள்ள வாக்காளர்களின் எண்ணிக்கைக்கு ஒத்ததாக தேருநர் இடாப்புக்களின் விலை தீர்மானிக்கப்பட்டது. தேருநர் இடாப்பு விற்பனை பற்றிய விபரமான குறிப்பொன்று இணைக்கப்பட்டுள்ளது.
(குறிப்பு 2)

55. இத்தேர்தலின் போது உள்ளூரதிகார சபைகள் 301 ற்கான வேட்புமனுக் கோரல், அஞ்சல் வாக்கு விண்ணப்பங்கள் கையேற்பு என்பன 2009 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டதோடு வேட்புமனு கோரப்பட்ட அவ்வுள்ளூராட்சி சபைகளில் 234 சபைகளுக்கு 2009 ஆம் ஆண்டு தேருநர் இடாப்பை அடிப்படையாகக் கொண்டு வாக்கெடுப்பை

நடாத்தியமைக்கு நீதிமன்ற நடவடிக்கையின் பேரில் பிற்போடப்பட்ட 65 உள்ளூராட்சி சபைகளுக்கு 2010 ஆம் ஆண்டு தேருநர் இடாப்பை அடிப்படையாகக் கொண்டு வாக்கெடுப்பை நடாத்தியமையும் விசேட நிகழ்வாகச் சுட்டிக் காட்ட முடியும். அதற்கான காரணம், தேர்தல் பிற்போடப்பட்ட காலப்பகுதிக்குள் அடுத்த வருடத்தின் தேருநர் இடாப்பும் அத்தாட்சிப்படுத்தப்பட்டமையாகும். உள்ளூரதிகார சபைத் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 12 ஆ பிரிவு மற்றும் 43 ஆம் பிரிவுகளின் பிரகாரம் வாக்கெடுப்பை நடாத்த வேண்டியது அவ்வருடத்தில் நடைமுறையிலுள்ள தேருநர் இடாப்பின் பிரகாரம் எனக் குறிப்பிட்டுக் காட்டப்பட்டிருப்பதே இதற்கான காரணமாகும். ஆனால் மாகாண சபைத் தேர்தல்கள் சட்டம் மற்றும் பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டங்களின் பிரகாரம் வேட்புமனு அறிவித்தல் வெளியிடப்படுகின்ற சந்தர்ப்பத்தில் நடைமுறையிலுள்ள தேருநர் இடாப்பை வாக்கெடுப்பிற்காகவும் பாவிக்க முடியுமெனக் குறிப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் உள்ளூரதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்திற்காகவும் இத்திருத்தம் அவசியமாகச் செய்யப்படல் வேண்டும்.

56. அம்பாறை மாவட்டத்தின் 7 உள்ளூராட்சி சபைகளுக்காக 2004.02.21 ஆந் தேதி நடாத்தப்படுவதற்கிருந்த தேர்தலுக்கெதிராக தொடுக்கப்பட்டிருந்த உயர்நீதிமன்ற மனு இலக்கம் 86/2004 இன் படி இது உயர்நீதிமன்ற தீர்ப்பின் மூலமும் அத்தாட்சிப்படுத்தப்பட்டுள்ளது. அதன்பிரகாரம் 2011.07.23 ஆந் தேதி தேர்தல் நடாத்தப்பட்ட இரண்டாம் கட்டத்திற்காக 2010 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பு உரிய உள்ளூராட்சி சபைகளின் பிரகாரம் வேறுபடுத்தி 2011.06.03 ஆந் தேதியன்றும் 2011.10.08 ஆந் தேதி நடாத்தப்பட்ட மூன்றாவது கட்டத்திற்கான உள்ளூராட்சிச் சபைகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட 2010 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பு 2011.08..03 ஆந் தேதியன்றும் அத்தாட்சிப்படுத்தப்பட்டன.

57. அதற்கமைய உள்ளூராட்சிச் சபைகள் தொடர்பாக 2009 பாராளுமன்றத் தேருநர் இடாப்பை அடிப்படையாகக் கொண்டு வாக்கெடுப்பிற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதோடு, 65 உள்ளூராட்சிச் சபைகள் தொடர்பில் வேட்புமனுக்களை கையேற்றுக் கொள்வதற்காக வேட்பாளர்களின் தகைமைகளைத் தீர்மானித்தல் 2009 தேருநர் இடாப்பை அடிப்படையாகக் கொண்டு நடாத்தப்பட்டதோடு, அஞ்சல் வாக்காளர்களது விண்ணப்பங்களை பரீட்சித்தல் மற்றும் வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்காளர்களை அடையாளம் காணல் 2010 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பை அடிப்படையாகக் கொண்டு நடாத்தப்பட்டது. மூன்றாம் கட்டத்தின் கீழ் வாக்கெடுப்பு நிகழ்ந்த உள்ளூர் அதிகார சபைகள் 23 தொடர்பில் வேட்புமனுக்களைக் கையேற்றல், அஞ்சல்வாக்கு விண்ணப்பங்களைக் கையேற்றல் மற்றும் வாக்கெடுப்பிற்கான அனைத்து நடவடிக்கைகளும் 2010 தேருநர் இடாப்பை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டன.

வாக்கெடுப்பு மாவட்டங்களைப் பிரித்தொதுக்குதல்

58. 1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்யும் சட்டத்திற்கமைய மாவட்டத்திற்கு ஒன்று என்ற விதத்தில் தேர்தல் மாவட்டங்கள் 22 ற்காக தேருநர் இடாப்புக்கள் தயாரிக்கப்படுதோடு, அவற்றைப் பயன்படுத்துவதற்கு எளிதாக பழைய தேர்தல் தொகுதிகளை அடிப்படையாக் கொண்டு பகுதிகளாகப் பிரிக்கப்படுகின்றன. அவ்வொவ்வொரு பகுதியும் வாக்கெடுப்பு பிரதேசங்களாக அறியப்பட்டதோடு, ஒவ்வொரு வாக்கெடுப்புப் பிரதேசத்திற்காகவும் சிங்கள அகரவரிசையின்படி குறிப்பிட்ட எழுத்துக்களைக் கொண்ட பழைய தேர்தல் தொகுதிகளின் பெயரால் அமைக்கப்படும். ஒவ்வொரு வாக்கெடுப்புப் பிரதேசமும் வாக்கெடுப்பு மாவட்டங்களாகப் பிரிக்கப்படுவதோடு, ஒவ்வொரு வாக்கெடுப்பு மாவட்டமும் தொடராக இலக்கமிடப்படும். உதாரணமாக கம்பஹா நிருவாக மாவட்டம் (இலக்கம் 02. கம்பஹா தேர்தல் மாவட்டம்) அ விலிருந்து ண வரை வத்தளை, நீர்கொழும்பு, கட்டான என்ற வகையில் களணி வரையிலும் வாக்கெடுப்புப் பிரிவுகள் 13 ஆகப் பிரிக்கப்பட்டுள்ளதோடு, ஒவ்வொரு வாக்கெடுப்புப் பிரதேசமும் இலக்கம் 01 லிருந்து தொடராக வாக்கெடுப்பு மாவட்ட எண்ணிக்கைகளுக்குப் பிரிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் கம்பஹா நிருவாக மாவட்டத்தில் பிரித்தொதுக்கப்பட்டுள்ள முழு வாக்கெடுப்பு மாவட்டங்களின் எண்ணிக்கை 942 ஆகும். வாக்கெடுப்பு மாவட்டம் என்பது ஏதேனுமொரு வாக்கெடுப்பு நிலையத்திற்கு உரித்தாகின்ற வாக்களார்கள் வதிகின்ற நிலப்பகுதியாகும். அது ஒரு கிராமத்தினை, கிராமங்கள் பலவற்றினை அல்லது கிராமங்களின் பகுதிகளை அல்லது நகர்ப்புறப் பிரதேசங்களில் கிராமங்களையும் வீதிகளையும் உள்ளடக்கிய ஒரு பிரதேசமாகும்.

59. 1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்யும் சட்டத்தின் 9(3) ஆம் பிரிவின் கீழான அறிவித்தலின் பிரகாரம் ஒவ்வொரு மீளாய்வின் போதும் புதிதாக மாவட்டங்களைப் பிரிப்பதில் கவனம் செலுத்தப்படும். வாக்கெடுப்பு மாவட்டங்களைப் பிரித்தொதுக்கும்போது வாக்காளர் எண்ணிக்கை 1500 லும் அதிகமாயின் அல்லது வாக்காளர்களுக்கு வாக்கெடுப்பு நிலையத்திற்குச் செல்வதற்காக 02 மைல்களுக்கு மேலாகப் பயணிக்க வேண்டியிருப்பின் அவ்வாறான சந்தர்ப்பங்களில் அவ்வாக்கெடுப்பு மாவட்டத்தை இரண்டாகப் பிரித்தல் அல்லது இரண்டு வாக்கெடுப்பு மாவட்டங்களை மூன்றாகப் பிரித்தல் என்பன வாக்கெடுப்பு மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள வாக்காளர்களின் எண்ணிக்கை, பூகோள அமைப்பு, சமூகக் காரணங்கள் மற்றும் வாக்கெப்பு நிலையமாக ஈடுபடுத்தப்படும் இடம் போன்ற காரணங்கள் கருத்திற் கொள்ளப்படும்.

60. உள்ளூரதிகார சபைகள் தேர்தலுக்காகத் தேருநர் இடாப்பைத் தயாரிக்கும் போது அக்கட்டளைச் சட்டத்தின் 12(ஆ) பிரிவின் பிரகாரம், உள்ளூரதிகார சபையொன்று வாக்கெடுப்புப் பிரதேசத்திற்கு ஒத்திசைவாகவுள்ள வலுவிலுள்ள பாராளுமன்ற தேருநர் இடாப்பொன்றிலிருந்து அல்லது இடாப்புக்களிலிருந்து அல்லது பெயர்ப்பட்டியலின் பகுதியொன்றிலிருந்து அல்லது பகுதிகள் பலவற்றிலிருந்து அல்லது அவற்றின் ஏதேனும் ஒரு சேர்கையிலிருந்து உரிய உள்ளூரதிகார சபையின் அதிகார பிரதேசத்திற்குரிய தேருநர் இடாப்பிற்குள் உள்ளடக்கப்பட வேண்டிய இடப் பிரதேசம் தேர்ந்தெடுக்கப்படும்.

61. உதாரணமாக கம்பஹா மாவட்டத்தையே எடுத்துக் கொண்டால் வாக்கெடுப்புப் பிரதேச எண்ணிக்கை 13 ஆகும். ஆனால் உள்ளூரதிகார சபைகளின் எண்ணிக்கை 19 ஆகும். அதன்

பிரகாரம் வாக்கெடுப்புப் பிரதேசங்கள் 13 உள்ளூரதிகார சபைகள் 19 ற்குப் பிரித்தொதுக்கப்பட வேண்டியுள்ளது. இவ்வாறு பிரித்தொதுக்கும் போது சில சந்தர்ப்பங்களில் ஒரு வாக்கெடுப்பு மாவட்டம் உள்ளூரதிகார சபைகள் இரண்டிற்கு அல்லது பலவற்றிற்கு உரித்தாகும் சந்தர்ப்பங்களைக் காணக் கூடியதாகவுள்ளது. உள்ளூரதிகார சபைத் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 12(ஆ) பிரிவின் கீழ் அவ்வாறான சந்தர்ப்பங்களில் அந்த ஒவ்வொரு பிரிவும் வாக்கெடுப்பு மாவட்டங்களாகக் கருதப்பட வேண்டியுள்ளது. இதுவே, உள்ளூரதிகார சபைகள் வாக்கெடுப்பிற்காக பெயர்ப் பட்டியலைத் தயாரிப்பது தொடரான செயல்முறையாகும்.

வாக்கெடுப்பு நிலையங்கள்

62. வாக்கெடுப்பு நிலையம் எனப்படுவது ஒவ்வொரு வாக்கெடுப்பு மாவட்ட அதிகார பிரதேசத்தினுள்ளேயும் வதிகின்ற வாக்காளர்களுக்கு வாக்களிப்பதை வசதியாக்குவதற்காக இட ரீதியாக உரிய வாக்கெடுப்பு மாவட்டத்திற்கு மத்தியில் அறிந்து கொள்ளக் கூடிய இடமொன்றாகும். அநேக சந்தர்ப்பங்களில் வாக்கெடுப்பு நிலையங்களாக பயன்படுத்தப்படுவது அரச அல்லது பொதுக் கட்டிடங்களாகும். வாக்கெடுப்பு நிலையங்களில் பெரும்பாலானவை அரசாங்க பாடசாலைகளாக விளங்குவதுடன், அதற்கு மேலதிகமாக வாக்கெடுப்பு மாவட்டங்களாக தர்மசாலைகள், கிராம அபிவிருத்திச் சங்க மண்டபங்கள், நெசவு நிலையங்கள் போன்ற பொதுக் கட்டிடங்கள் பயன்படுத்தப்படுகின்றன. வாக்கெடுப்பு மாவட்டத்திற்குள் பொருத்தமான எந்தவொரு கட்டிடமும் இல்லாதவிடத்து தற்காலிக கட்டிடங்களை அமைப்பதற்காக அரசாங்க அல்லது அரசியல் தொடர்புகள் அற்ற நபரொருவரது இடம் தேர்ந்தெடுக்கப்படும்.

63. வாக்கெடுப்பு மாவட்டத்தில் வாக்காளர் எண்ணிக்கை 1200 க்கு குறைவாக இருப்பின் தனி வரிசையிலான வாக்கெடுப்பு நிலையமொன்றாகவும், 1201 அல்லது அதற்கு அதிகமாயின் இரண்டு வரிசைகளுடைய வாக்கெடுப்பு நிலையமொன்றாகவும், கொள்ளப்படுவதோடு, 1500 க்கு மேற்பட்டிருப்பின் வாக்கெடுப்பு மாவட்டங்கள் இரண்டாகப் பிரிக்கப்படும். ஒரு வாக்கெடுப்பு மாவட்டத்திற்காக வாக்கெடுப்பு நிலையங்கள் இரண்டை அமைப்பதற்கு சட்டத்தில் இடமிருப்பது மகளிருக்கான தனியான வாக்கெடுப்பு நிலையமொன்றை அமைப்பதற்குத் தேவையேற்படின் மாத்திரமேயாகும்.

64. வாக்காளர் எண்ணிக்கை 1200 அல்லது அதற்குக் குறைவாகவுள்ள வாக்கெடுப்பு நிலையங்களில் தனி வரிசையிலும் ஆண், பெண் வாக்காளர்கள் கலந்து வாக்கெடுப்பு நிலையத்திற்குச் செல்ல வேண்டியதோடு, இரண்டு வரிசையுள்ள வாக்கெடுப்பு நிலையத்தில் ஒரு வரிசையில் ஆண் வாக்காளர்களும் மற்றைய வரிசையில் பெண் வாக்காளர்களும் உட்செல்லல் வேண்டும். வாக்கெடுப்பு மாவட்டத்தில் வாக்காளர் எண்ணிக்கை 2500 க்கு மேற்படும் சந்தர்ப்பத்தில் ஆண்கள் மற்றும் பெண்களுக்காக வெவ்வேறான வாக்கெடுப்பு நிலையங்கள் இரண்டு அமைக்கப்படும். அவ்வாறான சந்தர்ப்பத்தில் பெண்களுக்கான வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்காளர் எண்ணிக்கை 1200 க்கு அதிகமாயிருப்பின் பெண்கள் வரிசையை இரண்டாகப் பிரித்து தொடரிலக்கம் 1 – 1000 வரையிலும் மற்றும் 1001 – 2000 வரை என்றவாறு இரண்டு வரிசைகளில் பெண் வாக்காளர்கள் உட்செல்லல் வேண்டும். ஆண் வாக்காளர்களின் வாக்கெடுப்பு நிலையத்திலும் வாக்காளர் எண்ணிக்கை அதே முறையின் தனி வரிசை அல்லது இரு வரிசைகள் என தீர்மானிக்கப்படும்.

65. 2011 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட தேர்தல் மூன்று கட்டங்களின் கீழ் 10,789 வாக்கெடுப்பு நிலையங்களில் தேர்தல் நடாத்தப்பட்டதோடு, தேர்தல் நடாத்தப்பட்ட உள்ளூரதிகார சபைகளின் எண்ணிக்கை 322 ஆகும். அந்த 322 உள்ளூராட்சி அதிகார சபைகளும் 10,382 வாக்கெடுப்பு மாவட்டங்களாக பிரிக்கப்பட்டிருந்தன. பெண்களுக்காக அமைக்கப்பட்டிருந்த 407 வாக்கெடுப்பு நிலையங்களுடன் மொத்த வாக்கெடுப்பு நிலையங்களின் எண்ணிக்கை 10,789 ஆகும். இவ்வாக்கெடுப்பு நிலையங்களில் 8,344 அரச பாடசாலைகளிலும் வேறு 586 அரச கட்டிடங்களிலும் 1382 பொதுக் கட்டிடங்களிலும் 151 தற்காலிகக் கட்டிடங்களிலும் 332 வேறு கட்டிடங்களிலும் அமைந்திருந்தன. ஒவ்வொரு நிருவாக மாவட்டங்களின் பிரகாரம் வாக்கெடுப்பு நிலையங்களின் எண்ணிக்கைத் தகவல் குறிப்பொன்று இணைக்கப்பட்டுள்ளது.
(குறிப்பு 3)

அலுவலர் குழாம் மற்றும் வாகன தொகைமதிப்பு

66. விகிதாசார பிரதிநிதித்துவ முறையின் கீழ் உள்ளூரதிகார சபைகள் தேர்தலும் நாடளாவிய ரீதியிலான தேசிய தேர்தலொன்றின் வடிவத்தைக் கொண்டிருப்பதால் வாக்கெடுப்பு மற்றும் வாக்கெண்ணல் பணிகளுக்காகப் பெருமளவிலான அலுவலர்கள் மற்றும் வாகனங்கள் தேவைப்படுகின்றன.

67. தேர்தலுக்கான ஆரம்ப ஏற்பாடுகள் வாக்கெடுப்புக் கடமைகள், வாக்கெண்ணல் கடமைகள், பெறுபேறுகளைத் தயாரிப்புக் கடமைகள் மற்றும் உரிய சேவை வழங்கல் கடமைகள் போன்ற பல்வேறு கடமைகளுக்காகப் போதியளவு அலுவலர்கள் தேவைப்படுகின்றனர். இதற்காக பொதுவாக மாவட்ட மட்டத்தில் அரச அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள் பற்றிய பூரணமான மதிப்பீடொன்று நடாத்தப்படும்.

68. ஆனால் இந்தத் தேர்தலுக்கு பூரண மதிப்பீடொன்று செய்வதன் அவசியம் தோன்றவில்லை. அதற்கான காரணம் 2010 ஆண்டில் நடாத்தப்பட்ட சனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தலுக்காகத் திரட்டப்பட்ட அலுவலர் குழாத்தின் மதிப்பீட்டுத் தகவல்களை இற்றைப்படுத்திக் கொள்வது இங்கு போதுமானதாகவிருந்ததேயாகும்.

69. தேர்தலொன்றிற்காக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தேவையான அலுவலர்களை மாவட்டங்களுக்குள்ளேயும் மற்றும் கொழும்பு அலுவலர் குழாத்திலிருந்தும் வழங்கப்பட்டது. இந்த வாக்கெடுப்பு மூன்று கட்டங்களில் நடாத்தப்பட்டமையால் இரண்டாம் மற்றும் மூன்றாம் கட்டங்களில் மாவட்டத்தினுள் அம்மாவட்டத்திற்குத் தேவையான அலுவலர்கள் மற்றும் வாகனங்களை வழங்க முடிந்தது. ஆனால் இவ்விரண்டாம் கட்டத்திலும் வாக்கெடுப்பு நிலைய அலுவலர்களுக்காக கொழும்பின் குழாத்திலிருந்தும் மற்றும் அருகிலுள்ள

மாவட்டங்களிலிருந்தும் கணிசமான எண்ணிக்கையினரான அலுவலர்கள் அனைத்து மாவட்டங்களுக்கும் அனுப்பப்பட்டனர். இவ்வாறு மேற்கொள்ளப்பட காரணம் பல்வேறு பிரதேசங்களையும் சார்ந்த அலுவலர் குழாமொன்றின் கீழ் தேர்தலை நடாத்துவதே ஆகும்.

70. தேர்தல் நடாத்தப்பட்ட 322 உள்ளூராட்சிச் சபைகளுக்கு தேவையான முழு அலுவலர்களின் எண்ணிக்கை 189929 ஆக இருந்ததோடு, உரிய மாவட்டத்திலிருந்தும் அருகிலுள்ள மாவட்டங்களிலிருந்தும் மற்றும் கொழும்பு குழாத்திலிருந்தும் வழங்கப்பட்ட வெவ்வேறு தொகை அலுவலர்கள் மற்றும் வாகனத் தொகை பற்றிய விபரங்களைக் காட்டும் குறிப்பு இணைக்கப்பட்டுள்ளது.
(குறிப்பு 4, 5)

தெரிவத்தாட்சி அலுவலர்கள் மற்றும் உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள்

71. உள்ளூரதிகார சபைத் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 4(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு நிர்வாக மாவட்டத்திற்குமென தெரிவத்தாட்சி அலுவலரொருவர் மற்றும் உதவித் தெரிவத்தாட்சி அலுவலரொருவர் அல்லது பல உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள் பெயரில் அல்லது பதவிப் பெயரில் நியமிக்கப்படல் வேண்டும். அதன் பிரகாரம் தேர்தல்கள் ஆணையாளரினால் ஒவ்வொரு நிர்வாக மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் உரிய மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலராகவும், ஒவ்வொரு உதவி, சிரேட்ட உதவி அல்லது பிரதித் தேர்தல்கள் ஆணையாளராகப் பணியாற்றுகின்ற அலுவலர் உரிய மாவட்டத்தின் உதவித் தெரிவத்தாட்சி அலுவலராகவும் நியமிக்கப்பட்டனர்.

72. உள்ளூரதிகார சபைத் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 27(1) ஆம் பிரிவின் மூலம் தேர்தல்கள் ஆணையாளருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் 4 ஆம் பிரிவின் கீழ் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலருக்கு வழங்கப்பட்டுள்ள பணிகள் மற்றும் செயற்பாடுகளை நிறைவேற்றுவது உரிய உதவித் தெரிவத்தாட்சி அலுவலருக்கு கையளிக்கப்படல் 4687/24 ஆம் இலக்க 2011 சனவரி 05 ஆந் தேதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டது.
(பின்னிணைப்பு 2)

73. தேர்தலின் பூர்வாங்க நடவடிக்கைகள் அதாவது வேட்புமனுக் கையேற்பு மற்றும் அஞ்சல் வாக்கு நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்காக ஒவ்வொரு நிர்வாக மாவட்டத்தினதும் மாவட்டச் செயலகங்கள் மற்றும் அருகாமையிலுள்ள அலுவலகங்கள் என்பவற்றிலிருந்து தெரிவத்தாட்சி அலுவலரினால் பரிந்துரைக்கப்படுகின்ற பதவிநிலை அலுவலர்களை உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களாகப் பதவிப் பெயரின் கீழ் வர்த்தமானிப் பத்திரிகையில் வெளியிடும் நடவடிக்கைகள் முதலாவது மற்றும் மூன்றாவது கட்டங்களில் முக்கியமாக நிறைவேற்றப்பட்டது. வாக்கெடுப்பு மற்றும் வாக்கெண்ணல் கடமைகளுக்காக உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களின் தேவைப்பாடு மதிப்பீட்டுத் தரவுகள் புதுப்பிக்கப்பட்டதன் பின்னர் பெயர்கள் மற்றும் பதவிப் பெயர்களுடன் வர்த்தமானிப் பத்திரிகையில் வெளியிடப்பட்டது.

அரசியற் கட்சிகள்

74. 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகளாக 67 கட்சிகள் ஏற்கனவே பதிவு செய்யப்பட்டிருந்தன. உள்ளூரதிகார சபைத் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 27 அ(1) ஆம் பிரிவின் பிரகாரம் பாராளுமன்றத் தேர்தல் அரச சபைக் கட்டளையின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகளாகக் கருதப்படுகின்ற அனைத்து அரசியற் கட்சிகளும் அவ்வரசியற் கட்சிகள் அக்கட்டளையின் கீழ் அவ்வாறு கருதப்படும் வரை உள்ளூரதிகார சபைத் தேர்தல் கடமைகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளாகக் கருதப்படல் வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகளின் பெயர்ப்பட்டியலின் பிரதியொன்று இணைக்கப்பட்டுள்ளது.
(பின்னிணைப்பு 3)

75. இதற்கு மேலதிகமாக உள்ளூரதிகார சபைத் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 27அ(3) (4) மற்றும் (5) ஆம் உப பிரிவுகளில் உள்ளூரதிகார சபை விடயங்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்ட வகையில் கட்சிகளைப் பதிவு செய்தல் அறிமுகப்படுத்தப்பட்டிருப்பினும், அந்நிலைமை சாத்தியமில்லையென்பதால் விகிதாசார அடிப்படையில் நடைபெற்ற எந்தவோர் உள்ளூரதிகார சபைத் தேர்தலின் போதும் இது நடைமுறைப்படுத்தப்படவில்லை. 2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் சட்டத் திருத்தத்தினால் அப்பிரிவு நீக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் பதிவு செய்யப்பட்ட 67 அரசியற் கட்சிகளில் உரிய கட்சிச் செயலாளர் பதவி வெற்றிடமாதல் மற்றும் எதிர்தரப்புக் குழுக்கள் உரிமை கோருதல் காரணமாக கீழ்க்காணும் கட்சிகள் இத்தேர்தலுக்காக அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகளாக ஏற்றுக்கொள்ளப்படக் கூடாதெனவும் எதிர்வரும் நாட்களில் ஏதேனும் மாற்றமேற்படின் தொலைநகல் மூலம் தேவையான தகவல்கள் அறிவிக்கப்படுமெனவும் 2011.01.17 ஆந் தேதிய கடித மூலம் அனைத்து மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்கள் மற்றும் பிரதி, சிரேட்ட உதவி, உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களுக்கு தேர்தல்கள் ஆணையாளரினால் அறிவிக்கப்பட்டது.

01.	ஈழ தேசிய ஜனநாயக முன்னணி	(9)
02.	தேசிய அபிவிருத்தி முன்னணி	(28)
03.	முஸ்லிம் விடுதலை முன்னணி	(49)
04.	ஸ்ரீலங்கா முற்போக்கு முன்னணி	(60)

76. 2011.01.06 ஆந் தேதி வெளியிடப்பட்ட வேட்புமனு அறிவித்தலின்படி அங்கீகரிக்கப்பட்ட 29 அரசியற் கட்சிகளிடமிருந்து 1,282 வேட்புமனுக்களும், சுயேச்சைக் குழுக்களிடமிருந்து 765 வேட்புமனுக்களும் சமர்ப்பிக்கப்பட்டன. அவற்றில் நிராகரிக்கப்பட்ட வேட்புமனுக்களைத் தவிர அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளினால் சமர்ப்பிக்கப்பட்ட 1,133 வேட்புமனுக்களுக்காகவும் சுயேச்சைக் குழுக்களினால் சமர்ப்பிக்கப்பட்ட 462 வேட்புமனுக்களுக்காகவும் 2011.03.17 ஆந் தேதி தேர்தல் நடாத்தப்பட்டது. நிராகரிக்கப்பட்ட வேட்புமனுக்களிடையில் நீதிமன்றத்தினால் திரும்பவும் ஏற்றுக்கொள்ளப்பட்ட வேட்புமனுக்கள் தொடர்பாக 20 அரசியற் கட்சிகள்

மற்றும் 72 சுயேச்சைக் குழுக்களின் கீழான 65 உள்ளூர் அதிகார சபைகளுக்கான தேர்தல் 2011.07.23 ஆந் தேதி நடாத்தப்பட்டது. 2011.12.31 ஆந் தேதி வரை ஒத்திவைக்கப்பட்ட 23 உள்ளூர் அதிகார சபைகளுக்கு 26 அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகளினால் 169 வேட்புமனுக்களும் சுயேச்சைக் குழுக்களின் 132 வேட்புமனுக்களும் சமர்ப்பிக்கப்பட்டதோடு, அவற்றில் அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளினால் சமர்ப்பிக்கப்பட்ட 160 வேட்புமனுக்களும் சுயேச்சைக் குழுக்களினால் முன்வைக்கப்பட்ட 104 வேட்புமனுக்களுமான 264 வேட்புமனுக்களுக்காக 2011.10.08 ஆந் தேதி தேர்தல் நடாத்தப்பட்டது.
(குறிப்பு 6)

IV ஆம் பிரிவு

பெயர் குறித்த நியமனப் பத்திரங்கள்/ வேட்புமனுக்கள்

பின்னணி

77. உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான தேர்தல்கள் சட்டத்தின் 25 ஆம் பிரிவிற்கமைய உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான அனைத்து தேர்தல்களிலும் தேர்ந்தெடுக்கப்படுகின்ற உறுப்பினர்களின் பதவிக்காலம் ஆரம்பிப்பதற்குள்ள யாதேனும் திகதியாயின் அத்திகதிக்கு முன்னருள்ள ஆறுமாத காலத்திற்குள் நடாத்தப்படல் வேண்டும். இருப்பினும் இதற்குப் பொறுப்பான அமைச்சருக்கு மாநகர சபை, நகர சபை கட்டளைச் சட்டங்கள் மற்றும் பிரதேச சபை சட்டத்தின் மூலம் கையளிக்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கமைய கொண்டு 2010 மார்ச் மாதம் நிறைவடையவிருந்த பதவிக்காலம் 2011 மார்ச் மாதம் 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டது.

78. அதற்கமைய, உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சின் செயலாளர் அவரின் பீ/எல்/7/1/05/46 மற்றும் 2011.01.05 மற்றும் 2011.01.06 திகதிகளுக்குரிய கடித அறிவித்தலின்படி தேர்தலை மேலும் பிற்போடுவதற்கென அரசினால் தீர்மானிக்கப்பட்டுள்ள 16 மாநகர சபைகள், 2 நகர சபைகள் மற்றும் 5 பிரதேச சபைகள் உள்ளிட்ட 23 உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக் காலம் மற்றும் மேலதிக கால நீடிப்புக்குள்ளான மட்டக்களப்பு மாநகர சபை உள்ளிட்ட மட்டக்களப்பு மாவட்டத்தின் 9 உள்ளூராட்சி நிறுவனங்கள், யாழ்ப்பாண மாநகர சபை, வவுனியா நகர சபை உட்பட 11 உள்ளூராட்சி நிறுவனங்கள் என்ற 34 உள்ளூராட்சி நிறுவனங்கள் தவிர ஏனைய 301 உள்ளூராட்சி நிறுவனங்களுக்காக தேர்தல்கள் ஆணையாளரின் அறிவுறுத்தல்களின்படி தெரிவத்தாட்சி அலுவலர்களினால் 2011.01.06 ஆம் திகதியன்று வேட்புமனு அறிவித்தல்கள் கோரப்பட்டன. இது சம்பந்தமாக தேர்தல்கள் ஆணையாளரினால் உரிய மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்கள் மற்றும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 4 ஆம் பிரிவிற்கமைவான ஒவ்வோர் உள்ளூராட்சி நிறுவனத்திற்குமான தெரிவத்தாட்சி அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ள உரிய மாவட்டத்திற்குப் பொறுப்பான உதவித் தேர்தல்கள் ஆணையாளர்கள்/ சிரேட்ட உதவித் தேர்தல்கள்/ பிரதித் தேர்தல்கள் ஆணையாளர்கள் அறிவுறுத்தப்பட்டனர். வேட்புமனு அறிவித்தல் உள்ளூராட்சி அதிகார சபைத் தேர்தல்கள் சட்டத்தின் 26 ஆம் பிரிவிற்கமைய உரிய மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரினால் பிரதேச ரீதியாக அவ்வுள்ளூராட்சி அதிகார சபை எல்லைக்குள் காட்சிப்படுத்த வேண்டிய ஓர் அறிவித்தலாகும். உள்ளூராட்சி அதிகார சபைகள் தேர்தல்கள் சட்டத்தின் 27(1) ஆம் பிரிவினால் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கமைய தேர்தல்கள் ஆணையாளரினால் 1687/25 ஆம் இலக்க மற்றும் 2011 சனவரி 5 ஆம் திகதிய அதிவிஷேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தலின்படி அப்பணிகளை நிறைவேற்றுவதற்குரிய கட்டளைச் சட்டத்தின் 4(1) ஆம் பிரிவின் கீழ் மாவட்டத்திற்குப் பொறுப்பான பிரதி/ சிரேட்ட உதவி மற்றும் உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளன.
(பின்னிணைப்பு 4)

79. அதிமேதகு சனாதிபதியினால் (40 ஆம் அதிகாரமாகிய) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 5 ஆம் பிரிவிற்கிணங்க 2011 சனவரி மாதம் 18 ஆம் திகதிய 2011 ஆம் ஆண்டின் 2 ஆம் ஆம் இலக்க அவசரகால (உள்ளூராட்சி நிறுவன நிருவாக) கட்டளையின் கீழ் தேர்தல் நீடிக்கப்பட்ட 16 மாநகர சபைகள், 2 நகர சபைகள் மற்றும் 5 பிரதேச சபைகளின் உறுப்பினர்களின் பதவிக்காலத்தை 2011 யூன் மாதம் 30 ஆம் திகதிவரை நீடிப்பதற்கான 1689/12 ஆம் இலக்க மற்றும் 2011 சனவரி 18 ஆம் திகதி அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டது. அதன்பின்னர் அதிமேதகு சனாதிபதியினால் மேற்குறிப்பிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் நீக்கப்பட்டுள்ளதோடு, 2011 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க அவசரகால (உள்ளூராட்சி நிறுவன நிருவாக) கட்டளையின் கீழ் பதவிக்கால முடிவுத் திகதி 2011 திசெம்பர் 31 ஆம் திகதியென குறித்த 1699/35 ஆம் இலக்க மற்றும் 2011 மார்ச் மாதம் 30 ஆம் திகதிய அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டது.
(பின்னிணைப்பு 5,6)

80. அதனடிப்படையில் அந்த 232 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கும் 2011.12.31 ஆம் திகதிக்கு முன்னர் தேர்தல் நடாத்தப்பட வேண்டுமென தேர்தல்கள் ஆணையாளரின் அறிவுறுத்தலுக்கமைய 2011.08.04 திகதி உரிய தெரிவத்தாட்சி அலுவலர்கள் அந்த 222 உள்ளூராட்சி மன்றங்களுக்குமாக வேட்புமனு அறிவித்தல்களைக் கோரினார்.
(பின்னிணைப்பு 7)

81. வேட்புமனு அறிவித்தலினூடாக உரிய உள்ளூராட்சி நிறுவனங்களுக்காக வேட்புமனு ஏற்கப்படும் இடம் மற்றும் வேட்புமனுக் காலப்பகுதி, வேட்புமனுத் தாக்கலுக்கான வேட்பாளர்களின் எண்ணிக்கை, அதில் 40 சதவீதமாகிய இளைஞர் வேட்பாளர்களின் எண்ணிக்கை, சுயேச்சைக் குழுவொன்றுக்கு வைப்பிலிடப்பட வேண்டிய கட்டுப்பணம் மற்றும் ஒவ்வொரு சுயேச்சைக் குழுவிற்குமான இலக்கம் மற்றும் இலச்சினை ஒதுக்கப்படும் திகதி, நேரம் மற்றும் இடம் ஆகிய தகவல்கள் அனைத்தும் வெளியிடப்பட்டன. இவ்வறிவித்தல் மும்மொழிகளிலும் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட நடவடிக்கை எடுக்கப்படும். அத்துடன் தேர்தல்கள் ஆணையாளரினால் ஒவ்வோர் உள்ளூராட்சி நிறுவனத்திற்குமென போட்டியிட வேண்டிய இளைஞர் வேட்பாளர்களின் தொகையை குறித்து 28(1அ) ஆம் பிரிவிற்கமைய வர்த்தமானி அறிவித்தலை வெளியிடல் வேண்டும். அதனடிப்படையில் அவ்வறிவித்தல் 1687/31 ஆம் இலக்க மற்றும் 2011 சனவரி 6 ஆம் திகதி அதிவிஷேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது. உள்ளூராட்சி அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 89 ஆம் பிரிவிற்கமைய இளைஞர் வேட்பாளரென்பது நடப்பிலுள்ள தேருநர் இடாப்பு மீளாய்வு ஆண்டின் யூன் மாதம் 1 ஆம் திகதிக்கு 18 வயதுக்குக் குறையாதவரும் வேட்புமனு ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு வயது 35 விஞ்சாதவர்களுமான நபர்களாவர்.
(பின்னிணைப்பு 8)

82. மேலும் ஒவ்வோர் உள்ளூராட்சி நிறுவனத்திற்கும் தேர்ந்தெடுக்கப்படவுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை, போட்டியிடும்

வேட்பாளர்களின் எண்ணிக்கை (இளைஞர்கள், ஏனையோர் மற்றும் முழு வேட்பாளர்களின் எண்ணிக்கை) மற்றும் சுயேச்சைக் குழுவொன்றினால் வைப்பிலிட வேண்டிய கட்டுப்பணத் தொகை ஆகிய விபரங்களடங்கிய பத்திரிகை அறிவித்தலொன்று மும்மொழிகளிலும் வெளியிடப்படல் வேண்டும். 2011.01.06 ஆம் திகதி 301 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான வேட்புமனு அறிவித்தல் வெளியிடப்பட்ட நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 10(2)(அ) ஆம் பிரிவு மற்றும் பிரதேச சபை சட்டத்தின் 5(2)(அ) பிரிவு என்பவற்றினால் பொறுப்பான அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கமைய அத்தகைய அனைத்து சபைகளினதும் உறுப்பினர்களின் பதவிக்காலத்தை 2011.01.06 ஆம் திகதியன்று முடிவுறுத்துவதற்கான வர்த்தமானி அறிவித்தல் 2011 சனவரி 6 ஆம் திகதிய 1687/40 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது. அதற்கு மேலதிகமாக அதிமேதகு ஜனாதிபதியினால் 40 ஆம் அதிகாரமான பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் 5 ஆம் பிரிவிற்கமைய 2011.01.06 ஆம் திகதி அத்தகைய சபைகள் மற்றும் பிரதேச சபைகளுக்கு உறுப்பினர்களை நியமனம் செய்து சபை நடவடிக்கைகளை ஆரம்பிக்கும் வரை அத்தகைய சபைகள் மற்றும் பிரதேச சபைகளின் நிருவாகத்தை பிரதேச செயலாளர்கள் மற்றும் உள்ளூராட்சி ஆணையாளர்களுக்குக் கையளித்தல் 2011.01.06 ஆம் திகதிய 1687/41 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டது.
(பின்னிணைப்பு 9, 10)

83. அவ்வாறே 16 மாநகர சபைகள், 02 நகர சபைகள், 05 பிரதேச சபைகள் என்பவற்றிற்கான வேட்புமனு அறிவித்தல் 2011.08.04 ஆம் திகதி வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து அச்சபைகளின் பதவிக்காலத்தை 2011.12.31 ஆம் திகதி வரை நீடிக்கச் செய்து வெளியிடப்பட்ட 1699/35 ஆம் இலக்க மற்றும் 2011 மார்ச் 30 ஆம் திகதிய அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தல் நீக்கப்பட்டதோடு, 40 ஆம் அதிகாரமான பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 5 ஆம் பிரிவிற்கமைய அதிமேதகு ஜனாதிபதியினால் வெளியிடப்பட்ட 2011 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க அவசரகால (உள்ளூராட்சி நிறுவனங்களை நிருவகிப்பதற்கான) கட்டளைக்கமைய உரிய மாநகர சபைகள் (16), நகர சபைகள் (02), பிரதேச சபைகள் (05) ளின் உறுப்பினர்களின் பதவிக்காலம் 2011 ஆகஸ்ட் 10 ஆம் திகதியுடன் முடிவடைய வேண்டுமென கட்டளையிடப்பட்டது. இக்கட்டளை 1718/6 ஆம் இலக்க மற்றும் 2011 ஆகஸ்ட் 08 ஆம் திகதிய அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டது. அத்தோடு (40 ஆம் அதிகாரமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 5 ஆம் பிரிவுக்கமைய அதிமேதகு ஜனாதிபதியினால் 2011 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க அவசரகால (உள்ளூராட்சி நிறுவனங்கள் நிருவகிப்பதற்கான) கட்டளைக்கமைய 2011 ஆகஸ்ட் 10 ஆம் திகதி தொடக்கம் உரிய உள்ளூராட்சி நிறுவனங்களுக்காகத் தேர்தல் நடைபெற்று அந்நிறுவனங்களுக்கு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டு அச்சபைகளின் செயற்பாடுகள் ஆரம்பமாகும் திகதி வரை அம்மாநகர சபைகள், நகர சபைகள் மற்றும் பிரதேச சபைகளின் நிருவாக நடவடிக்கைகளை உரிய பிரதேச செயலாளர்கள் அல்லது உள்ளூராட்சி ஆணையாளர்களுக்கு கையளிக்கின்ற 1718/7 ஆம் இலக்க மற்றும் 2011 ஆகஸ்ட் 08 ஆம் திகதிய அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டது.

வேட்புமனுக்களைக் கையேற்றல்.

84. வேட்புமனு அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திற்குப் பின்னரான 14 ஆம் நாள் வேட்புமனு ஏற்றுக்கொள்ளல் ஆரம்பிக்கப்படுவதுடன் 21 ஆம் நாள் நண்பகல் 12 மணிக்கு முடிவடைதல் வேண்டும். (26 ஆம் பிரிவு) அதற்கமைய 2011.01.06 ஆம் திகதி வெளியிடப்பட்ட வேட்புமனு அறிவித்தலுக்கமைய 2011.01.20 திகதி முதல் 2011.01.27 திகதி நண்பகல் 12 மணி வரையிலான கால எல்லைக்குள் அலுவலக நேரத்திற்குள் வேட்புமனுக்கள் பொறுப்பேற்கப்பட்டன. வேட்புமனு பொறுப்பேற்றல் மற்றும் வேட்புமனு பொறுப்பேற்றலின் பின்னரான ஆட்சேபனைகளை ஏற்றுக்கொள்ளல், வேட்புமனுக்களை பரிசீலனை செய்து தீர்மானத்தை அறிவித்தல், சுயேச்சைக் குழுக்களுக்காக இலக்கங்கள் மற்றும் இலச்சினைகளை வழங்கல் போன்ற பெரும் பணிகள் வேட்புமனு ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி நண்பகல் 12 மணிக்குப் பின்னரான உரிய கால எல்லைக்குள் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் மற்றும் அச்சந்தர்ப்பத்திற்கு கட்சியின் செயலாளர், அதிகாரமளிக்கப்பட்ட முகவர், குழுத் தலைவர் மற்றும் அதிகாரமளிக்கப்பட்ட முகவர்ஃ குழுத் தலைவரினால் அதிகாரமளிக்கப்பட்ட ஒருவருக்குக் கலந்து கொள்வதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டியதுடன் போதியளவு இடவசதியுடைய ஓரிடத்தை வேட்புமனு ஏற்றுக்கொள்ளும் நடவடிக்கைகளுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டியிருந்ததோடு, தெரிவத்தாட்சி அலுவலரின் உத்தியோகபூர்வ அறை அல்லது தேர்தல்கள் அலுவலகம் இதற்காக உகந்ததல்ல என்பதனால், மாவட்டச் செயலகத்தின் கேட்போர் கூடத்தை பயன்படுத்தல் பொருத்தமென முன்கூட்டியே தெரிவத்தாட்சி அலுவலருக்கு அறிவிக்கப்பட்டது.
(பின்னிணைப்பு 11)

85. தேர்தலில் போட்டியிடுகின்ற ஒவ்வொரு சுயேச்சைக் குழுவும் வேட்புமனுவில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு வேட்பாளர்களுக்காகவும் ரூபா 250/- வீதமாக கட்டுப்பணத்தை வேட்புமனு அறிவித்தல் வெளியிடப்பட்ட திகதி முதல் வேட்புமனு ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முந்திய நாள் நண்பகல் 12 மணிவரை அலுவலக நேரத்திற்குள் குறித்த தெரிவத்தாட்சி அலுவலரிடன் கையளித்தல் வேண்டும். தெரிவத்தாட்சி அலுவலரால் இக்கட்டுப்பணத்தொகை வைப்புக்கணக்கில் வைப்பிலிட வேண்டியதுடன் கட்டுப்பணத்தை செலுத்துபவர்களுக்கு பற்றுச் சீட்டொன்று வழங்கப்படும். கட்டுப்பணம் வைப்பிலிடப்பட்டாலும் வேட்புமனு கையளிக்கப்படாமை, வேட்புமனு நிராகரிக்கப்படல் மற்றும் உரிய சுயேச்சைக்குழுவின் கீழ் போட்டியிடும் வேட்பாளர்களில் குறைந்தது ஒரு வேட்பாளரேனும் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படல் ஆகிய வேளைகளில் உரிய கட்டுப்பணத்தை மீளப்பெறுவதற்காகத் தேர்தல் முடிவடைந்ததன் பின்னர் உரிய தெரிவத்தாட்சி அலுவலரிடன் கோரிக்கை விடுக்கப்பட முடியும்.

86. 2011.01.06 ஆம் திகதி வெளியிடப்பட்ட வேட்புமனு அறிவித்தலுக்கமைய 1,282 அரசியல் கட்சிகளின் வேட்புமனுக்களும் 765 சுயேச்சைக் குழுக்கள் என மொத்தம் 2,047 வேட்புமனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

87. 1699/35 ஆம் இலக்க மற்றும் 2011 மார்ச் மாதம் 30 ஆம் திகதிய அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலினால் பதவிக்காலம் 2011 திசெம்பர் 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்ட 23 உள்ளூராட்சி

நிறுவனங்கின் பதவிக்காலம் ஆரம்பிக்கப்படுவதற்கு 06 மாதங்களுக்கு முன்னர் தேர்தலை நடாத்த வேண்டுமென்ற சட்டவிதிகளுக்கமைய 2011.08.04 ஆம் திகதி வேட்புமனுக்கான அறிவித்தல் வெளியிட வேண்டுமெனத் தெரிவத்தாட்சி அலுவலர்கள் அறிவுறுத்தப்பட்டனர். அதனடிப்படையில் வேட்புமனுக்காலமாக 2011 ஆகஸ்ட் மாதம் 18 ஆம் திகதி முதல் 2011 ஆகஸ்ட் மாதம் 25 ஆம் திகதி நண்பகல் 12 மணிவரையிலான காலம் குறிக்கப்பட்டது. இத்தேர்தலுக்கு 169 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் வேட்புமனுக்களும் 132 சுயேச்சைக் குழுக்களின் வேட்புமனுக்களும் உரிய தெரிவத்தாட்சி அலுவலரினால் பொறுப்பேற்கப்பட்டுள்ளதுடன் கையளிக்கப்பட்ட முழு வேட்புமனுக்களின் எண்ணிக்கை 301 ஆகும்.
(குறிப்பு 5)

வேட்புமனுக்களைப் பரிசீலனை செய்தல்

88. உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் கட்டளைச் சட்டத்தின் 28 ஆம் பிரிவிற்கமைய தயாரிக்கப்பட்ட வேட்புமனுப் பத்திரம் அவ்வுள்ளூராட்சி நிறுவனத்திற்காகப் போட்டியிட உத்தேசித்துள்ள அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சியாயின் கட்சியின் செயலாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட முகவரினால், சுயேச்சைக் குழுவாயின் குழுத் தலைவரினால் வேட்புமனு ஏற்றுக்கொள்ளும் கால எல்லைக்குள் உரிய நிருவாக மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலரிடம் கையளிக்க வேண்டியதுடன் வேட்புமனு ஏற்றுக்கொள்ளும் கால எல்லை முடிவடைந்ததுடன் உடனடியாக தெரிவத்தாட்சி அலுவலரினால் தமக்குக் கிடைக்கப்பெற்று ஒவ்வொரு வேட்புமனுப் பத்திரத்தையும் 28 ஆம் பிரிவிற்கமைய கிடைக்கப்பெற்றுள்ளதா என 31(1) பிரிவுக்கமைய பரிசீலனை செய்தல் வேண்டும்.

89. அவ்வாறு கீழே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் பூரணப்படுத்தப்பட்டுள்ளதா என்பதைத் தெரிவத்தாட்சி அலுவலர் பரிசீலனை செய்தல் வேண்டும்.

I. உரிய வேட்பாளர்களின் எண்ணிக்கை வேட்புமனுப் பத்திரத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதாவென (28(2) ஆம் பிரிவு)
II. உரிய இளைஞர் வேட்பாளர்களின் எண்ணிக்கை வேட்புமனுவில் உள்ளடக்கப்பட்டுள்ளதாவென (28(1அ) ஆம் பிரிவு)
III. ஒவ்வோர் இளைஞர் வேட்பாளருக்காகவும் அவ்வேட்பாளரின் பிறந்த திகதியை உறுதிப்படுத்துவதற்காகப் பிறப்புச் சான்றிதழ் பத்திரம் அல்லது சத்தியக் கடதாசி இணைக்கப்பட்டுள்ளதாவென (28(4அ) ஆம் பிரிவு)
IV. அனைத்து வேட்பாளர்களும் வேட்புமனுப் பத்திரத்தில் உரிய இடத்தில் கையொப்பமிட்டு தமது விருப்பத்தைத் தெரிவித்துள்ளனராவென (28(4)பிரிவு)
V. வேட்புமனுப் பத்திரத்தில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து வேட்பாளர்களும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 7 ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்திற்கமைய சந்தர்ப்பத்திற்கேற்றவாறு உறுதி வழங்கி கையொப்பமிடப்பட்டுள்ள அல்லது சத்தியப் பிரமாணம் செய்து கையொப்பமிட்டுள்ள உறுதிமொழி அல்லது சத்தியப் பிரமாணம் வேட்புமனுப்பத்திரத்துடன் இணைக்கப்பட்டுள்ளதாவென (28(4) ஆ பிரிவு)
VI. அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியினால் சமர்ப்பிக்கப்படும் வேட்புமனுப்பத்திரத்தில் கட்சியின் செயலாளரும் சுயேச்சைக் குழுவினால் சமர்ப்பிக்கப்படும் வேட்புமனுப்பத்திரத்தில் குழுத்தலைவரும் கையொப்பமிடப்பட்டிருத்தல் வேண்டும். (28(5) ஆம் பிரிவு)
VII. அக்கையொப்பம் சமாதான நீதிவான் அல்லது பகிரங்க நொத்தாரிஸ் ஒருவரினால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். (28(5) ஆம் பிரிவு)
VIII. வேட்புமனுப் பத்திரத்தைக் கையளிக்கும் நபர் சட்டபூர்வமாக அதிகாரம் வழங்கப்பட்ட ஒருவராக இருத்தல் வேண்டும். (28(5) ஆம் பிரிவு)

வேட்புமனுப் பத்திரம் கையளிக்கும் நபர் சட்டபூர்வமாக அதிகாரம் வழங்கப்பட்ட ஒருவராக இருத்தல் வேண்டும். (28(5) பிரிவு) (வேட்புமனுப் பத்திரம் கையளிப்பதற்கு சட்டபூர்வமான அதிகாரம் உள்ளவர் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியாயின் கட்சியின் செயலாளர் அல்லது வேட்புமனு ஏற்றுக்கொள்ளும் கால எல்லை ஆரம்பிப்பதற்கு 72 மணி நேரத்திற்கு முன் கட்சியின் செயலாளரினால் அதிகாரம் வழங்கப்பட்ட முகவர் எனப் பெயர் குறித்து தெரிவத்தாட்சி அலுவலரிற்கு அறிவிக்கப்பட்ட நபர் மற்றும் சுயேச்சை குழு எனின் குழுத் தலைவர் மாத்திரமேயாகும்)
IX. வேட்புமனுத் தாக்கல் செய்யும் சுயேச்சைக் குழுத் தலைவரினால் அல்லது அதிகாரம் வழங்கப்பட்ட ஒருவரினால் உரிய காலத்தில் கட்டுப்பணம் வைப்பிலிடப்பட்டிருத்தல் வேண்டும். (29 ஆம் பிரிவு)

90. 1990 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்தின் 5(2) பிரிவினால் திருத்தம் செய்யப்பட்ட முதன்மைச் சட்டவாக்கத்தின் 31(1அ) ஆம் பிரிவிற்கு அமைய வேட்புமனுக் காலத்தின் இறுதித் தினத்தன்று நண்பகல் 12.00 மணி முதல் பி.ப. 1.30 மணி வரையான காலத்தில் ஏதேனும் வேட்புமனு தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பதற்காகச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. ஆட்சேபனை முன்வைக்கப்படுவது பெரும்பாலும் சில வேட்பாளர்களின் சட்டவிரோத அல்லது ஊழல் அடிப்படையில் வேட்பாளராவதற்குத் தகுதியற்றவர்ரெனச் சுட்டிக்காட்டுவதாகும். எனினும் அவ்வாறான ஆட்சேபனைக்கமைய வேட்புமனு நிராகரிப்படுவதற்குரிய ஏற்பாடுகள் கிடையாது.
(குறிப்பு 6)

முடிவுகளை அறிவித்தல்

91. நிராகரிக்கப்பட்ட வேட்புமனுக்கள் பற்றி ஆராயும் போது அலட்சியம் மற்றும் அவதானமற்ற தன்மை என்பன வேட்புமனு நிராகரிப்பில் பெரும்பாலும் செல்வாக்கு செலுத்தியுள்ளமையைக் காண முடியும். நிராகரிப்பதற்கான காரணங்களாக போட்டியிடும் கட்சியின் பெயர் பிழையின்றி குறிக்கப்படாமை, உள்ளடக்கப்பட வேண்டிய இளைஞர் வேட்பாளர் எண்ணிக்கை உள்வாங்கப்படாமை, பிறப்புச் சான்றிதழ், சத்தியக் கடதாசியின் மூலம் இளைஞர் வேட்பாளரென உறுதிப்படுத்தப்படாமை,

யாரேனும் ஒருவர் தமது விருப்பத்தைத் தெரிவித்து கையொப்பமிடாமை, வேட்புமனு தாக்கல் செய்வதற்கு சட்டபூர்வமாக உரிமையுள்ள ஒருவரினால் வேட்புமனு கையளிக்கப்படாமை, உரிய கால எல்லைக்குள் கையளிக்கப்படாமை, கட்சியின் செயலாளர் அல்லது குழுத் தலைவர் வேட்புமனுவில் கையொப்பமிடாமை, சமாதான நீதிவான் அல்லது பகிரங்க நொத்தாரிஸ் ஒருவரினால் அக்கட்சியின் செயலாளர் அல்லது குழுத் தலைவரின் கையொப்பம் உறுதிப்படுத்தப்படாமை, வேட்பாளர்களினால் உறுதியுரை/ சத்தியம் சமர்ப்பிக்கப்படாமை, உரிய கட்டுப்பணத் தொகை வைப்பிலிடப்படாமை போன்ற பல காரணங்களைக் குறிப்பிடலாம். தேர்தலின் முதலாம் மற்றும் மூன்றாம் கட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட வேட்புமனுக்கள் பரிசீலனைக்கமைய நிராகரிக்கப்பட்ட வேட்புமனுக்களின் எண்ணிக்கை அவ்வாறு நிராகரிக்கப்படுவதற்கான காரணங்களுக்கமைய வேறுபடுத்திக் காட்டப்பட்டுள்ளது.
(குறிப்பு 7,8)

92. வேட்புமனுப் பரிசீலனை மற்றும் ஆட்சேபனை பற்றி முடிவை அறிவிக்கின்ற போது தெரிவத்தாட்சி அலுவலரினால் வேட்புமனு நிராகரிக்கப்பட்டதற்கான காரணம் தெளிவுபடுத்தப்படும். அதன்பின் ஒவ்வொரு நிறுவனங்களுக்கும் போட்டியிகின்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சி மற்றும் சுயேச்சைக் குழுக்கள் எவையென அறிவிக்கப்படுவதுடன் போட்டியிடும் கட்சிகளுக்கு அக்கட்சிகளின் அனுமதிக்கப்பட்ட சின்னங்கள் ஒதுக்கப்படுவதுடன் சுயேச்சைக் குழுகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுக்கு ஒதுக்கப்படாத சின்னங்களிலிருந்து ஒரு சின்னத்தை உடன்பாட்டின் அடிப்படையில் அல்லது குலுக்கல் அடிப்படையில் ஒதுக்க நடவடிக்கை எடுக்கப்படும். சுயேச்சைக் குழுக்களுக்கு சின்னங்களுக்கு மேலதிகமாக இனங்கண்டு கொள்வதற்காக இலக்கமொன்றும் இச்சந்தர்ப்பத்தில் வழங்கப்படும்.
(பின்னிணைப்பு 12)

வேட்புமனுக்கள் பற்றிய மீளாய்வு
முதலாம் கட்டம்

93. இத்தேர்தல்களின் முதலாம் கட்டத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சிகளால் முன்வைக்கப்பட்ட 2,047 வேட்புமனுக்களிலிருந்து 452 வேட்புமனுக்கள் உள்ளூர் அதிகார சபைத் தேர்தல் கட்டளைச் சட்டத்தின் 31(1) ஆம் பிரிவுக்கமைய உரிய முறையில் முன்வைக்காமையின் காரணமாக நிராகரிக்கப்பட்டன. அவ்வாறு நிராகரிக்கப்பட்ட வேட்புமனுக்களில் 149 அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சிகளுக்காகவும் 303 சுயேச்சைக் குழுக்களிலிருந்தும் முன்வைக்கப்பட்டவையாகும். தேர்தலுக்காக அங்கீகரிக்கப்பட்ட 29 அரசியற் கட்சிகளிலிருந்து சமர்ப்பிக்கப்பட்ட 1,133 வேட்புமனுக்களில் 22,637 வேட்பாளர்களும் 462 சுயேச்சைக் குழுக்களினால் சமர்ப்பிக்கப்பட்ட 462 வேட்புமனுக்களில் 6,471 பேரும் வேட்பாளர்களாகத் தகுதி பெற்றனர். அதனடிப்படையில் போட்டியிட்ட மொத்த வேட்பாளர்களின் எண்ணிக்கை 29,108 ஆகும். தேர்ந்தெடுக்கப்படும் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 3,036 ஆகும். இத்தேர்தல் 7,396 வாக்கெடுப்பு நிலையங்களில் நடைபெற்றதுடன் தேர்தலுக்காக வாக்களிப்பதற்குத் தகுதி பெற்றிருந்த வாக்காளர்களின் எண்ணிக்கை 9,438,132 ஆகும்.

94. 29,108 வேட்பாளர்களில் ஒவ்வொரு வேட்பாளருக்கும் வேட்புமனு ஏற்றுக்கொள்ளப்பட்டதன் பின் உரிய விருப்பு இலக்கங்கள் ஒரு சில தினங்களில் வழங்கப்பட்டன. ஏற்றுக் கொள்ளப்பட்ட 1,595 வேட்புமனுக்களை மும்மொழிகளிலும் மீளத் தயாரித்தல் வேட்புமனுவின் மூலப் பிரதியுடன் பரிசீலனைசெய்தல் மற்றும் சிங்கள அகரவரிசையின் அடிப்படையில் வேட்பாளர்களின் பெயர் பட்டியலைத் தயார்படுத்தல் மற்றும் வேட்பாளர்களுக்குரிய இலக்கங்களை வழங்கல் ஆகிய அனைத்து நடவடிக்கைகளும் 2011.02.05 ஆம் திகதியுடன் நிறைவடைந்தன.

இரண்டாம் கட்டம்

95. 452 வேட்புமனுக்கள் 75 வேட்புமனுக்கள் தொடர்பாக மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. வேட்புமனுவை நிராகரித்தமைஇ வேட்புமனுப் பத்திரத்தைப் பொறுப்பேற்காமைஇ வேட்புமனுவை நிராகரிக்காமை போன்ற காரணங்களுக்காக நீதிமன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமை காரணமாக 64 உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் கண்ணிவெடி அகற்றப்படாததன் காரணமாக (முல்லைதீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச சபை மற்றும் கரைத்துறைப்பற்று பிரதேச சபை) 2 பிரதேச சபைகள் ஆகிய 66 உள்ளூராட்சி நிறுவனங்கள் தவிர்ந்த 235 உள்ளூராட்சி நிறுவனங்கள் 2011.02.25 ஆம் திகதி அஞ்சல் வாக்குச் சீட்டு விநியோகம் நிறைவடைந்தது. எனினும் அதன் பிறகு முல்லைதீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேச சபை தொடர்பாக மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் தொடரப்பட்டுள்ள வழக்குத் தொடர்பாக வழங்கப்பட்ட இடைக்காலத் தடையின் காரணமாக துணுக்காய் பிரதேச சபையின் தேர்தலும் பிற்போடப்பட்டது. இதனடிப்படையில் மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பு வழங்கல் தாமதமானதன் காரணமாக துணுக்காய் பிரதேச சபை உள்ளிட்ட உள்ளூராட்சி நிறுவனங்களுக்காக தேர்தல் 2011.07.23 ஆம் திகதி வரை பிற்போடப்பட்ட 1707/19 ஆம் இலக்க மற்றும் 2011.05.26 திகதிய வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது. இருப்பினும் கண்ணிவெடி அகற்றப்படுதல் முடிவடையாததன் காரணமாக தேர்தல் பிற்போடப்பட்ட புதுக்குடியிருப்பு மற்றும் கரைத்துறைப்பற்று பிரதேச சபைகள் இரண்டினதும் தேர்தல் மேலும் 2011.12.31 ஆம் திகதி வரை பிற்போடப்பட்ட அறிவித்தலை முல்லைதீவு தெரிவத்தாட்சி அலுவலரின் 2011.07.25 ஆம் திகதிய 1716ஃ1 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிட்டார்.

96. தேர்தலின் இரண்டாம் கட்டமாக 1707/19 ஆம் இலக்க மற்றும் 2011.05.26 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தலின்படி நீதிமன்ற நடவடிக்கைகள் காரணமாக 2011.07.23 ஆம் திகதி வரை பிற்போடப்பட்ட உள்ளூராட்சி நிறுவனங்களின் தேர்தலுக்குரிய பூர்வாங்க ஒழுங்கமைப்பு அலுவல்கள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டன. இதில் சில உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான வாக்குச்சீட்டு அச்சிடப்பட்டிருந்ததுடன் அதிகமான உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான வாக்குச்சீட்டு அச்சிடுவதும் நிறுத்தி வைக்கப்பட்டதுடன் நீதிமன்றத் தீர்ப்பு கிடைக்கப்பெற்ற பின்பு முன்னேற்பாடுகளும் ஆரம்பிக்கப்பட்டன. அதனடிப்படையில் வாக்குச் சீட்டுக்களை அச்சிடல், 2010 ஆம் ஆண்டிற்கான தேருநர் இடாப்பிற்கமைய உரிய உள்ளூராட்சி

நிறுவனங்களுக்கான உரிய இடாப்பைத் தயார் செய்து உறுதிப்படுத்தல், அஞ்சல் வாக்குப் பெயர்ப்பட்டியலைத் தயார் செய்தல், அஞ்சல் வாக்குகளை விநியோகித்தல், அஞ்சல் வாக்குகளை அடையாளமிடல் மற்றும் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை விநியோகித்தல் ஆகிய அனைத்து நடவடிக்கைகளும் துரிதகதியில் நிறைவுசெய்யப்பட்டு 2011.07.23 ஆம் திகதி தேர்தல் நடாத்தப்பட்டது. இத்தேர்தல் 2010 ஆம் ஆண்டிற்கான தேர்தல் இடாப்பைக்கொண்டு நடாத்தப்பட்டதுடன் அதனடிப்படையில் 2,628,769 வாக்காளர்கள் வாக்களிப்பதற்குத் தகுதி பெற்றிருந்தனர். அங்கீகரிக்கப்பட்ட 20 கட்சிகளின் கீழ் 237 வேட்புமனுக்களும் மற்றும் 72 சுயேச்சைக் குழுக்களின் 72 வேட்புமனுக்களும் தேர்தலுக்காக சமர்ப்பிக்கப்பட்டன. போட்டியிட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை 5,619 என்பதுடன் தேர்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கை 875 ஆகும். வாக்கெடுப்பு நிலையங்கள் 2,226 இல் இத்தேர்தல்கள் நடைபெற்றன.
(குறிப்பு 9,10), (பின்னிணைப்பு 13,14)

மூன்றாம் கட்டம்

97. (40 ஆம் அதிகாரமாகிய) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 5 ஆம் பிரிவிற்கமைய அதிமேதகு சனாதிபதியினால் 2011 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க அவசரகால (உள்ளூராட்சி நிறுவனங்களை நிருவகிப்பதற்கான) கட்டளைக்கமைய ஒத்திவைக்கப்பட்ட 22 உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் மீண்டும் நிறுவப்பட்ட கொழும்பு மாநகரபைக்குமான வேட்புமனுக்களை ஏற்றுக்கொள்வதற்கான வரத்தமானி அறிவித்தலை 2011.08.04 ஆந் திகதி வெளியிடுமாறு உரிய தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு அறிவிக்கப்பட்டது. இது 2011 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான தேர்தலின் மூன்றாம் கட்டம் என அழைக்கப்பட்டது.

98. இத்தேர்தலுக்காக கொழும்பு மாநகர சபைக்கு 11 அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகள் மற்றும் 20 சுயேச்சைக் குழுக்கள் என்பன வேட்புமனுக்களை சமர்ப்பித்ததுடன் போட்டியிடுவதற்காக 9 கட்சிகள் மற்றும் 10 சுயேச்சைக் குழுக்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்பட்டன. இதன் அடிப்படையில் 23 உள்ளூராட்சி நிறுவனங்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகளினால் 169 வேட்புமனுக்கள் சுயேச்சைக் குழுக்களினால் 132 வேட்புமனுக்களுமாக மொத்தம் 301 வேட்புமனுக்கள் காணப்பட்டதோடு, அவற்றில் 09 கட்சிகள் மற்றும் 28 சுயேச்சைக் குழுக்கள் சமர்ப்பித்த 37 வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டன. அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகளின் 160 வேட்புமனுக்கள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் 104 வேட்புமனுக்கள் என 264 வேட்புமனுக்கள் போட்டியிட முன்வைக்கப்பட்டதுடன் போட்டியிட்ட முழு வேட்பாளர்களின் எண்ணிக்கை 6,488 ஆகும். தேர்ந்தெடுக்கப்படும் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 420 ஆகும். இத் தேர்தல் 1,167 வாக்கெடுப்பு நிலையங்களில் நடைபெற்றதுடன் தேர்தலுக்காக வாக்களிப்பதற்கு தகுதி பெற்றிருந்த வாக்காளர்களின் எண்ணிக்கை 1,589,622 ஆகும்.

99. முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு மற்றும் கரைத்துறைப்பற்று ஆகிய பிரதேச சபைகள் இரண்டினதும் கண்ணிவெடி அகற்றும் பணி நிறைவடையாத காரணத்தினால் மீள்குடியேற்றம் நிறைவடையாமையால் தேர்தலை 2011.03.17 ஆம் திகதி முதல் 2011.05.30 திகதி வரை ஒத்திவைக்கின்ற முல்லைத்தீவு மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர் வர்த்தமானி அறிவித்தல் 2011.02.24 ஆம் திகதிய 1694/10 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது. தொடர்ந்து அதே நிலை நிலவியமையால் 2011.07.23, 2011.12.31, 2012.03.10 மற்றும் 2012.03.24 என அடிக்கடி தேர்தல் தினங்கள் பலதடவை பிற்போடப்பட்டன. 2012.03.15 ஆம் திகதி இடம்பெயர்ந்த வாக்காளர்களுக்கு போக்குவரத்து வசதி வழங்கப்படுவதற்கான ஏற்பாடுகளுடன் தேர்தலை நடாத்துவதற்கான சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தும் அஞ்சல் வாக்கு அடையாளமிடுவதற்காக இருந்த 2012.03.24 திகதிக்கு முந்திய நாள் இத்தேர்தலை நடாத்துவதற்கு எதிராக மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் இரண்டு மனுக்கள் முன்வைக்கப்பட்டதன் காரணமாக தேர்தல்கள் ஆணையாளர் அஞ்சல் வாக்கு அடையாளமிடுவதை இடைநிறுத்துமாறு தெரிவத்தாட்சி அலுவலர் ஊடாக அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களுக்கு அறிவித்தார். அதற்கு மேலதிகமாக இது தொடர்பாக ஊடக அறிக்கை மூலமும் பிரசாரம் செய்யப்பட்டது. 2012.03.19 ஆம் திகதி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுதாரர்களினால் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கமைய தேர்தலை நிறுத்துமாறு எழுத்தாணை பிறப்பிக்கப்பட்டது. அதனடிப்படையில் 2012.03.24 ஆம் திகதி நடைபெறவிருந்த தேர்தலை கால வரையறை பிற்போடவேண்டியேற்பட்டது. 2012.04.23 ஆம் திகதி முதல் முறையாக மனு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதுடன் இதுவரையில் மனுப் பரிசீலனை நிறையவடையவில்லை. இதனடிப்படையில் 2011.01.06 ஆம் திகதி வெளியிடப்பட்ட வேட்புமனு அறிவித்தலுக்கமைய வேட்புமனு பெற்றுக்கொள்ளப்பட்ட உள்ளூராட்சி நிறுவனங்கள் 301 இல் 234 இற்கு 2011.03.17 ஆம் திகதியும் 65 இற்கு 2011.07.21 திகதியும் 2011.12.31 ஆம் திகதிவரை பிற்போடப்பட்ட உள்ளூராட்சி நிறுவனங்கள் 23 இற்காக உரிய தேர்தல் 2011.10.08 ஆம் திகதியும் நடாத்தப்பட்டதுடன் முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு மற்றும் கரைத்துறைப்பற்று பிரதேச சபைகள் இரண்டினதும் தேர்தல் நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் நிறுத்தி வைக்கப்பட்டன. மனு விசாரணை இதுவரை நிறைவடையவில்லை.
(பின்னிணைப்பு – 15,16,17,18,19)

V ஆம் பிரிவு

அவசர அச்சிடல் பணிகள்

100. வேட்புமனுக் கையேற்றல் மற்றும் அது தொடர்பான பின்னலுவல்கள் நிறைவடைந்தவுடன் அரசாங்க அழுத்தகருக்குக் கையளிப்பதற்காக ஒவ்வோர் உள்ளூர் அதிகார சபைக்குமுரிய அங்கீகரிக்கப்பட்ட வேட்புமனுக்களுக்கமைய ஆவணங்களை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் தயாரித்தல் அந்தந்த மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களில் மேற்கொள்ளப்படும். அவ்வெழுத்தாவணத் தொகுதிக்குள் பிரதானமாக பின்வருவன உள்ளடக்கப்பட்டிருக்கும்.

- வாக்குச் சீட்டின் மாதிரி
- வீடுகளுக்கான அறிவித்தல்களின் மாதிரிகள் (சிங்களம், தமிழ்)
- 45(1) பிரிவின் கீழ் வாக்கெடுப்பு நிலையங்களில் காட்சிப்படுத்தப்படும் அறிவித்தல்களின் மாதிரிகள்
- வாக்கெடுப்பு அறிவித்தல் மற்றும் இணைப்புக்களாக தேவைப்படுகின்ற எழுத்தாவணங்கள்
- வாக்கெடுப்பு நிலையப் பட்டியல்
- சிங்கள அகரவரிசையொழுங்கில் தயாரிக்கப்பட்ட வேட்பாளர் பெயர்ப்பட்டியல்

இவ்வாவணங்கள் அனைத்தும் தலைமை அலுவலகத்தில் மீண்டும் பரீட்சிக்கப்பட்டு துரிதகதியில் வாக்குச் சீட்டின் மாதிரி, வீடுகளுக்கான அறிவித்தல்களின் மாதிரிகள், 45(1) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்களின் மாதிரிகள், தேர்தல் அறிவித்தல் மற்றும் ஏனைய இணைப்புக்கள் அவசர அச்சிடல் பணிகளுக்காக அரசாங்க அழுத்தகருக்கு அனுப்பி வைக்கப்படும்.

வாக்குச் சீட்டுக்கள்

101. தேர்தலொன்றின் போது அரசாங்க அச்சகத் திணைக்களத்திற்குக் கையளிக்கப்படுகின்ற மிகவும் முக்கியமான, இரகசியமான துரிதமாக நிறைவு செய்யப்பட வேண்டிய அச்சிடல் பணி வாக்குச் சீட்டுக்களை அச்சிடுவதாகும்.

102. வேட்புமனுக் கையேற்றலை 2011.01.20 ஆம் திகதி தொடக்கம் 27 ஆம் திகதி நண்பகல் 1200 மணி வரையிலான காலப்பகுதியினுள் மேற்கொண்டு, அங்கீகரிக்கப்பட்ட வேட்புமனுக்களைப் பரீட்சித்து வேட்பாளர்களின் பெயர்களை சிங்கள அகர வரிசையொழுங்கில் தயாரித்து மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களிலிருந்து எடுத்து வரப்பட்ட வேட்புமனு ஆவணங்கள் தலைமை அலுவலகத்தில் மீளப் பரீட்சிக்கப்பட்டு அரச அழுத்தகருக்குக் கையளிக்கப்பட்டது. 2011.02.05 ஆம் திகதியாகும் போது அனைத்து மாவட்டங்களுக்குரிய இவ்வெழுத்தாவணங்கள் கையளித்து முடிக்கப்பட்டன.

103. அஞ்சல் வாக்காளர்களுக்கான வாக்குச் சீட்டுக்களை விநியோகத்தை 2011.02.25 ஆம் திகதி மேற்கொள்ள வேண்டியிருந்தமையால், 301 உள்ளூர் அதிகார சபைகளுக்குரிய வாக்குச் சீட்டுக்கள் தனித்தனி மாதிரிகளின் கீழ் அச்சிடுவதற்காக அச்சகத் திணைக்களத்திற்கு 20 நாட்களை கொண்ட ஒரு குறுகிய காலமொன்றே காணப்பட்டது. இருப்பினும், இதற்கிடையில் நிராகரிக்கப்பட்ட வேட்புமனுக்கள் தொடர்பில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டமை காரணமாக, குறித்த 64 உள்ளூர் அதிகார சபைகளுக்குரிய வாக்குச் சீட்டு அச்சிடலை இடைநிறுத்த வேண்டுமா என்ற சிக்கல் எழுந்தது. இது தொடர்பில் விஷேடமாக ஆராய்ந்து பார்க்கப்பட்டதன் பின்னர், நீதிமன்ற செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த உள்ளூர் அதிகார சபைகளுக்குரிய வாக்குச் சீட்டு அச்சிடல் நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்படவில்லையெனில், அப்பணிகளை காலதாமதப்படுத்துமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

104. அக்மீமன, அக்குரஸ்ஸ மற்றும் மொணராகலை ஆகிய பிரதேச சபைகள் தொடர்பான எழுத்தாணைக் கோரிக்கைகளுக்கு ஏற்புடையதான இடைக்கால தடையுத்தரவு வழங்கப்பட்டதோடு, அச்சபைகளுக்கு 2011 மார்ச் 17 ஆம் திகதி வாக்கெடுப்பை நடாத்துவது தடைசெய்யப்பட்டது. இருப்பினும், அழைக்கப்பட்ட சில மனுக்களுக்கான அறிவித்தல் வழங்கல் மற்றும் தடையுத்தரவு விதித்தல் தொடர்பான தீர்ப்பு வழங்கல் பெப்புருவரி மாதம் 23 மற்றும் 24 ஆம் திகதிகளுக்கு விதிக்கப்பட்டிருந்தோடு, 25 மனுக்கள் மீண்டும் பெப்புருவரி 28 ஆம் திகதி விசாரணைக்கெடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.

105. அஞ்சல் வாக்கு விநியோகம் பெப்புருவரி 25 ஆம் திகதியும் அஞ்சல் வாக்கு அடையாளமிடல் மார்ச் 08, 09 ஆகிய தினங்களிலும் மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தமையால், சமர்ப்பிக்கப்பட்டிருந்த மனுக்களுக்குரிய உள்ளூர் அதிகார சபைகளின் அஞ்சல் வாக்கு விநியோகம் இடைநிறுத்தப்பட்டதோடு, 2002 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட முதன்மை சட்டவாக்கத்தின் 38(3) ஆம் பிரிவின் கீழ் மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களினால் தேர்தல்கள் ஆணையாளரின் அறிவுறுத்தல்களுக்கமைய மேற்படி 64 உள்ளூர் அதிகார சபைகளதும் மற்றும் மீள் குடியேற்றம் நிறைவடையாமை காரணமாக ஒத்திவைக்கப்பட உத்தேசிக்கப்பட்ட 02 உள்ளூர் அதிகார சபைகளதும் தேர்தல்கள் பிற்போடப்பட்டன. இருப்பினும், ஏற்கனவே நீதிமன்ற அலுவல்கள் எடுக்கப்பட்டிருந்த 64 உள்ளூர் அதிகார சபைகளுக்குரிய வாக்குச் சீட்டு அச்சிடல் பணிகள் நிறைவு செய்யப்பட்டிருந்த போதும் சில மனுக்கள் நிராகரிக்கப்பட்டமை காரணமாக அவ்வுள்ளூர் அதிகார சபைகளின் வாக்குச் சீட்டுக்களில் மாற்றங்கள் இடம்பெறாமையால், மீள 08 உள்ளூர் அதிகார சபைகளுக்காக மாத்திரம் வாக்குச் சீட்டுக்களை அச்சிட நேரிட்டது.

106. நீதிமன்ற நடவடிக்கைகளுக்குச் சென்றமை காரணமாக 65 உள்ளூர் அதிகார சபைகளின் வாக்கெடுப்புப் பிற்போடப்பட்டிருந்தமையால் மற்றும் நிலக்கண்ணிகள் அகற்றுதல் நிறைவடையாமை, மீள் குடியேற்றம் நிறைவடையாமை போன்ற காரணங்களால் புதுக்குடியிருப்பு, கரைத்துறைப்பற்று ஆகிய இரண்டு பிரதேச சபைகளினதும் வாக்கெடுப்பு பிற்போடப்பட்டமையினால் அரச அழுத்தகருக்கு கட்டளைகள் கையளிக்கப்பட்ட உள்ளூர்

அதிகார சபைகளில் 67 தவிர 234 இன் வாக்குச் சீட்டுக்கள் துரிதமாக கையளிக்கப்பட்டன. அஞ்சல் வாக்கு விநியோகிப்பதற்கு முன்னர் முழுமையான வாக்குச் சீட்டுக்களை எண்ணிக்கையை விநியோகிக்க முடியாது போன சில உள்ளூர் அதிகார சபைகளுக்கு அஞ்சல் வாக்குகளுக்காக மாத்திரம் வாக்குச் சீட்டுக்களை வழங்கவும் பின்னர் தேவையான முழு எண்ணிக்கையையும் பெற்றுக் கொள்ளவும் நடவடிக்கையெடுக்கப்பட்டது.

107. விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறையுடன், அதிக மக்கள் ஆதரவுள்ள கட்சிகளுக்கும் புறம்பாக வேறு கட்சிகளுக்கும் மற்றும் சுயேச்சைக் குழுக்களுக்கும் விகிதாசார பிரதிநிதித்துவத்தின் ஊடாக ஏதேனும் உறுப்பினர் பதவியொன்றைப் பெற்றுக் கொள்வதற்கான சாத்தியம் உண்டென்ற நம்பிக்கை காரணமாக அல்லது வாக்கெண்ணல் ஒருமையப்படுத்தி மேற்கொள்ளப்படுவதாலும், வாக்கெண்ணல் மண்டபங்களுக்கு தமது நம்பிக்கைக்குரியவர்களை வாக்கெண்ணல் முகவர்களாக பயன்படுத்திக் கொள்வதற்காக போலியான கட்சிகள் அல்லது சுயேச்சைக் குழுக்கள் போட்டியிடுவதற்கு முன்வருகின்றமை காரணமாக ஒவ்வொரு சபைகளுக்காகவும் போட்டியிடும் கட்சிகள், சுயேச்சைக் குழுக்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் போக்கொன்று ஏற்பட்டுள்ளது. கொழும்பு மாநகர சபைக்காக 09 கட்சிகளும் 10 சுயேச்சைக் குழுக்களும் போட்டியிட்டமை, கல்முனை மாநகர சபைக்காக 09 கட்சிகளும் 08 சுயேச்சைக் குழுக்களும் போட்டியிட்டமை, காத்தான்குடி நகர சபைக்காக 04 கட்சிகளும், 14 சுயேச்சைக் குழுக்களும் போட்டியிட்டமை என்பவற்றை உதாரணமாகச் சுட்டிக்காட்ட முடியும். இதன் காரணமாக வாக்குச் சீட்டின் நீளம் அதிகரித்ததோடு, வாக்குச் சீட்டு அச்சிடலின் போதும் வாக்களிப்பு, வாக்கெண்ணலின் போதும் வாக்குச் சீட்டுக்களைக் கையாள்வதிலும் தேவையற்ற சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியேற்பட்டது.

108. எவ்வாறாயினும், தேர்தலின் மூன்று கட்டங்களுக்குமுரியதாக 322 உள்ளூர் அதிகார சபைகளுக்காக ஒன்றோடு ஒன்று வேறுபட்ட 322 வாக்குச் சீட்டுக்களை குறுகிய காலப்பகுதியினுள் அச்சிட்டு அஞ்சல் வாக்கு விநியோக தினமாகும் போது தேவையான வாக்குச் சீட்டு எண்ணிக்கையை மாத்திரமேனும் பெற்றுக் கொடுத்து வாக்குச் சீட்டுக்களைத் துரிதமாக அச்சிட்டு குறித்த தெரிவத்தாட்சி அலுவலர்களுக்குப் பகிர்ந்தளித்தமையூடாக அரச அழுத்தகரும், பணியாட் குழுவினரும் பெரும் பங்காற்றினர்.

வீடுகளுக்கான அறிவித்தல்

109. விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறையோடு வாக்குச் சீட்டில் வேட்பாளரின் பெயர் குறிப்பிடப்படாமை அதற்குப் பதிலாக போட்டியிடுகின்ற கட்சி மற்றும் குழுக்களின் பெயர்கள் குறிப்பிடப்படுகின்றமை காரணமாக போட்டியிடுகின்ற வேட்பாளர்கள் தொடர்பாக வாக்காளர்களை அறிவுறுத்துவதற்காக இவ்வீட்டறிவித்தல் மிகவும் முக்கியாகும். இவ்வறிவித்தல் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டையுடன் ஒரு வீட்டுக்கு ஒன்று என்ற விதத்தில் அனுப்பி வைப்பதற்காகத் தயாரிக்கப்பட்டதோடு, வாக்கெடுப்புத் தினம், நேரம் மற்றும் உள்ளூர் அதிகார சபையின் பெயர் என்பன முகவுரையாகவும் அவ்வுள்ளூர் அதிகார சபைக்காக போட்டியிடுகின்ற கட்சிகள் சிங்கள அகர வரிசைப்படி தொடரொழுங்கில் காட்டப்படுகின்றவாறும், போட்டியிடுகின்ற சுயேச்சைக் குழுக்கள் அவ்வொவ்வொரு குழு சார்பாகவும் குறித்தொதுக்கப்பட்ட இலக்கங்களின் தொடரொழுங்கிலும் குறிப்பிட்டு ஒவ்வொரு கட்சி, சுயேச்சைக் குழுக்களின் கீழ் போட்டியிடுகின்ற வேட்பாளர்களின் பெயர்கள் (சிங்கள அகரவரிசைப்படி தயாரித்து) ஒவ்வொரு பெயருக்காகவும் தொடர் இலக்கமொன்றை வழங்கி அவ்விலக்க ஒழுங்கில் வேட்பாளரின் இலக்கம் மற்றும் வேட்பாளரின் பெயரைக் குறித்து இவ்வீடுகளுக்கான அறிவித்தல் தயாரிக்கப்படும். இவை வேட்புமனுக் கையேற்றலின் நிறைவில் ஒவ்வொரு மாவட்டத்தின் உதவிஃ பிரதி தேர்தல்கள் ஆணையாளரினால் தயாரித்து தேர்தல்கள் ஆணையாளருக்குக் கையளிக்கப்படுகின்ற ஆவணங்களுள் உள்ளடங்கும். அவை தலைமை அலுவலகத்தில் மீளப் பரீட்சிக்கப்பட்டு சரியாக திருத்தம் செய்யப்பட்டு அச்சிடப்படுவதற்காக அரச அச்சகத் திணைக்களத்திற்குக் கையளிக்கப்படும் இவ்வறிவித்தல் சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் தயாரிக்கப்பட வேண்டுமென்பதோடு, ஒரு கடுதாசியில் இருபக்கங்களும் இதற்காக பயன்படுத்தப்பட்டன.

110. விகிதாசார பிரதிநிதித்துவ முறையின் மூலம் வாக்காளரொருவருக்கு தான் விரும்பிய வேட்பாளரைத் தேர்ந்தெடுப்பதற்கும் அவ்வேட்பாளரின் இலக்கத்திற்கமைய வாக்குச் சீட்டில் குறித்த இலக்கத்திற்கு மேல் மற்றும் எதிரிலுள்ள இரண்டு கூடுகளில் விருப்புக்களை அடையாளமிடுவதற்கும் இவ்வீடுகளுக்கான அறிவித்தல் பெற்றுக் கொடுத்தல் மிகவும் முக்கியமாகும். இது ஒரு சட்டத் தேவைப்பாடல்லாத போதிலும் விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறையின் ஆரம்பத்தில் அப்போதைய ஆணையாளரினால் எடுக்கப்பட்ட இத்தீர்மானம் தொடர்ந்தும் கைவிடாப்படாது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. சாதாரண வாக்காளர்களுக்கு உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டையுடனும், அஞ்சல் வாக்காளர்களுக்கு அஞ்சல் வாக்கு பக்கெற்றுக்களுடனும் இவ்வீடுகளுக்கான அறிவித்தல் அனுப்பி வைக்கப்படும். வீடுகளுக்கான அறிவித்தலை தயாரிக்கும் போது பெரும் சிக்கலொன்றாக மாறியிருப்பது போட்டியிடுகின்ற கட்சிகளின் அதிகரிப்பாகும். பிற்பட்ட காலங்களில் வீடுகளுக்கான அறிவித்தல் விசாலித்தமை காரணமாக உத்தியோபூர்வ வாக்காளர் அட்டையுடன் வைத்து க்ளிப் செய்வதற்கு முடியாது சிக்கலான நிலைமையொன்றேற்பட்டது. அதன் காரணமாக அஞ்சல்மா அதிபருடன் கலந்துரையாடி வீடுகளுக்கான அறிவித்தல், உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டையுடன் பகிர்ந்தளிக்கும் போது உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டையைத் தனியாகவும் வீடுகளுக்கான அறிவித்தலை தனியாகவும் பகிர்ந்தளிப்பதற்காகத் அவை தனித்தனியாக தபால் திணைக்களத்திற்குக் கையளிக்கப்பட்டது.

111. ஒவ்வோர் உள்ளூர் அதிகார சபைக்காகவும் தயாரிக்கப்படுகின்ற வீடுகளுக்கான அறிவித்தல் வெவ்வேறானவையென்பதால், அறிவித்தல்கள் வீடுகளுக்களின் பிரதான குடியிருப்பாளருக்குக் கிடைக்கப்பெற்ற சந்தர்ப்பங்கள் தொடர்பாகவும் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றிருந்தன இவ்வாறு தனித்தனியாக கையளித்தல் காரணமாக சிலருக்கு உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை கிடைக்கப்பெற்றிருந்த போதும் வீடுகளுக்கான அறிவித்தல் கிடைக்கப்பெறவில்லையென்ற முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றன. எவ்வாறிருப்பினும், வேட்பாளரின் சுவரொட்டி, பதாகை, உருவப்படம்

என்பன காட்சிப்படுத்தல் சட்டத்தினால் தடைசெய்யப்பட்டதென்பதால், இவ்வாறு வீடுகளுக்கான அறிவித்தல் மூலம் வாக்காளர்களை அறிவுறுத்துவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கை மிகவும் முக்கியமாகும். வீடுகளுக்கான அறிவித்தலின் மாதிரியொன்று இணைக்கப்பட்டுள்ளது.
(பின்னிணைப்பு 20)

தேர்தல் தொடர்பான அறிவித்தல்

112. இது உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் கட்டளைச் சட்டத்தின் 38(1) ஆம் பிரிவிற்கமைய வேட்புமனு அலுவல்கள் நிறைவடைந்த பின்னர் அந்தந்த மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களினால் மும்மொழிகளிலும் வர்த்தமானியில் பிரசுரிக்க வேண்டிய அறிவித்தலொன்றாகும். மாவட்டத்திற்குரிய ஒவ்வோர் உள்ளூர் அதிகார சபை தொடர்பிலும் தனித்தனியாக கீழே காட்டப்பட்டுள்ள விடயங்கள் உட்சேர்க்கப்பட்டு இவ்வறிவித்தல் வெளியிடப்படல் வேண்டும்.

I. உள்ளூர் அதிகார சபை
II. தேர்தல் நடாத்தப்படும் திகதியும் நேரமும்
III. வேட்பாளரின் பெயர் ஒவ்வொரு வேட்பாளருக்குரிய தொடர் இலக்கத்துடன்
IV. ஒவ்வொரு கட்சிக்கு, சுயேச்சைக் குழுவிற்கு குறித்தொதுக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட சின்னம் மற்றும் சுயேச்சைக் குழுவின் வேறு பிரித்தறியும் இலக்கம்.
V. குறித்த உள்ளூர் அதிகார சபைக்குரிய ஒவ்வொரு வாக்கெடுப்புப் பிரிவுக்குரிய வாக்கெடுப்பு நிலையங்களின் பெயரும் அமைவிடமும்

113. அதற்கு மேலதிகமாக இவ்வறிவித்தலில் காணப்படும் கட்சிகள், சுயேச்சைக் குழுக்களின் தொடரொழுங்கு வாக்குச் சீட்டிலும் அதேவிதத்தில் அச்சிடப்படுமென அறிவித்தலில் காட்டப்படும். தேர்தல் அறிவித்தல் வெளியிடப்பட வேண்டிய திகதி, தேர்தல் திகதியைத் தீர்மானிப்பதற்கு அடிப்படையாகக் கொள்ளப்படுமாதலால், மிகக்துரிதமாக இவ்வறிவித்தலை வர்த்தமானியில் வெளியிடல் வேண்டும். இவ்வறிவித்தல் மூலம் அனைத்து தரப்பினரும் தேர்தல் தொடர்பாக அறிவுறுத்தப்படுவர்.

114. 2011 சனவரி 27 ஆம் திகதி வேட்புமனுக்கள் கையேற்பு நிறைவடைந்த 301 உள்ளூர் அதிகார சபைகள் தொடர்பில் 1691/21 – 1691/45 ஆம் இலக்கங்கள் வரையிலான 25 அதிவிஷேட வர்த்தமானி பத்திரிகைகளின் கீழ் 2011 பெப்புருவரி 01 ஆம் திகதி தேர்தல் அறிவித்தல் வெளியிடப்பட்டது. இருப்பினும், அவற்றில் நிராகரிக்கப்பட்ட 75 வேட்புமனுக்களுக்குரிய நீதிமன்ற நடவடிக்கைகள் காரணமாக 65 உள்ளூர் அதிகார சபை நிறுவனங்களின் வாக்கெடுப்பைப் பிற்போட நேரிட்டது. 2002 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்ட முதன்மைச் சட்டவாக்கத்தின் 38(3) ஆம் பிரிவுக்கமைய அந்த 65 உள்ளூர் அதிகார சபைகளின் தேர்தலை 2011.05.30 ஆம் திகதி வரை பிற்போட்டு குறித்த மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களினால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல், 1694/10 ஆம் இலக்க 2011 பெப்புருவரி 24 ஆம் திகதிய வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது. நிலக்கண்ணிகளை அகற்றுதல் நிறைவடையாமையால் மீள் குடியேற்றம் நிறைவடையாமை காரணமாகத் தேர்தல் நடாத்துவதற்கு பொருத்தமான சூழ்நிலை காணப்படாமையினால் முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு மற்றும் கரைத்துறைப்பற்று பிரதேச சபைகளின் தேர்தலையும் பிற்போடுதல் இவ்வர்த்தமானியில் உட்சேர்க்கப்பட்டிருந்தது.
(பின்னிணைப்பு 21)

115. நிராகரிக்கப்பட்ட வேட்புமனுக்கள் தொடர்பாக நீதிமன்ற நடவடிக்கைகள் பற்றிய மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பு 2011.05.12 ஆம் திகதி வரை கிடைக்கப்பெறாமையால் தேர்தலை 2011 யூலை 23 ஆம் திகதி வரை தொடர்ந்தும் பிற்போடுவதற்கு குறித்த தெரிவத்தாட்சி அலுவலர்களினால் வெளியிடப்பட்ட 38(3) பிரிவின் கீழான அறிவித்தல் 1707/15 ஆம் இலக்க 2011 மே மாதம் 26 ஆம் திகதிய வர்த்தமானியில் வெளியிடப்பட்டது. புதுக்குடியிருப்பு மற்றும் கரைத்துறைப்பற்று ஆகிய இரண்டு பிரதேச சபைகளினதும் தேர்தல் நடாத்தப்படும் தினத்தை மீண்டும் பிற்போட்டு 2011.12.31 ஆம் திகதி வரை நீடிப்புச் செய்யவும் வர்த்தமானி அறிவித்தல் 2011 யூலை 25 ஆம் திகதி வெளியிடப்பட்டது.

116. அதற்கிடையில் நீதிமன்ற செயற்பாடுகள் காரணமாக பிற்போடப்பட்ட உள்ளூர் அதிகார சபைகள் தொடர்பாக நீதிமன்றங்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட வேட்புமனுக்களை மீளவும் உட்சேர்த்து 1712/14 ஆம் இலக்க 2011 யூன் மாதம் 30 ஆம் திகதிய 38(1) ஆம் பிரிவின் கீழான திருத்தம் செய்யப்பட்ட உரிய அறிவித்தல் வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒவ்வொரு கட்சி, சுயேச்சைக் குழுக்களின் தகவல்களை உள்ளடக்கியதாக அறிவித்தல் வெளியிடப்பட்டது.

117. அவசர கால கட்டளையின் கீழ் பதவிக்காலம் 2011.12.31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்ட 23 உள்ளூர் அதிகார சபைகள் தொடர்பில் 2011.12.31 ஆம் திகதிக்கு முன்னர் தேர்தலை நடாத்த வேண்டுமென்பதால், 2011.08.04 ஆம் திகதி வேட்புமனு அறிவித்தலை வெளியிடுமாறு குறித்த தெரிவத்தாட்சி அலுவலர்கள் அறிவுறுத்தப்பட்டனர். குறித்த 23 உள்ளூர் அதிகார சபைகளுக்கான வேட்புமனுக் கையேற்றல் 2011 ஆகஸ்ட் 25 ஆம் திகதி நண்பகல் 12 மணியுடன் நிறைவடைந்தது. அதனோடு தொடர்புடைய தேர்தல் அறிவித்தல் குறித்த தெரிவத்தாட்சி அலுவலர்களினால் 1721/16 ஆம் இலக்க 2011 ஆகஸ்ட் 30 ஆம் திகதிய அதிவிஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது.
(பின்னிணைப்பு 22)

45(1) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

118. இவ்வறிவித்தல் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் தயாரிக்கப்பட்டு வாக்கெடுப்பு நிலையத்தில் காட்சிப்படுத்தப்பட வேண்டிய அறிவித்தலொன்றாகும். விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறையில் வாக்காளருக்கு தான் விரும்பிய கட்சிக்கு அல்லது சுயேச்சைக் குழுவிற்கு முதலாவதாக வாக்களிக்க முடிவதோடு, இரண்டாவதாக தான் வாக்களித்த கட்சி அல்லது குழுவின் கீழ் போட்டியிடுகின்ற வேட்பாளரொருவருக்கு, இரண்டு

வேட்பாளர்களுக்கு அல்லது மூன்று வேட்பாளர்களுக்கு என்ற விதத்தில் மூன்று விருப்புக்களை அளிக்க முடியும். மூன்று விருப்புக்களையும் ஒரு வேட்பாளருக்கு அடையாளமிடுவதாயின், வேட்பாளரின் இலக்கத்தின் மீது ஒரு புள்ளடியும் அதன் எதிரிலுள்ள இரண்டு கூடுகளில் இரண்டு புள்ளடிகளும் என்ற விதத்தில் மூன்று விருப்புக்களை அடையாளமிட முடியும். வாக்காளருக்கு தான் விரும்பிய வேட்பாளரின் இலக்கத்தை வாக்கெடுப்பு நிலையத்தில் அறிந்து கொள்வதற்காக 45(1) ஆம் பிரிவின் கீழான இவ்வறிவித்தல் உதவியாக அமையும். இவ்வறிவித்தல் வாக்கெடுப்பு நிலையத்தின் வெளியில் வாக்காளர்கள் இலகுவாகப் பார்க்கக் கூடியவாறு வாக்காளர்களுக்கு வழிகாட்டுவதற்கான அறிவுறுத்தல் வழங்கும் இரண்டாம் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள படிவத்திற்கு இசைவாகத் தயாரிக்கப்பட்ட அறிவித்தலொன்றுடன் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரினால் காட்சிப்படுத்தப்படும். இவ்வறிவித்தலில் வீட்டறிவித்தலில் காட்டப்பட்டுள்ளவாறு சிங்கள அகர வரிசைக்கமைய ஒழுங்குப்படுத்தப்பட்ட வேட்பாளர்களின் பெயர்கள் மற்றும் வேட்பாளர்களுக்கு குறித்தொதுக்கப்பட்ட இலக்கங்கள் காட்டப்படும். இதற்கு மேலதிமாக அறிவித்தலின் மேற்பகுதியில் அவ்வுள்ளூர் அதிகார சபைக்காகப் போட்டியிடுகின்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பெயர்கள், தேர்தல் சின்னங்கள் மற்றும் சுயேச்சைக் குழுக்களுக்காக குறித்தொதுக்கப்பட்டுள்ள இலக்கங்கள் மற்றும் சின்னங்கள் என்பன தெளிவாகக் காட்டப்பட்டிருக்கும்.

VI ஆம் பிரிவு

ஏனைய பூர்வாங்க தேவைப்பாடுகள்

அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கான வசதிகள்

119. 1987 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் திருத்தச் சட்டத்தின் மூலம் உள்ளூர் அதிகார சபைகளுக்காகவும் விகிதாசார பிரதிநிதித்துவ முறை அறிமுகப்படுத்தப்பட்டதோடு, அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கான முறையும் அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் பிரகாரம் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் கடமைகள் காரணமாக தமக்குரிய வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்களிக்க முடியாத பாதுகாப்புப் பிரிவினதும் அரச பிரிவின் அலுவலர்கள் மற்றும் ஊழியர்களுக்காக அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன், உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் சட்டத்தின் 39 ஆ(1) பிரிவின் கீழ் அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்காக விண்ணப்பிக்க முடிவது யாருக்கு, விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட வேண்டியது எக்காலப்பகுதிக்குள் என்பது காட்டப்பட்டுள்ளதோடு, அச்சட்டத்தின் 9 ஆம் அட்டவணை மூலம் அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

120. அஞ்சல் வாக்காளரொருவராகக் கருதப்படுவதற்காகச் செய்யப்படுகின்ற விண்ணப்பம் 26 ஆம் பிரிவின் கீழ் வேட்புமனு அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திற்கு மறுநாளிலிருந்து 10 நாட்களுக்குள் கிடைக்கக்கூடியவாறு உரிய அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களூடாக தாம் வாக்காளரொருவராகப் பதிவுசெய்யப்பட்டுள்ள மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். இந்த 10 நாட்கள் கால எல்லை இவ்விடயத்திற்குப் போதுமானதாக இல்லாமையால் முதற் கட்டத்தில் 2011.01.16 ஆந் தேதி முடிவடைவதற்கு நியமிக்கப்பட்ட அஞ்சல் வாக்கு விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கால எல்லை 2011.01.27 ஆந் தேதி வரை நீடிக்கப்பட்டது. இம் முழுமையான கால எல்லையை உள்ளடக்கும் வகையில் அஞ்சல் மூல வாக்காளர்களின் வசதிக்காக அனைத்து மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களின் அலுவலகங்களைப் போன்றே கொழும்பு நகரில் தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்கள் பலவற்றில் தேருநர் இடாப்புக்கள் காட்சிப்படுத்தப்பட்டன. இதற்கு மேலதிகமாக அரச நிறுவனங்களின் வேண்டுகோளுக்கமைய இறுவட்டுக்கள் (CD) மூலமும் தேருநர் இடாப்புக்களின் காட்சிப்படுத்தல் நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டன.
(பின்னிணைப்பு 23,24)

121. அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கான விண்ணப்பங்களை அத்தாட்சிப்படுத்துதல், அஞ்சல் வாக்குகள் அடங்கிய காப்புறுதி பக்கெற்றுக்களைக் கையேற்றல், பாதுகாப்பாகக் களஞ்சியப்படுத்தி வைத்தல் மற்றும் அஞ்சல் வாக்காளர்களைக் கொண்டு இரகசியமான முறையில் வாக்குச் சீட்டை அடையாளமிடச் செய்து காப்புறுதித் தபாலில் உரிய தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு அனுப்பி வைத்தல் வரையிலான அஞ்சல் வாக்கு தொடர்பிலான அனைத்து நடவடிக்கைகளினதும் பொறுப்பு உரிய அமைச்சின், திணைக்களத்தின், அலுவலகத்தின், நிறுவனத்தின் தலைவரால் நியமிக்கப்படுகின்ற அத்தாட்சிப்படுத்தும் அலுவலருக்கு ஒப்படைக்கப்படும்.
(பின்னிணைப்பு 25,26,27,28)

122. இத்தேர்தலுக்குரிய அஞ்சல் மூல வாக்கு முறைகேடுகளைத் தவிர்ப்பதற்கான ஒரு வழியாக அஞ்சல் வாக்காளரொருவரின் விண்ணப்பப் பத்திரத்தை அத்தாட்சிப்படுத்தும் அலுவலருக்கு அனுப்புவதற்கு முன்னர் அஞ்சல் வாக்காளரின் மிகக்கிட்டிய நிறுவனத் தலைவரால் அந்த அஞ்சல் மூல விண்ணப்பப் படிவத்தை அத்தாட்சிப்படுத்துவதற்கான விசேட பந்தியொன்று அஞ்சல் மூல விண்ணப்பப் படிவத்தில் உட்சேர்க்கப்பட்டது. அதற்கு மேலதிகமாக அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களை பரிசோதித்ததன் பின்னர் தெரிவத்தாட்சி அலுவலர்களால் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டதாக, அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களூடாக வாக்காளரின் சேவை நிலையத்திற்கு அறிவிப்பது போன்றே நேரடியாக விண்ணப்பதாரியின் தனிப்பட்ட முகவரிக்கும் அறிவிக்கப்பட்டது. அஞ்சல் வாக்காளர்களுக்குரிய உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை தெரிவத்தாட்சி அலுவலர் தம்வசம் வைத்துக் கொள்வதற்குப் பதிலாக அவ்வுத்தியோகபூர்வ வாக்காளர் அட்டையில் அஞ்சல் வாக்காளரொருவராக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளார் என்ற வாசகத்தைக் கொண்ட இறப்பர் முத்திரையொன்றைப் பொறித்து அவ்வுத்தியோகபூர்வ வாக்காளர் அட்டையை வாக்காளருக்கு அனுப்பி வைப்பதன் மூலம் அஞ்சல் வாக்காளரொருவராக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளாரென்பது பற்றி அறிவுறுத்தப்பட்டது. மேற்கூறப்பட்ட அனைத்து ஒழுங்கு நடவடிக்கைகள் மூலமும் போலியான அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களை இனங்கண்டு அவற்றை நிவர்த்திப்பதற்கு உரிய நடவடிக்கைகளை துரிதப்படுத்த முடிந்தது. இச்செயல் ஒழுங்குகள் 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற மாகாண சபைத் தேர்தல்களிலும் நடைமுறைப்படுத்தப்பட்டன.
(பின்னிணைப்பு 29)

123. 2011 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30 ஆந் தேதி 1699/35ஆம் இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகை மூலம் 2011 திசெம்பர் மாதம் 31 ஆந் தேதி வரை பதவிக்காலம் நீடிக்கப்பட்ட 23 உள்ளூர் அதிகார சபைகளில் விசேடமாக கொழும்பு மாநகர சபை உள்ளிட்ட 17 மாநகர சபைகள் உள்ளடங்கியமையால் மொத்தமாக நோக்குகையில் அவ்வுள்ளூராட்சிச் சபை நிறுவனங்களின் தேர்தலுக்கு அஞ்சல் மூல வாக்காளர் விண்ணப்பங்கள் கிடைப்பதில் பற்றாக்குறையினை அவதானிக்க முடிந்தது. மாநகர சபைப் பிரதேசங்களில் சேவையில் ஈடுபட்டுள்ள அரச அலுவலர்களில் அநேகமானோர் வெளிப் பிரதேசங்களின் வாக்காளர்களாதலாலும், தேர்தல் பணிகளுக்கான அலுவலர்களைத் தேர்ந்தெடுப்பதில் விசேடமாக உரிய உள்ளூர் அதிகார சபைகள் அதிகார பிரதேசங்களில் பதிவுசெய்யப்பட்ட வாக்காளர்கள் அல்லாதவர்களுக்கு கூடிய கவனம் செலுத்தப்படுவதும் இதற்கான காரணமாகக் குறிப்பிட முடியும். அவ்வாறான 23 உள்ளூர் அதிகார சபைகளுக்கான வேட்புமனு அறிவித்தலை 2011.08.04 ஆந் தேதி வெளியிடுமாறு உரிய தெரிவத்தாட்சி அலுவலர்கள் அறிவூட்டப்பட்டதோடு, அஞ்சல் வாக்கு விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் 10 நாட்களைக் கொண்ட கால எல்லை மேலும் சந்தர்ப்பத்தைப் பெற்றுக் கொடுப்பதற்காக 2011.08.25 ஆந் தேதி வரை நீடிக்கப்பட்டது.

124. நீதிமன்ற நடவடிக்கைகள் காரணமாக தேர்தல்கள் பிற்போடப்பட்டுள்ள புதுக்குடியிருப்பு மற்றும் கரைத்துறைப்பற்று பிரதேச சபைகள் இரண்டு தொடர்பாகவும் 2011.01.06 ஆந் தேதி வெளியிடப்பட்ட வேட்புமனு அறிவித்தலுடன் கிடைக்கப் பெற்ற அஞ்சல் வாக்காளர் விண்ணப்பங்கள் தொடர்பாகத் தகைமையுடைய வாக்காளர்களுக்குரிய வாக்குச் சீட்டுக்கள் 2011.02.25 ஆந் தேதி குறிப்பிட்ட அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களுக்கு அனுப்பப்பட்டது. ஆனால், 1694/10 மற்றும் 2011.02.24 ஆந் தேதிய வர்த்தமானி அறிவித்தல் மூலம் 2011.05.30 வரை தேர்தல் பிற்போடப்பட்டதால் வாக்குச் சீட்டுக்களை அடையாளமிடுதல் இடைநிறுத்தப்பட்டது. அவ்வாக்குச் சீட்டுக்களை அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களிடமிருந்து மீளப் பெற்றுக் கொள்ளுமாறு தெரிவத்தாட்சி அவலர்களுக்கு அறிவூட்டப்பட்டது.

125. 2011.01.06 ஆந் தேதியிலிருந்து 2011.01.27 ஆந் தேதி வரை அஞ்சல் வாக்கு விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு முதலாம் கட்டமாகத் தேர்தல் நடாத்தப்பட்ட 3 மாநகர சபைகள், 30 நகர சபைகள், 201 பிரதேச சபைகள் உள்ளிட்ட 234 உள்ளூராட்சி நிறுவனங்களின் அஞ்சல் வாக்காளர்களுக்குரிய வாக்குச் சீட்டுக்களின் விநியோகம் 2011.02.23 ஆந் தேதி நடாத்தப்பட்டதோடு, அஞ்சல் வாக்கு அடையாளமிடுதல் 2011.03.08 மற்றும் 09 ஆந் தேதி ஆகிய இரண்டிலும் நடாத்தப்பட்டது.

(பின்னிணைப்பு 30)

126. நிராகரிக்கப்பட்ட வேட்புமனுக்கள் தொடர்பாக நீதிமன்ற நடவடிக்கைகள் காரணமாகப் பிற்போடப்பட்ட 65 உள்ளூராட்சி நிறுவனங்களுக்காக 2011.07.23 ஆந் தேதி 20 நிருவாக மாவட்டங்களில் தேர்தல்கள் நடாத்தப்பட்டதோடு, அத்தேர்தலுக்காக 2010 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பு பாவிக்கப்பட வேண்டியிருந்தமையால் அஞ்சல் வாக்குச் சீட்டுக்களை விநியோகிப்பதற்கு முன்னர் 2010 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பிற்கேற்ப அஞ்சல் வாக்காளர் இடாப்பு திருத்தம் செய்யப்பட வேண்டியிருந்தது. அதன் பிரகாரம் தகைமை பெற்ற விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரம் அஞ்சல் மூலம் வாக்களிக்கும் வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கும் ஏனைய வாக்காளர்களைத் தேர்தற் கடமைகளிலிருந்து விடுவித்து வாக்கெடுப்பு நிலையங்களுக்குச் சென்று வாக்களிப்பதற்கான வசதிகளைச் செய்து கொடுப்பதற்கும் நேரிட்டது. அதன் பிரகாரம் தகைமைபெற்ற அஞ்சல் வாக்காளர்களுக்குரிய வாக்குச் சீட்டுக்களை காப்புறுதிப் பக்கெற்றுக்களில் இட்டு உரிய அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களுக்கு அனுப்புவது அந்தந்த மாவட்டங்களின் மாவட்ட செயலகங்களில் 2011.07.01 ஆந் தேதி நடைபெற்றதோடு, வாக்குச் சீட்டுக்களை அடையாளமிடல் 2011.07.12 ஆந் தேதி நடைபெற்றது.

(பின்னிணைப்பு 31)

127. 17 மாநகர சபைகள், ஒரு நகர சபை, 05 பிரதேச சபைகள் ஆகியவற்றிற்காக 2011.10.08 ஆந் தேதி நடைபெற்ற தேர்தலுக்கான அஞ்சல் வாக்காளர்களின் வாக்குச் சீட்டுக்கள் காப்புறுதிப் பக்கெற்றுக்களில் இடப்பட்டு அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களுக்கு அனுப்பப்படல் 2011.09.21 ஆந் தேதியும் அஞ்சல் வாக்குகள் அடையாளமிடுதல் உரிய அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களின் அலுவலகங்களில் 2011.09.29 மற்றும் 30 ஆந் தேதிகளிலும் நடாத்தப்பட்டன. அஞ்சல் வாக்குகளை அடையாளமிடுதல் அந்தந்த அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களின் அலுவலகங்களில் நடைபெற்றதோடு முறைகேடுகளெவையேனும் ஏற்படுவதற்கான சாத்தியமுண்டென அறிக்கையிடப்பட்ட இடங்கள் தொடர்பாக கண்காணிப்பு மட்டத்தில் அலுவலர்களை அனுப்புவதற்கு தெரிவத்தாட்சி அலுவலர்கள் அறிவூட்டப்பட்டனர். அரசியற் கட்சி முகவர்களுக்கு மேலதிகமாக PAFFREL மற்றும் CMEV ஆகிய கண்காணிப்பு நிறுவனங்களின் அலுவலர்களுக்கும் அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களின் அலுவலகங்களில் தரித்திருந்து அஞ்சல் வாக்கு அடையாளமிடும் பணிகளில் எவையேனும் ஏற்படுகின்றனவாவெனக் கண்காணிப்புச் செய்வதற்கு அனுமதியளிக்கப்பட்டது. அதற்கு மேலதிகமாக அஞ்சல் வாக்குகள் அடையாளமிடப்படும் சந்தர்ப்பத்தில் கண்காணிப்புக்களை மேற்கொள்வதற்காக உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களை நியமித்தல் உசிதமெனக் கருதுகின்ற அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களின் அலுவலகங்களுக்கு உரிய மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களினால் தேர்தல் கடமைகள் தொடர்பாக சிறந்த அனுபவமுடைய உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் குழுவொன்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டது.

128. அஞ்சல் வாக்குகள் அடையாளமிடப்படும் இடங்களில் விசேட பாதுகாப்பை எதிர்பார்க்கின்ற அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்கள் அலுவலகங்களுக்காக ஏற்றவாறு பாதுகாப்பை அளிப்பதற்கும், ஏனைய இடங்களுக்கு பொலிஸ் நடமாடும் சேவை மூலம் பாதுகாப்பை வழங்குவதற்கும் நடவடிக்கையெடுக்குமாறு பொலிஸ் மாஅதிபர் அறிவூட்டப்பட்டார். இத் தேர்தலுக்கான அனைத்து நிருவாக மாவட்டங்களுக்குரித்தான 395003 அஞ்சல் வாக்கு விண்ணப்பங்கள் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்குக் கிடைக்கப் பெற்றதோடு, நிருவாக மாவட்ட ரீதியாக அதிகளவு விண்ணப்பங்கள் குருநாகல் மாவட்டத்திற்கே கிடைக்கப்பெற்றன. அவ்விண்ணப்பங்கள் 51176 ஆகும். கிடைக்கப் பெற்ற விண்ணப்பங்களில் தாமதமாகக் கிடைக்கப் பெற்றமையால் மற்றும் வேறு காரணங்களால் 76839 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன. அதன்படி ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை 318164 ஆகும். இத் தொகைக்காக வாக்குச் சீட்டுக்கள் விநியோகித்தல் மற்றும் வாக்குச் சீட்டுக்களை அடையாளமிடுதல் ஒவ்வொரு கட்டமாக குறித்த தினங்களில் நடைபெற்றன.

129. அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களை தபால் மூலம் அனுப்புவதிலும் அஞ்சல் வாக்காளர்களுக்குரிய வாக்குச் சீட்டுக்களை அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களுக்கு அனுப்புவதிலும் மற்றும் மீண்டும் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு பகிர்ந்தளிப்பதிலும் அஞ்சல் திணைக்களம் விசேட சிரத்தை எடுத்துக் கொண்டது. 2011 பெப்ரவரி மாதத்தின் இறுதி வாரத்தில் அஞ்சல் திணைக்களத்தின் கடிதப் பகிர்வுப் பிரிவில் ஏற்பட்ட வேலைநிறுத்தம் காரணமாக அஞ்சல் வாக்குப் பக்கெற்றுக்களைப் பகிர்ந்தளித்தலை வினைதிறனுள்ளதாக மாற்றுவது தொடர்பாகத் தேர்தல்கள் ஆணையாளரினால் தபால் மாஅதிபருடன் விசேட கலந்துரையாடலொன்று நடாத்தப்பட்டது.

உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள்

130. உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 39 (1) ஆம் பிரிவின் பிரகாரம் தேர்தல் பிரிவொன்றில் தேருநர் இடாப்பில் பெயர்கள் குறிக்கப்பட்ட அனைத்து வாக்காளர்களுக்கும் வாக்கெடுப்புத் தினத்திற்கு 05 நாட்களுக்கு முன்னராகக் கிடைக்கப் பெறும் விதத்தில் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டையொன்று அனுப்பப்படுதல் வேண்டும். அவ்வுத்தியோகபூர்வ வாக்காளர் அட்டையில் வாக்காளரின் பெயர், தொடரிலக்கம், உரிய வாக்கெடுப்பு நிலையம், வாக்கெப்புத் திகதி மற்றும் நேரம் அத்தியாவசியமாகக் குறிப்பிடப்படல் வேண்டும். இதனால் வாக்காளருக்கு தான் வாக்களிப்பதற்குச் செல்ல வேண்டிய வாக்கெடுப்பு நிலையம் எதுவென்பது தொடர்பாகவும், வாக்கெடுப்பு நடைபெறும் தினம் மற்றும் நேரம் பற்றியும் அறிவூட்டப்படுவதோடு, வாக்காளரது தொடரிலக்கம் குறிப்பிடப்படுவதால் வாக்கெடுப்பு நிலைய அலுவலர் குழுத்தினருக்கு வாக்காளரது பெயரைத் தேருநர் இடாப்பிலிருந்து தேடிக் கொள்வதற்கு சுலபமாகவிருக்கும்.

131. உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டையுடன் உரிய உள்ளூராட்சிச் சபைக்காகப் போட்டியிடுகின்ற வேட்புமனுவின் பிரகாரம் கட்சிகள் மற்றும் குழுக்களின் கீழ் போட்டியிடுகின்ற அனைத்து வேட்பாளர்களினதும் பெயர்கள் சிங்கள அகர வரிசைப்படி தொடரிலக்கத்துடன் தயாரிக்கப்பட்ட பட்டியலொன்று அனைத்து பிரதான குடியிருப்பாளருக்கும் தபால் மூலம் வழங்கப்படும். இது சட்ட ரீதியான தேவைப்பாடொன்றில்லாவிடினும் இதுவரையில் தேர்தலொன்றின்போது மக்கள் விசேடமாக இந்த வேட்பாளர் பட்டியலை எதிர்பார்க்கும் நிலைமைக்கு ஆளாகியுள்ளனர். அதன் பிரகாரம் அந்தத் தேவைப்பாடு இத்தேர்தலின் போதும் நிறைவேற்றப்பட்டது.

132. 2006 ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளூர் அதிகார சபைத் தேர்தலில் தொடங்கி உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளைக் கணனிமயப்படுத்துதல் இற்றைவரை மிகவும் உன்னத நிலையை அடைந்துள்ளது. எனவே உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் தொடர்பான நடவடிக்கைகள் விரைவில் செய்ய முடிந்தது. இக்காரணத்தால் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளின் தரம் போன்றே நிதியடிப்படையில் திணைக்களத்திற்குக் கிடைத்த பயனையும் மதிக்க வேண்டும்.

133. 2011 ஆம் ஆண்டு உள்ளூர் அதிகார சபைகளின் தேர்தலுக்குரிய 2009 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்புப் பாவிக்கப்பட்ட முதலாவது கட்டத்தில் வாக்காளர்கள் 9,438,132 பேருக்காகவும் இரண்டாவது கட்டத்தில் 2010 ஆம் ஆண்டு தேருநர் இடாப்பின் படி மீண்டும் பரீட்சிக்கப்பட்டதன் பின்னர் தேருநர்கள் 2,628,769 பேருக்காகவும் மூன்றாவது கட்டமாக தேருநர்கள் 1,589,622 பேருக்காகவும் இந்த உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் உரிய தெரிவத்தாட்சி அலுவலர்களால் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டன.

134. அனைத்து தேருநர்களுக்கும் வாக்கெடுப்புத் தினத்திற்கு 5 நாட்களுக்கு முன்னர் கிடைக்கத் தக்கவாறு உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டுமென்பதோடு, ஏதாவதொரு காரணத்தினால் குறிப்பிட்ட தினத்திற்குள் பகிர்ந்தளிக்கப்படாத உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் உரிய தபால் அலுவலகத்தில் பாதுகாப்பாக வைக்கப்படல் வேண்டும். உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை தபால் மூலம் கிடைக்கப் பெறாத யாரேனும் வாக்காளர் தனது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தி உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டையைக் கோரினால் அதனை அவரிடம் ஒப்படைப்பதற்கு தபால் திணைக்களம் கட்டுப்பட்டுள்ளது.

135. போலியாகச் சமர்ப்பிக்கப்பட்ட அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களை முன்கூட்டியே இனங்கண்டு அஞ்சல் வாக்கு தொடர்பாக நேரிடக் கூடிய முறைகேடுகளைத் திருத்திக் கொள்ளும் வழியொன்றாக அஞ்சல் வாக்காளர்களுக்கு உரிய உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளில் அஞ்சல் வாக்காளராக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளார் என்ற இறப்பர் முத்திரை மூலம் குறிப்பிடுவதும், இறப்பெய்திய மற்றும் வெளிநாடு சென்றுள்ளவர்களின் வாக்குகள் முறைகேடாக அடையாளமிடப்படுவதைத் தவிர்ப்பதற்காக நேரகாலத்துடன் கிராம அலுவலர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்களின்படி இறப்பெய்திய வாக்காளர்களின் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளில் இறப்பெய்தியவர் என அறிக்கையிடப்பட்டுள்ளது எனவும், வெளிநாடு சென்றுள்ள வாக்காளர்களின் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளில் வெளிநாடு சென்றுள்ளவர் என அறிக்கையிடபட்டுள்ளது எனவும் இறப்பர் முத்திரையைப் பொறித்து உரிய உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் வாக்காளர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

136. கடந்த தேர்தல்களின்போது உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் பகிர்ந்தளிக்கும் சந்தர்ப்பத்தில் அபகரித்தல் நடவடிக்கைகள் அநேகமாகக் கேட்கக்கூடியதாகவிருந்தது. அதற்கு மேலாக தேர்தலுக்கு முன்னைய தினத்தில் சில வாக்காளர்களது உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளைச் சேகரித்தலும் நடைபெற்றது. ஆனால் இதுவரை இறப்பெய்திய மற்றும் வெளிநாடு சென்றுள்ளவர்களின் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளில் அவ்வாறு குறிப்பிட்டுள்ளமையால் அந்நபர்கள் வாக்கெடுப்பு நிலைய அலுவலர்களின் விசேட கவனத்திற்குட்படுவதாலும், வாக்கெடுப்பு நிலையத்தில் செல்லுபடியான ஆளடையாள ஆவண மூலம் வாக்காளரின் ஆளடையாளம் உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் மாத்திரமே வாக்குச் சீட்டு வழங்கப்படுவதாலும் மற்றும் வாக்களிப்பதற்கு உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை கட்டாயத் தேவைப்பாடொன்றல்லாததாலும் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளைக் அபகரித்தல்கள், சேகரித்தல்கள் தொடர்பாக இத்தேர்தலில் கேட்கக் கிடைத்த சந்தர்ப்பங்கள் மிகவும் குறைவாகவேயாகும். எவ்வாறாயினும் வாக்கெடுப்பிற்கு முந்திய தினம் இரவில் கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து இவ்வாறான நிகழ்வுகள் சில அறிக்கையிடப்பட்டுள்ளன. அதனால் ஏற்பட்ட குழப்பமான நிலைமையை இல்லாதொழிப்பதற்காக வாக்களிப்பதற்கு உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை அவசியமில்லையெனவும் செல்லுபடியான அடையாள அட்டையொன்றிருப்பது மற்றும் தேருநர் இடாப்பில் பெயர் இருப்பது போதுமானதெனவும் உரிய பிரதேசங்களில் பரவலாகப் பிரச்சாரம் செய்யப்பட்டது.

137. உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் பகிர்ந்தளிக்கப்படுவது தபால் திணைக்களத்தின் மூலம் மேற்கொள்ளப்படுவதோடு, கணனி மூலம் அச்சிடப்படுகின்ற உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களில் சரி பிழை பார்க்கப்பட்டு தபால் திணைக்களத்திற்குக் கையளிக்கப்படும். அவ்வாறு 2011 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17 ஆந் தேதி நடைபெற்ற தேர்தலுக்கான 234 உள்ளூர் அதிகார சபைகளின் வாக்காளர்களுக்குரிய உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் தபால் திணைக்களத்திற்குக் கையளிக்கும் திகதி 2011.03.01 எனவும் பகிர்ந்தளிப்பு முடிவடையும் திகதி 2011.03.11 எனவும் விசேட பகிர்ந்தளிப்பு நடைபெறும் திகதி 2011.03.06 ஞாயிற்றுக் கிழமையெனவும் தேர்தல்கள் ஆணையாளரால் அறிவுறுத்தப்பட்டது.

138. அவ்வாறே இரண்டாம் கட்டத்திற்குரிய உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளின் விநியோகம் 2011.07.06 ஆந் தேதியெனவும், பகிர்ந்தளிப்பு 2011.07.16 ஆந் தேதியெனவும் விசேட பகிர்ந்தளிப்பு 2011.07.10 ஆந் தேதியெனவும் வாக்கெடுப்பின் மூன்றாம் கட்டத்திற்குரிய உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளின் விநியோகம் 2011.09.20 ஆந் தேதியெனவும் விசேட பகிர்ந்தளிப்பு 2011.09.25 ஆந் தேதியெனவும், இறுதிப் பகிர்ந்தளிப்பு 2011.10.01 ஆந் தேதியெனவும் தீர்மானிக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டது.

139. உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை இல்லாத போதிலும் வாக்காளர் செல்லுபடியான ஆளடையாள ஆவணமொன்றின் மூலம் வாக்கெடுப்பு நிலைய அலுவலர்களுக்கு தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தி வாக்குச் சீட்டொன்றைப் பெற்றுக் கொள்வதில் தடையேதுமில்லை. ஆனால் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை மூலம் தேருநர் இடாப்பில் வாக்காளரின் பெயரை இலகுவாகத் தேடிக்கொள்ள முடியுமென்பதால் வாக்கெடுப்பு நிலைய அலுவலர்கள் கடமைகளை விரைவாகச் செய்ய முடியும்.

வாக்காளர் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதன் தேவைப்பாடு

140. வாக்குச் சீட்டொன்று விநியோகிக்கப்பட வேண்டியது புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டையொன்றைச் சமர்ப்பித்தால் மாத்திரமே என்ற சட்டத் தேவைப்பாடு 1959 ஆம் ஆண்டிலிருந்து கலந்துரையாடப்பட்டு வந்த போதும் அச்சட்டம் பாராளுமன்றத்தில் 2004 ஆம் ஆண்டிலேயே நிறைவேற்றப்பட்டது. 2004 ஆம் ஆண்டு 14 ஆம் இலக்க தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் பிரகாரம் தேர்தலொன்றின்போது வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்குச் சீட்டொன்றைப் பெற்றுக் கொள்வத்றகாக வாக்காளரினால் செல்லுபடியான ஆளடையாள ஆவணமொன்றின் மூலம் வாக்கெடுப்பு நிலைய அலுவலர்களிடம் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும். ஆனால் அந்தச் சட்டத்தின் பொது ஏற்பாடுகளின் கீழ் இச்சட்டத்தைச் செயற்படுத்துவதற்கு முன்னர் 1968 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க ஆட்களைப் பதிவு செய்யும் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் அடையாள அட்டைகள் வழங்கப்படுவது தொடர்பான சகல நிர்வாக வேலைகளும் நிறைவேற்றப்பட்டுள்ளதாக ஆணைக்குழு திருப்தி அடைய வேண்டுமென்பதோடு, தேர்தல்கள் ஆணைக்குழுவினால் அவ்விடயம் உறுதிப்படுத்தப்பட்டு அந்த உறுதிப்பாடு வர்த்தமான பத்திரிகையில் வெளியிடப்படலும் வேண்டும் அவ்வாறு உறுதிப்படுத்துவதற்கு முன்னர் அடையாள அட்டைகளை வழங்குவதற்கான ஒழுங்குகள் தொடர்பாக பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அரசியற் கட்சிகளின் முகவர்களின் கருத்துக்களுக்குத் தேர்தல்கள் ஆணைக்குழு உரிய கவனத்தை செலுத்துதல் வேண்டும். அத்துடன் தேர்தல்கள் ஆணைக்குழு அவ்வுறுதிப்பாட்டை பிரசுரிப்பதற்கு முன்னர் ஆட்களைப் பதிவு செய்யும் ஆணையாளர் 2(1) ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள சான்றிதலொன்றை தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பித்தல் வேண்டும். இது மிகவும் சிக்கலான சூழ்நிலையை தோற்றுவிக்குமாதலால், சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தல் ஒன்றிற்கான மக்கள் செயற்பாடு (PAFFREL) என்ற அமைப்பினால் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட 176/2006 கொண்ட மனுவினூடாக முன்வைக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாகத் தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்த இணக்கப்பாட்டின் பேரில் 2006 ஆம் ஆண்டில் நடைபெற்ற உள்ளூராட்சி சபைகள் தேர்தலின் போது அச்சட்டத்தில் குறிப்பிட்ட சில ஏற்பாடுகளைச் செயற்படுத்த முடிந்தது.

141. அதற்கிணங்க 2006 ஆம் ஆண்டு உள்ளூராட்சி சபைகள் தேர்தல்களின் பின்னர் நடாத்தப்பட்ட அனைத்து தேர்தல்களிலும் வாக்கெடுப்பு நிலையத்திற்கு வருகின்ற வாக்காளர் கட்டாயமாகத் தேசிய அடையாள அட்டையை அல்லது தேர்தல்கள் திணைக்களத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏதாவது செல்லுபடியான ஆளடையாள ஆவணம் ஒன்றை வாக்கெடுப்பு நிலைய அலுவலர்களிடம் சமர்ப்பித்து ஆளடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டியிருந்தது.

142. செல்லுபடியான ஆளடையாள ஆவணங்களாக கீழ் காணப்படும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்றைச் சமர்ப்பிக்க முடியுமெனவும் அந்த ஆவணங்களில் எதுவும் தம்வசம் இல்லாத வாக்காளர் தான் வதிகின்ற பிரிவின் கிராம அலுவலரிடமிருந்து அல்லது தான் வதிகின்ற தோட்ட அதிகாரியிடமிருந்து இவ்விடயத்திற்காக மாத்திரம் செல்லுபடியான தற்காலிக அடையாள அட்டையொன்றை பெற்றுக் கொள்ள முடியுமெனவும் அறிவிக்கப்பட்டது.
(பின்னிணைப்பு 32,33,34)

1. தேசிய அடையாள அட்டை
2. செல்லுபடியான கடவுச்சீட்டு
3. செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம்
4. அரச சேவை ஓய்வூதிய அடையாள அட்டை
5. வயோதிபர் அடையாள அட்டை (பிரதேச செயலாளரினால் விநியோகிக்கப்பட்ட)
6. ஆட்பதிவுத் திணைக்களத்தினால் மதகுருமார்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ள அடையாள அட்டை

143. அதன் பிரகாரம் தேர்தல்கள் திணைக்களத்தினூடாக அச்சிடப்பட்ட சுவரொட்டி அறிவித்தல்களின் பிரதிகள் சகல கிராம அலுவலர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ள கிராம

அலுவலர்கள் அலுவலகங்கள் மற்றும் உரிய பிரிவின் பகிரங்க இடங்களில் காட்சிப்படுத்துவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டு அது தொடர்பான விரிவான பிரசாரம் ஒன்றும் பெற்றுக் கொடுக்கப்பட்டது. தற்காலிக அடையாள அட்டைகளை விநியோகிப்பதற்குத் தேவையான விண்ணப்பப்படிவங்கள்,அறிவுறுத்தல்கள் அனைத்தும் கிராம அலுவலர்கள் மற்றும் தோட்ட அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டது. வாக்காளர் எடுத்து வர வேண்டியிருந்தது 1 x 1/2" அளவிலான வர்ண அல்லது கறுப்பு வெள்ளைப் புகைப்படத்தின் பிரதிகள் இரண்டு மட்டுமே. 2006 ஆம் ஆண்டில் கிராம அலுவலர் மற்றும் தோட்ட அதிகாரிகளால் தயாரிக்கப்பட்ட அடையாள அட்டைகள் பிரதேச செயலாளர்களால் உறுதிப்படுத்தப்படும் வேலைத்திட்டம் செயற்படுத்தப்பட்டாலும் அதன் பின்னர் நடைபெற்ற தேர்தல்களின் போது அந்நடவடிக்கைகள் தேர்தல்கள் திணைக்களத்தின் பதவி நிலை உத்தியோகத்தர் ஒருவரால் நிறைவேற்றப்பட்டது.

144. கடந்த தேர்தல்களைப் போன்றே இத்தேர்தலிலும் தேர்தல்கள் திணைக்களத்தின் மூலம் விநியோகிக்கப்பட்ட தற்காலிக அடையாள அட்டைகள் உரிய பிரிவின் கிராம அலுவலர்களூடாக செல்லுபடியாக்கப்படுவதற்கான வசதிகள் செய்யப்பட்டன. இதற்கு மேலதிகமாக 2009 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பில் பெயர் குறிப்பிடப்பட்ட வாக்காளர்களில் செல்லுபடியான ஆளடையாள ஆவணமொன்று இல்லாத வாக்காளர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டு தேசிய அடையாள அட்டையை விரைவில் விநியோகிப்பதற்காக முழுத்தீவிலும் பரந்தளவிலான வேலைத்திட்டமொன்றை ஆரம்பிக்குமாறு ஆட்பதிவு ஆணையாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட்டது. அது தொடர்பாக ஆட்பதிவு ஆணையாளர் நாயகத்தால் வழங்கப்பட ஒத்துழைப்பு மெச்சப்பட வேண்டியதாகும். இதற்காக நடமாடும் சேவைகளை நடாத்துதல் உள்ளடங்களாக பல்வேறு பணிகளுக்காக தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்கள் சிலவற்றின் ஒத்துழைப்பு ஆட்பதிவு திணைக்களத்திற்குக் கிடைக்கப்பெற்றது.

145. இதுவரையில் வருடாந்த தேருநர் இடாப்பு மீளாய்வுடன் 85% இற்கும் அதிகமான பதிவு செய்யப்பட்ட தேருநர்களின் தேசிய அடையாள அட்டை இலக்கங்கள் தேருநர் இடாப்பிற்குள் உட்சேர்க்கப்பட்டுள்ளமையும் செல்லுபடியான ஆளடையாள ஆவணங்களாக தேசிய அடையாள அட்டைக்கு மேலதிகமாக மேலும் ஆவணங்கள் பல அறிமுகப்படுத்தப்பட்டமையாலும், கடந்த தேர்தல்களில் பெற்றுக்கொள்ளப்பட்ட தற்காலிக அடையாள அட்டைகள் கிராம அலுவலர் மூலம் மீண்டும் செல்லுபடியாக்கப்படுவதற்கான வசதிகளை வழங்கியமையாலும், எதுவும் இல்லாத வாக்காளர்களுக்கு தற்காலிக அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்வதற்கு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டமையாலும் வாக்காளரது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு முடியாமற் போனமை காரணமாக வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்குச் சீட்டு வழங்கப்படாமல் நிராகரிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் மிக அரிதாகவே காணப்பட்டன.

146. வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்காளர் செல்லுபடியான ஆளடையாளமொன்றின் மூலம் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதைக் கட்டாயமாக்குவதன் காரணத்தினால் ஆள்மாறாட்ட வாக்களிப்பதற்கு முயற்சிப்பதைத் தவிர்க்க முடிந்ததோடு, அக்காரணத்தினால் வாக்கெடுப்பை அமைதியாக நடாத்திச் செல்லவும் முடிந்தது.

தோதான குறியீட்டினால் அடையாளமிடுதல்

147. உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 53(அ) ஆம் பிரிவின் கீழ் வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்காளருக்கு வாக்குச்சீட்டொன்று வழங்கப்படுவதற்கு முன்னர், வாக்காளரின் இடது கையின் சிறுவிரலைப் பரீட்சித்து சிறுவிரலில் நகம் மற்றும் சுற்றுப்புறம் அடங்கலாக துடைத்தழிக்க முடியாத மையினால் அடையாளமிடல் வேண்டும். இது தோதான குறியீட்டினால் அடையாளமிடுதல் எனச் சட்டத்தில் காட்டப்பட்டுள்ளது.

148. இடது கை சிறுவிரலைப் பரீட்சிப்பதற்கு இடமளிக்காமை, பரிசீலனையின் போது இதற்கு முன்னர் தோதான குறியீட்டினால் அடையாளமிடப்பட்டுள்ளமை மற்றும் பரீட்சிப்பதற்கு இடமளித்த போதிலும் அடையாளமிடுவதற்கு இடமளிக்காமை ஆகிய சந்தர்ப்பங்களில் வாக்குச்சீட்டை விநியோகம் மறுக்கப்படும். அவ்வாறே இடது கையில் சிறுவிரல் இல்லாத வாக்காளரொருவர் வந்திருப்பின் முதலில் மோதிரவிரலும், அதன்பின்னர் நடுவிரல், சுட்டுவிரல், பெருவிரல் என்ற வகையில் முறையாக விரல்களைப் பரீட்சித்து குறித்த விரலில் தோதான குறியீட்டை இடல் வேண்டும். இடது கை விரல்கள் எதுவுமில்லாவிடில் வலது கையில் அந்த ஒழுங்கில் சிறுவிரலில் இருந்து பெருவிரல் வரை பரீட்சித்தல் வேண்டுமென்பதோடு, இரு கைகளிலும் விரல்கள் இல்லாவிடில் இடதுபக்கக் கையின் நுனியில் அடையாளமிடப்படும். வாக்காளர் தமது இடது கையின் சிறுவிரலைப் பரீட்சிக்க இடமளிக்காவிடில் அல்லது இடது கையில் சிறுவிரல் இல்லாவிடில் அல்லது சிறுவிரலைப் பரீட்சிக்கும் போது ஏதாவது அடையாளம் உள்ளதாகத் தெரியவரின் அல்லது எந்தவோர் அடையாளமும் இல்லையென பரீட்சித்தலின் போது தெரியவந்த போதிலும் அடையாளமிடுவதற்கு இடமளிக்காவிடில் உரிய வாக்காளர் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரிடம் ஒப்புவிக்கப்படுவார். அடையாளமிருப்பதாகத் தெரியவரின் மேலதிக பரிசீலனைக்காக ஆள்மாறாட்ட வாக்களிப்பதற்கு வந்தவொருவராகக் கருதப்பட்டு பொலிசாரிடம் கையளிக்கப்படுவதோடு, அடையாளமிடுவதை நிராகரிப்பாராயின் வாக்கெடுப்பு நிலையத்திலிருந்து வாக்குச் சீட்டு அவசியமற்றதென வாக்காளர் எடுத்த தீர்மானமாகக் கருதப்பட்டு எந்தவொரு வாக்குச் சீட்டும் வழங்கப்படமாட்டாதென்பதோடு, வாக்கெடுப்பு நிலையத்திலிருந்தும் வெளியேறவும் வேண்டிவரும்.

149. தோதான குறியீட்டினால் அடையாளமிடுவதன் மூலம் எதிர்பார்க்கப்படுவதாவது, ஆள்மாறாட்ட வாக்களிப்புக்கு வருகின்ற நபர்களைத் தடுப்பதும் எவ்வித்திலும் அவ்வாறான ஆள்மாறாட்ட வாக்களிப்பு நோக்கத்தோடு எவரேனுமொருவர் வருகைதரின் வாக்கெடுப்பு நிலையத்தில் அவரை இனங்கண்டு கொள்வதுமேயாகும். ஆனால் வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்காளரின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக அடையாள அட்டையைப் பரீட்சிப்பது அத்தியாவசியமென்பதோடு, தேருநர் இடாப்பை கணனிமயப்படுத்தியுள்ளமையால் ஒரு முகவரியின் கீழ் மாத்திரம்

பதியப்படுவது முறையாக நடைபெறுவதோடு ஆள்மாறாட்ட வாக்களிப்பை வாக்கெடுப்பு நிலையத்திலிருந்து அகற்றுவதற்கும் முடியுமாயிற்று. எவ்வாறாயினும் சட்ட ரீதியாக இந்த அடையாளமிடும் செயல்முறையைப் பின்பற்ற திணைக்களம் கடமைப்பட்டுள்ளது. வாக்களிப்பின் போது இதற்காக பாரிய செலவைப் பொறுப்பேற்க வேண்டியுள்ளமையாலும் வழங்கப்பட்ட அடையாள அட்டைகளூடாக ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல் கட்டாயமாக்கப்பட்டுள்ளதாதலாலும் இனிமேலும் இத்தேவைப்பாடு அவசியமற்ற ஒன்றாதலால் தேர்தல்கள் சட்டத்திலிருந்து நீக்கப்படல் உசிதமெனக் கருத்துத் தெரிவிக்கின்றேன்.

வாக்கெடுப்பு நிலையங்களின் மேற்பார்வை

150. அனைத்துத் தேர்தல்களின் போதும் வாக்கெடுப்பு நிலைய நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்காக மற்றும் சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலர்களுக்குத் தேவையான ஒத்துழைப்பைப் பெற்றுக் கொடுப்பதற்காக வலயப் பொறுப்பு உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள் ஒரு தொகையினர் நியமிக்கப்படுவர். ஒவ்வொரு நிருவாக மாவட்டத்துக்குமாக மாவட்டத்திலுள்ள வாக்கெடுப்பு நிலையங்களின் எண்ணிக்கை, அமைவிடம், பதிவுசெய்யப்பட்டுள்ள வாக்காளர்களின் எண்ணிக்கை போன்றவற்றை கருத்திலெடுத்து இவ்வலயங்கள் பிரித்தொதுக்கப்படுவதுடன், வலயமொன்றிற்கு ஏறக்குறைய 5 – 7 வாக்கெடுப்பு நிலையங்கள் உள்ளடக்கப்படுகின்றன. சில சந்தர்ப்பங்களில் இவ்வாக்கெடுப்பு நிலைய எண்ணிக்கை வாக்கெடுப்பு நிலையம் ஒன்றிற்கு அல்லது இரண்டிற்கு வரையறுக்கப்படும் சந்தர்ப்பமும் உண்டு. இந்த வாக்கெடுப்பிற்குரிய 32 உள்ளூர் அதிகார சபைகளுக்காக அமைக்கப்பட்ட வலயங்களின் எண்ணிக்கை 2,085 ஆகும்.

151. வலயப் பொறுப்பு உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட வலயத்திற்குரிய வாக்கெடுப்பு நிலையங்கள் பற்றி முழு அவதானத்துடன் இருத்தல் வேண்டும். அதன்படி வாக்கெடுப்பிற்கு முந்திய தினம் பிற்பகலில் ஒரு தடவையும் வாக்கெடுப்புத் தினத்தில் மூன்று தடவைகளும் வலயத்தினுள் உள்ள வாக்குச் சாவடிகளுக்கு செல்லுதல் வேண்டும். வாக்கெடுப்பிற்கு முந்தியதினம் பிற்பகலில் வாக்கெடுப்பு நிலையங்களுக்குச் செல்கின்ற வலயப் பொறுப்பு உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் கீழ் காணப்படும் விடயங்கள் தொடர்பாக விசேட அவதானத்துடன் வாக்கெடுப்பு நிலையத்தைப் பரீட்சித்தல் வேண்டும்.

I. வாக்கெடுப்பு நிலைய ஒழுங்கமைப்பு சரியானதா
II. வாக்கெடுப்பு நிலையத்திற்கு உரிய தேருநர் இடாப்பு, வாக்குச்சீட்டுக்கள், வாக்குப்பெட்டி மற்றும் ஏனைய அனைத்து ஆவணங்கள் என்பன பொருட்கள் கையேற்கும் அறிவித்தல் பத்திரத்தின் பிரகாரம் கிடைக்கப் பெற்றுள்ளதா
III. அறிக்கையிட்டுள்ள அலுவலர்களின் எண்ணிக்கை போதுமானதா
IV. வாக்கெடுப்பு நிலைத்தில் பாதுகாப்புப் போதுமானதா
V. சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலரால் ஏனைய அலுவலர்களுடன் ஒத்திகை நடாத்தப்பட்டுள்ளதா
VI. அலுவலர்களுக்குத் தேவையான தங்குமிட வசதி மற்றும் உணவு வழங்கலுக்காகச் செய்யப்பட்டுள்ள ஒழுங்குகள் திருப்திகரமானதா

152. இவை பற்றிய உரிய நிலைமையை இல.1 செய்தி மூலமும் தெரிவத்தாட்சி அலுவலருக்கு அறிவித்தல் வேண்டும். ஏதேனும் குறைபாடு இருப்பின் அதைப் பெற்றுக் கொடுப்பதற்குத் தேவையான ஒழுங்குகளைச் செய்தல் வேண்டும். இந்த முதல் பயணத்தில் வாக்கெடுப்பின் ஆரம்பத்திலும் முடிவிலும் தமது ஒத்துழைப்புத் தேவைப்படுகின்ற சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலர்கள் பற்றிய மதிப்பீடொன்றை செய்து கொள்வது உசிதமென அறிவூட்டப்படுவர். வாக்கெடுப்புத் தினம் மு.ப. 6.30 மணிக்கு முன்னர் அவ்வாறு இனங்காண வாக்கெடுப்பு நிலையங்களுக்குச் சென்று சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலர்களது நடவடிக்கைகள் பற்றித் தேவையான ஒத்துழைப்பைப் பெற்றுக் கொடுத்தல் வேண்டும். வாக்கெடுப்புத் தினத்தில் தமது வலயத்திலுள்ள அனைத்து வாக்கெடுப்பு நிலையங்களுக்கும் குறைந்தளவு மூன்று தடவைகளாவது செல்ல வேண்டுமென்பதோடு, அவ்வொவ்வொரு தடவையிலும் சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலருக்கு ஏதாவது ஏதேனும் பிரச்சினைகள் காணப்படின் உடனடியாக உரிய ஒழுங்குகளைச் செய்து அப்பிரச்சினைகளைத் தீர்த்து வைத்தல் வேண்டும். உடனடியாகத் தெரிவத்தாட்சி அலுவலருக்கு அறிவித்தல் வேண்டும். சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலரின் குறிப்பேட்டில் தேவையான குறிப்புகளை இடுதல் வேண்டும்.

153. வாக்கெடுப்பு நடைபெறுகின்ற போது தமது வலயத்திற்கு உரித்தான அனைத்து வாக்கெடுப்பு நிலையங்கள் தொடர்பான கண்காணிப்புக்கள் அடங்கிய அறிக்கையொன்றை வலயப் பொறுப்பு உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் தயாரித்தல் வேண்டும். ஏதேனுமொரு வாக்கெடுப்பு நிலையத்தில் முறைகேடுகள் நடந்துள்ளதாக அறிக்கையிடப்பட்டிருப்பின், வாக்கெடுப்பு நிலையத்தை வறிதாக்குவதா இல்லையா என்ற தீர்மானம் எடுப்பதற்காக வலயப் பொறுப்பு உதவித் தெரிவத்தாட்சி அலுவலரின் அறிக்கையும் கருத்தில் கொள்ளப்படல் வேண்டும். வலயப் பொறுப்பு உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் தமது வலயத்திற்குரிய அனைத்து வாக்கெடுப்பு நிலையங்களினதும் சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலர்கள் வாக்கெடுப்பு நடவடிக்கைகளை முடித்து வாக்குப்பெட்டிகளையும் எடுத்துக் கொண்டு வாக்கெடுப்பு நிலையத்திலிருந்து வெளியேறிய பின்னர் வலயக் கடமைகள் முடித்துக்கொண்டு தெரிவத்தாட்சி அலுவலருக்கு அறிக்கையிடுவதோடு தனது குறிப்பேட்டையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

154. இத்தேர்தலின் போது கையடக்கத் தொலைபேசிப் பாவனை மிக உயரிய மட்டத்தில் காணப்பட்டமையால் சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலர்களுக்கு ஏற்படுகின்ற பிரச்சினைகள் பற்றி வலயப் பொறுப்பு உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் அல்லது மாவட்டப் பொறுப்பு பிரதி / சிரேட்ட / உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களுடன் தீர்த்துக்கொள்ள முடிந்தமை விசேடமாகக் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதொன்றாகும்.

வாக்களிப்பு கண்காணிப்பு அலுவல்கள்

155. வாக்கெடுப்பொன்றில் வாக்கெடுப்பு நிலைய முகவர்களைத் தவிர வேறெந்தவொரு கண்காணிப்பாளரையும் நியமிப்பதற்காக தேர்தல் சட்ட மூலம் ஏற்பாடு செய்யப்படவில்லை.

ஆனால் 1982 மக்கள் தீர்ப்பு மற்றும் 1988 உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் ஆகிய தேர்தல்கள் நடாத்தப்பட்ட நிலைமை காரணமாக அரசப் பொறிமுறை தேர்தல் மோசடிகளுடன் நேரடியாக தொடர்புடையதென்ற கருத்து எதிர்கட்சி செயற்பாட்டாளர்கள் மத்தியில் மாத்திரமின்றி நடுநிலை நபர்களிடத்திலும் ஏற்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டமையினால் பொதுமக்களிடையே வாக்கெடுப்பைப் பற்றி இருந்த நம்பகத்தன்மை பாதிக்கப்படக்கூடிய போக்கொன்று தோன்றக்கூடிய ஆபத்தொன்று ஏற்பட்டது. அதன் பிரதிபலனாக 1988 ஆம் ஆண்டு சனாதிபதித் தேர்தலில் முதன்முறையாக தேர்தல் நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்காக வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்களைப் போன்று உள்நாட்டுக் கண்காணிப்பாளர்களுக்கும் அவகாசம் அளிக்கப்பட்டது. ஆலோசனைக் குழு அமைப்பதும் ஆரம்பிக்கப்பட்டதும் இந்த நிலைமையின் கீழாகும். ஆலோசனைக் குழுவின் வேண்டுகோளின்படி வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்களைக் கொண்டு வருவதற்குத் தீர்மானிக்கப்பட்டதோடு, தேவையான கண்காணிப்புக் குழுவைத் தேர்ந்தெடுப்பது தேர்தல்கள் ஆணையாளரின் கடமையாகியது. தேர்தற் கடமைகள் பற்றி வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட அறிக்கைகள் வாக்கெடுப்பு நடவடிக்கைகள் ஏற்பட்ட விதம் பற்றி விளக்கமாக எழுத்திலான சாட்சியொன்றாக முன்வைப்பதற்கும் வன்முறைகளையும் ஊழல்களையும் தவிர்த்துக் கொள்வது இந்தக் கண்காணிப்பாளர்களை ஈடுபடுத்துவதன் நோக்கமாக அமைந்தது.

156. வடக்கு கிழக்கு தவிர்ந்த ஏனைய அனைத்து மாகாணங்களின் உள்ளூரதிகார சபைகளுக்காக 1991 ஆம் ஆண்டில் ஒருநாள் வாக்கெடுப்பாக நடாத்தப்பட்ட தேர்தலில் வேட்புமனு நடவடிக்கைகள் மற்றும் வாக்கெடுப்பு நடவடிக்கைகள் ஆகிய சந்தர்ப்பங்கள் இரண்டிலும் கண்காணிப்பிற்காக வெளிநாட்டு கண்காணிப்புக் குழுக்கள் பலவற்றின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொண்டிருந்த போதிலும் 1993, 1997 மற்றும் 2002 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற தேர்தல்களுக்காக வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள் ஈடுபடுத்தப்படவில்லை.

157. 2002 ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சிச் சபைகளின் தேர்தலுக்காக வேட்புமனு கையேற்கப்பட்ட தினத்திலிருந்து பல்வேறு வன்முறைச் சம்பவங்கள் நிகழ்ந்ததால் ஆலோசனைக் குழுக் கூட்டத்தின் போது தேர்தல் கண்காணிப்பிற்காக சர்வதேச கண்காணிப்பாளர்களை அழைப்பித்துக் கொள்வதன் தேவைப்பாடு செயலாளர்கள்/ முகவர்கள் சிலரால் முன்வைக்கப்பட்டதோடு, அதற்கு அரசியல் கட்சிகளின் பொது இணக்கப்பாடு கிடைக்கப்பெற்றது. ஆனால் அப்பொழுது கண்காணிப்புக் குழுவை அழைப்பித்துக் கொள்வதற்கு காலம் போதாமலிருந்ததோடு நிதியம் பற்றிய சிக்கல் காரணமாக அவ் வேண்டுகோளை நிறைவேற்ற முடியாமற் போனது. ஆனால் 1988 ஆம் ஆண்டிலிருந்து இதுவரையில் உள்நாட்டு கண்காணிப்புக் குழுக்கள் தமது பங்களிப்பைக் காட்டின. 2006 ஆம் ஆண்டில் நடைபெற்ற உள்ளூராட்சி அதிகார சபைகள் தேர்தலுக்காக நடைபெற்ற ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்களை அழைப்பிக்கும் தேவைப்பாடு இல்லையென ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது. ஆனால் 2008 ஆம் ஆண்டு மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ளூராட்சிச் சபைகள் 9 தொடர்பாக நடாத்தப்பட்ட தேர்தலுக்காக வெளிநாட்டுக் கண்காணிப்புக் குழுக்கள் சிலவற்றை அழைப்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. 1988 ஆம் ஆண்டின் பின்னர் நடைபெற்ற அனைத்து தேர்தல்களிலும் உள்நாட்டுக் கண்காணிப்பு நிறுவனங்கள் பலவற்றினால் தேர்தல் கண்காணிப்பு நிறைவேற்றப்பட்டது. அதற்கிடையில் சாலைகள் நிறுவனம் மற்றும் சர்வோதய முன்னணி அமைப்புக்கள் சில ஒன்றிணைந்து அமைக்கப்பட்ட சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலொன்றிற்கான மக்கள் செயற்பாடு (PAFFREL) நிறுவனம் விசேட உற்சாகத்துடன் செயற்பட்டது. 1994ஆம் ஆண்டு சனாதிபதித் தேர்தலுக்காக தேர்தல் வன்முறைகள் கண்காணிப்பு நிலையம் (CMEV) என்ற கண்காணிப்பு நிறுவனம் முதன்முறையாக கண்காணிப்பு கடமையில் ஈடுபட்டது. எவ்வாறாயினும் 2004 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 02 ஆந் தேதி நடாத்தப்பட்ட பாராளுமன்றத் தேர்தல் வரை மேற்குறிப்பிட்ட கண்காணிப்பு நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது. தேர்தல் தொடர்பாக வாக்கெடுப்பு நிலையங்களுக்கு வெளியில் சாதாரண கண்காணிப்புக்களைச் செய்வதற்கு மாத்திரமேயாகும்.

158. 2004 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 02 ஆந் தேதி நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் முதன்முறையாக இரண்டு கண்காணிப்பு நிறுவனங்களுக்கு வாக்கெடுப்பு நிலையத்தினுள் கண்காணிப்பாளர்களை தரித்திருக்கச் செய்து வாக்கெடுப்பு நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்கு அனுமதியளிக்கப்பட்டது.

159. அதன் பிரகாரம் 2006 மற்றும் 2011 உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்களிலும் அந்த அனுமதி கிடைத்தது. 2006 உள்ளூராட்சி சபைகளின் தேர்தலில் மேற்குறிப்பிட்ட கண்காணிப்பு நிறுவனங்கள் இரண்டிற்கு மேலதிகமாக திரிய பதனம் என்ற கண்காணிப்பு நிறுவனத்திற்கும் வாக்கெடுப்பு நிலையத்தில் தங்கியிருந்து கண்காணிக்க அனுமதி வழங்கப்பட்டது. 2011 உள்ளூராட்சி சபைகளின் தேர்தலின் முதற்கட்டத்தில் சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலொன்றிற்கான மக்கள் செயற்பாடு (PAFFREL) நிறுவனம் சனாதிபதித் தேர்தலுக்காக தேர்தல் வன்முறைகள் கண்காணிப்பு நிலையம் (CMEV) என்ற கண்காணிப்பு நிறுவனங்கள் இரண்டிற்கும் வாக்கெடுப்பு நிலையத்தில் தங்கியிருந்து வாக்கெடுப்பு நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்கும் அதற்கு மேலதிகமாக நடமாடும் கண்காணிப்பாளர்களை ஈடுபடுத்துவதற்கும் அனுமதி வழங்கப்பட்டதோடு, சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலொன்றிற்கான அமைப்பு (CaFFE), செப்கோ மக்கள் அமைப்பு, மனிதஉரிமை அபிவிருத்தி அமைப்பு, தேர்தல் கண்காணிப்பு வலையமைப்பு மற்றும் தேசிய தேர்தல் கண்காணிப்பு நிலையம் போன்ற கண்காணிப்பு நிறுவனங்களுக்காக வாக்கெடுப்பு நிலையத்திலிருந்து வெளியே கண்காணிப்பில் ஈடுபடவும் அனுமதி வழங்கப்பட்டது.

160. 2011 உள்ளூராட்சிச் சபைகளின் தேர்தலின்போது கண்காணிப்பு நிறுவனங்கள் மற்றும் கண்காணிப்பாளர்களுக்கு வாக்கெடுப்பு கண்காணிப்பு அலுவல்கள் தொடர்பில் வழிகாட்டு நெறிக் கோவையொன்றும் அறிமுகப்படுத்தப்பட்டது.

161. இக்கண்காணிப்பாளர்களிடம் பூரண கட்சி சார்பற்ற கண்காணிப்பொன்று ஒவ்வொரு வாக்கெடுப்பு நிலையத்தின் வாக்கெடுப்பும் சுதந்திரமானதும், நீதியானதுமானதுமாக நடைபெற்றதா இன்றேல், எவையேனும் முறைகேடுகள் இடம்பெற்றனவா என அறிக்கையொன்றைப்

பெற்றுக் கொள்வதே எதிர்பார்க்கப்பட்டது. வாக்கெடுப்பு நிலையமொன்றில் வாக்கெடுப்பை வறிதாக்க வேண்டுமா, இல்லையா என்பதைத் தீர்மானிக்கின்ற ஒரு சாட்சியாக இக்கண்காணிப்பு அறிக்கையும் கவனத்தில் கொள்ளப்பட்டது.

வாக்கெடுப்பு நிலைய முகவர்கள் மற்றும் தொடர்புடைய விடயங்கள்

162. குறித்த தினத்தில் மு.ப 7.00 மணிக்கு வாக்கெடுப்பு ஆரம்பமாகி பி.ப 4.00 மணி வரை தொடர்ச்சியாக நடைபெறல் வேண்டும். இக்கால எல்லைக்குள் உரிய உள்ளூராட்சி சபைகளுக்காகப் போட்டியிடுகின்ற அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களுக்காக வாக்கெடுப்பு நிலைய நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்கு அக்கட்சிகள் அல்லது குழுக்களினால் நியமிக்கப்படுகின்ற முகவர்கள் இருவரும் வாக்கெடுப்பு நிலையத்தில் தங்கியிருக்க முடியும். அந்த வாக்கெடுப்பு நிலைய முகவர்கள் வாக்கெடுப்பு ஆரம்பமாவதற்கு 30 நிமிடங்களுக்கு முன்னர் வாக்கெடுப்பு நிலையத்துக்கு வருகை தருமாறு அறிவூட்டப்பட்டனர். அதன் பிரகாரம் வாக்கெடுப்பு ஆரம்பமாவதற்கு முன்னர் வாக்குப் பெட்டிகள், வாக்குச் சீட்டுக்கள், வாக்காளர் இடாப்புக்கள் ஆகியவற்றைப் பரீட்சித்துப் பார்க்கக் கோரினால் அவ்வாறு பார்ப்பதற்கு இடமளிக்கப்படும் அதற்கு மேலதிகமாக எவரேனுமொரு முகவர் வாக்கெடுப்பு ஆரம்பமாவதற்கு முன்னர் வாக்குப் பெட்டிகள் பொறியிடப்படும் சந்தர்ப்பத்தில் தங்கள் கட்சியின் அல்லது குழுவின் ஸ்டிக்கரை வாக்குப்பெட்டியினுள்ளேயோ அவ்வாக்குப் பெட்டியின் மூடியை மூடிய பின்னர் ஸ்டிக்கருக்கு சேதம் ஏற்படாமல் பெட்டியைத் திறக்க முடியாத விதத்தில் வாக்குப் பெட்டியின் வெளியிலோ உள்ளேயோ ஒட்டுவதற்கு இடமளிக்கப்படும். அந்த ஸ்டிக்கரின் மாதிரியொன்று சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரிடம் கையளிக்கப்படுவதோடு, ஒவ்வொரு கட்சியினாலும்/ குழுவினாலும் வாக்கெடுப்பு நிலையத்தில் வைத்து கையளிக்கப்பட்ட ஸ்டிக்கரின் மாதிரியும் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர் தெரிவத்தாட்சி அலுவலருக்குக் கையளிக்கப்படல் வேண்டும்.

163. வாக்கெடுப்பு ஆரம்பிக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்ட காலப்பகுதிக்கிடையில் வாக்கெடுப்பு நிலைய நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்கும், ஆள்மாறாட்ட வாக்களிப்பிற்கு வருகின்றவர்களிருப்பின், அவர்களை அடையாளம் காண்பதற்கு வாக்கெடுப்பு நிலைய அலுவலர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவது வாக்கெடுப்பு நிலைய முகவர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றது. வாக்கெடுப்பு நிலைய முகவர்களைப் போன்றே வாக்கெடுப்பு நிலைய கண்காணிப்பாளர்களும் தமது வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்கெடுப்பு ஆரம்பிக்கப்பட்ட மற்றும் நிறைவு செய்யப்பட்ட காலப்பகுதிக்குள் வாக்கெடுப்பிற்குத் தடையேதும் ஏற்படும் விதத்தில் ஏதேனுமொரு நிகழ்வு ஏற்படின் அதுதொடர்பான விபரமான தகவல்கள் மொத்தமாக தேர்தல் நடைபெற்ற விதம் பற்றிய அறிக்கையொன்றை சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரூடாக தெரிவத்தாட்சி அலுவலருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

பாதுகாப்பு நடவடிக்கைகள்

164. வாக்கெடுப்பு நிலைய அலுவலர் குழாம் வாக்கெடுப்பிற்குரிய பொருட்கள், வாக்கெடுப்பு நிலையம் வேட்பாளர்கள் மற்றும் வாக்காளர்கள் உள்ளிட்ட வாக்கெடுப்பொன்றோடு தொடர்புடைய அனைத்துப் பிரிவுகளுக்கும் முழுமையான பாதுகாப்பு வழங்கும் முக்கிய பொறுப்பு பொலிஸ்மா அதிபர் உட்பட பொலிஸ் திணைக்களத்திற்குக் கையளிக்கப்பட்டுள்ளது. தேர்தல் சட்டத்தை வலுவாக்கம் செய்யும் பொறுப்பும் பொலிஸ் திணைக்களத்திற்கே கையளிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் தேர்தல் ஒழுங்கமைப்பின் போது தொடர்ச்சியாக தேர்தல்கள் ஆணையாளரால் பொலிஸ்மா அதிபருக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்படுகின்றன.

165. பதினேழாம் திருத்தத்தினால் திருத்தியமைக்கப்பட்ட அரசியலமைப்பின் 104(இ) ஆம் உறுப்புரைக்கமைய சுதந்திரமானதும், நீதியானதுமான தேர்தலொன்றை நடாத்துவதற்காக தேர்தல்கள் ஆணையாளரினால் வழங்கப்படுகின்ற அறிவுறுத்தல்களை நடைமுறைப்படுத்துவதற்கு பொலிஸ் திணைக்களம் கட்டுப்பட்டுள்ளது.

166. அதன் பிரகாரம் வேட்புமனுக் கையேற்பு வாக்குச்சீட்டு அச்சிடல் மற்றும் போக்குவரத்து, வாக்குச்சீட்டுக்களைக் களஞ்சியப்படுத்தி வைக்கின்ற இடம், அஞ்சல் வாக்கு விநியோகம், அஞ்சல் வாக்கு அடையாளமிடல், வாக்கெடுப்பு, வாக்கெண்ணல், பெறுபேறுகளை வெளியிடல் போன்ற அனைத்து சந்தர்ப்பங்களிலும் பொலிசாரினால் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படவேண்டியுள்ளது. அதற்கு மேலதிகமாக அரசியற் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களால் மேற்கொள்ளப்படுகின்ற தேர்தல் பிரச்சார நடவடிக்கைகள், அலுவலகங்களை அமைத்தல், கூட்டங்களை நடாத்துதல் போன்ற அனைத்து சந்தர்ப்பங்களிலும் அரசியல் பிரிவினர் மற்றும் பொது மக்கள் ஆகியோருக்கு பாதுகாப்பு வழங்க வேண்டிய பற்றிய பொறுப்பு பொலிஸ் மா அதிபர் உட்பட பொலிஸ் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டள்ளது. அதன் பிரகாரம் வாக்கெடுப்புக்கு முன்னர் வாக்கெடுப்புத்தினம் மற்றும் வாக்கெடுப்பிற்குப் பின்னர் என அனைத்து சந்தர்ப்பங்களிலும் மக்களுக்குப் பாதுகாப்பளித்தல் பொலிஸ் திணைக்களத்திற்கு கையளிக்கப்படுகின்ற மிகப்பெரிய பொறுப்பாகும்.

167. நீதியான மற்றும் சுதந்திரமான தேர்தல்களை நடாத்துவதை பாதிக்கத்தக்க ஏதேனும் செயலொன்றை அல்லது சம்பவமொன்றை தவிர்ப்பதற்கு அல்லது கட்டுப்படுத்துவதற்கு இராணுவத்தினரை ஈடுபடுத்துதல் தொடர்பில் தேர்தல் ஆணையாளர் சனாதிபதி அவர்களுக்கு பரிந்துரைகளைச் சமர்ப்பிப்பதற்கு முடியும்.

168. அரசியற் கட்சிகளின் செயலாளர்களுக்காக நடாத்தப்பட்ட ஆலோசனைக் குழுக் கூட்டத்திற்காக பொலிஸ் மா அதிபர் உட்பட சிரேட்ட பொலிஸ் அதிகாரிகளும் அழைக்கப்பட்டிருந்ததோடு, அவ்வாலோசனைக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரால்

மாவட்ட மட்டத்தில் மாவட்ட அரசியல்வாதிகள் அதிகாரமளிக்கப்பட்ட முகவர்கள், குழுத்தலைவர்கள் மற்றும் பிராந்திய பொலிஸ் அதிகாரிகள் ஆகியோருக்கு தெளிவூட்டப்படுவதால், பாதுகாப்பு நடவடிக்கை ஒழுங்கமைப்பை மேலும் பயனுறும் விதத்தில் நடைமுறைப்படுத்த முடிந்தது. அநேக சந்தர்ப்பங்களில் இந்த ஆலோசனைக் குழுக் கூட்டங்களில் சட்ட விரோத தேர்தல் பிரச்சார நடவடிக்கைகள் மற்றும் பிரச்சார கூட்டங்களுக்காக இடங்களை ஒதுக்கிக் கொள்ளும் சிக்கல்களை தீர்த்துக் கொள்வதற்கான சாத்தியம் கிடைத்தது.

169. ஒருசில வேட்பாளர்களுக்காக பொலிஸ் பாதுகாப்பு வழங்குவது அவசியமெனக் கட்சிச் செயலாளர்கள் அல்லது உரிய வேட்பாளர்கள் தேர்தல்கள் ஆணையாளருக்கு முன்வைக்கின்ற கோரிக்கை தொடர்பில் தேவையான சந்தர்ப்பங்களில் ஆராய்ந்து பார்த்து உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்காக பொலீஸ்மா அதிபருக்கு ஆற்றுப்படுத்தப்பட்டது. அதேபோன்று சில வாக்களிப்பு நிலையங்களுக்காக விஷேட பொலீஸ் பாதுகாப்பு வழங்குமாறு கட்சிச் செயலாளர்கள், அதிகாரம் பெற்ற முகவர்கள், குழுத் தலைவர்கள் மற்றும் வேட்பாளர்கள் முன்வைத்த கோரிக்கைகள் தொடர்பாக மாவட்ட தேர்தல் அலுவலர்களின் அவதானிப்புக்கள் பெற்றுக் கொள்ளப்பட்ட பின்னர், உரிய அறிவுறுத்தல்களோடு தேவையான நடவடிக்கைகளையெடுப்பதற்கு பொலீஸ்மா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இவ்வனைத்து கோரிக்கைகளுக்கும் அடிப்படையாக அமைந்தவை கடந்த தேர்தல்களின் போது பெற்றுக் கொண்ட அனுபவங்கள் மற்றும் ஏற்பட்ட வன்முறை சம்பவங்கள் என்பனவேயாகும்.

170. வாக்கெடுப்பு நிலையப் பாதுகாப்பில் பொலீஸ் சார்ஜன்ட் ஒருவர் அல்லது சிரேட்ட பொலீஸ் கான்ஸ்டபில் ஒருவர் மற்றும் பொலிஸ் கான்ஸ்டபில் ஒருவர் வீதம் அனைத்து வாக்கெடுப்பு நிலையங்களிலும் ஈடுபடுத்தப்படுவதற்கு பொலிஸ் மா அதிபர் நடவடிக்கையெடுத்ததோடு 5 அல்லது 4 வாக்கெடுப்பு நிலையங்களை உள்ளடக்கும் வகையில் நடமாடும் பாதுகாப்பு சேவைகளை வழங்குவதற்கும் ஒழுங்கு செய்யப்பட்டது. இந்நடமாடும் சேவைக்காக சிவில் பாதுகாப்பு படையணியின் இருவர் வீதமும் சேர்க்கப்பட்டனர்.

171. இத்தேர்தலோடு தொடர்புடைய தேர்தல்கள் செயலகம், மாவட்ட செயலகம் மற்றும் மாவட்ட இணைப்பு நிலையங்கள் என்பவற்றை ஒன்றிணைக்கத் தக்கவாறு வாக்கெடுப்பிற்கு முந்திய தினம் மற்றும் வாக்கெடுப்புத் தினத்தில் தேர்தல்கள் செயலகத்தில் விசேட வழிநடாத்தல் அலகொன்று செயற்படுத்தப்பட்டது. இவ்வழிநடாத்தல் அலகின் செயற்பாட்டிற்காக பொலீஸ் சிரேட்ட அலுவலர் குழுவொன்று சேவையில் ஈடுபடுத்தப்பட்டதோடு, ஏதேனும் ஒரு பிரதேசத்தில் நடைபெறுகின்ற குழப்பநிலை தொடர்பாக முறைப்பாடெதுவும் கிடைக்கப்பெற்றவுடன் அம்முறைப்பாடு தொடர்பான உண்மை நிலையை ஆய்ந்தறிந்து தேவையான நடவடிக்கைகள் வழிநடாத்தல் நிலையப்பொறுப்பு பொலிஸ் அலகு மூலம் மேற்கொள்ளப்பட்டதோடு, எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாக ஆணையாளருக்கு உடனடியாக அறிக்கையிடப்பட்டது. போட்டியிடுகின்ற அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகளிலிருந்தும் முகவரொருவர் வீதமும் வாக்கெடுப்பு கண்காணிப்பிற்காக அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு கண்காணிப்பு நிறுவனத்திலிருந்தும் ஒரு கண்காணிப்பாளர் வீதமும் இவ்வழிநடாத்தல் அலகைப் பிரதிநிதித்துவம் செய்ய அங்கீகாரம் வழங்கப்பட்டது. தீவின் அனைத்து வாக்கெடுப்புப் பிரதேசங்களும் அதன்மூலம் இணைப்புச் செய்யப்பட்டது. இவ்வழிநடாத்தல் அலகிற்கான முறைப்பாடுகளை மேற்கொள்வதற்காக பாவிக்கப்பட வேண்டிய தொலைநகல் இலக்கங்கள் பற்றி ஊடக நிறுவனங்கள் மற்றும் செய்தித்தாள்கள் மூலம் மக்களுக்கு அறிவூட்டப்பட்டது.

172. உள்ளூராட்சிச் சபைகள் தேர்தலின் மூன்றாம் கட்டத்தில் அதாவது 2011.10.08 ஆந் தேதி நடாத்தப்பட்ட வாக்கெடுப்பிற்கான வேட்புமனு தாக்கல் முடிவடைந்த தினத்திற்குப் பின்னரான 2011.08.28 ஆந் தேதியிலிருந்து வாக்கெடுப்பு நடந்து முடியும் வரையிலான காலஎல்லைக்குள் இந்த இணைப்பு அலகு செயலில் ஈடுபடுத்தப்பட்டது. வாக்கெடுப்புக் கட்டங்கள் மூன்றிற்கும் உரியவாறாக தேர்தல்கள் செயலகத்தில் செயற்பட்ட இணைப்பு அலகிற்கு வாக்கெடுப்புக்கு முந்திய தினம் மற்றும் வாக்கெடுப்புத் தினம் ஆகியவற்றில் கிடைத்த முறைப்பாடுகள் தொடர்பான குறிப்பொன்று இதில் உட்சேர்க்கப்பட்டுள்ளது. கிடைத்த முறைப்பாடுகள் பற்றிய சுருக்கமான குறிப்பொன்றும் உட்சேர்க்கப்பட்டுள்ளது.
(குறிப்பு 12)

VII ஆம் பிரிவு

வாக்காளர்கள் மற்றும் தேர்தலோடு தொடர்புடைய ஏனைய தரப்பினர்களை அறிவுறுத்துதல்

173. வாக்காளர்களுக்கு, தமது வாக்குகளின் மூலம் தத்தம் உள்ளூர் அதிகார சபை எல்லைப் பிரதேசத்திற்குப் பொருத்தமான ஒருவரை அங்கத்தவராகத் தெரிவு செய்து நியமனம் செய்துகொள்வதற்கான வாய்ப்பைப் பெற்றுக் கொடுப்பது தேர்தலொன்று நடாத்தப்படுவதன் முக்கிய நோக்கமாகும். இதன்போது வாக்காளர்களுக்கு தேர்தலொன்றின் நடவடிக்கை முறைகளைப் பற்றியும் அத்தகைய தேர்தலொன்றின்போது எழும் பிரச்சினைகள் பற்றியும் புரிந்துணர்வொன்றிருத்தல் அவசியமாகும். இவற்றுள் சில சட்டத்திற்குட்பட்ட விடயங்களாகவும் ஒருசில சட்டத்திற்குட்படாதவையாகவிருப்பினும், சட்டத்தினால் எழக்கூடிய சில நிலைமைகளை தீர்த்து வைக்கும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்படுகின்ற அறிவூட்டல்களாகும்.

174. சட்டமுறையான அறிவித்தல்கள் தேர்தல்கள் ஆணையாளர் அல்லது தேர்தல்கள் ஆணையாளரின் அறிவுறுத்தல்களுக்கமைய தெரிவத்தாட்சி அலுவலர்களினால் மேற்கொள்ளப்படுவதுடன், நியதிச் சட்டம் சாராத அறிவித்தல்கள் தேர்தல்கள் ஆணையாளர், தெரிவத்தாட்சி அலுவலர்கள் ஆகியோருக்கு மேலதிகமாக பொலீஸ் மா அதிபர் உள்ளிட்ட பொலீஸ் திணைக்களம், அரசியற் கட்சித் தலைவர்கள் மற்றும் வேட்பாளர்கள் ஆகியோரால் மேற்கொள்ளப்படுகின்றன.

175. இதற்கு மேலதிகமாக தேர்தல்கள் ஆணையாளரின் தலைமையில் பொலீஸ் மா அதிபரின் பங்களிப்புடன் தேர்தல்கள் செயலகத்தில் நடாத்தப்படும் ஆலோசனைக் குழுக் கூட்டங்களினூடாகவும், அரசியற் கட்சிகளின் செயலாளர்கள், சுயேச்சைக் குழுத் தலைவர்கள், வேட்பாளர்கள், கண்காணிப்பாளர்கள் ஆகியோர் மூலமாகவும் வாக்காளர்களை அறிவுறுத்தும் நடவடிக்கைகள் கணிசமானளவு மேற்கொள்ளப்படுகின்றனவென்பதைக் கருத்திற் கொள்ளல் வேண்டும். இவ்வாறான ஆலோசனைக் குழுக்களினால் எடுக்கப்படும் முடிவுகளும் தீர்மானங்களும் பிரதேச மட்டம் வரையில் சென்றடையும் விதத்தில் தெரிவத்தாட்சி அலுவலரின் தலைமையில் அதிகாரமளிக்கப்பட்ட முகவர்கள் மற்றும் குழுத் தலைவர்கள் ஆகியோருடன் நடாத்தப்படுகின்ற மாவட்ட மட்டத்திலான கலந்துரையாடல்களும் முக்கிய இடத்தை வகிக்கின்றன.

நியதிச் சட்ட அறிவித்தல்கள். பெயர்குறித்த நியமன அறிவித்தல்.

176. உள்ளூர் அதிகார சபைகள் தேர்தலொன்றின்போது வெளியிடப்பட வேண்டிய நியதிச் சட்ட அறிவித்தல்கள் பல உள்ளன. அவற்றுள் பெயர்குறித்த நியமன அறிவித்தலே முக்கியமான அறிவித்தலாகவுள்ளது. பெயர்குறித்த நியமன அறிவித்தலானது மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலரினால் வெளியிடப்படுதல் வேண்டும். இது ஒவ்வோர் உள்ளூர் அதிகார சபை நிறுவனம் சார்பாகவும் வெவ்வேறாகத் தயாரிக்கப்படுகின்ற அறிவித்தலொன்றாதலால் உள்ளூர் அதிகார சபையின் தெரிவத்தாட்சி அலுவலரினால் இவ்வறிவித்தல் வெளியிடப்படும். பெயர்குறித்த நியமன அறிவித்தலில் உள்ளூர் அதிகார சபையின் பெயர், பெயர்குறித்த நியமனப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் காலக்கெடு, பெயர்குறித்து நியமனம் செய்யப்பட வேண்டிய வேட்பாளர்களின் எண்ணிக்கை அத்துடன் அவ்வெண்ணிக்கையில் எத்தனை பேர் இளம் வேட்பாளர்களாக இருக்க வேண்டுமென்ற விபரமும் பெயர்குறித்த நியமனப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இடமும் அவை யாரால் கையேற்கப்படுமெனவும், சுயேச்சைக் குழுக்களாகப் போட்டியிடுவதாயின் வைப்புச் செய்ய வேண்டிய கட்டுப் பணத் தொகை, கட்டுப் பணம் கையேற்கப்படும் இறுதி நாள், நேரம் என்பவற்றுடன் பெயர்குறித்த நியமனப் படிவங்களை இலவசமாகத் தெரிவத்தாட்சி அலுவலர்களிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியுமெனவும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகளுகாக ஒதுக்கப்பட்டுள்ள சின்னங்கள் மற்றும் சுயேச்சைக் குழுக்களுக்கான சின்னங்கள், இனங்காண்பதற்கான இலக்கங்கள் என்பன விநியோகிக்கப்படும் திகதி, நேரம் மற்றும் இடம் போன்ற விடயங்களும் உள்ளடகள்கப்பட்டிருத்தல் வேண்டும்.

177. பெயர்குறித்த நியமன அறிவித்தலைத் தொடர்ந்து தேர்தல்கள் ஆணையாளர் ஒவ்வொரு நிருவாக மாவட்டத்தின் கீழும் தேர்தல் நடாத்தப்படவிருக்கும் உள்ளூர் அதிகார சபைகளின் பெயர்களைக் குறிப்பிட்டு ஒவ்வோர் உள்ளூர் அதிகார சபைக்குமாக தெரிவு செய்து நியமனம் செய்யப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை, பெயர்குறித்து நியமனம் செய்யப்பட வேண்டிய வேட்பாளர்களின் எண்ணிக்கையினை இளைஞர்கள், ஏனையோர் என வெவ்வேறாகவும் சுயேச்சைக் குழுவினால் வைப்பிலிடப்பட வேண்டிய கட்டுப் பணத் தொகை போன்ற விடயங்களை உள்ளடக்கிய பகிரங்க அறிவித்தலொன்றை நாடெங்கிலும் பிரபலமடைந்துள்ள ஒரு சில நாளாந்த புதினப் பத்திரிகைகளில் (சிங்களம், தமிழ், ஆங்கிலம்) மும்மொழிகளிலும் வெளியிடுதல் வேண்டும். அத்துடன் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 28(1ஆ) ஆம் பிரிவின் கீழ் ஒவ்வொரு நிருவாக மாவட்டத்தின் ஒவ்வோர் உள்ளூர் அதிகார சபைக்கும் பெயர்குறித்து நியமனம் செய்யப்பட வேண்டிய இளம் வேட்பாளர்களின் எண்ணிக்கையைக் காட்டும் அறிவித்தலொன்றையும் வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடுதல் வேண்டும்.

178. வாக்கெடுப்பின் 1 ஆம் கட்டத்திற்குரிய பெயர்குறித்த நியமன அறிவித்தல், மேற்கூறப்பட்ட பத்திரிகை அறிவித்தல் மற்றும் 28(1)(ஆ) ஆம் பிரிவின் கீழான வர்த்தமான அறிவித்தல் ஆகிய சட்டரீதியான அறிவித்தல்கள் மூன்றும் 2011.01.06 ஆந் திகதியன்று வெளியிடப்பட்டதுடன் வாக்கெடுப்பின் மூன்றாம் கட்டத்தின்போது இவ்வறிவித்தல் 2011 ஆகஸ்ட் மாதம் 08 ஆந் திகதியன்று வெளியிடப்பட்டது.

வாக்கெடுப்புப் பற்றிய அறிவித்தல்

179. பெயர்குறித்த நியமன அறிவித்தலின் பின்னர்

வெளியிடப்பட வேண்டிய சட்டரீதியான அறிவித்தலானது வாக்கெடுப்பு பற்றிய அறிவித்தலாகும். இவ்வறிவித்தல் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 38(1) ஆம் பிரிவின் கீழ் தெரிவத்தாட்சி அலுவலரினால் வெளியிடப்பட வேண்டிய அறிவித்தலொன்றாகும்.

180. மாவட்டத்தின் ஒவ்வோர் உள்ளூர் அதிகார சபைக்காகவும் வாக்கெடுப்பு நடாத்தப்படும் நாள், நேரம், இடம் (வாக்கெடுப்பு நிலையங்களின் நிரல்), தேர்தலில் போட்டியிடும் கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும், அந்தக் கட்சிகளுக்கு, குழுக்களுக்கு பிரித்தொதுக்கிக் கொடுக்கப்பட்டுள்ள சின்னங்கள், சிங்கள அகரவரிசைப்படி வேட்பாளர்களின் பெயர்கள் நிரற்படுத்தப்பட்டதன் பின்னர் ஒவ்வொரு வேட்பாளருக்கும் ஒதுக்கிக் கொடுக்கப்பட்டுள்ள இலக்கமும் வேட்பாளரின் பெயரும் இலக்கங்களின் தொடர் வரிசைக்கிணங்க இவ்வாக்கெடுப்பு அறிவித்தலில் உட்சேர்க்கப்படுதல் வேண்டும். வாக்கெடுப்பு அறிவித்தல் ஒவ்வொரு நிருவாக மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலரினாலும் தயாரிக்கப்பட்டு தேர்தல்கள் ஆணையாளருக்குக் கையளிக்கப்பட்டதன் பின்னர், மீண்டும் பரீட்சிக்கப்பட்டு பிழையற்றதன்மை உறுதிப்படுத்திக்கொள்ளப்பட்டதன் பின்னர் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்படுவதற்காக அரசாங்க அழுத்தகருக்குக் கையளிக்கப்படும்.

181. வாக்கெடுப்பு அறிவித்தலில் உட்சேர்க்கப்பட வேண்டியுள்ள அதிக எண்ணிக்கையான தகவல்கள் காரணமாகவும் இவற்றை தயாரிப்பதற்கெனத் குறுகிய கால எல்லை காரணமாகவும் வாக்கெடுப்புத் தினத்திற்கு முன்னர் இவ்வறிவித்தலுக்கிணங்க தகவல்களை அறிந்துகொள்ள வாக்காளர்களுக்கு அவகாசம் கிட்டுவதில்லை. இவ்வறிவித்தலில் வாக்கெடுப்பு தொடர்பான பெருமளவு தகவல்கள் உட்சேர்க்கப்படுவதனால் பின்னாய்வுகளுக்கான மிக முக்கியமான ஆவணமொன்றாக இதைக் கணிக்க முடியும். ஆகவே வாக்கெடுப்பு அறிவித்தலில் காணப்படும் விடயங்கள் தொடர்பாக பொதுமக்களை அறிவூட்டும் மாற்று வழியொன்றாக உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளுடன் ஒரு வீட்டிற்கு ஒன்று என்ற அடிப்படையில் வீடுகளுக்கான அறிவித்தல்களை அனுப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள்

182. உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 39(1) ஆம் பிரிவிற்கிணங்க வாக்கெடுப்புப் பிரதேசமொன்றின் தேருநர் இடாப்பில் பெயர் காணப்படுகின்ற அனைத்து வாக்காளர்களுக்கும் வாக்கெடுப்புத் தினத்திற்கு 05 நாட்களுக்கு முன்னர் கிடைக்கத்தக்க வகையில் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டையொன்று அஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். இவ்வுத்தியோகபூர்வ வாக்காளர் அட்டையில் தேருநரின் பெயர், தொடர் இலக்கம், உரிய வாக்கெடுப்பு நிலையம், வாக்கெடுப்புத் திகதி மற்றும் நேரம் என்பன கட்டாயமாக உட்சேர்க்கப்பட்டிருத்தல் வேண்டும். உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை தொடர்பான தகவல்கள் இவ்வறிக்கையின் IV ஆம் பகுதியில் உட்சேர்க்கப்பட்டுள்ளது.

அஞ்சல் வாக்காளர்களுக்கான அறிவித்தல்

183. உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 39ஆ(6) ஆம் உப பிரிவின் கீழ் அஞ்சல் வாக்காளரொருவராகக் கணிக்கப்படுவதற்கான கோரிக்கையொன்று தொடர்பான தெரிவத்தாட்சி அலுவலரின் முடிவை எழுத்துமூலமாக அறிவித்தல் வேண்டும். இவ்வாவணம் தெரிவத்தாட்சி அலுவலரினால் வாக்காளருக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டிய சட்டமுறையான அறிவித்தலொன்றாகும். அஞ்சல் வாக்கு விண்ணப்பப்பத்திரம் பரீட்சிக்கப்பட்டதன் பின்னர் ஏற்றுக்கொள்ளப்பட்டதென்றோ அல்லது ஏற்றுக்கொள்ளப்படவில்லையென்றோ அவ்வாவணத்தின் மூலமாக அறிவித்தல் வேண்டும். விண்ணப்பப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படவில்லையாயின் அதற்கான காரணத்துடன் உடனடியாக குறிப்பிட்ட அஞ்சல் வாக்காளருக்கு முடிவை அறிவிப்பதன் மூலம் குறைபாடுகளைப் பூர்த்தி செய்து வேறொரு விண்ணப்பப்பத்திரத்தை சமர்ப்பிக்க விண்ணப்பதாரிக்கு வாய்ப்புக் கிடைக்கும். அஞ்சல் வாக்கு விண்ணப்பப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டமை தொடர்பாகவும் அத்தாட்சிப்படுத்தும் அலுவலர் மூலமாக அஞ்சல் வாக்காளர்களுக்கு அறிவிக்கப்படுவதுடன், போலியான அஞ்சல் வாக்கு விண்ணப்பப்பத்திரங்களைக் கண்டறிவதற்காக அஞ்சல் வாக்கு விண்ணப்பப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டதென அறிவிக்கும் கடிதம் குறிப்பிட்ட அஞ்சல் வாக்காளரின் சொந்த முகவரிக்கும் அனுப்பி வைக்கப்படும். ஆயினும் அஞ்சல் வாக்காளரொருவர் அல்லாத வேறொருவரின் பெயரில் அஞ்சல் வாக்கு விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதென அறிவித்தனுப்பப்படும் கடிதமொன்று கிடைக்கப்பெறுமாயின் உடனடியாக அது தொடர்பாக மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலருக்கு அறிவிப்பதன் மூலம் மாத்திரமே குறிப்பிட்ட வாக்காளருக்கு வாக்களிக்கும் சந்தர்ப்பம் அற்றுப் போவதைத் தடுத்துகொள்ள முடியும்.

அஞ்சல் வாக்குச் சீட்டுக்கள் விநியோகிக்கப்படுவதை அறிவித்தல்

184. உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 9 ஆம் அட்டவணையின் 10(1) ஆம் ஒழுங்கு விதிக்கமைய தெரிவத்தாட்சி அலுவலரினால் தேர்தலொன்றின் பெயர்குறித்த நியமனங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் காலக்கெடுவின் இறுதி நாளின் பின்னரான 10 நாட்கள் முடிவடையமுன்னர் அஞ்சல் வாக்குச் சீட்டுக்கள் விநியோகிக்கப்படும் தினத்தையும் நேரத்தையும் இடத்தையும் அச்சந்தர்ப்பத்தில் சமுகமளித்திருக்கக்கூடிய முகவர்களின் எண்ணிக்கையையும் குறிப்பிட்டு அதிகாரமளிக்கப்பட்ட முகவர்களுக்கும் குழுத் தலைவர்களுக்கும் எழுத்துமூலமாக அறிவித்தல் வேண்டும். இக்கடிதத்துடன் கட்டளைச் சட்டத்தின் 9 ஆம் அட்டவணையின் 8 ஆம் 9 ஆம் ஒழுங்குவிதிகளின் பிரித்தெடுப்புகையொன்றும் அனுப்பி வைக்கப்படும்.

வாக்கெண்ணல் தொடர்பான அறிவித்தல்

185. உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள்

கட்டளைச் சட்டத்தின் 61(1) ஆம் உப பிரிவின்படி தெரிவத்தாட்சி அலுவலர், ஒவ்வோர் உள்ளூர் அதிகார சபையினதும் வாக்கெண்ணல் ஆரம்பமாகும் நேரம் வாக்கெண்ணும் நிலையங்கள் அத்துடன் ஒவ்வொரு நிலையத்திற்கும் பிரித்தொதுக்கப்பட்டுள்ள வாக்கெடுப்பு நிலையங்கள் என்பன தொடர்பாகப் போட்டியிடும் ஒவ்வொரு கட்சியின் செயலாளர், அதிகாரமளிக்கப்பட்ட முகவர், சுயேச்சைக் குழுவொன்றாயின் குழுத் தலைவர் ஆகியோருக்கு எழுத்துமூலமாக அறிவித்தல் வேண்டும்.

186. அத்துடன் தெரிவத்தாட்சி அலுவலர் கட்டளைச் சட்டத்தின் 9 ஆம் அட்டவணையின் 19 ஆம் ஒழுங்குவிதிக்கமைய அஞ்சல் வாக்குச் சீட்டுக்கள் எண்ணப்படும் தினத்தையும் நேரத்தையும் கட்சிச் செயலாளருக்கும் அதிகாரமளிக்கப்பட்ட முகவருக்கும் அல்லது குழுத் தலைவருக்கும் எழுத்துமூலமாக அறிவித்தல் வேண்டும்.

பெறுபேறுகளை வெளியிடல் தொடர்பான அறிவித்தல்

187. உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 ஆம் பிரிவின் கீழ் தெரிவத்தாட்சி அலுவலர் இத்தேர்தலில் போட்டியிடுகின்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளருக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட முகவருக்கு அல்லது சுயேச்சைக் குழுவொன்றாயின் குழுத் தலைவருக்கு பெறுபேறுகள் வெளியிடப்படும் நேரம் இடம் என்பவற்றை அறிவிக்கும் எழுத்துமூலமான அறிவித்தலைக் கையளித்தல் வேண்டும்.

பெறுபேறுகளை வர்த்தமானிப் பத்திரிகையில் வெளியிடுதல்

188. வாக்கெண்ணல் பெறுபேறுகளை வெளியிடல் முடிவுற்றதும் தெரிவத்தாட்சி அலுவலர் ஒவ்வொரு உள்ளூர் அதிகார சபை சார்பாகவும் ஆகக்கூடிய வாக்குகளைப் பெற்ற கட்சியின் செயலாளருக்கும், சுயேச்சைக் குழுத் தலைவருக்கும் உறுப்புரிமையைப் பெற்றுக்கொண்ட ஒவ்வொரு வேட்பாளரினாலும் பெற்றுக்கொள்ளப்பட்ட விருப்பு வாக்குகளின் எண்ணிக்கையை அறிவிக்க வேண்டுமென்பதுடன், குறிப்பிட்ட சபைக்கு மேயராக, பிரதி மேயராக/ தவிசாளராக, துணைத் தவிசாளராக எவ்வுறுப்பினரைத் தேர்ந்தெடுத்தல் வேண்டுமென உசாவுதல் வேண்டும். இதற்கான முடிவை அறிவிப்பதற்கு சுமார் ஒரு வார கால அவகாசம் வழங்கப்படுதல் வேண்டும்.

189. குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் இப்பெயர்ப்பட்டியல்கள் கிடைக்கப்பெறுமாயின் 66(1) ஆம் உப பிரிவின் கீழ் மாநகர மேயராக, பிரதி மாநகர மேயராக/ தவிசாளராக, துணைத் தவிசாளராக மற்றும் உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்ட வேட்பாளரள்களின் பெயர்களடங்கிய அறிவித்தலொன்று தெரிவத்தாட்சி அலுவலரினால் வெளியிடப்படும். இப்பெறுபேறுகள் வாக்கெடுப்பு அலுவலரினால் ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டதன் பின்னர், 66(2) ஆம் உபபிரிவின் கீழான அறிவித்தல் தேர்தல்கள் ஆணையாளரினால் வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்படும். குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் மாநகர மேயராக, பிரதி மாநகர மேயராக/ தவிசாளராக, துணைத் தவிசாளராக நியமனம் செய்யப்பட வேண்டியவர்களின் பெயர்கள் அறிவிக்கப்படவில்லையாயின், பெற்றுக் கொள்ளப்பட்ட விருப்பு வாக்குகளின் அடிப்படையில் மாநகர மேயர், பிரதி மாநகர மேயர்/ தவிசாளர், துணை தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டதாக வெளியிடப்படும்.

நியதிச் சட்டம் சாராத அறிவித்தல்கள் வீடுகளுக்கான அறிவித்தல்

190. விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் கீழ் நடாத்தப்படுகின்ற தேர்தல்களின்போது உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளோடு ஒரு வீட்டிற்கு ஒன்றென்ற விதத்தில் விநியோகிக்கப்படுகின்ற வீடுகளுக்கான அறிவித்தலானது நியதிச்சட்டம் சாராத மிக முக்கியமான ஓர் அறிவித்தலாகும்.

191. வாக்காளர் தான் வாக்களிக்கும் கட்சியைத் தேர்ந்தெடுத்துக் கொள்வதற்கும், வேட்பாளர் இலக்கங்கள் அக்கட்சிக்கு உரியனவாதலால் முன்கூட்டியே தனது விருப்பினை அளிக்கும் வேட்பாளரின் அல்லது வேட்பாளர்களின் இலக்கங்கள் எவையென ஊகித்துக்கொள்வதற்கும் வீடுகளுக்கான இவ்வறிவித்தலைப் பயன்படுத்த முடியும்.

192. இது தொடர்பாக வாக்கெடுப்பு நிலையத்தில் பார்வைக்கு வைக்கப்படும் 45(1)(ஆ) ஆம் உப பிரிவின் கீழான அறிவித்தலிலும் 38(1) ஆம் பிரிவின் கீழான வர்த்தமான அறிவித்தலிலும் இத்தகவல்கள் காணப்படுகின்ற போதிலும் சாதாரண வாக்காளர்களுக்கு இவ்வாவணங்களின் மூலம் தகவல்களை அறிந்து கொள்வது சிரமமாதலால் வீடுகளுக்கான அறிவித்தல் நியதிச் சட்டம் சாராத ஒன்றான போதிலும் மிக முக்கியமான ஓர் ஆவணமென குறிப்பிட முடியும்.

ஊடக அறிவித்தல்கள்

193. இவ்வறிவித்தல் நேரடியாக சட்டத்தால் விதிக்கப்படாததொன்றாயினும் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளைச் செயல்வலுப்படுத்தும் போது வாக்காளர்கள் கட்டாயமாக அறிந்திருத்தல் வேண்டுமாதலால் ஊடக அறிவித்தல்களூடாகவும் பத்திரிகை அறிவித்தல்களூடாகவும் இவ்வறிவித்தல்கள் செய்யப்படுகின்றன. இவற்றின்மூலம் தேர்தலோடு தொடர்புடைய சில முக்கியமான கட்டளைகளின்பால் வாக்காளர்களின் கவனம் ஈர்க்கப்படுவதற்கும் ஒருசில வசதிகளைப் பயன்படுத்துமாறு அறிவூட்டப்படுவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

194. பெயர்குறித்த நியமன அறிவித்தல் வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து தேர்தல்கள் ஆணையாளர் அஞ்சல் மூல வாக்களிப்பு வசதிகள் தொடர்பான ஊடக அறிவித்தல்கள் மூலமும் அத்தியாவசிய சேவைகளை வழங்குகின்றவையும் தேர்தல் கடமைகள் பொறுப்பளிக்கப்பட்டுள்ளவையுமான அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களுக்கு அனுப்பிவைக்கப்படும் சுற்றறிக்கையொன்றின் மூலமும் அஞ்சல் மூல வாக்களிப்பு வசதிகளைப் பற்றி அறிவூட்டுவார்.

195. அஞ்சல் மூல வாக்களிப்பு வசதிகள் தொடர்பாக

வெளியிடப்பட்ட இரண்டாவது ஊடக அறிவித்தல் மூலம் அஞ்சல் வாக்குகளுக்கான விண்ணப்பப்பத்திரங்கள் கையேற்கப்படும் இறுதித் திகதி தொடர்பாகவும் அஞ்சல் வாக்கு விண்ணப்பப்பத்திரங்களைப் பூர்த்தி செய்து அத்தாட்சிப்படுத்தும் அலுவலர் மூலமாக தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு எவ்வாறு அனுப்பப்பட வேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டது. அத்துடன், அஞ்சல் வாக்குகளுக்கான விண்ணப்பப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் காலஅவகாசம் நீடிக்கப்பட்டமை, அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களுக்கான விசேட அறிவுறுத்தல்கள் என்பனவும் இதன் மூலம் அறிவிக்கப்பட்டன.
(பின்னிணைப்பு 23)

196. சட்டத்தில் குறிப்பிடப்படாத மற்றைய முக்கிய ஊடக அறிவித்தலானது வாக்கெடுப்பு நிலையத்தில் ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதன் தேவைப்பாடு தொடர்பான வாக்காளர்களுக்கான விசேட அறிவித்தலாகும். இது தொடர்பான சுவரொட்டி அறிவித்தலொன்றின் மூலம் அனைத்து கிராம அலுவலர் அதிகார எல்லைப் பிரதேசங்களிலும் பரந்தளவிலான பிரச்சாரங்களை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன், 15 ஆம் இலக்க ஊடக அறிவித்தல் மூலம் இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் மூலமாக வாக்காளர்கள் அறிவுறுத்தப்பட்டனர்.
(பின்னிணைப்பு 32)

197. 2004 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க தேர்தல்கள் விசேட ஏற்பாடுகள் சட்டத்திற்கமைய வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்குச் சீட்டொன்றைப் பெற்றுக்கொள்வதற்காக வாக்காளர் வாக்கெடுப்பு நிலைய அலுவலர்களுக்கு தனது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவது கட்டாயமெனவும் வாக்கெடுப்பு நிலையத்தில் ஏற்றுக்கொள்ளப்படும் அடையாள அட்டைகள் எவையெனவும் அதன் மூலம் அறிவுறுத்தப்பட்டது.

198. பெயர்குறித்த நியமனமப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும்போது 28 ஆம் பிரிவிற்கிணங்க கையளிக்கப்படாததன் காரணமாக 31 ஆம் பிரிவின் கீழ் 452 பெயர்குறித்த நியமனப்பத்திரங்கள் நிராகரிக்கப்பட்டதுடன், அவற்றில் 75 நியமனப்பத்திரங்கள் சார்பாக நீதிமன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமையால் அம்மனுக்களுக்கான தீர்ப்புக்கள் வழங்குவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக 65 உள்ளூர் அதிகார சபைகளுக்கான தேர்தல்களை ஒத்திவைக்க வேண்டியேற்பட்டது. இதுதொடர்பாக பொதுமக்களை அறிவுறுத்துவதற்காக 16 ஆம் இலக்க ஊடக அறிவித்தலும் பத்திரிகை அறிவித்தல்களும் வெளியிடப்பட்டன. அத்துடன் வாக்கெடுப்பு பிற்போடப்பட்ட உள்ளூர் அதிகார சபைகளுக்குரிய அஞ்சல் வாக்குச் சீட்டுக்கள் விநியோகிக்கப்பட மாட்டாதென அறிவிப்பதற்காக 18 ஆம் இலக்க ஊடக அறிவித்தல் வெளியிடப்பட்டது
(பின்னிணைப்பு 35,36)

199. 19 ஆம் இலக்க ஊடக அறிவித்தலின் மூலம் அஞ்சல் வாக்குச் சீட்டுக்கள் அடையாளமிடும் நாட்கள் தொடர்பாக அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் மற்றும் அஞ்சல் வாக்குகளை அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்கள் ஆகியோர் அறிவுறுத்தப்பட்டனர். தேர்தலோடு தொடர்புடைய தவறான செயல்கள் தொடர்பாக ஊடக அறிவித்தல்கள் மூலம் அறிவுறுத்தப்பட வேண்டியிருந்ததுடன், அவற்றுள் ஒருசிலவற்றை வாக்கெடுப்பு நிலையங்களில் காட்சிப்படுத்தி வைக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. பெயர்குறித்த நியமனப்பத்திரங்கள் நிராகரிக்கப்பட்ட ஒருசில கட்சிகளின்/ குழுக்களின் வேட்பாளர்கள், அவ்வுள்ளூர் அதிகார சபைத் தேர்தலில் போட்டியிடும் வேறொரு கட்சியின் அல்லது குழுவின் வேட்பாளர்களுக்குப் பதிலாக தமது பெயரை மாற்றீடு செய்து பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபடுவதைக் காணக்கூடியதாகவிருந்ததன் காரணமாக வேட்பாளர்களையும் அனைத்து வாக்காளர்களையும் அறிவுறுத்துவதற்கான விசேட அறிவித்தலொன்றும் வெளியிடப்பட்டது
(பின்னிணைப்பு 37,38,39,40)

200. இதற்கு மேலதிகமாக உடற்றகுதியீனமொன்றிற்கானவர்களுக்கு போக்குவரத்து வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்காகவும், அஞ்சல் வாக்குகளுக்கு உரித்தற்ற தனியார் துறையைச் சேர்ந்தவர்கள் வாக்களிக்கச் செல்வதற்காக விடுமுறை பெற்றுக்கொள்வது தொடர்பாகவும், உடல் வலிமையிழப்புக்குட்பட்ட வாக்காளரொருவர் வாக்கை அடையாளமிடுவதற்காக உதவியாளரொருவரை அழைத்துச் செல்வதற்கு தேவையான சட்ட ஏற்பாடுகள் தொடர்பாகவும் பத்திரிகை அறிவித்தல்களும் ஊடக அறிவித்தல்களும் மூன்று கட்ட தேர்தல்களின்போதும் வெவ்வேறாக வெளியிடப்பட்டு வாக்காளர்கள் அறிவுறுத்தப்பட்டனர். வாக்குச் சீட்டுக்களை அடையாளமிடும்போது வாக்குகளையும் விருப்புகளையும் குழப்பமின்றி சரியாக அடையாளமிடுவது எவ்வாறென வெளியிடப்பட்ட அறிவித்தலானது, புதினப்பத்திரிகை மூலம் பொதுமக்கள் அறிவுறுத்தப்பட்ட முக்கியமான அறிவித்தலொன்றாகக் கருத முடியும். விகிதாசார தேர்தல் முறையின் கீழ் இதுவரையில் சுமார் 23 வருடங்களாக வாக்களித்து வாக்குகளையும் விருப்பு வாக்குகளையும் அடையாளமிடுவது தொடர்பாக வாக்காளர்கள் அறிந்து வைத்துள்ளனராதலால் மீண்டும் நினைவுபடுத்தும் நோக்கில் மூன்று கட்ட தேர்தல்களின்போதும் வாக்குகளையும் விருப்புகளையும் அடையாளமிடுவது தொடர்பான சுருக்கமுறையான விளக்கம் எனும் தலைப்பின் கீழ் வாக்குச் சீட்டின் மாதிரியொன்றும் வாக்களிக்கும்போதும் விருப்புகளை அளிக்கும்போதும் எவ்வாறு புள்ளடியிட (X) வேண்டுமென அறிவுறுத்தி பத்திரிகை அறிவித்தல்கள் வெளியிடப்பட்டன
(பின்னிணைப்பு 41,42).

ஏனைய அறிவித்தல்கள்

201. இவ்வாறான அறிவித்தல்களுக்கு மேலதிகமாகத் தத்தமது வாக்குகளை அளிப்பதற்காக நேரகாலத்துடன் வாக்கெடுப்பு நிலையங்களுக்குச் செல்லுமாறும், அவ்வாறு செல்லும்போது செல்லுபடியான அடையாள அட்டையொன்றை எடுத்துச் செல்வது கட்டாயமெனவும், செல்லுபடியான அடையாள அட்டைகளாகத் தேர்தல்கள் திணைக்களத்தினால் ஏற்றுக்கொள்ளப்படும் அடையாள அட்டைகள் எவையெனவும், உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டையை எடுத்துச் செல்வது கட்டாயமில்லையாயினும் இதை எடுத்துச் செல்வதன் மூலம் எளிதில் வாக்காளரின் பெயரை தேருநர் இடாப்பிலிருந்து

தேடிக்கொள்வதற்கு வாக்கெடுப்பு நிலைய அலுவலர்களுக்கு உதவியாகவிருக்குமென்றும், வாக்களித்ததன் பின்னர் வாக்கெடுப்பு நிலைய வளவிற்குள் தரித்திராது வெளியேறி அமைதியைப் பேண ஒத்துழைப்பு வழங்குமாறும் மூன்று கட்ட தேர்தல்களின்போதும் தேர்தல்கள் ஆணையாளரினால் தொலைக்காட்சி மற்றும் வானொலி ஊடகங்கள் மூலம் வாக்காளர்களிடம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

202. வாக்கெடுப்புத் தினத்தன்று எதைச் செய்ய வேண்டும் எதைச் செய்யக் கூடாது என்பது தொடர்பான விசேட அறிவுறுத்தல்களை வழங்குவதன் மூலம் பொலிஸ் திணைக்களமும் வாக்காளர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கியது. பத்திரிகை அறிவித்தல்கள் மூலமும் ஆலோசனைக் குழுக் கூட்டங்களின்போது கட்சிச் செயலாளர்கள், அதிகாரமளிக்கப்பட்ட முகவர்கள், சுயேச்சைக் குழுக்களின் தலைவர்கள் ஆகியோருக்கு சட்ட ஏற்பாடுகளை விளக்குவதன் மூலமும் இச்செய்திகள் மக்கள் மத்தியில் பரப்பப்பட்டன. கட்சிச் செயலாளர்களுக்கான இவ்வாலோசனைக் குழுக் கூட்டங்கள் தேர்தல்கள் செயலகத்திலும், அதிகாரமளிக்கப்பட்ட முகவர்கள் மற்றும் குழுத் தலைவர்களுக்கான கூட்டங்கள் மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களின் அலுவலகங்களிலும் நடாத்தப்பட்டன. இக்கூட்டங்களில் சிரேட்ட பொலிஸ் அலுவலர் குழுவொன்றும் கட்டாயமாகப் பங்குபற்றியது.

203. குறிப்பாக தேர்தலொன்றின் போது மிக முக்கியமான தொடர்பாடல் வழிமுறையொன்றாக போட்டியிடும் அரசியற் கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் ஊடாகக் கட்சிச் செயலாளர்கள், குழுத் தலைவர்கள் மற்றும் வேட்பாளர்களினால் மேற்கொள்ளப்படுகின்ற பிரச்சார நடவடிக்கையைக் கருத முடியும். பிரச்சாரக் கூட்டங்கள் இதன்போது முக்கிய பங்களிப்பை வகிக்கின்றன. வாக்குகளையும் விருப்புகளையும் இரந்து கேட்கும்போது, வாக்குகளையும் விருப்புகளையும் எவ்வாறு அடையாளமிட வேண்டுமெனவும், வாக்கெடுப்பு நிலையத்திற்கு எதை எடுத்துச் செல்ல வேண்டுமெனவும், காலையில் நேரகாலத்துடன் வாக்கெடுப்பு நிலையத்திற்குச் செல்வதன் முக்கியத்துவம் பற்றியும் வாக்காளர்களுக்கு தத்தம் வீடுகளில் வைத்தே விளக்கமளிக்கப்படுகின்றது.

204. இதற்கு மேலதிகமாக கண்காணிப்பு நிறுவனங்களினாலும் வாக்காளர்களை அறிவுறுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஆயினும் கண்காணிப்பு நிறுவனங்கள் இதன்போது பக்கச்சார்பற்ற தன்மையைக் கடைப்பிடித்தல் வேண்டும். இத்தேர்தலின்போது பெபரல் அமைப்பு தேர்தல்கள் ஆணையாளரின் இணக்கப்பாட்டுடன் வாக்களிப்பதற்கு செல்லும்போது செல்லுபடியான ஆளடையாள ஆவணமொன்றை எடுத்துச் செல்வதன் தேவைப்பாடு தொடர்பாக அறிவுறுத்தும் சுவரொட்டிகள் மூலம் நாடெங்கிலும் பரந்தளவிலான பிரச்சாரங்களை மேற்கொண்டது. மேலும் இவ்வமைப்புக்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில், சந்தர்ப்பத்திற்கேற்றவாறு ஊடகங்கள் மூலமாகவும் வாக்காளர்களை அறிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தன.

VIII ஆம் பிரிவு

அரசியற் கட்சிகளின் செயலாளர்களையும் அதிகாரமளிக்கப்பட்ட முகவர்களையும் குழுத் தவைலவர்களையும் மற்றும் வேட்பாளர்களையும் அறிவுறுத்துதல்

கட்சிச் செயலாளர்களுடனான கலந்துரையாடல்கள் (ஆலோசனைக் குழுக் கூட்டங்கள்)

205. தேர்தலொன்றின்போது போட்டியிடுகின்ற அரசியற் கட்சிகளின் செயலாளர்கள், வேட்பாளர்கள், பொலீஸ் அலுவலர்கள் மற்றும் அரச அலுவலர்கள் மத்தியில் நல்ல முறையிலான தொடர்பைப் பேணுவருவதற்கு இவ்வாலோசனைக் குழுக் கூட்டங்கள் முக்கிய இடத்தை வகுத்தமையை ஈண்டு குறிப்பிட்டாதல் வேண்டும். ஆலோசனைக் குழுக்கள், 1988 ஆம் ஆண்டில் நாட்டில் நிலவிய அமைதியற்ற காலப்பகுதியில் இடம்பெற்ற தேர்தல் சமயத்தில் ஆரம்பமானபோதிலும், அதன் பின்னரான அனைத்து தேர்தல்களின்போதும் இவ்வாலோசனைக் குழுக் கூட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

206. விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறையின் கீழ் நடாத்தப்படுகின்ற அனைத்து தேர்தல்களின்போதும் அரசியற் கட்சிகளின் செயற்பாடுகள் பெரும்பாலும் ஒரே மாதிரியாகவிருப்பினும், ஒரு தேர்தலின்போது கிடைக்கும் அனுபவங்கள் அடுத்துவரும் தேர்தலின் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்குப் போதுமானதாக அமைவதில்லை. ஆகவே ஒவ்வொரு தேர்தலின்போதும் அது தொடர்பான சட்ட நிலைமைகளும் சட்டரீதியான வகையில் தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதன் தேவைப்பாடுகளும் எடுத்துக்காட்டப்பட்டன. அரசியற் கட்சிகள் வேட்பாளர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்ற ஒத்துழைப்புக்களை மீள்பரிசீலனை செய்தலும் இவ்வாலோசனைக் குழுக் கூட்டங்களூடாக எதிர்பார்க்கப்பட்டன.

207. தேர்தல்கள் ஆணையாளரின் தலைமையில் கட்சிச் செயலாளர்கள் மற்றும் பொலிஸ் மா அதிபர் உள்ளிட்ட சிரேட்ட அலுவலர்களுடன் நடாத்தப்பட்ட இவ்வாலோசனைக் குழுக் கூட்டத்தின்போது எடுக்கப்படும் முடிவுகளையும் தீர்மானங்களையும் மாவட்ட மட்ட அதிகாரமளிக்கப்பட்ட முகவர்கள், சுயேச்சைக் குழுத் தலைவர்கள் மற்றும் வேட்பாளர்கள் ஆகியோருடன் கலந்துரையாடுமாறு மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

208. இவ்வாலோசனைக் குழுக் கூட்டங்கள் தேர்தல்கள் ஆணையாளர், பொலிஸ் மா அதிபர் மற்றும் கட்சிச் செயலாளர்கள், வேட்பாளர்கள் ஆகியோருக்கிடையில் பரஸ்பர தொடர்புகளுக்கான சந்தர்ப்பத்தையும், முக்கியமான பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடுவதற்கான ஒரு களமாகவும் சட்ட மற்றும் நடைமுறை செயன்முறைகளை தெளிவுபடுத்துகின்ற இடமாகவும் செயற்பட்டன. இதன் காரணமாக தேர்தல்களுக்கான ஒழுங்கமைப்புக்களின்போது செயற்பாட்டளவில் மிக முக்கியமான பங்களிப்புக்களை இதன் மூலம் பெற்றுக்கொள்ளக்கூடியனதாகவிருந்தது. அடிக்கடி இக்குழுக் கூட்டங்களில் செயலாளர்கள் பங்குபற்றுவதில் சிரமங்கள் ஏற்படக்கூடுமாதலால் அவர்களை பிரதிநிதித்துவப்படுத்துவதற்காகவும் அவர்களுடன் பங்குபற்றுவதற்காகவும் அந்தந்த கட்சியின் நிலையியல் முகவர்களை பெயர்குறிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டதுடன், வாக்கெடுப்பின் மூன்றாம் கட்டத்தின்போது அந்நிலையியல் முகவர்களின் குழு அடிக்கடி ஒன்றுகூடியது.

209. பொதுவாக ஆலோசனைக் குழுக் கூட்டங்களின்போது தேர்தல் சட்டங்களையும் கடந்தகால தேர்தல்களின்போது எடுக்கப்பட்ட முடிவுகள், தீர்மானங்களையும் மீண்டும் நினைவூட்டி முன்மாதிரிகளாக எடுக்கக்கூடியவை தொடர்பாக தேர்தல்கள் ஆணையாளர் தெளிவுபடுத்தினார். அரசியற் கட்சிகளின் செயலாளர்கள், சட்டத்தில் காணப்படுகின்ற சர்ச்சைக்குரிய விடயங்களையும் தமக்கு இழைக்கப்பட்டுள்ள அநீதிகளையும் முன்வைத்து இவற்றுக்கான நியாயமான தீர்வுகளைப் பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பமாக இதைப் பயன்படுத்தினர். பொலிஸ் மா அதிபர் உள்ளிட்ட பொலிஸ் திணைக்கள பணிக்குழுவினர், முன்வைக்கப்பட்ட அனைத்து விடயங்கள் தொடர்பான சட்டங்களையும் பொலீசாரின் நிலைப்பாட்டையும் தெளிவுபடுத்தினர். ஒவ்வொரு வாக்கெடுப்பு மாவட்ட ரீதியாகவும் ஒவ்வொரு கட்சியினால்/ சுயேச்சைக் குழுவினால் அமைக்கப்படும் அனுமதி வழங்கப்பட்ட தேர்தல் பிரச்சார அலுவலகங்களில் கட்சியின்/ வேட்பாளர்களின் பிரச்சார அறிவித்தல்களையும் சுவரொட்டிகளையும் காட்சிப்படுத்தி வைப்பதற்கு அனுமதி வழங்கும் வகையில், அவ்விடயங்கள் தொடர்பாக மாத்திரம் பகிரங்க இடங்களில் பிரச்சார அறிவித்தல்களை காட்சிப்படுத்தி வைப்பதைத் தடை செய்யும் பிரிவை கடுமையாக நடைமுறைப்படுத்த வேண்டாமென இக்கூட்டங்களின்போது காணப்பட்ட இணக்கப்பட்டிற்கிணங்க பொலீசாருக்கு அறிவிக்கப்பட்டது.

210. வாக்கெடுப்பின் மூன்று கட்டங்களின்போதும் இடம்பெற்ற ஆலோசனைக் குழுக் கூட்டங்களின்போது கலந்துரையாடப்பட்ட விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

- பிரச்சார கூட்டங்களுக்கான இடங்களை ஒதுக்கிக்கொள்ளும்போது ஏற்படும் பிரச்சினைகள்.
- ஒருசில சம்பவங்கள் தொடர்பாக பொலீசாருக்கு முறைப்பாடு செய்யும்போது ஏற்படும் பிரச்சினைகள்.
- வானொலி மற்றும் தொலைக்காட்சி என்பவற்றின் பக்கச்சார்புத் தன்மை.
- சட்டவிரோதமான தேர்தல் அலுவலகங்களை நடாத்திச் செல்லலும் அனுமதி வழங்கப்பட்ட தேர்தல் அலுவலகங்களுக்கு அச்சுறுத்தல்கள் மேற்கொள்ளல்.
- சுவரொட்டிகள், பதாகைகள், பாரியளவிலான உருவப்படங்கள் மூலமாக மேற்கொள்ளப்படுகின்ற சட்டவிரோத பிரச்சார நடவடிக்கைகள்.
- சொந்த வாகனங்களில் பிரச்சார துண்டுப் பிரசுரங்களை காட்சிப்படுத்துவதும் தனியார்/ இபோச பஸ் வண்டிகளில் வலோற்காரமாக ஒட்டிகளை ஒட்டுவதும்.

- ஒலிபெருக்கிகளைப் பயன்படுத்துவதற்கான அனுமதியைப் பெற்றுக்கொள்ளும்போது ஏற்படும் பிரச்சினைகள்.
- உதவியாளரொருவரை அழைத்து வராத, உதவி தேவையான வாக்காளர்களுக்கு வாக்கை அடையாளமிடுவதற்கு ஒத்துழைப்பு வழங்குவதிலுள்ள பிரச்சினைகள் (238 ஆம் பந்தியைப் பார்க்கவும்).
- விசேட பாதுகாப்புத் தேவையான வாக்கெடுப்பு நிலையங்கள்.
- யாழ்ப்பாண மாவட்டத்தில் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்கு ஏற்படும் இடையூறுகள்.

போன்ற அரசியற் கட்சிகள் எதிர்கொள்ள வேண்டியுள்ள பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டதுடன், இக்கட்சிகளால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய விதத்திலான நியாயமான தீர்வுகளையும் வழங்க முடிந்தது.

211. இதற்கிணங்க இவ்வாலோசனைக் குழுவானது (அல்லது நிலையியல் முகவர் குழு) பிரச்சினைகளை விசாரித்தறியும் கலந்துரையாடல் அரங்காக இயங்கியதோடு, இதன் மூலமாக ஒவ்வொரு தரப்பினரும் தமது கடமைப் பொறுப்புக்கள் பற்றிய புரிந்துணர்வை பெற்றமை போற்றத்தக்க விடயமொன்றாகும். தேர்தல் பணிகளை ஒழுங்கமைத்தல், பொலிஸ் திணைக்களம் மற்றும் கட்சிச் செயலாளர்கள் ஆகியோருக்கிடையிலான பரஸ்பர ஒத்துழைப்பு என்பவற்றின்பால் ஆலோசனைக் குழுக் கூட்டங்களில் கவனம் செலுத்தப்பட்டது. சுதந்திரமானதும் நியாயமானதுமான வாக்கெடுப்பொன்று தொடர்பான எதிர்பார்ப்புக்கள் ஒன்றிணைந்த முயற்சியொன்றெனவும் பொறுப்பொன்றெனவும் அனைத்துத் தரப்பினருக்கும் புரியவைப்பதில் இக்குழுக்கள் பெரிதும் வெற்றிக் கண்டன.

212. தேர்தல் சட்டங்களுக்கு சமகாலத் தேவைப்பாடுகளுக்கிணங்க மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்கள் தொடர்பாக, இக்கட்சிச் செயலாளர்களுடனான குழுக் கூட்டங்களின்போது கலந்துரையாடி முடிவுகளுக்கு வர முடியுமானமை இதன்போது கிடைத்த மிக முக்கியமான வெற்றியெனக் குறிப்பிடுதல் வேண்டும்.

IX ஆம் பிரிவு

பணியாட் குழுவினரும் போக்குவரத்துத் தேவைப்பாடுகளும்

பணியாட் குழுவினர் தேவைப்பாடு

213. இத்தேர்தலுக்குத் தேவையான பணிக்குழுவினர் தொடர்பாக நாடளாவிய ரீதியிலான கணக்கெடுப்பொன்றின் தேவைப்பாடு எழ வில்லை. 2010 ஆம் ஆண்டு சனவரி மாதம் சனாதிபதித் தேர்தலும் 2010 ஏப்பிரல் மாதம் பாராளுமன்றப் பொதுத் தேர்தலும் நடாத்தப்பட்டமையால் அதன்போது சேகரிக்கப்பட்ட அலுவலர்கள் தொடர்பான தகவல்கள் இற்றைப்படுத்தப்பட்டு பயன்படுத்தப்பட்டது. இதன்போது படிவங்கள் மூலம் ஒவ்வொரு திணைக்களம், நிறுவனம் மற்றும் பாடசாலைக்குரிய அலுவலர் குழாத்தில் மாற்றங்களும் புதிதாக கடமையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட அலுவலர்கள் மற்றும் கடமையிலிருந்து ஓய்வுபெற்ற மற்றும் இடமாற்றம் பெற்றுச் சென்ற அலுவலர்கள் தொடர்பான தகவல்களும் சேகரிக்கப்பட்டன.

214. தேர்தலொன்றுக்கான ஆரம்பப் பணிகளின் ஒழுங்கமைப்பு, தேர்தல் கடமைகள், வாக்கெண்ணும் கடமைகள், பெறுபேறுகள் தயாரிக்கப்படுவதோடு, தொடர்புடைய கடமைகள் மற்றும் தேவையான சேவைகளை வழங்கும் கடமைகள் போன்ற பல்வேறு கடமைகளுக்குப் போதியளவு பணிக்குழுவினர் தேவைப்படுகின்றனர். இதற்காக மாவட்ட மட்டத்தில் அரசாங்க அலுவலகங்களினதும் அரசாங்க பாடசாலைகளினதும் பணிக்குழுவினர் தொடர்பான தகவல்கள் ஒன்றுதிரட்டப்படும். ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளக்கூடிய அலுவலர்களின் தொகைக்கு மேலதிகமாக தேவைப்படும் அலுவலர்களை கொழும்பு அலுவலர் குழாத்திலிருந்து பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

215. விசேடமாக தலைமை வாக்கெண்ணும் அலுவலர்களாக கொழும்பில் தயார் நிலையில் வைக்கப்பட்டிருக்கும் அலுவலர் குழாத்திலிருந்து தெரிவு செய்யப்படும் சிரேட்ட அலுவலர் குழுவொன்று தேர்தல்கள் ஆணையாளரால் பயிற்றுவிக்கப்படுமென்பதுடன், மாவட்ட மட்டத்தில் அலுவலர்களை பயிற்றுவித்தல் தேர்தல்கள் திணைக்களத்தினால் அந்தந்த மாவட்டத்திற்குப் பொறுப்பாக நியமனம் செய்யப்பட்டுள்ள உதவித் தேர்தல்கள் ஆணையாளர்/ சிரேட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் அல்லது பிரதித் தேர்தல்கள் ஆணையாளரினால் நிறைவேற்றப்படும்.

216. இவ்வுள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் 3 கட்டங்களில் நடாத்தப்பட்டமையால் தேவையான பணிக்குழுவின் பெரும்பாலானவர்கள் மாவட்டத்தினுள்ளிருந்தே தெரிவு செய்யப்பட்டனர். தலைமை வாக்கெண்ணும் அலுவலர்களும் உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களாக ஒருசில அலுவலர்களும் மாத்திரமே கொழும்பு அலுவலர் குழாத்திலிருந்து அந்தந்த மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர் உள்ளிட்ட ஏனைய பணிக்குழு தேவைப்பாட்டிற்கு மாவட்டத்திலிருக்கும் பணிக்குழுவினருக்கு மேலதிகமாகத் தேவைப்படும் அலுவலர்களை அடுத்தமைந்துள்ள மாவட்டத்திலிருந்து பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டன. இதற்கு மேலதிகமாக வாக்காளரின் அடையாள அட்டையைப் பரீட்சிப்பதற்கும் வாக்கெடுப்பு நிலைய நடவடிக்கைகளைப் பரீட்சிப்பதற்கும் கொழும்பு அலுவலர் குழாத்திலிருந்து பொருத்தமான அலுவலர்களை அனுப்பி வைக்கும் நடவடிக்கைகள் தேர்தலின் போதும் மேற்கொள்ளப்பட்டன.

217. இத்தேர்தலில் இரண்டாம் கட்டத்தின் போது யாழ்ப்பாணம் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களின் தேர்தலுக்காக ஒவ்வொரு வாக்கெடுப்பு நிலையத்திற்கும் ஓர் அலுவலர் வீதம் வெளி மாவட்டங்களிலிருந்து அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டது. இது கட்சிச் செயலாளர்களுடன் நடாத்தப்பட்ட ஆலோசனை குழுக் கூட்டங்களின் போது முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கமைய எடுக்கப்பட்ட ஒரு முயற்சியாகும்.

218. வாக்கெடுப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்ட அலுவலர்களுள் போதுமானளவு தொகையினர் வாக்கெண்ணும் கடமைகளிலும் ஈடுபடுத்தப்பட்டதுடன் எல்லா வாக்கெண்ணும் நிலையத்திற்கும் வாக்கெடுப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்படாத ஒரு தொகை அலுவலர்களை ஈடுபடுத்துவதன் தேவைப்பாடு தொடர்பாகவும் தெரிவத்தாட்சி அலுவலர்கள் அறிவுறுத்தப்பட்டனர்.

219. வாக்கெடுப்பு நிலையத்தின் ஒழுங்கமைப்பு நடவடிக்கைகள் குறிப்பிட்ட நிலையம் அமைந்துள்ள கிராம அலுவலர் பிரிவின் கிராம அலுவலரிடமே பொறுப்பளிக்கப்பட்டதுடன் விசேட சந்தர்ப்பங்களில் அதாவது ஒரு நிலையத்திற்குக் கூடுதலாதன நிலையங்கள் பொறுப்பளிக்கப்படும் சந்தர்ப்பங்களில் வேறொரு பிரிவின் கிராம அலுவலரிடம் பொறுப்பளிக்கப்பட்டது. குறிப்பிட்ட வாக்கெடுப்பு மாவட்டத்தின் வாக்காளர்களின் தொகை 1200 ஆக அல்லது அதற்குக் குறைவாகவிருப்பின் ஒற்றை கியூவரிசையைக் கொண்ட வாக்கெடுப்பு நிலையமாகவும் வாக்காளர் தொகை 1201 ஐ விஞ்சும் பட்சத்தில் இரண்டு கியூ வரிசைகளைக் கொண்ட வாக்கெடுப்பு நிலையங்களாகவும் அமைத்தல் வேண்டுமென அறிவுறுத்தல் வழங்கப்பட்டன. அவற்றுள் ஒற்றை வரிசைகளைக் கொண்ட வாக்கெடுப்பு நிலையங்கள் மீண்டும் வாக்காளர் தொகை 800 க்குக் குறைந்ததெனவும் 801 முதல் 1200 வரையெனவும், இரண்டு கியூ வரிசைகளைக் கொண்ட வாக்கெடுப்பு நிலையங்கள் 1201 – 1500 வரையெனவும், 1501 க்குக் கூடிய வாக்கெடுப்பு நிலையங்களெனவும் பிரித்தொதுக்கப்பட்டன. இவ்வாறு பிரித்தொதுக்கப்பட்ட வாக்கெடுப்பு நிலையங்களுக்கிணங்க தேவையான அலுவலர் தொகையை தீர்மானித்தல் வேண்டுமென அறிவுறுத்தல் வழங்கப்பட்டன. வாக்காளர் தொகை 2500 ஐ விஞ்சும் வாக்கெடுப்பு மாவட்டங்களில் பெண்கள்/ ஆண்கள் என இரண்டு வாக்கெடுப்பு நிலையங்களை அமைப்பதன் மூலம் வாக்கெடுப்பு நிலையத்தில் ஏற்படும் நெருக்கடியைத் தவிர்த்துக்கொள்ள வேண்டுமெனவும் வலியுறுத்தப்பட்டது. பெண்கள்/ ஆண்கள் என பிரித்தொதுக்கப்படும் வாக்கெடுப்பு மாவட்டங்கள் தொடர்பாக வாக்கெடுப்பு அறிவித்தலின் மூலமும் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் மூலமும் வாக்காளர்கள் கட்டாயமாக அறிவுறுத்துதல் வேண்டும்.

வாக்கெடுப்பு நிலைய பணிக்குழுவினர்	வாக்குத் தொகைக்கிணங்க நியமனம் செய்ய வேண்டியுள்ள அலுவலர்களின் எண்ணிக்கை			
	800 க்குக் குறைந்த	801 – 1200	1201 – 1500	1501 க்குக் கூடிய
சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்கள்	1	1	1	1
கனிட்ட தலைமை தாங்கும் அலுவலர்கள்	1	1	2	2
எழுதுநர்கள்	4	4	8	8
மேலதிக எழுதுநர்கள்	0	1	2	3
அலுவலகப் பணியாளர்கள்	1	1	1	1
ஆளடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளல்	1	1	2	2
மொத்தம்	**8**	**9**	**16**	**17**

220. வாக்கெடுப்பு நிலையப் பணிக்குழுவை நியமனம் செய்யும்போது கீழ்க்காணும் விடயங்களின்பால் விசேட கவனம் செலுத்தப்படல் வேண்டுமெனத் தெரிவத்தாட்சி அலுவலர்கள் அறிவுறுத்தப்பட்டனர்.

I. கடமையின் தன்மைக்கிணங்க அனுபவம்வாய்ந்த சிரேட்ட அலுவலர்களை தேர்தல் கடமைக்குத் தெரிவு செய்து பயன்படுத்திக் கொள்ளும் தேவைப்பாடு.

II. சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்களாக வாக்கெடுப்பு நிலையமொன்றுக்குப் பொறுப்பான கடமைகளுக்காகத் தெரிவு செய்யப்படுகின்ற அலுவலர்கள் குறைந்தபட்சம் கனிட்ட தலைமை தாங்கும் அலுவலர்களாக 4 தடவைகளுக்குக் கூடவாயினும் வாக்கெடுப்பு நிலையக் கடமைகளில் ஈடுபட்ட அலுவலர்களாகவிருப்பதன் தேவைப்பாடு.

III. அலுவலரின் நிரந்தரக் கடமையின் தன்மை மற்றும் கடமை நிலையம், வதிவு முகவரி என்பவற்றின்பால் கவனம் செலுத்தி கடமைகள் பொறுப்பளிக்கப்பட வேண்டுமெனவும், தேர்தல் கடமைகளை பக்கச்சார்ப்பற்ற முறையில் மேற்கொள்ள வேண்டுமென்பதுடன் அவரது பக்கசார்ப்பற்றதன்மை வெளிக்காட்டப்பட வேண்டுமெனவும் வலியுறுத்தப்படுதல்.

IV. ஒரே அலுவலகத்தில் பணியாற்றும் அலுவலர்களை ஒரே வாக்கெடுப்பு நிலையத்தில் கடமைக்காக நியமனம் செய்யக் கூடாதெனவும், ஏதேனுமொரு கடமை நிலையம், வாக்கெடுப்பு நிலையமாக பயன்படுத்தப்படுவதாயின் அங்கு கடமையாற்றுபவர்களை அந்த வாக்கெடுப்பு நிலையத்தின் பணிக்குழுவினராக நியமனம் செய்யக் கூடாதெனவும்.

V. எவரேனுமோர் அலுவலர் அல்லது அவரது குடும்பத்துடன் நெருங்கிய உறவைக் கொண்டுள்ள ஒருவர், தொழிற்படு அரசியலில் ஈடுபட்டுள்ளதாக தகவல்கள் கிடைக்கப்பெற்றிருப்பின் அவ்வாறான அலுவலர்களைத் தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்தக் கூடாதெனவும்.

VI. கடந்தகால தேர்தல்களின்போது உரியவாறு கடமைகளை மேற்கொள்ளவில்லையென அறிக்கையிடப்பட்டுள்ள திறமையற்ற அத்துடன் பொறுப்புக்களற்ற அலுவலர்களுக்கு கடமைகள் பொறுப்பளிக்கக் கூடாதெனவும்.

221. இத்தேர்தலுக்காக கடமையில் ஈடுபடுத்தப்பட்ட அலுவலர்களின் எண்ணிக்கை 189,929 ஆகவிருந்தன. இப்பணிக்குழுவினர் வாக்கெடுப்புக்கான ஆரம்ப ஒழுங்கமைப்பு நடவடிக்கைகள், வாக்கெடுப்புக் கடமைகள், வாக்கெண்ணும் கடமைகள் மற்றும் பெறுபேறுகளைத் தயாரிக்கும் கடமைகள் போன்ற அனைத்துப் பணிகளிலும் ஈடுபடுத்தப்பட்டவர்களாவர். வாக்கெடுப்புக் கடமையில் ஈடுபட்ட அலுவலர்கள் வாக்கெண்ணல் பணிகளிலும் பெறுபேறுகளை வெளியிடும் பணிகளிலும் பெரும்பாலும் ஈடுபடுத்தப்பட்டனர்.

222. ஒவ்வொரு நிருவாக மாவட்டத்திற்கும் தேவைப்பட்ட பணிக்குழுவினருள் பெரும் பகுதியினர் மாவட்டத்தினுள்ளிருந்தே தெரிவு செய்யப்பட்டதுடன் ஏனைய தேவைகளுக்கு கொழும்பு அலுவலர் குழாத்திலிருந்து நியமனம் செய்யப்பட்டனர். இரண்டாம் மூன்றாம் கட்டத் தேர்தல்கள் ஒருசில உள்ளூர் அதிகார சபைகளுக்காக மாத்திரம் நடாத்தப்பட்டமையால் மாவட்டத்திற்குத் தேவையான அலுவலர்களை அம்மாவட்டத்திலிருந்தே பெற்றுக்கொள்ள முடிந்தது. ஆயினும் கட்சிச் செயலாளர்களின் கோரிக்கைக்கிணங்க விசேட வேலைத் திட்டமொன்றாக வேறு மாவட்டங்களில் கடமையில் ஈடுபட்டிருக்கும் ஒரு தொகை அலுவலர்களிடம் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள உள்ளூர் அதிகார சபைகளுக்கான தேர்தற் கடமைகள் பொறுப்பளிக்கப்பட்டதோடு, மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களினதும் தலைமை அலுவலகத்தினதும் அலுவலர்கள் வாக்கெடுப்பு நிலையக் கடமைகள் தொடர்பான அனுபவங்களைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்துடன் வேறு மாவட்டங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டனர்.

223. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார் மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களுக்கு வேறு மாவட்டங்களிலிருந்து அதிகளவான அலுவலர்கள் அனுப்பி வைக்கப்பட்டதன் மூலம் இது தெளிவாகின்றது. இதில் 42 பிரதான வாக்கெண்ணும் அலுவலர்கள், 269 உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள், 126 சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்கள், 373 கனிட்ட தலைமை தாங்கும் அலுவலர்கள், 173 எழுதுநர்கள், 18 அலுவலகப் பணியாளர்கள் என 1001 பேர் அடங்கியிருந்தனர். கொழும்பிலிருந்து அனுப்பி வைக்கப்பட்ட அலுவலர்களின் எண்ணிக்கை 6562 ஆகும். அதில் பெரும்பாலானவர்கள் அதாவது 3005 பேர் உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களாகவிருந்ததுடன் 890 பேர் பிரதான வாக்கெண்ணும் அலுவலர்களாவர். கொழும்பிலிருந்து ஆகக் கூடுதலான அலுவலர்கள் கம்பஹா மாவட்டத்திற்கே அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். கம்பஹா மாவட்டத்திற்கு கொழும்பிலிருந்து 1408 அலுவலர்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.
(குறிப்பு 4)

போக்குவரத்துத் தேவைப்பாடுகள்

224. வாக்கெடுப்பு ஒழுங்கமைப்பு நடவடிக்கைகளின்போது பணிக்குழுவினருக்கு அடுத்ததாக போக்குவரத்துத் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்வதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் மிக முக்கியமானதாகும். அலுவலர்களின் கணக்கெடுப்போடு இணைந்ததாக கொழும்பு மாநகர பிரதேசத்தின்

வாகனங்கள் தொடர்பான தகவல்கள் தலைமை அலுவலகத்தினாலும், கொழும்பு மாவட்டத்தின் ஏனைய பிரதேசங்களினதும் ஒவ்வொரு நிருவாக மாவட்டத்தினதும் வாகனங்கள் தொடர்பான தகவல்கள் குறிப்பிட்ட மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களினாலும் ஒன்றுதிரட்டப்படும். ஆயினும் இந்த உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்களின்போது பணிக்குழுவினர்கள் போன்றே வாகனங்கள் தொடர்பான தகவல்களும் இற்றைப்படுத்தப்படுவதோடு, மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. ஏற்கனவே கூறப்பட்டவாறு 2010 ஆம் ஆண்டில் சனாதிபதித் தேர்தல், பாராளுமன்றத் தேர்தல் ஆகிய தேசிய மட்டத்திலான இரண்டு தேர்தல்கள் நடாத்தப்பட்டமையால் அதன்போது ஒன்றுதிரட்டப்பட்ட கணக்கெடுப்புத் தரவுகள் இதன்போதும் பயன்படுத்தப்பட்டன.

225. தேர்தல் ஒழுங்கமைப்பின்போது சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்கள், வாக்குப் பெட்டிகளையும் வாக்குச் சீட்டுக்களையும் அதனுடன் தொடர்புடைய பாதுகாப்புப் பொருட்களையும் பாதுகாப்பு அலுவலர்களையும் மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலரின் அலுவலகத்திலிருந்து மாவட்டத்தின் அனைத்து வாக்கெடுப்பு நிலையங்களுக்கும் எடுத்துச் செல்வதற்கும், அத்தோடு ஏனைய பணியாட் குழுவினர்களுக்குரிய வாக்கெடுப்பு நிலையங்களுக்குச் செல்வதற்கும், வாக்காளர்களுக்குத் தமது வாக்கெடுப்பு நிலையங்களுக்கு இலகுவாகச் செய்வதற்கும் தேவையான போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது முக்கியமாகும். இதற்கு மேலதிகமாக ஆரம்ப ஒழுங்கமைப்பு நடவடிக்கைகள், வாக்கெடுப்பு, வாக்கெண்ணல் உள்ளிட்ட அனைத்துப் பணிகளிலும் ஈடுபடும் அலுவலர்களுக்குத் தேவையான போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தலும் வேண்டும்.

226. தேர்தலொன்றின்போது தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகளை செயலுருப்படுத்துவதற்கு பொலீசாருக்கும் தமது திணைக்கள வாகனங்கள் போதாதிருப்பதன் காரணமாக மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்கள் பொலீசாரின் வேண்டுகோளுக்கிணங்கத் தேவையான வாகனங்களை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுப்பார்கள். அதேபோன்று அஞ்சல் வாக்குகள், உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் என்பன சார்பான பாரிய கடமைப் பொறுப்புக்கள் அஞ்சல் திணைக்களத்திற்குப் பொறுப்பளிக்கப்படுகின்றமையால் அத்திணைக்களம் ஏதேனுமொரு கோரிக்கையை விடுக்குமாயின் அத்தேவைப்பாடும் மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களினால் நிறைவேற்றப்படுகின்றது.

227. இத்தேர்தல் மூன்று கட்டங்களில் இடம்பெற்றமையால் அலுவலர் தேவைப்பாட்டைப் போன்றே வாகனத் தேவைப்பாட்டையும் பூர்த்தி செய்வது எளிதான காரியமாகவிருந்தது. வாகனத் தேவைப்பாட்டை பூர்த்தி செய்யும்போது மாவட்டத்தினுள் அரசாங்க வாகனங்கள், மத்திய போக்குவரத்துச் சபைக்குரிய பஸ் வண்டிகள், தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்திற்குரிய பஸ் வண்டிகள், தனியார் வான்களைப் போலவே தேர்தல் கடமைக்காகத் தெரிவு செய்யப்பட்ட அலுவலர்களுக்குச் சொந்தமான வாகனங்களையும் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இவ்வாறு கடமையில் ஈடுபடுத்தப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை 10262 ஆகும். அதில் 1141 வாகனங்கள் கொழும்பு வாகனக் குழாத்தை சார்ந்தவையாகும். 271 வாகனங்கள் வேறு மாவட்டங்களைச் சேர்ந்தவைகளாவிருந்ததோடு, மாவட்டத்தினுள் அலுவலர்களின் தனிப்பட்ட வாகனங்களுடன் மொத்தம் 8850 வாகனங்கள் ஈடுபடுத்தப்பட்டன.
(குறிப்பு 13)

X ஆம் பிரிவு

தேருநர்களுக்கு விசேட வசதிகளைச் ஏற்படுத்திக் கொடுத்தல்

வலிமையிழப்பிற்குட்பட்ட வாக்காளர்களுக்காகத் தனிப்பட்ட போக்குவரத்து வசதிகளைச் செய்து கொள்வதற்கான அனுமதி வழங்கல்

228. உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்கள் சட்டத்தின் 81 இ ஆம் உப பிரிவின் பிரகாரம் வாக்கெடுப்பு நிலையத்திற்குப் போய் வருவதற்காக வாக்காளர்களால் தனிப்பட்ட போக்குவரத்து வசதிகளைப் பயன்படுத்தல் சட்டத்திற்கு முரணானதாகும். ஆனால் உடல் ரீதியாக ஊனமுற்ற அல்லது தற்காலிகமாக நோய்வாய்ப்பட்டுள்ள வாக்காளரொருவருக்கு வாக்கெடுப்பு தினத்திற்கு 7 நாட்களுக்கு முன்னர் கிடைக்குமாறு தானோ அல்லது தன் சார்பில் வேட்பாளரொருவரல்லாத வேறோர் ஆளோ உரிய மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலருக்கு, அதற்கான அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்காக எழுத்துமூலம் விண்ணப்பிக்க முடியும். உரிய விண்ணப்பப் படிவத்துடன் வலிமையிழப்பிற்குட்பட்டவர் அல்லது நோயாளியென உறுதிப்படுத்துகின்ற வைத்தியச் சான்றிதழ் ஒன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

229. தெரிவத்தாட்சி அலுவலர் தனக்குக் கிடைக்கப் பெறுகின்ற விண்ணப்பங்களைப் பரீட்சித்து மூன்று பிரதிகளுடன் உரிய படிவத்தில் அனுமதிப் பத்திரத்ததைத் தயாரித்து முதற்பிரதியை வாக்காளருக்கு அனுப்புவதோடு, இரண்டாவது பிரதியை சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலரது கோப்பில் இடல் வேண்டும். மூன்றாவது பிரதியை உரிய அனுமதிப்பத்திரப் புத்தகத்தில் விட்டுவிடல் வேண்டும்.

230. இத்தேர்தலின் மூன்று கட்டங்களிலும் வலிமையிழப்பிற்குட்பட்ட வாக்காளர்களாக வாகன அனுமதிப்பத்திரத்திற்கு விண்ணப்பித்திருந்தோர் களுத்துறை, காலி, மாத்தறை மற்றும் கேகாலை ஆகிய மாவட்டங்களிலுள்ள வாக்காளர்களில் சிறு தொகையினர் மாத்திரமேயாவர்.
(பின்னிணைப்பு 43)

வலிமையிழப்பிற்குட்பட்ட வாக்காளர்களுக்காக வாக்குச்சீட்டினை அடையாளமிடுவதற்காக உதவியாளரொருவரை உடனழைத்துச் செல்வதற்கு அனுமதி வழங்கல்

231. 2011 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட முதன்மைச் சட்டத்தின் 54(2) ஆம் உப பிரிவின் பிரகாரம் நடைபெறவுள்ள தேர்தல்களில் முற்றாக அல்லது பகுதியளவில் கட்புலப் பாதிப்பு நிலையிலுள்ள அல்லது ஏதாவதொரு வலிமையிழப்பிற்குட்பட்ட வாக்காளரொருவருக்கு வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்குச்சீட்டினை அடையாளமிடுவதற்காக உதவியாளரொருவரை உடனழைத்துச் செல்வதற்கு முடிந்த விதத்தில் சட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

232. உடனழைத்துச் செல்கின்ற உதவியாளர் வலிமையிழப்பிற்குட்படாத 18 வயது பூர்த்தியான ஆளொருவராக இருக்க வேண்டுமென்பதோடு, உரிய தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளரொருவராக இல்லாதிருத்தலும் வேண்டும். அவ்வாறே அத்தேர்தலில் அதிகாரமளிக்கப்பட்ட முகவரொருவராகவோ அல்லது வாக்கெடுப்பு நிலைய முகவரொருவராகவோ கடமையாற்றாதவராக இருத்தலும் வேண்டும்.

233. மேற்குறிப்பிடப்பட்டவாறுஉதவியாளரொருவருடன் செல்வதற்காக உரிய சட்டத்தின் பத்தாம் அட்டவணை மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள தகுதிச் சான்றிதழொன்றை உரிய வாக்கெடுப்பு நிலைய அலுவலர்களிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

234. உரிய விண்ணப்பப்பத்திரத்தைப் பூரணப்படுத்தி கிராம அலுவலர் மூலம் உறுதிப்படுத்திக் கொண்டதன் பின்னர் அச்சான்றிதழை அரச வைத்தியரொருவரிடம் சமர்ப்பித்து உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

235. வாக்கெடுப்பு நிலையத்தில் சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலர் வாக்காளர் எடுத்து வருகின்ற தகுதிச் சான்றிதழில் உதவியாளரின் வெளிப்படுத்துகையைக் குறித்துக் கொள்வதோடு, வாக்கெடுப்பு நிலைய அலுவலர் குழாத்தின் உறுப்பினர் ஒருவருடனும் வாக்காளர் மற்றும் உதவியாளருடனும் வாக்களிப்புச் சிற்றறைக்குள் அழைத்துச் செல்லப்பட்டு உதவியாளர் மூலம் வாக்குச் சீட்டினை அடையாளமிடச் செய்து வாக்குப் பெட்டிக்குள் இடச் செய்யலாம்.

236. முதன்முறையாக மேற்கூறப்பட்ட சலுகையின் கீழ் வாக்களித்தல் 2011 ஆம் ஆண்டின் உள்ளூராட்சி சபைகளின் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தலில் இரண்டாம் கட்டத்தில் அதாவது 2011 யூலை மாதம் 23 ஆந் திகதி நடாத்தப்பட்ட உள்ளூர் அதிகார சபைத் தேர்தலில் செயற்படுத்தப்பட்டது. அதன் பிரகாரம் 2011 ஆம் ஆண்டு ஒக்தோபர் மாதம் 08 ஆந் தேதி நடாத்தப்பட்ட தேர்தலில் அதாவது மூன்றாம் கட்டத்திலும் இது செயற்படுத்தப்பட்டது.

237. ஆனால் உதவியாளரொருவருடன் வருகைதந்த வலிமையிழப்பிற்குட்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாகும். இது தொடர்பாக இரண்டாம் கட்டத் தேர்தலில் யூலை மாதம் 09 ஆந் தேதியும் மூன்றாம் கட்டத் தேர்தலில் செப்தெம்பர் மாதம் 21 ஆந் தேதியும் ஊடக அறிவித்தல் மற்றும் பத்திரிகை அறிவித்தல்கள் மூலம் பரவலாக வாக்காளர்கள் அறிவூட்டப்பட்டனர்.

238 உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 54 (2) ஆம் உபபிரிவு நீக்கப்பட்டுள்ளது. ஆனால் உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் சட்டத்தின் 54(2) ஆம் பிரிவின் பிரகாரம் வலிமையிழப்பிற்கு அல்லது உடல் ஊனம் காரணமாக 45 ஆம்

பிரிவின் கீழ் வழிகாட்டல்களுக்கு அனுகூலமாக வாக்களிப்பதற்கு முடியாமற் போகின்ற வாக்காளரொருவர் கோருவாராயின் சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலர் வாக்கெடுப்பு நிலையத்தில் உள்ள தனது அலுவலர் குழாத்தின் வேறோர் உறுப்பினர் முன்னிலையில் வாக்காளரால் தெரிவிக்கப்படுகின்ற விதத்தில் வாக்குச் சீட்டினை அடையாளமிட்டு வாக்குப் பெட்டியினுள் இடல் வேண்டுமென்ற சட்ட ஏற்பாடு அகற்றப்பட்டுள்ளமையால் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலருக்கு அக்கருமத்தை நிறைவேற்ற முடியாது. அவ்வாறான சந்தர்ப்பத்தில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான சட்ட ஏற்பாடுகள் இல்லாதிருப்பது பிரச்சினைக்குரியதாகும். இதற்குப் பரிகாரமாக உதவியாளரொருவருடன் வருகைதராத போதிலும் உதவியாளர் தேவைப்படுகின்ற வாக்காளர்களுக்கு வழமை போல ஒத்துழைப்பு வழங்குமாறு சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்கள் அறிவுறுத்தப்பட்டனர். இவ்வாறு செயற்படுவதற்காக கட்சிச் செயலாளர்களின்/ நிரந்தர முகவர்களின் குழுக் கூட்டத்தில் இணக்கப்பாடு பெற்றுக் கொள்ளப்பட்டது.

239. அவ்வாறே உடனழைத்து வருகின்ற உதவியாளர் 18 வயதைப் பூர்த்தி செய்தவராக இருக்க வேண்டுமென்பது தொடர்பாக காட்டப்பட்டிருப்பினும் 18 வயது பூர்த்தியாக வேண்டியது எத்தினத்தில் என்பது உறுதியாகக் குறிப்பிடப்படவில்லை. இதற்குத் தேவையான ஏற்பாடுகள் தயாரிக்கப்படல் வேண்டும். வயது தொடர்பான தகவல்களை குறித்த பிரிவின் கிராம அலுவலரூடாக அத்தாட்சிப்படுத்திக் கொள்வதற்கு உத்தரவிடல் வேண்டும். இத்திருத்தங்கள் இரண்டும் கட்டாயமாகச் செய்யப்பட வேண்டும். உடனழைத்து வருகின்ற உதவியாளர் வாக்கெடுப்பு நடைபெறுகின்ற உள்ளூராட்சி சபையில் உரிய பிரிவில் வசிப்பவராக இருத்தல் வேண்டுமென்பதால் திருத்தத்திற்கு உட்படுத்துவது உசிதமாகும். அத்தகவல்களை உரிய பிரிவின் கிராம அலுவலர் உறுதிப்படுத்துவது அத்தியாவசியமென்பதோடு, அதற்காக தகுதிச் சான்றிதழில் இத்தகவல்களை உள்ளடக்க வேண்டும்.
(பின்னிணைப்பு 44,45)

தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு தமது வாக்கை அடையாளமிடுவதற்கு ஏற்றவாறு விடுமுறை வழங்குதல்.

240. உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்கள் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 84 அ ஆம் உப பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க வேலை தருநர் தனக்குக் கீழ் பணிபுரிகின்ற எந்தவோர் ஆளும் எழுத்துமூலம் விண்ணப்பித்திருப்பின் அவ் வாக்கெடுப்பில் அவருக்கு வாக்கெடுப்பு நிலையத்திற்குச் சென்று வாக்களித்து திரும்புவதற்குப் போதுமானதெனக் கருதுகின்ற இரண்டு மணித்தியாலயங்களுக்குக் குறையாத நேரத்தைச் சம்பளத்துடன் கூடிய லீவாக வழங்குதல் வேண்டும்.

241. இவ்வேற்பாடுகளை மீறுகின்ற அல்லது அதன்படி செயற்படுவதைத் தவிர்க்கின்ற யாரேனுமொருவர் தவறு செய்வதுடன் நீதிபதி முன்னிலையில் நடாத்தப்படுகின்ற வழக்கு விசாரணையின் பின்னர் குற்றவாளியாக்கப்படுமிடத்து 500 ரூபாவுக்குக் குறையாத தண்டப்பணம் அல்லது ஒருமாதத்திற்குக் குறையாத காலத்திற்கான சிறைவாசம் ஆகிய இரண்டிலொன்றிற்கு அல்லது அவ்விரண்டு தண்டனைகளுக்கும் உட்படுதல் வேண்டும்.

242. தேர்தலின் மூன்று கட்டங்களிலும் 21011.03.03, 2011.07.11 மற்றும் 2011.09.26 ஆகிய தினங்களுக்குரிய ஊடக அறிவித்தல்கள் மூலம் மற்றும் பத்திரிகை அறிவித்தல்கள் மூலம் இது தொடர்பான விரிவான பிரச்சாரம் வழங்கப்பட்டது. ஆனால் அநேகமாக வாக்கெடுப்புத் தினத்திற்கு முந்திய தினத்திற்கும் வாக்கெடுப்புத் தினத்திற்கும் தேவையான விடுமுறையை வழங்காதிருப்பது தொடர்பாக தொழிர்தருநர்களுக்கு எதிராக பல்வேறு நிறுவனங்களின் ஊழியர்கள் தேர்தல்கள் ஆணையாளருக்கு முறைப்பாடுகளை முன்வைப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது. அநேகமாக இம்முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றவுடன் உரிய நிறுவனத் தலைவருக்கு எழுத்து மூல அறிவுறுத்தல்கள் தொலைநகல் மூலம் அனுப்பப்படுவதோடு, தொலைபேசி மூலமாகவும் உரிய சட்ட நிலைமை தெளிவுபடுத்தப்பட்டது.

243. சில சமயங்களில் இவ்வாறான முறைப்பாடுகள் கிடைக்கபெறுகின்ற சந்தர்ப்பத்தில் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கான காலம் போதுமானதாக இல்லாமலிருப்பது கண்கூடாக ஒரு நிலையாகும். ஊழியர்கள் தங்களது தொழிலுக்கு ஏதாவது அச்சுறுத்தல் ஏற்படக் கூடுமென்ற பீதியினால் முறைப்பாடு செய்வதிலிருந்து அல்லது நீதிமன்ற நடவடிக்கைளுக்குச் செல்வதிலிருந்து விலகி இருக்கின்ற சந்தர்ப்பங்களைக் காண முடிகின்றது. இது தொடர்பாக தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சிற்கு முறைப்பாடு செய்த போதிலும் வாக்கெடுப்பு முடிவடைந்ததும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதில்லை.

244. இச்சிக்கலைத் தீர்த்துக் கொள்வதற்கான தீர்வொன்றாக வாக்கெடுப்பு சனிக்கிழமை தினமொன்றில் நடாத்தப்படுவது கட்டாயமாக்கப்பட்டு 1988 ஆம் ஆண்டின் இரண்டாம் இலக்க மாகாண சபை தேர்தல் சட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட திருத்தம் (2004 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க சட்டம்) மதிக்கப்படல் வேண்டும். தேர்தலொன்றை நடாத்த சனிக்கிழமை தினம் பயன்படுத்தப்படுவதால் அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கு வசதியற்ற அலுவலர் மற்றும் ஊழியர்களுக்காக விடுமுறை வழங்குவதால் ஏற்படுகின்ற மனித மணித்தியால நட்டத்தை கணிசமானளவு குறைத்துக்கொள்ள முடியும். இதன் காரணமாக வாக்களிப்பதற்காக லீவு வழங்குவது தொடர்பில் தொழில் பெறுநர்இ தொழில் வழங்குநர் ஆகிய இரு தரப்பினரிடையே ஏற்படுகின்ற சிக்கல் நிலை கணிசமானளவு குறைவடைந்துள்ளது. உள்ளூராட்சி சபைகளின் வாக்கெடுப்பை நடாத்துவதற்காக சனிக்கிழமையைப் பயன்படுத்துவது அத்தியாவசியமில்லையெனினும் மேற்கூறிய தேவைகளைக் கருத்தில் கொண்டு இவ்வுள்ளூராட்சி சபைத் தேர்தல்களின் அனைத்து கட்டங்களிலும் வாக்கெடுப்புத் தினமாக சனிக்கிழமை பயன்படுத்தப்பட்டது.
(பின்னிணைப்பு 46,47)

XI ஆம் பிரிவு

தேர்தலை நடாத்துதல்

பின்னணி

245. 2011 பெப்ரவரி மாதம் 01 ஆம் திகதி வெளியிடப்பட்ட வாக்கெடுப்பு அறிவித்தலின் பிரகாரம் 301 உள்ளூராட்சி சபைகள் தொடர்பான தேர்தலை நடாத்துவதற்கு ஏற்பாடாகிய போதிலும் நிராகரிக்கப்பட்ட 68 வேட்புமனுக்கள் தொடர்பாக நீதிமன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டமையால் உரிய 65 உள்ளூராட்சி சபைகளின் தேர்தல் பிற்போடப்பட்டு 38(3) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல் வெளியிடப்பட்டது. அத்தோடு முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு மற்றும் கரைத்துறைப்பற்று ஆகிய பிரதேச சபைகள் இரண்டினதும் அதிகார எல்லைக்குள் நிலக்கண்ணி வெடிகள் அகற்றும் நடவடிக்கை மற்றும் மீள்குடியேற்றம் என்பன முற்றுப் பெறாமை காரணமாக அவ்வுள்ளூராட்சிச் சபைகள் இரண்டிற்குமுரிய தேரதல் 38(3) ஆம் உப பிரிவின் கீழ் பிற்போடப்பட்டதற்கான அறிவித்தல் 1716/1 ஆம் இலக்க மற்றும் 2011.07.25 ஆம் திகதிய வர்த்தமானியில் வெளியிடப்பட்டது.

246. இதற்கு முன்னரும் குறிப்பிட்டுள்ளவாறு 234 உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல்கள் 2011.03.17 ஆந் திகதியும் நீதிமன்ற நடவடிக்கைகள் முடிவடையாமையால் பிற்போடப்பட்ட 65 உள்ளூராட்சிச் சபைகளுக்குரிய தேர்தல் 2011.07.23 ஆந் திகதியும் 2011 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க அவசரகால (உள்ளூராட்சி சபைகள் மற்றும் நிருவாகம்) கட்டளையின் கீழ் பிற்போடப்பட்ட 22 உள்ளூராட்சிச் சபைகள் மற்றும் மீண்டும் தாபிக்கப்பட்ட கொழும்பு மாநகர சபை உள்ளிட்ட 23 உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல் 2011.10.08 ஆந் திகதியும் நடாத்தப்படுவதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டது. (குறிப்பு 14)

வாக்கெடுப்பு நிலையங்களை தயார்படுத்தல்

247. தேருநர் இடாப்பு வருடாந்தம் தயார் செய்யப்படுவதோடு ஒவ்வொரு வாக்கெடுப்பு மாவட்டத்திற்குமான வாக்கெடுப்பு நிலையமும் தீர்மானிக்கப்படும். உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தலொன்றின் போது அப்பாராளுமன்றத் தேருநர் இடாப்பை ஒவ்வோரு உள்ளூராட்சி சபைக்கு அமைய பிரித்தொதுக்க நேரிடுவதோடு, அதில் சில வாக்கெடுப்பு மாவட்டங்கள் உள்ளூராட்சி சபைகள் இரண்டின் அல்லது மூன்றின் பிரிவுகளைக் கொண்டதாக இருக்க முடியும். அவ்வாறான சந்தர்ப்பமொன்றில் அவ்வாறு வேறாகின்ற பிரிவுகளை வெவ்வேறான வாக்கெடுப்பு மாவட்டங்களாகக் கருதி நடவடிக்கையெடுப்பதற்கு நேரிடும். அவ்வாறு பிரிக்கப்பகின்ற வாக்கெடுப்பு மாவட்டங்களுக்காக வெவ்வேறான வாக்கெடுப்பு நிலையங்களும் அறிமுகப்படுத்தப்படல் வேண்டும்.

248. எவ்வாறாயினும் தேர்தலின் ஆரம்ப நடவடிக்கைகளின் போது வாக்கெடுப்பு நிலையங்கள் தொடர்பில் மீண்டும் கவனிக்க வேண்டியிருக்கும். இதற்காக கிராம அலுவலர்கள் மூலம் ஒவ்வொரு வாக்கெடுப்பு நிலைய கட்டிடத்தினதும் நிலைமை பற்றி விரிவான அறிக்கையொன்று பெற்றுக் கொள்ளப்படும். கிடைக்கப் பெறுகின்ற அறிக்கைகளின் பிரகாரம் பரீட்சிக்கப்பட்டு தீர்மானமெடுத்து ஏற்றதெனக் கருதப்படுகின்ற வாக்கெடுப்பு நிலையங்கள் தொடர்பாக உதவித் தேர்தல்கள் ஆணையாளர் தனிப்பட்ட முறையில் பரீட்சித்து தீர்மானம் எடுத்தல் வேண்டும்.

249. வாக்கெடுப்பு நிலையக் கட்டிடத்தை வாக்கெடுப்பு நிலையமாக உரிய மேசைகள், கதிரைகள் சகிதம் தயார் செய்தல், வாக்கெப்பு நிலைய அலுவலர் குழாத்திற்கான நலனுதவிச் சேவைகளை வழங்குதல் என்பன உரிய பிரிவின் கிராம அலுவலருக்குப் பொறுப்பளிக்கப்படுவதோடு, அந்நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல் பிரதேச செயலாளருக்குப் பொறுப்பளிக்கப்படும்.

250. நிச்சயிக்கப்பட்ட வாக்காளர் எண்ணிக்கைக்கிணங்க வாக்கெடுப்பு நிலையத்திற்கு வருகைதருகின்ற அலுவலர் குழாம், போட்டியிடுகின்ற கட்சிகள் மற்றும் குழுக்களின் எண்ணிக்கைக்கிணங்க வாக்கெடுப்பு நிலையத்தில் வீற்றிருக்க அனுமதிக்கப்படும் வாக்கெடுப்பு நிலைய முகவர்களின் எண்ணிக்கை மற்றும் அனுமதி வழங்கப்பட்ட கண்காணிப்புக் குழுக்களுக்கிணங்க வசதி அளிக்கப்பட வேண்டிய வாக்கெடுப்பு நிலைய கண்காணிப்பாளர் எண்ணிக்கை என்பவற்றைக் கருத்திற் கொண்டு வாக்கெடுப்பு நிலையம் அமைய வேண்டிய விதம் மற்றும் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகள் என்பன தொடர்பாக உதவித் தேர்தல்கள் ஆணையாளர் கிராம அலுவலர்களை அறிவூட்டுதல் வேண்டும்.

சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்குப் பொருட்களாகியவற்றைக் கையளித்தல்

251. வாக்கெடுப்பிற்கு முந்திய தினம் முற்பகலில் சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலர்களுக்கான நியமனக்கடிதம் பகிர்ந்தளிப்பு நடவடிக்கைகள் வாக்கெண்ணும் நிலையச் சூழலில் நிகழ்வதோடு, வாக்கெடுப்பு நிலையத்திற்குத் தேவையான பொருட்களை வழங்குதல் உரிய வாக்கெடுப்பு மாவட்டத்தின் வாக்குச்சீட்டுக்கள் எண்ணப்படுகின்ற வாக்கெண்ணல் நிலையத்தில் வைத்தே மேற்கொள்ளப்படும். மறுநாள் வாக்கெடுப்பு முடிவடைந்து விரைவாக இவ்விடத்திற்கு வாக்குப் பெட்டிகள் மற்றும் உரிய ஆவணங்கள் கையளிப்பதை பரவச் செய்வதற்காக இவ்வொழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

252. நேரகாலத்துடன் சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலர்களுக்கு அனுப்பப்படுவது நியமனக் கடிதங்களைக் கையேற்பதற்கான அழைப்புக் கடிதங்கள் மாத்திரமே. அக்கடிதத்துடன் அலுவலரின் முறையான நியமனத்திற்குரித்தான அடையாள இலக்கமொன்று அனுப்பப்படும். இதனால் எதிர்பார்க்கப்படுவது சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலர்களை அரசியல்வாதிகளிடமிருந்து பாதுகாத்துக் கொள்வதேயாகும்.

253. சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலருக்கு அறிவித்தல் பத்திரத்தின் பிரகாரம் குறித்த பொருட்களைக் கையளிப்பது அதற்காக நியமிக்கப்பட்ட உதவித் தெரிவத்தாட்சி அலுவலரொருவர்

உள்ளிட்ட பணியாட் குழுவினரால் மேற்கொள்ளப்படும். சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலர் பொருட்களைக் கையேற்றதன் பின்னர் வாக்கெடுப்பு நிலையத்திற்குச் செல்ல வேண்டுமென்பதோடு, கையேற்றும் பத்திரத்திற்கிணங்க அனைத்து பொருட்களும் குறைவின்றி தமக்குக் கிடைத்துள்ளதாவென்பதை உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.
வாக்கெடுப்பு நிலைய பணியாட் குழுவினர்

254. வாக்கெடுப்பு நிலைய பணியாட் குழுவாகத் தேர்ந்தெடுக்கப்படும் அலுவலர்களில் சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலர்களுக்காக ஒவ்வொரு மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்திலும் முன்னெடுக்கப்படுகின்ற அறிவுறுத்தல் வகுப்புகள் மூலம் தேர்தலுக்கான அனைத்து நடவடிக்கைகள் தொடர்பாகவும் பூரணமான பயிற்சி பெற்றுக் கொடுக்கப்படும். அநேகமாக இவ்வலுவலர்கள் பல வருடங்களாக சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலர்களாக கடமையாற்றியிருப்பினும் இவ்வறிவுறுத்தல் வகுப்புகளுக்கு வருகைதரவேண்டியது கட்டாயமான தேவைப்பாடொன்றாகும். ஏனைய அலுவலர்களைப் பயிற்றுவிக்கும் பொறுப்பு சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலரிடம் ஒப்படைக்கப்படும். அவ்வலுவலர்களுக்கான எழுத்துமூல அறிவுறுத்தல்கள் நியமனக் கடிதத்துடன் அனுப்பப்படுவதோடு, வாக்கெடுப்பிற்கு முந்திய தினம் வாக்கெடுப்பு நிலையத்தில் நடாத்தப்படுகின்ற ஒத்திகையின் போது வாக்கெடுப்பு நிலையத்தில் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகள் தொடர்பாகத் தமது வாக்கெடுப்பு நிலைய அலுவலர் குழாத்தை அறிவுறுத்துமாறு சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலர்கள் அறிவுறுத்தப்படுவர்.
(அட்டவணை 01)

255. இந்த ஒத்திகையில் வாக்குச் சீட்டுக்கள் அடங்கிய இலச்சினையிடப்பட்ட பக்கெட்டுக்கள், மைபூச்சு கருவிகள் அடங்கிய பக்கெட்டுக்கள் மற்றும் இரகசிய இலச்சினைகளுடைய பக்கெட்டுக்களை திறக்கக் கூடாதென்பதோடு, வாக்குப் பெட்டி., தேருநர் இடாப்பு, சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரது குறிப்பேடு ஆகிய ஏனைய அனைத்து ஆவணங்களையும் பரீட்சித்துப் பார்ப்பதற்கு இடமளிக்குமாறு மேலும் அறிவுறுத்தப்படும்.

வலயப் பொறுப்பு உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள்

256. ஒவ்வோர் உள்ளூராட்சிச் சபைக்கும் உரித்தான வாக்கெடுப்பு நிலையங்களை பல வலயங்களாகப் பிரித்து அவ்வொவ்வொரு வலயத்துக்குமான வாக்கெடுப்பு நிலையங்களின் வாக்கெடுப்பு நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்காக வலயப் பொறுப்பு உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள் நியமிக்கப்படுவர். வலயப் பொறுப்பு உதவித் தெரிவத்தாட்சி அலுவலரொருவராக நியமிக்கப்படுபவர் வாக்கெடுப்பு நிலையக் கடமைகள் தொடர்பாக நல்ல புரிந்துணர்வுள்ள அலுவலராவார். எவ்வாறாயினும் சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலர்களுக்கு வழங்கப்படும் அறிவுறுத்தல்கள் அனைத்தும் வலயப்பொறுப்பு உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கும் வழங்கப்படல் வேண்டும்.

257. சாதாரணமாக ஒரு வலயத்திற்கு 5 – 8 வரையான வாக்கெடுப்பு நிலையங்கள் உள்ளடக்கப்படும். வாக்கெடுப்பு நிலையங்களுக்கிடையிலான தூரம், நிலப்பரப்பு, சனச்செறிவு என்பனவற்றைக் கருத்திற் கொண்டு ஒரு வலயத்திற்குள் உட்சேர்க்கப்பட வேண்டிய வாக்கெடுப்பு நிலையங்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும். இவ்வாறு முதலாவது கட்டத்திற்காக 1407 வலயங்களும் இரண்டாவது கட்டத்திற்காக 445 வலயங்களும் மூன்றாவது கட்டத்திற்காக 233 வலயங்களும் என மொத்தம் 2085 வலயங்கள் பிரித்தொதுக்கப்பட்டன. அதன் பிரகாரம் வாக்கெடுப்பிற்காக 2085 வலயப் பொறுப்பு உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர்.

258. வலயப் பொறுப்பு உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள் தமது வலயத்திற்குரிய வாக்கெடுப்பு நிலையங்களுக்குள் ஒத்திகை பார்க்கும் சந்தர்ப்பத்திலும் வாக்கெடுப்பு ஆரம்பமாகும் சந்தர்ப்பத்திலும் வாக்கெடுப்பு முடிவடைகின்ற சந்தர்ப்பத்திலும் அந்நடவடிக்கைகளைக் கண்காணித்து சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலருக்கு ஏதேனும் ஒத்துழைப்பு தேவைப்படின் அதனை வழங்குமாறு அறிவிக்கப்படுவர்.வலயத்தினுள்பயணித்துக்கொண்டிருக்கும்சந்தர்ப்பத்தில் தமது ஒத்துழைப்பு கூடுதலாகத் தேவைப்படுவது எந்த வாக்கெடுப்பு நிலையத்தின் சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலருக்கென்பது உதவித் தெரிவத்தாடசி அலுவலரினால் தீர்மானிக்கப்பட வேண்டும். வலயப் பொறுப்பு உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள் தமது வலயத்திற்குரிய அனைத்து வாக்கெடுப்பு நிலையங்களிலும் வாக்கெடுப்பு நடவடிக்கைகள் தொடர்பாக கவனம் செலுத்தவதோடு, வாக்கெடுப்பின் முடிவில் அதுபற்றிய அறிக்கையொன்றைத் தெரிவத்தாட்சி அலுவலருக்கு வழங்குதலும் வேண்டும்.

வாக்கெடுப்பு நிலைய முகவர்கள்

259. உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் கட்டளைச்சட்டத்தின் 49(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் போட்டியிடுகின்ற ஒவ்வொரு கட்சி, சுயேச்சைக் குழு சார்பாக ஒரு வாக்கெடுப்பு நிலையத்திற்கு இருவர் வீதம் முகவர்களை நியமிக்க முடியும். அம்முகவர்களது கடமையாவது ஆள்மாறாட்ட வாக்களிப்புக்கு வருகை தருகின்ற போலி வாக்காளர்களை இனம்காணுவதென்பதால் வாக்கெடுப்பு நிலைய முகவர்களைத் தேர்ந்தெடுக்கும் போது வாக்காளர்களை இனங்காணக்கூடிய உரிய வாக்கெடுப்பு மாவட்ட அதிகார எல்லைக்குள் வதிகின்ற நபர்களிலிருந்து தேர்ந்தெடுப்பது மிகவும் உசிதமாகும்.

260. வாக்கெடுப்பு நிலைய முகவர்களை நியமித்தல் கட்சியாயின் கட்சியின் செயலாளரால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட முகவரால் சுயேச்சைக் குழுவாயின் குழுத் தலைவரினால் செய்யப்படல் வேண்டும். செல்லுபடியான ஆளடையாள ஆவணமொன்றின் மூலம் வாக்காளர் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துதல் கட்டாயமாக்கப்பட்டுள்ளமையால் ஆள்மாறாட்ட வாக்களிப்பு தவிர்க்கப்படுகின்றது. இப்பணியோடு வாக்கெப்பு நிலைய முகவர்களின் கடமைகளும் முற்றுப் பெறுகின்றன.

261. எவ்வாறாயினும், முகவர்களின் பங்குபற்றுகை தொடர்பாக ஒவ்வொரு வாக்கெடுப்பு நிலையத் தகவல்களையும் பரீட்சிக்கும்போது வெளிப்படும் நிலைமையாதெனில், சில வாக்கெடுப்பு

நிலையங்களுக்கான வாக்கெடுப்பு நிலைய முகவர்களை நியமிப்பதில் சில கட்சிகள் மற்றும் குழுக்கள் ஊக்கமெடுக்கவில்லையென்பதாகும். இவ்வாறு நிகழ்வதற்கான ஒரு காரணமாகக் கொள்ள முடிவது யாதெனில், போலியாக சில கட்சிகளும் குழுக்களும் போட்டியிட முன்வருவதேயாகும். அக்கட்சிகள் மற்றும் குழுக்கள் பிரதான கட்சிகளின் தேவைப்பாட்டின் பேரில் போட்டியிட முன்வந்துள்ளமையால் அக்கட்சிகளுக்கு அவசியமெனத் தீர்மானிக்கின்ற வாக்கெடுப்பு நிலையங்கள் தொடர்பாக மாத்திரமே முகவர்களை நியமனச் செய்கின்றமையைக் காணக்கூடியதாகவுள்ளது.

வாக்கெடுப்பு நிலையக் கண்காணிப்பாளர்கள்

262. இதற்கு முன்னர் நடாத்தப்பட்ட தேர்தல்கள் பலவற்றில் போன்றே இத்தேர்தலிலும் சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலொன்றுக்கான மக்கள் செயற்பாடு (PAFFREL) மற்றும் தேர்தல் வன்முறைகள் கண்காணிப்பு நிலையம் (CMEV) ஆகிய இரண்டு கண்காணிப்பு நிறுவனங்களிலிருந்து ஒரு முகவர் வீதம் வாக்கெடுப்பு நிலையத்தினுள் தரித்திருந்து கண்காணிப்பதற்கும் சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான அமைப்பு (CaFFE), செப்கோ மக்கள் அமைப்பு, மனித அபிவிருத்தி அமைப்பு, தேர்தல்கள் கண்காணிப்பு வலயமைப்பு (NEM), சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான அமைப்பு (MFFE), தேசிய கண்காணிப்பு நிலையம் (NPOC) போன்ற கண்காணிப்பு அமைப்புகளுக்கு வாக்கெடுப்பு நிலையத்திற்கு வெளியே இருந்து கண்காணிப்பதற்கும் அனுமதி வழங்கப்பட்டது.
(பின்னிணைப்பு 48)

263. அக்கண்காணிப்பு நிறுவனங்களிலிருந்து எதிர்பார்க்கப்பட்டது யாதெனில், வாக்கெடுப்பு முடிவில் வாக்கெடுப்பு நிலையத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட விதம் தொடர்பான அறிக்கையொன்றைப் பெற்றுக் கொள்வதும் ஏதேனும் வன்முறைச்செயல் அல்லது குழப்பநிலை அல்லது மோசடி நடவடிக்கைகள் நடைபெறின் உடனடியாக அவை பற்றிய தகவல்களைத் தெரிவத்தாட்சி அலுவலருக்கும் தேர்தல்கள் செயலகத்தில் அமைக்கப்பட்டுள்ள முறைப்பாட்டு விசாரணை நிலையத்திற்கும் பெற்றுக் கொள்வதேயாகும். அதன்மூலம் உடனடியாக உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு அந்த முறைகேடுகளைத் தவிர்த்துக் கொள்ள முடியும். உண்ணாட்டு முகவர்களை வாக்கெடுப்பு நடவடிக்கைக் கண்காணிப்பாளர்களாக ஈடுபடுத்தியமை தொடர்பான அடிப்படைத் தகவல்கள் இவ்வறிக்கையின் VI ஆம் பகுதியில் உட்சேர்க்கப்பட்டுள்ளன.
(அட்டவணை 02)

செயற்படுத்தப்பட்ட விசேட நடவடிக்கைகள்

264. 2011.01.06 மற்றும் 2011.08.04 ஆகிய தினங்களில் வேட்புமனு கோரப்பட்ட இவ்வுள்ளூராட்சி சபைத் தேர்தலில் காணக்கிடைத்த சிறப்பம்சம் யாதெனில், வேட்புமனுக்களைக் கையளித்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் எண்ணிக்கையாகும். ஒருசில கட்சிகள் தமது கட்சிகளின் தேவையை அடைந்து கொள்வதற்காக வேறு கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களை போலியாக போட்டியிட வைத்ததைக் காணக்கூடியதாகவிருந்தது. அதற்கு மேலதிகமாக சில வேட்பாளர்கள் மோசடியாக விருப்புகளைச் ஒன்று திரட்டிக் கொள்ளும் எதிர்பார்ப்புடன் தமது இலக்கத்தை பிரதேசத்தின் பிரபலமான நபர்களின் நிழற்படத்துடன் சேர்த்து துண்டுப்பிரசுரங்களைப் பகிர்ந்தளித்ததையும் காணக்கூடியதாகவிருந்தது. அவ்வாறான சந்தர்ப்பங்கள் தொடர்பாக உடனடியாக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

265. விகிதாசார பிரதிநிதித்துவ முறையில் கட்சிகளுக்கிடையிலும் ஒரே கட்சியின் வேட்பாளர்களிடையிலும் வாக்குகளையும், விருப்புகளையும் ஒன்று திரட்டுதல் தொடர்பாகப் பலத்த போட்டி நிலவியதை தேர்தல்களின்போது காணக்கூடியதாகவிருந்தது. அதன் காரணமாகவே வேட்புமனுத் தினத்திற்குப் பின்னர் சட்டவிரோத சுவரொட்டிகள், பதாகைகள் மற்றும் உருவப்படங்களைக் காட்சிப்படுத்தல், அரச உடமைகளைத் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்காக பயன்படுத்திக் கொள்ளல் போன்ற முறைகேடுகள் தொடர்பாக பல்வேறு தரப்பினர்களிடமிருந்தும் கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளின் எண்ணிக்கை பெருமளவில் அதிகரித்துக் காணப்பட்டது. அந்நிலைமை பற்றி தேர்தல்கள் ஆணையாளர் உடனடியாக பொலிஸ் மாஅதிபர் மற்றும் ஏனைய உரிய பிரிவுகளை அறிவூட்டியதோடு, சுவரொட்டிகள், பதாகைகள் மற்றும் உருவப்படங்களை அகற்றுவதற்கும் அரச சொத்துக்களைக் கையாளுவதைத் தடுப்பதற்கும் முடிந்தளவு அனைத்து ஒழுங்குகளையும் எடுத்தார். இத்தேர்தல் மூன்று கட்டங்களாக நடாத்தப்பட்டமை சட்டவிரோத தேர்தல் பிரச்சார நடவடிக்கைகள் அதிகரித்தமைக்கான ஒரு காரணமாகும். அக்காரணத்தினால் அரசியற் கட்சிகளில் விசேடமாக அதிகாரத்திலுள்ள கட்சியின் வலுவான அழுத்தமொன்று உரிய வாக்கெடுப்புப் பிரதேசத்தின் பால் ஈர்க்கப்பட்டது. இரண்டாவதாக சட்டவிரோத பிரச்சார நடவடிக்கைகள் அதிகரித்தமையையும் அதனூடாக வன்முறைச் சம்பவங்கள் நிகழ்ந்ததையும் காணக்கிடைத்தது. அவ்வாறே கட்சி அலுவலகங்களை அமைப்பது தொடர்பிலும் சட்டரீதியான மட்டுப்பாடுகள் மற்றும் உடன்பாடுகளை மீறிச் செயற்பட்டதையும் காணக்கூடியதாகவிருந்தது.

266. தேர்தல்கள் ஆணையாளர் அமைதியானதும் நியாயமானதுமான தேர்தலொன்றை நடாத்துவதற்காக போட்டியிடுகின்ற கட்சிகளின் செயலாளர்களைத் தருவித்து பொலிஸ் மாஅதிபரின் பங்குபற்றுதலோடு நடாத்திய ஆலோசனைக் குழுக் கூட்டங்களின் பிரதான தலையங்கமாகக் கொள்ளப்பட்டதும் இச்சட்டவிரோத தேர்தல் பிரச்சார நடவடிக்கைகள் மற்றும் வன்முறைச் சம்பவங்களேயாகும்.

267. சட்ட வலுவாக்க நடவடிக்கைகள் பொலிஸ் மாஅதிபர் உள்ளிட்ட அனைத்து பொலிஸ் அலுவலர்களால் நிறைவேற்றப்பட வேண்டுமாகையால் அதற்கான ஆலோசனைகள் அக்குழு கூட்டங்களில் வைத்து வழங்கப்பட்டன. அதற்கு மேலதிகமாக ஆலோசனைக் குழுக் கூட்டங்களில் கட்சிச் செயலாளர்களினால் முன்வைக்கப்பட்ட சில வேண்டுகோள்கள் தொடர்பாக கீழ்க்காணப்படும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அவற்றில் சில இதற்கு முன்னர் நடாத்தப்பட்ட தேர்தல்களிலும் செயற்படுத்தப்பட்டதென்பதை ஈண்டு குறிப்பிட்டாதல் வேண்டும். தேர்தலொன்றின்போது தேர்தல்கள்

ஆணையாளர் உள்ளிட்ட அலுவலர் குழாத்திற்கு நியதிச் சட்ட கருமங்களை நிறைவேற்றுவதற்கு அதிக சிரமத்தை எடுக்க வேண்டியிருப்பது, சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலொன்றை உறுதிப்படுத்துவதற்காக அரசியல் அதிகாரங்களும் அவர்களின் ஆதரவாளர்களும் மேற்கொள்கின்ற சட்டவிரோத செயல்களைத் தடுப்பதும் வாக்கெடுப்பு மற்றும் வாக்கெண்ணல் தொடர்பாக எழுகின்ற சந்தேகங்களை நீக்குவதற்காகத் தேவையான ஒழுங்குகளை மேற்கொள்வதுமே என்பதை இங்கு குறிப்பிட்டாதல் வேண்டியுள்ளது. இதற்காகப் பின்பற்றப்பட்ட செயற்பாடுகளில் பின்வருவன முக்கியமானவையாகும்.

I. ஒவ்வொரு நிருவாக மாவட்டத்தையும் அளாவிய ரீதியில் அமைக்கப்பட்டுள்ள சட்டவிரோத பதாகைகள், உருவப்படங்கள் தொடர்பாக விரைவான அறிக்கையொன்றை மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களிடமிருந்து பெற்று பொலிஸ் மாஅதிபருக்கு வழங்குதல்.

II. அரச உடமைகளை முறையற்ற விதத்தில் கையாளுவதைத் தடுப்பதற்கு அனைத்து அமைச்சின் செயலாளர்களுக்கும் தேவையான எழுத்துமூல அறிவுறுத்தல்களை வழங்கலும் அமைச்சுக்களின் மேலதிக செயலாளர்களை அழைத்து அது தொடர்பாக விபரமாகக் கலந்துரையாடலும்.

III. அரச மற்றும் தனியார் போன்ற ஊடக நிறுவனங்கள் அனைத்திற்குமான ஊடக வழிகாட்டு நெறிகளை விநியோகித்தலும் வெகுசன ஊடக நிறுவனங்களின் தலைவர்களை அழைத்து வழிகாட்டு நெறிகளை செயற்படுத்த வேண்டிய விதம் பற்றிக் கலந்துரையாடலும்.

IV. அரசியல் தலையீட்டுடன் மேற்கொள்ளப்பட்டதாக முறைப்பாடுகள் செய்யப்பட்ட நியமனங்கள் மற்றும் இடமாற்றங்களை ஆராய்ந்து சேவைத் தேவைப்பாட்டிற்காகச் மேற்கொள்ளப்பட்டவையென உறுதிப்படுத்தப்படாவிடில் அந்நியமனங்கள் மற்றும் இடமாற்றங்களை தேர்தல் முடிவடையும் வரை பிற்போடுவதற்கு அறிவுறுத்துதல்.

V. அரச வாகனங்கள் மற்றும் அரச சொத்துக்களைத் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபடுத்தியுள்ளமை உறுதிப்படுத்தப்படும் சந்தர்ப்பங்களில் அவ்வாறான நிலைமையைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கையெடுத்தல்.

VI. வாக்கெடுப்பு நிலையக் கடமைகள் மற்றும் வாக்கெண்ணல் கடமைகளுக்காக தேர்தல் இடாப்பு பரப்பிற்குள் கடமையாற்றுகின்ற அரச ஊழியர்களுக்கு மேலதிகமாக அருகிலுள்ள மாவட்டங்களிலிருந்தும் அலுவலர் குழாத்திலிருந்தும் மேற்பார்வை மட்டத்திலான அலுவலர்களை அனுப்புவதற்கு நடவடிக்கையெடுத்தல்.

VII. வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்கெடுப்பு முடிவில் இலச்சினையிடப்பட்டு தயாரிக்கப்படுகின்ற பெட்டியை கனவளவில் கூடி பொலித்தீன் உறையில் (வெளித் தெரியத்தக்க) இட்டு பழுதடையாமல் கழற்ற முடியாதவாறான பிளாஸ்டிக் பூட்டுப் போட்டு வாக்கெண்ணும் நிலையம் வரை வாகனத்தில் எடுத்துச் செல்லுதல்.

VIII. வாக்கெடுப்பின் பின்னர் தயாரிக்கப்படுகின்ற வாக்குச்சீட்டுக் கணக்கின் பிரதியொன்றை வாக்கெடுப்பு முகவர்களுக்கும் பெற்றுக் கொடுத்தல்.

IX. வாக்கெடுப்பு நிலைய முகவர்களால் வாக்குப் பெட்டிகளில் ஒட்டப்படுகின்ற ஸ்டிக்கரின் மாதிரியை சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலர்கள் ஊடாக பிரதான வாக்கெண்ணும் அலுவலர்களுக்கு அனுப்ப வேண்டாமெனக் கருதுகின்ற முகவர்களுக்காக வாக்குப் பெட்டியின் உட்புறத்திலும் ஸ்டிக்கர் ஒன்றை ஒட்டுவதற்கு அனுமதி வழங்கல்.

X. வாக்கெடுப்பு நிலையத்தின் ஒரு முகவருக்கு வாக்குப் பெட்டியை எடுத்துச் செல்லுகின்ற வாகனத்தின் பின்னால் தமது வாகனமொன்றில் வாக்கெண்ணும் நிலையம் வரை செல்வதற்குத் தேவையான அனுமதிப் பத்திரமொன்றை ஒவ்வொரு கட்சி, குழுவுக்குமென அவ்வாக்கெடுப்பு நிலைய சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலர் மூலம் வழங்குவதற்கு நடவடிக்கையெடுத்தல்.

XI. வாக்குப் பெட்டிகள் வாக்கெண்ணும் நிலையத்திற்குக் கிடைப்பதற்கு முன்னர் ஒவ்வொரு கட்சி/ குழு சார்பாக அந்நிலையத்திற்கென பெயர் குறிப்பிடப்பட்டுள்ள வாக்கெண்ணும் முகவர்களில் ஒருவருக்கு பி.ப. 3.30 மணியிலிருந்து வாக்கெண்ணும் நிலையத்தில் தங்கியிருந்து வாக்குப் பெட்டிகள் கிடைப்பதைக் கண்காணிக்க அனுமதி வழங்குதல்.

XII. வாக்கெண்ணும் நிலையத்தில் காபன் கடதாசியில் தயாரிக்கப்படுகின்ற கட்சி மற்றும் குழுக்கள் பெற்றுக் கொண்ட வாக்குத் தொகை பற்றிய பெறுபேறுகளை அவ்வாக்கெண்ணும் நிலையத்தில் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடத்தை உரித்தாக்கிக் கொண்ட கட்சி அல்லது குழுக்களின் முகவர்களுக்கு ஒரு பிரதி வீதம் வழங்குதல்.

XIII. விருப்புகள் எண்ணப்படுகின்ற சந்தர்ப்பத்தில் உரிய கட்சியின்/ குழுவின் அனைத்து வேட்பாளர்களுக்கும் ஒவ்வொரு வாக்கெண்ணும் நிலைய நடவடிக்கைகளையும் கண்காணிப்பதற்கு ஏற்றவாறு வாக்கெண்ணும் நிலையங்களுக்குள் உட்பிரவேசிப்பதற்கு அனுமதி வழங்குவதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளல்.

XIV. விருப்பு முடிவுகளின் பிரதியொன்றை உரிய கட்சியின் செயலாளர்கள் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட முகவர்கள், சுயேச்சைக் குழுக்களின் தலைவர்களுக்குப் பெற்றுக் கொடுத்தல்.

XV. உள்ளூரதிகார சபை தேர்தல் கட்டளைச் சட்டத்திற்கமைய ஒரு வாக்கெண்ணல் மண்டபத்திற்கு ஒவ்வொரு கட்சி/ குழுக்களினாலும் இரண்டு வாக்கெண்ணல் முகவர்களை நிமயனம் செய்ய முடியுமெனினும் அரசியல் கட்சிகளின் செயலாளர்கள், நிரந்தர முகவர்கள் ஆகியோரோடு கலந்துரையாடியதன் பின்னர் அந்தந்த சபைகளுக்காக போட்டியிடுகின்ற கட்சி/ குழுக்களின் எண்ணிக்கையை ஆராய்ந்து பார்த்து அம்முகவர் எண்ணிக்கையை ஆகக் கூடியது 5 என்றவாறு மாற்றுதல். (275 ஆம் பந்தியைப் பார்க்கவும்)

XII ஆம் பிரிவு

வாக்குகள் மற்றும் விருப்புகளை எண்ணல்

பின்னணி

268. உள்ளூரதிகார சபைத் தேர்தல் தொடர்பாக விகிதாசார தேர்தல் முறையை அறிமுகப்படுத்தியதைத் தொடர்ந்து 1979 மற்றும் 1983 ஆம் ஆண்டுகளில் நடாத்தப்பட்ட உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்களின் போது தாம் விரும்பிய கட்சிக்கு வாக்கினை அடையாளமிடுவதற்கு வாக்காளருக்கு உரிமையிருந்ததோடு, ஒவ்வொரு கட்சி மற்றும் சுயேச்சைக் குழு பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கைக்கேற்ப ஒவ்வொரு கட்சிக்கும், குழுவிற்கும் பொதுவாக உரித்தாகும் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல் உரிய வேட்புமனுப் பத்திரத்தில் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ள முன்னுரிமை தொடரொழுங்கிற்கேற்ப மேற்கொள்ளப்பட்டது.

269. வேட்புமனுப்பத்திரத்தில் பெயர்கள் குறிப்பிடப்படும் தொடரொழுங்கு கட்சி அதிகாரத்தினால் தீர்மானம் செய்யப்பட்டமையால் இம்முறை தொடர்பாக வாக்காளர் காட்டிய பெரும் எதிர்ப்பின் காரணமாக உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக வாக்காளருக்கும் சில உரிமைகளை வழங்குமாறு தேர்வுக் குழுவிற்குக் கருத்து முன்வைக்கப்பட்டது. அதன் பயனாக 1987 ஆம் ஆண்டு 24 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்கள் திருத்தச் சட்டத்தின் மூலம் விருப்புகள் மூன்றை தாம் விரும்பிய வேட்பாளர்கள் மூவருக்கு அடையாளமிடுவதற்கு அவகாசம் வழங்கப்பட்டது.

270. எண்ணிக்கை அடிப்படையில் சிறுபான்மையினராகவுள்ள இனக் குழுமங்களின் வாக்காளர் தாம் விரும்பிய வேட்பாளருக்கு அல்லது கூட்டமைப்புக் கட்சிகளின் அங்கத்தவர்களுக்கு/அன்பர்களுக்கு தமது கட்சியின் ஒரு வேட்பாளரை மொத்த வேட்பாளர் பட்டியலிலிருந்து தேர்ந்தெடுத்துக் கொள்வதற்கான சந்தர்ப்பமொன்றை வழங்கத்தக்கவாறு 1990 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்கள் திருத்தச் சட்டம் வாக்காளரொருவருக்கு தனது விருப்பு வாக்குகள் மூன்றையும் ஒரே வேட்பாளருக்கேனும் அடையாளமிடும் முறை அறிமுகப்படுத்தப்பட்டது. அதன் பிரகாரம் உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்களில் முதலில் தாம் விரும்புகின்ற கட்சியை அல்லது சுயேச்சைக் குழுவைத் தேர்ந்தெடுப்பதற்காக ஒரு வாக்கையும் இரண்டாவதாக விருப்புகளை அக்கட்சியின் கீழ் போட்டியிடுகின்ற வேட்பாளர் ஒருவருக்கு அல்லது இருவருக்கு அல்லது மூவருக்கு அடையாளமிடுவதற்கு அவகாசமளிக்கப்பட்டது. இதற்கிணங்க பிரகாரம் வாக்குச் சீட்டில் முதலில் போட்டியிடுகின்ற கட்சி மற்றும் சுயேச்சைக் குழு உட்சேர்க்கப்பட்டதோடு, இரண்டாவதாக போட்டியிடுகின்ற வேட்பாளர்களின் எண்ணிக்கைக்கு சமமாக ஒவ்வொரு வேட்பாளரினதும் இலக்கத்தைக் கொண்ட சதுரங்களும் அதன் எதிரில் வெற்றுச் சதுரங்கள் இரண்டு வீதமும் இரு வரிசைகளாக உட்சேர்க்கப்பட்டன.

271. அதற்கமைய வாக்கெண்ணும்போது முதலில் எக்கட்சிக்கு அல்லது எக்குழுவிற்கு வழங்கப்பட்ட வாக்கென்ற விதத்தில் தெரிவு மேற்கொள்ளப்பட்டு ஒவ்வொரு கட்சிக்கும், குழுவிற்கும் அளிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கையைக் கணக்கெடுப்பதும், அதன் பின்னர் கூடிய வாக்குத் தொகையைப் பெற்றுக் கொண்ட கட்சியிலிருந்து தொடங்கி உறுப்பினர் பதவியை உரித்தாக்கிக் கொண்ட அனைத்துக் கட்சிகளிலிருந்து ஒவ்வொரு வேட்பாளரும் பெற்றுக் கொண்டுள்ள விருப்புக்களின் எண்ணிக்கையைக் கணக்கெடுப்பதும் நிகழ்ந்தது. வாக்கெண்ணும் செயல்முறை மிகச் சிக்கலான ஒன்றாகவிருந்ததோடு, அக்காரணத்தினால் வாக்கெண்ணும் நிலையங்களையும் அலுவலர் குழாத்தையும் பகிர்ந்தளித்தல் மிக அவதானத்துடன் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது.

வாக்கெண்ணும் நிலையங்களைத் தயார் செய்தல்

272. மேற்குறிப்பிட்ட வாக்கெண்ணும் செயன்முறைக்கமைய வாக்கெண்ணல் மிகவும் சிக்கலானதும் கடினமானதுமான ஒரு பணியென்பதால் ஒவ்வோர் உள்ளூர் அதிகார சபைக்கும் பதிவு செய்யப்பட்டுள்ள வாக்காளர்களின் எண்ணிக்கைக்கிணங்க வாக்கெண்ணும் நிலையங்கள் பலவற்றை உள்ளடக்கியதாக பிரிக்கும் பணி முதலில் மேற்கொள்ளப்பட்டது. ஒரு நிலையத்திற்கு பதிவுசெய்யப்பட்ட வாக்காளர் எண்ணிக்கை கிட்டத்தட்ட 10000 என்ற அடிப்படையில் ஒவ்வோர் உள்ளூர் அதிகார சபைகளுக்குமான வாக்கெண்ணும் நிலையங்களின் தொகை கணக்கிடப்பட்டது.

273. இதன்பின்னர், மாவட்டத்திலுள்ள உள்ளூர் அதிகார சபைகள், வாக்கெடுப்புப் பிரதேசங்களின் எழுத்துக்களின் தொடரொழுங்கைப் பின்பற்றி முதலில் மாநகர சபைகளும் இரண்டாவதாக நகர சபைகளும் இறுதியாக பிரதேச சபைகளும் என்றவாறு மாவட்டத்திலுள்ள அனைத்து மாநகர சபைகள், நகர சபைகள், மற்றும் பிரதேச சபைகளுக்கான வாக்கெண்ணும் நிலையங்கள் இலக்கமிடப்படுகின்றன. இதன்பின்னர் ஒவ்வோர் உள்ளூர் அதிகார சபைகளுக்குமான அஞ்சல் வாக்குகளை எண்ணும் நிலையங்கள் முறையாக இலக்கமிடப்படுகின்றன.
(குறிப்பு 15)

வாக்கெண்ணும் பணியாட் குழுவினர்

274. ஒவ்வொரு வாக்கெண்ணும் நிலையமும் பிரதம வாக்கெண்ணும் அலுவலரது பொறுப்பிலும் மேற்பார்வையிலும் செயற்பட வேண்டியதோடு, உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள், சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலர்கள் கனிஷ்ட தலைமைதாங்கும் அலுவலர்கள் மற்றும் எழுதுநர்கள் மட்டத்திலான அலுவலர்களின் ஒத்துழைப்புடன் வாக்கெண்ணல் நடைபெறும். சராசரியாக ஒரு வாக்கெண்ணும் நிலையத்திற்கு பிரதம வாக்கெண்ணும் அலுவலர் உட்பட 40 – 45 க்கு இடைப்பட்ட தொகையினரான பணியாட்கள் நியமிக்கப்படுவர். மண்டபத்தின் இடவசதிக்கேற்ப இத்தொகை சிறிதளவு கூடிக்குறைய இடமுண்டு. அஞ்சல் வாக்கெண்ணும் மண்டபத்திற்காக சராசரியாக 10 – 15 க்கு இடைப்பட்ட அலுவலர்கள் நியமிக்கப்படுவர்.

வாக்கெண்ணும் முகவர்கள்

275. உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச்சட்டத்தின் 60 ஆம் பிரிவிற்கிணங்க ஒவ்வொரு வாக்கெண்ணும் மண்டபத்திலும் ஒரு கட்சியிலிருந்து அல்லது குழுவிலிருந்து இரு வாக்கெண்ணும் முகவர்கள் வீதம் நியமிக்கப்பட வேண்டியது சட்ட ஏற்பாடாகவிருந்தபோதிலும் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் கட்சிச் செயலாளர்கள், நிரந்தர முகவர்களினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கமைய எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் ஒவ்வோர் உள்ளூராட்சி சபைகளுக்கும் போட்டியிடுகின்ற கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் எண்ணிக்கைக்கிணங்க வாக்கெண்ணும் முகவர்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்பட்டது. அதற்கமைய

அணிகளின் எண்ணிக்கை 1-5 எனின் முகவர்கள் 05 பேர் வீதம்
அணிகளின் எண்ணிக்கை 6-10 எனின் முகவர்கள் 04 பேர் வீதம்
அணிகளின் எண்ணிக்கை 10 லும் அதிகமாயின் முகவர்கள் 03 பேர் வீதம்

276. வாக்கெண்ணும் மண்டபத்தின் நடவடிக்கைகள் பற்றி அரசியற் கட்சிகளுக்கு மற்றும் சுயேச்சைக் குழுக்களுக்கு கூடிய எண்ணிக்கையிலான முகவர்களை நியமிப்பதற்காக அவகாசத்தைப் பெற்றுக் கொடுப்பதே இதன் மூலம் எதிர்பார்க்கப்பட்டது. அம்முறையினால் எப்பொழுதும் வாக்கெண்ணும் செயற்பாடு மற்றும் அந்நடவடிக்கையில் ஈடுபடுகின்ற அலுவலர்கள் தொடர்பாக வேட்பாளர்களுக்கேற்படுகின்ற சந்தேகங்களையும் தேவையற்ற அச்சத்தையும் ஓரளவேனும் அகற்றவோ அல்லது முற்றாக அகற்றவோ முடியுமென எதிர்பார்க்கப்பட்டது.

வாக்கெண்ணல் அறிவித்தல்.

277. உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச்சட்டத்தின் 61(1) ஆம் உப பிரிவின் கீழ் தெரிவத்தாட்சி அலுவலர் அத்தேர்தலில் போட்டியிடுகின்ற கட்சிகளின் செயலாளர்கள், அதிகாரம் பெற்ற முகவர்கள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் தலைவர்களுக்கு வாக்கெண்ணல் ஆரம்பிக்கப்படும் நேரம், வாக்கெடுப்பு நிலையத்தின் அமைப்பு, அந்நிலையத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ள வாக்கெண்ணும் நிலையங்கள் பற்றி அறிவிக்கின்ற கடிதமே வாக்கெண்ணல் அறிவித்தலாகும். இவ்வறிவித்தலை அனுப்ப வேண்டிய குறிப்பிட்ட தினம் பற்றி சட்டத்தில் குறிக்கப்படவில்லையாயினும் வாக்கெண்ணும் முகவர்களை நியமித்துக் கொள்வதற்கு போதியளவு கால அவகாசம் கிடைக்கத்தக்கதாக கட்சிகள் மற்றும் குழுக்கள் இதன் மூலம் அறிவூட்டப்படல் அவசியமாகும். வாக்கெண்ணும் மண்டபங்களுக்குரிய அனைத்து வாக்குப் பெட்டிகளும் கிடைத்த பின்னர் தேவையான அலுவலர் குழாமும் வருகை தந்திருப்பின் வாக்கெண்ணலை ஆரம்பிக்க முடியும். ஆனால் வாக்கெண்ணல் அறிவித்தலில் அறிவிக்கப்பட்ட நேரத்திற்கு முன்னர் வாக்கெண்ணலை ஆரம்பிக்கக்கூடாது. எனவே வாக்கெண்ணல் அறிவித்தலூடாக பி.ப 7.00 மணிக்கு வாக்கெண்ணல் ஆரம்பிக்கப்படுமென அறிவிக்கப்பட்டது.

வாக்கெண்ணலை ஆரம்பிப்பதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள்

278. வாக்கெண்ணும் மண்டபத்திற்கு குறிப்பிட்ட வாக்குப் பெட்டிகள் அனைத்தும் கிடைக்கப்பெற்று, வாக்கெண்ணல் அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட நேரமும் கடந்திருப்பின் பிரதம வாக்கெண்ணும் அலுவலருக்கு அம்மண்டபத்திற்கு நியமிக்கப்பட்டுள்ள வாக்கெண்ணும் அலுவலர்களை மண்டபத்திற்குள் அழைக்க முடியும். அலுவலர்களது நியமனக் கடிதங்களைப் பரீட்சித்து வருகையைப் பதிவு செய்து கொண்டதன் பின்னர் ஒவ்வொரு தேர்தல் பதவிக்குரிய தயாரிக்கப்பட்ட இலச்சினைகள் அணிந்து கொள்வதற்காக வழங்கப்படும். அதன் பின்னர் உரிய அலுவலர்கள் குறிப்பிட்ட விதத்தில் வாக்கெண்ணும் மண்டபத்தில் இருக்கைகளில் அமர்வதற்கு இடமளித்ததன் பின்னர் வாக்கெண்ணும் முகவர்கள் மண்டபத்திற்குள் அழைக்கப்படுவர். அதைத் தொடர்ந்து முகவர்களின் நியமனக் கடிதங்கள் மற்றும் அடையாள அட்டைகள் பரீட்சிக்கப்பட்டு வருகையைக் குறித்துக்கொண்டு அவர்களுக்குரிய இலச்சினைகளையும் அணியுமாறு அறிவுறுத்தல் வழங்கப்படும்.

279. தொடர்ந்து முதல் கட்டமாக சிரேட்ட தலைமை தாங்கும் அலுவர்களால் கையளிக்கப்படுகின்ற Z உறைகளிலுள்ள அறிக்கைகள் (வாக்கெடுப்பு நிலைய குழப்பங்கள் பற்றிய அறிக்கைகள்) பரீட்சித்து ஏதேனுமொரு வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்கெடுப்பிற்கு தடங்கல் ஏற்படும் விதத்திலான சம்பவமொன்று ஏற்பட்டதாக அறிக்கை இடப்பட்டிருக்கின்றதா என்பதைப் பரீட்சித்து அச்சம்பவம் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரால் Z அறிக்கையில் குறிப்பிடப்பட்டிராவிடினும் பொலிஸார் மூலம் அல்லது பொதுமக்கள் முறைப்பாட்டின் மூலம் ஏதேனும் சம்பவம் நிகழ்ந்திருப்பதாக தெரிவத்தாட்சி அலுவலர் அல்லது தேர்தல்கள் ஆணையாளருக்கு அறிக்கையிடப்பட்டிருப்பின் அதனோடு தொடர்புடைய வாக்கெடுப்பு நிலையங்கள் தொடர்பில் மேற்குறிப்பிட்ட அறிக்கையைப் பரீட்சிப்பதற்கு நடவடிக்கையெடுக்கப்படும்.

280. அவ்வறிக்கைகளுக்கிணங்க சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலொன்றுக்கு தடங்கல் ஏற்படும் விதத்திலான சம்பவம் நிகழ்ந்துள்ளதாக உறுதிப்படுத்தப்படுமாயின் வாக்கெண்ணும் அலுவலர் அது தொடர்பான அறிக்கையொன்றைத் தயார் செய்து தெரிவத்தாட்சி அலுவலரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். தெரிவத்தாட்சி அலுவலர் தேர்தல்கள் ஆணையாளருக்கு அவ்வறிக்கையை தொலைநகல் மூலம் அனுப்பி தேவையான அறிவுறுத்தல்களைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும். வாக்கெண்ணும் நிலையத்திற்குரிய வாக்கெடுப்பு நிலையங்களிலும் தேர்தலுக்கு தடங்கல் ஏற்படும் விதத்தில் எந்தவொரு நிகழ்வும் ஏற்பட்டதாக அறிக்கையிடப்படாவிடில் தெரிவத்தாட்சி அலுவலருக்கு அதனை அறிவித்து வாக்கெண்ணலுக்கான அனுமதியைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் வாக்கெண்ணலை ஆரம்பிக்க முடியும். இத்தேர்தலின் மூன்று கட்டத்திலும் வாக்கெடுப்பை வறிதாக்கும் அளவிற்கு குறிப்பிடக்கூடிய நிகழ்வெதுவும் அறிக்கையிடப்படாமையால் குறிப்பிட்டவாறு வாக்கெண்ணலை ஆரம்பிக்க முடிந்தது.

வாக்கெண்ணலை ஆரம்பித்தல்

281. வாக்கெண்ணலை ஆரம்பிப்பதற்கு முன்னர் வாக்கெண்ணும் முகவர்களுக்கு வாக்குப்பெட்டிகளைப் பரீட்சித்துப் பார்க்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்படும். முகவர்கள் வாக்கெடுப்பு நிலையத்தில் வைத்து தமது கட்சி சார்பில் ஒட்டிய ஸ்டிக்கர்கள் பாதுகாப்பாக இருக்கின்றனவா எனப் பரீட்சித்துப்பார்த்துத் திருப்தியடைந்ததன் பின்னரே வாக்குச்சீட்டுக்களை எண்ணுதல் ஆரம்பிக்கப்படல் வேண்டும்.

- ஒவ்வொரு வாக்குப் பெட்டியிலுமுள்ள வாக்குச் சீட்டுக்களின் எண்ணிக்கையை, வாக்குச் சீட்டுக் கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ள வாக்குச்சீட்டு எண்ணிக்கையுடன் ஒப்பீடு செய்தல்.
- ஒவ்வொரு கட்சியும் சுயேச்சைக்குழுவும் பெற்றுக்கொண்டுள்ள வாக்குகளின் எண்ணிக்கையைக் கணக்கிடுதல்.
- ஒவ்வொரு வேட்பாளரும் பெற்றுக்கொண்டுள்ள விருப்புகளின் எண்ணிக்கையைக் கணக்கிடுதல்.

முதலாம் கட்டம்

அ. திறக்கப்படுகின்ற வாக்குப்பெட்டி உரித்தான வாக்கெடுப்பு நிலையம் தொடர்பாக வாக்கெண்ணும் முகவர்களின் கவனம் ஈர்க்கப்படுவதற்காக வாக்கெடுப்பு மாவட்ட இலக்கம் மற்றும் வாக்கெடுப்பு நிலையத்தின் பெயர் என்பன வாசிக்கப்பட்டு குறித்த வாக்குப் பெட்டியிலுள்ள அனைத்து வாக்குச் சீட்டுக்களும் வாக்கெண்ணும் மேசையின் மேல் கொட்டப்படும்.

ஆ. ஒரே தடவையில் வாக்கெடுப்பு நிலையங்கள் பலவற்றின் வாக்குப் பெட்டிகளிலுள்ளவாக்குச்சீட்டுக்கள் இவ்விதமாக வாக்கெண்ணும் மேசையின் மீது வெவ்வேறாகக் கொட்டப்படும்.

இ. அதன் பின்னர் வாக்கெண்ணும் மேசை மீதுள்ள வாக்குச் சீட்டுக்கள் 50 சீட்டுக்களைக் கொண்ட கட்டுக்களாகக் கட்டப்படும். இங்கு எவ்விதத்திலும் தெரிவு இடம்பெறமாட்டாது..

ஈ. ஒவ்வொரு பெட்டியிலுமுள்ள வாக்குச் சீட்டுக்கள் எண்ணப்பட்டு முடிந்தவுடன் பிரதான வாக்கெண்ணும் அலுவலர் எண்ணப்பட்ட வாக்குச் சீட்டுக்களின் எண்ணிக்கையை வாக்குச் சீட்டுக்கணக்குடன் ஒப்பிட்டுப் பார்ப்பார். அது இணங்காவிடத்து மீண்டும் எண்ணுமாறு அறிவுறுத்தப்படும். ஆகக் கூடியது 03 தடவைகள் இவ்வாறு எண்ணப்பட்டதன் பின்னரும் அதே தொகை காணப்படின் அத்தொகையை நடபடி குறிப்பேட்டில் குறித்துக் கொண்டு அவ்வாக்குச் சீட்டுக்கள் வாக்கெண்ணல் நிலையத்திலுள்ள பெரிய பெட்டிக்கு மாற்றப்படும்.

உ. அனைத்துப் பெட்டிகளிலுமுள்ள வாக்குச் சீட்டுக்கள் இவ்வாறு பெரிய பெட்டிக்கு மாற்றப்படும் வரை இச்செயன்முறை தொடரும்.

இரண்டாம் கட்டம்

அ. வாக்கெண்ணும் மேசையில் தடை போடப்பட்டு பல பிரிவுகளாகப் பிரிக்கப்படும். போட்டியிட்ட ஒவ்வொரு கட்சி மற்றும் சுயேச்சைக் குழுவின் பிரகாரம் வாக்குச் சீட்டுக்கள் பிரிக்கப்படுவது இங்கு நடைபெறும். வாக்களிக்கப்பட்டிருப்பது எந்ததக்கட்சிக்கு, எந்தக் குழுவிற்கு என்றவாறு தெரிவு செய்யும் போது தீர்மானம் எடுக்கப்பட முடியாத வாக்குச் சீட்டுக்கள் நிச்சயமற்ற வாக்குச் சீட்டுக்களாகப் பிரிக்கப்படும்.

ஆ. ஒவ்வொரு கட்சி அல்லது குழுவிற்காக அளிக்கப்பட்ட வாக்குச் சீட்டுக்கள் என்ற வகையில் தெரிவு செய்யப்பட்ட வாக்குச் சீட்டுக்களை வெவ்வேறாக எண்ணி 50 கொண்ட கட்டுக்களாகத் தயாரித்தல்.

இ. நிச்சயமற்ற வாக்குச் சீட்டுக்கள் அடங்கிய பாத்திரம் பிரதம வாக்கெண்ணும் அலுவலரது தீர்மானத்திற்காக இடைக்கிடை அனுப்பப்பட்டு ஒவ்வொரு வாக்குச் சீட்டுப் பற்றியும் பிரதம வாக்கெண்ணும் அலுவலரது தீர்மானம் பெற்றுக்கொள்ளப்படும். இச் சந்தர்ப்பத்தில் அத் தீர்மானம் பற்றி வாக்கெண்ணும் முகவர்கள் அறிவூட்டப்படல் வேண்டும்.

ஈ. தயார் செய்யப்பட்ட வாக்குச் சீட்டுக்கள் 50 கட்டுக்களில் வாக்குச் சீட்டுக்கள் 50 சரியானதா, ஒரே கட்சியின் அல்லது குழுவின் வாக்குச் சீட்டுக்களா என்பதைப் பரீட்சித்தல்.

உ. மீண்டும் பரீட்சித்தல்.

ஊ. மேலோட்டமாகப் பரீட்சித்தல்– இதில் ஒரே கட்சிக்கு / ஒரே சுயேச்சைக் குழுவிற்கு அளிக்கப்பட்ட வாக்குகள் அடங்கிய வாக்குச் சீட்டுக்கள் 50 கட்டுக்கள் 10 ஐ ஒன்றாக்கி 500 கட்டுக்களாகத் தயாரித்து பிரதம வாக்கெண்ணும் அலுவலரது மேசையின் மேல் ஒவ்வொரு கட்சியின் குழுவின் வாக்குச் சின்னம் ஒட்டப்பட்ட பெட்டியின் மேல் வாக்குச் சீட்டுக்கட்டுக்கள் பத்திரப்படுத்தப்படும்.

இரண்டாம் கட்டத்தின் முடிவில் வாக்கெண்ணும் மண்டபத்தில் முதலாவது முடிவு அதாவது ஒவ்வொரு கட்சியும், சுயேச்சைக் குழுவும் பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கையைக் காட்டுகின்ற எழுத்திலான வெளிப்படுத்துகை 06 பிரதிகளில் காபன் கடதாசியில் தயாரிக்கப்பட்டு அதன் முதல் பிரதி பிரதம வாக்கெண்ணும் அலுவலரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு குறிப்பிட்ட உறையிலிடப்பட்டு இலச்சினையிடப்பட்டு பெறுபேறுகள் தயாரிக்கப்படும் மண்டபத்துக்கு அனுப்பப்படும். காபன் கடுதாசியில் தயாரிக்கப்பட்ட பெறுபேறுகளின் 2,3,4 ஆம் பிரதிகள் பெற்றுக்கொள்ளப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கைக்கமைய 1,2,3 ஆம் இடங்களைப் பெற்றுக் கொண்ட கட்சிகளின் அல்லது சுயேச்சைக்குழுக்களின் முகவர்களுக்குக் கையளிக்கப்படும். 5 ஆம் பிரதி வாக்கெண்ணும் மண்டபத்தில் காட்சிப்படுத்தப்படுவதோடு 6 ஆம் பிரதி பிரதம வாக்கெண்ணும் அலுவலரது நடபடிக் குறிப்பேட்டில் கோவையிடப்படும்.

மூன்றாம் கட்டம்

ஒவ்வொரு வேட்பாளரும் பெற்றுக் கொண்டுள்ள விருப்புகளின் எண்ணிக்கையைத் தீர்மானித்தல்.

அ. அதி கூடிய வாக்குகளைப் பெற்றுக் கொண்டுள்ள கட்சியின் வாக்குச் சீட்டுக்களிலிருந்து விருப்புகளை எண்ணல் ஆரம்பிக்கப்படும்.

ஆ. விருப்புகள் அடையாளமிடப்பட்டுள்ள விதத்தின் பிரகாரம் வாக்குச் சீட்டுக்களைத் தெரிவு செய்தல்.

- விருப்புவாக்கு ஒன்றுடைய வாக்குச்சீட்டு
- விருப்புவாக்கு இரண்டுடைய வாக்குச்சீட்டு
- விருப்புவாக்கு மூன்றுடைய வாக்குச்சீட்டு
- விருப்புவாக்கு மூன்றிற்கு கூடிய வாக்குச்சீட்டு
- விருப்புவாக்கு அடையாளமிடப்படாத வாக்குச்சீட்டு
- விருப்புவாக்கு நிச்சயமற்ற வாக்குச்சீட்டு

இ. விருப்பு 1, விருப்பு 2, விருப்பு 3 கொண்ட வாக்குச் சீட்டுக்களை வெவ்வேறாக 50 கொண்ட கட்டுக்களாகத் தயாரித்தலும் ஒவ்வொரு கட்டுக்கும் தொடர் இலக்கமிடலும்.

ஈ. ஒவ்வொரு 50 வாக்குச் சீட்டுக்களைக் கொண்ட கட்டிலும் அடையாளமிடப்பட்டுள்ள விருப்புக்களை ஒப்பீட்டுத் தாளில் குறித்தலும் வாக்குச் சீட்டுக் கட்டுக்களுக்கிடப்பட்ட இலக்கங்களை ஒப்பீட்டுத் தாளிலும் குறித்தலும்.

உ. வேறோர் அலுவலர் அவ்வொப்பீட்டுத் தாள்களைப் பரீட்சித்தல்.

ஊ. ஒப்பீட்டுத்தாளிலுள்ள விருப்புக்கள் கூட்டுத் தொகையைச் பொழிப்பு படிவத்தில் பதிதல்.

எ. விருப்புகள் நிச்சயமற்ற வாக்குச் சீட்டுக்கள் இடப்பட்டுள்ள கொள்கலனை பிரதம வாக்கெண்ணும் அலுவலர் அடிக்கடி பரீட்சித்து உரிய வாக்குச் சீட்டுக்கள் பற்றிய தீர்மானத்தை எடுத்தல் வேண்டும். மூன்றிற்கு மேலதிகமான, விருப்புக்கள் கொண்டவை விருப்பு அடையாளமிடப்படாத மற்றும் தீர்மானம் எடுக்கப்பட முடியாதவை நிராகரிக்கப்பட்ட வாக்குச் சீட்டுக்களாகக் கருதப்பட்டு உரிய கொள்கலனில் இடப்படல் வேண்டும்.

ஏ. இறுதிப் பொழிப்பு படிவம் CE/CO/PR3 வாக்கெண்ணும் மண்டபத்தின் விருப்புகளின் முடிவாகக் கருப்படுவதோடு, பெறுபேறுகள் தயாரிக்கப்படும் மண்டபத்திற்கு அனுப்பி வைக்கப்படும்.

உறுப்பினர் பதவியை உரித்தாக்கிக் கொண்ட அனைத்துக் கட்சிகள் மற்றும் குழுக்களின் விருப்புகளை எண்ணும் நடவடிக்கை எடுக்கப்படும். கூடுதலாக வாக்குகளைப் பெற்ற கட்சியின் விருப்புகளை எண்ணல் முடிவடைந்து பெறுபேற்று ஆவணங்கள் (CE/CO/PR3) பெறுபேறுகள் தயாரிக்கும் மண்டபத்திற்கு அனுப்பப்பட்டதன் பின்னர் அதற்கு அடுத்தபடியான கட்சியின் வாக்குச் சீட்டுக்களிலுள்ள விருப்புகளை எண்ணல் ஆரம்பிக்கப்படும். வாக்கெண்ணும் மண்டபத்தில் தயாரிக்கப்படுகின்ற விருப்புகளைக் காட்டும் பெறுபேறு காபன் கடுதாசியில் தயாரிக்கப்பட்டு ஒரு பிரதி உரிய கட்சியின் வாக்கெண்ணும் முகவருக்குக் கையளிக்கப்படும். உறுப்பினர் பதவியை உரித்தாக்கிக் கொண்ட கட்சி மற்றும் குழுக்களினது விருப்புகளை மாத்திரம் எண்ணுவதென எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமைய எண்ண வேண்டிய அணிகளின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

வாக்கெண்ணல் பற்றிய சந்தேகங்களை நீக்குவதற்காக எடுக்கப்பட்டுள்ள செயற்பாடுகள்

அ. வாக்குப் பெட்டிகள் வாக்கெண்ணும் மண்டபத்திற்கு எடுத்து வரப்படும் சந்தர்ப்பத்தில் ஒவ்வொரு கட்சியின், குழுவின் வாக்கெண்ணல் முகவரொருவருக்கு வாக்கெண்ணும்மண்டபத்தில் தங்கியிருப்பதற்கு அனுமதியளித்தல்.

ஆ. வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்குப் பெட்டியில் இடப்பட்டுள்ள வாக்குச் சீட்டுக்களின் எண்ணிக்கை தயாரிக்கப்படுகின்ற வாக்குச் சீட்டுக்கணக்கின் பிரதியொன்றை வாக்கெடுப்பு நிலைய முகவருக்குக் கையளித்தல்.

இ. ஒவ்வொரு கட்சி, குழு பெற்றுக் கொண்ட வாக்குச்சீட்டுக்களின் எண்ணிக்கை தொடர்பான எழுத்திலான வெளிப்படுத்துகையின் பிரதியொன்று காபன் தாளில் தயாரிக்கப்பட்டு 2, 3,4 ஆம் பிரதிகளை 1,2,3 ஆம் இடங்களைப் பெற்றுக் கொண்ட கட்சிகளின் முகவர்களுக்குக் கையளித்தல்.

ஈ. விருப்பு எண்ணப்பட்டதன் பின்னர் குறிப்பிட்ட கட்சியின் வாக்கெண்ணும் முகவருக்கு விருப்புகளின் பெறுபேறு ஆவணத்தின் பிரதியொன்றைக் கையளித்தல்.

உ. விருப்புகள் எண்ணப்படும் சந்தர்ப்பத்தில் உரிய கட்சியின் அனைத்து வேட்பாளர்களுக்கும் அந்நடவடிக்கையைக் கண்காணிப்பதற்காக வருகை தருவதற்கான அவகாசத்தை அளித்தல்.

ஊ. வாக்கெண்ணல் அல்லது விருப்பெண்ணல் நடவடிக்கையோடு தொடர்புடைய முறைப்பாடொன்றை முன்வைக்க வேண்டுமாயின் அம்முறைப்பாட்டை செய்வதற்கான அவகாசத்தையளித்தல்.

மீள் வாக்கெண்ணலுக்காக விண்ணப்பித்தல்

282. வட்டார முறையில் நடாத்தப்பட்ட தேர்தலில் அவ்வட்டாரத்தில் போட்டியிடுகின்ற அனைத்து வேட்பாளர்களதும் முன்னிலையில் வாக்கெடுப்பு நிலையத்தில் வைத்து வாக்கெண்ணல் நிகழ்ந்தது. அதன் பிரகாரம் வாக்கெண்ணல் முகவருக்கு வாக்கெண்ணலின் முழுச் செயன்முறையையும் அந்நிலையத்திலிருந்தே கண்காணிக்க முடிந்தது. அவ்வாறான நிலையத்தில் வாக்கெண்ணல் முடிவடைந்தவுடன் வாக்கெண்ணும் முகவர் மீண்டும் வாக்கெண்ணலை நடாத்துமாறு கேட்டு விண்ணப்பமொன்றைக் கையளிக்க முடியும். அனைத்து வாக்கெண்ணும் அலுவலர்கள் மற்றும் முகவர்கள் முன்னிலையில் மீள் வாக்கெண்ணலும் அதே நிலையத்திலேயே நடாத்தப்படும். வாக்கெண்ணும் முகவர்களும் அதற்கு ஆயத்தமாகவேயுள்ளனர்.

283. ஆனால் விகிதாசார பிரதிநிதித்துவ முறையில் உள்ளூர் அதிகார சபையின் அதிகாரப் பிரதேசமே தேர்தல் பிரதேசமாவதாலும், வாக்கெண்ணல் மற்றும் விருப்பெண்ணல் போன்ற சிக்கல்மிகுந்த தொடர் நடவடிக்கைகளாலும் முழு உள்ளூர் அதிகார சபையின் வாக்கெண்ணலையும் ஒரே வாக்கெண்ணும் நிலையத்தில் நடாத்த முடியாதுள்ளது. அதன் பிரகாரம் வாக்கெண்ணும் மண்டபத்தின் முகவர்களின் வேண்டுகோளின் படி மீள் வாக்கெண்ணலை நடாத்திய போதும் அது வரையில் முழு உள்ளூர் அதிகார சபையினதும் வாக்கெடுப்புப் பெறுபேறுகள் பற்றிய உணர்வு வாக்கெண்ணும் முகவர்களுக்கு இல்லாதிருப்பது ஈண்டு குறிப்பிடத்தக்க முக்கிய விடயமாகும். ஒவ்வொரு வாக்கெண்ணல் நிலையத்திலும் வாக்கெண்ணலின் ஒவ்வொரு கட்டமும் வெவ்வேறு நேர இடைவெளியிலேயே முடிவடைகின்றது. அனைத்து வாக்கெண்ணும் மண்டபங்களினதும் பெறுபேறுகளுக்கிணங்க உள்ளூர்

அதிகார சபை மட்டத்திலான முடிவுகளுக்குரிய வெளிப்படுத்துகைகள் தயாரிக்கப்பட்டதன் பின்னர் மீள் வாக்கெண்ணலுக்கான ஏற்பாடுகள் கிடையாது. விகிதாசார பிரதிநிதித்துவத்தின் கீழ் நடாத்தப்படுகின்ற தேர்தலுக்கான வாக்கெண்ணலின் போது அவ்வாறான மீள் வாக்கெண்ணல் நடைமுறை சாத்தியமான ஒன்றல்ல எனவே முழுப் பெறுபேறுகள் தொடர்பாகவும் திருப்தியடையாத கட்சிகள், குழுக்கள் இன்றேல் தனி நபர்கள் வாக்குகள் மற்றும் விருப்புகள் பற்றி மீள் எண்ணலைக் கோரி நீதிமன்றத்தில் மனுக்களை வழமையாக மாறிவிட்டது.

284. இம்மனுக்களில் முன்வைக்கப்படுகின்றவற்றில் விடய முன்வைப்புக்களன்றி தாம் வெளிப்படுத்துவதிலிருந்து தவிர்ந்து கேட்டறிந்து கொண்ட செய்திகள் ஊகங்கள் அவ்வாறின்றேல் அச்சந்தர்ப்பத்தில் அறிந்து கொண்ட பெறுபேறு பற்றி எழுந்த ஐயங்கள் அல்லது அவநம்பிக்கைகள் என்பனவே அக்கோரிக்கைகளின் அடிப்படைகளாக விளங்குகின்றன.

285. இதன் பிரகாரம் கடந்த ஆண்டுகளில் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் தேர்தல்களுடன் தொடர்புடைய பல சந்தர்ப்பங்களில் விருப்புகளை வாக்குகளை மீள எண்ணுமாறு நீதிமன்றக் கட்டளைகள் வழங்கப்பட்ட போதிலும் நீதிமன்ற வளாகத்தில், தேர்தல்கள் செயலகத்தில் உரிய அனைத்துத் தரப்பினர் முன்னிலையிலும் நடாத்தப்பட்ட மீள் வாக்கெண்ணல்கள் ஒன்றிலேனும் முதல் பெறுபேற்றிற்கமைய தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் அல்லது அங்கத்தவர் ஒருவர் பெற்றுக் கொண்ட உறுப்புரிமை தொடர்பில் எவ்வித மாற்றமும் ஏற்படாமை வாக்கு மற்றும் விருப்பெண்ணல் செயன்முறை எவ்வளவு சிக்கலான செயன்முறையொன்றாக காணப்படினும், அலுவலர்கள் மிக அவதானமாக தமது பணிகளை ஆற்றியுள்ளமை உறுதி செய்யப்பட்டது. இருப்பினும், 2011 ஆம் ஆண்டு உள்ளூர் அதிகார சபைகள் தேர்தலின் போதும் வாக்கெடுப்புப் பெறுபேறு பற்றித் திருப்தியடையாத தரப்பினரால் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் 21 மனுக்களும் மாகாண மேல் நீதிமன்றத்தில் 07 மனுக்களும் தாக்கல் செய்யப்பட்டன. அவற்றில் 23 மனுக்கள் இதுவரையில் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன. நீதிமன்றத் தீர்மானம் இதுவரையில் பெற்றுக் கொள்ளப்படாத மனுக்களின் எண்ணிக்கை 04 மாத்திரமே ஆகும்.

XIII ஆம் பிரிவு

பெறுபேறுகளை அட்டவணைப்படுத்தலும் பெறுபேறுகளை வெளியிடுதலும்

286. உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 59அ(1) ஆம் உப பிரிவிற்கமைய தேர்தல் ஆணையாளரின் ஏற்பாடுகளுக்குட்பட்டு தெரிவத்தாட்சி அலுவலர் வாக்கெண்ணலுக்காக வாக்கெண்ணும் அலுவலர்களை நியமனம் செய்தல் வேண்டுமென்பதோடு, வாக்கெண்ணல் அலுவல்கள் நிறைவடைந்ததன் பின்னர், அக்கட்டளைச் சட்டத்தின் 65 ஆம் பிரிவிற்கமைய பெறுபேறுகளை வெளியிடுதல் வேண்டும்.

பெறுபேறுகள் தயாரிக்கப்படும் இடம்

287. ஒவ்வோர் உள்ளூர் அதிகார சபை நிறுவனத்திற்காகவும் பெறுபேறுகள் தனித்தனியாக தயாரிக்கப்பட வேண்டுமென்பதால், உள்ளூர் அதிகார சபைகளின் எண்ணிக்கைக்கமைய இடங்களை இனங்காணுதல் வேண்டும்.

288. ஒவ்வோர் உள்ளூர் அதிகார சபைக்கும் பொறுப்பாக சிரேட்ட பதவிநிலை அலுவலரொருவர் உதவித் தெரிவத்தாட்சி அலுவலராக நியமனம் செய்யப்படுவார்.

289. ஒவ்வோர் உள்ளூர் அதிகார சபைக்கும் போட்டியிடுகின்ற கட்சியொன்றிலிருந்து அல்லது குழுவொன்றிலிருந்து இரண்டு முகவர்கள் வீதம் வருகைதருவதற்கு சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமையால் அது தொடர்பாக கவனம் செலுத்துதல் வேண்டும்.

290. வாக்கெண்ணல் மண்டபங்களிலிருந்து எடுத்துவரப்படும் பெறுபேற்று ஆவணங்களைப் பரீட்சித்து கையேற்றல், அப்பெறுபேறுகளை ஒன்று சேர்த்து சபையின் பெறுபேற்றைத் தயாரித்தல் மற்றும் இறுதியில் ஒவ்வொரு வேட்பாளரும் பெற்றுக் கொண்டுள்ள விருப்புகளின் எண்ணிக்கையைக் கணக்கிடுதல் வரை அனைத்து கட்டங்களையும் மேற்கொள்ளத்தக்கவாறு முகவர்களுக்கு நன்றாக தெரியக் கூடிய விதத்திலும் அலுவலர்களுக்கு இடையூறுகள் இன்றியும் முகவர்களுக்கான ஆசனங்களை ஒழுங்குபடுத்துதல் வேண்டும்.

பெறுபேறு தயாரிப்பின் குறிப்பான பணிகள்

- குறித்த உள்ளூர் அதிகார சபை சார்பாக போட்டியிட்ட ஒவ்வொரு கட்சி மற்றும் குழு பெற்றுக் கொண்டுள்ள வாக்குகளின் எண்ணிக்கையை நிச்சயப்படுத்திக் கொள்ளல்
- ஒவ்வொரு கட்சி/ சுயேச்சைக் குழு பெற்றுக் கொண்டுள்ள வாக்குகளின் எண்ணிக்கைக்கமைய உரித்தாகின்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை கணக்கிடுதல்.
- ஒவ்வொரு கட்சி/ சுயேச்சைக் குழுவின் கீழ் போட்டியிட்ட ஒவ்வொரு வேட்பாளரும் பெற்றுக் கொண்ட விருப்புகளின் எண்ணிக்கையைக் கணக்கிடுதல்.
- ஒவ்வொரு கட்சி/ சுயேச்சைக் குழுவின் கீழ் தேர்ந்தெடுக்கப்படுகின்ற உறுப்பினர்களை நிச்சயப்படுத்திக் கொள்ளல்.

தேர்தல் முடிவுகளின் முதலாம் வெளிப்படுத்துகை

291. ஒவ்வோர் உள்ளூர் அதிகார சபையிலும் ஒவ்வொரு கட்சி மற்றும் சுயேச்சைக் குழு பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கைக்கமைய உரித்துடைய உறுப்பினர்களின் எண்ணிக்கை CE/RO/B3(1) படிவத்தின் மூலம் தேர்தல்கள் ஆணையாளருக்கு (தொலைநகல் மூலம்) அனுப்பப்பட்ட பின்னர் தலைமை அலுவலகத்தில் மேற்கொள்ளப்படுகின்ற பெறுபேற்றுப் பரிசீலனையில் சமப்படுமாயின் பெறுபேறு உறுதிப்படுத்தப்பட்டு தெரிவத்தாட்சி அலுவலருக்கு அறிவிக்கப்படும்.

292. அதன் பின்னர் முதலில் ஒவ்வொரு கட்சி மற்றும் சுயேச்சைக் குழு பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கையும் அதன் பின்னர் மிகையாசனம் இரண்டுடன் ஒவ்வொரு கட்சிக்கும் உரித்துடைய உறுப்பினர்களின் எண்ணிக்கையும் குறித்த தெரிவத்தாட்சி அலுவலர்களினால் வெளியிடப்படும். இங்கு குறித்த சபைக்காக போட்டியிட்ட அனைத்து கட்சிகள் மற்றும் குழுக்கள் பெற்றுக் கொண்டுள்ள செல்லுபடியான வாக்குகளின் எண்ணிக்கையைக் கூட்டுவதன் மூலம் கிடைக்கப்பெறுகின்ற இயைபான வாக்குத் தொகை அவ்வுள்ளூர் அதிகார சபைக்காக தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர் பதவி எண்ணிக்கையினால் (மிகை ஆசனம் இரண்டு தவிர) பிரிப்பதன் மூலம் கிடைக்கப்பெறுகின்ற பூரண எண்ணாணது விளைவு எண் என அழைக்கப்படுவதோடு, அவ்வுள்ளூர் அதிகார சபைக்காக போட்டியிட்ட ஒவ்வொரு கட்சி/ சுயேச்சைக் குழு பெற்றுக் கொண்ட வாக்குகளை மேற்குறித்த விளைவு எண்ணினால் வகுப்பதன் மூலம் ஒவ்வொரு கட்சியும் மற்றும் ஒவ்வொரு குழுவும் பெற்றுக் கொண்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை பெற்றுக் கொள்ளப்படும்.

293. இக்கணக்கிடலின் போது மேலும் உறுப்பினர் பதவி எண்ணிக்கையில் பற்றாக்குறையொன்று காணப்படுமாயின், ஆகக்கூடுதலான மீதியைக் கருத்தில் கொண்டு குறித்த பற்றாக்குறை பூரணப்படுத்தப்படும். அதற்கமைய சபைக்காக போட்டியிட்ட ஒவ்வொரு கட்சியும்ஃ குழுவும் உரித்தாக்கிக் கொண்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும்.
(குறிப்பு 16)

தேர்தல் முடிவுகளின் இரண்டாம் வெளிப்படுத்துகை

294. ஒவ்வோர் உள்ளூர் அதிகார சபைகளுக்குமென போட்டியிட்ட கட்சிகள் மற்றும் குழுக்கள் உரித்துடையதாக்கிக் கொண்ட உறுப்பினர் பதவிகளின் எண்ணிக்கைகளுக்காக வேட்பாளர்களைப் பெயர் குறித்தல் தேர்தல் முடிவுகளின் இரண்டாம் வெளிப்படுத்துகை ஊடாக மேற்கொள்ளப்படும். இங்கு ஒவ்வொரு வாக்கெண்ணல் மண்டபத்திலிருந்தும் கிடைக்கப் பெறுகின்ற விருப்புப் பெறுபேறுகள் அந்த

உள்ளூர் அதிகார சபைக்கான உறுப்பினர் பதவிகளை உரித்தாக்கிக் கொண்டுள்ள கட்சிகள் மற்றும் குழுக்களுக்கமைய தனித்தனியாக அட்டவணைப்படுத்தப்படுவதோடு, அனைத்து வாக்கெண்ணல் மண்டபங்களிலிருந்தும் பெறுபேற்று ஆவணங்கள் கிடைக்கப்பெற்ற பின்னர் ஒவ்வொரு வேட்பாளரும் பெற்றுக் கொண்டுள்ள விருப்புகளின் எண்ணிக்கை கணக்கிடப்படும்.
(II ஆம் தொகுதியைப் பார்க்கவும்)

295. அதற்கமைய முதலாவதாக ஒவ்வொரு கட்சி/ சுயேச்சைக் குழு வேட்பாளர்களின் விருப்புகளின் பெறுபேறுகளைத் தயாரித்தலும் இரண்டாவதாக ஒவ்வொரு கட்சி/ குழு உரித்தாக்கிக் கொண்டுள்ள உறுப்பினர்களை விருப்பு தொடர் ஒழுங்கில் பட்டியலில் மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள வேட்பாளர்களிலிருந்து தேர்ந்தெடுத்தலும் இடம்பெறும்.

296. அதற்கமைய ஒவ்வோர் உள்ளூர் அதிகார சபைக்காகவும் போட்டியிட்ட கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் உரித்தாக்கிக் கொண்ட உறுப்பினர் பதவி எண்ணிக்கைகளுக்கு சமமான தொகையினர் பெயர் குறிக்கப்பட்டதன் பின்னர், அப்பெறுபேறு (இரண்டாவது பெறுபேறு) வெளியிடப்படும்.

மாநகர மேயர், பிரதி மேயர்/ தவிசாளர்/ உதவித் தவிசாளர் ஆகியோரை தேர்ந்தெடுத்தல்.

297. உள்ளூர் அதிகார சபை தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65(1)இ ஆம் உப பிரிவிற்கமைய தேர்தல் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆகக் கூடுதலான வாக்கினைப் பெற்றுக் கொண்ட கட்சியின் செயலாளரிடமிருந்து குறித்துரைக்கப்பட்ட ஒரு காலப்பகுதிக்குள் மாநகர சபையொன்றெனின் மேயராகவும் பிரதி மேயராகவும் நகர சபை அல்லது பிரதேச சபையொன்றெனில் தவிசாளராகவும் உப தவிசாளராக நியமனம் செய்யப்பட வேண்டிய உறுப்பினர்கள் யாவரென பெயர் குறித்த நியமனமொன்றைத் தெரிவத்தாட்சி அலுவலர் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

298. அப்பெயர் குறித்த நியமனத்திற்கமைய தெரிவத்தாட்சி அலுவலர் மேயர், பிரதி மேயர்/ தவிசாளர், உப தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள் ஆகியோரின் பெயர்களை உள்ளடக்கிய அறிவித்தலொன்றை 66(1) ஆம் உப பிரிவின் கீழ் வெளியிட வேண்டுமென்பதோடு, அப்பெறுபேறு தொடர்பான அறிக்கை கிடைக்கப்பெற்ற பின்னர் 66(2) ஆம் உப பிரிவின் கீழ் தேர்தல்கள் ஆணையாளர் வர்த்தமானியில் வெளியிடுவதற்கு நடவடிக்கையெடுப்பார். அத்துடன் பெறுபேறுகளை வெளியிடும் கடமைப் பொறுப்பு நிறைவடையும்.
(II ஆம் தொகுதியைப் பார்க்கவும்)

299. மூன்று கட்டங்களாக தேர்தல்கள் நடாத்தப்பட்ட 322 உள்ளூர் அதிகார சபைகளிலும் ஒவ்வொரு கட்சி மற்றும் சுயேச்சைக் குழு பெற்றுக் கொண்ட வாக்குகள் ஆட்சி அதிகாரத்தை உரித்தாக்கிக் கொண்ட உள்ளூர் அதிகார சபைகள் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன. அதற்கு மேலதிகமாக தேர்தலில் போட்டியிட்ட ஒவ்வொரு கட்சி மற்றும் சுயேச்சைக் குழு ஒவ்வொரு நிருவாக மாவட்டத்தின் கீழும் பெற்றுக் கொண்டுள்ள வாக்குகள் மற்றும் உறுப்பினர்கள் என்பவற்றைக் காட்டும் சுருக்கக் குறிப்பொன்று 17 ஆம் அட்டவணையின் கீழேயும், ஒவ்வொரு நிருவாக மாவட்டத்தின் கீழ் அளிக்கப்பட்ட வாக்குகளில் அதிகூடிய மற்றும் ஆகக் குறைந்த சதவீதத்தைக் கொண்ட உள்ளூர் அதிகார சபைகள் 18 ஆம் அட்டவணையின் கீழும் உட்சேர்க்கப்பட்டுள்ளன. (குறிப்பு 17,18)

	அரசியல் கட்சிகள்/ குழுக்கள்	பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கை	உரித்தாக்கி கொள்ளப்பட்ட உறுப்பினர் பதவிகளின் எண்ணிக்கை	ஆட்சி அதிகாரம் உரித்தாக்கி கொள்ளப்பட்ட உள்ளூர் அதிகார சபைகளின் எண்ணிக்கை
1	10 ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி	4774791	2596	271
2	11 ஐக்கிய தேசியக் கட்சி	2682442	1160	10
3	05 இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி	248568	263	30
4	21 மக்கள் விடுதலை முன்னணி	142244	76	
5	62 ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்	127775	72	5
6	20 மலையக மக்கள் முன்னணி	38024	21	1
7	43 ஜனநாயக மக்கள் முன்னணி	34189	10	
8	03 அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ்	16992	6	
9	16 ஐக்கிய இலங்கை ஜனநாயக முன்னணி	12079	6	
10	14 ஐக்கிய ஜனநாயக கூட்டமைப்பு	7830	2	
11	35 தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி	5471	12	2
12	32 தேசப்பற்றுள்ள தேசிய முன்னணி	5186	5	
13	53 லிபரல் கட்சி	3803	2	
14	31 தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள்	3155	3	
15	52 லங்கா சம சமாஜக் கட்சி	2658	4	
16	25 தேசிய காங்கிரஸ்	2261	14	2
17	40 பிரஜைகள் முன்னணி	847	2	
	சுயேச்சை 1 1	93367	51	1
	சுயேச்சை 2 2	23709	12	
	சுயேச்சை 3 3	16257	7	
	சுயேச்சை 4 6	5068	2	
	சுயேச்சை 5 4	4646	2	
	சுயேச்சை 6 8	3481	2	
	சுயேச்சை 7 5	552	1	
		மொத்தம்	**4331**	**322**

குறிப்பு

சுயேச்சைக் குழு 1 18 மாவட்டங்களில் உறுப்பினர் பதவிகள் 51 ஐ பெற்றுக் கொண்டுள்ளது.

சுயேச்சைக் குழு 2 07 மாவட்டங்களில் உறுப்பினர் பதவிகள் 12 ஐ பெற்றுக் கொண்டுள்ளது.

சுயேச்சைக் குழு 3 06 மாவட்டங்களில் உறுப்பினர் பதவிகள் 07 ஐ பெற்றுக் கொண்டுள்ளது.

சுயேச்சைக் குழு 4 02 மாவட்டங்களில் உறுப்பினர் பதவிகள் 02 ஐ பெற்றுக் கொண்டுள்ளது.

சுயேச்சைக் குழு 5 01 மாவட்டங்களில் உறுப்பினர் பதவிகள் 01 ஐ பெற்றுக் கொண்டுள்ளது.

சுயேச்சைக் குழு 6 02 மாவட்டங்களில் உறுப்பினர் பதவிகள் 02 ஐ பெற்றுக் கொண்டுள்ளது.

சுயேச்சைக் குழு 8 01 மாவட்டங்களில் உறுப்பினர் பதவிகள் 02 ஐ பெற்றுக் கொண்டுள்ளது.

ஒரே இலக்கத்தினால் அழைக்கப்படுகின்ற வெவ்வேறுபட்ட மாவட்டங்களின் சுயேச்சைக் குழுக்களுக்கிடையில் எவ்விதமான தொடர்புகளும் இல்லையென்பது வலியுறுத்தப்படுகின்றது.

ஒவ்வொரு கட்சி, சுயேச்சைக் குழுக்களினால் ஆட்சி அதிகாரம் உரித்தாக்கிக் கொள்ளப்பட்டுள்ள உள்ளூர் அதிகார சபைகளின் எண்ணிக்கை மாநகர சபை, நகர சபை, பிரதேச சபை அடிப்படையில்

கட்சியின் பெயர்/ சுயேச்சைக் குழு	மாநகர சபை	நகர சபை	பிரதேச சபை	மொத்தம்
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி	17	29	225	271
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி	–	5	25	30
ஐக்கிய தேசியக் கட்சி	2	5	3	10
ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்	1	–	4	5
தேசிய காங்கிரஸ்	1	–	1	2
தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி	–	–	2	2
மலையக மக்கள் முன்னணி	–	–	1	1
சுயேச்சைக் குழு	–	–	1	1
மொத்தம்	**21**	**39**	**262**	**322**

300. வாக்கெடுப்பு மற்றும் வாக்கெண்ணலின் நிறைவில் உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66(1) ஆம் உப பிரிவின் கீழ் ஒவ்வொரு நிருவாக மாவட்டத்தினதும் தெரிவத்தாட்சி அலுவலர்களினால் முடிவுகள் வெளியிடப்பட்டதன் பின்னர் தேர்தல்கள் ஆணையாளர் 66(2) ஆம் உப பிரிவின் கீழ் மேயர், பிரதி மேயர், தவிசாளர், உப தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள் ஆகிய தேர்ந்தெடுக்கப்பட்ட வேட்பாளர்களின் பெயர்களை உள்ளடக்கிய வர்த்தமானி அறிவித்தல்கள் கீழே காட்டப்பட்டுள்ள தினங்களில் வெளியிடப்பட்டன.

வாக்கெடுப்புத் தினம்	உள்ளூராட்சி சபைகளின் எண்ணிக்கை	வர்த்தமானி பத்திரிகை திகதி/ வர்த்தமானி பத்திரிகை இலக்கம்	
2011.03.17	234	2011.03.28	1699/2
2011.07.23	65	2011.07.30	1716/32
2011.10.08	23	2011.10.15	1727/24

301. தேர்தல் நடாத்தப்பட்ட உள்ளூர் அதிகார சபைகளுக்காக ஒவ்வொரு கட்சி/ சுயேச்சைக் குழுக்கள் பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கை மற்றும் ஒவ்வொரு வேட்பாளர் பெற்றுக் கொண்ட விருப்புகளின் எண்ணிக்கை என்பவற்றை உள்ளடக்கிய விரிவான அறிக்கை மற்றும் ஒவ்வொரு உள்ளூர் அதிகார சபையினதும் மேயர்ஃ பிரதி மேயர்ஃ தவிசாளர்/ உப தவிசாளர் மற்றும் உறுப்பினர்களின் பெயர்களை உள்ளடக்கிய விரிவான அறிக்கையொன்று இதன் இரண்டாம் பாகத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. விருப்பு வாக்குகள் எண்ணப்பட்டிருப்பது உறுப்பினர் பதவியொன்றை உரித்தாக்கிக் கொண்டுள்ள கட்சிகள் மற்றும் குழுக்களுக்கு மாத்திரமாகும்.

XIV ஆம் பிரிவு

தேர்தல் தொடர்பாக எடுக்கப்பட்ட நீதிமன்ற நடவடிக்கைகள்

302. இத்தேர்தல் தொடர்பாக பல்வேறு சந்தர்ப்பங்களில் உரிய தரப்பினர்கள் நீதிமன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டமையைக் காண முடிந்தது. முதலாவதாக கொழும்பு மாநகர சபை கலைக்கப்பட்டிருந்த போது தொடர்ந்தும் தேர்தலைப் பிற்போடுவதற்கு எடுக்கப்பட்ட தீர்மானம் தொடர்பாக SCFR/161/2011, SCFR 251/2011, SCFR 286/2011, SCFR 287/2011 என்ற 4 அடிப்படை உரிமை மனுக்கள் உயர் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டன. அதன் பின்னர் மாத்தறை மாநகர சபை தொடர்பில் SCFR/291/2011 ஆம் இலக்க மனுவும்இ கோட்டை மாநகர சபை தொடர்பில் SEFR/292/2011 ஆம் இலக்க மனுவும் நீர்கொழும்பு மாநகர சபை தொடர்பில் SEFR/296/2011 ஆம் இலக்க மனுவும் அடிப்படை உரிமை மனுக்களாக தாக்கல் செய்யப்பட்டன.

303. மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் PL/7/1/05/46 ஆம் இலக்க 2011.01.06 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் 19 மாநகர சபைகளுக்கான தேர்தல் பிற்போடப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டதோடு, அதிமேதகு சனாதிபதி அவர்கள் 16 மாநகர சபைகள் அடங்கலாக 23 உள்ளூர் அதிகார சபைகளின் தேர்தலைப் பிற்போட்டு 1689/12 ஆம் இலக்க 2011.01.18 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டார். அதற்கமைய மேற்குறிப்பிடப்பட்டுள்ள மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

நிராகரிக்கப்பட்ட பெயர் குறித்த நியமனப் பத்திரங்கள் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள்

304. பெயர்குறித்த நியமனப் பத்திர தாக்கலின் போது நிராகரிக்கப்பட்ட பெயர் குறித்த நியமனங்களில் 75 பெயர் குறித்த நியமனங்கள் தொடர்பில் அந்நியமனப் பத்திரங்களை ஏற்றுக் கொள்ளுமாறு கோரி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டன. அந்த 75 மனுக்களில் 48 பெயர் குறித்த நியமனப் பத்திரங்களை ஏற்றுக் கொள்ள வேண்டுமென உயர் நீதிமன்றம் தீர்மானித்தது. 23 மனுக்கள் நிராகரிக்கப்பட்டதோடு, 4 மனுக்கள் கேட்டு விலக்கிக் கொள்ளப்பட்டன. பெயர்குறித்த நியமனங்கள் நிராகரிக்கப்பட்டமை தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் தொடர்பான எண்ணிக்கை பற்றிய அட்டவணை கீழே காட்டப்பட்டுள்ளது.

மனுக்கள் தாக்கல் செய்த கட்சி/ குழு	மனுக்களின் எண்ணிக்கை	இடமளிக்கப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை	நிராகரிக்கப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை	கேட்டு விலகிக் கொள்ளப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை
அகில இலங்கை தமிழர் ஐக்கிய முன்னணி	02	–	02	–
ஈழவர் ஜனநாயக முன்னணி	01	–	01	–
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி	36	35	01	–
ஐக்கிய தேசியக் கட்சி	13	05	04	04
ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்	06	03	03	–
ஜனசெத பெரமுண	03	01	02	–
பிரஜைகள் முன்னணி	01	01	–	–
சுயேச்சைக் குழு	13	03	10	–
மொத்தம்	**75**	**48**	**23**	**04**

305. 2011.10.08 ஆம் திகதி நடாத்தப்பட்ட உள்ளூர் அதிகார சபைத் தேர்தலின் ஐஐஐ ஆம் கட்டத்தின் கீழ் கொழும்பு மாநகர சபை சார்பாக சமர்ப்பிக்கப்பட்ட 2 பெயர் குறித்த நியமனப் பத்திரங்கள் நிராகரிக்கப்பட்டமை தொடர்பாக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் இரண்டு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டதோடு, அதில் CA 568/2011 ஆம் இலக்க மனு கேட்டு விலக்கிக் கொள்ளப்பட்டதோடு, CA 573/2011 ஆம் இலக்க வழக்கு கட்டணமின்றி நிராகரிக்கப்பட்டது.

(குறிப்பு 19)

உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள்

306. பெயர் குறித்த நியமனப் பத்திரம் நிராகரிக்கப்பட்டமைக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் தொடர்பாக வழங்கப்பட்ட தீர்ப்புக்கு எதிராக கீழே காட்டப்பட்டுள்ள மனுக்கள் உயர் நீதிமன்றத்தில் மேன்முறையீடுகளாக சமர்ப்பித்தன. அம்மனுக்கள் அனைத்தும் 2011.07.23 ஆம் திகதிக்கு முன்னர் விசாரிக்கப்பட்டு தீர்ப்பளிக்கப்பட்டது. அம்மனுக்கள் அனைத்தும் நிராகரிக்கப்பட்டன.

மனு இலக்கம்		உள்ளூர் அதிகார சபை	தீர்ப்பளிக்கப்-பட்ட திகதி	தீர்ப்பு
மேன்முறையீட்டு நீதிமன்றம்	உயர் நீதிமன்றம்			
CA (Writ) 155/2011	SC(SPI)LA 55/2011	சிலாபம் பிரதேச சபை	2011.07.21	நிராகரிக்கப்பட்டது.
CA (Writ) 73/2011	SC(SPI)LA 112/2011	உ.மாகம பிரதேச சபை	2011.07.06	நிராகரிக்கப்பட்டது.
CA (Writ) 135/2011	SC(SPI)LA 111/2011	வெலிகேபொல பிரதேச சபை	2011.07.18	நிராகரிக்கப்பட்டது.
CA (Writ) 118/2011	SC(SPI)LA 94/2011	வென்னப்புவ பிரதேச சபை	2011.07.06	நிராகரிக்கப்பட்டது.
CA (Writ) 133/2011	SC(SPI)LA 116/2011	ராஜாங்கனை பிரதேச சபை	2011.07.06	நிராகரிக்கப்பட்டது.
CA (Writ) 132/2011	SC(SPI)LA 117/2011	கல்னேவ பிரதேச சபை	2011.07.08	நிராகரிக்கப்பட்டது.

தேர்தல் முடிவுகளுக்கெதிராக தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள்

307. தேர்தலின் வாக்கெண்ணல் முடிவுகளை வெளியிடுதல் நிறைவடைந்ததன் பின்னர், முடிவுகள் தொடர்பாக திருப்தியடையாத தரப்புக்களால் வாக்கெடுப்பை மீள நடாத்துதல் மற்றும் விருப்புக்களை மீள் எண்ணல் என்பவற்றை எதிர்பார்த்து மேல் நீதிமன்றத்திலும் மற்றும் மாகாண மேல்நீதிமன்றங்களிலும் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

308. இவ்வாறு சமர்ப்பிக்கப்பட்ட மொத்த மனுக்களின் எண்ணிக்கை 28 ஆகும். அவற்றில் 21 மனுக்கள் மேல் முறையீட்டு நீதிமன்றத்திலும் 07 மனுக்கள் மாகாண உயர் நீதிமன்றங்களிலும் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. வாக்கெடுப்பை மீள நடாத்துமாறு கொலன்னாவை நகர சபைக்காக முறைப்பாடொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்ததோடு, உறுப்பினராக நியமனம் செய்யுமாறு கூறி பாணந்துரை நகர சபை சார்பாகவும் மனுவொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஏனைய அனைத்து முறைப்பாடுகள் ஊடாகவும் விருப்புகளின் மீள்எண்ணல் எதிர்பார்க்கப்பட்டிருந்தது. சமர்ப்பிக்கப்பட்டிருந்த 28 மனுக்களில் 02 மனுக்கள் தொடர்பான தீர்ப்பு இதுவரை கிடைக்கப்பெறவில்லையென்பதோடு, ஏனைய அனைத்து மனுக்களும் நிராகரிக்கப்பட்டன.
(குறிப்பு 20)

தேர்தல் நடாத்தப்பட்டமைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள்

309. முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு மற்றும் கரைத்துறைப்பற்று ஆகிய இரண்டு பிரதேச சபைகளுக்காக தேர்தலை நடாத்தும் நோக்கோடு 2011.01.06 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர் பெயர் குறித்த நியமன அறிவித்தலை வெளியிட்டார். இருப்பினும், அதுவரை நிலக்கண்ணி வெடிகளை அகற்றுதல் மற்றும் மீள் குடியேற்றம் நிறைவடையாதிருந்தமையால், தேர்தலை நடாத்துவதில் அசௌகரியங்கள் முன்வைக்கப்பட்டன. நிலக்கண்ணி வெடிகளை அகற்றி மீள் குடியேற்றத்தை நிறைவு செய்தல் துரிதமாக மேற்கொள்ளப்பட்ட போதும் பிரதேசத்தின் பொது மக்கள் இடம்பெயர்ந்துள்ளமை காரணமாக தேர்தலை தொடர்ந்தும் பிற்போட வேண்டுமென தெரிவிக்கப்பட்டது. அதற்கமைய இவ்விரண்டு பிரதேச சபைகளுக்குமான தேர்தல் முதலாவதாக 2011.05.30 ஆம் திகதி வரையும் அதன் பின்னர் 2011.12.31 ஆம் திகதி வரையும் பிற்போடப்பட்டது.

310. இது தொடர்பில் கட்சிச் செயலாளர்களை அழைத்து கலந்துரையாடி இடம்பெயர்ந்துள்ள வாக்காளர்களுக்குத் தேவையான போக்குவரத்து வசதிகளை செய்து கொடுப்பதற்கு தேர்தல்கள் ஆணையாளர் இணக்கம் தெரிவித்து 2012.03.24 ஆம் திகதி தேர்தலை நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது. அத்தீர்மானத்திற்கு எதிராக 2012.03.14 ஆம் திகதி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் 02 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. ஏற்கனவே தேர்தலை நடாத்துவதற்கு தேவையான அனைத்து அலுவல்களும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதும் மனுதாரர்களினால் கோரப்பட்ட தேர்தல் நடாத்துவதை இடைநிறுத்தி மேல்முறையீட்டு நீதிமன்றத்தினால் 2012.03.19 ஆம் திகதி இரண்டு எழுத்தாணைகள் பிறப்பிக்கப்பட்டன. 72/2012 மற்றும் 74/2012 ஆகிய இலக்கங்களின் கீழ் பிறப்பிக்கப்பட்ட இவ்விரண்டு தடையுத்தரவுகளுக்குரிய மனுக்களின் விசாரணை இவ்வறிக்கை எழுதி முடிக்கப்படும் வரையில் அதன் விசாரணைகள் நிறைவடையாது காணப்பட்டன.

XV ஆம் பிரிவு

தேர்தல் சட்டங்களை செயல்வலுப்பெறச் செய்வதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

அடிப்படைப் பின்னணி

311. தேர்தலொன்றின் போது வாக்காளர், வேட்பாளர் மற்றும் தேர்தல்கள் அலுவல்களை மேற்கொள்வதில் ஈடுபடுகின்ற அரச அலுவலர்கள் தேர்தல் சட்டங்களுக்கு இசைவாக தேர்தலுக்குரிய முழுப் பணிப்பொறுப்புக்களையும் ஆற்ற வேண்டுமென்பதோடு, தேர்தல்கள் சட்டங்களை செயல்வலுப்படுத்தல் இலங்கை பொலிஸாரினால் மேற்கொள்ளப்படல் வேண்டும். உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் மூலம் அறிமுகம் செய்யப்பட்டுள்ள தேர்தல் சட்டங்களை தொடர்ந்தும் வலுப்படுத்துவதற்காக திருத்தச் சட்டங்கள் மற்றும் விஷேட ஏற்பாடுகள் சட்டங்கள் என்பன அவ்வவ்போது நிறைவேற்றப்பட்டுள்ளன. அதற்கு மேலதிகமாக 13,17 மற்றும் 18 ஆம் அரசியல் யாப்பு திருத்தங்கள் தொடர்பாகவும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

312. தேர்தல்கள் சட்டங்களினால் எதிர்பார்க்கப்படுவது தேர்தலை சுதந்திரமாகவும் நீதியாகவும் நடாத்தி வாக்காளர்களின் சுதந்திரமான வாக்கின் மூலம் தேவையான உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்குச் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுப்பதாகும். இருப்பினும், விகிதாசார பிரதிநிதித்துவ முறையின் கீழ் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் முழுமையான உள்ளூர் அதிகார சபைகள் பிரதேசம் முழுவதும் தமது பிரச்சார அலுவல்களை மேற்கொள்வது அவசியமாகும். இங்கு கட்சி/ குழுக்களுக்கிடையே போன்றே ஒரே குழுவின் வேட்பாளர்களிடையேயும் நிலவிய கடும் போட்டித் தன்மை அதிகரித்தல் சாதாரண நிகழ்வொன்றாக மாற்றமடைந்துள்ளது. இத்தேர்தல் உள்ளூர் அதிகார சபைகளுக்கான பிரதிநிதிகளை தேர்ந்தெடுப்பதைவிட தேசிய தேர்தலொன்றின் சுபாவத்தைப் பெற்றுக் கொண்டதோடு, அரசாங்கத்தின் முழுமையான அதிகாரமும் அது தொடர்பில் ஈடுபடுத்தப்பட்டதைக் காண முடிந்தது.

313. விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறையின் கீழ் கட்சிகள் முக்கியத்துவமானவையாக அமைவதோடு, கட்சியை வெற்றி பெறச் செய்வதற்காக கட்சியின் அதிகாரம் கொண்டோர் பெரும் அர்ப்பணிப்புடன் அலுவல்களை மேற்கொண்டதைக் காணமுடிந்ததோடு, விருப்பு வாக்குகளுக்காக ஒரே கட்சியின் வேட்பாளர்களுக்கிடையில் கூட பெரும் போட்டி நிலவியது. இப்போட்டி சில சந்தர்ப்பங்களில் வன்முறைகளுக்குக் கூட இட்டுச் சென்றதைக் காண முடிந்தது.

314. இத்தேர்தலின் போது தேர்தல் சட்டங்கள் மீறப்பட்டமை தொடர்பாக பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றதோடு, அவற்றில் சிலவற்றில் தேர்தல் சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படாமை தொடர்பிலான விமர்சனங்களும் உள்ளடக்கப்பட்டிருந்தன. சட்டத்தை செயல்வலுப் பெறச் செய்வதற்கு கட்டுப்பட்டுள்ள பொலிஸ் திணைக்களத்தின் எவரேனும் அலுவலரொருவர் தேர்தல் சட்டங்களை மீறுகின்ற அரசியல்வாதிகளின்/ அரசியல் கட்சிகளின் ஆதரவாளர்களின் சட்டமுரணான செயற்பாடுகளின் முன்னே மௌனமாகவிருப்பின் அது முழு மொத்த சமூகத்தினது குற்றச்சாட்டுக்களுக்கு இலக்காகும்.

315. தேர்தல் பிரச்சாரப் பணிகளுக்கான வாகன ஊர்வலங்கள்/ மக்கள் ஊர்வலங்களை நடாத்துதல், சட்டவிரோத சுவரொட்டிகள்/ பதாகைகள்/ உருவப்படங்களைக் காட்சிப்படுத்துதல் மற்றும் பெருந்தெருக்களில் தேர்தல் சின்னங்களை வரைதல் போன்ற சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவதன் மூலம் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 81ஆ ஆம் உப பிரிவு மீறப்பட்ட பல சந்தர்ப்பங்கள் தொடர்பாக அறிக்கையிடப்பட்டது. அரச வாகனங்கள், அரச கட்டிடங்கள், அரச அலுவலர்கள் போன்ற அரச வளங்கள் கட்சி% வேட்பாளர் ஊக்குவிப்பை அல்லது பாதிப்பை ஏற்படுத்தத் தக்கவாறு பயன்படுத்தல் அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கும் மற்றும் இயற்கை நியதிக் கோட்பாடுகளுக்கும் முரண்பாடான செயலொன்றென்பதோடு, இத்தேர்தலின் போதும் இவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் குறிப்பிடத்தக்களவு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன.

316. குறிப்பாக தேர்தலுக்கு முன்னரான காலப்பகுதியில் தேர்தல்கள் செயலகத்தில் பேணப்பட்டு வந்த முறைப்பாட்டு விசாரணைப் பிரிவுக்கு தேர்தல் சட்டங்கள் மீறப்படல் தொடர்பான முறைப்பாடுகள் பெருமளவு கிடைக்கப்பெற்றிருந்தன. அம்முறைப்பாடுகள் உரிய அரச நிறுவனங்களுக்கும் மற்றும் தேவைப்படுமிடத்து, பொலிஸ் உரிய அதிகாரிகளுக்கும் பரிந்துரை/ அறிவுறுத்தலுடன் அனுப்பி வைக்கப்பட்டன. இம்முறைப்பாடுகள் தொடர்பாக தாமதமின்றி செயற்பட வேண்டிய தேவைப்பாடு உரியவாறு முழுமையாக நிறைவேற்றப்படவில்லையெனினும், பெருமளவான அரச நிறுவனங்கள் மற்றும் பொலிஸார் தேர்தல் அதிகாரிகளின் அறிவுறுத்தல்களுக்கு இணங்க செயற்பட்டமை அவதானிக்கப்பட்டது.

317. பதினேழாம் அரசியலமைப்பினால் உருவாக்கப்படுவதற்கென உத்தேசிக்கப்பட சுயாதீன பொலிஸ் ஆணைக்குழுவை வலுவுள்ளதாக நடைமுறைப்படுத்துவதனூடாக தேர்தல் சட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குரிய பொலிஸ் அலுவலர்களை வழிநடாத்த முடியுமாயின், தேர்தல் சட்டங்களை செயல்வலுப்பெறச் செய்வதற்காக பொலிஸ் அலுவலர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்ற தாமதமற்ற, சட்ட ரீதியாகச் செயற்பட வேண்டிய தேவைப்பாடு முறையாக நிறைவு செய்யப்படாத போதிலும் பெரும்பாலான அரச அலுவலகங்கள், பொலிஸ் என்பன தேர்தல் அதிகாரிகளின் அறிவுறுத்தல்களை பின்பற்றியமையை அவதானிக்க முடிந்தது.

318. தேர்தல் சந்தர்ப்பமொன்றின் போது தேர்தலை நீதியாகவும் மற்றும் சுதந்திரமாகவும் பேணிச் செல்வதற்காக தேர்தல்கள் ஆணையாளருக்கும், தெரிவத்தாட்சி அலுவலருக்கும் ஒத்துழைப்பு வழங்குகின்ற பிரதான அரச நிறுவனம் இலங்கை பொலிஸ் என்பதை குறிப்பிட்டுக் கூற வேண்டியதில்லை. பொலிஸ்மா அதிபர் தொடக்கம் இத்திணைக்களத்தின் அனைத்து அலுவலர்களும் சட்ட ரீதியாக தமது கடமைகளை ஆற்றுவதற்குத் தேவையான சிறந்த சூழ்நிலையொன்று காணப்படுதல் அவசியமாகும். அவ்வாறான

சிறந்த சூழ்நிலையொன்றைப் பேணிவரும் பொறுப்பு அரசியல்வாதிகள் போன்றே அனைத்து பிரசைகளையும் சாரும். இருப்பினும், தேர்தல் சட்டங்களை செயற்படுத்துவதற்காக பொலிஸாரால் மேற்கொள்ளப்பட வேண்டிய அலுவல்கள் பல்வேறு அழுத்தங்கள் காரணமாக முறையாக ஆற்றப்படுவதில்லையென முறைப்பாடுகள் கிடைக்கப்பெறுவதன் காரணமாக அப்பணிகளை ஆற்றுவதற்கு தேர்தல்கள் திணைக்களம் மற்றும் தெரிவத்தாட்சி அலுவலர்கள் தலையிடுதல் வேண்டுமென இம்முறைப்பாடுகளை முன்வைக்கின்ற அரசியல் கட்சிகள்/ சிவில் அமைப்புக்கள் மற்றும் பிரசைகள் எதிர்பார்க்கின்ற நிலைமையொன்று ஏற்பட்டுள்ளது. இருப்பினும், தேர்தல்கள் திணைக்களத்திற்கு அதற்கான பொருத்தமான பொறிமுறையொன்று இல்லை. தேர்தல்கள் திணைக்களத்திற்கு செய்ய முடிவது தேவையான அறிவுறுத்தல்களை வழங்குதல் மற்றும் தேவையான நிதியொதுக்கீடுகளை செய்து கொடுத்தல் மாத்திரமே. அதற்கு மேலதிகமாக சட்டவிரோத பிரச்சாரப் பணிகள், சட்டவிரோத அலுவலகங்களைப் பேணிச் செல்கின்ற இடங்கள் தொடர்பாகவும் அரச ஆதனங்களின் முறையற்ற பாவனை தொடர்பாகவும் மாவட்ட பிரதி/ உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களிடமிருந்து தகவல் அறிக்கைகளைப் பெற்றுக் கொண்டு பொலிஸ் அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்க முடியும். ஆதலால், தேர்தல் சட்டங்களை செயல்வலுப்படுத்தல் பொலிஸ்மா அதிபர் உள்ளிட்ட பொலிஸ் திணைக்களத்திற்குக் கையளிக்கப்பட்டுள்ள கைவிட முடியாத பொறுப்பொன்று என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். இதற்காக தேர்தல் காலப்பகுதியினுள் பொலிஸ் சேவையை அரசியல் அழுத்தங்களின்றி சுதந்திரமாக பேணிச் செல்வதற்கு அரசியல் அதிகாரிகளின் முழுமையான ஒத்துழைப்பு அவசியமாகும். அவ்வாறில்லையெனில், நீதியான தேர்தலொன்றை நடாத்துவது அசௌகரியமாக அமையுமென்பதோடு, வாக்கெடுப்பையும் அதன் பெறுபேறுகளையும் ஏற்றுக் கொள்ள முடியாதென்ற மக்கள் கருத்தொன்று தோற்றம் பெற முடியும். இது தொடர்பாக அனைத்து அரசியல் அதிகாரிகளின், வேட்பாளர்களின் மற்றும் அனைத்து பிரசைகளின் விஷேட கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன்.

319. எவ்வாறிருப்பினும், தேர்தல் சட்டங்களைச் செயல்வலுப்படுத்துவதற்காகத் தேர்தல்கள் ஆணையாளரால் பல்வேறு விஷேட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதென்பதை இங்கு குறிப்பிடுதல் வேண்டும்.

- அரச ஆதனங்களை முறையற்ற விதத்தில் அரசியல் அலுவல்களுக்குப் பயன்படுத்துவதைத் தடுத்தல்.
- சட்டவிரோத தேர்தல் பிரச்சார அலுவல்கள் மற்றும் சட்ட விரோத ஊர்வலங்களைத் தடுத்தல்
- ஊடக நிறுவனங்களுக்கு வழிகாட்டு நெறிகளை வெளியிடுதல்.
- சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்துகை தொடர்பான நியதிகளை நடைமுறைப்படுத்தல்.
- முறைப்பாட்டு விசாரணை நிலையங்களை நிறுவுதல்.
- பின்னூட்டல் விசாரணை அலுவல்களை மேற்கொள்ளல்.

அரச ஆதனங்களை முறையற்ற விதத்தில் அரசியல் அலுவல்களுக்குப் பயன்படுத்துவதைத் தடுத்தல்.

320. அரசியலமைப்பின் பதினேழாம் திருத்தத்தின் 104ஆ(4)அ ஆம் உப உறுப்புரைக்கமைய தேர்தலொன்றுக்கான வேட்புமனு அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து தேர்தல் நிறைவடையும் வரை தேர்தல் காலப்பகுதியினுள் தேர்தலில் போட்டியிடுகின்ற எவரேனும் வேட்பாளரொருவர் அல்லது ஏதேனும் அரசியல் கட்சியொன்று, சுயேச்சைக் குழுவொன்று தேர்ந்தெடுக்கப்படுவதை ஊக்குவிப்பதற்கு அல்லது தடுப்பதற்கான பணிகளுக்காக அரச அல்லது அரச கூட்டுத்தாபனத்திற்குரிய அசையும் அல்லது அசையாத ஆதனமொன்றைப் பயன்படுத்துவதைத் தடைசெய்யும் அதிகாரம் ஆணைக்குழுவுக்குக் கையளிக்கப்பட்டுள்ளது. 103 ஆம் உறுப்புரை மற்றும் 27(2) ஆம் பிரிவிற்கமைய தேர்தல் ஆணைக்குழு நிறுவப்படும் வரை தேர்தல்கள் ஆணையாளருக்கு இப்பொறுப்புக்கள் கையளிக்கப்படும்.

321. இதற்கமைய கடந்த தேர்தல்களின் போது போன்றே இவ்வுள்ளூர் அதிகார சபைகள் தேர்தலிலும் சனாதிபதியின் செயலாளர், அமைச்சரவையின் செயலாளர், பிரதமரின் செயலாளர் உள்ளிட்ட அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் மற்றும் ஏனைய அதிகாரிகளுக்குச் சுற்றறிக்கைக் கடிதமொன்றின் மூலம் அரச ஆதனங்களின் முறையற்ற பாவனையை தடுப்பதன் தேவைப்பாடு அறிவிக்கப்பட்டது. (அட்டவணை 03)

322. இருப்பினும், அரச வாகனங்கள், அரச கட்டிடங்கள் மற்றும் அரச அலுவலர்கள் உள்ளிட்ட அரச ஆதனங்களை தேர்தல் பிரச்சார அலுவல்களில் ஈடுபடுத்தல் தொடர்பாக பொதுமக்களின் முறைப்பாடுகள் கணிசமானளவு கிடைக்கப்பெற்றன. சில சந்தர்ப்பங்களில் அரச வைபவங்கள் நடாத்துவதனூடாக கட்சி, வேட்பாளர் ஊக்குவிப்பு உரைகளை நிகழ்த்தல், உலர் உணவுப் பொருட்கள் உள்ளிட்ட உணவு பண்டங்கள், கட்டிட நிருமாணப் பொருட்கள், வீட்டு மற்றும் தோட்ட உபகரணங்கள், ஆடைகள் என்பவற்றைப் பகிர்ந்தளித்தல் தொடர்பாக அறிக்கையிடப்பட்டன. இவ்வாறான அலுவல்களைத் தவிர்ப்பதற்காக தேர்தலின் இரண்டாம் கட்டத்தின் போது மேலே குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கைக் கடிதத்தை அனுப்பியதற்கு மேலதிகமாக அனைத்து அமைச்சுக்களின் மேலதிக செயலாளர்கள் மற்றும் போக்குவரத்து விடயத்துக்குப் பொறுப்பான பதவிநிலை அலுவலர்களை அழைத்து ஒவ்வொரு அமைச்சுக்கும் சொந்தமான வாகனங்கள் மற்றும் அரச சொத்துக்களின் துஷ்பிரயோகத்தை தடுக்கும் பொறுப்பு அவ்வலுவலர்களுக்குக் கையளிக்கப்பட்டது.

323. இலங்கையில் பல்வேறு தேர்தல்கள் அவ்வப்போது நடாத்தப்படுகின்ற தற்போதைய சூழ்நிலையில் தேர்தலொன்று நடாத்தப்படுகின்ற அனைத்து சந்தர்ப்பங்களிலும் அதிகாரத்திலிருக்கின்ற பொதுமக்கள் பிரதிநிதிகள் சிலர் பதவி வகித்து கொண்டிருக்கின்றமையினால் தமது அதிகார பலத்தைப் பயன்படுத்தி தமது கட்சியின் வேட்பாளர்களின் வெற்றிக்காக அரச ஆதனங்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்திக் கொள்வதை தவிர்த்துக் கொள்ள

முடியாத நிலைமையொன்று ஏற்பட்டுள்ளது. இந்நிலைமையின் கீழ் சட்டத்தை செயல்வலுப்பெறச் செய்வதற்குக் கட்டுப்பட்டுள்ள அரச அலுவலர்கள்/ பொலிஸ் அலுவலர்கள் ஆகியோரில் சிலர் முறையற்ற செயற்பாடுகளிலீடுபடுகின்ற சில அரசியல்வாதிகளுக்கு முன்னே உதாசீனப் போக்கை கடைப்பிடிப்பது அதிசயமான ஒன்றல்ல.

324. அரச ஆதனங்களின் துஷ்பிரயோகம் தொடர்பாக அமைப்பொன்றிடமிருந்து நிறுவனமொன்றிடமிருந்து அல்லது நபரொருவரிடமிருந்து முறைப்பாடொன்று கிடைக்கப்பெற்றவுடன் குறித்த அறிவுறுத்தல்கள் சகிதம் அம்முறைப்பாடுகளை உரிய பொறுப்புடையவர்களுக்கு ஆற்றுப்படுத்தல் தேர்தல்கள் ஆணையாளரால் மேற்கொள்ளப்பட்டது. இதற்கு மேலதிகமாக தேர்தல்கள் ஆணையாளர் கட்சிச் செயலாளர்கள், கட்சி முகவர்கள் ஆகியோர்களுக்காக நடாத்திய ஆலோசனைக் கூட்டங்களிலும் இவ்வரச ஆதனங்களின் முறையற்ற பாவனையைத் தடுப்பதன் தேவைப்பாடு சுட்டிக்காட்டப்பட்டது. ஆலோசனை சபைக் கூட்டத்தின் முக்கிய அம்சமொன்றாக இது காணப்பட்டதையும் குறிப்பிட முடியும். சில சந்தர்ப்பங்களில் இவ்விடயம் தொடர்பாக ஆலோசனை சபை கூட்டங்களில் மிகக் கடுமையான வாதப்பிரதிவாதங்களும் ஏற்பட்டன.
(பின்னிணைப்பு 49)

சட்டவிரோத தேர்தல் பிரச்சார அலுவல்கள் மற்றும் சட்டவிரோத ஊர்வலங்களைத் தடுத்தல்

325. உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 81(ஆ) ஆம் உப பிரிவின் மூலம் தேர்தலுக்கான நியமனக் காலப்பகுதியின் முதலாம் நாளன்று தொடங்கி அத்தகைய தேர்தலின் வாக்கெடுப்பு நடைபெறும் தினத்திற்கு அடுத்துறும் நாளன்று முடிவடையும் காலப்பகுதியினுள் அரசியல் கட்சியொன்றின், சுயேச்சைக் குழுவொன்றின் வேட்பாளரொருவர் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு ஆதரவு வழங்கும் அடிப்படையில் வேட்பாளரை பயணிக்கின்ற வாகனத்தில் அல்லது வேட்பாளரொருவருக்கு ஆதரவு வழங்கும் கூட்டமொன்று நடாத்தப்படுகின்ற தினத்தில் குறித்த கூட்டக் காணி தவிர்ந்த வேறு எந்தவோர் இடத்திலும் சுவரொட்டிகள், பதாகைகள், கொடிகள், உருவப்படங்கள், அறிவித்தல்கள் ஆகியவற்றைக் காட்சிப்படுத்துவது சட்டவிரோதமாகும். குறிப்பாக மக்கள் பிரவேசிப்பதற்கு அனுமதியுள்ள பொது இடங்கள் தேர்தல்கள் மற்றும் தொடர்புடைய பிரச்சார அலுவல்களிலிருந்து விடுவிக்கப்பட்டிருத்தல் வேண்டும். இவ்வரையறைகள் அரசியல் அதிகாரத்தினால் மீறப்பட்டமை இத்தேர்தலின் மூன்று கட்டங்களிலும் காணக் கூடியதாகவிருந்தது. குறிப்பாக ஆட்சி அதிகாரம் கொண்ட கட்சி இவ்வாறு தமது அதிகாரத்தை முறையற்ற விதத்தில் பயன்படுத்துதல் வெவ்வேறு மட்டங்களில் இடம்பெறுவதைக் கடந்த காலங்கள் முதலே காணக்கிடைக்கின்ற போதிலும் அது படிப்படியாக அதிகரித்துவரும் நிலைமையைக் காணக்கூடியதாகவுள்ளது. இதற்கமைய சட்டத்தை செயல்வலுப்படுத்துவதற்குப் செய்வதற்குப் பொறுப்புக் கையளிக்கப்பட்டுள்ள பொலிஸாரில் சில அலுவலர்கள் இச்சட்ட நிலைமைகளை கவனத்தில் கொள்ளாது விடுகின்றமை காரணமாக போட்டியிடுகின்ற வேட்பாளர்கள் போன்றே அரசியல் கட்சிகள் மற்றும் அவர்களின் ஆதரவாளர்கள் சட்டத்தை மீறிச் செயற்படுவது வழமையான செயலொன்றாக மாற்றமடைந்துள்ளது.

326. ஒரே கட்சியின் வேட்பாளர்களிடையே தமது விருப்புக்களின் எண்ணிக்கையை அதிகரித்துக் கொள்வதற்காக தமது இலக்கத்தைக் காட்சிப்படுத்துவதற்கு முயற்சித்தமையைக் காணமுடிந்தது. பொதுமக்கள் நடமாடும் இடங்களில் வேட்பாளர்களின் உருவப்படங்கள் மற்றும் அவர்களின் இலக்கங்கள் பாரிய அளவிலான பதாகைகள், சுவரொட்டிகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதைக் காண முடிந்தது. தனது கட்சியின் தேர்தல் சின்னம், தனது இலக்கம் ஆகியவற்றைப் பெருந்தெருக்களில் வரைதல் மற்றும் வீதியின் இருமருங்கிலும் மதில்சுவர்கள், மரங்கள், கற்குன்றுகள் அனைத்திலும் இலக்கத்தைக் காட்சிப்படுத்துகின்ற சுவரொட்டிகளை ஒட்டுவதைக் காண முடிந்தது. மத்திய போக்குவரத்துச் சபைக்குரிய பஸ் வண்டிகள் மற்றும் தனியார் வாகனங்களிலும் ஒட்டிகள் மற்றும் சுவரொட்டிகள் ஊடாக கட்சித் தலைவர்களின் உருவப்படம் சகிதம் வேட்பாளர்களின் உருவப்படங்களையும் மற்றும் இலக்கங்களையும் காட்சிப்படுத்திய சந்தர்ப்பங்களை பொதுவாக காண முடிந்தது. மத்திய போக்குவரத்து சபை உள்ளிட்ட அரச நிறுவனங்களுக்குச் சொந்தமான பஸ் வண்டிகள் மற்றும் இதர வாகனங்களில் அதிகாரத்திலுள்ள கட்சியின் பிரச்சார அறிவித்தல்கள் காட்சிப்படுத்தப்படுவதாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன.

327. இங்கு தேர்தல்கள் திணைக்களத்திற்கு எடுக்க முடிந்த ஒரே நடவடிக்கை சட்டவிரோத பதாகைகள், உருவப்படங்கள், சுவரொட்டிகள் மற்றும் ஒட்டிகள் என்பவற்றை அகற்றுமாறு பொலிஸாருக்கு அறிவுறுத்தல் வழங்குவதும் தேவையான நிதி ஒதுக்கீடுகளை பொலிஸாருக்கு வழங்குவதுமாகும். இருப்பினும். இத்தேர்தலின் முதலாவது கட்டத்திலும் தேர்தலுக்கு முன்னரான காலப்பகுதியிலும் சுவரொட்டிகள், பதாகைகள், உருவப்படங்கள் போன்ற சட்டவிரோத பிரச்சார அலுவல்களை பெருமளவில் காணக் கிடைத்த போதும் தேர்தலுக்கு முந்திய தினத்திலிருந்து பொலிஸாரினால் அச்சட்டவிரோத பிரச்சார அறிவித்தல்களை அகற்றுவதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டது. தேர்தலுக்கு முன்னரான காலப்பகுதியில் சட்டவிரோத பிரச்சார அலுவல்களை தவிர்த்தல் தொடர்பில் சில பொலிஸ் நிலையங்களின் தலைமீடு போதுமற்றதாக காணப்பட்ட போதிலும் சிரேட்ட பொலிஸ் அலுவலர்களூடாக தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட அறிவுறுத்தல்கள் மூலம் அவ்வாறான பொலிஸ் நிலையங்களின் உதாசீனமான செயற்பாடுகளை மாற்ற முடிந்தது. அரசாங்கத்தின் ஆதரவோடு வேட்பாளர்கள் அதிகாரத்திலிருக்கின்ற தமது தலைவரின் உருவப்படத்துடன் தமது உருவப்படங்களை உள்ளடக்கிய சுவரொட்டிகள் மற்றும் உருவப்படங்களை அதிகளவில் காட்சிப்படுத்தும் போது அச்சட்டவிரோத காட்சிப்படுத்தல் பலகைகளையும் சுவரொட்டிகளையும் அகற்றுதல் அசௌகரியமாக அமைந்தமைக்கு அகற்றி முடிக்க முடியாதளவிற்கு மீண்டும் மீண்டும் சுவரொட்டிகள், பதாகைகள், உருவப்படங்களைக் காட்சிப்படுத்தியமையே காரணமாகுமென அவதானிக்கப்பட்டது. இருப்பினும், தேர்தல் நெருங்குகின்ற சந்தர்ப்பத்தில் சட்டவிரோத பிரச்சார அறிவித்தல்களை அகற்றுவதற்கு பொலிஸாரால் நடவடிக்கை எடுக்க முடிந்தது.

328. 2011.03.17 ஆம் திகதி நடாத்தப்பட்ட உள்ளூராட்சி அதிகார சபைத் தேர்தலின் முதலாம் கட்டத்தில் பெற்றுக் கொண்ட அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு இரண்டாம், மூன்றாம் கட்டங்களின் போது இச்சட்டவிரோத பிரச்சார அலுவல்களைத் தடுப்பதற்காக தேர்தல்கள் திணைக்களத்தினால் பாரிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. கிராம அலுவலர்களின் மற்றும் கண்காணிப்பு அமைப்புக்களின் ஒத்துழைப்போடு திணைக்களத்தினால் மாவட்ட அலுவலகங்களூடாக சட்டவிரோத பிரச்சார சுவரொட்டிகள், பதாகைகள், உருவப்படங்கள் காணப்பட்ட இடங்கள் தொடர்பான அட்டவணையொன்று பெறப்பட்டு பொலிஸ்மா அதிபர் மற்றும் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளுக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. திணைக்களத்தினால் மீண்டும் சேவையில் ஈடுபடுத்தப்பட்ட இளைப்பாறிய அலுவலர்கள் மற்றும் தற்காலிக உதவியாளர்களின் உதவியோடு பொலிஸாரின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொண்டு இச்சட்டவிரோத பிரச்சாரப் பலகைகள், பதாகைகள், சுவரொட்டிகள் என்பன அகற்றப்பட்டன. இப்பணிக்கு தேர்தல்கள் திணைக்களத்தின் அனைத்து நிரந்தர பணியாட் குழுவின் அங்கத்தவர்கள் மற்றும் தேர்தல்கள் திணைக்களத்திற்கு ஒத்துழைப்பு வழங்குகின்ற வேறு அரச நிறுவனங்களின் நிரந்தர பணியாட் குழு அங்கத்தவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கப்பெற்றதென்பதை விஷேடமாகக் குறிப்பிட்டாதல் வேண்டும்.

329. உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 81அ(2) ஆம் உப பிரிவிற்கமைய அரசியல் கட்சியொன்றின் அல்லது சுயேச்சைக் குழுவொன்றின் வேட்பாளரொருவரை ஊக்குவிப்பதற்காக ஊர்வலங்கள்/ பெரஹெராக்கள் என்பவற்றை நடாத்த முடியாது. இருப்பினும், தமது பலத்தையும் சக்தியையும் காட்டுவதற்காக பெரும்பாலான வேட்பாளர்கள் இச்சட்டவிரோத பணியில் ஈடுபடுவதற்கு முயற்சிப்பதைக் காண முடிகின்றது.

330. ஒரு மாநகர சபைப் பிரிவின் முன்னாள் மேயரொருவர் மற்றும் அரச அமைச்சரொருவர் தத்தமது பலத்தைக் காட்டுவதற்காக பாரியளவிலான இரண்டு ஊர்வலங்களை ஏற்பாடு செய்திருந்ததோடு, இது தொடர்பான தகவல் கிடைத்தவுடன் தேர்தல்கள் ஆணையாளர் ஊர்வலத்தை நிறுத்துமாறு பொலிஸாருக்கு அறிவுறுத்தல் வழங்கினார். இங்கு ஓர் ஊர்வலத்தை பொலிஸாரின் கட்டளைக்கமைய 500 மீற்றர் வரை சென்ற பின்னர் நிறுத்துவதற்கு முடிந்த போதும், மற்றைய ஊர்வலத்தில் பயணித்த அரசியல்வாதிகளுக்கு விஷேட பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தமையால் இது விஷேட அதிரடிப்படையினரின் பாதுகாப்புடன் பயணித்தாக அறிக்கையிடப்பட்ட முதலாவது சட்ட விரோத ஊர்வலமெனக் குறிப்பிட முடியும்.

331. அதேபோன்று கொலன்னாவ வாக்கெடுப்புப் பிரிவில் அரசியல் பலத்தைக் காட்டுவதற்காக வாகனப் பேரணியொன்றுடன் தொடர்புடைய துப்பாக்கிச் சூட்டுச் சம்பவமொன்றில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், சனாதிபதியின் தொழிற்சங்க அலுவல்கள் தொடர்பான இணைப்பாளருமான திரு. பாரத லக்ஷ்மன் பிரேமசந்திர உள்ளிட்ட நால்வர் மரணமடைந்ததோடு, மேலும் பலர் காயமடைந்ததாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக வழக்கு விசாரணை தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றது.

332. வாக்கெடுப்பின் மூன்றாம் கட்டத்தின் போது கம்பஹா மற்றும் குருநாகல் மாவட்டங்களில் அதிக எண்ணிக்கையான வாகனங்களுடன் சட்டவிரோத வாகன ஊர்வலங்களைப் பிரதேச அரசியல்வாதிகள் நடாத்த முயற்சித்ததோடு, தேர்தல்கள் ஆணையாளர் குறித்த அரசியல் கட்சிகளின் தலைவர்களை அறிவுறுத்தி பிரதேச அரசியல்வாதிகளுக்கு உரிய அறிவுறுத்தல் வழங்கி அவ்வூர்வலங்களை நிறுத்தினார். பண பலமும், மக்கள் பலமும் தமக்குள்ளதாகக் காட்டுவதற்கென நடாத்தப்படுகின்ற இது போன்ற ஊர்வலங்களுக்கு இடமளித்திருப்பின் முன்னர் குறிப்பிடப்பட்டவாறான கொலைகள் மேலும் இடம்பெறுவதற்கான சாத்தியமிருந்தது.

333. 1937 ஆம் ஆண்டில் சர்வசன வாக்குரிமை கிடைத்த பின்னர் 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் மூலம் விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறைமை அறிமுகம் செய்யப்படும் வரை நடாத்தப்பட்ட தொகுதிவாரி தேர்தல் முறையில் வேட்பாளர்கள் பல்வேறு கட்சிகளில் அல்லது சுயேச்சையாக போட்டியிட்ட போது தனி நபர் தொடர்பான விடயம் வாக்காளர்களுக்கு அவர்களின் வாக்களிப்பின் போது முக்கிய காரணியாக அமைந்தது. போட்டியிடுகின்ற அரசியல் கட்சிகளின் அல்லது குழுக்களின் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு வாக்களிக்கின்ற விகிதாசார முறையில் தனி நபர் தொடர்பான விடயத்திற்கு விருப்பு முறை இணைந்தமையாலே முக்கியத்துவம் கிடைத்தது. விகிதாசார முறையில் காணப்பட்ட முனைப்பான இயல்பு நலிவுற்று பழைய முறையில் காணப்பட்ட புறந்தள்ளப்பட்ட வேண்டிய பண்புகள் தொடர்ந்தும் இவ்விருப்பு முறையில் விருத்தியடைந்தன. ஆதலால், விருப்பு முறைக்கப்பாற்பட்ட விகிதாசார தேர்தல் முறையின் பண்புகளைத் தொடர்ந்தும் உள்ளடக்கிய வட்டார ரீதியான தேர்தல் முறையொன்று அவசியமாகின்றது.

ஊடக நிறுவனங்களுக்கு வழிகாட்டு நெறிகளை வெளியிடுதல்

334. அரசியலமைப்பின் பதினேழாம் திருத்தத்திற்கமைய தேர்தலொன்று சுதந்திரமாகவும் நீதியாகவும் நடாத்தப்படுவதை உறுதிப்படுத்துவதற்காகத் தேர்தல்கள் ஆணையாளர் அனைத்து அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடக நிறுவனங்களுக்கான வழிகாட்டு நெறிகளை வெளியிடல் பதினேழாம் அரசியலமைப்புத் திருத்தத்தின் பின்னர் நடாத்தப்பட்ட அனைத்து தேர்தல்களிலும் மேற்கொள்ளப்பட்டது.

335. தேர்தல்கள் மற்றும் அதனோடு தொடர்புடைய செய்திகள், நிகழ்ச்சிகள், தேர்தல் கூட்டங்கள் தொடர்பான விபரங்களை வெளியிடும் போது எந்தவோர் அரசியல் கட்சிக்கும் வேட்பாளருக்கும் ஊக்குவிப்பொன்று அல்லது பாதிப்பொன்று ஏற்படாதவாறு செயற்பட வேண்டியதன் தேவைப்பாடு இவ்வழிகாட்டி நெறிகள் மூலம் சுட்டிக் காட்டப்பட்டது. இலங்கை ஐக்கிய செய்திப் பத்திரிகைகள் சங்கம், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தானம், இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் மற்றும் சுயாதீன ரூபவாஹினி சேவை, லக்ஹன்ட வானொலி சேவை அரச ஊடக நிறுவனங்களாக அரசியலமைப்பின் பதினேழாம் திருத்தத்தின் கீழ் குறித்த வழிகாட்டு நெறிகளை சட்டரீதியாக பின்பற்றியொழுக கட்டுப்பட்டுள்ளவையெனச் சுட்டிக்காட்டப்பட்டது.

336. 2010 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட சனாதிபதித் தேர்தல் தொடர்பாக உயர் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அடிப்படை உரிமை வழக்குகள் மூன்றுக்குரியதாக (SCFR 957/09, SCFR 958/09, SCFR 959/09) அளிக்கப்பட்ட தீர்ப்பில் நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலொன்றை உறுதி செய்வது தொடர்பில் அரசியலமைப்பின் 104ஆ(5)(அ) ஆம் உப உறுப்புரையின் கீழ் தேர்தல்கள் ஆணையாளரினால் வெளியிடப்படுகின்ற வழிகாட்டு நெறிகளுக்கு இணங்கியொழுகுவதற்கு அனைத்து அரச ஊடக நிறுவனங்களும் கட்டுப்பட்டுள்ளனவென தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு வழிகாட்டு நெறிகள் வெளியிடப்பட்டதன் பின்னர், அவ்வழிகாட்டு நெறிகள் மீறப்படுவதாகத் தேர்தல்கள் ஆணையாளருக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெறும் சந்தர்ப்பங்களில் அது தொடர்பாக குறித்த நிறுவனங்களிடம் விசாரித்து தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

337. தொடர்ந்தும் வழிகாட்டு நெறிகள் மீறப்படுமிடத்து, குறித்த ஊடக நிறுவனங்களுக்கு பெயரின் அல்லது பதவியின் அடிப்படையில் தகைமையுடைய அதிகாரியொருவரை நியமனம் செய்வதற்கு பதினேழாம் அரசியலமைப்புத் திருத்தத்தினால் ஆணைக்குழுவிற்கு அதிகாரம் கையளிக்கப்பட்டது. இருப்பினும், இத்தேர்தலின் முதலாம் கட்டத்தின் போது அனைத்து அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களுக்கும் வழிகாட்டு நெறிகள் வெளியிடப்பட்ட போதும் வழிகாட்டு நெறிகளை மீறுவோருக்கு எச்சரிப்பதைத் தவிர தகைமையுடைய அதிகாரியொருவரை நியமனம் செய்வதற்கு முயற்சிக்கப்படவில்லையென்பது குறிப்பிடப்படல் வேண்டும். 2010 ஆம் ஆண்டின் சனாதிபதித் தேர்தலின் போது ஊடக வழிகாட்டு நெறிகள் ஊடக நிறுவனங்களால் மீறப்பட்டமை காரணமாக தகைமையுள்ள அலுவலரொருவர் நியமனம் செய்யப்பட்ட போதும், அத்தகைமை வாய்ந்த அதிகாரியினால் ஊடக நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட வழிகாட்டல்கள் தொடர்பில் எந்தவோர் அக்கறையும் காட்டாமல் தொடர்ச்சியாக வழிகாட்டு நெறிகளை மீறிச் செயற்பட்டமையால் தேர்தல்கள் ஆணையாளரால் தகைமை வாய்ந்த அதிகாரியின் பணிகள் இடைநிறுத்தப்பட்டன. அரசியலமைப்புக்கமைய அரச ஊடக நிறுவனங்கள் வழிகாட்டு நெறிகளை மீறுமாயின் அந்நிறுவனங்களின் நிருவாகத்தை தகைமையுள்ள அதிகாரிக்குக் கையளிக்க முடியும். இருப்பினும், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், இலங்கை சூபவாஹினி கூட்டுத்தாபனம் போன்ற நிறுவனங்களின் நிருவாகத்தைத் தகைமையுள்ள அதிகாரியொருவருக்குக் கையளித்து அலுவல்களை மேற்கொள்வதற்குரிய பொறிமுறையொன்று தேர்தல்கள் திணைக்களத்திற்கு இல்லை.

338. எவ்வாறிருப்பினும் பதினேழாம் அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் ஊடக நிறுவனங்களின் நிருவாகத்திற்குத் தகைமையுடைய அதிகாரியொருவரை நியமனம் செய்தல் தொடர்பில் தேர்தல்கள் ஆணையாளருக்குக் கையளிக்கப்பட்டிருந்த தத்துவங்கள் பதினெட்டாம் அரசியலமைப்புத் திருத்தத்தினால் நீக்கப்பட்டுள்ளது. அதற்கமைய தேர்தலின் இரண்டாம் கட்டத்தின் போது இலத்திரனியல் ஊடக நிறுவனங்களின் தலைவர்களை தேர்தல்கள் அலுவலகத்திற்கு அழைத்து தேர்தலொன்றின் போது வேட்புமனு அறிவித்தல் தொடக்கம் தேர்தல் முடிவுகள் வெளியிடப்படும் வரை தேர்தல் காலப்பகுதியினுள் ஊடகங்கள் நடந்து கொள்ள வேண்டிய முறை தொடர்பான ஊடக வழிகாட்டு நெறிகள் தெளிவுபடுத்தப்பட்டது. அதன் மூலம் அரச ஊடக நிறுவனங்கள் மாத்திரமன்றி அனைத்து ஊடக நிறுவனங்களும் இவ்வழிகாட்டு நெறிகளைப் பின்பற்றியொழுக வேண்டுமெனவும், பரஸ்பர புரிந்துணர்வுடன் ஊடகங்களைக் கையாள்வதன் தேவைப்பாடும் சுட்டிக்காட்டப்பட்டது.

339. சுவரொட்டிகள், பதாகைகள், உருவப்படங்கள் ஆகியவற்றை நிருமாணித்து சட்டவிரோதமாக தேர்தல் பிரச்சார அலுவல்களில் ஈடுபடுகின்ற அரசியல் கட்சிகள்/ சுயேச்சைக் குழுக்கள் மற்றும் வேட்பாளர்கள் ஊடகங்களைப் பயன்படுத்தும் போது ஊடக வழிகாட்டு நெறிகளுக்கு இணங்கி செயற்படுவதைக் காணமுடியவில்லை. குறிப்பாக அரச ஆதரவைக் கொண்டுள்ள வேட்பாளர்கள் சார்பாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், இலங்கை சூபவாஹினி கூட்டுத்தாபனம் போன்றே பத்திரிகைகளிலும் விரிவான பிரச்சாரங்கள் வழங்கப்பட்டதைக் காண முடிந்தது. இருப்பினும், மேற்படி நிலைமையின் கீழ் ஊடக வழிகாட்டு நெறிகள் மீறப்படுதல் தொடர்பில் அரசியல் கட்சிகளிலிருந்தும் அல்லது இதர பிரிவுகளிடமிருந்து தேர்தல்கள் ஆணையாளருக்குக் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் தொடர்பாக உரிய ஊடக நிறுவனங்களை அறிவுறுத்தி அவ்வாறான முறைப்பாடுகள் கிடைக்கப்பெறாதவாறு அலுவல்களை மேற்கொள்ளுமாறு குறித்த ஊடக நிறுவனங்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.
(அட்டவணை 04)

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்துகை தொடர்பான நியதிகளை நடைமுறைப்படுத்தல்.

340. 1988 ஆம் ஆண்டின் 74 ஆம் இலக்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்துகை தொடர்பான (திருத்தச் சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட) தேசிய அரசப் பேரவையின் 1975 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்துகை தொடர்பான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய தேர்தலொன்றில் போட்டியிடுகின்ற அனைத்து வேட்பாளர்களும் வேட்புமனுத் தினத்தில் தமது சொத்துக்கள் பொறுப்புக்கள் தொடர்பான வெளிப்படுத்துகையை வேட்புமனுத் தினத்திலிருந்து உறுப்பினரொருவராக சத்தியப் பிரமாணம் செய்வதற்கு முன்னர் மற்றும் தோல்வியடைந்த வேட்பாளர்கள் வேட்புமனுத் தினத்திலிருந்து 03 மாதங்களுக்குள் தேர்தல்கள் ஆணையாளருக்குக் கையளித்தல் வேண்டும். குறித்த சட்டத்திற்கிணங்க அனைத்து வேட்பாளர்களும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்துகையைச் சமர்ப்பிப்பதன் தேவைப்பாடு தொடர்பாக தேர்தலின் மூன்று கட்டங்களிலும் வேட்பாளர்கள் அறிவுறுத்தப்பட்ட போதும் முதலாம், இரண்டாம் கட்டங்களின் போது வேட்பாளர்களில் அதிக எண்ணிக்கையானோர் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்துகையைச் சமர்ப்பிப்பதில் ஆர்வம் காட்டவில்லையென்பதைக் குறிப்பிட்டாதல் வேண்டும். இருப்பினும், மூன்றாம் கட்டத்தின் போது சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்துகையைச் சமர்ப்பிக்காத வேட்பாளர்கள் தொடர்பில் நீதிமன்ற நடவடிக்கைகள் எடுக்கப்படுமெனவும் வெற்றியீட்டிய

அனைத்து வேட்பாளர்களும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்துகையைச் சமர்ப்பிக்குமாறும் அது வரை உறுப்பினர் பதவியை வர்த்தமானியில் வெளியிடுவதைக் காலதாமதம் செய்வதாகவும் ஊடகங்கள் மூலம் வெளியிடப்பட்டது. அதற்கிணங்க 2011.10.08 ஆம் திகதி நடாத்தப்பட்ட தேர்தலின் மூன்றாவது கட்டத்தில் போட்டியிட்ட உறுப்பினர் பதவிகளைப் பெற்றுக் கொண்ட அனைத்து வேட்பாளர்களிடமிருந்தும் உரியவாறு உறுப்பினர் பதவிகளை வர்த்தமானியில் வெளியிடுவதற்கு முன்னர் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்துகையைப் பெற்றுக் கொள்ள முடிந்தது. (பின்னிணைப்பு 50,51)

341. 2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்ட முதன்மைக் கட்டளைச் சட்டத்தின் 28 ஆம் பிரிவிற்கமைய ஒவ்வொரு வேட்பாளர் தொடர்பிலும் வேட்புமனுவில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொருவர் தொடர்பிலும் தேசிய அரசுப் பேரவையின் 1975 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்துகைச் சட்டத்தின் கீழ் அச்சட்டத்தில் விதிக்கப்பட்டுள்ள படிவத்திற்கமைவாக சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்துகையை அவ்வேட்புமனுப் பத்திரம் கையளிக்கப்பட்டு 03 மாதங்களினுள் சமர்ப்பித்தல் வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. 1975 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் சட்டம் என்பது, 1988 ஆம் ஆண்டின் 74 ஆம் இலக்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்துகை திருத்தச் சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட தேசிய அரசுப் பேரவையின் 1975 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க சொத்துக்கள் பொறுப்புக்கள் வெளிப்படுத்துகை சட்டம் எனக் குறிப்பிடுவது மிகப் பொருத்தமாகும். எவரேனும் வேட்பாளரொருவர் வேட்புமனுவைக் கையளித்து 03 மாதங்களினுள் இதனை சமர்ப்பிக்கவில்லையெனில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் இனிவரும் திருத்தமொன்றின் போது கவனம் செலுத்துவது கட்டாயமாகும்.

342. சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்துகையைப் பெற்றுக் கொள்வதன் நோக்கம் அதனைக் கொடுத்ததன் பின்னர் எவரேனும் நபரொருவர் முறையற்ற விதத்தில் தமது சொத்துக்களைக் அதிகரித்துக் கொண்டுள்ளாரா என்பதைப் பரீட்சிப்பதற்கு தேவையான சந்தர்ப்பமொன்றின் போது திறந்து பார்ப்பதற்காகவே என்பதால் தோல்வியடைந்த வேட்பாளர்களின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்துகையைப் பெற்றுக் கொள்ளும் தேவைப்பாடொன்று இல்லை என மேற்கொள்ளப்படுகின்ற கூற்றுக்களுக்கு இணங்க முடியாது ஏனெனில் அனைத்து வேட்பாளர்களும் முறையற்ற விதத்தில் சொத்துக்கள் சேர்த்துள்ளதாக செய்யப்படுகின்ற முறைப்பாடுகளைத் தவிர்த்துக் கொள்வது சிறந்த அரசியல் கலாச்சாரமொன்றிற்கு அவசியம் என்பதனாலாகும்.

343. எவரேனும் வேட்பாளரொருவர் சொத்துக்கள் பொறுப்புக்கள் வெளிப்படுத்துகையை வழங்கவில்லையெனில், அல்லது போலியான தகவல்களை வழங்கினால் அது பற்றி நீதிமன்றத்தில் உறுதி செய்யப்பட்டு அது தொடர்பாக குற்றவாளியாக்கப்பட்டால் அவ்வேட்பாளரின் (அல்லது ஏற்புடையவிடத்து மக்கள் பிரதிநிதி) ஏதேனும் குறித்த காலமொன்று கழியும் வரை தேர்தலொன்றில் போட்டியிட முடியாதென சட்ட ஏற்பாடு கொண்டுவரப்படல் வேண்டுமென அரசியல் கட்சிகளின் நிரந்தர முகவர்களின் கலந்துரையாடலின் போது முன்வைக்கப்பட்ட கருத்தை நடைமுறைப்படுத்துவது பொருத்தமென முன்மொழிகின்றேன்.

முறைப்பாட்டு விசாரணை நிலையங்களை தாபித்தல்

344. தேர்தலின் மூன்று கட்டங்களிலும் தேர்தல் சட்டங்களைச் செயல்வலுப்பெறச் செய்வதற்கான நடவடிக்கையொன்றாக தேர்தல்கள் செயலகத்தில் மற்றும் மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர் அலுவலகங்களில் முறைப்பாடுகளைக் கையேற்கும் மற்றும் விசாரணை செய்யும் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டன. தேர்தலின் முதலாம் கட்டத்தின் போது வேட்புமனு அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து எழுத்து மூலம் முறைப்பாடுகள் கையேற்கப்பட்ட போதும் முறைப்பாட்டு விசாரணை நிலையங்கள் தேர்தல் தினம் மற்றும் அதற்கு முந்திய தினங்களில் மாத்திரமே நடைமுறைப்படுத்தப்பட்டன. தேர்தலுக்கு முன்னரான தினங்களில் கடித மூலமாகவும் தொலைநகல் மூலமாகவும் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளை, அம்முறைப்பாடுகளின் தன்மைக்கமைய பொலிஸ்மா அதிபர் மற்றும் உரிய அதிகாரிகளுக்கு ஆற்றுப்படுத்தல், அம்முறைப்பாடுகள் தொடர்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கைகளைப் பெற்றுக் கொள்ளல் என்பன நடைமுறைப்படுத்தப்பட்டன. தேர்தலுக்கு முந்திய தினம் மற்றும் வாக்கெடுப்புத் தினம் ஆகியவற்றில் தேர்தல்கள் செயலகத்தில் சில சிரேட்ட பதவிநிலை அலுவலர்கள் மற்றும் பொலிஸ் சேவையின் சில சிரேட்ட அலுவலர்களின் வழிகாட்டலின் கீழ் முறைப்பாட்டு விசாரணை நிலையம் செயற்படுத்தப்பட்டது. இவ்விசாரணை நிலையத்திற்கு அத்தேர்தலில் போட்டியிடுகின்ற கட்சிகளிலிருந்தும் அனுமதிக்கப்பட்ட கண்காணிப்பு நிறுவனங்களிலிருந்தும் முகவர்களைக் கலந்து கொள்ளச் செய்யுமாறு அழைப்பு விடுக்கப்பட்டது. அதற்கமைய கடித மூலமாகவும், தொலைநகல் மூலமாகவும் மற்றும் தொலைபேசி மூலமாகவும் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் தொடர்பாக துரிதமாகச் செயற்படுவதற்கான சாத்தியம் கிடைத்தது. இதனோடு இணைந்ததாக அந்தந்த மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களில் ஒருங்கிணைப்பு அலுவலகங்கள் பேணப்பட்டு வந்ததோடு, அதனோடு இணைந்ததாக அந்தந்த பிரதேச செயலகங்களிலும் ஒருங்கிணைப்பு பிரிவுகள் நிறுவப்பட்டன. இதன் மூலம் கிராம மட்டத்திலும் மாவட்ட மட்டத்திலும் தேர்தல்கள் செயலகத்துடன் தொடர்புபட்ட வலையமைப்பொன்றினூடாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் தொடர்பாக உடனடியாக செயற்பட்டு அது தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுவது துரிதப்படுத்தப்பட்டன.
(பின்னிணைப்பு 52,53)

345. தேர்தலின் இரண்டாம் மற்றும் மூன்றாம் கட்டங்களின் போது வேட்புமனுத் தினத்திற்கு அடுத்த தினத்திலிருந்து தேர்தல் நிறைவடையும் வரை முழுமையான தேர்தல் காலப்பகுதியினுள் இம்முறைப்பாட்டு விசாரணை நிலையம் செயற்படுத்தப்பட்டது. அதன்

மூலம் கட்சியொன்றின் அல்லது வேட்பாளரொருவரின் வெற்றியை ஊக்குவிப்பதற்கு அரச ஆதனங்கள் அதாவது அரச வாகனங்கள், அரச கட்டிடங்கள், அரச காணிகள் மற்றும் அரச அலுவலர்களை ஈடுபடுத்திக் கொள்வது தொடர்பாகவும் அரச வைபங்கள் என்ற போர்வையில் மேற்கொள்ளப்படுகின்ற அரசியல் பிரச்சார அலுவல்கள் தொடர்பாகவும் தேர்தல்கள் செயலகத்திற்குக் கிடைக்கப்பெறுகின்ற முறைப்பாடுகள் பற்றி உடனடியாக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அதற்கு மேலதிகமாக சட்டவிரோத தேர்தல் பிரச்சாரப் பணிகள் தொடர்பில் சட்டத்தின் 81 ஆம் பிரிவை மீறி வேட்பாளர்களின் உருவப்படங்கள், இலக்கங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய பதாகைகள், பெரியளவிலான உருவப்படங்கள், சுவரொட்டிகள் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற சட்டவிரோத தேர்தல் பிரச்சாரப் பணிகள் தொடர்பாக பொலிஸ்மா அதிபரை அறிவுறுத்தி அச்சட்டவிரோத பிரச்சார அலுவல்களை இடைநிறுத்துவதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டது. சட்டவிரோத தேர்தல் பிரச்சாரப் பணிகளில் சட்டவிரோத அலுவலகங்களை அமைத்தல் முன்னனுமதி பெற்றுக்கொண்ட கட்சியின் வேட்பாளர்களுக்காகவன்றி வேறு கட்சிகளின் பிரபல்யமான வேட்பாளர்களின் தேர்தல் பிரச்சாரங்களுக்காக அவ்வலுவலகங்களைப் பயன்படுத்துதல் மற்றும் சில வேட்பாளர்கள் பிரதேசத்தின் பிரபல்யம் வாய்ந்த நபர்களின் புகைப்படங்கள் சகிதம் தமது இலக்கத்தைப் பிரச்சாரம் செய்வதற்காக துண்டுப் பிரசுரங்களைப் பகிர்ந்தளித்தல் போன்ற ஊழல் செயற்பாடுகளைக் குறிப்பிட முடியும். இச்சட்டவிரோத பிரச்சாரப் பணிகள் அனைத்தையும் தடுப்பதற்கு முடியுமான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன. எவ்வாறாயினும் பொலிஸாரின் ஒத்துழைப்போடு உடனடியாக செயற்படுவதற்காக அந்தந்த மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்கள் அல்லது மாவட்டச் செயலகங்கள் மற்றும் அதற்கு மேலதிகமாக வன்முறை செயல்கள்., தேர்தல் ஊழல் பழக்கங்கள் ஏற்படக் கூடுமென அல்லது இடம்பெறுவதாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்ற உள்ளூர் அதிகார சபைப் பிரதேசங்களில் அமையப் பெற்றுள்ள பிரதேச செயலகங்களில் பிரதி/ உதவி தேர்தல்கள் ஆணையாளர்களின் வழிநடாத்தலின் கீழ் அச்சமயம் பணியிலீடுபட்டுள்ள அல்லது மீண்டும் பணிக்கு அழைக்கப்பட்ட இளைப்பாறிய பதவி நிலை அலுவலர்களின் தலைமையில் முறைப்பாடுகளை விசாரிப்பதற்கும் சட்ட விரோத பிரச்சாரப் பணிகள் உள்ளிட்ட தேர்தல் சட்ட மீறல்களை தவிர்ப்பதற்குமான நிலையங்கள் தாபிக்கப்பட்டன.

346. தேர்தல் முறைப்பாட்டு விசாரணை நிலையங்களின் முகவரிகள்., தொலைபேசி இலக்கங்கள் தொடர்பாக அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களூடாக பரந்தளவில் பிரச்சாரம் செய்யப்பட்டது. இச்செயற்பாட்டினூடாக சட்டவிரோத தேர்தல் பிரச்சாரப் பணிகள் மற்றும் சட்ட மீறல்கள் தொடர்பில் அனைத்து பிரசைகளுக்கும் நேரடியாக தகவல்களை வழங்க முடிந்ததோடு, அவ்வாறான முறைப்பாடுகள் தொடர்பாக உடனடியாக நடவடிக்கையெடுக்கப்பட்டமை காரணமாக தேர்தல் சட்டங்களை மீற போட்டியிடுகின்ற வேட்பாளர்கள் தயக்கம் காட்டினர். தேர்தல் சட்டங்களை செயல்வலுப்பெறச் செய்யும் இவ்வாறான வழிமுறைகள் தாபிக்கப்பட்டதனூடாக பொதுமக்கள் உள்ளிட்ட அரசியல் தொழிற்படுநர்களுக்கும் சுதந்திரமாகவும் நீதியாகவும் தேர்தல்களை நடாத்துவது தொடர்பில் மாத்திரமின்றி மொத்த தேர்தல் செயன்முறைகள் தொடர்பாகவும் புரிந்துணர்வொன்று ஏற்பட்டதென்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பின் விசாரணைப் பணிகள்

347. தேர்தலொன்றின் போது அரசியல் தலைமைத்துவங்களினால் தயாரிக்கப்படும் முக்கியமானதும் பிரதானமானதுமான ஆவணம் வேட்புமனுப் பத்திரமாகும். உள்ளூர் அதிகார சபைகள் தேர்தலொன்றின் போது குறித்த கட்சி அல்லது குழுவின் கீழ் போட்டியிட விரும்புகின்ற நபர்களின் பெயர்கள், தகவல்களை உள்ளடக்கிய வேட்புமனுப் பத்திரம் உரிய இணைப்புக்கள் சகிதம் சட்டத்தில் விதிக்கப்பட்டுள்ள காலப்பகுதியினுள் சட்டரீதியாக அதிகாரமுள்ள நபரொருவரால் குறித்த மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலருக்குக் கையளிக்கப்படல் வேண்டும்.

348. உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 9 ஆம் பிரிவில் உள்ளூர் அதிகார சபை உறுப்பினர் பதவியை வகிப்பதற்குத் தகைமையுடையவர்கள் யாவரென்பது காட்டப்பட்டுள்ளதோடு, 28 ஆம் பிரிவில் வேட்புமனுப் பத்திரம் தயாரிக்கப்பட வேண்டிய முறை, கையளிக்க வேண்டிய காலப்பகுதி மற்றும் யாரால் கையளிக்கப்பட வேண்டுமென்பனவும் வேட்புமனுப் பத்திரத்துடன் கையளிக்கப்பட வேண்டிய இணைப்புக்கள் யாவையென்பதும் குறிப்பிடப்பட்டுள்ளன. வேட்புமனுப் படிவமொன்று நிராகரிக்கப்படுவதற்கான காரணங்கள் 31 ஆம் பிரிவில் காட்டப்பட்டுள்ளன.

349. இருப்பினும், 2011 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட இத்தேர்தலின் முதலாம் கட்டத்தில் கையேற்கப்பட்ட 2047 வேட்புமனுப் பத்திரங்களில் 452 பத்திரங்கள் சட்டத்தின் 28 ஆம் பிரிவிற்கமைவாகச் சமர்ப்பிக்கப்படாமை காரணமாக 31 ஆம் பிரிவின் கீழ் நிராகரிக்கப்பட்டன. இவ்வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டமைக்கான காரணங்களை ஆராயும் போது கவனக் குறைவே பெரும்பாலும் காரணமாக அமைந்துள்ளது.

350. தமது கட்சியின் வெற்றியை உறுதிசெய்து கொள்வதற்காக பிரதான கட்சிகளால் மேலதிகமாக கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் பல போட்டிக்கு நிறுத்தப்படுகின்றமை விகிதாசார பிரதிநிதித்துவ முறை அறிமுகம் செய்யப்பட்டதன் பின்னர் நடாத்தப்பட்ட தேர்தல்களின் போது பெரும்பாலும் காண முடிந்த வழமையான ஒரு நிலைமை ஆகும். அவ்வாறான கட்சிகள் மற்றும் குழுக்களை நிறுத்தும் போது வேட்புமனுப் பத்திரத்தில் போலியான பெயர்கள் கூட உட்சேர்க்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. அவ்வேட்புமனுப் பத்திரங்களைத் தயாரிக்கும் போது கூடிய கவனம் செலுத்தப்படாமை இவ்வாறு பெரும் எண்ணிக்கையான வேட்புமனுப் பத்திரங்கள் நிராகரிக்கப்பட்டமைக்கான காரணங்களாக இருக்கலாம். நிராகரிக்கப்பட்ட 452 வேட்புமனுக்களில் 68 வேட்புமனுக்கள் தொடர்பாக மாத்திரம் நீதிமன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமை இந்நிலைமையை உறுதிசெய்கின்றது.

351. வேட்புமனுக்கள் அதிக எண்ணிக்கை நிராகரிக்கப்பட்ட போதும் அது தொடர்பாக மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களிலிருந்து தகவல்கள் சேகரிக்கப்பட்டதன் பின்னர், அவ்வாறு நிராகரிக்கப்படுவதற்கு ஏதுவான காரணங்கள் மற்றும் குறித்த நபர்கள் தொடர்பாக ஆராயப்பட்டு உடனடியாக உரிய நடவடிக்கைகளை

எடுக்க முடிந்தமை இத்தேர்தலின் விஷேட அம்சமாகும். 2011.03.17 ஆம் திகதி தேர்தல் நிறைவடைந்தவுடன் நிராகரிக்கப்பட்ட வேட்புமனுக்கள் தொடர்பாகவும் நிராகரிக்கப்பட்டமைக்கான காரணங்கள் யாவையென்பதும் அது யாரின் கவனயீனத்தால் நிகழ்ந்தன என்பதும் தொடர்பான விடயங்கள் ஆராய்ந்து பார்க்கப்பட்டன. நிராகரிக்கப்பட்ட 452 வேட்புமனுக்களில் 233 வேட்புமனுக்கள் இளம் வேட்பாளர்களின் வயதை உறுதிப்படுத்துவதற்காக போதுமானளவு ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாமை மற்றும் அரசியலமைப்பின் ஏழாம் அட்டவணைக்கமைய சத்தியம்/ உறுதியுரை முறையாகச் சமர்ப்பிக்கப்படாமை ஆகிய காரணங்களால் நிராகரிக்கப்பட்டிருந்தமை தெரியவந்தது.

352. இதற்கமைய மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போது 43 சமாதான நீதவான்கள் குறித்த சத்திய வெளிப்படுத்துகையை அத்தாட்சிப்படுத்தி கையொப்பமிடும் போது அதற்குரிய வெளிப்படுத்துகை சரியானதா வெளிப்படுத்துகை கையொப்பமிடப்பட்டுள்ளதா வெளிப்படுத்துநரின் பெயர் சரியாக குறிப்பிடப்பட்டுள்ளதா தன்னால் கையொப்பமிட்டு பதவி முத்திரை பொறிக்கப்பட்டுள்ளதா என்ற விடயங்கள் தொடர்பாகக் கவனம் செலுத்தவில்லை. அவ்வனைத்து சமாதான நீதவான்கள் தொடர்பாகவும் முழுமையான தகவல்கள் நீதியமைச்சின் செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டு சமாதான நீதவான் ஒருவர் என்ற அடிப்படையில் பதவியின் கௌரவத்தைப் பாதுகாக்க வேண்டுமாதலாலும் இல்லாமற்போய்விட்ட மக்களின் நம்பிக்கையை மீள ஏற்படுத்த வேண்டுமாதலாலும், இச்சமாதான நீதவான்கள் தொடர்பில் பொருத்தமான ஒழுக்காற்று நடவடிக்கைகளையெடுக்குமாறும் அறிவிக்கப்பட்டது. தேர்தலொன்றின் போது இவ்வாறு மீளாய்வு செய்யப்பட்டு குறித்த அலுவலர்களை அறிவுறுத்தல் மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகளையெடுத்தல் என்பனற்றை எதிர்வரும் தேர்தல்கள் தொடர்பில் எடுக்கப்பட்ட நல்ல நடவடிக்கைகளென சுட்டிக்காட்ட முடியும்.

353. இருப்பினும், வேட்புமனுப் பத்திரத்தில் பெயர்களை உட்சேர்ப்பதற்காக வேட்பாளர்களைத் தேரந்தெடுக்கும் போது சட்டத்தின் 9 ஆம் பிரிவின் அடிப்படையில் தகைமைகள் தொடர்பாக அவதானம் செலுத்தாமை காரணமாக தேர்தலின் போது உறுப்பினர் பதவிகளைப் பெற்றுக் கொண்ட சிலரின் உறுப்புரிமைகளை இல்லாதொழிக்க வேண்டி நேரிட்டது.

354. 262 ஆம் அதிகாரமான உள்ளூர் அதிகார சபை தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 9(1)ஈ(ஏ)(அ)(ஆ), 9(1)ஈ(ஏஐ)(அ),(ஆ),(இ),(ஈ),(உ),(ஊ) மற்றும் 9(3) ஆம் பிரிவுகளின் கீழ் உறுப்புரிமைக்குத் தகைமையற்ற நபர் எவரும் உறுப்பினர் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக விடயங்களைச் சமர்ப்பித்து அனுப்பி வைக்கப்பட்ட பொதுமக்களின் முறைப்பாட்டிற்கமைய மாவட்ட மட்டத்தில் ஆராய்ந்து பார்த்து இந்நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

355. இதற்கமைய குறித்த உள்ளூர் அதிகார சபைகளின் பணியாளரொருவராக உள்ள போது அவ்வுள்ளூராட்சி சபைக்கு போட்டியிட்டமை காரணமாக உள்ளூராட்சி தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 9(1)(உ) ஆம் உப பிரிவிற்கமைய போட்டியிடுவதற்குத் தகைமையற்றராதலால் அதன் கீழ் மாத்தறை பிரதேச சபை, தமன்கடுவ பிரதேச சபை, கந்தளாய் பிரதேச சபை ஆகிய உள்ளூர் அதிகார சபைகளுக்காக போட்டியிட்டு உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்ட மூன்று பேரின் உறுப்புரிமையை இல்லாதொழிப்பதற்கும் நேரிட்டது.

356. உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் ஏதேனும் ஏற்பாடு நடைமுறைப்படுத்தப்பட்டமை காரணமாக உள்ளூர் அதிகார சபையொன்றின் எவரேனும் உறுப்பினரொருவர் அச்சபையில் உறுப்பினரொருவராக அமர்வதற்கோ அல்லது வாக்களிப்பதற்கோ தகைமையற்ற ஒருவராக இருப்பின் அவரின் ஆசனம் அல்லது பதவி உறுப்புரிமை வெற்றிடமாதல் வேண்டுமென 10(1) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

357. உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 10(1) ஆம் பிரிவிற்கமைய உறுப்பினர் பதவி இல்லாதொழிந்தமை காரணமாக வெற்றிடமான உறுப்பினர் பதவிக்காக 10(2) ஆம் பிரிவின் கீழ் செயற்பட்டு வெற்றிடங்களை நிரப்புதல் வேண்டும். இதற்கு முன்னர் நடாத்தப்பட்ட உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்களின் போது 09 ஆம் பிரிவின் கீழ் உறுப்பினர் பதவி வகிப்பதற்குத் தகைமையற்ற நபர்கள் தொடர்பில் திணைக்களம் நேரடி நடவடிக்கைகளை எடுக்கவில்லையென்பதைக் குறிப்பிட்டாதல் வேண்டும்.

358. இவ்வுள்ளூர் அதிகார சபைத் தேர்தலின் போது உறுப்புரிமைக்குத் தகைமையற்றவர்கள் தொடர்பில் நேரடியாக உரிய நடவடிக்கைகளை எடுத்தமை காரணமாக அதன் பின்னர் நடாத்தப்பட்ட 2011 ஆம் ஆண்டின் உள்ளூர் அதிகார சபைத் தேர்தலின் மூன்றாம் கட்டத்தின் போதும் மற்றும் 2012 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்களின் போதும் உறுப்புரிமைக்குத் தகைமையற்றவர்களைப் பெயர் குறிப்பது தொடர்பில் அரசியல் அதிகாரங்களின் விஷேட கவனம் ஈர்க்கப்பட்டமையைக் காணக் கிடைத்தமை மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

359. பதவிநிலை மட்டத்திலான பதவியொன்றை வகிக்கின்ற அரச அல்லது அரச கூட்டுத்தாபன அலுவலரொருவர் அல்லது மாகாண அரச சேவையின் அலுவலரொருவர் வேட்பாளரொருவராகப் போட்டியிடுவதாயின் வேட்புமனு கையளிப்பதற்கு முன்னர் அவர் வகிக்கின்ற அப்பதவியிலிருந்து கேட்டு விலக வேண்டுமென்ற நிபந்தனை மற்றும் அரசியல் உரிமையுள்ள அரச அல்லது அரச கூட்டுத்தாபன மற்றும் உள்ளூராட்சி அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் வேட்புமனு கையளிப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன்னர் சம்பளமற்ற விடுமுறையை அனுமதித்துக் கொள்ள வேண்டுமென்ற நிபந்தனையும் சட்டத்தில் காட்டப்பட்டுள்ளது.

360. வேட்பாளர்களாகப் போட்டியிட்டுத் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல் உரிமையுடையவர்களாகவுள்ள வேட்புமனுவைக் கையளிக்க முன்னர் விடுமுறையைப் பெற்றுக் கொள்ளாத அரச அலுவலர்களை வேட்புமனு கையளிப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன்பிருந்தே சம்பளமற்ற விடுமுறையில் வைக்குமாறு குறித்த அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

XVI ஆம் பிரிவு

தேர்தல்களுக்காகச் மேற்கொள்ள செலவுகள்

361. நாடெங்கிலும் அமையப் பெற்றுள்ள 25 நிருவாக மாவட்டங்களில் மூன்று கட்டங்களாக நடாத்தப்பட்ட இவ்வுள்ளூரதிகார சபைத் தேர்தலில் 13,656,523 வாக்காளர்களுக்குரிய வசதிகள் செய்து கொடுக்கப்படும் வாக்கெடுப்பு நடாத்தப்பட்டு அதன் பின்னர் வாக்கெண்ணப்பட்டு முடிவுகள் வெளியிடப்பட்டன. அதற்காக 2126.8 மில்லியன் ரூபா செலவிடப்பட்டது. இதற்கமைய இத்தேர்தலின் போது பதிவு செய்யப்பட்ட ஒரு வாக்காளருக்கான சராசரி செலவு 155.74 ரூபாவாகும்.

362. இத்தேர்தலின் போது பொலிஸ் திணைக்களம், அஞ்சல் திணைக்களம். அரச அச்சகத் திணைக்களம் மற்றும் அரசாங்க கைத்தொழிற்சாலை என்பவற்றால் செய்யப்பட்ட செலவு 677.7 மில்லியன் ரூபாவாகும். தேர்தலுக்காக செலவிடப்பட்ட மொத்த செலவாகிய 2126.8 மில்லியன் ரூபாவில் 1449 மில்லியன் ரூபா அதாவது மொத்த செலவில் 68.14% நேரடியாக தேர்தல்கள் திணைக்களத்தினால் செலவிடப்பட்டது.

363. இத்தேர்தல் பணிகளுக்காக நேரடியாக தேர்தல்கள் ஆணையாளரினால் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்ட தேர்தலோடு தொடர்புடைய பணிகளை ஆற்றிய அரச திணைக்களங்கள் நான்காகும். அவை பொலிஸ் திணைக்களம், அஞ்சல் திணைக்களம், அரசாங்க அச்சகத் திணைக்களம் மற்றும் அரசாங்க கைத்தொழிற்சாலை திணைக்களம் என்பனவாகும். இவ்வுள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக இத்திணைக்களங்களினால் செலவிடப்பட்ட தொகை சதவீத அடிப்படையில் கீழே காட்டப்பட்டுள்ளது.

திணைக்களம்	செலவு செய்யப்பட்ட தொகை	சதவீதம்
பொலிஸ் திணைக்களம்	318,200,000.00	14.96%
அஞ்சல் திணைக்களம்	209,000.000.00	9.83%
அரசாங்க அச்சகத் திணைக்களம்	147,013,899.19	6.91%
அரசாங்க கைத்தொழிற்சாலைத் திணைக்களம்	3,511,538.84	0.16%
மொத்தம்	**667,725,438.03**	**31.86%**

364. அரசாங்க அச்சகத் திணைக்களம் இத்தேர்தலுக்காக 147,013,899.19 ரூபா தொகையை செலவிட்டுள்ளதோடு, அம்மொத்தச் செலவில் 63,436,642.27 ரூபா வாக்குச் சீட்டு மற்றும் கேட்டுப்பெறும் வாக்குச் சீட்டு என்பவற்றை அச்சிடுவதற்காகச் செலவிடப்பட்டுள்ளது. அதற்கு மேலதிகமாக உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை அச்சிடுவதற்காக தனியார் நிறுவனமொன்றுக்கு 13,591,274.33 ரூபா தேர்தல்கள் திணைக்களத்தினால் செலவிடப்பட்டுள்ளது.

365. இத்தேர்தலின் போது பொலிஸ் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட செலவு 318,200,000.00 ரூபாவாகும். அதில் 2,625,600.00 ரூபா தேர்தலுடன் தொடர்புடையதாக விஷேட அதிரடிப்படை மற்றும் அரச உளவுச் சேவை என்பவற்றினால் தேர்தலுக்குரியதாக மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்கான போக்குவரத்து மற்றும் இணைந்த படி என்பவற்றை செலுத்துவதற்கானதாகும். பொலிஸ் திணைக்களத்திற்குக் குறித்தொதுக்கப்பட்ட ஒதுக்கீட்டிலிருந்து செலவு செய்யப்பட்ட தொகையை 105 மில்லியன் ரூபா பொலிஸ் அலுவலர்களின் போக்குவரத்து மற்றும் இணைந்த படிகளுக்காகவும் 103 மில்லியன் ரூபா பொலிஸ் திணைக்களத்திற்கு தேவையான மேலதிக வாகனங்கள் தேர்தல்கள் ஆணையாளரின் அனுமதியோடு தேர்தல் கடமைகளுக்காக வாடகை அடிப்படையில் பெற்றுக் கொண்டமைக்காகவும் 27 மில்லியன் ரூபா பொலிஸ் திணைக்களத்தின் வாகனங்களுக்கு எரிபொருள் நிரப்புவதற்காகவும் செலவிடப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக சட்டவிரோத அறிவித்தல், பதாகை, உருவப்படம் என்பவற்றை அகற்றுவதற்காக 21 மில்லியன் ரூபாவும் பொலிஸ் அலுவலர்களின் நலனோம்பல் அலுவல்களுக்காக 18 மில்லியன் ரூபாவும் செலவிடப்பட்டுள்ளது.

366. தேர்தலின் போது அஞ்சல் திணைக்களத்தினூடாக ஆற்றிக் கொள்ளப்பட வேண்டிய விஷேட கடமைகளுக்காக அத்திணைக்களத்திற்கு தேர்தல்கள் ஆணையாளரினால் நிதி குறித்தொதுக்கிக் கொடுக்கப்படும். இதற்கமைய இத்தேர்தலுக்காக 209,000,000.00 ரூபா அஞ்சல் திணைக்களத்திற்கு குறித்தொதுக்கிக் கொடுக்கப்பட்டது. இவ்வொதுக்கீட்டைப் பயன்படுத்தி முத்திரை மற்றும் அஞ்சல் கட்டணமாக 205 மில்லியன் ரூபாவும் ஊழியர் மேலதிக வேலை நேரக் கொடுப்பனவாக 2.6 மில்லியன் ரூபாவும் தொலைபேசி மற்றும் வேறு செலவுகளுக்காக 1.3 மில்லியன் ரூபாவும் செலவு செய்யப்பட்டிருந்தது.

367. இத்தேர்தலின் போது செலவுகளின் தன்மைக்கேற்ப தேர்தல் செலவுகளை கீழ் காட்டப்பட்டுள்ளவாறு வகைப்படுத்திக் காட்ட முடியும்.

திணைக்களம்	செலவு செய்யப்பட்ட தொகை	சதவீதம்
பணியாட் குழு சம்பளம் மேலதிக வேலை நேரம், போக்குவரத்து செலவுகள் மற்றும் படிகள்	1,038,088.173.93	48,72%
வாகன வாடகை	15,227,200.94	7.06%
எழுதுபொருட்கள்/ அலுவலக பண்டங்கள்	31,115,530.92	1.46%
எரிபொருள்	116,404,876.9	5.47%
நிருமாணங்கள் மற்றும் பழுதுபார்ப்புக்கள்	34,609,118.05	1.63%
நலனோம்பல் செலவுகள்	136.558,279.57	6.42%
அச்சிடல் செலவுகள்	162,428,673.52	7.64%
சட்டவிரோத காட்சிப்படுத்தல்களை அகற்றுதல்	21,190,200.00	1.00%
முத்திரை மற்றும் அஞ்சல் கட்டணம்	205,088,20.00	9.64%
மின்சாரம்	78,217,063.94	3.68%
நீர், தொலைபேசி உள்ளிட்ட சேவைகள் மற்றும் வேறு செலவுகள்	154,885,200.21	7.28%
மொத்தம்	**2,126,812,337.98**	**100%**

368. இவ்வுள்ளூர் அதிகார சபைத் தேர்தலுக்காக செலவிடப்பட்ட மொத்த தொகையில் 48.72% என்ற அதிகூடிய சதவீதப் பங்களிப்பு பணியாட் குழுவினரின் கொடுப்பனவுகளுக்காகவே செலவிடப்பட வேண்டி நேரிட்டுள்ளதென்பதை சுட்டிக்காட்ட முடியும். அதற்கடுத்ததாக அதிக செலவு சதவீதம் முறையே முத்திரை மற்றும் அஞ்சல் கட்டணங்களுக்காக 9.64%, அச்சிடல் பணிகளுக்காக 7.64%, நீர் தொலைபேசி உள்ளிட்ட வாக்கெடுப்பு நிலையம் மற்றும் வாக்கெண்ணல்

நிலையங்களின் சேவைகளுக்காக 7.28% வாகன வாடகையாக 7.06% நலனோம்பல் செலவாக 6.42% எரிபொருட்களுக்கான செலவாக 5.47% மின்சாரத்திற்கான செலவாக 3.68% செலவிடப்பட்டுள்ளது. தேர்தலுக்காகச் செய்யப்பட்ட செலவுகள் தொடர்பான விரிவான அறிக்கையொன்று அட்டவணையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.
(அட்டவணை 5)

XVII ஆம் பகுதி

அவதானிப்புக்களும் பரிந்துரைகளும்

369. ஆட்சி அதிகாரத்தைக் கொண்ட கட்சி அந்த அதிகாரத்தை முறையற்ற விதத்தில் பயன்படுத்துவது பொதுவாக காணக்கூடிய ஒரு நிலைமையாகும். அந்நிலைமை நாளுக்கு நாள் அதிகரித்ததே தவிர குறைவடைந்ததைக் காண முடியவில்லை. 1987 ன் அரசியலமைப்புத் திருத்தத்துடன் அதுவரை பாராளுமன்றம் மற்றும் உள்ளூராட்சி சபைகளுக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டிருந்த நிருவாக அதிகாரத்திற்கு சனாதிபதியொருவருக்குப் பின்னர் மாகாண சபையும் ஒன்றிணைந்தது. அதற்கமைய ஏதேனும் தேர்தலொன்று நடாத்தப்படுகின்ற சந்தர்ப்பத்தில் பொதுமக்கள் பிரதிநிதிகள் பலர் தமது கட்சி வேட்பாளர்களின் வெற்றிக்காக முன்வருகின்றமை தவிர்க்க முடியாத நிலைமையொன்றாக மாறியுள்ளது. குறிப்பாக 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்புடன் தோற்றம் பெற்ற விகிதாசாரப் பிரதிநிதித்துவமுறை காரணமாக அதுவரை வட்டாரங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட ஒவ்வொரு வட்டாரத்தின் வாக்குகளிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்படுகின்ற நபர் வட்டாரத்தைப் பிரதிநிதித்துவம் செய்வதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட போதும் விகிதாசார தேர்தல் முறையின் கீழ் மொத்த உள்ளூரதிகார சபையும் வாக்கெடுப்புப் பிரதேசமாகக் கருதப்பட வேண்டியிருந்தது. உள்ளூராட்சி அதிகார பிரதேசம் முழுவதிலும் அனைத்து வேட்பாளர்கள் தமது தேர்தல் பிரச்சார பணிகளை மேற்கொண்டனர்.

அதன் காரணமாக கட்சித் தலைமைத்துவம் தமது கட்சியின் வேட்பாளரைத் தேர்ந்தெடுக்கும் போது கூட பொருளாதார அடிப்படையில் பலம் கொண்ட ஏதேனுமொரு விதத்தில் சமூகத்தில் பிரபல்யம் அடைந்துள்ள எவ்விதத்திலேனும் மேலே வரக்கூடிய நபர்களை வேட்பாளர்களாகத் தேர்ந்தெடுத்தமையையும் அதற்கு மேலதிகமாக முக்கிய அரசியல்வாதிகளின் நெருங்கிய உறவினர்களுக்கு வேட்பாண்மையைப் பெற்றுக் கொடுப்பதற்கான சந்தர்ப்பங்களையும் பெருமளவில் காண முடிந்தது. மேலும் தேர்தல் முடிவடைந்து குறுகிய காலப்பகுதிக்குள் உள்ளூரதிகார சபைகளின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் கணிசமான தொகையினருக்கு பல்வேறுபட்ட முறைகேடுகள் தொடர்பாக குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டமை காரணமாக நீதிமன்றத்தினால் குற்றவாளிகளாக்கப்பட்டதன் அடிப்படையில் பொதுமக்கள் பிரதிநிதிகளாக நபர்களைத் தெரிவு செய்யும் போது சிறந்த நன்னடத்தைகளுடன் கூடிய நபர்களை தேர்ந்தெடுப்பதற்கான நிபந்தனைகள் அறிமுகம் செய்யப்பட வேண்டுமென்ற கருத்தொன்றும் முன்வைக்கப்பட்ட வண்ணமுள்ளது.

370. தேர்தல் முறையின் மாற்றமொன்றுக்காக பல வருடங்களாக பாராளுமன்றம் மற்றும் அரசியல் தலைமைத்துவங்களிடம் முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டன. 2011 உள்ளூரதிகார சபைத் தேர்தலையும் வட்டார அடிப்படையில் நடாத்த வேண்டுமென பல சுற்று கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்ட போதும் இறுதியில் விகிதாசார பிரதிநிதித்துவ முறையின் அடிப்படையில் தேர்தலை நடாத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டது. 2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க உள்ளூரதிகார சபைகள் தேர்தல்கள் திருத்தச் சட்டத்தின் மூலம் எதிர்வரும் உள்ளூரதிகார சபைத் தேர்தலுக்காக மீண்டும் வட்டார முறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் தேர்தல்களின் போது தேர்தல் சட்டங்களே ஒரேயொரு பாதுகாப்பென்பதால், அச்சட்டங்கள் தெளிவாகக் காணப்படல் வேண்டும். அதேபோல் குறிப்பானதாயிருத்தல் வேண்டும். தற்போது அங்கீகரிக்கப்பட்டுள்ள 2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க திருத்தச் சட்டத்திற்கு தேர்தல்கள் ஆணையாளரால் பல திருத்தங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளமையால், துரிதமதாக அத்திருத்தங்கள் தொடர்பில் அதிகாரங்களின் கவனம் ஈர்க்கப்படுவது கட்டாயமாகும். 2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க உள்ளூரதிகார சபைகள் (திருத்தச் சட்டத்திற்கமைய) எதிர்வரும் உள்ளூரதிகார சபைத் தேர்தல் ஒவ்வொரு உள்ளூரதிகார சபையும் வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டு வட்டாரத்தின் பெரும்பான்மை வாக்குகளால் அவ்வட்டாரத்திற்கான உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படவுள்ளதோடு அவ்வுறுப்பினர் எண்ணிக்கையில் 30மூ விகிதாசார அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படவுள்ளதால், இதுவரை ஒரே கட்சியின் வேட்பாளர்களிடையே காணப்பட்ட விருப்பு வேட்டைப் போட்டியை எதிர்காலத்தில் காண முடியாதிருக்கும்
(அட்டவணை 6)

371. வேட்புமனுக் கையேற்றல் நிறைவடைந்ததன் பின்னர் தேர்தல் பிரச்சார அலுவல்களில் ஈடுபட்ட விதம் தொடர்பாக தேர்தல் நிறைவடைந்த பின்னர் வேட்பாளர்களுக்கு எதிராக கிடைக்கப்பெறுகின்ற முறைப்பாடுகள் மற்றும் குற்றச்சாட்டுக்கள், அக்குற்றச்சாட்டுக்களின் தன்மைக்கமைய தற்காலிக அரசியல் கலாச்சாரம் மிகப் பாரியளவில் சீரழிந்துள்ளதென சமூகத்தினுள் பரவிக்காணப்படுகின்ற கருத்துத் தொடர்பில் பிரதான அரசியல்வாதிகளின் கவனம் ஈர்க்கப்பட வேண்டுமென்பதோடு, தமது கட்சியின் வேட்பாளர்களைத் தெரிவு செய்யும் போது வெற்றியை மாத்திரம் ஒரே நோக்காகக் கொள்ளாமல் சிறந்த பிரசைகளாக சமூகத்தில் ஏற்று அங்கீகரிக்கப்படுகின்ற நபர்களை வேட்பாளர்களாத் தெரிவு செய்து கொள்வதற்கான அதிக சிரத்தையை கொள்ளல் உசிதமென சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். அதேபோன்று தாம் தேர்ந்தெடுக்கின்ற வேட்பாளர் சமூக விரோதியொருவர் அல்லர் என்பது தொடர்பிலும் பிரசைகள் அவதானமாகவிருப்பது அவர்களின் பொறுப்பாகும்.

உள்ளூர் அதிகார சபைகளைத் தாபித்தல்

372. 1865 காலப்பகுதியின் போது கொழும்பு மற்றும் கண்டி மாநகர சபைகள் தாபிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஆரம்பமான இலங்கையின் உள்ளூரதிகார சபைகள் ஊடாக நடைமுறைப்படுத்தப்பட்ட பண்முகப்படுத்தப்பட்ட பிரதேச நிருவாக முறை படிப்படியாக மாநகர சபை, நகர சபை, பட்டின சபை மற்றும் கிராமிய சபை எனவும் பின்னர் மாநகர சபை, நகர சபை மற்றும் மாவட்ட அபிவிருத்தி சபைகளெனவும் தற்காலத்தில் மாநகர சபை, நகர சபை மற்றும் பிரதேச சபை என்ற அடிப்படையிலும் நகர, நகரம் சார்ந்த மற்றும் கிராமிய பிரதேச மக்களின் பல்வேறு தேவைகள் நிறைவு செய்யப்படுகின்றன. ஆரம்ப கால கட்டத்தின் போது வரையறைகளுக்குட்பட்டு வாக்குரிமைக் கிடைக்கப்பெற்ற பிரதேசவாசிகள் குழுவொன்றினால் உள்ளூரதிகார சபைகளுக்கான முகவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதோடு, 1931 ஆம் ஆண்டில் சர்வசன வாக்குரிமை அறிமுகம் செய்யப்பட்டதன் பின்னர், எவ்வித வேறுபாடுகளுமின்றி தமது முகவர்களை நியமனம் செய்து கொள்ளும்

உரிமை குறித்த வயதெல்லை பூர்த்தியடைந்த அந்தந்த உள்ளூரதிகார சபை பிரதேசங்களில் வதிந்துள்ள அனைத்து இலங்கை பிரசைகளுக்கும் வாய்ப்புக் கிட்டியது.

ஏதேனும் விஷேட காரணத்தினால் பிற்போடப்பட்ட நேரிட்டாலே ஒழிய 1969 ஆம் ஆண்டு வரை, ஒவ்வோர் உள்ளூரதிகார சபையினதும் ஒவ்வொரு வட்டாரத்தையும் பிரதிநிதித்துவம் செய்வதற்காக குறித்த வட்டாரத்தில் போட்டியிட்ட வேட்பாளர்களில் அதிக எண்ணிக்கையான வாக்குகளைப் பெற்றுக் கொண்ட நபர் வெற்றி பெற்றவராகப் பிரகடனப்படுத்தப்படும் தொகுதிவாரி பிரதிநிதித்துவ முறையின் கீழ் (First Past The Post System) இவ்வுள்ளூர் அதிகார சபைகளுக்கான தேர்தல்கள் உரிய காலப்பகுதியில் நடாத்தப்பட்டதோடு, 1971 ஆம் ஆண்டில் நாடெங்கிலும் நிலவிய அவசர நிலைமை (பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தை செயல்வலுப்பெறச் செய்தல்) காரணமாக அதன் பின்னர் 1979 ஆம் ஆண்டு வரை எந்தவோர் உள்ளூரதிகார சபைக்கும் பிரதிநிதிகள் அனைவரையும் தேர்ந்தெடுக்கின்ற தேர்தலொன்று நடாத்தப்படவில்லை. அப்போது செயல்வலுவில் காணப்பட்ட தேர்தல் சட்டங்களின் அடிப்படையில் வெற்றிடமாகக் காணப்பட்ட வட்டாரங்களுக்கான இடைத்தேர்தல்கள் நடாத்தப்பட்டுள்ளதோடு, அச்சட்டத்தின் கீழ் நடாத்தப்பட்ட இறுதி இடைத் தேர்தல் 1971 ஆம் ஆண்டு மார்ச் மாதம் கொழும்பு மாநகர சபையின் சுதுவெல்ல வட்டாரத்திற்காக நடாத்தப்பட்டுள்ளது.

இவ்வறிக்கையில் இதற்கு முன்னரும் கலந்துரையாடப்பட்டுள்ளவாறு 1978 இரண்டாம் குடியரசு யாப்பு (தற்போதைய அரசியல் யாப்பு) ஊடாக வட்டார பிரதிநிதித்துவ முறை இல்லாதொழிக்கப்பட்டு விகிதாசார தேர்தல் முறை அறிமுகம் செய்யப்பட்டது. 1979 ல் மாநகர சபை மற்றும் நகர சபைத் தேர்தல்கள், 1981 ல் மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தல்கள், 1983 ல் மாநகர மற்றும் நகர சபைத் தேர்தல்கள் என்பன விகிதாசார பிரதிநிதித்துவ முறையின் கீழ் நடாத்தப்பட்டதோடு, அதனூடாக தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மூலம் அந்நிறுவனங்கள் செயலாற்றின.

373. 1979 ஆம் ஆண்டு வரை மாநகர சபை, நகர சபை, பட்டின சபை, கிராம சபை என்ற அடிப்படையில் காணப்பட்ட உள்ளூரதிகார சபைகளில் மாநகர சபை, நகர சபை என்பன அவ்வாறே செயற்பாட்டிலிருக்கச் செய்யப்பட்டு பட்டின சபைகள் மற்றும் கிராம சபைகள் என்பன இல்லாதொழிக்கப்பட்டு 1980 ஆம் ஆண்டு மாவட்ட அபிவிருத்தி சபை சட்டம் மூலம் ஒவ்வொரு நிருவாக மாவட்டத்திற்கும் மாவட்ட அபிவிருத்தி சபையொன்று வீதம் தாபிக்கப்பட்டது.

374. அதன் விளைவாக அபிவிருத்தி சபை அதிகார பிரதேசத்தினுள் மாநகர சபை, நகர சபை என்பன செயற்படுகின்ற அதேவேளை ஏனைய பிரதேச செயலாளர் அதிகாரப் பிரதேசங்களை (பிரதேச உதவி அரசாங்க அதிபர் பிரிவு) அடிப்படையாகக் கொண்டு பிரதேச சபை 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டது. பழைய கிராம சபைகள், பட்டின சபைகள் என்ற அடிப்படையில் வேறு பிரிக்கப்பட்ட உள்ளூரதிகார சபைகள் ஒன்றிணைக்கப்பட்டு பிரதேச சபைகளாகத் தாபிக்கப்பட்டமை உள்ளூராட்சி நிருவாகமும் குறித்த மட்டத்தில் ஒருமையப்படுத்தப்பட்ட நிலைமையெனலாம். கிராம சபைகள் பட்டின சபைகள் என்பவற்றைத் தாபிக்கும் போது கருத்தில் கொள்ளப்பட்ட நியதிகளை இங்கு கருத்தில் கொள்வது சிரமசாத்தியமானதாக காணப்பட்டது. பிரதேச உதவி அரசாங்க அதிபர் பிரிவாக இருப்பதே ஒரே அளவீட்டுக் கருவியாகக் கொள்ளப்பட்டது.

375. அவ்வாறு தாபிக்கப்பட்ட பிரதேச சபைகளுக்குள்ளேயும் வெவ்வேறு வேறுபாடுகளைக் காண முடிந்தது. கணிசமான பிரதேச சபைகள் அப்போது காணப்பட்ட பாராளுமன்ற தேர்தல் தொகுதி (தற்போதைய வாக்கெடுப்புப் பிரிவு) போன்று பாரியதாகக் காணப்பட்டது. கம்பஹா மாவட்டத்தின் மீரிகம, திவுலப்பிட்டிய, மஹர, தொம்பே என்பன அவ்வாறான சில பிரதேச சபைகளாகும். இவ்வனைத்து பிரதேச சபைகளும் பட்டின சபைகள் மற்றும் பல கிராம சபைகளை உள்ளடக்கிய பிரதேசங்களாகும். அதற்கமைய உள்ளூர் நிருவாகம் ஒருமையப்படுத்தப்படல் இதனூடாக ஏற்பட்டது. பழைய உள்ளூரதிகார சபை முறையில் தமது கிராமத்திற்குப் பொருத்தமான தலைவரொருவர் தேர்ந்தெடுக்கப்பட்டதோடு, புதிய நிலைமையின் கீழ் மொத்த சபைக்குமென பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டனர். உள்ளூரதிகார சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் மொத்த சபையின் அதிகாரப் பிரதேசத்திற்கும் பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினராக இருக்க வேண்டியிருந்தது.

376. ஏதேனும் உள்ளூரதிகார சபையின் அதிகார எல்லைகளை வரையறை செய்தல் தாபித்தல் மற்றும் தரத்தினை உயர்த்துதல் போன்ற அனைத்து சந்தர்ப்பங்களின் போதும் அதன் அமைவிடம், சனத்தொகை அடர்த்தி, சனத்தொகை எண்ணிக்கை, சேவைகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளின் விருத்தி பிரதேச பொருளாதார கட்டமைப்பு, வளப்பரம்பல் பிரதேசம் என்ற அடிப்படையிலான முக்கியத்துவம், இயற்கை எல்லைகள் போன்ற நியதிகளைக் கருத்தில் கொள்ளல் வேண்டும். அரசியல் ரீதியான பிணைப்புக்களிலிருந்து விடுபட்டு இருத்தல் வேண்டும். இருப்பினும், 1987 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பிரதேச சபை தாபித்தலின் போது முன்னர் காணப்பட்ட கிராம சபை, பட்டின சபை தாபித்தல் தொடர்பான காரணிகளை கருத்திற் கொள்ளாமை காரணமாக உள்ளூரதிகார சபைகளை தாபித்தலின் அடிப்படைக் கொள்கை வீழ்ச்சி புறந்தள்ளப்பட்டதாக பொதுமக்கள் அபிப்பிராயமொன்று பிற்காலத்தில் தோற்றம் பெற்றது. அதன் பின்னர், சிற்சில பிரதேச சபைகள், நகர சபைகள், மாநகர சபை தாபித்தலின் போதும் மக்கள் நலன், மக்கள் தேவைப்பாடு, உயர்ந்தபட்ச சேவையொன்றை வழங்குவதற்குள்ள சாத்தியப்பாடு போன்ற நியதிகள் தொடர்பாக உரிய செலுத்தப்படாது வேறு தேவைப்பாடுகள் குறிப்பாக அரசியல் தேவைப்பாடுகள் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளதென முன்வைக்கப்படுகின்ற கூற்றுக்கள் அனைத்தையும் பொய்யானவையென புறக்கணித்துவிட முடியாது.

377. ஏற்கனவே பட்டின சபைகள் மற்றும் கிராம சபைகளாகக் காணப்பட்ட 632 உள்ளூரதிகார சபைகள் ஒன்றிணைக்கப்பட்டு 257 பிரதேச சபைகள் தாபிக்கப்பட்டமை முழுமையாக அதிகாரத்திலிருந்த அரசின் தேவைப்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டதாகும். இரண்டு அல்லது இரண்டிற்கு

மேற்பட்ட நிறுவனங்கள் ஒன்றிணைக்கப்பட்ட போது அதில் ஒன்று தலைமை அலுவலகமாகவும் ஏனையவை உப அலுவலகங்களாகவும் நடைமுறைப்படுத்தப்பட்டன. உப அலுவலகங்கள் உரிய வரிகளை அறவிட்டு தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வைத்தல் பிரதான பொறுப்பொன்றாகும். அதற்கமைய சேவைப் பின்னடைவுகள் ஏற்பட்டன. மேலும் முழுச் சபையின் அதிகாரப் பிரதேசமும் ஒரே தேர்தல் அதிகார பிரதேசமாக கொள்ளப்பட்டு விகிதாசார தேர்தல் முறைமை நடைமுறைப்படுத்தப்பட்டமை காரணமாக அக்கிராமம் அல்லது சிறிய துணை நகரத்திற்கான பிரதிநிதித்துவத்திற்காக குறிப்பான பிரதிநிதியொருவர் இல்லாமை பிரசைகளிடத்தில் பிரதிநிதித்துவ சனநாயகம் தொடர்பான நிச்சயமற்ற உணர்வுகள் ஏற்படத் துவங்கின.

378. அபிவிருத்தி சபைகள் அறிமுகம் செய்யப்படுவதற்கு முன்னர் காணப்பட்ட கிராம சபை, கிராமிய பிரதேசத்திற்காக தாபிக்கப்பட்டதொன்றென்பதோடு, பட்டின சபைகள் நகரம் சார்ந்த பிரதேசங்களுக்காக நடைமுறைப்படுத்தப்பட்டது. நகர சபைகளாக பெரும்பாலும் இப்பட்டின சபை பிரதேசங்களே தரமுயர்த்தப்பட்டன. ஆதலால், பிரதேச சபை தாபித்தலின் கீழ் பட்டின சபைகள் மற்றும் கிராம சபைப் பிரதேசங்கள் ஒன்றிணைக்கப்பட்டதோடு, விகிதாசார பிரதிநிதித்துவ முறையின் அடிப்படையில் அதிக பிரதிநிதிகள் சன அடர்த்திமிக்க நகரம் சார்ந்த பிரதேசங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டனர். அதன் காரணமாக பிரதேச சபைகளை நிறுவுகையில் அதிகளவில் அந்நகரம் சார் பகுதிகளில் வாழ்கின்ற மக்களின் தேவைப்பாடுகள் தொடர்பிலேயே அதிக கவனம் செலுத்தப்பட்டது. அதன் காரணமாக கிராம சபைகளின் கீழ் விஷேட கவனம் செலுத்தப்பட்டிருந்த விவசாய மற்றும் கமத்தொழில் சூழல் கைவிடப்பட்ட நிலைக்குட்பட்டது.

வேட்புமனு செயலொழுங்குகள்

379. விகிதாசார தேர்தல் முறை அறிமுகம் செய்வதற்கு முன்னர் காணப்பட்ட தொகுதிவாரிப் பிரதிநிதித்துவ முறையின் அடிப்படையில் உள்ளூரதிகார சபை பல்வேறு வட்டாரங்களாக வேறு பிரிக்கப்பட்டதோடு, ஒவ்வொரு வட்டாரத்திற்காகவும் தனித்தனியாக நடாத்தப்பட்ட தேர்தல் மூலம் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். இதற்கு அரசியல் கட்சிகள் சார்பாகவும் சுயேச்சையாகவும் வேட்பாளர்கள் போட்டியிட்டனர். வேட்புமனுக்கள் உள்ளூரதிகார சபைத் தலைமையகத்தில் கையேற்கப்பட்டதோடு, ஒவ்வொரு வட்டாரத்திற்கும் தனித்தனியாக வேட்பாளர்களிடமிருந்து வேட்புமனுக்கள் கையேற்கப்பட்டன. அனைத்து வேட்பு மனுக்களும் வட்டாரத்தினுள் வதிகின்ற இரண்டு வாக்காளர்களின் முன்மொழிவு, வழிமொழிதலுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அதற்கமைய வட்டாரத்தின் வாக்காளர்களுக்குத் தேவையான ஒரு நபரை தெரிவு செய்து கொள்ள முடியும். அவவட்டாரத்தின் அனைத்து தேவைப்பாடுகள் தொடர்பாகவும் அவரால் ஆராய்ந்து பார்க்கப்பட்டன. பெரும்பாலும் மக்களின் வரவேற்புக்குரித்துடைய கிராமியத் தலைவர்களே அதற்காக நியமனம் செய்யப்பட்டனர்.

380. உள்ளூரதிகார சபைத் தேர்தலுக்காக விகிதாசார பிரதிநிதித்துவ முறையை அறிமுகம் செய்து உள்ளூரதிகார சபைத் தேர்தல்கள் கட்டளைச் சட்டம் திருத்தம் செய்யப்பட்ட, 1977 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்ளூரதிகார சபைகள் தேர்தல்கள் திருத்தச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய வேட்புமனு வேட்பாளர் பட்டியலொன்றாக சமர்ப்பிக்கப்பட வேண்டியேற்பட்டது. சபைக்குத் தேர்ந்தெடுக்கப்படவுள்ள உறுப்பினர் எண்ணிக்கைக்கு ஆறு அல்லது உறுப்பினர் எண்ணிக்கையில் 1/3 என்ற இரண்டில் மிகக் குறைந்த எண்ணிக்கையை ஒன்று சேர்த்து உரிய வேட்பாளர் எண்ணிக்கை தீர்மானிக்கப்பட்டது. விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை அறிமுகம் செய்யப்பட்ட பின்னர் நடாத்தப்பட்ட 1979, 1983 மாநகர சபை மற்றும் நகர சபைத் தேர்தல்கள் இரண்டின் போது (1981 ன் அபிவிருத்தி சபைத் தேர்தலின் போதும்) ஒவ்வொரு கட்சிக்கு/ குழுவிற்கு கிடைக்கப்பெறுகின்ற உறுப்பினர் பதவிகளுக்காக வேட்புமனுப் பத்திரத்தில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள தொடரொழுங்கில் குறித்த வேட்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

1987 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க சட்டத்தின் உள்ளூரதிகார சபை தேர்தல்கள் கட்டளைச் சட்டத்திற்கு அறிமுகம் செய்யப்பட்ட திருத்தத்திற்கமைய வாக்காளர்களின் விருப்பத்திற்கிணங்க வேட்புமனுப் படிவத்தில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள வேட்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்படும் வழிமுறை அதாவது, விருப்புடன் கூடிய விகிதாசார வேட்புமனு முறை நடைமுறைப்படுத்தல் ஆரம்பிக்கப்பட்ட போதிலும், அம்முறையைப் பயன்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த முதலாவது தேர்தலை 1987 ஆம் ஆண்டில் நடாத்தப்படுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருந்த உள்ளூரதிகார சபைத் தேர்தல், இலங்கை இந்திய ஒப்பந்தம் மற்றும் அதனுடன் தொடர்புடைய வன்முறைச் செயல்கள் காரணமாக நடாத்தப்படவில்லை. அதற்கமைய விருப்புடன் கூடிய விகிதாசாரத் தேர்தல் முறை ஒரு வாக்காளருக்குரித்துடைய மூன்று விருப்புகளையும் ஒரு வேட்பாளருக்கு ஒரு விருப்பு என்ற வீதத்தில் (அதாவது மூன்று விருப்புக்களையும் ஒவ்வொன்றாக மூன்று வேட்பாளர்களுக்கு அல்லது தேவையெனில், விருப்பு ஒன்று வீதம் வேட்பாளர்கள் இருவருக்கு அல்லது ஒரு விருப்பை மாத்திரம் ஒரு வேட்பாளருக்கு வழங்கக்கூடியவாறு) 1988 ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதி நடாத்தப்பட்ட உள்ளூரதிகார சபைகள் நான்கிற்கான தேர்தலின் போது பயன்படுத்தப்பட்டது.

1987 ஆம் ஆண்டின் நடாத்தப்படவிருந்த உள்ளூரதிகார சபைத் தேர்தல் 1991 மே 12 ஆம் திகதி நடாத்தப்பட்டது. அது முழு இலங்கையின் அனைத்து பிரதேசங்களும் உள்ளடங்கும் விதத்தில் நடாத்தப்பட்ட முதலாவது உள்ளூரதிகார சபைத் தேர்தலாகக் கருதப்பட்ட போதும் வன்முறைச் செயல்கள் காரணமாக வடக்கு, கிழக்கின் சில பிரதேசங்களில் தேர்தலை நடாத்த முடியவில்லை.

இத்தேர்தலை நடாத்துவதற்கு முன்னர் அறிமுகம் செய்யப்பட்ட 1990 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க உள்ளூரதிகார சபைத் தேர்தல்கள் திருத்தச் சட்டத்தின் மூலம் வாக்காளரொருவருக்கு அவசியமெனில், தனது மூன்று விருப்பு வாக்குகளையும் ஒரு வேட்பாளருக்கு அளிக்கக்கூடிய விதத்தில் சட்டம் திருத்தம் செய்யப்பட்டது. வேட்பாளர்களில் 40% 18-35 வயதுப் பிரிவுக்குரிய இளம் வேட்பாளர்கள் இருக்க வேண்டுமென இச்சட்டத்தில் விதிக்கப்பட்டிருந்தது.

381. வேட்புமனுப் படிவம் தயாரிக்கப்படுவது கட்சியின் தலைமைத்துவத்தின் மற்றும் குழுவின் தலைமைத்துவத்தின்

வழிநடாத்தலின் கீழாகும். கட்சித் தலைமைத்துவம் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் வேட்பாளர்களைத் தெரிவு செய்யும் போது தமது கட்சிக்குஃ குழுவிற்கு வாக்குகளின் எண்ணிக்கையை அதிகரித்துக் கொள்ளக்கூடிய நபர்களை வேட்பாளர்களாகத் தெரிவு செய்வதற்கு முயற்சிகளை மேற்கொண்டனர். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட சில வேட்பாளர்கள் எவ்வாறேனும் வெற்றியீட்டிக் கொள்ளும் எதிர்பார்ப்போடு விருப்புக்களை சேகரித்துக் கொள்வதற்கு செயற்படுதல் தேர்தல் சட்ட மீறல்கள் அதிகரிப்பதற்குக் காரணமாக அமைந்துள்ளது.

382. வேட்பாளர்கள் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் தமது விருப்புகளின் எண்ணிக்கையை அதிகரித்துக் கொள்ளும் எதிர்பார்ப்பில் செயற்படுவதால், வேட்புமனுப் படிவத்தில் தமது பெயர்களை உட்சேர்க்கும் போது கூட, தமக்கு விருப்பமான இலக்கத்தைப் பெற்றுக் கொள்வதற்காக குறிப்பாக முதல் இலக்கங்களுக்கு மேலதிக அனுகூலமொன்று கிடைக்குமென்ற எதிர்பார்ப்புக் காரணமாக பெயர்களை வேறு வடிவங்களில் வேட்புமனுப் படிவத்தில் உட்சேர்ப்பதைக் காண முடிந்தது. சிங்கள அகர வரிசையில் பெயர்கள் ஒழுங்குப்படுத்தப்பட்டு இலக்கங்கள் வழங்கப்படுவதால், வேட்பாளர் இலக்கங்களில் முதல் இலக்கத்தைப் பெற்றுக் கொள்வதற்காக பெரும்பாலும் பெயருக்கு முன்னால் ''அ'' எழுத்துக்கள் பலவற்றை உட்சேர்த்த சந்தர்ப்பங்களையும் காண முடிந்தது. அதேபோன்று சில வேட்பாளர்கள் அவர்களை அழைப்பதற்காக பயன்படுத்தப்படுகின்ற வேறு பெயர்களை பயன்படுத்தியமையும் அறியக் கிடைத்தது. ஆதலால், தேசிய அடையாள அட்டை அல்லது பிறப்புச் சான்றிதழுக்கமைய பெயர்களை வேட்புமனுப் பத்திரத்தில் உட்சேர்க்க வேண்டுமென்பது சட்டமாக்கப்பட வேண்டியுள்ளது.

383. உண்மையாகப் போட்டியிடுகின்ற அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களுக்கு மேலதிகமாக ஆதரவுக் கட்சிகளாலும் சுயேச்சைக் குழுக்களாலும் வேட்புமனுக்கள் சமர்ப்பிக்கப்படுதல் அண்மைய தேர்தல்களின் போது சாதாரணமாகக் காணக்கூடிய ஒரு போக்காகும். இவ்வாறான கட்சிகள் மற்றும் குழுக்கள் போட்டியிடுவதன் மூலம் எதிர்பார்க்கப்படுவது தேர்தல் பிரச்சாரப் பணிகளின் போதும், வாக்கெடுப்பு, வாக்கெண்ணல் சந்தர்ப்பங்களிலும் உண்மையாகப் போட்டியிடுகின்ற கட்சிகள் மற்றும் குழுக்கள் சார்பாக முறையற்ற அனுகூலங்களைப் பெற்றுக் கொடுப்பதாகும். அதன் காரணமாக தேவையற்ற விதத்தில் வாக்குச் சீட்டுக்கள் விசாலித்தல், வாக்கெடுப்பு நிலைய முகவர்கள் எண்ணிக்கை மற்றும் வாக்கெண்ணல் அலுவலர்களின் எண்ணிக்கை அதிகரித்தல், பாதுகாப்புப் பணிகளுக்காக அதிக கவனம் செலுத்துவதற்கு நேரிடுதல் போன்ற காரணங்களால தேர்தல் ஒழுங்கமைப்பின் போது பல்வேறு சிக்கல்களுக்கு முகங்கொடுக்க நேர்ந்தது. அதன் காரணமாக தேர்தல்களுக்காக செலவிட வேண்டியுள்ள செலவுகள் தேவையற்ற விதத்தில் உயர்வடைவதைக் காண முடிகிறது.

384. அதேபோன்று வேட்புமனுக் காலப்பகுதி 7½ நாட்களாக தேர்தல் சட்டத் திட்டத்திற்கமைய குறித்தொதுக்கப்பட்டுள்ள போதும் வேட்புமனுக்களைக் கையளித்தல் இறுதி இரண்டரை நாட்களினுள் கையளிக்கப்படுகின்றமை தெளிவாக காணக் கிடைக்கின்ற ஒரு நிலையாகும். ஆதலால், 7½ நாட்கள் வேட்புமனுக் காலமொன்றை இதற்காகக் குறித்தொதுக்குவது அவசியமற்றதாகும்.

வேட்புமனுக்களைத் தாக்கல் செய்கின்ற வேட்பாளர்களில் 40% இளம் வேட்பாளர்களாகவிருத்தல் வேண்டுமென்ற சட்டம் விதிக்கப்பட்டுள்ள போதும் இளம் வேட்பாளரொருவரென உறுதிசெய்வதற்காக வேட்பாளரினால் கையொப்பமிடப்பட்ட சத்திய வெளிப்படுத்துகை போதுமானதென குறிப்பிடுதல் அச்சட்டத்தை உதாசீனம் செய்வதாகும். கடந்த உள்ளூரதிகார சபைத் தேர்தலின் போது போலியான சத்திய வெளிப்படுத்துகைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்களும் கண்டுபிடிக்கப்பட்டன. அதற்கமைய இளம் வேட்பாளரொருவரென உறுதி செய்வதற்காக பிறப்புச் சான்றிதழின் மூலப்பிரதியை அல்லது அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்றைச் சமர்ப்பித்தலை கட்டாயப்படுத்தப்படல் வேண்டும்.

385. வேட்புமனுப் பட்டியலில் ஒரு வேட்பாளர் உரிய விதத்தில் தகவல்களை வழங்காமை அல்லது வழங்கப்பட்டுள்ள தகவல்களுக்கமைய அவ்வேட்பாளர் தகைமைகளைப் பூர்த்தி செய்யவில்லையென தெரியவருதலின் அடிப்படையில் முழுமையாக அவ்வேட்புமனுப் படிவத்தை நிராகரிக்க வேண்டியேற்படும். இளம் வேட்பாளர் குழுவின் ஓர் இளம் வேட்பாளரின் வயது 35 இற்கு மேற்பட்டிருத்தல் அல்லது குறித்த தினத்தில் 18 வயது பூர்த்தியடையாமை, எவரேனும் வேட்பாளரொருவர் சத்திய வெளிப்படுத்துகையை பூரணப்படுத்தாமை, எவரேனும் வேட்பாளரொருவர் வேட்புமனுப் படிவத்தில் கையொப்பமிடாமை என்பன இவ்வாறான பல சந்தர்ப்பங்களாகும். ஏதேனும் வேட்புமனுப் படிவமொன்று நிராகரிக்கப்பட்டதன் பேரில் நீதிமன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டமை காரணமாக வாக்கெடுப்பை உரிய தினத்தில் நடாத்த முடியாது போவதோடு, அதன் மூலம் முழுச் செயற்பாடுகளும் ஸ்தம்பிதமடையும். ஒரு நாள் தேர்தலாக நடாத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்ட போதும் கடந்த உள்ளூரதிகார சபைத் தேர்தல்கள் அனைத்தையும் பல சந்தர்ப்பங்களில் நடாத்துவதற்கு பிரதான காரணமாக அமைந்ததும் இந்நிலைமையே எனக் குறிப்பிடுதல் வேண்டும். இதனைத் தவிர்த்துக் கொள்ள முடிவது வேட்புமனுக்களைக் கையளிப்பதற்கு முன்னர் கட்சிச் செயலாளர்கள், அதிகாரமளிக்கப்பட்ட முகவர்கள் மற்றும் குழுத் தலைவர்கள் குறித்த வேட்புமனுப் படிவத்தின் அனைத்து விடயங்களும் தேர்தல் சட்டங்களுக்கு இசைவாகவுள்ளனவாவென்பதை உறுதிசெய்துவதனூடாக மாத்திரமேயாகும். வேட்புமனுப் படிவங்களைக் கையளிப்பதற்கு முன்னர் அனைத்து விடயங்களும் சரியாகவுள்ளனவாவென சரிபார்த்து கொள்ளுமாறு வேட்புமனுப் படிவத்தைக் கையளிப்பதற்கு வருகைதருகின்ற நபர்களுக்கு தெரிவத்தாட்சி அலுவலரினால் வாய்மொழி மூலமாகவும், எழுத்து மூலமாகவும் அறிவிக்கின்ற போதும் சிலர் அது தொடர்பில் உரிய கவனமெடுக்காமை கவலைக்குரிய விடயமாகும்.

அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கான வசதிகள் மற்றும் அதனோடு தொடர்புடைய விடயங்கள்.

386. ஒருநாள் தேர்தலாக உள்ளூரதிகார சபைத் தேர்தல்களை நடாத்திய போது தேர்தலை ஒழுங்கமைப்பதற்காக புதிய வழிமுறைகளை அறிமுகம் செய்ய வேண்டியேற்பட்டது. அதற்கமைய தேர்தல் அலுவலர்களின் பணிப்பொறுப்புக்கள் மிகவும் விரிவடைந்தன. வாக்கெடுப்பு நிலையப் பாதுகாப்புக்காக அதிக எண்ணிக்கையான பாதுகாப்பு அலுவலர்களை ஈடுபடுத்துவதற்கும் வாக்கெடுப்புக்காக

பெருமளவு பணியாட் குழுவினரை ஈடுபடுத்துவதற்கும் நேரிட்டமை விஷேட அம்சங்களாகும். இதனால் அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கான வசதிகளைச் செய்து கொடுத்தல் அத்தியாவசியமாகியது.

1987 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்ளூராதிகார சபைத் தேர்தல்கள் (திருத்த) சட்டத்தின் மூலம் உள்ளூராதிகார சபைத் தேர்தல்களுக்கான விகிதாசார பிரதிநிதித்துவ முறை அறிமுகம் செய்யப்பட்டதோடு, அதன் ஓர் அங்கமாக அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கான வசதிகளும் உள்ளடக்கப்பட்டன. விகிதாசார பிரதிநிதித்துவ முறைக்கமைய முழுமையான உள்ளூராதிகார சபை அதிகார பிரதேசம் தேர்தல் இடப்பரப்பொன்றாகக் கருதப்பட்டமை மற்றும் உள்ளூராதிகார சபைத் தேர்தலை ஒரே தினத்திற்குள் நாடளாவிய ரீதியில் நடாத்துவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டமை காரணமாக உள்ளூராதிகார சபைத் தேர்தல் தேசிய மட்டத் தேர்தலொன்றின் வடிவத்தைப் பெற்றது. அதற்கமைய பாதுகாப்புப் பிரிவு, தேர்தல் கடமைப் பணியாளர்கள் மற்றும் தேர்தலொன்றின் போது நேரடியாக உரிய சேவைகளை வழங்குவதில் ஈடுபடுகின்ற பணியாட் குழுவினர் ஆகியோருக்காக அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கான வசதிகளைச் செய்து கொடுத்தல் சட்டமாக்கப்பட்டது. அதற்கமைய முப்படைகள், பொலீஸார், புகையிரதங்கள், மத்திய மற்றும் பிரதேச போக்குவரத்து சபைகள், தொலைத் தொடர்பு மற்றும் தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்தப்பட எதிர்பார்க்கப்படுகின்ற அரச அலுவலர்கள், ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு முதலில் இவ்வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன.
(குறிப்பு 21)

387. தேர்தல் சட்டங்களுக்கமைவாக அஞ்சல் வாக்கு உரிமையற்றிருப்பினும், தேர்தலொன்றின் போது நேரடியாக இன்றேல் மறைமுகமாக தேர்தல் செயன்முறைகளோடு தொடர்புபடுகின்ற பல்வேறு கட்டாய சேவைகளிலீடுபடுகின்ற அலுவலர்கள், ஊழியர்கள் தமக்குக் கையளிக்கப்பட்டுள்ள கடமைகள் காரணமாக வாக்கெடுப்புத் தினத்தன்று தமக்குரிய வாக்கெடுப்பு நிலையங்களுக்குச் சென்று வாக்களிப்பதற்கான சந்தர்ப்பமில்லையென அறிவித்து அஞ்சல் வாக்கு வசதிகளை வழங்குமாறு கடந்த பல தேர்தல்களின் போது தேர்தல்கள் ஆணையாளருக்கு கோரிக்கைச் சமர்ப்பித்தமை தொடர்பாக இங்கு ஆராய்ந்து பார்த்தல் வேண்டும். அரச வைத்தியசாலைகளில், மின்சார சபை, நீர் வழங்கல் மற்றும் நீர் விநியோக சபையில் மற்றும் மகாவலி அதிகார சபையின் கீழுள்ள நீர்தேக்கங்களில் பாதுகாப்புப் பிரிவுகளில் சேவையிலீடுபட்டுள்ளவர்களால், தொடர்ந்தும் இவ்வாறான கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்படுகின்றன.

388. பாதுகாப்புப் பிரிவுகள் மற்றும் அரச சேவைகளில் ஏற்படுகின்ற அபிவிருத்தி காரணமாக அஞ்சல் வாக்கு வசதிகளை வழங்கும் போது மாவட்டத் தேர்தல் அலுவலகங்களுக்குக் கையளிக்கப்படுகின்ற வேலைப்பளு சமாளித்துக் கொள்ள முடியாதளவிற்கு அதிகரிக்கின்றது. அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களைக் கையேற்றல், ஏற்றுக் கொள்ளப்பட்டது அல்லது நிராகரிக்கப்பட்டதென அறிவித்தல், அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் தொடர்பாக வாக்குச் சீட்டுக்கள் உள்ளடக்கப்பட்ட காப்புறுதி பக்கெற்றுக்களை அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களுக்கு அனுப்புதல், அடையாளமிடப்பட்ட வாக்குச் சீட்டுக்களை மீண்டும் தெரிவத்தாட்சி அலுவலர்களிடமிருந்து வரவழைத்துக் கொள்வதற்கான அனைத்து அலுவல்களுக்கும் 03 வாரங்கள் எடுக்கும். இக்காலப் பகுதியினுள் அஞ்சல் திணைக்களத்தினால் சிறந்த அடிப்படையில் கடிதங்கள் பகிர்ந்தளிக்கப்படாவிடின் அஞ்சல் வாக்குச் செயன்முறையில் ஏற்படக்கூடிய வீழ்ச்சியை தவிர்க்க முடியாது.

389. அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களை விண்ணப்பதாரிகள் பூரணப்படுத்தி அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களிடம் கையளித்தல் வேண்டுமென்பதோடு, அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்கள் விண்ணப்பங்களைப் பரிசீலித்துப் பார்த்து, அத்தாட்சிப்படுத்தி தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். இங்கு விண்ணப்பங்கள் முறையாக பூரணப்படுத்தப்படாமை, அத்தாட்சிப்படுத்தல் அலுவலரினால் முறையாக அத்தாட்சிப்படுத்தப்படாமை, உரிய தினத்திற்கு முன்னர் விண்ணப்பப் படிவங்கள் குறித்த மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலருக்குக் கிடைக்கப்பெறாமை ஆகிய காரணங்களால் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட முடியும். விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்ற பின்னர், பரீட்சித்துப் பார்த்ததன் பின்னர், நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் தொடர்பாக நிராகரிக்கபபட்டமைக்கான காரணம் யாதென்பதைக் குறிப்பிட்டு புதிய விண்ணப்பப் படிவமொன்று சகிதம் விண்ணப்பதாரிக்கு அனுப்பி வைக்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ள போதிலும் பெருமளவான விண்ணப்பப் படிவங்கள் விண்ணப்பங்களைக் கையேற்கும் இறுதி இரண்டு மூன்று தினங்களுக்குள்ளேயே கிடைக்கப்பெறுகின்றது. இதன் காரணமாக நிராகரிக்கப்பட்ட ஒரு விண்ணப்பப் படிவம் தொடர்பில் புதிய விண்ணப்பப் படிவமொன்றைப் பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பம் கிடைப்பதரிது. விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுகின்ற அஞ்சல் வாக்கு விண்ணப்பதாரிகள் தேர்தல் கடமைகளிலிருந்து விடுவிக்கப்படுவதில்லையென்பதோடு, அவர்களுக்கு தத்தம் வாக்கெடுப்பு நிலையங்களுக்குச் சென்று வாக்களிப்பதற்கான சந்தர்ப்பத்தைப் பெற்றுக் கொடுப்பதும் சிரமமாகும்.

390. சில அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களின் கவனயீனம் காரணமாக அஞ்சல் வாக்குகள் நிராகரிக்கப்படுவதை கடந்த தேர்தல்களின் போது அவதானிக்க முடிந்தது. அஞ்சல் வாக்கு அடையாளமிடப்பட்டதன் பின்னர், அத்தாட்சிப்படுத்தும் அலுவலர் (B) உறை என்ற வாக்குச் சீட்டு அடங்கிய உறையை தனியாகவும் ஆளடையாள வெளிப்படுத்துகையை தனியாகவும் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு அனுப்பி வைத்தல், ஆளடையாள வெளிப்படுத்துகைகளை உரிய விதத்தில் அத்தாட்சிப்படுத்தியிராமை மற்றும் வாக்களிக்கப்பட்ட பின்னர் வாக்குச் சீட்டுக்கள் அடங்கிய பக்கெற்றுக்களைப் பொறுப்பின்றி அஞ்சல் பெட்டிகளிலிடுதல் போன்ற முறைகேடுகளை அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்கள் மேற்கொண்ட பல சந்தர்ப்பங்கள் கண்டறியப்பட்டுள்ளன. ஆளடையாள வெளிப்படுத்துகை வாக்குச் சீட்டுடன் கூடிய B உறையோடு இணைக்கப்பட்டிராமை மற்றும் ஆளடையாள வெளிப்படுத்துகை முழுமையாகப் பூரணப்படுத்தாமை காரணமாக வாக்கெண்ணலின் போது வாக்குச் சீட்டுக்கள் நிராகரிக்கப்பட வாய்ப்புண்டு.

391. அஞ்சல் வாக்கு விண்ணப்பப் படிவங்களைப் பூரணப்படுத்தும் போது வாக்காளரின் மற்றும் அத்தாட்சிப்படுத்தும்

அலுவலரின் கவனயீனம் காரணமாக அஞ்சல் வாக்காளர் அவரின், தந்தையின் அல்லது சகோதரரின் அல்லது வேறு உறவினரொருவரின் அல்லது தனது பெயருக்குச் சமமான பெயரொன்றைக் கொண்டுள்ள வேறொருவரின் தகவல்களை அதாவது பெயர் மற்றும் தொடர் இலக்கத்தை தேருநர் இடாப்பிலிருந்து பிரித்தெடுத்து அவ்விடயங்களை அஞ்சல் வாக்கு விண்ணப்பப் படிவத்தில் உட்சேர்ப்பதால் பெரும்பாலும் அரச அலுவலரொருவரல்லாத சாதாரண வாக்காளரொருவருக்கு வாக்களிக்கும் சந்தர்ப்பம் அற்றுப் போகும். இந்நிலைமை பெரும்பாலும் பாதுகாப்புப் பிரிவு அங்கத்தவர்களின் அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களில் இடம்பெறுகின்றமை தெரியவந்துள்ளது. குறித்த விண்ணப்பதாரர்கள் அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களை நேரடியாகப் பூரணப்படுத்தாமை பெரும்பாலும் இந்நிலைமை ஏற்படுவதற்குக் காரணமாகும். இருப்பினும் அனைத்து பாதுகாப்பு இராணுவ முகாம்களுக்கும் தேருநர் இடாப்பு உள்ளடக்கப்பட்ட இறுவட்டுக்களை வழங்குவதன் மூலம் இந்நிலையைக் குறைத்துக் கொள்ள தேர்தல்கள் திணைக்களம் மற்றும் இராணுவத்தினர் மேற்கொண்ட முயற்சி வெற்றியளித்துள்ளமை அவதானிக்கப்பட்டது.

392. இத்தகைய தவறுகளை இயன்றவரை தவிர்த்துக் கொள்வதற்காக அஞ்சல் வாக்காளரொருவராக ஏற்றுக் கொள்ளப்பட்டதாக அறிவித்து அனுப்பப்படுகின்ற கடிதத்தை கடிதமொன்று அத்தாட்சிப்படுத்தும் அலுவலரூடாக குறித்த வாக்காளருக்கு அனுப்பி வைப்பதற்கு மேலதிகமாக வாக்காளரின் தனிப்பட்ட முகவரிக்கும் அதன் பிரதியொன்றை அனுப்பி வைக்குமாறு தெரிவத்தாட்சி அலுவலருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. அதற்கு மேலதிகமாக உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை அஞ்சல் திணைக்களத்திற்குக் கையளிக்கும் போது அஞ்சல் வாக்காளர்களின் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை அஞ்சலில் சேர்க்காமல் தக்க வைத்துக் கொள்ள வேண்டுமெனினும், அவ்வுத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளில் ''அஞ்சல் வாக்காளரொருவராக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளார்'' என்ற வசனத்தை இறப்பர் முத்திரையொன்றின் மூலம் பொறித்து வாக்காளர்களுக்கு அனுப்புவதன் மூலம் இவ்வாறான தவறுகளைத் தவிர்க்க முடிந்துள்ளது. இருப்பினும், அவ்வாறு செய்ய முடிவது குறித்த வாக்காளர் அது தொடர்பாக உடனடியாகத் தெரிவத்தாட்சி அலுவலருக்கு அறிவுறுத்தினால் மாத்திரமேயாகும். இருப்பினும் வேறு நபர்களால் தமது வாக்கை அஞ்சல் வாக்காக பயன்படுத்துவதற்காக விண்ணப்பித்துள்ளதாக குறித்த நபர் அறிக்கையிடாவிட்டால், உண்மையான வாக்காளருக்கு வாக்கெடுப்பு நிலையத்தில் கேட்டுப்பெறும் வாக்குச் சீட்டையே வழங்க முடியும். முன்னர் இவ்வாறான சந்தர்ப்பங்கள் கணிசமானளவு அறிக்கையிடப்பட்ட போதும் தற்போது அவ்வாறான சந்தர்ப்பங்கள் அறிக்கையிடப்படுவதில்லையெனும் அளவிற்கு குறைவடைந்துள்ளது.

393. 1987 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்த) சட்டத்தினூடாக உள்ளூர் அதிகார சபைத் தேர்தலுக்கு அஞ்சல் வாக்களிப்பு முறை முன்மொழியப்பட்டிருப்பினும், விகிதாசார முறை அறிமுகம் செய்யப்பட முன்னர் நடாத்தப்பட்ட பழைய உள்ளூர் அதிகார சபைத் தேர்தல் முறைக்கமைய அஞ்சல் வாக்கு அல்லது வேறு மாற்று வழிமுறையொன்று நடைமுறைப்படுத்தப்படவில்லை. இருப்பினும், இன்று சமூகத்தின் விரிவு மற்றும் மக்கள் தொகையின் சிக்கலான தன்மை, துரித அதிகரிப்பு என்பன காரணமாக தேர்தல் கடமைகளில் ஈடுபடுவதால் வாக்கெடுப்பு நிலையத்திற்குச் சென்று வாக்களிக்க முடியாமற் போகின்ற அரச அலுவலர்களுக்காக வாக்களிப்பதற்கான ஏதேனும் வழிமுறையொன்றைப் பயன்படுத்த வேண்டியுள்ளது. இன்றேல் ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ளூர் அதிகார சபைகளுக்கு பல சந்தர்ப்பங்களில் தேர்தல்களை நடாத்த வேண்டியேற்படும்.

394. வட்டார முறையின் கீழ் ஒவ்வொரு வட்டாரமும் தேர்தல் பிரதேசமாக மாறுவதாலும் வட்டாரத்தில் அளிக்கப்பட்ட செல்லுபடியான வாக்குகளில் அதிகமான வாக்குகளைப் பெற்றுக் கொண்ட வேட்பாளர் உறுப்பினராகத் தெரிவு செய்யப்படுவதாலும் வட்டாரத்தின் வாக்குகளின் பெறுபேறு குறித்த வாக்கெடுப்பு நிலையத்திலேயே வெளியிடப்பட வேண்டுமென்பதாலும் இதுவரை காலமும் பின்பற்றப்பட்டு வந்த அஞ்சல் வாக்கு முறையை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வது சிரமமாகவிருக்கும். வட்டார முறைமைக்கமைய வாக்கெண்ணல் குறித்த வாக்கெடுப்பு நிலையத்தில் மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதால், அஞ்சல் வாக்குப் பெறுபேறு அல்லது அஞ்சல் வாக்குப் பக்கெற்றுக்கள் குறித்த வாக்கெடுப்பு நிலையத்திற்குக் கிடைக்கப்பெறுகின்ற வழிமுறையொன்றைத் தயாரித்தல் வேண்டும்.

வாக்களிப்பு மற்றும் வாக்கெண்ணலின் சிக்கலான தன்மை

395. ஒரே நாளில் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் நடாத்தப்படுகின்றமையூடாக இத்தேர்தலும் தேசிய மட்டத் தேர்தலொன்றின் நிலையை அடைந்துள்ளது. வட்டார முறைமையின் கீழ் தேர்தலொன்று நடாத்தப்பட்டதன் பின்னர் வாக்கெடுப்பு நிலையத்தில் வைத்தே வாக்குகள் எண்ணப்பட்டு பெறுபேறுகளை வெளியிடும் மிக எளிய முறையொன்று பின்பற்றப்பட்டது. வட்டார முறைமையின் கீழ் ஒரே தடவையில் ஒரு சபைக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக தேர்தல்கள் தனித்தனியாக நடாத்தப்பட்டன. அதன் காரணமாக அஞ்சல் வாக்களிப்பு முறை அவசியப்படவில்லை.

396. விகிதாசார பிரதிநிதித்துவ முறையின் கீழ் வாக்களித்தல் தொகுதிவாரி பிரதிநிதித்துவ முறையை விட மிக சிக்கல் வாய்ந்த ஒன்றாக மாறியது. இத்தொகுதிவாரி பிரதிநிதித்துவம் முறைமையின் போது வேட்பாளர்களில் தமக்கு விருப்பமான வேட்பாளருக்கு புள்ளடியிடுவதன் மூலம் வாக்களிப்பு முடிவடைகிறது. இருப்பினும், விருப்புடன் கூடிய விகிதாசார முறையின் போது முதலாவதாகத் தாம் விரும்பிய கட்சிக்கு அல்லது குழுவுக்கு எதிரேயுள்ள கூட்டினுள் புள்ளடியிடுவதும் இரண்டாவதாக தாம் விரும்பிய வேட்பாளர்களுக்காக குறித்த வேட்பாளரின் இலக்கம் அல்லது இலக்கங்களின் மீதும் வேட்பாளர்களின் இலக்கங்களுக்கெதிரே உள்ள கூடுகளிலும் புள்ளடிகளை இடுவதன் மூலம் தமது விருப்புக்களை வெளிப்படுத்த முடியும். அவ்விருப்புக்களை வேட்பாளர்கள் மூவருக்கு, இருவருக்கு அல்லது ஒருவருக்கு வழங்க முடியும். இருப்பினும், உயர்ந்தபட்சமாக அடையாளமிட முடிவது மூன்று விருப்புக்கள் மாத்திரமாகும்.

397. விகிதாசார தேர்தல் முறை பாராளுமன்றம், மாகாண சபை மற்றும் உள்ளூர் அதிகார சபை ஆகிய அனைத்து தேர்தல் சட்டங்களிலும் உள்ளடக்கப்பட்டுள்ளதால் ஏற்கனவே விருப்புக்களை அடையாளமிடல் தொடர்பாக வாக்காளர்கள் ஓரளவு புரிந்துணர்வைப் பெற்றிருப்பினும், இம்முறை ஊடாக வாக்குச் சீட்டுக்கள் நிராகரிக்கப்படும் போக்கு மிகவும் அதிகமாகும். இருப்பினும், தமக்கு விருப்பமான கட்சிக்கு அல்லது சுயேச்சைக் குழுவுக்கு வாக்களித்ததன் பின்னர், தமக்கு விருப்பமான வேட்பாளர்களுக்கு மூன்று விருப்புக்களை அடையாளமிடுவதைப் புரிந்து கொள்வது வாக்காளர்களுக்குக் கடினமாகவுள்ளது. வாக்காளர் விருப்புக்களை அடையாளமிடும் போது மேற்கொள்கின்ற தவறுகள் தொடர்பாக ஆராயும் பொழுது அது தெளிவாகின்றது. விருப்புக்களைத் தவறான முறையில் அடையாளமிடுவதால் வாக்குச் சீட்டுக்கள் நிராகரிக்கப்படுகின்ற சந்தர்ப்பங்களையும் காண முடியும். விருப்பு இலக்கங்கள் என எண்ணி சுயேச்சைக் குழுக்களை இனங்காணும் இலக்கங்களின் மீது புள்ளடியிடுவது அவ்வாறான ஒரு சந்தர்ப்பமாகும். அவை கட்சிக்கு அல்லது சுயேச்சைக் குழுவுக்கு அளிக்கப்பட்ட வாக்காகக் கருதப்பட வேண்டியுள்ளமையால் அவ்வாக்குச் சீட்டுக்கள் நிராகரிக்கப்படும்.

398. அதற்கமைய இத்தேர்தல் முறையூடாக வாக்காளரின் எதிர்பார்க்கை நிறைவேற்றப்படுமாவென்பது சந்தேகத்திற்குரியதே. தொகுதிவாரி முறையின் கீழ் நேரடியாக தாம் விரும்பும் வேட்பாளருக்கு வாக்களிப்பதற்கான சாத்தியம் உள்ளபோதும் விகிதாசார வாக்களிப்பின் போது தமக்கு விருப்பமான கட்சி மற்றும் தமக்கு விருப்பமான வேட்பாளர் ஆகிய இரு அளவீடுகளையும் ஒன்றாக கருத்தில் கொண்டு வாக்கினையும் விருப்பினையும் அளிக்க வேண்டியுள்ளது. கட்சிக்கு விருப்பமாயினும், அக்கட்சியின் வேட்பாளருக்கு வாக்காளர் விருப்பமின்றி இருக்க முடியும்.

399. அதேபோன்று வாக்காளருக்கு விருப்பமாயினும் தான் அக்கட்சியின் மீது விருப்பமில்லையெனில், அவ்வேட்பாளருக்கும் வாக்கை அளிக்க முடியாது. அதற்குக் காரணம் வாக்காளர்கள் வாக்களிக்கின்ற கட்சியின் வேட்பாளர் குழுவோடு விருப்பு இலக்கங்கள் தொடர்புற்று காணப்படுவதனாலாகும். இதற்கமைய வாக்காளரின் சனநாயக உரிமை பறிக்கப்பட்டுள்ளது.

400. வாக்கெண்ணலின் போது முதலாவதாக ஒவ்வொரு கட்சி, குழு பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கையை எண்ணுவதனூடாக ஒவ்வொரு கட்சி மற்றும் குழு உரித்தாக்கிக் கொண்டுள்ள உறுப்பினர் பதவிகளின் எண்ணிக்கை கணக்கிடப்படும். ஒவ்வொரு வாக்கெண்ணல் நிலையத்திலும் கட்சிகள் மற்றும் குழுக்கள் பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கை தொடர்பான பெறுபேறு தயாரிக்கப்பட்டதன் பின்னர் ஆகக் கூடுதலான வாக்குகளைப் பெற்றுக் கொண்ட கட்சியில் ஆரம்பித்து அனைத்து கட்சிகள் மற்றும் குழுக்களின் கீழ் போட்டியிட்ட ஒவ்வொரு வேட்பாளரும் பெற்றுக் கொண்டுள்ள விருப்புகளின் எண்ணிக்கை எண்ணப்படும். விருப்பெண்ணல் மிகவும் களைப்பு மிக்கதும் சிக்கல் மிக்கதுமான ஒரு செயற்பாடாகும். மறுபுறம் இவ்விருப்பெண்ணலை பெரும்பாலும் நள்ளிரவின் பின்னர் ஆரம்பிக்க வேண்டியிருப்பது அதிக களைப்புக்குக் காரணமாகும்.

விருப்பெண்ணலின் போது ஒவ்வொரு கட்சி/குழு தொடர்பாக கடந்து செல்ல வேண்டிய படிமுறைகள்

- விருப்பெண்ணலுக்கு செல்லுபடியாகாத வாக்குச் சீட்டுக்களை அகற்றுதல்.
- விருப்பு ஐயத்திற்குரிய வாக்குச் சீட்டுக்கள் தொடர்பாக வாக்கெண்ணல் அலுவலரின் தீர்மானத்தை அறிவித்தல்.
- விருப்பெண்ணலுக்குச் செல்லுபடியான வாக்குச் சீட்டுக்களை 50 கொண்ட கட்டுக்களாகக் கட்டுதல்.
- ஒரு வாக்குச் சீட்டுக் கட்டிற்கு ஓர் ஒப்பு நோக்கல் பத்திரம் (CE/CO/PR/1)- (Tally Sheet) வீதம் தயாரித்தல்.
- 20 ஒப்பு நோக்கல் படிவங்களின் (Tally Sheet) விருப்பு தொடர்பான தரவுகளை முதலாம் பொழிப்புப் படிவத்தில் (CE/CO/PR/2) குறித்தல்.
- குறித்த கட்சி சார்பாக தயாரிக்கப்பட்டுள்ள முதலாம் பொழிப்புப் படிவங்கள் அனைத்திலும் விருப்புக்களைக் குறித்து இரண்டாம் பொழிப்புப் பத்திரத்தைத் (CE/CO/PR/3) தயாரித்தல்.
- உரிய வாக்கெண்ணல் மண்டபத்தின் ஒவ்வொரு கட்சி அல்லது குழுவின் விருப்புகளின் பெறுபேறாக அமைவது இரண்டாம் பொழிப்புப் பத்திரமாகும்.
- இறுதியாக இச்சபைக்குரிய அனைத்து வாக்கெண்ணல் மண்டபங்களதும் இரண்டாம் பொழிப்புப் பத்திரங்களின் கூட்டுத் தொகையின் அடிப்படையில் அக்கட்சிக்கு, குழுவிற்குரிய ஒவ்வொரு வேட்பாளரும் பெற்றுக் கொண்டுள்ள விருப்புக்களின் எண்ணிக்கை தொடர்பான பெறுபேற்றைத் தயாரித்தல். (CE/RO/PR/3)

401. மேற்படி படிமுறைகளைப் பின்பற்றி கட்சிகள் மற்றும் குழுக்கள் பலவற்றின் விருப்பெண்ணல் வெவ்வேறாக மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளமை காரணமாக விருப்பெண்ணல் வாக்கெடுப்புத் தினத்திற்கு மறுநாள் இரவு நேரத்திலேயே முடிவடைகின்றது. இதன் காரணமாக அலுவலர்கள் அக்கடமைகளை உடல், உளக் களைப்போடும் மேற்கொள்ள வேண்டியுள்ளது. அதன் காரணமாக வாக்கெண்ணல் முகவர்கள், வேட்பாளர்கள் ஆகியோர் தம்மிடையே விருப்பெண்ணல் தொடர்பாக பெரும்பாலும் ஐயங்களை ஏற்படுத்திக் கொள்வர். சில வேட்பாளர்கள் தேர்தலின் பின்னர் நீதிமன்ற நடவடிக்கைகளுக்குச் செல்வதற்கு முயற்சிக்கின்ற சந்தர்ப்பங்களையும் காண முடியும். இது பெரும்பாலும் ஒரே கட்சி, குழுவின் வேட்பாளர்களிடையே பிணக்கினைத் தோற்றுவிக்கின்றது. அதற்கமைய தேர்தலுக்கு முன்னர் காணப்பட்ட விருப்பு வேட்டை மோதல்கள் தேர்தலின் பின்னரும் நீதிமன்ற நடவடிக்கைகள் அல்லது பல்வேறு வன்முறை செயல்களாக உருப்பெறுகின்றன. நீதிமன்ற உத்தரவின் பேரில் மீள் விருப்பெண்ணல்கள் பலமுறை மேற்கொள்ளப்பட்டுள்ள போதும் அவ்வெந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஆரம்ப வாக்கெண்ணலின் போது பெறப்பட்ட தொடரொழுங்கில் இடங்களில் மாற்றங்கள் ஏற்படாமை விஷேடமாக ஈண்டுக் குறிப்பிட்டாதல் வேண்டும்.

வெற்றிடங்களை நிரப்புதல் தொடர்பான பிரச்சினைகள்

402. உறுப்பினரொருவரின் மரணம், கேட்டு விலகல் அல்லது வேறு ஏதேனும் காரணத்தினால் உறுப்பினர் பதவி வெற்றிடமாகும்.

உறுப்பினர் பதவி வெற்றிடமாகுமிடத்து அவ்வெற்றிடத்திற்காக அத்தேர்தலில் போட்டியிட்டு கணிசமான விருப்புகளைப் பெற்றுக் கொண்ட வேட்பாளரொருவரே நியமனம் செய்யப்படல் வேண்டும். அதற்கமைய ஏதேனும் உள்ளூர் அதிகார சபைக்காகப் போட்டியின்றி உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டிருப்பின் அதில் வெற்றிடங்களை நிரப்பும் போது எடுக்கப்பட வேண்டிய செயல் ஒழுங்குகள் தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை.

403. அதேபோன்று தேர்தலொன்றில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினரொருவரின் பதவி தொடர்பில் ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்பும் போது ஏற்கனவே வேட்புமனுப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து வேட்பாளர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டு நிறைவடைந்திருப்பின் அல்லது எஞ்சியிருப்பின் அல்லது வேட்பாளர் எந்தவொரு விருப்பையும் பெற்றுக் கொள்ளவில்லையெனில், உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65அ(2) ஆம் உப பிரிவின் பிரகாரம் அது பற்றி தெரிவத்தாட்சி அலுவலரினால் தேர்தல்கள் ஆணையாளருக்கும் தேர்தல்கள் ஆணையாளரினால் விடயப் பொறுப்பு அமைச்சருக்கும் அறிவித்து உறுப்பினர் பதவிக்கான தேர்தலொன்றை நடாத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்தல் வேண்டும். இருப்பினும், விகிதாசார பிரதிநிதித்துவ முறையின் கீழ் சபையொன்றுக்கான இடைத் தேர்தலை நடாத்துவதற்கான அவகாசமொன்றில்லை.

404. இந்நிலைமைக்கு தீர்வாக 2007 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்கள் விஷேட ஏற்பாடுகள் சட்டத்தின் 3 ஆம் பந்தியினால் திருத்தம் செய்யப்பட்ட முதன்மை கட்டளைச் சட்டத்தின் 65அ ஆம் உப பிரிவிற்கமைய வெற்றிடங்களுக்குப் பொருத்தமான வேட்பாளரொருவர் இல்லாத அல்லது வேட்பாளர்கள் அனைவரும் நியமனம் செய்யப்பட்டு முடிவடைந்த சந்தர்ப்பமொன்றில் உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் தகைமை பெறுகின்ற நபரொருவரை அவ்வுள்ளூர் அதிகார சபையின் உறுப்பினரொருவராக பெயர் குறிக்குமாறு குறித்த கட்சியின் செயலாளருக்கு அல்லது குழுத் தலைவருக்குத் தெரிவத்தாட்சி அலுவலர் அறிவித்தல் வேண்டும்.

405. இந்நிலைமையின் கீழ் சனநாயக உரிமை முழுமையாக மீறப்பட்டுள்ளதோடு, கட்சித் தலைவரின் தற்றுணிபின் பிரகாரம் சபையின் உறுப்பினர் பதவிக்கான ஆட்களை நியமனம் செய்து கொள்வதற்கான முழுமையான அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய உறுப்பினர்கள் கேட்டு விலகுவதாக போலியான ஆவணங்களைச் சமர்ப்பித்து உறுப்பினர்களை அகற்றுவதற்கு கட்சித் தலைமைத்துவம் முயற்சித்தல் மற்றும் 10அ ஆம் உப பிரிவின் கீழ் உறுப்பினர்களின் கட்சி அங்கத்துவத்தை இல்லாதொழித்தல் ஊடாக உறுப்புரிமையிலிருந்து அகற்றுதல், வேட்பாளர்களின் வேட்பாண்மையை இல்லாதொழித்தல் மூலம் வேட்புமனுப் படிவத்தில் உள்ள பெயரை நீக்குதல் போன்ற சம்பவங்கள் இச்சட்டம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் பெரிதும் அதிகரித்துள்ளன.

406. இதற்கமைய 2011 ஆம் ஆண்டு அதிகாரத்திற்கு வந்த சில உள்ளூர் அதிகார சபைகளில் தற்போது தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் குறுகிய எண்ணிக்கையினரே உள்ளனர். ஏனைய அனைத்து உறுப்பினர்களும் கட்சிச் செயலாளரின் விருப்பத்தின் அடிப்படையில் நியமனம் செய்யப்பட்ட நபர்களாவர். இதற்கமைய வாக்காளர்களின் வாக்குகளின் பெறுமதி அற்றுபோன நிலைமையொன்றுக்கு மாற்றமடைந்துள்ளது. அதிக செலவுகளைச் செய்து தேர்தலை நடாத்தி தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் கட்சிச் செயலாளரின் தேவைக்கமைய நீக்கப்பட்டு வேறு நபர்களை நியமனம் செய்வதற்கு இடமளிப்பதனூடாக வாக்குகளின் பெறுமதி அற்றுப் போவதோடு, தேர்தல்களுக்காகச் செய்யப்பட்ட செலவுகளும் வீண் செலவுகளாக மாறியுள்ளன.

407. வேட்புமனுப் பத்திரத்தில் உள்ள அனைவரும் நியமனம் செய்யப்பட்டு முடிந்துள்ளவிடத்தும் கணிசமான எண்ணிக்கையிலான விருப்புகளைப் பெற்றுக் கொண்டுள்ள வேட்பாளரொருவர் இல்லாதவிடத்தும் 2007 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க சட்டத்திற்கமைய குறித்த காலப்பகுதிக்குள் வெற்றிடங்களை நிரப்புவதற்காக வேட்புமனுச் செய்யுமாறு கட்சிச் செயலாளருக்கு/ குழுத் தலைவருக்கு அறிவிக்க வேண்டுமெனினும், ஏதேனுமொரு விதத்தில் குறித்த காலப்பகுதியினுள் வேட்புமனுச் செய்யத் தவறும் கட்சி, குழு தொடர்பில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் அச்சட்டத்தில் ஏற்பாடுகள் செய்யப்படவில்லை. அவ்வாறான சந்தர்ப்பமொன்றில் மீண்டும் வெற்றிடங்களை நிரப்புவது காலதாமதமடையும்.

408. இருப்பினும், தொகுதிவாரி தேர்தல் முறையின் கீழ் வட்டாரமொன்றில் வெற்றிடமொன்றை நிரப்புவதற்காக வெற்றிடமான வட்டாரத்திற்கு மாத்திரம் இடைக்கால தேர்தலொன்றை நடாத்துவதற்கான தெளிவான வழிமுறையொன்று 1978 ஆம் ஆண்டிற்கு முன்னர் செயல்வலுவில் காணப்பட்ட மற்றும் 1971 வரை செயற்படுத்தப்பட்ட தேர்தல் சட்டங்களில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

விருப்பு வாக்குடன் கூடிய விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறைக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள விடயங்கள்

409. ஒவ்வொரு வாக்கிற்கும் சமப் பெறுமதி கிடைக்கின்ற தேர்தல் முறையொன்றாக விகிதாசார பிரதிநிதித்துவ முறையைக் குறிப்பிட முடியுமென்பதோடு, 1979 ஆம் ஆண்டில் அறிமுகம் செய்யப்பட்ட கட்சியினால்/ குழுவினால் பெயர் குறிப்பிடப்படுகின்ற முதன்மை பெயர்ப்பட்டியலூடாக வேட்பாளர்கள் நியமனம் செய்து கொள்ளும் விகிதாசார பிரதிநிதித்துவ முறைக்கு பதிலாக கட்சியின் அல்லது குழுவின் தலைவரினால் பெயர் குறிக்கப்படுகின்ற வேட்பாளர்களிலிருந்து தமக்கு விருப்பமான வேட்பாளரொருவரை தெரிவு செய்து கொள்ளத்தக்க வாக்காளருக்கு தமது சுய விருப்பத்தை வெளிப்படுத்த முடியுமான விருப்புடன் கூடிய விகிதாசார பிரதிநிதித்துவ முறை வாக்காளர்களின் சனநாயக உரிமையை மேலும் உறுதிசெய்து கொள்ளும் எதிர்பார்ப்போடு 1987 ஆம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்டது. கட்சியினால்ஃ குழுவினால் சமர்ப்பிக்கப்படுகின்ற முதன்மை பெயர்ப்பட்டியலூடாக பிரதிநிதிகளைத் தெரிவு செய்து கொள்வதைவிட வாக்காளர் தமக்கு விருப்பமான வேட்பாளரைத் தெரிவு செய்து கொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்குவது சிறந்த சனநாயக நடவடிக்கையாகும். இருப்பினும், அங்கு உரிய சனநாயக வழிமுறைகள் தொடர்பான சிறந்த புரிந்துணர்வு காணப்படாமையாலும் உரிய முறையில் பயன்படுத்தப்படாமையாலும் முழு மொத்த விகிதாசார முறைக்கும் எதிரான மக்கள் கருத்தொன்று உருவாகிக் கொண்டு வருகின்றது. மேலும் வேட்பாளர்களிடையே விருப்பு வாக்குக்கான போட்டி, வெற்றிக்காக ஏதேனுமொரு வகையில் விருப்புக்களை சேகரித்துக் கொள்ள

வேண்டுமென வேட்பாளர்களிடையே காணப்படும் மனோநிலை காரணமாக இம்முறை தொடர்பாக கடும் அதிருப்தி நிலவி வருகின்றது. ஆதலால், முன்னர் காணப்பட்ட தொகுதிவாரி பிரதிநிதித்துவ முறையே மிகவும் சிறந்ததெனவும் விகிதாசார முறையைக் கைவிட்டு தொகுதிவாரி தேர்தல் முறைக்கு செல்ல வேண்டுமென்ற கருத்து பரவி வருகின்றது.

இருப்பினும், 2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க உள்ளூரதிகார தேர்தல் திருத்தச் சட்டத்தினால் அறிமுகம் செய்யப்பட்டுள்ள தொகுதிவாரி முறை மற்றும் விகிதாசார முறையின் சித்தாந்தங்களை உள்ளடக்கிய கலப்பு தேர்தல் முறையை விருத்தி செய்தல் அதாவது அனைத்து வாக்குகளுக்கும் உரிய பெறுமானம் கிடைக்கின்ற விகிதாசார முறையையும் பயன்படுத்தி குறித்த ஒவ்வொரு பிரதேசத்தையும் பிரதிநிதித்துவம் செய்யும் பிரதிநிதிகளை நியமனம் செய்து கொள்வதற்கான முன்மொழிவின் துணையோடு மிகப் பொருத்தமான தேர்தல் முறையொன்றை நடைமுறைப்படுத்துவதே மேற்கொள்ளப்பட வேண்டிய விடயமாகும். 2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க உள்ளூரதிகார சபைத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் தேர்தலை நடாத்தும் போது ஒவ்வோர் உள்ளூரதிகார சபையிலும் பரந்து வாழ்கின்ற எண்ணிக்கையில் சிறுபான்மையான மக்கள் குழுக்களுக்கும் தேர்தலொன்றின் போது பரந்தளவிலான மக்கள் ஆதரவு காணப்படாத போதிலும் மக்களின் நன்மதிப்பைப் பெற்றுள்ள கட்சிகளுக்கும் சுயேச்சைக் குழுக்களுக்கும் தமது முகவர்களைத் தெரிவு செய்கையில் ஏற்படுகின்ற அசௌகரியங்கள் அல்லது சாத்தியப்பாடின்மை தொடர்பில் முன்வைக்கப்படுகின்ற விடயங்களையும் எதிர்காலத்தில் ஆராய்ந்து பார்க்க வேண்டியிருக்கும்.

அதேபோன்று வட்டார முறையின் கீழ் தேர்ந்தெடுக்கப்படுகின்ற வேட்பாளர்களின் பதவிகளில் வெற்றிடமொன்று ஏற்படின் இதற்கு முன்னர் காணப்பட்ட விதத்தில் இடைத் தேர்தலொன்றை நடாத்துவதற்காக இச்சட்டத்தில் ஏற்பாடுகள் இல்லையென்பதோடு, வெற்றிடத்திற்காக ஒருவரை பெயர் குறித்தல் கட்சிச் செயலாளருக்கு அல்லது குழுத் தலைவருக்குக் கையளிக்கப்பட்டிருத்தல் நிருவாக அதிகாரத்தின் அடிப்படை மக்கள் விருப்பத்திற்கிணங்க அமைதல் வேண்டுமென்ற சர்வதேச பிரகடனத்திற்கு முரண்பாடுடையது என முன்வைக்கப்படுகின்ற கருத்தை நிராகரிப்பதும் சிரமமானதே.

410. விருப்புடன் கூடிய விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறையின் கீழ் எவரேனுமொரு வேட்பாளருக்கு விருப்பை அளிக்க வேண்டுமெனில் விருப்பத்துடனோ அல்லது விருப்பமின்றியோ கட்டாயமாக அவர் போட்டியிடுகின்ற கட்சிக்கு வாக்களித்தல் வேண்டும். அதேபோன்று குறித்த வேட்பாளர் எவரையுமே விரும்பாத போதிலும் கட்சி மீதுள்ள விருப்பத்தின் காரணமாக வாக்களிக்குமாறு தூண்டப்படுகின்றனர். அவ்வாக்கினால் ஒவ்வொரு கட்சிஃ குழுவின் கீழும் தேர்ந்தெடுக்கப்படுகின்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படுவதோடு, அதன் மூலம் வாக்காளர் விரும்பாத வேட்பாளர்களும் தேர்ந்தெடுக்கப்படுவதற்கான சந்தர்ப்பம் வாய்க்கின்றது.

411. கட்சியொன்றினூடாகப் போட்டியிடுவதற்கு விருப்பமில்லையெனினும், சுயேச்சையாக போட்டியிட்டு பிரதிநிதியொருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு விருப்பம் காட்டுகின்ற அதேபோன்று பிரதேச மக்களின் நன்மதிப்பைப் பெற்றுள்ள நபரொருவருக்கு அதற்கு சந்தர்ப்பமில்லாமை காரணமாக சனநாயகம் வரையறுக்கப்பட்டுள்ளது. சபையில் சேவையாற்றுவதற்கு விருப்பமான படித்த, அறிவுள்ள தரப்பினருக்கு அதற்கான அவகாசமில்லாமை ஒரு பாரிய குறைபாடாகும். விஷேடமாக கிராம மட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட பிரபுக்கள் குழுவொன்றாகப் போட்டியிடுவதற்கு விருப்பம் காட்டுவதில்லை. அதன் காரணமாக பிரதேசத்திற்கு விசுவாசமாகப் பணியாற்றுவதற்கு விருப்பமுள்ள சேவையாற்ற ஆற்றலுள்ள நபர்கள் உள்ளூர் ஆட்சியிலிருந்து நீங்குகின்ற போக்கொன்றைக் காண முடிகிறது.

412. முழுமையான சபையின் அதிகார எல்லையும் தேர்தல் பிரதேசமொன்றாவதால் பிரச்சார பணிகளை முழுச் சபைக்குமுரிய அதிகாரப் பிரதேசத்திற்குள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. ஆதலால், ஏற்படக்கூடிய விருப்பு வேட்டைப் போட்டி காரணமாக தேர்தல் காலப்பகுதியினுள் வன்முறைகள் அதிகரிப்பதன் காரணமாக சமாதானத்திற்கு சவால் ஏற்பட்டுள்ளது. சில வேட்பாளர்கள் வன்முறை அதிகாரத்தைப் பயன்படுத்தி உயிர் சேதங்களைக் கூட ஏற்படுத்துகின்றனர். அவ்வாறான சந்தர்ப்பங்களில் அலுவலர்கள் தேர்தல் கடமைகளில் ஈடுபடுவதற்கு கூட தயக்கம் காட்டுவதோடு, கடந்த சில காலங்களில் தேர்தல் கடமைகளில் அலுவலர்களை ஈடுபடுத்திய போது தேர்தல் கடமை அரச சேவையில் கட்டாயக் கடமையொன்றெனச் சுட்டிக்காட்டி தேர்தல் கடமைகளுக்கு வருகைதராமை பதவி இழப்பிற்கும் கூட ஏதுவாகுமென கடும் எச்சரிக்கை விடுக்க வேண்டிய நிலை நேரிட்டது. 1987 ஆம் ஆண்டிலிருந்து 2002 ஆம் ஆண்டு வரை உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்களின் போது இந்நிலைமையை வெகுவாக அவதானிக்க முடிந்தது.

413. வாக்கெடுப்பு நிலைய முகவர்கள், வாக்கெண்ணல் நிலைய முகவர்கள் ஆகியோரை நியமனம் செய்யும் அதிகாரம் கட்சித் தலைமைத்துவத்திற்கும் சுயேச்சைக் குழுத் தலைவர்களுக்கும் கையளிக்கப்பட்டுள்ளதால், வேட்பாளர்களுக்கு வாக்கெடுப்பு நிலையத்திற்கோ அல்லது வாக்கெண்ணல் நிலையத்திற்கோ தமது முகவரொருவரை நியமனம் செய்வதற்கான உரித்தின்மையால் பெறுபேறுகளை நம்பாத ஒரு நிலை ஏற்பட்டுள்ளது. இருப்பினும், தொகுதிவாரி முறையின் கீழ் தமது வாக்கெடுப்பு நிலையத்தில் தமது முகவர் ஒருவரை நியமனம் செய்து கொள்வதற்கு சந்தர்ப்பம் காணப்பட்டது.

414. அதிக விருப்புகளைப் பெற்றுக் கொண்ட நபர் உள்ளூர் அதிகார சபையின் தவிசாளராக நியமனம் செய்யப்படுகின்ற வழமை அதிகமான கட்சிகளால் பின்பற்றப்படுவதால் அப்பதவிகளைப் பெற்றுக்கொள்வதற்கு ஏற்படுகின்ற போட்டி அமைதிக்கும் கட்சியின் ஒழுக்காறுகளுக்கும் பாரிய தடையாகும். ஒரே கட்சியின் வேட்பாளர்களிடையே கூட பல்வேறு கருத்து வேறுபாடுகளையும் மோதல்களையும் காண முடிகிறது. அதற்கு மேலதிகமாக ஆள்மாறாட்ட வாக்களிப்பு மற்றும் அடாவடித்தனங்கள் ஊடாக வாக்குப் பெட்டிகளை நிரப்புவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளையும் இங்கு குறிப்பிட்டாதல் வேண்டும். 2002 ஆம் ஆண்டு உள்ளூர் அதிகார சபைத் தேர்தலின் போது இந்நிலைமையை பரந்தளவில் காண முடிந்தது.

415. முழு அதிகார எல்லைப் பிரதேசத்திற்காகவும் போட்டியிடுகின்றமையினால் தேர்தல் பிரச்சாரப் பணிகளுக்காக அதிக செலவுகளைச் செய்ய வேண்டியுள்ளது. இதன் காரணமாக பொருளாதார

வசதியற்ற சாதாரண நபரொருவருக்கு இதில் போட்டியிடுவது மிகவும் சிரமமாகும். இதன் காரணமாக சனநாயகத் தோற்றப்பாடு பாதிப்படைந்துள்ளது.

416. பிரச்சாரப் பணிகளுக்குத் தேவையான நிதியை வெளித்தரப்பினரிடமிருந்து பெற்றுக் கொள்வதற்கு முயற்சிக்கின்றமை காரணமாக அதிகாரத்திற்கு வந்த பின்னர், அந்தரப்பினருக்கு கட்டுப்பட வேண்டியேற்படுவதால், இலஞ்சம், ஊழல் மற்றும் முறைகேடான செயல்கள் தொடர்பில் அமைதியாக இருக்க வேண்டிய சந்தர்ப்பங்கள் அதிகமாகும். அதேபோன்று தான் பிரதிநிதித்துவம் செய்கின்ற உள்ளூர் அதிகார சபைக்கு சேவையாற்றுவதை புறந்தள்ளிவிட்டு தேர்தலுக்காக செலவிடப்பட்ட பணத்தை உழைத்துக் கொள்வதற்கு முறைகேடான செயல்களில் ஈடுபடுவதற்கு எத்தனிப்பதைக் காண முடிகிறது.

417. வாக்கெண்ணல் ஒரு மையப்படுத்தப்பட்டு மேற்கொள்ளப்படுவதாலும், விருப்பெண்ணலின் சிக்கல் தன்மை காரணமாகவும், அதிக செலவையும் அதேபோன்றே அதிக களைப்பையும் கொண்ட ஒரு பணியாக இது மாறியுள்ளது. அதற்கு தேவையான அலுவலர்கள், வாக்கெண்ணல் மண்டபங்கள், மின்சாரம், நலனோம்பல், போக்குவரத்து அலுவல்கள் போன்ற ஒழுங்கமைப்புப் பணிகளுக்கு பெருந்தொகையான பணத்தை செலவிட வேண்டியுள்ளது.

418. ஒரு மையப்படுத்திய வாக்கெண்ணலின் போது வாக்குப் பெட்டிகளை அந்நிலையத்திற்கு எடுத்துவரல் வாக்கெண்ணலின் சிக்கலான தன்மை, வாக்கெண்ணல் அனைத்து வேட்பாளர்களினதும் அவதானித்தலுக்கு இலக்காகாமல் மேற்கொள்ளப்படுவதால், வாக்கெண்ணல் மற்றும் தேர்தல் முடிவுகள் தொடர்பாக வேட்பாளர்களின் நம்பிக்கை குறைவடைந்துள்ளது.

419. அதிக விருப்புகளைப் பெற்று கொண்ட நபர், மேயர்ஃ தவிசாளராக நியமனம் செய்யப்படாமல் கட்சி செயலாளருக்குத் தேவையான ஒருவரை மேயராக அல்லது தவிசாளராக நியமனம் செய்வதன் மூலம் கட்சியில் அதிகார பலம் ஓங்கியுள்ளதோடு, விருப்புகுகளின் எண்ணிக்கைக்கமைய மேயர்/ தவிசாளர் பதவிகளைத் தீர்மானிக்க முடியாதென்பதால், உறுப்பினர்களின் வாக்குகளினால் மேயர்/ தவிசாளரைத் தேர்ந்தெடுத்துக் கொள்வது பொருத்தமானதென தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்களை கருத்திலெடுப்பது பொருத்தமாகும்.

420. இத்தேர்தல் முறையின் கீழ் வேட்பாளர்களுக்கிடையில் கொள்கைகளை விட தனித்துவம் மேலோங்கியிருப்பதைக் காண முடிகிறது. தேர்தல் மேடைகளில் கூட தான் மேற்கொள்ள எதிர்பார்க்கின்ற பணிகள் தொடர்பாக விளக்கமளிப்பதைவிட தனிப்பட்ட அடிப்படையில் ஒருவரையொருவர் விமர்சிக்கின்ற போக்கொன்று ஏற்பட்டுள்ளது. தனிப்பட்ட முறையில் தனது ஆளுமை, பண பலம், வன்முறை பலம் ஆகியவற்றைக் காட்டுவதற்கும் அவ்வாறின்றேல், தான் ஏதேனுமொரு விதத்தில் பெற்றுக் கொண்டுள்ள பிரபல்யத்தினூடாக வெற்றியீட்டுவதற்கும் முயற்சிக்கின்றனர். இதற்கு ஒவ்வொரு வேட்பாளரும் பல்வேறு உபாயங்களைக் கையாள்வதைக் காண முடியும்.

421. பிரச்சாரப் பணிகளை அலுவல்களை மேற்கொள்ளும் போது வேட்பாளர்களுக்கு ஏற்படுகின்ற வசதியீனங்கள் மற்றும் சுவரொட்டிகளை ஒட்டுவதற்காகவும் வேறு பிரச்சாரப் பணிகளுக்காகவும் செலவிட நேரிடுகின்ற தொகையை கருத்திலெடுத்து சுவரொட்டிகளை ஒட்டுவதற்குப் பொருத்தமான இடமொன்றைக் குறித்தொதுக்குவதற்கும் கூட்டங்களை நடாத்துவதற்குப் பொருத்தமான இடங்களை ஒவ்வொரு கட்சிகக்கும் குறித்தொதுக்குவதற்குமான பொருத்தமான வேலைத் திட்டமொன்றை மேற்கொள்வது அவசியமாகும். குறிப்பாக கூட்டக் காணிகளை குறித்தொதுக்குதல் அதற்காக நியமனம் செய்யப்பட்ட குழுவொன்றினூடாக மேற்கொள்வது மிகவும் உசிதமானதாகும்.

422. அதேபோன்று வாக்காளர்களுக்கும் உறுப்பினர்களுக்குமிடையில் பாரிய இடைவெளியொன்று ஏற்பட்டுள்ளது. இதற்குக் காரணம் தொகுதிவாரி முறையின் கீழ் தமது பிரதேசத்திலிருந்து உருவாகின்ற தலைமைத்துவமொன்றை சபையில் காணக்கூடியதாகவிருந்த போதிலும், விகிதாசார தேர்தல் முறையின் கீழ் உறுப்பினர் வெற்றி பெறுவது முழுமையான சபைக்குரிய அதிகார பிரதேசத்தின் வாக்குகளினாலேயேயாகும். இதன் காரணமாக வாக்காளருக்கும் உறுப்பினருக்குமிடையில் பரஸ்பர அறிமுகம் குறைந்து விடுகின்றது. வாக்காளருக்கு தனது குறைபாடுகளையும் எதிர்பார்ப்புக்களையும் சமர்ப்பிப்பதற்கான பிரதிநிதியொருவர் இல்லாமற் போகின்றார். இந்நிலைமையினுள் உறுப்பினருக்கும் எழுகின்ற பிரச்சினைகளிலிருந்து நழுவிச் செல்வதற்கான அவகாசம் கிடைக்கின்றது.

423. தமது கிராமப் பிரதேசத்தை அல்லது வீதியைப் பிரதிநிதித்துவம் செய்வதற்கு குறிப்பிட்ட முகவரொருவரில்லாமை, விருப்பு வாக்குகளை சேகரித்துக் கொள்வதற்காக வேட்பாளர்களிடையே ஏற்பட்ட போட்டி, உள்ளூரதிகார சபை அதிகார எல்லையினுள் பிரச்சாரப் பணிகளில் ஈடுபட நேரிட்டமை காரணமாகவும் விருப்பு வேட்டை சச்சரவு காரணமாகவும் பெரும்பாலான வேட்பாளர்களுக்கு பாரியளவு தொகையொன்றை பிரச்சார பணிகளுக்காக செலவிட நேரிட்டமை மற்றும் அதற்கான போதியளவு ஆதனங்கள் காணப்படாமை வேட்புமனுவில் பெயர்க் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து வேட்பாளர்களும் வெற்றியீட்டும் ஒரே நோக்கத்தோடு, போட்டியிடுகின்ற போதும் எந்நிலைமையின் கீழாயினும் (போட்டியின்றி தெரிவு செய்யப்படினும்) வேட்பாளர்களில் சிலர் கட்டாயம் தோல்வியடைகின்றமையினால் வெற்றியை நோக்காகக் கொண்டு போட்டியிட்ட அவ்வேட்பாளர்கள் மற்றும் அவர்களின் தலைவர்கள் விருப்புகளின் பெறுபேறு தொடர்பில் நம்பிக்கை இழத்தல் போன்ற காரணங்களால விருப்புடன் கூடிய விகிதாசார தேர்தல் முறை தொடர்பில் உளப்பூர்வ திருப்தியின்மை ஏற்பட்டுள்ளது. இதற்கான தீர்வாக அறிமுகம் செய்யப்பட்டுள்ள தொகுதிவாரி முறையின் கீழ் ஒவ்வொரு வட்டாரத்திற்கும் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்துக் கொள்வதற்கும் தோல்வியடைந்த வேட்பாளர்கள் பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் விகிதாசார பிரதிநிதித்துவ முறையின் கீழ் குறித்த எண்ணிக்கையான பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்கும் உத்தேச புதிய தேர்தல் முறை இடமளிப்பதால் நடைமுறையிலுள்ள முறையை விட மிக சிறந்த முறையொன்றாக அமையுமென்பது சட்டவாக்குனர்களின் கருத்தென்பதால் எதிர்வரும் தேர்தல்களின் போது அப்புதிய தேர்தல் முறை பயன்படுத்தப்படும்.

XVIII ஆம் பகுதி

மதிப்பீடு

424. 2011 ஆம் ஆண்டில் இரண்டு கட்டங்களாக நடாத்தப்படத் தீர்மானிக்கப்பட்டிருந்த இத்தேர்தலில் 452 வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டமை காரணமாக 03 கட்டங்களாக நடாத்த நேரிட்டது. அதற்கமைய 2011.03.17 ஆம் திகதி 234 உள்ளூர் அதிகார சபைகளுக்கும், 2011.07.23 ஆம் திகதி 65 உள்ளூர் அதிகார சபைகளுக்கும், 2011.10.08 ஆம் திகதி 23 உள்ளூர் அதிகார சபைகளுக்குமென, மொத்தம் 322 உள்ளூர் அதிகார சபைகளுக்கான தேர்தல் நடாத்தப்பட்டது. அக்காலப்பகுதியின் போது பதவிக் காலம் நிறைவடையாமை காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தின் 09 உள்ளூர் அதிகார சபைகள், வவுனியா நகர சபை, யாழ்ப்பாணம் மாநகர சபை ஆகிய 11 உள்ளூர் அதிகார சபைகள் மற்றும் நிலக்கண்ணி வெடிகள் அகற்றப்படுதல், மீள் குடியேற்றம் என்பன நிறைவுசெய்ய முடியாமற்போன புதுக்குடியிருப்பு மற்றும் கரைத்துறைப்பற்று ஆகிய இரண்டு உள்ளூர் அதிகார சபைகள் என்பவற்றின் தேர்தலைப் பிற்போட நேரிட்டது.

425. இவ்வறிக்கையை நிறைவுசெய்கின்ற சந்தர்ப்பத்தின் போது மட்டக்களப்பு மாவட்டத்தின் 09 உள்ளூர் அதிகார சபைகள் மற்றும் வவுனியா நகர சபை, யாழ்ப்பாணம் மாநகர சபை ஆகிய உள்ளூர் அதிகார சபைகளின் பதவிக்காலம் நிறைவடைந்ததன் பின்னர், அவை விஷேட ஆணையாளரின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. மீள்குடியேற்றம் நிறைவடையவில்லையென்பதால், தேர்தலைப் பிற்போட முடிவெடுக்கப்பட்ட புதுக்குடியிருப்பு மற்றும் கரைத்துறைப்பற்று பிரதேச சபைகள் இரண்டினதும் தேர்தலை 2012 மார்ச் மாதம் 24 ஆம் திகதி நடாத்துவதற்கு அனைத்து பணிகளும் நிறைவுசெய்யப்பட்டிருந்த போதும் அதற்கெதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட 02 மனுக்களையடுத்து தேர்தலை நடாத்துவதற்கான தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டமை காரணமாக தேர்தலை நடாத்த முடியவில்லை. அம்மனுக்கள் விசாரிக்கப்பட்டு இதுவரை தீர்ப்பு வழங்கப்படவில்லை.

426. எவ்வாறாயினும், 322 உள்ளூர் அதிகார சபைகளுக்காக நடாத்தப்பட்ட இத்தேர்தலை வரிதாக்கத்தக்க சம்பவங்கள் எதுவுமின்றி நடாத்த முடிந்தமை தொடர்பில் மகிழ்ச்சியடைய முடியுமெனினும், தேர்தலை முழுமையான அடிப்படையில் நீதியாகவும், சுதந்திரமாகவும் நடாத்த முடியவில்லையென சில அரசியல் தொழிற்பாட்டாளர்களும், கண்காணிப்பு அமைப்புக்களும் ஆர்வமுள்ள திறத்தவர்களும் மேற்கொள்கின்ற வெளிப்படுத்துகைகள் தொடர்பாக கவனம் செலுத்துவது அவசியமாகும். அவ்விமர்சனங்களையும் குற்றச்சாட்டுக்களையும் தேர்தல் சட்டத் திருத்தத்தின் போது கருத்திலெடுப்பது கட்டாயமாகும். அரச ஆதனங்களின் துஷ்பிரயோகம், அரச ஊடகங்களின் பக்கச் சார்பான சட்டவிரோத பிரச்சாரப் பணிகள், சில பொலிஸ் அலுவலர்களின் அசமந்த போக்கு மற்றும் அவ்வாறான பொலிஸ் அலுவலர்கள் சில அரசாங்க சிரேட்ட அலுவலர்களின் வற்புறுத்தல்கள் காரணமாகவோ அல்லது சுயவிருப்பின் பெயரிலோ சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் பின் நிற்கின்றமை தேர்தல் தொடர்பிலான குற்றச்சாட்டுக்களுக்கு அடிப்படையாக அமைந்துள்ளன.

427. எவ்வாறாயினும், இந்நிலைமையை ஓரளவேனும், கட்டுப்படுத்திக் கொள்ள அமைச்சுக்களின் செயலாளர்கள், மேலதிக செயலாளர்கள் உள்ளிட்ட அவர்களின் பணியாட் குழுவினரதும் மாவட்ட மட்டத்தில் மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்கள், பிரதேச செயலாளர்கள், கிராம அலுவலர்கள் உள்ளிட்ட அனைவரும் நீதியானதும், சுதந்திரமானதுமான தேர்தலொன்றை அத்தாட்சிப்படுத்த மிக அர்ப்பணிப்போடு பணிகளை மேற்கொண்ட அனைத்து அரச அலுவலர்கள் மற்றும் ஊழியர்களுக்கு எனது நன்றியறிதலை தெரிவித்துக் கொள்கின்றேன்.

428. தேர்தலொன்றின் போது மாவட்டச் செயலாளர் உள்ளிட்ட பணியாட் குழுவினருடன் நெருங்கிய தொடர்புடன் பணிகளை மேற்கொள்கின்ற பிரதி/ சிரேட்ட உதவி/ உதவித் தேர்தல்கள் ஆணையாளர்கள் உள்ளிட்ட பணியாட் குழுவினருக்குக் கையளிக்கப்படுகின்ற பணிப்பொறுப்பு அளப்பரியதாகும். சிற்சில தடைகளுக்கெதிரே தேர்தலின் 03 கட்டங்களுக்குமுரிய பாரிய பணிகளை ஆற்றிய மாவட்ட பணியாட் குழுவினர் உள்ளிட்ட மொத்த அரச சேவைக்கும் எனது நன்றிகள் உரித்துடையதாகும்.

429. நாடளாவிய தேர்தலொன்றின் போது வாக்கெடுப்பு நிலைய அலுவலர்கள், வாக்காளர்கள், வேட்பாளர்கள், வாக்கெடுப்பு நிலைய மற்றும் தேர்தலோடு தொடர்புடைய அனைத்து பாதுகாப்பு விடயங்கள் தொடர்பிலும் பாதுகாப்பு வழங்கி வாக்கெடுப்பு மற்றும் வாக்கெண்ணல் அலுவல்களை தடங்கல்களின்றி நிறைவு செய்து கொள்வதற்கு இலங்கை பொலிஸ், சிவில் பாதுகாப்புப் படையணி மற்றும் விஷேட பாதுகாப்புச் சேவைகளை வழங்குவதில் பங்களிப்பு வழங்கிய முப்படைகளுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

430. தேர்தலொன்றின் போது அரச அச்சக அழுத்தகர் உள்ளிட்ட அச்சகத் திணைக்களத்தின் பணியாட் குழுவினர், தேர்தல்கள் திணைக்களத்தோடு மிகுந்த நெருங்கிய வகையில் பணிகளை மேற்கொள்ளல் வேண்டும். வேட்புமனு அறிவித்தலை வெளியிடுவதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர் ஆரம்பமாகும் அச்சிடல் பணிகள் வேட்புமனுக் கையேற்றலின் பின்னர், வாக்குச் சீட்டு, வீடுகளுக்கான அறிவித்தல்கள் மற்றும் வாக்கெடுப்பு அறிவித்தல்கள் ஆகியவற்றைத் துரிதமாக அச்சிட்டு வழங்கியதன் பின்னர் ஒன்றுக்கொன்று வேறுபட்ட 322 வகையான வாக்குச் சீட்டுக்களை உரிய காலத்திற்குள் அச்சிட்டு வழங்குதல் மற்றும் சரியாக மாவட்ட அலுவலகங்களுக்குப் பகிர்ந்தளித்தல் உள்ளிட்ட 03 கட்டங்களுக்கும் தேவையான அனைத்து அச்சிடல் பணிகளையும் துரிதமாகவும் சிறந்த அடிப்படையிலும் நிறைவேற்றி அச்சகத் திணைக்களம் வழங்கிய வினைத்திறன்மிக்க பணியையும் பெரிதும் பாராட்டுகின்றேன். அஞ்சல் வாக்கு விண்ணப்பத்தில் தொடங்கி காப்புறுதிப் பக்கெற்றுக்கள் மீளக் கிடைக்கப்பெறும் வரையிலான அஞ்சல் வாக்கு தொடர்பான பணிகள் மற்றும் அனைத்து வாக்காளர்களுக்கும் நியதிச் சட்ட அடிப்படையில் அனுப்பி வைக்க வேண்டிய உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளைப் பகிர்ந்தளித்தல் 180,000 அலுவலர்களின் நியமனக் கடிதங்களைத் துரிதகதியில் பகிர்ந்தளித்தல் சுமார் போன்ற மிக அவசரமானதும், முக்கியத்துவம் வாய்ந்ததும், அத்தியவசியமானதுமான கடமைகளை ஒழுங்கமைத்து மேற்கொண்ட அஞ்சல்மா அதிபர் உள்ளிட்ட அஞ்சல் திணைக்களத்தின் பணிக்குழுவினருக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

431. தேர்தலோடு தொடர்புடைய அலுவலர்கள் மற்றும் பொருட்களாதியவற்றை வாக்கெடுப்பு நிலையங்களுக்குக் கொண்டு செல்லல் மற்றும் மீள வாக்கெண்ணல் நிலையங்களுக்கு எடுத்துவரல் மற்றும் வாக்கெடுப்புக் கடமைகளுக்கான அலுவலர்களுக்கான போக்குவரத்து வசதிகள் என்பவற்றை ஏற்படுத்திக் கொடுத்த இலங்கை புகையிரத சேவை, இலங்கை போக்குவரத்து அதிகார சபை, தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் மற்றும் அத்தியாவசிய சேவைகளை ஆற்றுவதில் பங்களிப்பு வழங்கிய இலங்கை மின்சார சபை, இலங்கை ரெலிகொம், பெற்றோலியக் கூட்டுத்தாபனம் போன்ற நிறுவனங்கள் மற்றும் அரச கைத்தொழிற்சாலை ஆகியவற்றின் அனைத்து அலுவலர்கள் மற்றும ஊழியர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

432. வாக்கெடுப்பு நிலையங்களில் பெரும் பகுதி அரச பாடசாலைக் கட்டிடங்களில் அமைக்கப்பட்டதோடு, பௌத்த மற்றும் ஏனைய சமயத் தலங்கள், பல பொதுக் கட்டிடங்கள் என்பவற்றைப் பயன்படுத்தும் போது தேவையான அனைத்து வசதிகளையும் வழங்கி உதவிய விகாரைகளின் விகாராதிபதிகள், ஏனைய சமயத் தலைவர்கள், பாடசாலை அதிபர்கள், ஏனைய நிலையப் பொறுப்பாளர்கள் மற்றும் தற்காலிகக் கட்டிடங்களை அமைப்பதற்குக் காணிகளை வழங்கி ஒத்துழைப்பு வழங்கிய தனியார் காணிகளின் உரிமையாளர்களுக்கும் எனது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

433. மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களினால் தயாரிக்கப்படுகின்ற தேர்தல் முடிவுகளை தேர்தல்கள் செயலகத்தில் மீளப் பரீட்சிப்பதற்காகவும் அவற்றை அட்டவணைப்படுத்துவதற்காகவும் பங்களிப்பு வழங்கிய திணைக்களத் தலைவர்கள் உள்ளிட்ட அனைத்து அலுவலர்களுக்கும் முதலாம் கட்ட தேர்தலின் போது அனுமதிக்கப்பட்ட தேர்தல் முடிவுகளை ஊடக நிறுவனங்களுக்கு வெளியிடுவதற்காக அனுசரணை வழங்கிய கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணனிக் கல்விப் பிரிவின் அனைத்து அலுவலர்களுக்கும் 02, 03 ஆம் கட்டங்களின் போது அரசாங்க தகவல் திணைக்களத்தினூடாக முடிவுகளை ஊடக நிறுவனங்களுக்கு வெளியிடுவதற்கு அனுசரணை வழங்கிய அரசாங்க தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் உள்ளிட்ட பணிக்குழுவினருக்கும் அதற்காக இலத்திரனியல் தொடர்பாடல் வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக இலங்கை ரெலிகொம் நிறுவனத்தின் அலுவலர்களையும் பெரிதும் மெச்சுகின்றேன்.

434. தேர்தல் தொடர்பாக வாக்காளர்கள், வேட்பாளர்கள் மற்றும் அரசியல் கட்சிகளின் அதிகாரிகளை அறிவுறுத்துவதற்காக தேர்தல்கள் திணைக்களத்தோடு, மிக நெருங்கிய அடிப்படையில் பணிகளை மேற்கொண்ட இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் உள்ளிட்ட அனைத்து அரச மற்றும் தனியார் இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடக நிறுவனங்களின் தலைவர்கள் அனைத்து ஊடகவியலாளர்கள் தேர்தல் பணிகளை வெற்றிகரமாக நிறைவுசெய்து கொள்வதற்கு வழங்கிய ஒத்துழைப்பு தொடர்பாக அந்நிறுவனங்களின் தலைவர்கள் உள்ளிட்ட அனைத்து அலுவலர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

435. நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலொன்றை எதிர்பார்க்கின்ற சிவில் சமூகத்தினரும், தேர்தல் கண்காணிப்புப் பணிகளிலீடுபட்ட PAFFREL (பெபரல்) மற்றும் CMEV அமைப்புக்கள் உள்ளிட்ட கண்காணிப்பு நிறுவனங்கள் தேர்தல் அலுவல்களை நீதியாகவும் சுதந்திரமாகவும் மேற்கொள்வதற்காக வழங்கிய தொழிற்படு பங்களிப்பு பெரிதும் உதவியாக அமைந்ததென்பது வெளிப்படையான விடயமாகும். ஆதலால், அவ்வனைத்து நிறுவனங்களையும் இச்சந்தர்ப்பத்தில் நன்றி உணர்வோடு நினைவு கூருகின்றேன்.

436. தேர்தலை நீதியாகவும் சுதந்திரமாகவும் நடாத்துவதற்காக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு மிகப் பரந்த பங்களிப்பொன்றைப் பெற்றுக் கொடுத்தது. இறுதியாக வேட்புமனுத் தினத்திலிருந்து இப்பணிகளில் பங்களிப்புச் செய்த அரசியல் கட்சிகளின் தலைவர்கள், செயலாளர்கள், வேட்பாளர்கள் மற்றும் வாக்களித்த அனைத்து வாக்காளர்கள் ஆகியோர் தேர்தல் பணிகளை வெற்றிகரமாக நிறைவு செய்து கொள்வதற்கு வழங்கிய ஒத்துழைப்பைப் பாராட்டுவதோடு, நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலுக்காக அர்ப்பணிப்போடு அலுவல்களை மேற்கொண்ட அனைவருக்கும் மீண்டும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

437. தேர்தல்கள் செயலகம் மற்றும் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்கள் அனைத்தினதும் அலுவலர்கள், ஊழியர்கள் அனைவரும் இரவு பகல் பாராது பல்வேறு கஷ்டங்களை சகித்துக் கொண்டு மிகுந்த அர்ப்பணிப்போடு, அலுவல்களை மேற்கொள்ளவில்லையெனில், இத்தேர்தல் பணிகளை இவ்வாறு சிறப்பாக நிறைவு செய்வது கனவாகவே இருந்திருக்கும் அது மாத்திரமன்றி திணைக்களத்தின் அனைத்து பணிகளின் போதும் பாரிய பணிப்பொறுப்புக்களை ஆற்றி அர்ப்பணிப்போடு அலுவல்களை மேற்கொள்கின்ற தேர்தல் தொழில்வல்லுநர்களின் ஒத்துழைப்பும் இத்தேர்தல் பணிகளை சிறப்பாக மேற்கொள்வதில் பெரும் உதவியாக அமைந்ததென்பதைக் குறிப்பிட்டாதல் வேண்டும்.

தொடர்பிலும் பாதுகாப்பு வழங்கி வாக்கெடுப்பு மற்றும் வாக்கெண்ணல் அலுவல்களை சிக்கல்களின்றி நிறைவு செய்து கொள்வதற்கு இலங்கைப் பொலிஸ், சிவில் பாதுகாப்பு படையணி மற்றும் விஷேட பாதுகாப்புச் சேவைகளை வழங்குவதில் பங்களிப்பு வழங்கிய முப்படைகளுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

XIX ஆம் பகுதி

முடிவுரை

438. 335 உள்ளூர் அதிகார சபைகளில், 322 சபைகள் தொடர்பாக 3 கட்டங்களின் கீழ் தேர்தல்கள் நடாத்தப்பட்டு நிறைவு செய்யப்பட்ட 2011 ஆம் ஆண்டின் உள்ளூர் அதிகார சபைத் தேர்தல் விகிதாசார பிரதிநிதித்துவ முறையின் கீழ் நடாத்தப்பட்ட இறுதியான உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்கள் எனக் குறிப்பிட முடியும். 2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்ட உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்திற்கமைய எதிர்வரும் உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்கள் வட்டார அடிப்படையில் நடாத்தப்படல் வேண்டும். 2011 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட இவ்வுள்ளூர் அதிகார சபைத் தேர்தல்கள் 3 கட்டங்களின் கீழாயினும், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுடன் நடாத்தக் கிடைத்தமை விஷேட அம்சமாகும்.

439. இத்தேர்தல் முடிவுகளை சவாலுக்குட்படுத்தி அதற்கெதிராக 28 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டதோடு, அவற்றில் 26 மனுக்களினூடாக விருப்புகளை மீள எண்ணுமாறு கோரப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் அதன் மூலம் தெரியவருவது ஒரே கட்சியின் வேட்பாளர்களுக்கிடையிலுள்ள விருப்பு வேட்டைப் போட்டியின் உச்ச சட்ட நிலைமையாகும். இரண்டு மனுக்களுக்குரிய முடிவுகள் இது வரை கிடைக்கவில்லை. தீர்ப்பளிக்கப்பட்டுள்ள அனைத்து மனுக்களும் தள்ளுபடி செய்யப்பட்டமை விஷேட அம்சமாகும்.

440. 2011 ஆம் ஆண்டில் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தலுக்கான பூர்வாங்க அலுவல்கள் ஆரம்பித்ததைத் தொடர்ந்து இவ்வறிக்கைக்குத் தேவையான தகவல்கள் திரட்டப்பட்டதோடு, 2012 மற்றும் 2013 ஆம் வருடங்களில் மாகாண சபைத் தேர்தல் காரணமாக இவ்வறிக்கையைத் தயாரிப்பது தாமதமடைந்தது. கொள்கை அடிப்படையில் மனுக்களின் விசாரணைகள் நிறைவடையும் வரை அறிக்கை வெளியிடப்படாமை தாமதத்திற்கு மற்றுமொரு காரணமாகும். மறுபுறம் இத்தேர்தல் இரண்டு தேர்தல்கள் ஆணையாளர்களின் கீழ் நடாத்தப்பட்டமையும் குறிப்பிடத்தக்க விடயமொன்றாகும்.

441. விருப்பெண்ணலின் நோக்கம் பெற்றுக் கொண்ட உறுப்பினர் பதவிகளுக்குப் பொருத்தமான வேட்பாளர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்வதென்பதால், எவரேனும் உறுப்பினரை உரித்தாக்கிக் கொண்ட கட்சிகள் மற்றும் குழுக்களின் வேட்பாளர்களின் விருப்புக்களை மாத்திரம் எண்ணுவதற்கு அப்போதிருந்த தேர்தல்கள் ஆணையாளர் எடுத்த தீர்மானத்திற்கமைய குறித்த கட்சிகள் குழுக்களின் விருப்புகள் மாத்திரமே எண்ணப்பட்டன.

442. அதற்கமைய 322 உள்ளூர் அதிகார சபைகளுக்காக தனித்தனியான தேர்தல்கள் என்ற அடிப்படையில் ஒவ்வொரு கட்சி, சுயேச்சைக் குழு பெற்றுக் கொண்ட வாக்குகள் மற்றும் ஒவ்வொரு வேட்பாளரும் பெற்றுக் கொண்ட விருப்புக்களின் எண்ணிக்கை தொடர்பான விபரங்கள் இவ்வறிக்கையில் உட்சேர்க்கப்பட்டுள்ளன. அதற்கமைய இவ்வறிக்கையின் பக்கங்களின் எண்ணிக்கை அதிகமென்பதால், இரண்டு தொகுதிகளாகத் தயாரிக்கப்பட்டுள்ளது. முதலாவது தொகுதி அறிக்கைகள், பின்னிணைப்புக்கள், அட்டவணைகள் மற்றும் வாக்கெடுப்புத் தொடர்பாக விளக்கும் குறிப்புக்களை உள்ளடக்கியுள்ளதோடு, வாக்கெண்ணல் முடிவுகள் தொடர்பான எண்ணிக்கை அடிப்படையிலான குறிப்புக்கள் இரண்டாம் தொகுதியில் உள்ளடக்கப்பட்டுள்ளன. தேர்தல் தொடர்பாக ஆராயும் ஒருவருக்கு இவ்வறிக்கை பயனுள்ளதாக அமையுமென்பது எனது நம்பிக்கையாகும். எதிர்வரும் உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்கள் 2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்ட உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்திற்கமைய தொகுதிவாரி முறை மற்றும் விகிதாசார பிரதிநிதித்துவ முறை ஆகிய இரண்டு முறைகளும் கலந்த ஒரு கலப்புத் தேர்தலாக நடாத்தப்படவுள்ளதால், நேரடியாக இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை உள்ளூர் அதிகார சபைத் தேர்தலுக்காகப் பயன்படுத்திக் கொள்ள முடியாதெனினும், இதில் காட்டப்பட்டுள்ள அவதானிப்புக்கள் மற்றும் பரிந்துரைகளினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக வாக்குரிமை மற்றும் தேர்தல் தொடர்பான பாராளுமன்றத் தெரிவுக்குழு மற்றும் இது தொடர்பில் ஆர்வம் காட்டும் ஆட்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்படுமென எதிர்பார்க்கின்றேன்.

மஹிந்த தேசப்பிரிய
தேர்தல்கள் ஆணையாளர்
தேர்தல்கள் செயலகம், சரண மாவத்தை, இராஜகிரிய.
2014.12.31

◇◇◇◇◇◇

2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்தின் மூலம் உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தை (262 ஆம் அதிகாரம்) திருத்தம் செய்தல்

பொழிப்புக் குறிப்புக்கள்

01. 2012 நவம்பர் மாதம் 15 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட இத்திருத்தச் சட்டத்தின் மூலம் வட்டார அடிப்படையில் தேர்தலை நடாத்துவதும் தொகுதி மற்றும் விகிதாசார அடிப்படையில் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல் தொடர்பில் தேவையான சட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அதற்கமைய எதிர்வரும் உள்ளூர் அதிகார சபைத் தேர்தலை இத்திருத்தங்களுக்குட்பட்டதாக மேற்கொள்ள வேண்டியுள்ளது.

02. வட்டார அடிப்படையில் தேர்தலொன்றை நடாத்துவதற்காக ஒவ்வொரு உள்ளூர் அதிகார சபையினதும் அதிகார பிரதேசங்களைக் குறித்த வட்டாரங்களாக வேறு பிரித்தொதுக்க வேண்டியுள்ளதோடு, வேறு பிரிக்க வேண்டிய வட்டாரங்களின் எண்ணிக்கை விடயப் பொறுப்பு அமைச்சரினால் தீர்மானிக்கப்படுகின்ற வட்டார எல்லை நிருணய தேசிய குழு மற்றும் மாவட்ட எல்லை நிருணயக் குழு என்பவற்றால் மேற்கொள்ளப்படும். மாவட்டக் குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகள் தேசியக் குழுவினால் கருத்திலெடுக்கப்பட வேண்டிய அளவீடுகளுக்கு இசைவானவையாவென ஆராய்ந்து தேசிய குழு அமைச்சருக்குச் சமர்ப்பிப்பதோடு, அமைச்சர் அப்பரிந்துரைகள் தொடர்பான அறிக்கையொன்றை சனாதிபதிக்குச் சமர்ப்பிப்பார்.

03. அதற்கமைய ஒவ்வோர் உள்ளூர் அதிகார சபைக்குமென வேறு பிரித்தொதுக்க வேண்டிய வட்டாரங்களின் எண்ணிக்கை, அவ்வட்டாரங்களின் எல்லைகள், பெயர்கள், இலக்கங்கள் என்பன வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் உத்தரவொன்றின் மூலம் பிரகடனப்படுத்தப்படல் வேண்டும். இருப்பினும், திருத்தச் சட்டத்தின் 3ஈ(1) பிரிவிற்கமைய சனாதிபதி அவர்களால் வெளிப்படுத்தப்படும் அவ்வட்டார எல்லைகள் விடயப் பொறுப்பு அமைச்சரினால் நியமனம் செய்யப்படுகின்ற குழுவொன்றின் மூலம் மீள் திருத்தம் செய்யப்படுவதற்கும் அப்புதிய எல்லைகள், பெயர்கள், இலக்கங்கள் அல்லது எழுத்துக்கள் என்பன அமைச்சர் வர்த்தமானியில் பிரசுரிப்பதனூடாக நடைமுறைப்படுத்துவதற்கான அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மாவட்டக் குழு, தேசியக் குழு மற்றும் சனாதிபதி ஆகியோரை மேவிச் செல்வதற்கான அதிகாரம் விடயப் பொறுப்பு அமைச்சருக்கு வழங்கப்பட்டிருப்பது பொருத்தமானதாவென்பது மீள கருத்திலெடுக்கப்பட வேண்டிய ஒரு நிலையாகும்.

04. இம்மாற்றம் மேற்கொள்ளப்பட்டதையடுத்து இக்கட்டளைச் சட்டத்தின் கீழ் நடாத்தப்படுகின்ற தேர்தலொன்று தொடர்பில் அம்மாற்றங்கள் வலுவாக்கம் பெற வேண்டுமென 3ஈ(2)(1) ஆம் உப பிரிவில் காட்டப்பட்டிருப்பதும் 9 ஆம் பிரிவிற்கமைய அந்நிருவாக எல்லைகள் மாற்றப்பட்ட உள்ளூர் அதிகார சபைகள் அல்லது வட்டாரங்களோடு தொடர்புடைய 12 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் தேவையான மாற்றங்கள் சகிதம் உட்சேர்க்கப்படல் வேண்டும். அதற்கமைய தேருநர் இடாப்பு, வாக்கெடுப்பு மாவட்டங்களை வேறு பிரித்தல், வாக்கெடுப்பு நிலையங்களைத் தீர்மானித்தல் என்பனவும் திருத்தம் செய்யப்பட வேண்டியுள்ளது. தேர்தலொன்றுக்காக மேற்கொள்ளப்படுகின்ற பூர்வாங்க ஒழுங்கமைப்புப் பணிகளின் போது இவ்வாறு மேற்கொள்ளப்படும் அவசர திருத்தங்களின் அடிப்படையில் தேருநர் இடாப்பைத் தயாரித்தல், வாக்கெடுப்பு மாவட்டம், வாக்கெடுப்பு நிலையம் என்பவற்றை மாற்றம் செய்தல் என்பன சிரமமாகும்.

தேருநர் இடாப்பு

05. திருத்தச் சட்டத்திற்கமைய தேர்தல் பிரதேசம் என வரையறுக்கப்பட்டிருப்பது உள்ளூர் அதிகார சபை நிறுவனங்களின் எல்லைப் பிரதேசம் என்பதால், ஒவ்வொரு வட்டாரத்திற்கமைய தேருநர் இடாப்பை அத்தாட்சிப்படுத்துவது அவசியமற்றது. அதற்கமைய 10–19 ஆம் பிரிவுகளை உட்சேர்க்க வேண்டுமாவென்பது மீண்டும் கருத்திலெடுக்கப்படல் வேண்டும்.

வேட்புமனுக்கள்

06. வேட்புமனு தயாரிப்பின் போது ஒவ்வோர் உள்ளூர் அதிகார சபை நிறுவனத்திற்காகவும் ஒரு வேட்புமனுப் படிவம் வீதம் தயாரிக்கப்பட வேண்டுமென்பதோடு, ஒவ்வொரு வட்டாரத்திற்காகவும் உத்தேச வேட்பாளர்களின் பெயர்கள், இலக்கம் ஒன்றிலிருந்து தொடரொழுங்கில் காட்டப்படுகின்ற வட்டார இலக்கங்களில் உரிய வட்டார இலக்கத்திற்கெதிரில் குறிப்பிடப்படல் வேண்டும்.

07. அதன் பின்னர் வட்டாரங்களுக்கமைய தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையில் 30% ற்குச் சமமான மேலதிக ஆட்களின் பெயர்களையும் உட்சேர்த்தல் வேண்டும். இந்த 30% ஐ உள்ளடக்க உள்ளடக்கிய தொகை பூரண எண்ணாகவிருத்தல் வேண்டும். ஒவ்வோர் உள்ளூர் அதிகார சபைக்காகவும் பெயர் குறித்து நியமனம் செய்யப்பட வேண்டிய மேலதிக ஆட்களின் பெயர்களின் எண்ணிக்கை தேர்தல்கள் ஆணையாளரினால் வெளியிடப்படும் வர்த்தமானி அறிவித்தலொன்றின் மூலம் விதிக்கப்பட வேண்டுமென சட்டத் திருத்தமொன்றை மேற்கொள்வது உசிதமாகும். அவ்வாறின்றேல், மேலதிக வேட்பாளர் எண்ணிக்கையின் முரண்பாடுகள் காரணமாக வேட்புமனுக் கையேற்றல் சந்தர்ப்பம் சிக்கல் மிக்கதாக அமையக் கூடும்.

இளம் வேட்பாளர்களின் எண்ணிக்கை

08. 1990 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் (திருத்தச்) சட்டத்தின் மூலம் பெயர் குறித்து நியமனம் செய்யப்பட வேண்டிய வேட்பாளர் எண்ணிக்கையில் 40% இளம்

வேட்பாளர்களை உட்சேர்ப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. அவ்வாறு உட்சேர்க்கப்படாமை வேட்புமனுப் பத்திரம் நிராகரிக்கப்படுவதற்குக் கூட காரணமொன்றாக அமையும். இருப்பினும், இத்திருத்தச் சட்டத்தின் மூலம் வேட்புமனுப் படிவத்தில் உட்சேர்க்கப்பட்டுள்ள பெயர்களில் 25% பெண்கள் மற்றும் இளைஞர்களை உள்ளடக்கியதாகவிருக்க முடியுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறில்லாமை வேட்புமனுப் பத்திரம் நிராகரிக்கப்படுவதற்குக் காரணமொன்றாக்கப்படவில்லை. வேட்புமனுப் படிவத்தில் பெயர்களை உட்சேர்த்தல் வட்டார அடிப்படையில் மேற்கொள்ளப்படுவதால், விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறையைப் போன்று இளைஞர்கள் மற்றும் பெண்கள் வேட்பாளர் எண்ணிக்கை 25% உட்சேர்ப்பது சற்று சிக்கலான விடயமாகும்.

09. எவ்வாறிருப்பினும், இது தொடர்பாக மீண்டும் கருத்திலெடுக்க வேண்டுமென்பதோடு, மேலதிக ஆட்களாக வேட்புமனுப் பத்திரத்தில் உட்சேர்க்கப்பட வேண்டிய 30% இளைஞர்கள் மற்றும் பெண்களை பிரதிநிதித்துவத்திற்காகக் குறித்தொதுக்கி வைத்துக் கொள்வது உசிதமென முன்மொழிகின்றேன். இருப்பினும், இளைஞர்கள் மற்றும் பெண்கள் ஆகிய இரு தரப்புக்களுக்காகவும் இருப்பது 30% என்பதால், ஒவ்வோர் உள்ளூர் அதிகார சபைக்காகவும் பெயர் குறிக்க வேண்டிய மேலதிக ஆட்களின் எண்ணிக்கையை காட்டும் வர்த்தமானி அறிவித்தலில் பெண்கள் மற்றும் இளைஞர்கள் உட்சேர்க்கப்பட வேண்டிய எண்ணிக்கைகளைக் குறிப்பிடுவது கட்டாயமாகும்.

அஞ்சல் வாக்குகள்

10. தொகுதிவாரி முறையின் கீழ் உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்கள் நடாத்தப்பட்ட காலப்பகுதியில் ஒரே நாளில் வாக்கெடுப்பு நடாத்தப்பட்டிருப்பது நிருவாக மாவட்டமொன்றின் ஒரு சில உள்ளூர் அதிகார சபைகளுக்கு மாத்திரமேயாகும். இருப்பினும், விகிதாசார பிரதிநிதித்துவ முறையின் ஆரம்பத்தைத் தொடர்ந்து தேசிய தேர்தல்களைப் போன்றே நாடளாவிய அடிப்படையில் இத்தேர்தலை நடாத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து அஞ்சல் வாக்களிப்பு முறை அறிமுகம் செய்யப்பட்டது. அதற்கமைய அஞ்சல் வாக்குகளுக்கான வாக்களிப்பு வாக்கெடுப்புத் தினத்திற்கு 10 நாட்களுக்கு முன்னர் ஒவ்வொரு அத்தாட்சிப்படுத்தும் அலுவலரின் அலுவலகத்திலும் மேற்கொள்ளப்பட்டதோடு, அடையாளமிடப்பட்ட வாக்குச் சீட்டுக்கள் அடங்கிய காப்புறுதிப் பக்கெற்றுக்கள் குறித்த தெரிவத்தாட்சி அலுவலருக்கு அஞ்சல் மூலம் விநியோகிக்கப்படுவதும், தெரிவத்தாட்சி அலுவலர் தமது நிருவாக மாவட்டத்திற்குரிய ஒவ்வோர் உள்ளூர் அதிகார சபைக்குமாகத் தனித்தனியான அஞ்சல் வாக்குப் பெட்டிகளில் குறித்த அஞ்சல் வாக்குச் சீட்டுக்களை உள்ளடக்கிய காப்புறுதிப் பக்கெற்றுக்கள் இடப்பட்டன. அஞ்சல் வாக்கெண்ணல் வாக்கெடுப்புத் தினம் பிற்பகலில் சாதாரண வாக்குச் சீட்டுக்கள் வாக்கெண்ணல் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர், தனியான வாக்கெண்ணல் நிலையங்களில் எண்ணப்படும். பெறுபேறுகள் தயாரிக்கப்படுகின்ற மண்டபத்தில் ஒவ்வொரு சாதாரண வாக்குச் சீட்டுக்களடங்கிய வாக்கெண்ணல் மண்டபங்களிலிருந்து வருகின்ற பெறுபேறுகளுக்கு மேலதிகமாக அஞ்சல் வாக்கெண்ணல் மண்டபங்களின் பெறுபேறுகளும் சேர்க்கப்பட்டு ஒவ்வோர் உள்ளூர் அதிகார சபையினதும் வாக்குகள் மற்றும் விருப்புக்கள் தொடர்பான பெறுபேறுகள் தயார் செய்யப்படும்.

11. இருப்பினும், மேற்குறித்த திருத்தச் சட்டத்திற்கமைய வாக்கெண்ணல் வாக்கெடுப்பு நிறைவடைந்ததன் பின்னர் வாக்கெடுப்பு நிலையத்தில் மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதோடு, அஞ்சல் வாக்கு முறை எவ்வாறு மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதும் குறிப்பிடப்படவில்லை.

12. உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்திற்கு 1987 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க திருத்தச் சட்டத்தினால் உட்சேர்க்கப்பட்ட அஞ்சல் வாக்களிப்பு தொடர்பான 39(ஆ) உப பிரிவு இத்திருத்தச் சட்டத்தினால் அகற்றப்படவில்லையாதலால், தொடர்ந்தும் அஞ்சல் வாக்கு முறையை நடைமுறைப்படுத்தல் வேண்டும். இருப்பினும், விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் கீழ் வாக்கெண்ணல் ஒரு மையப்படுத்தப்பட்டு மேற்கொள்வதும் புதிய திருத்தத்தின் கீழ் வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்கெண்ணலை மேற்கொள்வதும் கடினமான ஒரு செயலாகும். அஞ்சல் வாக்கு முறையை மேற்கொள்வதாயின், ஏற்கனவே பின்பற்றப்படுகின்ற செயலொழுங்குகளின் கீழ் வாக்குச் சீட்டு அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களுக்கு அனுப்பப்பட்டு சாதாரண வாக்கெடுப்பு நடாத்தப்படவுள்ள தினத்திற்கு ஒரு வாரத்திற்கு முன்னர் குறித்த அஞ்சல் வாக்குப் பக்கெற்றுக்களைக் குறித்த தெரிவத்தாட்சி அலுவலரிடம் வரவழைத்துக் கொள்ள வேண்டும். அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களினால் தெரிவத்தாட்சி அலுவலருக்குக் காப்புறுதிப் பக்கெற்றுக்களை அனுப்புவதற்காக பயன்படுத்தப்படுகின்ற "A" உறையில் உள்ளூர் அதிகார சபை, வட்டார இலக்கம் மற்றும் குறித்த வாக்கெடுப்பு நிலையத்தின் பெயர் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருத்தல் முக்கிய தேவைப்பாடொன்றாகும்.

13. அதற்கமைய தெரிவத்தாட்சி அலுவலர்களுக்குக் கிடைக்கப்பெறுகின்ற காப்புறுதிப் பக்கெற்றுக்கள் ஒவ்வோர் உள்ளூரதிகார சபைக்குமமைய பொறியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட அஞ்சல் வாக்குப் பெட்டியில் இடப்படல் வேண்டுமென்பதோடு, வாக்கெடுப்புக்கு 03 தினங்களுக்கு முன்னர் ஒவ்வோர் உள்ளூர் அதிகார சபை சார்பாகவும் கிடைக்கப்பெற்ற அஞ்சல் வாக்குப் பக்கெற்றுக்களை வெவ்வேறாக வாக்கெடுப்பு நிலையங்களின் அடிப்படையில் வேறு பிரித்து பட்டியல்படுத்தல் வேண்டும். வாக்கெடுப்பு நிலையங்களுக்கமைய வேறு பிரிக்க வேண்டியது சில வட்டாரங்களில் வாக்கெடுப்பு நிலையங்கள் பல உள்ளடக்கப்பட்டிருக்க முடியுமென்பதனாலாகும். பின்னர், ஒவ்வொரு வாக்கெடுப்பு நிலையத்திற்குமுரிய அஞ்சல் வாக்குப் பக்கெற்றுக்கள் விஷேட உறையொன்றில் இடப்பட்டு பொறியிடப்பட்டு வாக்கெடுப்புக்கு முந்திய தினம் வாக்குச் சீட்டுக்கள், வாக்குப் பெட்டிகள் உள்ளிட்ட வாக்கெடுப்பு நிலைய பொருட்களாதியவை விநியோகிக்கப்படும் சந்தர்ப்பத்தின் போது குறித்த வாக்கெடுப்பு நிலையத்திற்குரிய அஞ்சல் வாக்குப் பக்கெற்றுக்களுடன் கூடிய விஷேட உறையும் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரிடம் கையளிக்கப்படல் வேண்டும்.

14. இருப்பினும், இச்செயன்முறையை பின்பற்றும் போது வாக்குச் சீட்டுக்களின் பாதுகாப்புத் தொடர்பாக ஐயம் ஏற்படுவதை தவிர்க்க முடியாதென்பதோடு, வாக்கின் அந்தரங்க தன்மை இல்லையென்ற கருத்தொன்றும் அரசியல் பிரிவுகளிடையேயும் மற்றும் பொதுமக்களிடையேயும் ஏற்படுவதற்கு இடமுண்டு. குறிப்பாக ஒவ்வொரு

வாக்கெடுப்பு நிலையத்திற்கும் இரண்டு அல்லது மூன்று வரையான அஞ்சல் வாக்குகள் உள்ள போது அவ்வாக்காளர்களின் வாக்களிப்பின் இரகசியத் தன்மை தொடர்பான பிரச்சினைகள் எழ முடியும்.

15. அஞ்சல் வாக்கு முறைமைக்குப் பதிலாக முன்வாக்களிப்பு வழிமுறையொன்றை அறிமுகம் செய்ய முடியுமெனினும் வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்கெண்ணல் மேற்கொள்ளல் மற்றும் வாக்கெண்ணலின் நிறைவில் வாக்கெடுப்பு நிலையத்திலேயே பெறுபேறுகளை வெளியிடுதல் என்பவற்றுக்கான வழிமுறையொன்றைத் தயார் செய்து கொள்வது கடினமாகும்.

16. அதிக எண்ணிக்கையான அலுவலர்கள் தேர்தலோடு தொடர்புடைய பல்வேறுபட்ட கடமைகளில் ஈடுபடுத்தப்பட வேண்டுமென்பதால், அவ்வலுவலர்களுக்கு ஏதேனுமொரு வழியில் வாக்களிப்பதற்கான அவகாசத்தை செய்து கொடுத்தல் வேண்டும். ஆகையால், கடந்த கால அஞ்சல் வாக்களிப்பு முறை அல்லது வேறு மாற்று வழிமுறையொன்றுக்கு புறம்பாக தேர்தல்களை நடாத்துதல் சிரமமான காரியமாகும்.

வாக்கெண்ணல்

17. திருத்தச் சட்டத்தின் 39 ஆம் பிரிவின் மூலம் பிரதான கட்டளைச் சட்டத்தின் 59(ஆ) ஆம் உப பிரிவு மாற்றீடு செய்யப்பட்டுள்ளது. அதற்கமைய ஒவ்வொரு வாக்கெடுப்பு நிலையத்தின் வாக்கெடுப்பும் நிறைவடைந்ததன் பின்னர், வாக்கெண்ணல் வாக்கெடுப்பு நிலையத்திலேயே மேற்கொள்ளப்படல் வேண்டும். வாக்கெடுப்பு நிலையத்தின் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர் வாக்கெண்ணல் அலுவலராக செயற்படல் வேண்டுமென்பதோடு, வாக்கெடுப்பு நிலையத்தின் பணிக்குழுவினர் வாக்கெண்ணல் பணிக்குழுவினராக செயற்படுதல் வேண்டும்.

18. வாக்கெடுப்பு பி.ப 4.00 மணிக்கு நிறைவடைந்ததன் பின்னர் குறித்த எழுத்துப் பணிகளை நிறைவு செய்து வாக்கெண்ணலை ஆரம்பிக்க வேண்டுமென்பதால், வாக்கெண்ணலை ஆரம்பிக்கும் போது சுமார் பி.ப 4.15 – 4.20 அளவிலேயே ஆரம்பிக்கலாம். வாக்கெண்ணலின் போது வழமையான அடிப்படையில் வாக்குச் சீட்டு கணக்குடன் ஒப்பிட்டதன் பின்னர் போட்டியிட்ட கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களுக்கமைய வாக்குச் சீட்டுக்களைத் தெரிதல் வேண்டும். ஒவ்வொரு கட்சி சுயேச்சைக் குழுக்களின் கீழ் கிடைக்கப்பெற்றுள்ள வாக்குச் சீட்டுக்களின் எண்ணிக்கையைக் கணக்கிட்டு பெறுபேற்று ஆவணத்தைத் தயாரிப்பதற்காக ஒரு மணித்தியாலம் வரையிலான காலத்தைச் செலவிட முடியும்.

19. இருப்பினும், 59அ(4) ஆம் உட்பிரிவிற்கமைய ஏதேனும் வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்கெண்ணல் அலுவலராக எவரேனுமொருவர் நபரொருவர் செயற்படுதல் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட முகவர்கள் ஆட்சேபனை தெரிவிக்குமிடத்து, தேர்தல்கள் ஆணையாளரால், குறித்த விடயங்கள் தொடர்பில் திருப்தியடைந்ததன் பின்னர், முதலாவதாகக் குறிப்பிடப்பட்ட நபருக்குப் பதிலாக வாக்கெண்ணல் அலுவலரொருவராகச் செயற்படுவதற்காக வேறு எவரேனும் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரொருவரை நியமனம் செய்ய முடியும். இந்நிலைமை நடைமுறைச் சாத்தியமற்றது.

20. அதேபோன்று 59ஆ(1) ஆம் பிரிவிற்கமைய வாக்கெடுப்பு நடாத்தப்பட்டுக் கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் அல்லது அதன் பின்னர் வாக்கெடுப்பு நிலையத்தில் ஏற்படக் கூடிய சம்பவங்கள் அல்லது இடையூறுகளின் விளைவாக அல்லது வேறு ஏதேனும் பாதுகாப்புக் காரணங்களால் அவ்வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்கெண்ணல் மேற்கொள்ளக் கூடாதென தலைமை தாங்கும் அலுவலர் கருதுமிடத்து, வலயப் பொறுப்பு உதவித் தெரிவத்தாட்சி அலுவலருக்கு அறிவித்தல் வேண்டுமென்பதோடு, வலயப் பொறுப்பு உதவித் தெரிவத்தாட்சி அலுவலரினால் புதிய இடமொன்று தீர்மானிக்கப்படல் வேண்டும். அவ்விடம் தொடர்பாகவும் வாக்கெண்ணல் ஆரம்பிக்கப்படவுள்ள நேரம் தொடர்பாகவும் அந்நிலையத்தின் வாக்கெண்ணல் முகவர்களை அறிவுறுத்தல் வேண்டும்.

21. இச்செயன்முறைகளைப் பின்பற்றுவது நடைமுறைச் சிக்கல் மிக்கதாகும். வலயப் பொறுப்பு உதவித் தெரிவத்தாட்சி அலுவலரை வரவழைத்துக் கொள்ளல் பொருத்தமான இடமொன்றைத் தீர்மானித்தல் வாக்குப் பெட்டிகள் மற்றும் அலுவலர்களை அவ்விடத்திற்குக் கொண்டு செல்வதற்கான போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொள்ளல், வாக்கெண்ணல் நிலையத்திற்குத் தேவையான வெளிச்சத்தைப் பெற்றுக் கொள்ளல் என்பன போன்ற பல்வேறு பிரச்சினைகளுக்கு சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர் முகங்கொடுக்க வேண்டியேற்படும்.

22. வட்டாரங்களை வேறு பிரித்தொதுக்கும் போது வாக்கெடுப்புமாவட்டங்கள் மற்றும் கிராம அலுவலர் பிரிவுகள் ஆகிய இரண்டு அளவீடுகளும் கருத்தில் கொள்ளப்படுவதோடு, கிராம மட்டத்திலான நிருவாகப் பிரிவான கிராம அலுவலர் பிரிவுகளை மையப்படுத்திக் கொள்வது அபிவிருத்திப் பணிகளுக்கு மிகவும் உசிதமாகும். அதற்கமைய வட்டாரமொன்றில் ஒன்றுக்கு மேற்பட்ட வாக்கெடுப்பு நிலையங்கள் காணப்படும் சந்தர்ப்பங்களை அதிகமாகக் காண முடியும். அதற்கமைய ஒவ்வொரு வாக்கெடுப்பு நிலையத்திலும் வாக்கெண்ணல் மேற்கொள்ளப்பட்டு வட்டார அடிப்படையில் பெறுபேறுகளைத் தயாரிப்பதற்காக வட்டாரத்தினுள் ஏதேனும் இடமொன்றிற்கு வருகைதர வேண்டியேற்படும். அதற்கு இரண்டு வாக்கெடுப்பு நிலையங்களுக்கிடையில் மிகவும் வசதிகளைக் கொண்ட நிலையமொன்றைத் தெரிவு செய்து கொள்ள முடியும். அவ்வாறான நிலைமையொன்று தொடர்பாக திருத்தச் சட்டத்தில் குறிப்பிடப்படவில்லை.

23. வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்கெண்ணல் தற்போதுள்ள அரசியல் கலாச்சாரத்திற்கமைய எவ்வளவு தூரம் பாதுகாப்பானதென்பதை விஷேடமாக ஆராய்ந்து பார்த்தல் வேண்டும். வாக்கெடுப்பு நிலையம் வாக்கெண்ணல் நிலையமொன்றென்பதால், வாக்கெடுப்பு நிலையத்திற்கு வழங்கப்பட்ட பாதுகாப்பை விட கூடுதலான பாதுகாப்புவாக்கெண்ணல்நிலையங்களுக்கு வழங்குவதுசிரமமாகவிருக்கும். அதற்கு மேலதிகமாக மேற்குறித்தவாறு வாக்கெண்ணலை

வேறு அலுவலரொருவருக்குக் கையளித்தல், வாக்கெண்ணல் நிலையத்தை மாற்றிக் கொள்ளல் போன்ற பணிகளை வாக்கெண்ணல் நிறைவடைந்து வாக்கெண்ணல் ஆரம்பிக்கப்படுவதற்கிடையில் ஆற்ற வேண்டியமையால், சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர் பல்வேறு சிக்கல்களுக்கு முகங்கொடுக்க நேரிடும். இவ்வாறான நிலைமைகள் மாவட்டமெங்கிலுமுள்ள பல்வேறு வாக்கெடுப்பு நிலையங்களில் இடம்பெற முடியுமென்பதால், பாதுகாப்பு வழங்குதல் தொடர்பில் சிக்கலான நிலைமையொன்று ஏற்பட முடியும். மறுபுறத்தில் வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்கெண்ணலை நிறைவு செய்யப்பட்டு பெறுபேறுகள் வெளியிடப்பட்ட போதிலும் அடுத்த நடவடிக்கையாக அதாவது விகிதாசார அடிப்படையிலான உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான தெரிவுகள் தெரிவத்தாட்சி அலுவலரின் அலுவலகத்தில் அல்லது உள்ளூர் அதிகார சபைப் பிரதேசத்தின் மத்திய இடமொன்றில் மேற்கொள்ளப்படல் வேண்டும். அதற்கமைய வாக்கெண்ணல் ஒவ்வொரு உள்ளூர் அதிகார சபை அதிகார எல்லையினுள் அமையப் பெற்றுள்ள மிகவும் வசதிகளுடன் கூடிய இடமொன்றில் மேற்கொள்வதற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்து கொடுப்பது மிகவும் பொருத்தமாகும்.

24. வாக்கெடுப்பு நிலைய பணியாட் குழுவினருக்குப் போக்குவரத்து வசதிகளைச் செய்து கொடுக்கப்படுவதில்லையென்பதாலும், சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்களின் போக்குவரத்துக்கு அதிகமாக மத்திய போக்குவரத்துச் சபையின் பஸ் வண்டிகளும் மற்றும் தனியார் பஸ் வண்டிகளும் ஈடுபடுத்தப்படுவதாலும், வாக்கெடுப்பு நிலையங்களின் வாக்கெண்ணல் வெவ்வேறு காலப்பகுதிகளில் நிறைவடைவதாலும், மேற்குறித்தவாறு போக்குவரத்து வசதிகளைச் செய்து கொடுப்பது சிரமமாகவுள்ளது.

25. அதேபோன்று வாக்கெடுப்புக்காக வாக்கெடுப்பு நிலைய அலுவலர்களை நியமனம் செய்யும் போது பெண்களை தமது வாக்குப் பதிவு செய்யப்பட்டுள்ள வாக்கெடுப்பு நிலையம் தவிர்ந்த மிகக் கிட்டிய வாக்கெடுப்பு நிலையமொன்றிற்கு நியமனம் செய்ய வேண்டியிருப்பதாலும், வாக்கெடுப்பு நிலையங்களுக்கு நியமனம் செய்யப்படுகின்ற அலுவலர்களில் அதிக எண்ணிக்கையானோர் பெண்கள் என்பதாலும், வாக்கெடுப்பை மேற்கொண்ட அலுவலர்களை வாக்கெண்ணலுக்காக ஈடுபடுத்திக் கொள்வதில் பல்வேறு கருத்து வேறுபாடுகள் ஏற்பட முடியும். அது அவ்வளவு தூரம் பொருத்தமானதல்லவென்பது எனது கருத்தாகும்.

பெறுபேறுகளை வெளியிடுதல்

26. வட்டாரத்தின் வாக்குகளின் எண்ணிக்கையில் அதிகூடிய வாக்குகளைப் பெற்றுக் கொண்ட அங்கீகரிக்கப்பட்ட கட்சியின் அல்லது சுயேச்சைக் குழுவின் வேட்பாளரின் பெயர் அவ்வட்டாரத்திற்காகத் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினரென வெளிப்படுத்தப்பட வேண்டுமென்பதோடு, ஒவ்வொரு கட்சி மற்றும் சுயேச்சைக் குழுவின் கீழ் போட்டியிட்ட ஏனைய வேட்பாளர்கள் பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கையையும் வெளியிடுதல் வேண்டும். இவ்வட்டாரத்தில் காணப்படுவது ஒரு வாக்கெடுப்பு நிலையமெனில், அவ்வாக்கெடுப்பு நிலையத்தில் அல்லது வட்டாரத்திற்காகத் தெரிவு செய்யப்பட்ட நிலையத்தில் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

27. பல் உறுப்பினர் வட்டாரமொன்றில் ஆகக்கூடிய வாக்குகளைப் பெற்றுக் கொண்ட கட்சியின் வேட்பாளர்கள் முதலாம் மற்றும் இரண்டாம் உறுப்பினர்களாக நியமனம் செய்யப்படல் வேண்டுமென சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. போட்டியற்ற தேர்தலொன்றின் பல் உறுப்பினர் வட்டாரமொன்றிற்காக உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் போது குறித்த வட்டாரத்திற்கு பெயர் குறிக்கப்பட்டுள்ள வேட்பாளர்கள் முறையே முதலாம், இரண்டாம் உறுப்பினர்களாக நியமனம் செய்யப்படல் வேண்டும்.

விகிதாசார ரீதியாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்கள்

28. அவ்வுறுப்பினர் பதவிகளுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்கள் பெயர் குறித்த நியமனப் பத்திரத்தில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் வட்டாரமொன்றைப் பிரதிநிதித்துவப்படுத்தாத மேலதிக ஆட்களின் பெயர்ப்பட்டியலிலிருந்தேயாகும். இத்தெரிவை மேற்கொள்ளும் போது பின்பற்றியொழுக வேண்டிய வழிமுறை சற்று சிக்கல் நிறைந்ததாகும். அதற்காக கீழே காட்டப்பட்டுள்ள வழிமுறைகளைப் பின்பற்றுதல் வேண்டும்.

முதலாம் கட்டம்

தோல்வியடைந்த வேட்பாளர் பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கையை எண்ணுதல்

I. முதலாவது குறித்த உள்ளூர் அதிகார சபைக்காக கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் கீழ் போட்டியிட்ட அனைத்து வேட்பாளர்களும் பெற்றுக் கொண்ட மொத்த வாக்குகளை எண்ணுதல்.

II. பின்னர், அந்த மொத்த வாக்குகளின் எண்ணிக்கையில் ஒவ்வொரு வட்டாரத்திற்காகவும் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து வேட்பாளர்களும் பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கை மற்றும் அவ்வொவ்வொரு வட்டாரத்தினுள்ளும் அளிக்கப்பட்ட செல்லுபடியான வாக்குகளின் எண்ணிக்கையில் 1/20 ஐ விட குறைவாக வாக்குகளைப் பெற்றுக் கொண்ட வேட்பாளர்கள் பெற்றுக் கொண்டுள்ள வாக்குகளின் எண்ணிக்கையைக் கழித்தல்.

III. அதன் மூலம் போட்டியிட்டு தேர்ந்தெடுக்கப்படாத இருப்பினும், 1/20 ஐ விட அதிக வாக்குகளைப் பெற்றுக் கொண்ட வேட்பாளர்கள் என சட்டத்தில் குறிப்பிடப்படும் தோல்வியடைந்த வேட்பாளர்கள் பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கையைக் கணக்கிடல். இரண்டாம் கட்டம் விகிதாசார அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையைத் தீர்மானித்தல்.

இரண்டாம் கட்டம்

விகிதாசார அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையை தீர்மானித்தல்

I. அவ்வுள்ளூர் அதிகார சபையின் ஒவ்வொரு வட்டாரத்தின் கீழும் போட்டியிட்டு வட்டாரத்தில் அளிக்கப்பட்ட செல்லுபடியான வாக்குகளின் எண்ணிக்கையில் 1/20 ஐ விட அதிகமான வாக்குகளைப் பெற்றுக் கொண்ட போதிலும் உறுப்பினர் பதவி

2. பிரதியாக்கம் செய்யும்போதோ அச்சடிக்கும்போதோ ஏற்பட்ட தவறுகள் காரணமாக எவரேனுமொரு வாக்காளரின் உத்தியோக பூர்வ வாக்காளர் அட்டையிலும் தேருநர் இடாப்பிலும் வாக்காளரின் பெயரிலோ அல்லது அடையாள அட்டை இலக்கத்திலோ மாற்றங்கள் காணப்படும் சந்தர்ப்பத்திலாயினும் வாக்கெடுப்பு நிலையத்தில் ஆளடையாளத்தை நிரூபித்து விட்டு வாக்குச் சீட்டொன்றைப் பெற்றுக்கொள்ள முடியும்.தேவைப்படுமாயின் மாத்திரம் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர் வாக்குச் சீட்டை விநியோகிக்க முன்னர் வாக்காளரிடம் வெளிப்படுத்துகையொன்றிற்கு கையொப்பத்தைப் பெற்றுக்கொள்வார்.

3. வாக்கெடுப்பு நிலையத்தில் செல்லுபடியான அடையாள அட்டைகளாக கீழ்க்காணும் ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

1. தேசிய அடையாள அட்டை
2. செல்லுபடியான கடவுச் சீட்டு
3. செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம்
4. அரச சேவை ஓய்வூதிய அடையாள அட்டை
5. முதியோர் அடையாள அட்டை
6. ஆட்கள் பதிவுத் திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்டுள்ள மதகுருமார்களுக்கான அடையாள அட்டை
7. கடந்தகால தேர்தல்களின்போது தேர்தல்கள் திணைக்களத்தினாலும் ஆட்கள் பதிவுத் திணைக்களத்தினாலும் விநியோகிக்கப்பட்ட தற்காலிக அடையாள அட்டைகள் (கிராம அலுவலர்களினால் மீளவும் செல்லுபடியாக்கப்பட்ட)
8. தேர்தல்கள் திணைக்களத்தினால் இந்த தேர்தலுக்காக விநியோகிக்கப்பட்ட தற்காலிக அடையாள அட்டைகள்

04. அரசாங்க அலுவலகங்களினால், அரசாங்க கூட்டுத்தாபனங்களினால், நியதிச்சட்ட சபைகளினால் மற்றும் அரச வங்கிகளினால் அவ்வலுவலர்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ள அலுவலக அடையாள அட்டைகளோ தேசிய அடையாள அட்டைகளுக்கு விண்ணப்பிக்கின்றபோது கிராம அலுவலர்களினால் விநியோகிக்கப்படுகின்ற பற்றுச் சீட்டோ வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்காளரின் ஆளடையாளத்தை நிரூபிப்பதற்கான செல்லுபடியான அடையாள அட்டையொன்றல்லவென்பதை விஷேசமாக அறிவிக்கப்படுகின்றது.

தேர்தல்கள் செயலகம்
சரண மாவத்தை
இராஜகிரிய
2011.07.22

மஹிந்த தேசப்பிரிய
தேர்தல்கள் ஆணையாளர்

இதன் பிரதியொன்றை சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரின் கோவையில் சேர்க்கவும்.

ஊடக அறிவித்தல் – இல 11

உள்ளூரதிகார சபைத் தேர்தல் – 2011 (2ஆம் கட்டம்)
கிளிநொச்சி மாவட்டத்தின் அனைத்து உள்ளூர் அதிகார சபைகள் மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேச சபை அதிகார எல்லைப் பிரதேசங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள வாக்காளர்களின் கவனத்திற்கு வாக்கெடுப்பு நிலையத்தில் ஆளடையாளத்தை நிரூபித்தல்

கிளிநொச்சி மாவட்டத்தின் மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேச சபை அதிகார எல்லைப் பிரதேசங்களின் வாக்காளர்களுக்காக இடம்பெயர்ந்தவர்களை பதிவு செய்யும் திட்டத்தின் கீழ் பொலிஸ் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள தற்காலிக ஆளடையாள அட்டையையும் வாக்கெடுப்பு நிலையத்தில் ஏற்றுக்கொள்ளக்கூடிய செல்லுபடியான ஆளடையாள அட்டையான்றாக அங்கீகரிக்க வேண்டுமென்ற முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

02. அதற்கிணங்க தங்களிடம் வேறு ஏதேனுமொரு ஆளடையாள அட்டை இல்லாதவிடத்து பொலிஸ் திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்டுள்ள மேற்கூறப்பட்ட அடையாள அட்டையை வாக்கெடுப்பு நிலையத்திற்கு எடுத்துச் செல்லும்படி அறிவிக்கின்றேன்.

03. அந்த அடையாள அட்டையை தாங்கள் வதியும் பிரிவின் கிராம அலுவலரிடம் சமர்ப்பித்து 2010 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பிற்கிணங்க தங்கள் பெயருக்கான தொடர் இலக்கத்தையும் தாங்கள் வாக்காளரொருவராகப் பதிவு செய்யப்பட்டுள்ள வாக்கெடுப்பு மாவட்டத்தின் இலக்கத்தையும் குறித்தெடுத்துக் கொண்டு வாக்கெடுப்பு நிலையத்திற்குச் செல்வீர்களாயின் வாக்கெடுப்பு நிலையத்தில் ஏற்படக்கூடிய தாமதத்தைத் தவிர்த்துக் கொள்ள முடியும்.

04. தாங்கள் குறிப்பிட்ட உள்ளூர் அதிகார சபைப் பிரதேசத்திற்கான 2010 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பில் பதிவு செய்யப்பட்ட வாக்காளரொருவராகவிருந்தால், உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டையொன்றில்லாதவிடத்தும் செல்லுபடியான ஆளடையாள அட்டையொன்றின் மூலம் உங்களது ஆளடையாளத்தை நிரூபித்துவிட்டு உங்களுக்கான வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்குச் சீட்டொனறைப் பெற்றுக்கொள்ள முடியும்.

மஹிந்த தேசப்பிரிய
தேர்தல்கள் ஆணையாளர்

தேர்தல்கள் செயலகம்
சரண மாவத்தை
இராஜகிரிய
2011.07.23

ஊடக அறிவித்தல் – இல 16

உள்ளூராதிகார சபைத் தேர்தல் – 2011 (1ஆம் கட்டம்)
66 உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்களைப் பிற்போடல் தொடர்பாக பொதுமக்களை அறிவூட்டுவதற்கான அறிவித்தல்

2017.03.17 ஆந் திகதி நடாத்தபடவிருக்கும் தேர்தலுக்காக 2047 வேட்புமனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததோடு அவற்றில் 452 வேட்புமனுக்கள் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 262) ஏற்பாடுகளுக்கு இணங்க காணப்படாமையால் நிராகரிக்கப்பட்டன.

இவ்வாறு நிராகரிக்கப்பட்ட வேட்புமனுக்களுள் 64 உள்ளூர் அதிகார சபைகளுக்கான வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டமைக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இம்மனுக்கள் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு வருவதோடு அக்மீமன, அக்குரெஸ்ஸ மற்றும் மொனராகலை ஆகிய மூன்று பிரதேச சபைகளுக்கும் தேர்தலோடு தொடர்புடைய முன்நடவடிக்கைகளை இடைநிறுத்துமாறு 2011.02.18 ஆந் திகதி இடைக்கால தடையுத்தரவொன்றை மேன்முறையீட்டு நீதிமன்றம் பிறப்பித்து வெளியிடப்பட்டுள்ளது. ஆகவே இந்த பிரதேச சபைகளுக்காக தேர்தலுடன் தொடர்புடைய எந்தவிதமான முன்நடவடிக்கையை மேற்கொள்ள முடியாதுள்ளது.

இது இவ்வாறிருக்க அஞ்சல் வாக்குச் சீட்டுக்களை விநியோகிக்கும் நடவடிக்கைகள் 2011 பெப்ரவரி மாதம் 25 ஆந் திகதி இடம்பெறவுள்ளதோடு அஞ்சல் வாக்குகளை அடையாளமிடல் மார்ச் மாதம் 08 ஆம் 09 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளன. பெப்ரவரி மாதம் 25 ஆந் திகதி அஞ்சல் வாக்குச் சீட்டுக்கள் விநியோகிக்கப்படாவிட்டால் உரியவாறு பகிர்ந்தளிப்பு நடவடிக்கைகள் தடைப்பட்டு குறிப்பிட்ட தினத்தில் அடையாளமிட முடியாமற் போய்விடுவதோடு மார்ச் மாதம் 17 ஆந் திகதிக்கு முன்னதாக அவற்றை திரும்பப் பெற்றுக்கொள்வதும் சிரமமாகும். மார்ச் மாதம் 01 ஆந் திகதி உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை அஞ்சலுக்குக் கையளித்து வாக்காளர்களுக்கு விநியோகிக்கும் நடவடிக்கைகளும் ஏககாலத்தில் இடம்பெற வேண்டுமாதலால் அஞ்சல் வாக்குகள் விநியோகத்தைப் பிற்போடுவதும் சாத்தியமான காரியமல்ல. ஆகவே நிகழ்கால சூழ்நிலைக்கிணங்க தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கும் தேர்தல்கள் திணைக்களத்திற்கும் குறிப்பிட்ட சபைகளின் வாக்கெடுப்புக்களை பிற்போடுவதைத் தவிர வேறு மாற்றுவழிகள் கிடையாது.

2006 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட உள்ளூர் அதிகார சபைகள் தேர்தலின் போது கொபெய்னே பிரதேச சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட வேட்புமனுவொன்று நிராகரிக்கப்பட்டமைக்கு CA/365/2006 ஆம் இலக்க மனுவும் வேறு சில சபைகளுக்காக இன்னும் சில மனுக்களும் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் வாக்கெடுப்பிற்கான முன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதோடு வாக்குச் சீட்டுக்களும் அச்சிடப்பட்டு அஞ்சல் வாக்குச் சீட்டுக்களும் விநியோகிக்கப்பட்டன. அதன் பின்னர் நீதிமன்றம் அந்த நிறுவனங்களுக்கான வாக்கெடுப்பை நடாத்துவதற்கான இடைக்காலத் தடையுத்தரவொன்றை பிறப்பித்தபோது அஞ்சல் வாக்குச் சீட்டுக்களின் விநியோகம் முடிவு பெற்றுள்ளதென நீதிமன்றத்திற்கு அறிவித்தபோதிலும் வாக்கெடுப்புடன் தொடர்புடைய பணிகள் இடைநிறுத்தப்பட்டதன் காரணமாக விநியோகிக்கப்பட்ட வாக்குச் சீட்டுப் பக்கெற்றுக்களை அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களிடமிருந்து திரும்பத் தருவித்துக்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது. 64 உள்ளூர் அதிகார சபைகள் சார்பாக நீதிமன்ற உத்தரவு கிடைக்கும் வரை வாக்கெடுப்பை ஒத்திவைக்கும் தீர்மானம் எடுக்கப்படாவிடின் நிச்சயமற்ற பாரியசெயலொன்றை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்படும். வாக்குச் சீட்டுக்களைத் திரும்ப தருவிப்பதால் பெருந்தொகையான உழைப்பு வீணடிக்கப்படுகின்றது. அதேபோன்று விநியோகிக்கப்பட்டுள்ள அஞ்சல் வாக்குச் சீட்டுக்களை திரும்ப தருவிக்க வேண்டிவருவதால் பல்வேறு ஊழல்கள் ஏற்படச் சாத்தியமுண்டு.

இந்த 64 நிறுவனங்களின் வாக்கெடுப்பு பிற்போடப்பட்டமை மற்றும் அதற்கான மூல காரணங்கள் என்பன தொடர்பாக 2011.02.22 ஆந் திகதி இடம்பெற்ற தேர்தல் கண்காணிப்பு நிறுவனங்களின் முகவர்கள், கட்சிச் செயலாளர்கள் ஆகியோர் பங்குபற்றிய கலந்துரையாடலின்போது தெளிவு படுத்தப்பட்டது.

பெயர்குறித்த நியமனக் காலப்பகுதி முடிவடைவதற்கு முன்னர் தேர்தல்கள் ஆணையாளரினால் அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகளின் செயலாளர்களுக்கும் எழுத்துமூல அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு பெயர்குறித்த நியமனப் பத்திரங்களைத் ,தயாரித்தல், கையளித்தல் மற்றும் அதனோடு தொடர்புடைய சட்ட ஏற்பாடுகள் என்பன தொடர்பாக அறிவூட்டப்பட்டதாக 2011.02.22 ஆந் திகதி இடம்பெற்ற கலந்துரையாடலின்போது மேலும் எடுத்துக் கூறப்பட்டது. மேலும் இந்தியா உட்பட பெரும்பாலான சனநாயக நாடுகளில் தேர்தல் நடவடிக்கைகள் ஆரம்பமானதன் பின்னரை பெறுபேறுகள் வெளியிடப்படும் வரை தேர்தல் நடவடிக்கைகள் சம்பந்தமாக நீதிமன்றத்திற்கு செல்வதற்கான வாய்ப்புக் கிடையாதென்றும் அவ்வாறான நிலைமை இலங்கையில் இல்லாததன் காரணமாக நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு முகங்கொடுத்து அதன் கட்டளைகளுக்கிணங்க செயற்பட வேண்டியுள்ளனவென்றும் மேலும் தெளிவுபடுத்தப்பட்டது. அதேபோன்று இதுதொடர்பாக 2003 ஆம் ஆண்டு பாராளுமன்ற தெரிவுக் குழுவிற்கு தேர்தல்கள் கட்டளைச் சட்டத்திலும் தேர்தல்கள் சட்டங்களிலும் தேவையான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமென என்னால் சுட்டிக்காட்டப்பட்டதென்றும் கட்சிச் செயலாளர்களுக்கு அறிவிக்கப்பட்டது.

இது இவ்வாறிருக்க சில கட்சிச் செயலாளர்களும் பல அமைப்புக்களும் பகிரங்க மேடைகளிலும் பல்வேறு செய்தி ஊடகங்கள் ஊடாகவும் பெயர்குறித்த நியமனப் பத்திரங்கள் நிராகரித்தல் மற்றும் 64 உள்ளூர் அதிகார சபைகளின் தேர்தல்கள் ஒத்திவைத்தமை தொடர்பாக அடிப்படைக் காரணம் ஏதுமின்றி விமர்சனங்களை மேற்கொள்வது விசனிக்கத்தக்க ஒன்றாகும். இந் நிறுவனங்களின் தேர்தல் ஒத்தி வைக்கப்பட்டமை எந்தவொரு அரசியல் கட்சிக்கோ அல்லது சுயேச்சைக் குழுவிற்கோ சார்பாக அல்லது எதிராக செயற்படும் நோக்கத்தில் மேற்கொள்ளப்படவில்லையென்றும் தேர்தல்கள் திணைக்களம் ஒருபோதும் ஏதேனுமொரு குழுவிற்கோ அல்லது கட்சிக்கோ பக்கச் சார்பான விதத்தில் செயற்படுவதில்லையென்றும் இத்தால் வலியுறுத்திக் கூறப்படுகின்றது.

தேர்தல்கள் செயலகம்
சரண மாவத்தை
இராஜகிரிய
2011.02.26

தயானந்த திசாநாயக்க
தேர்தல்கள் ஆணையாளர்

ஊடக அறிவித்தல் – இல 18

உள்ளூரதிகார சபைத் தேர்தல் – 2011 (1ஆம் கட்டம்)

தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்ட உள்ளூரதிகார சபைகள் தொடர்பாக அஞ்சல் வாக்குச் சீட்டுக்கள் விநியோகிக்கப்படாமை தொடர்பான அறிவித்தல்

301 உள்ளூர் அதிகார சபைகள் சார்பாக 2011.01.20 ஆந் திகதி முதல் 27 ஆந் திகதி நண்பகல் 12.00 மணி வரை உரிய தெரிவத்தாட்சி அலுவலர்களினால் வேட்புமனுக்கள் கையேற்றப்பட்டதோடு, முறையாக சமர்ப்பிக்கப்படாமை காரணமாக 452 வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டன. நிராகரிக்கப்பட்ட வேட்புமனுக்கள் தொடர்பாக 64 உள்ளூரதிகார சபைகள் மற்றும் நிலக்கண்ணி வெடிகள் அகற்றப்படும் நடவடிக்கைகள் இதுவரை முற்றுப் பெறாத காரணத்தினால் மீள்குடியேற்றம் நிறைவு பெறாத 2 உள்ளூர் அதிகார சபைகள் என்ற வகையில் மொத்தம் 66 உள்ளூர் அதிகார சபைகளின் தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட வேண்டிய நிலை ஏற்ப்பட்டது. அவ்வாறு தேர்தல் ஒத்திவைக்கப்பட்ட உள்ளூரதிகார சபைகளின் பெயர்ப்பட்டியல் கீழே தரப்பட்டுள்ளது.

02. இந்த உள்ளூரதிகார சபைகளுக்கென சமர்ப்பிக்கப்பட்டிருந்த அஞ்சல் வாக்கு விண்ணப்பங்கள் சார்பாக 2011.02.25 ஆந் திகதி அஞ்சல் வாக்குச் சீட்டுக்கள் விநியோகிக்கப்படவில்லையென்பதை இத்தால் அறியத் தருகின்றேன்.

1. நீதிமன்ற செயன்முறைகள் காரணமாக தேர்தல் ஒத்திவைக்கப்பட்ட உள்ளூரதிகார சபைகள்

கொழும்பு	கடுவெல மாநகர சபை	கிளிநொச்சி	பச்சிலைப்பள்ளி பிரதேச சபை
	கெஸ்பேவ நகர சபை		கணச்சி பிரதேச சபை
	ஹோமாகம பிரதேச சபை		பூநரி பிரதேச சபை
கம்பஹா	மினுவாங்கொடை சகர சபை	அம்பாறை	காரைதீவு பிரதேச பை
	அத்தனகல்ல பிரதேச சபை		திருக்கோவில் பிரதேச சபை
களுத்தறை	அகலவத்தை பிரதேச சபை	திருகோணமலை	சேருவில் பிரசே சபை
கண்டி	ஹரிஸ்பத்துவ பிரதேச சபை		கந்தளாய் பிரதேச சபை
	அக்குரணை பிரதேச சபை		திருகோணமலை நகரமும் சூழலும் பிரதேச சபை
	யட்டிநுவர பிரதேச சபை		குச்சவெளி பிரதேச சபை
மாத்தளை	வில்கமுவ பிரதேச சபை	குருநாகல்	கிரிபாவ பிரதேச சபை
	உக்குவல பிரதேச சபை		குளியசப்பிட்டி பிரதேச சபை
	தலவாக்கல லிந்துல நகர சபை		பொல்கஹவெல பிரதேச சபை
நுவரெலியா	எல்பிட்டிய பிரதேச சபை		மாவதஹம பிரதேச சபை
	பத்தேகம பிரதேச சபை	புத்தளம்	சிலாபம் நகர சபை
காலி	அக்மீமன பிரதேச சபை		தவகத்தேகம பிரதேச சபை
மாத்தறை	அக்குரஸ்ஸ பிரதேச பை		சிலாபம் பிரதேச பை
யாழ்ப்பாணம்	வல்வெட்டித்துரை நகர சபை		வெனப்புவ பிரதேச சபை
	பருத்தித்துறை நகர சபை	அநுராதபுரம்	நுவரகம்பலாத்த மத்தி பிரதேச சபை
	சாவகச்சேரி நகர சபை		இராஜாங்களை பிரதேச சபை
	காரைநகர் பிரதேச சபை		கல்னேவ பிரதேச சபை
	ஊர்காவற்றுறை பிரசே சபை	பொலன்னறுவை	எலஹெர பிரதேச சபை
	நெடுந்தீவு பிரதேச சபை		ஹிங்குராக்கொட பிரதேச பை
	வேலணை பிரதேச சபை		வெலிகத்த பிரதேச சபை
	வலிகாமம் மேற்குப் பிரதேச சபை	மொனராகலை	சியம்பலாண்டுவ பிரதேச சபை
	வலிகாமம் வடக்கு பிரதேச சபை		மொனராகலை பிரதேச சபை
	வலிகாமம் தென் மேற்குப் பிரதேச சபை	இரத்தினபுரி	எம்பிலிபிட்டிய நகர சபை
	வலிகாமம் தெற்குப் பிரதேச சபை		இரத்தினபுரி பிரதேச சபை
	வலிகாமம் கிழக்கு பிரதேச சபை		பலாங்கொடை பிதேச சபை
	வடமராட்சி தென்தேற்குப் பிரதேச பை		வெலிகேபொல பிரதேச சபை
	பருத்தித்துரை பிரதேச சபை	டங்.இயஇ	கேகாலை நகர சபை
	சாவகச்சேரி பிரதேச சபை		ஹக்காப்பொல பிரதேச சபை
	நல்லூர் பிரதேச சபை		ருவென்வெல்ல பிரதேச சபை

2. நிலக்கண்ணி வெடிகள் அகற்றப்படல் முற்றுப்பெறாத காரணத்திகால் மீள்குடியேற்றம் நிறைவு பெறாத உள்ளூர் அதிகார சபைகள்.

முல்லைத்தீவு	புதுக்குடியிருப்பு பிரதேச சபை
	மாரிரையின் பற்று பிரதேச பை

தேர்தல்கள் செயலகம்
சரண மாவத்தை
இராஜகிரிய
2011.03.01

தயானந்த திசாநாயக்க
தேர்தல்கள் ஆணையாளர்

ஊடக அறிவித்தல் – இல 14

உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்கள் – 2011 (1ம் கட்டம)

அனைத்து வேட்பாளர்கள் மற்றும் வாக்காளர்களின் கவனத்திற்கான விஷேட அறிவித்தல்

2011.03.17 ஆந் திகதி நடைபெறவுள்ள தேர்தலுக்கான வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்ட சில அரசியற் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் அவ்வுள்ளூராட்சி சபைகளுக்காகப் போட்டியிடுகின்ற வேறு அரசியற் கட்சியொன்றின் அல்லது சுயேச்சைக்குழு ஒன்றின் வேட்பாளர்கள் சார்பாக தமது பெயர்களைக் பதிலீடு செய்து தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளமை பற்றி முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

02. போட்டியிடுகின்ற ஏதேனும் ஓர் அரசியல் கட்சியின் அல்லது ஒரு சுயேச்சைக் குழுவின் வேட்பாளர்கள் சார்பாக உரிய தேர்தல் சின்னம் மற்றும் வேட்பாளர்களின் இலக்கங்கள் என்பனவற்றின் கீழ் போட்டியிட வேறெந்தவொரு நபருக்கும் உள்ளூர் அதிகார சபைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஏற்பாடுகள் செய்யப்படவில்லையெனவும் எவரேனுமொரு வேட்பாளரின் பெயரைப் பதிலீடு செய்ய முடியாதெனவும் அனைத்து வேட்பாளர்கள் மற்றும் வாக்காளர்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

03. உள்ளூர் அதிகார சபைகள் தேர்தலொன்றில் வாக்கெடுப்பு முடிவடைந்ததன் பின்னர், போட்டியிட்ட அரசியற் கட்சிகள் அல்லது சுயேச்சைக் குழுக்கள் என்பனவற்றினால் பெற்றுக் கொள்ளப்பட்ட வாக்குகளுக்கு விகிதாசாரமாக குறித்த கட்சி அல்லது குழு உரித்தாகிக் கொண்டுள்ள உறுப்புரிமைகளின் எண்ணிக்கை அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்றுக் கொண்டுள்ள வேட்பாளர்களயிலிருந்து தேர்ந்தெடுக்கப்படும். எவரேனும் ஓர் உறுப்பினரின் மரணம், கேட்டுவிலகல் மற்றும் வேறேதேனும் காரணமொன்றினால் வெற்றிடம் ஏற்படுகின்ற போது அவ்வெற்றிடத்திற்கு தகுதியான நபரொருவராக அக்கட்சியின் அல்லது அக்குழுவின் கீழ் போட்டியிட்டு கணிசமானளவு விருப்புக்களைப் பெற்றுள்ள வேட்பாளர்களில் உரிய கட்சிச் செயலாளரினால் அல்லது சுயேச்சைக் குழுத்தலைவரினால் குறிப்பாகக் பெயர் குறிக்கப்படுகின்ற வேட்பாளரே தேர்ந்தெடுக்கப்படுவார்.

தேர்தல்கள் செயலகம்
சரண மாவத்தை
இராஜகிரிய
2011.02.18

தயானந்த திசாநாயக்க
தேர்தல்கள் ஆணையாளர்

ஊடக அறிவித்தல் – இல 19

உள்ளூராதிகார சபைத் தேர்தல் – 2011 (1ம் கட்டம)
அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் மற்றும் அஞ்சல் வாக்கு அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களுக்கான அறிவித்தல்

2011.03.17 ஆம் திகதிநடாத்தப்படவுள்ள உள்ளூர் அதிகார சபைகளின் தேர்தலுக்குரிய அஞ்சல் வாக்குச் சீட்டுக்கள் உரிய வாக்காளர்களால் அடையாளமிடப்பட்டு தபாலுக்கு கையளித்தல் 2011.03.08 ஆந் தேதி மற்றும் 09 ஆந் தேதி ஆகிய இருதினங்களில் ஒழுங்கு செய்யப்படடுள்ளது. எனவே உரிய அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்கள் கட்டாயமாக இவ்விரு தினங்களிலும் அப்பணியில் ஈடுபட வேண்டியுள்ளது. அஞ்சல் வாக்களிக்கும் பணியில் அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களுக்கு விசேட பொறுப்பும் பணியும் கையளிக்கப்பட்டுள்ளது.

02. அஞ்சல் வாக்கு அடையாமிடப்படுகின்ற அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களின் அலுவலகமொன்றிற்கு ஒரு முகவர் வீதம் நியமித்து அனுப்புமாறு உரிய தெரிவத்தாட்சி அலுவலர்களால் தேர்தலுக்காகப் போட்டியிடுகின்ற அனைத்து அரசியற் கட்சிகளின் செயலாளர்கள், சுயேச்சைக் குழுக்களின் தலைவர்கள் மற்றும் உரிய கண்காணிப்பு அமைப்புக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

03. எனவே கட்டாயமாக 2011.03.08 ஆந் தேதி இப்பணியை ஆரம்பிக்க வேண்டுமென அனைத்து அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்கள் அறிவூட்டப்பட்டுள்ளனர். 2011.03.09 ஆந் தேதியிலாயினும் வாக்குச் சீட்டுக்களை அடையாளமிடுவதற்காக அவகாசம் வழங்கப்பட்டிருப்பது ஒரு நாளில் தேர்தல் நடவடிக்கையை முடிவுறுத்த முடியாதளவில் வாக்காளர் தொகை இருப்பின் மாத்திரமேயாகும். அவ்வாறு இருக்கும்போது ஒருசில அமைச்சுக்களில் மற்றும் திணைக்களங்களில் விசேட செயலமர்வுகள்இ கருத்தரங்குகள் மற்றும் கலந்துரையாடல்களை நடாத்துவதற்காக உரிய அலுவலர்கள் இவ்விரு தினங்களில் கொழும்பிற்கு அழைக்கப்பட்டுள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

04. நாடளாவிய ரீதியில் இரு தினங்களுக்குள் இப்பணிகள் நடைபெறுவதால் மற்றும் அடையாளமிடப்பட்ட வாக்குச் சீட்டுக்கள் அடங்கிய பக்கெட்டுக்களை நாட்டின் அனைத்து மாவட்டங்களிலுமுள்ள தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு 2011.03.17 ஆந் தேதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு தபால் மூலம் அனுப்ப வேண்டியுள்ளதால் நியமிக்கப்பட்டுள்ள இரண்டு தினங்களை எவ்விதத்திலும் மாற்றுவதற்கு முடியாதெனவும், எனவே உரிய கலந்துரையாடல்கள், செயலமர்வுகள் மற்றும் கருத்தரங்குகளை நடாத்துவதற்கு வேறொரு தினத்தைக் குறித்தொதுக்கிக் கொள்ள வேண்டுமென விசேடமாகஅறிவிக்கின்றேன்.

தேர்தல்கள் செயலகம்
சரண மாவத்தை
இராஜகிரிய
2011.03.04

தயானந்த திசாநாயக்க
தேர்தல்கள் ஆணையாளர்

ஊடக அறிவித்தல் – இல 09

உள்ளூரதிகார சபைத் தேர்தல் – 2011 (2ஆம் கட்டம்)

வேட்பாளர்கள் வேறு கட்சிகளுக்கு இணைதல் மற்றும் வேட்பாளர்களின் வேட்பாண்மையைக் கேட்டு விலக்கிக் கொள்ளல்

2011 யூலை 23 ஆந் தேதி நடாத்தப்படவுள்ள மேற்குறிப்பிட்ட தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்கள் தங்களது கட்சியிலிருந்தோ குழுவிலிருந்தோ விலகி வேறு கட்சிகளுக்கு அல்லது குழுக்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதாக அல்லது போட்டியிலிருந்து விலகியதாக தயாரிக்கப்பட்ட போலியான வெளிப்படுத்துகைகள் அல்லது பயமுறுத்தி பெற்றுக்கொண்ட வெளிப்படுத்துகையைப் பிரச்சாரம் செய்யும் முயற்சி உள்ளதாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

எனவே, யாராவது வேட்பாளரொருவர் கட்சியிலிருந்து அல்லது குழுவிலிருந்து விலகி வேறு கட்சிக்கு அல்லது குழுவொன்றிற்கு ஒத்துழைப்பு வழங்குவதாக அல்லது போட்டியிலிருந்து விலகியதாக வெளியிடுகின்ற அறிவித்தலை 2011.07.22 மற்றும் 23 ஆந் தேதிகளில் ஊடகங்களூடாக பிரச்சாரம் செய்வதிலிருந்து தவிர்ந்து கொள்ளுமாறு தயவன்புடன் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

தேர்தல்கள் செயலகம்
சரண மாவத்தை
இராஜகிரிய
2011.07.21

மஹிந்த தேசப்பிரிய
தேர்தல்கள் ஆணையாளர்

ஊடக அறிவித்தல் – இல 10

உள்ளூராதிகார சபைத் தேர்தல் – 2011 (3ஆம் கட்டம்)

அனைத்து வேட்பாளர்கள் மற்றும் வாக்காளர்களின் கவனத்திற்காக விடுக்கப்படுகின்ற முக்கிய அறிவித்தல்

2011.10.08 ஆந் திகதி நடைபெறவுள்ள உள்ளுர் அதிகார சபைத் தேர்தல்களின் போது சில வேட்பாளர்களின் இலக்கங்களின் கீழ் வேறு நபர்கள் போட்டியிடுவதாகக் கூறி பிரச்சார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக எனக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. போட்டியிடுகின்ற ஏதேனும் அரசியற் கட்சியொன்றின் அல்லது சுயேச்சைக் குழுவின் வேட்பாளர்கள் சார்பாக உரிய தேர்தல் சின்னம் மற்றும் வேட்பாளர் இலக்கத்தின் கீழ் போட்டியிடுவதற்கு வேறேந்தவொரு நபருக்கும் உள்ளுர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படவில்லை எனவும் எவரேனும் வேட்பாளர் ஒருவரின் பெயரொன்று சார்பாக வேறோரு நபரின் பெயரை மாற்றீடு செய்ய முடியாதெனவும் அனைத்து வேட்பாளர்கள் மற்றும் வாக்காளர்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. உள்ளுர் அதிகார சபைகள் தேர்தலொன்றின் போது வாக்கெடுப்பு முடிவடைந்ததன் பின்னர், போட்டியிடுகின்ற அரசியற் கட்சிகள் அல்லது சுயேச்சைக் குழுக்களினால் பெறப்பட்டுள்ள வாக்குகளுக்கமைய விகிதசமமாக கட்சி அல்லது குழு உரித்தாக்கிக் கொண்டுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்றுக் கொண்டவர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்படும் எவரேனுமோர் உறுப்பினரின் மரணம், கேட்டுவிலகல் அல்லது வேறோரு காரணத்தின் ஏதுவாக உறுப்புரிமை வெற்றிடமொன்று ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தில், அவ் வெற்றிடத்திற்காக பொருத்தமான ஒரு நபர் தேர்ந்தெடுக்கப்படுவது அக்கட்சி அல்லது அக்குழுவின் கீழ் போட்டியிட்டு கணிசமான அளவு விருப்புக்களைப் பெற்றுள்ள வேட்பாளர்களில் உரிய கட்சியின் செயலாளர் அல்லது குழுத்தலைவர் குறிப்பாகக் பெயர் குறிக்கின்ற வேட்பாளரினால் மாத்திரமேயாகும். ஆதலால் தேர்தலின் போது வெற்றி பெற்ற வேட்பாளர் ஒருவர் உடனடியாகக் கேட்டுவிலகிக் கொண்டதைத் தொடர்ந்து அதற்குப் பதிலாக உடனே வேறோரு வெளிநபரை நியமிப்பதற்கு அவகாசமில்லை என்பது இத்தால் வலியுறுத்தப்படுகின்றது.

03. கேட்டுவிலகியமையினால்/ இறப்பெய்தியமையினால்/பதவியிலிருந்து அகற்றப்பட்டமையினால் ஏற்படக்கூடிய வெற்றிடங்களுக்காக வேட்புமனுப் பத்திரத்தில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து வேட்பாளர்களும் நியமனம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து, அதாவது வேட்பாளர் பட்டியல் முடிவடைந்ததன் பின்னர் மேலும் வெற்றிடங்கள் காணப்படுமாயின் மாத்திரம் தெரிவத்தாட்சி அலுவலரினால் 2007 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க உள்ளுர் அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட உள்ளுர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65(ஆ) பிரிவிற்கமைய தகைமை பெறுகின்ற ஒருவரை உறுப்பினர் ஒருவராக பெயர் குறிக்குமாறு உரிய வேட்புமனுப்பத்திரத்தை கையளித்துள்ள அரசியற் கட்சியின் செயலாளர் அல்லது சுயேச்சைக்குழுவின் குமுத்தலைவருக்கு அறிவித்ததன் பின்னர் அவரால் மேற்கொள்ளப்படுகின்ற பெயர் குறிப்பிற்கிணங்க உரிய வெற்றிடம் நிரப்பப்பட நடவடிக்கை எடுக்கப்படும்.

04. இவ்வாக்கெடுப்பின் போது போட்டியிடுகின்ற எந்தவொரு சுயேச்சைக்குழு ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட ஓர் அரசியற் கட்சியின் மாற்றுக் குழுவாகவோ அல்லது அக்கட்சியின் உண்மையான குழுவாகவோ தேர்தல் திணைக்களத்தினால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை எனவும் எந்தவொரு சுயேச்சைக்குழுவிற்கும் அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஓர் அரசியற் கட்சிக்கும் அல்லது வேட்பாளர் ஒருவருக்கும் வேறோரு சுயேச்சைக் குழுவொன்றின் அல்லது கட்சியொன்றின் வேட்பாளர் ஒருவர் சார்பாக தமது பிரச்சார அலுவலகத்தை வழங்க முடியாதெனவும் மேலும் அறிவிக்கப்படுகிறது.

தேர்தல்கள் செயலகம்
சரண மாவத்தை
இராஜகிரிய
2011.09.26

மஹிந்த தேசப்பிரிய
தேர்தல்கள் ஆணையாளர்

உள்ளூராதிகார சபைத் தேர்தல் – 2011
வாக்களித்தலும் விருப்புத் தெரிவித்தலும் பற்றிய சுருக்கமான விளக்கம்

வாக்குச்சீட்டின் மாதிரிப் படிவம்

ஆ கட்சி				இலச்சினை	
ஆ கட்சி				இலச்சினை	
இ கட்சி				இலச்சினை	
சுயேச்சைக் குழு 1				இலச்சினை	
சுயேச்சைக் குழு 2				இலச்சினை	
சுயேச்சைக் குழு 3				இலச்சினை	
1			11		
2			12		
3			13		
4			14		
5			15		
6			16		
7			17		
8			18		
9			19		
10			20		

1. இது வாக்குச்சீட்டின் மாதிரியொன்று மட்டுமே.
2. போட்டியிடும் அரசியற் கட்சிகளினதும் சுயேச்சைக் குழுக்களினதும் பெயர்கள், அவைகளின் சின்னங்களுடன் மேற்பகுதியில் காட்டப்பட்டுள்ளது. ஒவ்வொரு சின்னத்திற்கும் எதிரே வெற்றுக்கூடொன்று உள்ளது. இதில் ஏதேனுமொரு கூடொன்றில் உங்கள் வாக்கை அடையாளமிடலாம். வாக்களிக்கும் போது நீங்கள் விரும்பும் சின்னத்திற்கு எதிரேயுள்ள வெற்றுக் கூட்டில் புள்ளடி (X) யிடல் வேண்டும்.
3. வாக்குச்சீட்டின் கீழேயுள்ள பகுதியில் ஒவ்வொரு வேட்பாளருக்கும் குறித்தொதுக்கப்பட்ட தொடரிலக்கத்தை கொண்ட கூடொன்றும் அதற்கு வலப் பக்கத்தில் வெற்றுக் கூடுகள் இரண்டும் உள்ளன. இலக்கத்தினை கொண்ட கூட்டில் போன்றே வலது பக்கத்தில் உள்ள வெற்றுக்கூடுகளில் மூன்றுக்கு மேற்படாதவாறு உங்கள விருப்புக்காக (X) என்ற புள்ளடியை இடலாம். வேண்டுமென்றால் மூன்று விருப்பு வாக்குகளையும் ஒரு வேட்பாளருக்கு அல்லது இரண்டு விருப்புக்களை ஒருவருக்கும் ஒரு விருப்பை இன்னொருவருக்கும் அல்லது மூன்று விருப்புக்களை மூன்று வெவ்வேறான வேட்பாளர்களுக்கும் பகிர்ந்தும் அடையாளஞ் செய்யலாம்.
4. வாக்கொன்று அடையாளமிடாது விருப்புக்கள் மாத்திரம் அடையாளமிடப்பட்டுள்ள வாக்குச்சீட்டு செல்லுபடியற்றதாகும். அது எவ்வித பெறுமதியற்றதோடு அல்லாமல் நிராகரிக்கப்படும். ஆகையினால் முதலில் நீங்கள் விரும்பும் ஒரு கட்சியின் அல்லது குழுவின் சின்னத்திற்கெதிரேயுள்ள வெற்றுக் கூட்டில் (X) புள்ளடியிட்டு வாக்கை அடையாளமிட்டு அதன்பின் விருப்பமாயின் விருப்புக்களை அடையாளமிடுவதே பொருத்தமானது. ஏன்பதை தயவுகூர்ந்து நினைவிற் கொள்ளவும்.

தேர்தல்கள் செயலகம்
சரண மாவத்தை
இராஜகிரிய
2011.03.04

தயானந்த திசாநாயக்க
தேர்தல்கள் ஆணையாளர்

உள்ளூராதிகார சபைத் தேர்தல் – 2011 (3 ஆம் கட்டம்)
வாக்களித்தலும் விருப்புத் தெரிவித்தலும் பற்றிய சுருக்கமான விளக்கம்

வாக்குச்சீட்டின் மாதிரிப் படிவம்

ஆ கட்சி				இலச்சினை	
ஆ கட்சி				இலச்சினை	
இ கட்சி				இலச்சினை	
சுயேச்சைக் குழு 1				இலச்சினை	
சுயேச்சைக் குழு 2				இலச்சினை	
1			6		
2			7		
3			8		
4			9		
5			10		

1. வாக்குச்சீட்டின் மாதிரியொன்று கீழே காட்டப்பட்டுள்ளது.
2. வாக்குச்சீட்டின் மேல் மூலையில் போட்டியிடுகின்ற கட்சிகளின் பெயர்கள், சுயேச்சைக் குழுக்கள் சார்பாகக் குறித்தொதுக்கப்பட்ட இலக்கங்கள் மற்றும் அக்கட்சிகள் மற்றும் சுயேச்சைக்குழுக்கள் என்பனவற்றிக்காக குறித்தொதுக்கப்பட்டுள்ள தேர்தல் சின்னங்கள் என்பன காட்டப்பட்டுள்ளன.
3. வாக்குச்சீட்டில் காட்டப்பட்டுள்ள கட்சிகள் மற்றும் சுயேச்சைக்குழுக்கள் என்பனவற்றில் தேருநர் மிக விரும்புகின்ற கட்சியின் அல்லது சுயேச்சைக்குழுவின் தேர்தல் சின்னத்திற்கு எதிரேயுள்ள வெற்றுக்கூட்டில் X அடையாளத்தையிடுவதன் மூலம் தமது வாக்கினை அடையாளமிட முடியும்.
4. வாக்குப் அடையாளமிடப்படாத வாக்குச்சீட்டுக்கள் மற்றும் கட்சிகள் அல்லது குழுக்கள் ஒன்றிக்கு மேற்பட்டவற்றிக்கு வாக்களிக்கப்பட்ட வாக்குச்சீட்டுக்கள் என்பன வாக்கெண்ணலின் போது நிராகரிக்கப்பட்ட வாக்குச்சீட்டுக்களென புறத்தொதுக்கப்படும்.
5. வாக்குச்சீட்டின் கீழ் பகுதியில் குறித்த உள்ளூர் சபைக்காகப் போட்டியிடுகின்ற வேட்பாளர்களின் எண்ணிக்கைக்கு சமமாகும் விதத்தில் அடையாளம் காட்டும் இலக்கங்கள் குறிக்கப்பட்டுள்ளன. அவ்விலக்கங்களினால் நீங்கள் வாக்களித்த கட்சியின் அல்லது சுயேச்சைக் குழுவின் வேட்பாளர்கள் அறிமுகப்படுத்தப்படுவார்கள். உரிய வேட்பாளர் பட்டியல் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டையோடு உங்களுக்கு அனுப்பி வைக்கப்படுவதோடு வாக்கெடுப்பு நிலையத்தில் பார்வைக்கும் வைக்கப்படும். அவ்வேட்பாளர்களில் மூவருக்கோ அல்லது இருவருக்கோ அல்லது ஒருவருக்கோ என்ற வகையில் ஆகக்கூடியது மூன்று விருப்புக்களைப் அடையாளமிட முடியும்.
6. மூன்று விருப்புக்களையும் ஒரே வேட்பாளருக்கு அடையாளமிடுவதாயின், குறித்த வேட்பாளரின் இலக்கத்துடன் கூடிய கூட்டில் ஒரு புள்ளடியையும், அதனெதிரேயுள்ள எஞ்சியுள்ள வெற்றுக் கூடுகளில் ஏனைய இரு புள்ளடிகளையும் அடையாளமிடல் வேண்டும். அதே விதத்தில் ஒரு வேட்பாளருக்கு இரண்டு விருப்புக்களும் வேறோரு வேட்பாளருக்கு ஒரு விருப்பும் என்ற வகையிலோ இன்றேல் மூன்று விருப்புக்களையும் வெவ்வேறு வேட்பாளர்கள் மூவருக்கு என்ற வகையிலோ உங்களது விருப்பப்படி மூன்று விருப்புக்களையும் அடையாளமிட முடியும். முன்று விருப்புக்களையும் வேட்பாளர்கள் முவருக்கு அடையாளமிடுவீர்களாயின் அதிக விருப்பத்துக்குரிய வேட்பாளர்கள் மூவரின் இலக்கங்களடங்கிய கூடுகளில் புள்ளியிடல் வேண்டும்.
7. ஏதேனும் ஒரு வாக்குச்சீட்டில் மூன்று விருப்புக்களுக்கு மேற்பட்ட எண்ணிக்கையிலான விருப்புக்கள் அடையாளமிடப்பட்டிருப்பின் விருப்புக்களை எண்ணுகின்ற போது இவ் வாக்குச் சீட்டு நிராகரிக்கப்படும்.

தேர்தல்கள் செயலகம்
சரண மாவத்தை
இராஜகிரிய
2011.09.26

மஹிந்த தேசப்பிரிய
தேர்தல்கள் ஆணையாளர்

உள்ளூரதிகார சபைத் தேர்தல் – 2011
உடற்றகுதியீனம் காரணமாக விஷேட வாகனத்தினைப் பயன்படுத்துவதற்கான விண்ணப்பம்

2002 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்தினால் முதன்மைச் சட்டவாக்கத்திற்குச் சேர்த்துக் கொள்ளப்படட 82(எ)4(ஈ) ஆம் பிரிவின் பிரகாரம் ஏதேனும் உடற்றகுதியீனம் காரணமாக எவரேனுமொருவர் நடந்தோ அன்றி இலங்கை மத்திய போக்குவரத்துச் சபையினால் அல்லது பிரதேச போக்குவரத்துச் சபையினால் அல்லது இலங்கை அரசாங்க புகையிரதத் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஏதேனும் பொதுப் போக்குவரத்துச் சேவையிலோ வாக்கெடுப்பு நிலையத்திற்குப் போய்வர முடியாதவராக இருந்தால், தான் வாக்கெடுப்பு நிலையத்திற்கு போய்வரும் நோக்கத்திற்காக தனது தேர்தல் பிரதேசத்தின் தெரிவத்தாட்சி அலுவலருக்கு தானாகவோ அல்லது அவ்வாறு முடியாதிருப்பின் தனக்குப் பதிலாக வேறொருவர், வேட்பாளர் அல்லாத வேறு எவரேனும் ஆளினால் விண்ணப்பிக்கலாம்.

02. இவ்வசதியினைப் பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பத்தினை வாக்கெடுப்பு நடைபெறும் தினத்திற்கு ஏழு நாட்களுக்கு முன்னதாக – அதாவது 2011 யூலை மாதம் 15 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாக உரிய தெரிவத்தாட்சி அலுவலருக்குக் கிடைக்குமாறு சமர்ப்பித்தல் சட்ட முறையான தேவையொன்றாகுமென்பதோடு, தெரிவத்தாட்சி அலுவலர் திருப்தியடைந்தால் இந்நோக்கத்திற்கென அந்நபருக்கு விஷேட போக்குவரத்து வசதியினைப் பெற்றுக் கொள்வதற்கான உத்தரவுப் பத்திரத்தை வழங்கலாம்.

03. விண்ணப்பத்தினை சமர்ப்பிக்கும் நபர் நடந்து அல்லது பொது வாகனங்களில் போக முடியாதவாறு உடற்றகுதியீனம் உற்றிருப்பதன் தன்மையை விபரித்து (மேல்நாட்டு அல்லது சுதேச வைத்தியர்) பதிவு செய்யப்பட்ட வைத்தியர் ஒருவரிடமிருந்து பெறப்பட்ட வைத்திய அத்தாட்சிப்பத்திரமொன்றின் மூலம் தமது விண்ணப்பத்தை உறுதிப்படுத்துவாரெனில், அதற்கான முடிவை மேற்கொள்வதற்கு தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு இலகுவாகவிருக்கும். தன்னைப் பரிசோதித்து அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறு ஒருவர் அரசாங்க வைத்தியரிடம்/ பதிவு செய்த அல்லது உதவி வைத்திய தொழில் புரியும் ஒருவரிடம் அல்லது ஆயுர்வேத வைத்தியரிடம் விண்ணப்பிக்குமிடத்து அவர் அவ்வைத்திய அறிக்கையினை கட்டணம் எதுவுமின்றிப் பெற்றுக் கொள்ளலாம். தனியார் (மேல்நாட்டு அல்லது சுதேச) வைத்தியர்களிடமிருந்து பெறப்படும் அறிக்கைகளில் அவ்வைத்தியரின் பெயரையும் பதிவு செய்யப்பட்டுள்ள இலக்கத்தையும் குறிப்பிட வேண்டும்.

04. 2 ஆம் பந்தியில் குறிக்கப்பட்ட திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ கிடைக்குமாறு இதற்கென இதனுடனுள்ள மாதிரிப் படிவத்திற்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் பத்திரங்களை தேர்தல் பிரதேசத்தின் (உள்ளூரதிகார சபை) தெரிவத்தாட்சி அலுவலருக்கு (மாவட்டச் செயலாளர் அல்லது உதவித் தேர்தல்கள் ஆணையாளருக்கு) சமர்ப்பித்தல் வேண்டும்.

தேர்தல்கள் செயலகம்
சரண மாவத்தை
இராஜகிரிய
2011.07.07

மஹிந்த தேசப்பிரிய
தேர்தல்கள் ஆணையாளர்

உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் – 2011
உள்ளூர் அதிகார சபைகள் தேர்தலகள் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 262)

ආදර්ශ අයදුම්පත

82(எ)4(ஈ) ஆம் பிரிவின் கீழ் வாகனமொன்றைப் பயன்படுத்துவதற்கான உடற்றகுதியீனமுற்றுள்ள ஒருவரினால் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பம்

.....சபையின் தெரிவத்தாட்சி அலுவலருக்கு.
(உள்ளூர் அதிகார சபையின் பெயர்)

1. உடற்றகுதிமீம் உள்ளவரின் விபரம
முழுப் பெயர –.....
அஞ்சல் முகவர் –.....
தேருநர் இடாப்பிலுள்ளவாறு உள்ளூர் அதிகார சபை வாக்கெடுப்பு மாவட்டம், தொடர் இலக்கம் (தெரியுமாயின்) –.....

2. உடற்றகுதியீனம் பற்றிய சுருக்கமான விபரம் –.....

3. உடற்றகுதியீனம் உற்றவருக்காக வேறு எவராலும் விண்ணப்பப்படிவம் அனுப்பப்படுமாயின் அவரது பெயரும் முகவரியும

4. இவ்விண்ணப்பத்தை உறுதிப்படுத்துவதற்காக அரசாங்க வைத்தியர் ஒருவரின்/ பதிவு செய்யப்பட்ட அல்லது உதவி வைத்தியத் தொழில் புரியும் ஒருவரின்/ ஆயர்வேத வைத்தியர் ஒருவரின்/ தனியார் வைத்தியரொருவரின் அறிக்கை ஒன்றை இத்துடன் அனுப்புகின்றேன்.
வைத்தியரின் பெயர –.....
பதிவிலக்கம் –.....

5. மேலே குறிப்பிடப்பட்டுள்ள 2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ளவாறு உடற்றகுதியீனம் காரணமாக எனக்கு,* உடற்றகுதியீனம் உற்றுள்ள மேலே காணப்படுபவருக்கு நடந்து அல்லது இலங்கை மத்திய போக்குவரத்துச் சபை அல்லது இலங்கை அரசாங்க புகையிரதத் திணைக்களத்தினால் அல்லது ஏதேனும் பொது போக்குவரத்து சேவை எதனிலும் ஏற்பாடு செய்யப்பட்ட போக்குவரத்து வசதி மூலம் ஒரு வாக்கெடுப்புக்குப் போக முடியாததென இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

6. மேற்கூறப்பட்ட வாக்கெடுப்பின் போது வாக்கினைப் பிரயோகிக்கும் பொருட்டு வாக்கெடுப்பு நிலையத்திற்கு போய் வருவதற்கென நான்/ உடற்றகுதியீனம் உற்ற மேலே பெயர் குறிக்கப்பட்டுள்ளவர் ஏதமொரு வாகனத்தை பயன்படுத்துவதற்கு எழுத்து மூலமான உத்தரவினை வழங்குமாறு இத்தால் கேட்டுக் கொள்கின்றேன்.

திகதி –.....

.....
உடற்றகுதியீனமாளவரின்/ அவருக்காக
விண்ணப்பிக்கும் வேறொருவரின் ஒப்பம்
அல்லது பெருவிரல் அடையாளம்

ஊடக அறிவித்தல் – இல 05

உள்ளூராதிகார சபைத் தேர்தல் – 2011 (2 ஆம் கட்டம்)
வலிமையிழப்பொன்றிற்கு இலக்காகிய வாக்காளரொருவருக்கு வாக்களிப்பு நிலையத்தில் வாக்குச் சீட்டை அடையாளமிட்டுக் கொடுப்பதற்கு உதவியாளர் ஒருவரை உடனழைத்துச் செல்வதற்கு தேவையான சட்ட விதிகளை ஏற்பாடு செய்தல்.

2011 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க தேர்தல்கள் (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்தின் மூலம் திருத்தியமைக்கப்பட்ட முதன்மைச் சட்டவாக்கத்தின் 54(2) ஆம் பிரிவிற்கமைய எதிர்வரும் தேர்தல்களின் போது முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ பார்வைப் பாதிபொன்றிற்கு அல்லது வேறேதேனும் உடல் ரீதியான வலிமையிழப்பொன்றிற்கு இலக்கான வாக்காளர் ஒருவருக்கு வாக்களிப்பு நிலையத்தில் வைத்து வாக்குச் சீட்டினை அடையாளமிட்டுக் கொள்வதற்கு உதவியாளர் ஒருவரை அழைத்துச் செல்லத்தக்கவாறான புதிய சட்ட விதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

02. ஆயினும், அவ்வாறு உடனழைத்துச் செல்லும் அவ்வுதவியாளர்கள் 18 வயதைப் பூர்த்தி செய்த ஒருவராக இருக்க வேண்டுமென்பதோடு, அத்தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளரொருவர் அல்லாதவராகவும் இருத்தல் வேண்டும். அதேபோன்று அதிகாரமளிக்கப்பட்ட முகவர் ஒருவராகவோ அல்லது வாக்களிப்பு நிலையத்தின் முகவர் ஒருவராகவோ செயற்படுகின்றதல்லாதவராகவும் இருத்தல் வேண்டும். மேலும் வலிமையிழப்பொன்றிற்கு உட்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

03. மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு உதவியாளர் ஒருவரை உடனழைத்துச் செல்வதற்காக உரிய சட்டத்தின் பத்தாம் அட்டவணையினூடாக அறிமுகம் செய்யப்பட்டுள்ள தகுதிச் சான்றிதழொன்றை உரிய வாக்களிப்பு நிலையத்தின் அலுவலர்களுக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

04. இத்தகுதிச் சான்றிதழைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான விண்ணப்பப் படிவங்களை தேர்தல்கள் நடாத்தப்படவுள்ள உள்ளூராட்சி நிறுவனங்களின் அதிகார எல்லைக்குட்பட்ட கிராம அலுவலர்களிடமிருந்து பெற்றுக் கொள்ள முடியும். உரிய தகுதிச் சான்றிதழின் படிவத்தை தேர்தல்கள் திணைக்களத்தின் வெப் தளத்திலிருந்தும் (www.selections.gov.lk) பெற்றுக் கொள்ள வசதிகள் செய்யப்பட்டுள்ளன. பார்வைக் குறைபாடுகள் அல்லது வேறேதேனும் உடல்ரீதியான வலிமையிழப்புக்குள்ளாகிய ஆள், கிராம அலுவலரிடமிருந்து விண்ணப்பப் படிவமொன்றைப் பெற்று, அதனை நிரப்பிக் கொடுத்து கிராம அலுவலரின் அத்தாட்சியைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்பதோடு, அதன் பின்னர் அச்சான்றிதழை அரசாங்க வைத்திய அலுவலரிடம் சமர்ப்பித்தலும் வேண்டும். வைத்திய அலுவலரினால் வாக்காளர் பரீட்சிக்கப்பட்டு அப்படிவத்தில் வாக்காளரின் தகைமை குறிக்கப்பட்டு அத்தாட்சிப்படுத்தப்படும்.

05. வலிமையிழப்புக்கு ஆளாகிய வாக்காளர் தனது உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை, தேசிய அடையாள அட்டை அல்லது வாக்களிப்பு நிலையத்தில் ஏற்றுக் கொள்ளப்படுகின்ற ஏதேனுமொரு அடையாள அட்டை மற்றும் இத்தகுதிச் சான்றிதழ் என்பவற்றை எடுத்துக் கொண்டு உதவியாளரையும் உடனழைத்து கொண்டு வாக்களிப்பு நிலையத்திற்குச் செல்லுதல் வேண்டும். வாக்கெடுப்பு நிலைய பணியாட் குழுவினரால் வாக்காளரின் ஆளடையாளம் உறுதிப்படுத்தப்பட்டமைத் தொடர்ந்து, வாக்களிப்பு நிலையத்தின் வழமையான நடைமுறையை பின்பற்றி வாக்குச் சீட்டொன்று விநியோகிக்கப்படும் என்பதோடு, அவ்வாக்குச் சீட்டை அடையாளமிடுவதற்காக உதவியாளரோடு வாக்காளர் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரிடம் ஆற்றுப்படுத்தப்படுவார். உதவியாளரும் தம்மோடு தேசிய அடையாள அட்டையை அல்லது வாக்களிப்பு நிலையத்தில் ஏற்றுக் கொள்ளப்படுகின்ற ஏதேனும் அடையாள அட்டையொன்றை எடுத்துச் செல்லல் இன்றியமையாததாகும்.

06. வாக்களிப்பு நிலையத்தில் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரினால் வாக்காளின் தகுதிச் சான்றிதழ் பெற்றுக் கொள்ளப்படும் என்பதோடு அழைத்து வருகின்ற ஆளிடமிருந்து உரிய வெளிப்படுத்துகை பெறப்படும். அதைத் தொடர்ந்து வாக்களிப்பு நிலைய பணியாட் குழுவினர் ஒருவரோடு வாக்காளரும் உதவியாளரும் வாக்களிப்புச் சிற்றறைக்குள் அழைத்துச் செல்லப்பட்டு சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர் மற்றும் பணியாட் குழுவின் மற்றோர் அங்கத்தினர் ஆகியோர் முன்னிலையில் வாக்குச் சீட்டு அடையாளமிடப்பட்டு வாக்குப் பெட்டிக்குள் இடப்பட நடவடிக்கை எடுக்கப்படும்.

07. மேற்குறித்த தகுதிச் சான்றிதழொன்று இல்லாமல் வாக்களிப்பு நிலையத்திற்கு உதவியாளர் ஒருவரை உடனழைத்துச் செல்ல முடியாது. வாக்கு அடையாளமிட்டதன் பின்னர் உரிய தகுதிச் சான்றிதழ் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரினால் ஏற்றுக் கொள்ளப்படும்.

தேர்தல்கள் செயலகம்
சரண மாவத்தை
இராஜகிரிய
2011.07.09

மஹிந்த தேசப்பிரிய
தேர்தல்கள் ஆணையாளர்

08

உள்ளூரதிகார சபைத் தேர்தல் – 2011 (2 ஆம் கட்டம்)
வலிமையிழப்பொன்றிற்கு இலக்காகிய வாக்காளரொருவருக்கு வாக்களிப்பு நிலையத்தில் வாக்குச் சீட்டை அடையாளமிட்டுக் கொடுப்பதற்கு உதவியாளர் ஒருவரை உடனழைத்துச் செல்வதற்கு தேவையான சட்ட விதிகளை ஏற்பாடு செய்தல்

2011 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க தேர்தல்கள் (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்தின் மூலம் திருத்தியமைக்கப்பட்ட முத்தனமைச் சட்டவாக்கத்தின் 54(2) ஆம் பிரிவிற்கமைய எதிர்வரும் தேர்தல்களின் போது முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ பார்வைப் பாதிப்பொன்றிற்கு அல்லது வேறேதேனும் உடல் ரீதியான வலிமையிழப்பொன்றிற்கு இலக்கான வாக்காளர் ஒருவருக்கு வாக்களிப்பு நிலையத்தில் வைத்து வாக்குச் சீட்டினை அடையாளமிட்டுக் கொள்வதற்கு உதவியாளர் ஒருவரை அழைத்துச் செல்லத்தக்கவாறான புதிய சட்ட விதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

02. ஆயினும், அவ்வாறு உடனழைத்துச் செல்லும் அவ்வுதவியாளர் 18 வயதைப் பூர்த்தி செய்த ஒருவராக இருக்க வேண்டுமென்பதோடு, அத்தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளரொருவர் அல்லாதவராகவும் இருத்தல் வேண்டும். அதேபோன்று அதிகாரமளிக்கப்பட்ட முகவர் ஒருவராகவோ அல்லது வாக்களிப்பு நிலையத்தின் முகவர் ஒருவராகவோ செயற்படுகின்றவரல்லாதவராகவும் இருத்தல் வேண்டும். மேலும் ஏதேனும் வலிமையிழப்பொன்றிற்கு உட்படாதவறாகவும் இருத்தல் வேண்டும்.

03. மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு உதவியாளர் ஒருவரை உடனழைத்துச் செல்வதற்காக உரிய சட்டத்தின் பத்தாம் அட்டவணையினூடாக அறிமுகம் செய்யப்பட்டுள்ள தகுதிச் சான்றிதழொன்றை உரிய வாக்களிப்பு நிலையத்தின் அலுவலர்களுக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

04. இத்தகுதிச் சான்றிதழைப் பெற்றுக் கொள்வதற்குத் தேவையான விண்ணப்பப் படிவங்களை தேர்தல்கள் நடாத்தப்படவுள்ள உள்ளூராட்சி நிறுவனங்களின் அதிகார எல்லைக்குட்பட்ட கிராம அலுவலர்களிடமிருந்து பெற்றுக் கொள்ள முடியும். உரிய தகுதிச் சான்றிதழின் படிவத்தை தேர்தல்கள் திணைக்களத்தின் வெப் தளத்திலிருந்தும் (www.selections.gov.lk) பெற்றுக் கொள்ள வசதிகள் செய்யப்பட்டுள்ளன. பார்வைக் குறைபாடுகள் அல்லது வேறேதேனும் உடல்ரீதியான வலிமையிழப்புக்குள்ளாகிய ஆள், கிராம அலுவலரிடமிருந்து விண்ணப்பப் படிவமொன்றைப் பெற்று, அதனை நிரப்பிக் கொடுத்து கிராம அலுவலரின் அத்தாட்சியைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்பதோடு, அதன் பின்னர் அச்சான்றிதழை அரசாங்க வைத்திய அலுவலரிடம் சமர்ப்பித்தலும் வேண்டும். வைத்திய அலுவலரினால் வாக்காளர் பரீட்சிக்கப்பட்டு அப்படிவத்தில் வாக்காளரின் தகைமை குறிக்கப்பட்டு அத்தாட்சிப்படுத்தப்படும்.

05. வலிமையிழப்புக்கு ஆளாகிய வாக்காளர் தனது உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை, தேசிய அடையாள அட்டை அல்லது வாக்களிப்பு நிலையத்தில் ஏற்றுக் கொள்ளப்படுகின்ற ஏதேனுமொரு அடையாள அட்டை மற்றும் இத்தகுதிச் சான்றிதழ் என்பவற்றை எடுத்துக் கொண்டு உதவியாளரையும் உடனழைத்து கொண்டு வாக்களிப்பு நிலையத்திற்குச் செல்லுதல் வேண்டும். வாக்கெடுப்பு நிலைய பணியாட் குழுவினரால் வாக்காளரின் ஆளடையாளம் உறுதிப்படுத்தப்பட்டமைத் தொடர்ந்து, வாக்களிப்பு நிலையத்தின் வழமையான நடைமுறையை பின்பற்றி வாக்குச் சீட்டொன்று விநியோகிக்கப்படும் என்பதோடு, அவ்வாக்குச் சீட்டை அடையாளமிடுவதற்காக உதவியாளரோடு வாக்காளர் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரிடம் ஆற்றுப்படுத்தப்படுவார். உதவியாளரும் தம்மோடு தேசிய அடையாள அட்டையை அல்லது வாக்களிப்பு நிலையத்தில் ஏற்றுக் கொள்ளப்படுகின்ற ஏதேனும் அடையாள அட்டையொன்றை எடுத்துச் செல்லல் இன்றியமையாததாகும்.

06. வாக்களிப்பு நிலையத்தில் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரினால் வாக்காளின் தகுதிச் சான்றிதழ் பெற்றுக் கொள்ளப்படும் என்பதோடு அழைத்து வருகின்ற ஆளிடமிருந்து உரிய வெளிப்படுத்துகை பெறப்படும். அதைத் தொடர்ந்து வாக்களிப்பு நிலைய பணியாட் குழுவினர் ஒருவரோடு வாக்காளரும் உதவியாளரும் வாக்களிப்புச் சிற்றறைக்குள் அழைத்துச் செல்லப்பட்டு சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர் மற்றும் பணியாட் குழுவின் மற்றோர் அங்கத்தினர் ஆகியோர் முன்னிலையில் வாக்குச் சீட்டு அடையாளமிடப்பட்டு வாக்குப் பெட்டிக்குள் இடப்பட நடவடிக்கை எடுக்கப்படும்.

07. மேற்குறித்த தகுதிச் சான்றிதழொன்று இல்லாமல் வாக்களிப்பு நிலையத்திற்கு உதவியாளர் ஒருவரை உடனழைத்துச் செல்ல முடியாது. வாக்கு அடையாளமிட்டதன் பின்னர் உரிய தகுதிச் சான்றிதழ் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரினால் ஏற்றுக் கொள்ளப்படும்.

தேர்தல்கள் செயலகம்
சரண மாவத்தை
இராஜகிரிய
2011.09.21

மஹிந்த தேசப்பிரிய
தேர்தல்கள் ஆணையாளர்

உள்ளூரதிகார சபைத் தேர்தல் – 2011 (2 ஆம் கட்டம்)
தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் தமது வாக்கை அளிப்பதற்காக விடுமுறை வழங்குதல்

தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் தமது வாக்கையளிப்பதற்காக விடுமுறை வழங்குவது தொடர்பான உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 84அ ஆம் பிரிவின் ஏற்பாடுகள் தொழிலாளர்களினதும் தொழில்தருநர்களினதும் தகவலுக்காக இங்கு கீழே காட்டப்பட்டுள்ளது.

"84அ(1) இக்கட்டளைச் சட்டத்தின் கீழ் தேர்தலில் வாக்களிப்பதற்கு உரித்துடைய ஆளொருவரை வேலைக்கமர்த்தியவராக விருக்கின்ற எவ் ஆளும், அத்தகைய ஆளினால் அதற்காக எழுத்து மூலம் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் பேரில், அத்தகைய ஆள் அத்தேர்தலில் வாக்களிப்பதை இயலச் செய்வதற்காக வேலைக்கமரத்திய அவ் ஆள் போதியதெனக் கருதக்கூடிய தொடர்ச்சியான காலத்திற்கு (அக்காலம் இரண்டு மணித்தியாலங்களுக்குக் குறையாததாக இருத்தல் வேண்டும்.)

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற அல்லது அவ் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறுகின்ற ளே எவரும், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவரினாற் சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்படுமிடத்து, ஐந்நூறு ரூபாவிற்கு மேற்படாத குற்றப்பணத்திற்கு அல்லது ஒரு மாத காலத்திற்கு மேற்படாத காலத்திற்கான இருவகையில் ஒருவகை மறியற்றண்டணைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்."

02. மேற்கூறப்பட்ட பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய தனது வாக்கையளிப்பதற்காக விடுமுறை கோரி எழுத்துமூலம் விண்ணப்பம் செய்கின்ற எல்லா ஊழியர்களுக்கும் விடுமுறை வழங்க வேண்டும். அவ்வாறு வழங்கும் விடுமுறை காலம், அமய ஊழியர்கள் உட்பட அனைத்து ஊழியர்களுக்கும் சம்பளத்துடன் கூடிய விஷேட விடுமுறையொன்றாக கருதப்பட வேண்டியதுடன், அது ஊழியர்களின் சாதாரண லீவுகளிலிருந்து புறம்பானதாகவிருக்க வேண்டும்.

03. இவ்விடயம் தொடர்பாக ஊழியர்களுக்கு வழங்கப்படும் விடுமுறை காலத்தை, அந்த ஊழியர் தொழில் புரியும் இடத்திலிருந்து அவரது வாக்கெடுப்பு நிலையத்திற்கு போகவும் அங்கிருந்து திரும்பிவரவும் உள்ள தூரத்தை கருத்திற் கொண்டு, தொழில்தருநரால் தீர்மானம் செய்ய வேண்டும். சட்டத்தின்படி லீவு பெற்றுக் கொள்வது தொடர்பாக இதற்கு முன்பு நடைபெற்ற தேர்தல்களின்போதும் ஊழியர்களிடமிருந்து முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதனால், இவ்வாக்கெடுப்பின் போது வாக்களிக்க உரித்துள்ள தனது ஊழியர்களுக்கு, சட்டத்தின் கீழ் உரிமையுள்ள இவ்விடுமுறையை தனியார், அரசாங்க துறைகளிலுள்ள தொழில்தருநர்கள் தமது தாபனத்தில் தொழில்புரியும் ஊழியர்களுக்கு வழங்குமாறு நான் கேட்டுக் கொள்கின்றேன்.

04. மேற்கூறப்பட்ட உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் 2011 யூலை மாதம் 23 ஆம் திகதி மு.ப 7.00 மணி முதல் பி.ப 4.00 மணிவரை நடாத்தப்படும்.

05. இதுதொடர்பாக சகல தொழில்தருநர்களிடமிருந்தும் கிடைக்கும் ஒத்துழைப்பை மிகவும் மெச்சுகின்றேன்.

மஹிந்த தேசப்பிரிய
தேர்தல்கள் ஆணையாளர்

தேர்தல்கள் செயலகம்
சரண மாவத்தை
இராஜகிரிய
2011.07.11

உள்ளூரதிகார சபைத் தேர்தல் – 2011 (3 ஆம் கட்டம்)
தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் தமது வாக்கை அளிப்பதற்காக விடுமுறை வழங்குதல்

தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் தமது வாக்கையளிப்பதற்காக விடுமுறை வழங்குவது தொடர்பான உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 84அ ஆம் பிரிவின் ஏற்பாடுகள் தொழிலாளர்களினதும் தொழில்தருநர்களினதும் தகவலுக்காக இங்கு கீழே காட்டப்பட்டுள்ளது.

"84அ(1) இக்கட்டளைச் சட்டத்தின் கீழ் தேர்தலில் வாக்களிப்பதற்கு உரித்துடைய ஆளொருவரை வேலைக்கமர்த்தியவராக விருக்கின்ற எவ் ஆளும், அத்தகைய ஆளினால் அதற்காக எழுத்து மூலம் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் பேரில், அத்தகைய ஆள் அத்தேர்தலில் வாக்களிப்பதை இயலச் செய்வதற்காக வேலைக்கமரத்திய அவ் ஆள் போதியதெனக் கருதக்கூடிய தொடர்ச்சியான காலத்திற்கு (அக்காலம் இரண்டு மணித்தியாலங்களுக்குக் குறையாததாக இருத்தல் வேண்டும்.)

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற அல்லது அவ் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறுகின்ற ளே எவரும், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவரினாற் சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்படுமிடத்து, ஐந்நூறு ரூபாவிற்கு மேற்படாத குற்றப்பணத்திற்கு அல்லது ஒரு மாத காலத்திற்கு மேற்படாத காலத்திற்கான இருவகையில் ஒருவகை மறியற்றண்டணைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்."

02. மேற்கூறப்பட்ட பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய தனது வாக்கையளிப்பதற்காக விடுமுறை கோரி எழுத்துமூலம் விண்ணப்பம் செய்கின்ற எல்லா ஊழியர்களுக்கும் விடுமுறை வழங்க வேண்டும். அவ்வாறு வழங்கும் விடுமுறை காலம், அமய ஊழியர்கள் உட்பட அனைத்து ஊழியர்களுக்கும் சம்பளத்துடன் கூடிய விஷேட விடுமுறையொன்றாக கருதப்பட வேண்டியதுடன், அது ஊழியர்களின் சாதாரண லீவுகளிலிருந்து புறம்பானதாகவிருக்க வேண்டும்.

03. இவ்விடயம் தொடர்பாக ஊழியர்களுக்கு வழங்கப்படும் விடுமுறை காலத்தை, அந்த ஊழியர் தொழில் புரியும் இடத்திலிருந்து அவரது வாக்கெடுப்பு நிலையத்திற்கு போகவும் அங்கிருந்து திரும்பிவரவும் உள்ள தூரத்தை கருத்திற் கொண்டு, தொழில்தருநரால் தீர்மானம் செய்ய வேண்டும். சட்டத்தின்படி லீவு பெற்றுக் கொள்வது தொடர்பாக இதற்கு முன்பு நடைபெற்ற தேர்தல்களின்போதும் ஊழியர்களிடமிருந்து முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதனால், இவ்வாக்கெடுப்பின் போது வாக்களிக்க உரித்துள்ள தனது ஊழியர்களுக்கு, சட்டத்தின் கீழ் உரிமையுள்ள இவ்விடுமுறையை தனியார், அரசாங்க துறைகளிலுள்ள தொழில்தருநர்கள் தமது தாபனத்தில் தொழில்புரியும் ஊழியர்களுக்கு வழங்குமாறு நான் கேட்டுக் கொள்கின்றேன்.

04. மேற்கூறப்பட்ட உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் 2011 யூலை மாதம் 23 ஆம் திகதி மு.ப 7.00 மணி முதல் பி.ப 4.00 மணிவரை நடாத்தப்படும்.

05. இதுதொடர்பாக சகல தொழில்தருநர்களிடமிருந்தும் கிடைக்கும் ஒத்துழைப்பை மிகவும் மெச்சுகின்றேன்.

தேர்தல்கள் செயலகம்
சரண மாவத்தை
இராஜகிரிய
2011.09.26

மஹிந்த தேசப்பிரிய
தேர்தல்கள் ஆணையாளர்

உள்ளூரதிகார சபைத் தேர்தல் – 2011
தேர்தலைக் கண்காணிப்பதற்காக அனுமதி வழங்கப்பட்டுள்ள நிறுவனங்கள்

வாக்கெடுப்பு நிலைய கண்காணிப்புக்காக அனுமதியளிக்கப்பட்டுள்ள நிறுவனங்கள்

சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலொன்றிற்கான மக்கள் செயற்பாடு (PAFFREL)	திரு. ரோஹண ஹெட்டி ஆரச்சி நிறைவேற்றுப் பணிப்பாளர்	றொபட் டெரஸ் றொபட் குணவர்தன மாவத்தை கொழும்பு 06	071 – 9709838
தேர்தல் வன்முறைச் செயல்கள் கண்காணிப்பு நிலையம (CMEV)	கலாநிதி பாக்கியஜோதி சரவணமுத்து இணை அமைப்பாளர்	24/2, 28 வது ஒழுங்கை, மல்பார அருகாமை, கொழும்பு 07	011 – 2565304 077 – 3731304

வாக்கெடுப்பு நிலையத்திற்கு வெளியிலிருந்து கண்காணிப்பதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ள கண்காணிப்பு நிறுவனங்கள்

சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான இயக்கம்(CAFFE)	திரு. கீர்த்தி தென்னகோன் நிறைவேற்றுப் பணிப்பாளர்	100/19A, வெலிகடவத்த வீதி, இராஜகிரிய	011 – 4341394 011 – 2866224
செப்கோ மக்கள் அமைப்பு	திரு. சுனிமல் பிரனாந்து நிறைவேற்றுத் தலைவர்	53/2,3வது ஒழுங்கை, மஹல்வராவ, பன்னிப்பிட்டிய	011 – 7201119 077 – 0861636
மனித அபிவிருத்தி அமைப்பு	நிறைவேற்றுப் பணிப்பாளர்	த.பெ. 171 கண்டி	081 – 2232217
தேர்தல் கண்காணிப்பு வலையமைப்பு	கலாநிதி உதித குணசேகர பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர்	த.பெ. 32 பத்தரமுல்ல	011 – 3082070
தேசிய தேர்தல்கள் கண்காணிப்பு நிலையம்	திரு. ரசங்க ஹரிஸ்சந்திர தேசிய அமைப்பாளர்	195, பேஸ்லைன் வீதி, கொழும்பு 9	071 – 2777639

ஊடக அறிவித்தல் – இல 20

உள்ளூரதிகார சபைத் தேர்தல் – 2011
சர்வதேச மகளிர் தின கொண்டாட்ட தேசிய வைபவத்தை நடாத்தல்

2011.03.08 ஆம் திகதி கொண்டாடப்படவுள்ள சர்வதேச மகளிர் தினத்தையொட்டி அரச அனுசரணையோடு பல்வேறு வைபவங்கள் நடாத்தப்படுவதாகவும் அச்சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக் கொண்டு உள்ளூர் அதிகார சபைத் தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களின் வேட்பாண்மையை ஊக்குவிப்பதற்கான அலுவல்கள் மேற்கொள்ளப்படுவதாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

02. மகளிர் தினம் போன்ற விஷேட சந்தர்ப்பங்கள் தேசிய மட்டத்திலான வைபவம் என்பதால் அவ்வாறான வைபவங்களை நடாத்துவது தொடர்பில் ஆட்சேபனை இல்லை. இருப்பினும், இச்சந்தர்ப்பத்தில் உள்ளூர் அதிகார சபைத் தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களை ஈடுபடுத்திக் கொண்டு பல்வேறுபட்ட பொருட்கள், உணவுப் பண்டங்கள் என்பவற்றைப் பகிர்ந்தளித்தல், வேட்பாளர்கள் தமது வேட்பாண்மையை ஊக்குவித்துக் கொள்வதற்காக வைபவத்தில உரையாற்றுதல் என்பன உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளை மீறும் செயலாகுமென்பதைக் குறிப்பிடுகின்றேன்.

03. ஆதலால், இவ்வைபவத்தை பக்கச் சார்பான விதத்தில் நடாத்த வேண்டாமென அனைத்து அரசியல் கட்சிகளின் செயலாளர்கள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் தலைவர் ஆகியோரிடம் கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

தேர்தல்கள் செயலகம்
சரண மாவத்தை
இராஜகிரிய
2011.03.07

தயானந்த திசாநாயக்க
தேர்தல்கள் ஆணையாளர்

பின்னிணைப்பு 50

ஊடக அறிவித்தல் – இல 12

உள்ளூராதிகார சபைத் தேர்தல் – 2011
சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்துகையைச் சமர்ப்பித்தல் தொடர்பாக வேட்பாளர்களை அறிவுறுத்தல்

1988 ஆம் ஆண்டின்74 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தஞ் செய்யப்பட்ட தேசிய அரசுப் பேரவை 1975 இன் 01 ஆம் இலக்க சொத்துக்கள்இ பொறுப்புக்கள் வெளிப்படுத்துகைச் சட்டத்தின் எற்பாடுகளுக்கமைய உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் நடாத்தப்படுகின்ற தேர்தல்களின் போது வேட்புமனு செய்கின்ற அனைத்து வேட்பாளர்களாலும் தேர்தல்கள் ஆணையாளருக்கு சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்துகையைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

அதன் பிரகாரம் 2011.10.08 ஆந் தேதி நடாத்தப்பட்ட உள்ளூர் அதிகார சபைத் தேர்தலுக்குரியதான இதுவரையில் தமது சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்துகையை சமர்ப்பிக்க முடியாமற் போன வேட்பாளர்கள் தவறாது 2011.10.31 ஆந் தேதிக்கு முன்னர் தமது சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்துகையை உரிய மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

உறுப்பினர் பதவிக்காக உரிமை பெற்றுள்ள வேட்பாளர்களில் போதுமானளவு தொகையினர் இதுவரையில் தமது சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்துகையைச் சமர்ப்பித்துள்ளதால் ஏனைய வேட்பாளர்களது வெளிப்படுத்துகையை 2011.10.20 ஆந் தேதிக்கு முன்னர் சமர்ப்பிப்பதற்கு உரிய கட்சிகளின் செயலாளர்கள் இணக்கம் தெரிவித்துள்ளதால்இ நகரபிதா / பிரதி நகர பிதா / தவிசாளர் ஃதுணைத் தவிசாளர் உட்பட உறுப்பினர் பதவிகளுக்கான நியமனங்கள் 2011.10.15 ஆந் தேதி வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடுவதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளதென்பதையும் தெரிவிக்கின்றேன்.

எவ்வாறாயினும் 2011.10.31 ஆந் தேதி வரை தமது சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்துகையைச் சமர்ப்பிப்பதற்கு முடியாமற் போன அனைத்து வேட்பாளர்கள் தொடர்பிலும் சட்ட ரீதியான நடவடிக்கை எடுப்பதற்கு நேரிடுமென்பதையும் வலியுறுத்துகின்றேன்.

தேர்தல்கள் செயலகம்
சரண மாவத்தை
இராஜகிரிய
2011.10.14

மஹிந்த தேசப்பிரிய
தேர்தல்கள் ஆணையாளர்

பின்னிணைப்பு 51

ஊடக அறிவித்தல் – இல 22

உள்ளூராதிகார சபைத் தேர்தல் – 2011 (3 ஆம் கட்டம்)
சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்துகையைச் சமர்ப்பித்தல்

1988 ஆம் ஆண்டின் 74 ஆம் இலக்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல் (திருத்த) சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்ட தேசிய அரசுப் பேரவை 1975 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய உள்ளூர் அதிகார சபைத் தேர்தல் கட்டளைச் சட்டத்தின் கீழ் நடாத்தப்படுகின்ற தேர்தல்களின் போது தேர்ந்தெடுக்கப்படுவதற்காக வேட்புமனு சமர்ப்பித்த வேட்பாளர்களால் தமது சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்துகையை தேர்தல்கள் ஆணையாளருக்குக் கையளித்தல் வேண்டும். அதற்கமைய 2011.10.08 ஆம் திகதி நடாத்தப்பட்ட உள்ளூர் அதிகார சபைத் தேர்தலில் போட்டியிட்டு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள வேட்பாளர்கள் தமது சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்துகையை 2011.10.31 ஆம் திகதிக்கு முன்னர் கையளிப்பதற்கு நடவடிக்கையெடுக்குமாறு வெற்றியீட்டிய கட்சிகளின் செயலாளர்களுக்கு என்னால் அறிவிக்கப்பட்டது.

மேற்படி தேர்தலில் போட்டியிட்டு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள வேட்பாளர்களில் 2011.10.31 ஆம் திகதி வரையிலும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்துகையை சமர்ப்பிக்காத வேட்பாளர்களின் எண்ணிக்கை மற்றும் அவ்வேட்பாளர்களின் அரசியல் கட்சிகள் தொடர்பாக விபரங்களை இத்தோடு இணைக்கப்பட்டுள்ள இணைப்பு 1 மற்றும் 2 என்பவற்றில் காட்டப்பட்டுள்ளது.

இதுவரை சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்துகையைச் சமர்ப்பிக்காத தேர்ந்தெடுக்கப்பட்ட வேட்பாளர்கள் தொடர்பில் குறித்த சட்ட ஏற்பாடுகளின் கீழ் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு நடவடிக்கையெடுக்கப்படுமெனவும் தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து வேட்பாளர்களின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்துகையை வேட்புமனுக் கையேற்கப்பட்ட தினத்திலிருந்து மூன்று மாதங்களுக்கு மேற்படுவதற்கு முன்னர் மேற்கொள்ள வேண்டுமென்பதால் அவ்வாறான வேட்பாளர்களின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்துகையை 2011.11.25 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட வண்ணமுள்ளதென்பதையும் மேலும் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

தேர்தல்கள் செயலகம்
சரண மாவத்தை
இராஜகிரிய
2011.11.01

மஹிந்த தேசப்பிரிய
தேர்தல்கள் ஆணையாளர்

ஊடக அறிவித்தல் – இல 21

உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்கள் – 2011

தேர்தல்கள் தினத்தன்றைய முறைப்பாடுகள்

2011.03.17 ஆந் திகதி நடைபெறவுள்ள உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் தினத்தன்று ஒவ்வொரு மாவட்டத்திற்குமுரிய முறைப்பாடுகள் இராஜகிரிய தேர்தல்கள் செயலகத்தின் தேசிய இணைப்பு நிலையத்திற்கு கீழ்வரும் தொலைநகல் இலக்கங்களினூடாக தெரியப்படுத்தப்பட முடியுமென்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

மாவட்டம்	தொலைநகல்	மாவட்டம்	தொலைநகல்
கொழும்பு கம்பஹா களுத்துறை	011 2877634	திருகோணமலை மட்டக்களப்பு அம்பாறை	011 2877638
கண்டி மாத்தளை நுவரெலியா	011 2877635	அநுராதபுரம் பொலன்நறுவை	011 2877639
காலி மாத்தறை அம்பாந்தோட்டை	011 2877636	குருநாகல் புத்தளம்	011 2877640
முல்லைத்தீவு வவுனியா முன்னார்	011 2877637	பதுளை மொனராகலை	011 2877641
		கேகாலை இரத்தினபுரி	011 2877642

தேர்தல்கள் செயலகம்
சரண மாவத்தை
இராஜகிரிய
2011.03.15

தயானந்த திசாநாயக்க
தேர்தல்கள் ஆணையாளர்

ஊடக அறிவித்தல் – இல 03

உள்ளூரதிகார சபைத் தேர்தல் – 2011 (2ஆம் கட்டம்)
தேர்தல் முறைப்பாட்டு மத்திய நிலையம்

26. வாக்கெடுப்பு மு.ப 7.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு, பி.ப 4.00 மணி வரை அதனைத் தொடராக நடாத்திச் சென்று நிறைவு செய்யப்படவுள்ளது. மு.ப 7.00 மணிக்கு வரிசையின் முதலாவது வாக்காளரின் ஆளடையாளத்தைப் பரீட்சித்து அலுவல்களை ஆரம்பித்தல் வேண்டும். ஆளடையாள ஆவணங்களைப் பரீட்சிப்பதற்காக விஷேட அலுவலரொருவரை ஈடுபடுத்தல் வேண்டும். பி.ப 4.00 மணி வரை மாத்திரம் வாக்குச் சீட்டு விநியோகிக்கப்பட வேண்டுமென்பதோடு, வாக்குச் சீட்டுக்களைக் கையில் வைத்திருக்கின்ற வாக்காளர்கள் அனைவருக்கும் வாக்களிப்பதற்கு சந்தர்ப்பமளித்தல் வேண்டும்.

27. வாக்கெடுப்பை உரிய நேரத்தில் ஆரம்பிப்பதற்கு அல்லது அவ்வலுவல்களை நிறைவு செய்ய வேண்டிய உரிய நேரம் வரை இடையூறுகளின்றி நடாத்தி செல்ல முடியாத விதத்தில் தடையொன்று ஏற்படுமாயின், அவ்வாறான சந்தர்ப்பங்கள் தொடர்பாக விரிவான அறிக்கையொன்றை குறிப்பேட்டில் உட்சேர்த்தல் வேண்டும். வாக்கெடுப்பு அலுவல்களை எவ்வித இடையூறுகளுமின்றி உரிய நேரத்திற்குள் ஆரம்பித்து அவ்வலுவல்களை நிறைவு செய்ய வேண்டிய உரிய நேரம் வரை பேணிச் சென்ற போது அந்நிலைமையையும் விபரக் குறிப்பேட்டில் உரிய பகுதியில் அறிக்கையிட்டு அவ்வறிக்கை "Z" (இசட் எழுத்து) உறையிலிடுதல் வேண்டும்.

28. வாக்குச் சீட்டுக் கணக்கை மிகச் சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கையெடுத்தல் வேண்டும். அவ்வாறின்றேல், வாக்கெண்ணும் சந்தர்ப்பத்தில் பாரிய சிக்கல்கள் ஏற்பட முடியும். வாக்குச் சீட்டுக் கணக்கின் பிரதியொன்றை வாக்கெடுப்பு நிலைய முகவர்களுக்கும் விநியோகித்தல் வேண்டும். இதனை கனிட்ட தலைமை தாங்கும் அலுவலரொருவருக்குக் கையளிக்க முடியும். அந்த வாக்குச் சீட்டுக் கணக்கின் பிரதியைக் கையளிக்க வேண்டியது கட்சியொன்றினால் அல்லது குழுவொன்றினால் அதற்காக எவரேனும் முகவரொருவருக்கு அதிகாரம் கையளிக்கப்பட்டிருப்பின், அவ்வாறு அதிகாரம் கையளிக்கப்பட்டுள்ள வாக்கெடுப்பு நிலைய முகவருக்கு மாத்திரமாகும். அதிகாரம் கையளிக்கப்பட்ட முகவரொருவரில்லையெனில், இரண்டு முகவர்களில் ஒருவருக்கு அப்பிரதியைக் கையளித்தல் வேண்டும்.

29. கடமையிலீடுபட்டுள்ள எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எதிர்பாராத பிரச்சினையொன்று ஏற்படுமாயின், அதனை மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர், மாவட்ட பிரதி/ சிரேட்ட உதவி/ உதவி தேர்தல்கள் ஆணையாளருக்கு அல்லது வலயப் பொறுப்பு உதவித் தெரிவத்தாட்சி அலுவலருக்கு தெரிவித்து உரிய அறிவுறுத்தல்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும். அவ்வாறான சந்தர்ப்பமொன்றில் அதுபற்றி ஜேர்னலில் (குறிப்பேட்டில்) குறிப்பிடுதல் வேண்டும்.

30. வாக்கெடுப்பு நிறைவடைந்த பின்னர், வாக்குப் பெட்டியின் மேல் பகுதியை மூடி ஸ்ரிக்கர் மூலம் பெட்டியை பொறியிடுதல் வேண்டும். வாக்கெடுப்பு நிலைய முகவர்களுக்கு வாக்குப் பெட்டியில் ஏதேனும் ஸ்ரிக்கரொன்ற ஒட்டுவதற்கு இடமளித்தல் வேண்டும் அவ் ஸ்ரிக்கர் கட்சிகளின் பெயர், சின்னம் போன்றவற்றை கொண்டதாகவிருத்தல் கூடாது. ஒட்டப்படுகின்ற ஸ்ரிக்கரின் மாதிரியொன்றைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்பதோடு, அம்மாதிரி வாக்குப் பெட்டியோடு வாக்கெண்ணல் நிலையத்தில் கையளிக்கப்படல் வேண்டும்.

31. வாக்குப் பெட்டிகளை எடுத்துச் செல்லும் போது பாதுகாப்புக்காக வழங்கப்பட்டுள்ள பொலிதீன் உறையிலிட்டு வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு பூட்டை பொருத்துதல் வேண்டும். அது தொடர்பாக தனியான அறிவுறுத்தல் படிவமொன்று இணைக்கப்பட்டுள்ளது. சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர் வாக்குப் பெட்டியை எடுத்துச் செல்கின்ற வாகனத்திற்குப் பின்னால் முகவரொருவருக்கு பயணம் செய்வதற்கு வசதி செய்யப்பட்டுள்ளதால், அதற்கு அதிகாரம் கையளிக்கப்பட்டுள்ள முகவருக்கு அல்லது அதிகாரம் கையளிக்கப்படவில்லையெனில், ஒரு முகவருக்கு சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரினால் அனுமதிப் பத்திரமொன்று விநியோகிக்கப்படல் வேண்டும். தேவையான அனுமதிப் பத்திரங்கள் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தினால் உங்களுக்குக் கையளிக்கப்படும்.

32. வாக்கெடுப்பு நிலையத்தில் பொருட்களாதியவற்றை கையளிப்பதற்கான அறிவித்தல் படிவம் இரண்டு பிரதிகளில் பூரணப்படுத்தப்படல் வேண்டுமென்பதோடு, தெரிவத்தாட்சி அலுவலரினால் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கமைய பொருட்களாதியவை கையளிக்கப்படல் வேண்டும். பொருட்களாதியவற்றை கையளிக்க வேண்டியது வாக்கெடுப்புக்கு முந்திய தினம் பொருட்களாதியவற்றை கையேற்றுக் கொண்ட இடத்தின் பொருட்களைக் கையேற்கும் அலுவலரிடமென்பதை தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

மஹிந்த தேசப்பிரிய
தேர்தல்கள் ஆணையாளர்

தேர்தல்கள் செயலகம்
சரண மாவத்தை
இராஜகிரிய

குறிப்பு - கடந்த முறையைப் போன்றே இம்முறையும் வாக்களிப்பு நிலையங்களில் வாக்குச் சீட்டுக்களை அடையாளமிடுவதற்காக பயன்படுத்தப்பட வேண்டியது தலைமை அலுவலகத்தினால் வழங்கப்பட்டுள்ள கபில நிறத்திலான பேனாவினால் மாத்திரமாகும். அடிக்கடி வாக்களிப்புச் சிற்றறையைப் பரீட்சித்துப் பார்த்து மேற்குறித்த பேனா வாக்களிப்பு சிற்றறையினுள் உள்ளதென்பதை உறுதி செய்து கொள்ளல் வேண்டும். கடந்த முறை சில வாக்கெடுப்பு நிலையங்களில் இது நடைமுறைப்படுத்தப்படவில்லையென முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

தேர்தல் கண்காணிப்பு நிறுவனங்களின் பணிக்குழுவினர் மற்றும் கண்காணிப்பாளர்கள் ஆகியோருக்காக வெளியிடப்படுகின்ற ஒழுக்கநெறிக் கோவை

01. தேர்தல் கண்காணிப்பு நிறுவனமொன்றின் பணிப்பாளர் சபை அங்கத்தினர், நடமாடும் கண்காணிப்பாளர்கள் மற்றும் வாக்கெடுப்பு நிலைய கண்காணிப்பாளர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்ற நபர்கள் கடந்த 07 ஆண்டுகளுக்குள் தொழிற்பாட்டு அரசியலில் ஈடுபடாதவர்களாகவிருத்தல் வேண்டும். தேர்தல்களில் வேட்பாளர்களாக போட்டியிடாத வாக்காளர்களாகத் தகைமை பெற்றுள்ள நடுநிலையாளர்களாகவிருத்தல் வேண்டும். அனைத்து அலுவலர்களும் கண்காணிப்பாளர்களும் சத்தியக் கடதாசியொன்றின் / உறுதியுரையொன்றின் மூலம் அதனை உறுதிப்படுத்த வேண்டுமென்பதோடு, தேவைப்படுமிடத்து பரிசீலிக்கத்தக்க விதத்தில் அச்சத்திய வெளிப்படுத்துகைகள் / உறுதியுரைகள் கண்காணிப்பு நிறுவனத்தின் பொறுப்பில் பாதுகாப்பாக வைக்கப்படல் வேண்டும். (சத்தியத்தின் / உறுதியுரையின் மாதிரியின் பிரதியொன்று இத்தோடிணைக்கப்பட்டுள்ளது.)

02. தேர்தல் கண்காணிப்பு நிறுவனமொன்றின் எவரேனுமோர் அலுவலர் அல்லது கண்காணிப்பாளர் அரசியல் தொடர்புகளின் காரணமாக அரசாங்கம் அல்லது வேறேதேனும் நிறுவனமொன்றின் மூலம் வழங்கப்பட்டுள்ள ஏதேனும் பதவியை வகிப்பவராகவோ அல்லது கடந்த 07 ஆண்டு காலப்பகுதிக்குள் அத்தகைய பதவியை வகித்த ஒருவராகவோ காணப்படாமை.

03. கண்காணிப்பு நிறுவனங்களினால் அரசியல் கட்சியொன்றிற்கு அல்லது சுயேச்சைக் குழுவொன்றிற்கு உரித்தான கட்டிடங்கள், வாகனங்கள், தொலைபேசி வசதிகள் போன்றவற்றை தமது கண்காணிப்பு நிறுவனத்தின் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தாமை.

04. தேர்தல்கள் கண்காணிப்பு நிறுவனத்தின் பணிப்பாளர் சபையின் அங்கத்தினர்கள் அல்லது அலுவலர் குழாத்தின் அங்கத்தினர்கள், கண்காணிப்பாளர்கள் எந்தவோர் அரசியல் கட்சி அல்லது சுயேச்சைக் குழுவின் நோக்கங்களுக்கமைய நடவடிக்கைகளில் ஈடுபடாமை.

05. தேர்தல் கண்காணிப்பு நிறுவனங்களினூடாக தேர்தலோடு தொடர்புடைய ஊடக அறிவித்தல்கள் மற்றும் அறிக்கைகள் வெளியிடப்படுகின்ற போது ஏதேனுமொரு கட்சியை அல்லது குழுவை இன்றேல் வேட்பாளரொருவரை ஊக்குவிக்கத்தக்கவாறோ அல்லது பாதிப்புக்களை ஏற்படுத்தத்தக்கவாறோ வெளிப்படுத்துகைகளை வெளியிடாமையும் நடுநிலைத் தன்மையைப் பேணலும்.

06. தேர்தல் கண்காணிப்பு நிறுவனங்களினால் தேர்தல் திணைக்களத்தின் பணிகள் தொடர்பாக தேர்தல்கள் ஆணையாளரை அறிவூட்டாது ஊடக அறிவித்தல்களையோ அல்லது ஊடக வெளிப்படுத்துகைகளையோ வெளியிடாமை.

07. கண்காணிப்பு நிறுவனத்தின் பணிப்பாளர் குழு, அலுவலர்கள் மற்றும் கண்காணிப்பாளர்கள் ஆகிய அனைவரும் கண்காணிப்புப் பணிகள் தொடர்பாக ஆற்றுகின்ற அனைத்து அலுவல்களிலும் பக்கச்சார்பற்ற தன்மை முழுமையாக அனுஷ்டிக்கப்பட வேண்டுமென்பதோடு, நடத்தையிலும் பேச்சிலும் பக்கச்சார்பற்ற தன்மை வெளிப்படுத்தப்படல் வேண்டும். அதேபோன்று பக்கச்சார்பற்ற முறையில் நடந்துகொள்வதை அடுத்தவர்களுக்கும் உணரச் செய்தல் வேண்டும்.

08. எவரேனும் ஒரு கண்காணிப்பாளர் பக்கச்சார்பாக நடந்துகொள்வதாக ஏதேனும் முறைப்பாடு கிடைக்கப்பெற்றவுடன் அவரை அக்கண்காணிப்புப் பணியிலிருந்து அகற்றி துரிதமாக உரிய முறைப்பாட்டை விசாரித்தல் வேண்டும்.

09. வாக்கெடுப்பு நிலையத்தினுள்ளிருந்து கண்காணிப்பில் ஈடுபட அனுமதியுள்ள கண்காணிப்பாளர் வாக்கெடுப்பு நிலையப் பணியாட் குழுவினர், வாக்கெடுப்பு நிலைய முகவர்கள், வாக்காளர்களோடு தேவையற்ற அளவளாவலில் ஈடுபடக்கூடாது, தேர்தலின் அனைத்து நடவடிக்கைகள் தொடர்பாகவும் இரகசியத்தைப் பேணலும், வாக்கெடுப்பு நிலையத்தில் அது தொடர்பான வெளிப்படுத்துகையொன்றில் கையொப்பமிட்டு சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலருக்குக் கையளித்தலும் அவசியமாகும்.

10. நடமாடும் மற்றும் வாக்கெடுப்பு நிலையத்தினுள் கண்காணிப்பில் ஈடுபட்டுள்ள கண்காணிப்பாளர்களை எளிதில் அடையாளம் கண்டுகொள்ள முடியுமான விதத்தில் சீருடையொன்றையோ அல்லது பொருத்தமான விஷேட ஆடையொன்றையோ அணிந்திருத்தலும் தேர்தல் தினதன்று கண்காணிப்பில் ஈடுபடுகின்ற போது மது அருந்தல் மற்றும் புகைபிடித்தல் என்பவற்றைத் தவிர்ந்துகொள்ளலும் அவசியமாகும்.

எனது இலக்கம் ;LAE/11/04/(03)
உமது இலக்கம் ;
திகதி 2011.08.05

சனாதிபதி செயலாளர்
அமைச்சரவைச் செயலாளர்
பிரதம மந்திரி செயலாளர்
அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள்
அரச சேவை ஆணைக்குழுவின் செயலாளர்
அனைத்து மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்
குறித்த மாவட்டச் செயலாளர்கள்
அனைத்து மாகாண ஆளுநர்களின் செயலாளர்கள்
அனைத்து மாகாண அரச சேவை ஆணைக்குழுக்களின் செயலாளர்கள்

உள்ளூரதிகார சபைத் தேர்தல் – 2011 (3 ஆம் கட்டம்)
அரசாங்க மற்றும் அரச கூட்டுத்தாபனங்களுக்குரிய ஆதனங்களை தேர்தல் கால எல்லைக்குள் பயன்படுத்தல்.

01. 1699/35 ஆம் இலக்க மற்றும் 2011 மார்ச் மாத 30 ஆம் திகதிய அதிவிஷேட வர்த்தமானியூடாக 2011 திசெம்பர் 31 ஆம் திகதி வரை பதவிக் காலம் நீடிக்கச் செய்யப்பட்ட 23 உள்ளூர் அதிகார சபைகளுக்கான வேட்புமனுக் கோரும அறிவித்தல்கள் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 26 ஆம் பிரிவுக்கமைய உரிய தெரிவத்தாட்சி அலுவலர்களினால் 2011.08.04 ஆம் திகதி பிரகடனப்படுத்தப்பட்டது.

02. பதினேழாம் அரசியலமைப்புத் திருத்தத்திக் 104ஆ(4)(அ) உறுப்புரைக்கமைய வேட்புமனு அறிவித்தல் பிரகடனப்படுத்தப்பட்ட நாள் முதல் தேர்தல் நடாத்தப்பட்டு பெறுபேறுகள் வெளியிடப்பட்டு முடிவடையும் வரையிலான காலம் ''தேர்தல் காலத்திற்கு'' உரித்தானதாகும். அவ்வுறுப்புரைக்கமைய தேர்தலொன்று நடாத்தப்படுகின்ற காலக்கெடுவிற்குள் ஏதேனுமோர் அரசியல் கட்சியை அல்லது சுயேச்சைக் குழுவை தேர்ந்தெடுக்கும் அல்லது ஊக்குவிக்கும் அல்லது தடுக்கும் நோக்கத்தில் அல்லது எவரேனும் ஒரு வேட்பாளரின் வேட்பாண்மையை ஊக்குவிக்கும் அல்லது தடுக்கும் நோக்கில அல்லது ஏதேனுமொரு கட்சி, ஒரு சுயேச்சைக் குழு அல்லது ஒரு வேட்பாளர் அரசாங்கத்திற்கு அல்லது ஏதேனுமொரு அரச கூட்டுதாபனத்திற்கு சொந்தமான ஏதேனும் அசையும் அல்லது அசையா ஆதனமொன்றை பயன்படுத்துவதைத் தடைசெய்யும் அதிகாரம் தேர்தல்கள் ஆணையாளருக்குண்டு.

03. மேலும் அவ்வுறுப்புரையின் கீழ் தேர்தல்கள் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படுகின்ற விதிமுறைகளை செயல்படுத்த அரசாங்க சொத்துக்களுக்குப் பொறுப்பாகவுள்ள அனைத்து அலுவலர்களும் கட்டுபாடுடையவர்களாவர். தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்காக அரசிற்குச் சொந்தமான மோட்டார் வாகனங்கள், ஜீப்வண்டிகள் ஆகிய வாகனங்கள் மற்றும் ஹெலிகொப்டர்கள் போன்ற வானூர்திகள் ஈடுபடுத்தப்படுவதாக கடந்த தேர்தல்களின் போதும் இத்திணைக்களத்திற்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. ஆகவே, அரச வாகனங்களுக்குப் பொறுப்பாகவுள்ள அனைத்து அலுவலர்களும் அவ்வாகனங்கள் ஏதேனுமோர் அரசியற் கட்சியின், சுயேச்சைக் குழுவின் அல்லது வேட்பாளரொருவரின் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படாத விதத்தில் தேர்தல்கள் காலக்கெடுவிற்குள் வாகன குழாத்தினை பேணுதல் தொடர்பாக முனைப்பான கவனத்தோடு, நடந்து கொள்ள வேண்டுமென்பதை வலியுறுத்திக் கூற விரும்புகின்றேன். அலுவலர்களுக்குக் குறித்தொதுக்கப்பட்டுள்ள (Assiged Vechicles) அரசியற்கு சொந்தமான வாகனங்கள் மற்றும் ஏனைய வாகனங்கள் எனபவற்றிற்கான ஓட்ட அட்டவணைகள் முறையாக பேணப்படல் வேண்டுமென்பதோடு, இந்த ஓட்ட அட்டவணைகள் பதவிநிலை அலுவலர் ஒருவரினால் அன்றாடம் பரிசீலிக்கப்பட்டு அந்த வாகனங்கள் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படுவதில்லையென திருப்தி காணுதல் வேண்டும்.

04. அரச வளங்களான அலுவலகக் கட்டிடங்கள், பாடசாலைகள், அரசிற்குச் சொந்தமான வேறு கட்டிடங்கள் மற்றும் சுற்றுலா விடுதிகள் கூட்டங்கள், கலந்துரையாடல்கள் என்பவற்றிற்குப் பயன்படுத்தப்படக்கூடாது. தேர்தல்கள் பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு அரசிற்குச் சொந்தமான சுற்றுலா விடுதிகள், வாடி வீடுகள், விடுமுறை விடுதிகள் என்பவற்றை கட்டணமின்றி வழங்குதல் முற்றிலும் தடையென்பது கருத்தில் கொள்ளப்படல் வேண்டும். ஏதேனுமொரு கட்சி அல்லது சுயேச்சைக் குழு கட்டணம் செலுத்தி இவ்வசதிகளை குறித்தொதுக்கிக் கொள்கின்ற போது ஒரே கட்சிக்கு அல்லது நபருக்கு தொடர்ந்தும் அவற்றை வழங்குவதைத் தவிர்த்துக் கொள்ளல் வேண்டும். அரசியற்குச் சொந்தமான கட்டிடங்கள் மற்றும் அவை அமையப்பெற்றுள்ள காணிகள் என்பன அரசியல் கட்சிகளதும், வேட்பாளர்களினதும் அரசியல் தேர்தல் பிரச்சார அறிவித்தல்கள், சுவரொட்டிகள், பதாகைகள் போன்றவற்றின் காட்சிப்படுத்தலுக்காகப் பயன்படுத்தவும் இடமளிக்கக் கூடாது.

05. தேர்தல் காலப் பகுதிக்குள் அரச நிதியை செலவிட்டு நடாத்தப்படுகின்ற பல்வேறு விதத்திலான சேவைகள், அரசாங்க பொருட்களாதிகளைப் பகிர்ந்தளித்தல், கண்காட்சிகள், திறப்பு விழாக்கள், வரவேற்புக்கள், பிரிவுபசாரங்கள், களியாட்டங்கள், விளையாட்டுப் போட்டிகள் போன்ற விழாக்களும் சிற்சில உதவி வழங்கல்களுக்கான பட்டியல்களைத் தயாரித்தல் போன்ற பணிகளும் அரசியலோடு, தொடர்புபட்ட நபர்களின்

பங்களிப்போடு மேற்கொள்ளப்படுகின்ற அதேவேளை, அச்சந்தர்ப்பங்களில் தேர்தலோடு, தொடர்புடைய பல்வேறு கருத்துக்கள் அவர்களால் வெளிப்படுத்தப்படக்கூடிய சாத்தியங்களுண்டு. இத்தகைய கருத்து வெளிப்பாடுகள் தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களின் வேட்பாண்மை முறையற்ற விதத்தில் பாதிக்கக்கூடும். மேலும் இத்தகைய விழாக்களை ஒழுங்கமைக்கும் பொறுப்பு அமைச்சுக்களிலும், திணைக்களங்களிலும் அல்லது மாவட்டங்களிலும் பணியாற்றுகின்ற அரச அலுவலர்களுக்கு சாட்டப்படுவதால் தேர்தல் காலத்தில் பல்வேறு கடமைகள் பொறுப்பவிக்கப்படுகின்ற இவ்வலுவலர்கள் இத்தகைய விழாக்களை நடாத்துவதை தவிர்ந்து கொள்வது சாலப் பொருத்தமென சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

06. 18 ஆம் அரசியலமைப்புத் திருத்தத்திற்கமைய அரசாங்க சேவை ஆணைக்குழு மற்றும் நீதிமன்ற சேவை ஆணைக்குழுவின் நிருவாக எல்லைக்குட்பட்ட விடயங்களுக்கு 17 ஆம் திருத்தத்திலுள்ள மட்டுப்பாடுகள் பொருத்தாது. அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படுகின்ற ஆட்சேர்ப்புக்கள், நியமனங்கள் மற்றும் பதவியுயர்வுகள் என்பன அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைக்கமைய அங்கீகரிக்கப்பட்ட முறைமைகளூடாக விண்ணப்பங்களைக் கோரப்பட்டு பரீட்சைகள் மற்றும் நேர்முகப் பரீட்சைகள் என்பன முறையாக நடாத்தப்பட்டு வெளிக்காட்டி நிற்கும் தன்மையுடன் கூடியதாக உரிய முறையில் அத்தகைய ஆட்சேர்ப்புக்கள், நியமனங்கள் மற்றும் பதவியுயர்வுகள் தொடர்பாக தேர்தல்கள் ஆணையாளரை அறிவூட்டியிருத்தல் தேர்தலோடு தொடர்புடைய நீதிமன்றச் செயன்முறைகளில் பதிலளிப்பதற்கு பெரிதும் பயனுடையதாயிருக்கும். வழமையான செயன்முறைக்கு அப்பால் ஏதேனும் ஓர் ஆட்சேர்ப்பு, பதவியுயர்வு மேற்கொள்ளப்பட வேண்டிய பிரத்தியேக தேவைபாடொன்று ஏற்படின், அத்தகைய சந்தர்ப்பத்தில் அது தொடர்பாக தேர்தல்கள் ஆணையாளரை அறிவூட்டி அவரின் இணக்கப்பாட்டோடு, அவ்வலுவல்களை மேற்கொள்ளல் மிகப் பொருத்தமாகும். இக்காலக்கெடுவிற்குள் மேற்கொள்ளப்படுகின்ற ஆட்சேர்ப்புக்கள், பதவியுயர்வுகள், இடமாற்றங்கள் என்பன தொடர்பாக கிடைக்கப்பெறுகின்ற முறைப்பாடுகள் பற்றி சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பாகவும் முக்கியமாக ஏதேனும் ஓர் உள்ளூரதிகார சபையின் உறுப்பினரைத் தேர்ந்தெடுக்க செல்வாக்குச் செலுத்தவல்ல ஆட்சேர்ப்புக்கள், நியமனங்கள் அல்லது பதவியுயர்வுகள் எதுவும் மேற்கொள்ளப்படாமலிருக்க நடவடிக்கை எடுத்தல் தொடர்பாகவும் அனைத்து அலுவலர்களும் கவனம் செலுத்துதல் வேண்டும். தேர்தல்கள் ஆணையாளரை பிரதிவாதியாகக் குறிப்பிட்டு சமர்பிக்கப்படுகின்ற நீதிமன்ற நடவடிக்கைகளில் அவை தொடர்பான உண்மை நிலைமையை நீதிமன்றத்திற்கு அறிவிக்க வேண்டி வருவதால் உரிய நடைமுறையைப் பின்பற்றாமையினைத் தவிர்ந்து கொள்ளல் மிகப் பொருத்தமான ஒன்றென்பதை அனைவருக்கும் அறிவிக்க விரும்புகின்றேன். தேர்தல் நடாத்தப்படவுள்ள உள்ளூர் அதிகார சபை எல்லைகளுக்குள் கடமையில் ஈடுபட்டுள்ள அலுவலர்கள் தொடர்பாக மேற்குறித்த பணிகளை மேற்கொள்வதை தற்காலிகமாக இடைநிறுத்தல் பொருத்தமென எண்ணுகின்றேன்.

07. தேர்தல்கள் நடாத்தப்படவிருக்கும் உள்ளூர் அதிகார சபைகள் எல்லைப் பிரதேசங்களினுள் கடமையாற்றும் ஆசிரியர்கள் உள்ளிட்ட அரச அலுவலர்களையோ கூட்டுத்தாபன அலுவலர்களையோ தேர்தல் காலப்பகுதியினுள் அதாவது ஆகஸ்ட் மாதம் 04 ஆம் திகதி முதல் வாக்கெடுப்பு முடிவடைந்து பெறுபேறுகள் வெளியிடப்படும் வரை ஒழுக்காற்று நடவடிக்கைகள் காரணமாகவோ, கட்டாயத் தேவையொன்றின் காரணமாகவோ இடமாற்றம் செய்ய வேண்டியேற்படின், அரசியல் காரணமாக அவ்விடமாற்றம் மேற்கொள்ளப்பட்டதாக முறைப்பாடுகள் கிடைக்க முடியாதவாறு மேற்கொள்வது பற்றி ஆட்சேபனை கிடையாது. முடிந்தளவு அவ்வாறான இடமாற்றங்களை தேர்தலின் பின்னர் மேற்கொள்வது உசிதமாகும்.

08. இத்தேர்தல்களில் உள்ளூர் அதிகார சபை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதை ஊக்குவிக்கக்கூடிய அல்லது தடுக்கக்கூடிய அலுவல்களுக்காக அரச ஆதனங்களைப் பயன்படுத்தப்படுவதைத் தவிர்க்கத்தக்கவாறான இத்தடைகளை கடுமையாக அனுமதிக்குமாறு உங்களுக்கு ஆலோசனை கூற விரும்புகின்றேன். மேலும், தங்களின் கீழுள்ள திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களின் தலைவர்களுக்கும் இது தொடர்பான அறிவுறுத்தல்களை வழங்குமாறு தயவன்புடன் அறிவித்துக் கொள்கின்றேன்.

09. இக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை செயல்படுத்துவதை மேற்பார்வை செய்வதற்காக அமைச்சின் நிருவாக விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள மேலதிக செயலாளரோ அல்லது சிரேட்ட உதவி செயலாளரோ அல்லது அதற்குச் சமமான பதவியொன்றை வகிக்கின்ற அலுவலர் ஒருவரோ பெயர் குறிக்கப்படல் வேண்டும். ஏனைய திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள் சிரேட்ட பதவிநிலை அலுவலரொருவரை இவ்விடயத்திற்காக ஈடுபடுத்த வேண்டுமெனவும் குறிப்பிட விரும்புகின்றேன்.

10. தேர்தலோடு தொடர்புடைய அனைத்து சட்டங்களையும் வலுவாக்கம் செய்ய, பாதுகாக்க தேர்தல்கள் ஆணையாளருக்கு ஒத்துழைப்பு வழங்குவது உரிய சட்டங்களை வலுவாக்கம் செய்ய பொறுப்பாக உள்ள அனைத்து அரச அலுவலர்களினதும் பணியாக இருக்க வேண்டுமென அரசியலமைப்பின் 104ஆ(2) ஆம் உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயம் தொடர்பாக தங்களது அதிகூடிய கவனம் ஈர்க்கப்படல் வேண்டுமென தெரிவிக்க விரும்புகின்றேன்.

11. இச்சுற்றறிக்கைக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் மற்றும் அமைச்சுக்களின் பணியாட் குழுவினர்கள் ஆகியோரை அறிவூட்டும் பொறுப்பு அமைச்சின் செயலாளரையே சாரும்.

12. அரசியயலமைப்பில் குறிப்பிட்டுள்ள விடயங்களுக்கு மேலதிகமாக தங்களது அமைச்சின்/ திணைக்களத்தின்/ நிறுவனத்தின் பிரதான கணக்கீட்டு அலுவலர்/ கணக்கீட்டு அலுவலர் என்ற வகையிலும் அரசுக்கு சொந்தமான சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்துவதை தவிர்ப்பதும் உரிய அலுவலர்களின் கடமையொன்று என்பதை ஈண்டு குறிப்பிட விரும்புகின்றேன்.

13. முறைப்பாடுகள் மற்றும் தேர்தலோடு தொடர்பான சட்டங்களை மீறுதல் வன்முறைச் சம்பவங்கள் என்பன தொடர்பான முறையீடுகள் பற்றி நடவடிக்கை எடுக்க தேர்தல்கள் திணைக்களம் மற்றும் பொலிஸ் திணைக்களம், அரசியற் கட்சிகள் மற்றும் கண்காணிப்புக் குழுக்களை உள்ளடக்கிய முறைப்பாட்டு நிலையமொன்று 2011 செப்தெம்பர் 01 ஆம் திகதி முதல் 2011 ஒக்தோபர் மாதம் 31 ஆம் திகதி வரை தேர்தல்கள் செயலகத்தில் செயல்படுத்தப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இச்சுற்றறிக்கைக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் மீறப்பட்டமை தொடர்பாக கிடைக்கப்பெறுகின்ற முறையீடுகள் பற்றி அந்நிலையத்திற்கு உடனுக்குடன் அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்படுமென்பதையும் தயவுசெய்து அறியத் தருகின்றேன். அப்போது அந்நிலையத்தினால் உரிய அதிகாரியிடம் விசாரித்தறிந்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

14. கடந்த தேர்தல்கள் நடைபெற்ற காலக்கெடுவுக்குள் சில உள்ளூர் அதிகார சபைகள் மற்றும் மாகாண சபைகள் என்பவற்றின் மேற்குறித்த விதத்திலான அரசாங்கத்திற்குச் சொந்தமான மனிதவள மற்றும் பௌதீகவள ஆதனங்கள் முறையற்ற விதத்தில் பிரயோகிக்கப்படுவதற்காக எடுக்கப்பட்ட முயற்சிகள் தொடர்பாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றவுடன், அவற்றை தடுத்து நிறுத்தவோ அல்லது அத்தியவசியமானவை எனக் குறிப்பிடப்பட்ட சில விடயங்களை ஒத்திவைக்கவோ அறிவுறுமத்தல்கள் வழங்க வேண்டி வந்தமை பற்றி வலியுறுத்திக்கூற விரும்புகின்றேன். அத்தகைய சந்தர்ப்பங்களில் அரச நிறுவனங்களின் செயற்பாடுகளுக்கெதிராக எதிரான கட்சிகளைச் சேர்ந்த வேட்பாளர்களிடமிருந்து மாத்திரமன்றி ஒரே கட்சியில் போட்டியிட்ட வேட்பாளர்களிடமிருந்துகூட முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றமை பற்றிக் குறிப்பிட விரும்புகின்றேன். இத்தகைய நிலைமை தொடர்பாக அரசியற் கட்சிகள் மற்றும் கண்காணிப்புக் குழுக்கள் என்பன அடிக்கடி வினவுவதோடு, இத்தகைய நடவடிக்கைகள் தேர்தல் ஊழல் செயற்பாடுகள் என கருதப்பட்டு நீதிமன்றச் செயன்முறைகளுக்குக்கூட இட்டுச் செல்வதற்குக் காரணமாக அமையக்கூடும். என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

15. ஏதேனும் காரணமொன்றினால் எவ்விதத்திலும் நடாத்தப்படாமலிருக்கவோ அல்லது ஒத்திவைக்கப்படவோ முடியாத மேற்குறித்த ஏதேனுமொரு விடயத்தை கட்டாயம் நிறைவேற்ற வேண்டியிருப்பின், அதுதொடர்பான எனது எழுத்து மூல முன்னனுமதியை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்குமாறும் தயவன்புடன் அறிவித்துக் கொள்கின்றேன்.

16. அரசாங்க சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்துதல் தொடர்பாக கிடைக்கப்பெறுகின்ற முறைப்பாடுகள் அனைத்தும் அரசியல் கட்சிகள் மற்றும் கண்காணிப்புக் குழுக்களின் கோரிக்கைக்கமைய அறிந்து கொள்ளும் பொருட்டு அனுப்பப்பட வேண்டி வருகின்ற அதேவேளை, மேலதிக நடவடிக்கைக்காக பொலீஸ் மா அதிபருக்கு இலஞ்ச அல்லது ஊழல் ஒழிப்புப் பணியகத்திற்கும், நிதி ஆணைக்குழுவுக்கும், மனித உரிமை ஆணைக்குழுவுக்கும், கணக்காய்வாளர் நாயகத்திற்கும் அனுப்பப்பட வேண்டியுள்ளது. அத்தகைய சந்தர்ப்பங்களில் இத்தகைய முறையற்ற பிரயோகத்திற்கு இடமளித்த அரச அலுவலர்களுக்கும் அது தொடர்பாக பொறுப்புக்கூற வேண்டிய நிலை ஏற்படுமென்பதையும் தயவுசெய்து கவனத்திற் கொள்ளவும்.

17. நேர்மையானதும், சுதந்திரமானதுமான தேர்தலொன்றை நடாத்துவதற்காக அனைத்து அரசாங்க அலுவலர்களினதும் ஒத்துழைப்பு அத்தியாவசியமாதலால் இச்சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செயற்படுவதனூடாக தேர்தலோடு தொடர்புடைய சட்டங்களுக்கமைய நேர்மையானதும், சுதந்திரமானதுமான தேர்தலொன்றை நடாத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

மஹிந்த தேசப்பிரிய
தேர்தல்கள் ஆணையாளர்

பிரதி – 1. கணக்காய்வாளர் நாயகம் – அறிந்து கொள்வதற்காக.
2. உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள் மற்றும்
3. உரிய பிரதி/ சிரேட்ட உதவி/ உதவித் தேர்தல்கள் ஆணையாளர்கள் –
அறிந்து கொள்வதற்காக உங்களது மாவட்டத்தின் அனைத்து பிரதேச செயலாளர்களால் மற்றும் உரிய மாநகர ஆணையாளர்கள், நகர சபைகள் மற்றும் பிரதேச சபை செயலாளர்கள் ஆகியோருக்கு இக்கடிதத்தின் பிரதி அனுப்பி வைப்பதற்காகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நடவடிக்கை எடுப்பதற்குமென அறிவிப்பதற்கு.

உள்ளூராதிகார சபைத் தேர்தல் – 2011 (3 ஆம் கட்டம்)
அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களுக்கான வழிகாட்டு நெறிகள்

01. அரசியலமைப்புக்குக் கொண்டுவரப்பட்ட 17 ஆம் திருத்தத்தினூடாக சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலொன்று நடாத்தப்படுவதை உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு தேர்தல்கள் ஆணைக்குழுவினால் வானொலி அல்லது தொலைகாட்சி சேவைகளை நடாத்திச் செல்கின்ற ஒருவர் அல்லது ஏதேனும் செய்திப் பத்திரிகையொன்றின் உரிமையாளர் ஒருவருக்கு அல்லது பிரசுரிப்பாளர் ஒருவருக்கு பொருத்தமெனக் கருதக்கூடிய வழிகாட்டல்களை காலத்துக்குக் காலம் விநியோகிக்க அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதற்கமைய கடந்த தேர்தல்களின் போது அனைத்து ஊடக நிறுவனங்களுக்கும் அக்குறித்த தேர்தலுக்கும் பொருத்தமான விதத்திலான வழிகாட்டல்களை வெளியிட தேர்தல்கள் ஆணையாளரினால் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

17 ஆம் திருத்தத்துக்கமைய இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் மற்றும் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் தவிசாளருக்கு விநியோகிக்கப்படுகின்ற வழிகாட்டல்களுக்கமைய செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதை உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு உரிய தவிசாளர்களால் அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டியிருந்தது. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் அல்லது இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் தவிசாளரினால் அவ்வழிகாட்டல்கள் மீறப்படின், பெயரால் அல்லது பதவியால் தகைமை வாய்ந்த அதிகாரியொருவரை நியமனம் செய்ய 17 ஆம் திருத்தத்தின் மூலம் ஆணைக்குழுவிற்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருந்தது. அத்தகைய சந்தர்ப்பமொன்றில் தேர்தல் முடிவடையும் வரை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் அல்லது ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவத்தைக் கூட அத்தகைமைவாய்ந்த அதிகாரிக்குக் கையளிக்க 17 ஆம் திருத்தத்தினால் அதிகாரமளிக்கப்பட்டிருந்தது.

02. 18 ஆம் திருத்தத்தினூடாக வானொலி அல்லது தொலைகாட்சி சேவையொன்றை நடாத்திச் செல்கின்ற ஒருவருக்கு அல்லது ஏதேனும் பத்திரிகையொன்றின் உரிமையாளர் ஒருவருக்கு அல்லது பிரசுரிப்பாளரொருவருக்கு காலத்திற்குக் காலம் வழிகாட்டல்களை விநியோகிக்க வழங்கப்பட்டிருந்த அதிகாரம் அவ்வாறேயிருக்க, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றை மாத்திரம் ஆணைக்குழுவிற்கு தேவையெனக் கருதுமிடத்து, தகைமைவாய்ந்த அதிகாரியொருவரின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர வழங்கப்பட்டிருந்த அதிகாரம் நீக்கப்பட்டிருக்கின்றது.

இதற்கமைய நாட்டின் அனைத்து இலத்திரனியல் அச்சக ஊடக நிறுவனங்களுக்கு வழிகாட்டல்களை விநியோகிக்க தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு அதிகாரம் உள்ளதோடு, அவ்வூடக நிறுவனங்களின் தவிசாளர்கள் உரிய வழிகாட்டல்களை செயற்படுத்துதல் வேண்டும். இதற்கமைய ஆணைக்குழுவும் ஊடக நிறுவனங்களும் பரஸ்பர புரிந்துணர்வோடு நடந்து கொள்ளல் வேண்டும். மேலும் அரச ஊடகங்களை மாத்திரம் தகைமைவாய்ந்த அதிகாரிகளின் கீழ் நியமனம் செய்வதன் மூலம் தனியார் ஊடகங்களுக்கு நினைத்தவாறு நடந்து கொள்ள வழங்கப்பட்டிருந்த சுதந்திரம் 18 ஆம் திருத்தத்தினால் அகற்றப்பட்டுள்ளது.

03. அதற்கமைய 17 ஆம் திருத்தத்தின் கீழ் விநியோகிக்கப்பட்ட வழிகாட்டி நெறிகளை ஒத்த இத்தேர்தலோடு தொடர்புடைய வழிகாட்டி நெறிகள் அனைத்து ஊடக நிறுவனங்களுக்கும் கீழ்வருமாறு விநியோகிக்கப்படுகின்றன.

3.1. அனைத்து ஊடக நிறுவனங்களும் செய்திகளை ஒலிஃ ஒளிபரப்புச் செய்கையிலும் நடப்புச் செய்தி பிரச்சாரம் செய்கையிலும் சமநிலையாகவும் நடுநிலையாகவும் நடந்து கொள்ளல் வேண்டும்.

3.2. செய்தியறிக்கையில் ஆசிரியரின் கருத்து தெரிவிக்கப்படக் கூடாது. ஆசிரியரின் கருத்து வெளிப்படுத்தப்படும் போது பெரும்பாலும் ஏதேனும் ஒரு கட்சிக்கு பக்கச்சார்பானதும் மற்றும் அதற்கெதிரான கட்சிகளுக்குப் பாதகமானதுமான கருத்துக்கள் முன்வைக்கப்படும் சாத்தியம் காணப்படுகின்றது.

3.3. சனாதிபதியவர்கள், அமைச்சர்கள் ஆகியோரினால் நடாத்தப்படுகின்ற ஊடக கலந்துரையாடல்கள் மற்றும் கருத்து வெளிப்பாடுகள் என்பவற்றினூடாக ஏற்படக்கூடிய அரசியல் ரீதியான கருத்து வேறுபாடுகள் தொடர்பாக எதிரான அரசியல் குழுக்களுக்கும் கருத்துத் தெரிவிக்க சமசந்தர்ப்பங்கள் வழங்கப்படல் வேண்டும்.

3.4. விவரண நிகழ்ச்சியொன்றோ விஷேட நிகழ்ச்சியொன்றோ ஒலிஃ ஒளிப்பரப்புச் செயப்படும். போது அறிவிப்பாளரினதும் ஆசிரியரினதும் பெயர்கள் கட்டாயம் குறிப்பிடப்படல் வேண்டும்.

3.5. குழுக் கலந்துரையாடல்களுக்காக அரசியல் கட்சிகளை தேர்ந்தெடுக்கின்ற போது அனைத்துக் கட்சிகள் மற்றும் குழுக்களுக்கு நியாயமான முறையில் நடந்து கொள்ளல் வேண்டும்.

3.6. தொலைபேசியூடாக நடாத்தப்படுகின்ற நிகழ்ச்சிகளின் அனைத்து அழைப்பாளர்களுக்கும் சம சந்தர்ப்பம் வழங்கப்படல் வேண்டும். அவர்களின் கருத்து எதுவாகவிருந்த போதிலும், அதனை வெளியிட சந்தர்ப்பமளிக்கப்படல் வேண்டும். அத்தகைய நிகழ்ச்சிகளின் தொழிநுட்ப விடயத்தை கையாள்கின்ற அலுவலர்கள் அந்நிகழ்ச்சிகளில் சமநிலைத் தன்மை தொடர்பாக பொறுப்புக் கூறல் வேண்டும்.

3.7. ஏதேனும் இலத்திரனியல் நிறுவனமொன்றின் தவிசாளர், பணிப்பாளர் குழுவின் அங்கத்தினர் ஒருவர் அல்லது ஊழியர் ஒருவர்

அரசியல் நடவடிக்கைகளில் மும்முரமாக ஈடுபாடு கொண்டவராயின் சமநிலையான ஒலிஃ ஒளிபரப்புகளுக்கு தடங்கல் ஏற்பட இடமுண்டு. இதுதொடர்பாகவும் நிறுவனத்தின் முகாமைத்துவம் முக்கியமாக அக்கறைக் காட்டுவது இன்றியமையாததாகும்.

3.8. வாக்கெடுப்புத் தினத்திற்கு 48 மணித்தியாலங்களுக்கு முன்னர் அதாவது 2011.10.05 ஆம் திகதி நள்ளிரவின் பின்னர் கூட்டங்களை நடாத்துவது நிறுத்தப்பட வேண்டுமென்பதோடு, அனைத்து இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களும் முக்கியமாக அக்கறைக் காட்டுவது இன்றியமையாததாகும்.

3.9. அதற்கமைய 2011.10.08 ஆம் திகதி தேர்தல்கள் நடைபெறவுள்ளமையால் 2011.10.05 ஆம் திகதி நள்ளிரவின் பின்னர், எந்தவொரு கட்சியையும் அல்லது எந்தவொரு வேட்பாளரையும் ஊக்குவிக்கதக்கவாறான அறிவித்தல் பிரசுரிக்கப்பட கூடாது. ஆயினும் 2011.10.05 ஆம் திகதி நடாத்தப்பட்ட அரசியல் பிரச்சாரக் கூட்டங்களின் அறிக்கைகளை மாத்திரம் 2011.10.06 ஆம் திகதி ஊடகங்களூடாக பிரச்சாரம் செய்ய முடியும்.

3.10. ஆதலால் பணம் செலுத்தி வெளியிடப்படுகின்ற அறிவித்தல்களோ எந்தவொரு வர்த்தக அறிவித்தலோ இலத்திரனியல், அச்சு ஊடகங்களூடாக பிரச்சாரம் செய்யப்பட ஏற்றுக் கொள்ளப்படக் கூடாது.

3.11. ஏதேனும் ஒரு கட்சி அல்லது வேட்பாளர் ஒருவரின் வெற்றிக்காக இத்தேர்தலில் போட்டியிடுகின்ற வேறொரு கட்சியொன்றின் அல்லது குழுவொன்றின் வேட்பாளர்களினால் வழங்கப்படுகின்ற ஒத்துழைப்பு தொடர்பாக முன்வைக்கப்படுகின்ற அறிவித்தல்கள் மற்றும் நிகழ்ச்சிகள் பிரச்சாரத்திற்காக ஏற்றுக்கொள்ளப்படக் கூடாது.

உள்ளூரதிகார சபைத் தேர்தல் – 2011

மதிப்பிடப்பட்ட தொகை 2,200,000.00

உண்மைச் செலவு (அண்ணளவாக) 2,126,812,337.97

பதிவு செய்யப்பட்ட வாக்குகளின் 13,656,523

ஒரு வாக்காளருக்கான செலவு 155.74

1. தேர்தல் நடாத்தப்பட்ட் மாவட்டத் தேர்தல் அலுவலகங்களினால் செய்யப்பட்ட கொடுப்பனவுகள்			764,776,604.08
2. தலைமை அலுவலகத்தினால் ஏனைய அலுவலகங்களுக்கு மீளளிப்புச் செய்யப்பட்ட கொடுப்பனவுகள்			
	பணியாட் குழு	524,086,031.73	
	ளரிபொருள்	1,568,745.88	525,654,777.61
3. தலைமை அலுவலகத்தினால் கொடுப்பனவு செய்யப்பட்ட ஏனைய செலவுகள்			145,064,243.92
4. ஏனைய திணைக்களங்களுக்கு செய்யப்பட்ட கொடுப்பனவுகள்			
	பொலிஸ் திணைக்களம்	318,200,000.00	
அச்சகத் திணைக்களம் (வாக்குச் சீட்டு மற்றும் ஏனைய	அச்சிடல் அலுவல்கள்)	147,013,899.19	
	அஞ்சல் திணைக்களம்	209,000,000.00	
	அரச கைத்தொழிற்சாலை	3,511,538.84	677,725,438.03
5. தனியார் பிரிவுகளுக்கு செய்யப்பட்ட கொடுப்பனவுகள் (அச்சிடல் அலுவல்கள			
டொபேன் போம்ஸ் நிறுவனம் (உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை)		1,177,909.89	
டிஜி ஸ்கேன் பிரின்டின் பெகேஜ் லிமிடட் (உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை)		12,413,364.44	13,591,274.33
			2,126,812,337.97

உள்ளூரதிகார சபைத் தேர்தல் – 2011
மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களுக்கு கொடுப்பனவு செய்வதற்காக ஒவ்வொரு மாவட்டத்திற்காகவும் குறித்தொதுக்கப்பட்ட ஒதுக்கீடுகள்

மாவட்ட அலுவலகம்	மொத்த செலவு
கொழும்பு	65,357,243.85
கம்பஹா	69,956,195.34
களுத்துறை	43,564,660.19
கண்டி	38,882,734.63
மாத்தளை	22,286,257.08
நுவரெலியா	20,855,002.42
காலி	50,346,525.36
மாத்தறை	51,562,356.64
அம்பாந்தோட்டை	31,067,851.08
யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி	28,152,352.92
வவுனியா மற்றும் முல்லைத்தீவு	1,065,518.10
மன்னார்	4,346,715.90

மாவட்ட அலுவலகம்	மொத்த செலவு
மட்டக்களப்பு	7,763,502.01
அம்பாறை	48,416,473.88
திருகோணமலை	21,720,784.05
குருநாகல்	56,396,650.63
புத்தளம்	32,106,907.15
அநுராதபுரம்	32,775,567.79
பொலன்னறுவை	19,605,157.26
பதுளை	27,653,667.58
மொணராகலை	27,717,473.16
இரத்தினபுரி	36,932,958.75
கேகாலை	26,244,048.31
முழு மொத்தம்	**764,776,604.08**

கிளிநொச்சி மாவட்டத்திற்கான கொடுப்பனவுகள் யாழ்ப்பாண மாவட்டத்தின் கீழும், முல்லைத்தீவு மாவட்டத்திற்கான கொடுப்பனவுகள் வவுனியா மாவட்டத்தின் கீழும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

2011 ஆம் ஆண்டு உள்ளூர் அதிகார சபைத் தேர்தலுக்குரியதாக தேர்தல் செயலகத்திற்குக் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் தொடர்பான சுருக்கக் குறிப்பு

2011.01.06 ஆம் திகதி 301 உள்ளூர் அதிகார சபைகளுக்கான வேட்புமனு கோரல் அறிவித்தல் வெளியிடப்பட்டதோடு, வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்ட 65 உள்ளூர் அதிகார சபைகளுக்குரிய 68 வேட்புமனுக்கள் தொடர்பில் நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டமை காரணமாக அந்த 65 உள்ளூர் அதிகார சபைகள் மற்றும் நிலக்கன்னி வெடிகள் அகற்றல் நிறைவடையாமை காரணமாக மீள் குடியேற்றம் நிறைவு செய்யப்படாத இரண்டு உள்ளூர் அதிகார சபைகள் ஆகியவற்றின் தேர்தல்கள் பிற்போடப்பட்டன. அதற்கமைய 234 உள்ளூர் அதிகார சபைகளுக்கான தேர்தல் 2011.03.17 ஆம் திகதி நடாத்தப்பட்டது.

வேட்புமனு அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து தேர்தலுக்கு முன்னைய தினம் வரை 74 தேர்தல் சட்ட மீறல்களும் மற்றும் 45 வன்முறை சம்பவங்களும் மற்றும் வேறு ஒரு சம்பவமும் என்ற அடிப்படையில் 120 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன. அவற்றில் அதிகமான முறைப்பாடுகள் அம்பாறை மாவட்டத்திலிருந்து கிடைக்கப்பெற்றிருந்தது. கம்பஹா, களுத்துறை, கண்டி மற்றும் அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களிலிருந்து 10 இற்கு மேற்பட்ட எண்ணிக்கையான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன. சட்ட முரணான செயற்பாடுகள் தொடர்பான அதிக எண்ணிக்கையான முறைப்பாடுகள் களுத்துறை மாவட்டத்திலிருந்து கிடைக்கப்பெற்றிருந்தது. வாக்கெடுப்புத் தினத்தில் 100 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றதோடு, அவற்றில் 21 முறைப்பாடுகள் கம்பஹா மாவட்டத்திலிருந்து கிடைக்கப்பெற்றிருந்தது. கண்டி மாவட்டத்திலிருந்து 16 முறைப்பாடுகளும், மாத்தளை மாவட்டத்திலிருந்து 13 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றிருந்தன. சில மாவட்டங்களிலிருந்து முறைப்பாடுகள் எதுவும் கிடைக்கப்பெறவில்லை. வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை, பதுளை மற்றும் கேகாலை ஆகிய மாவட்டங்கள் முறைப்பாடுகள் கிடைக்கப்பெறாத மாவட்டங்களாகும். தேர்தலின் இரண்டாம் கட்டத்தின் கீழ் நீதிமன்ற நடவடிக்கைகள் காரணமாக பிற்போடப்பட்டிருந்த 65 உள்ளூர் அதிகார சபைகளுக்கான தேர்தல் 2011.07.23 ஆம் திகதி நடாத்தப்பட்டது. அத்தேர்தல் 2011.01.06 ஆம் திகதி வெளியிடப்பட்ட வேட்புமனு அறிவித்தலின் கீழ் 2011.02.01 ஆம் திகதி வெளியிடப்பட்ட தேர்தல் அறிவித்தல் மற்றும் 2011.08.30 ஆம் திகதி வெளியிடப்பட்ட திருத்தம் செய்யப்பட்ட தேர்தல் அறிவித்தலுக்கமைய நடாத்தப்பட்டது.

அதற்கமைய 2011.03.21 ஆம் திகதி தொடக்கம் 2011.07.23 ஆம் திகதி வரை இவ்வுள்ளூர் அதிகார சபைகளுக்குரியதாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் இதன் கீழ் உட்சேர்க்கப்பட்டுள்ளது. 65 உள்ளூர் அதிகார சபைகள் தொடர்பில் 78 சட்டமீறல்கள் மற்றும் 16 வன்முறைச் சம்பவங்கள் என்ற அடிப்படையில் 64 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன. கிளிநொச்சி மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களிலிருந்து சட்டமீறல்கள் தொடர்பான அதிக எண்ணிக்கையான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன. யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து வன்முறை செயல்கள் தொடர்பான 09 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன. தேர்தல் தினத்தன்று 83 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றதோடு, அவற்றில் 29 முறைப்பாடுகள் கம்பஹா மாவட்டத்திலிருந்தும், 22 முறைப்பாடுகள் கிளிநொச்சி மாவட்டத்திலிருந்தும் கிடைக்கப்பெற்றிருந்தன. வாக்கெடுப்புத் தினம் மு.ப 11.00 மணி – 12 மணிக்கு இடையில் அதிக எண்ணிக்கையான முறைப்பாடுகள் அறிக்கையிடப்பட்டிருந்தன. அம்முறைப்பாடுகளின் எண்ணிக்கை 18 ஆகும்.

தேர்தலின் மூன்றாம் கட்டத்திற்குரியதாக வேட்புமனுக் கையேற்றல் 2011 ஆகஸ்ட் 18 ஆம் திகதி தொடக்கம் ஆகஸ்ட் 25 ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை மேற்கொள்ளப்பட்டது. வேட்புமனுக் கையேற்றல் ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து தேர்தல் நிறைவடையும் வரையான முழுக் காலப்பகுதியினுள் தேர்தல்கள் செயலகத்தில் முறைப்பாட்டு கண்காணிப்பு நிலையம் செயற்பட்டு வந்தது. தேர்தல் 2011 ஒக்தோபர் 08 ஆம் திகதி நடாத்தப்பட்டதோடு, 2011.10.07 ஆம் திகதி வரை கிடைக்கப்பெற்ற மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை 171 ஆகும். அவற்றில் அதிகமான முறைப்பாடுகள் சட்ட மீறல்கள் தொடர்பில் கிடைக்கப்பெற்றன. அவ்வாறான முறைப்பாடுகள் 146 அறிக்கையிடப்பட்டதோடு, வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் எண்ணிக்கை 25 மாத்திரமாகும். அவற்றில் 11 முறைப்பாடுகள் மாத்தளை மாவட்டத்திலிருந்தும் 08 முறைப்பாடுகள் கொழும்பு மாவட்டத்திலிருந்தும் அறிக்கையிடப்பட்டிருந்தன.

சட்ட மீறல்கள் மற்றும் வன்முறை சம்பவங்கள் தொடர்பான அதிக எண்ணிக்கையான முறைப்பாடுகள் கொழும்பு மாவட்டத்திலிருந்து கிடைக்கப்பெற்றன. அம்முறைப்பாடுகளின் எண்ணிக்கை 76 ஆகும். வாக்கெடுப்புத் தினத்தன்று 195 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றதோடு, அவற்றில் 102 முறைப்பாடுகள் கொழும்பு மாவட்டத்தில் அறிக்கையிடப்பட்டிருந்தது. 40 முறைப்பாடுகள் கம்பஹா மாவட்டத்திலிருந்தும் 19 முறைப்பாடுகள் மாத்தளை மாவட்டத்திலிருந்தும் 10 முறைப்பாடுகள் குருநாகல் மாவட்டத்திலிருந்தும் அறிக்கையிடப்பட்டிருந்தன.

மேலே குறிப்பிடப்பட்ட முறைப்பாடுகளில் சட்ட மீறல்கள் தொடர்பில் சட்ட விரோத தேர்தல் பிரச்சார அலுவல்கள், வாக்காளர்களை அழைத்து வெவ்வேறு பொருட்களைப் பகிர்ந்தளித்தல், அரசாங்க பாடசாலைகளில் அரசியல் கூட்டங்களை நடாத்துதல், அரச வாகனங்களை தேர்தல் பிரச்சார அலுவல்களில் பயன்படுத்தல், சட்டவிரோத தேர்தல் பிரச்சார அலுவலகங்கள் நிருமாணிக்கப்படல் என்பவற்றைக் குறிப்பிட முடியுமென்பதோடு, வன்முறைச் செயல்கள் தொடர்பில் தாக்குதல், விகாரையொன்றுக்கு துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளல், முகவர்களை அச்சுறுத்தி விரட்டுதல், அலுவலகங்களுக்கு தீ வைத்தல் போன்றவற்றைக் குறிப்பிட முடியும். அம்முறைப்பாடுகளில் மற்றுமொரு தரப்பினரால் அம்முறைப்பாடுகள் உறுதி செய்யப்படுகின்ற மற்றும் தேர்தல் தொடர்பில் செல்வாக்கு செலுத்த முடியுமென கருதப்படுகின்ற முறைப்பாடுகள் மற்றும் அது தொடர்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பின்வருமாறு.

1. நிந்தவூர் பிரதேச சபைக்காகப் போட்டியிடுகின்ற இரண்டு வேட்பாளர்களான அலி மற்றும் புகாரி ஆகிய இருவர் மீது 2011.02.21 ஆம் திகதி தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் திரு. திஸ்ஸ அத்தநாயக்க அவர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பில் சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு அறிக்கையிட்டு சந்தேக நபர்களான எம்.ஏ.எஸ். தாகீர் அல்லது அஸ்வர், ஏ.சீ.ஏ. ஹக்கீம், கே.எச். சபாஸ், எம்.ஏ. தௌபீக் ஏ.எம். லத்தீப் மற்றும் ஏ.எம். முனபீர் ஆகியோர் கைதுசெய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டதாக அறிக்கையிடப்பட்டுள்ளது.
2. நிந்தவூர் பிரதேச சபையின் அதிகாரமளிக்கப்பட்ட முகவர் திரு. டீ. கமகே அவர்கள் நிந்தவூர் பிரதேச சபையின் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர்களான ஆர். நஸீர், ஐ. அலி, ஏ. புகாரி ஆகியோர் மீது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் வேட்பாளர் அஸ்ரப் தாக்குதல் நடத்தியுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது இது தொடர்பாக சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டதாக சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியினால் அறிக்கையிடப்பட்டுள்ளது.
3. பொத்துவில் பிரதேச சபையின் வேட்பாளரொருவரல்லாத திரு. எம்.பி.ஏ. அசிஸ் அவர்கள் பொது மக்களை ஏமாற்றி போலியான விதத்தில் தேர்தல் பிரச்சார அலுவல்களிலீடுபடுவதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் வேட்பாளரொருவரால் 2011.02.21 ஆம் திகதி முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக பொத்துவில் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி குறித்த சுவரொட்டிகளை அகற்றச் செய்ததாகவும் குறித்த நபர் எச்சரிக்கப்பட்டதாகவும் அறிக்கையிடப்பட்டுள்ளது.
4. அக்கரைப்பற்று மாநகர சபையின் வேட்புமனுப் பத்திரத்தில் பெயர் குறிப்பிடப்படாத நபரொருவர் மக்களை ஏமாற்றி போலியாக பிரச்சாரத்தில் ஈடுபடுவதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எச்.டீ.எச். அலி அவர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக சிரேட்ட பொலிஸ் அத்தியட்சகர் அம்பாறை அவர்கள் விசாரணை செய்ததாகவும் பொய்யான சுவரொட்டிகள் அகற்றப்பட்டதாகவும் குறித்த நபர் எச்சரிக்கை செய்யப்பட்டதாகவும் அறிக்கையிடப்பட்டுள்ளது.
5. களனி பிரதேச சபையின் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளர் திரு. நந்தசேன அவர்கள் கிரிபத்கொட நகரில் வைத்து தன்னை தாக்கி வாகனங்களுக்கு சேதம் ஏற்படுத்தியதாக ஐக்கிய தேசியக் கட்சியின் திரு. ரி.எம். பெரேரா அவர்கள் முறைப்பாடு செய்துள்ளார். இது தொடர்பில் முன்னணியின் வேட்பாளர் திரு. நந்தசேன அவர்கள் கைது செய்யப்பட்டதாக களனி சிரேட்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் அவர்களால் அறிக்கையிடப்பட்டுள்ளது.

6. களுத்துறை பிரதேச சபையின் ஐக்கிய தேசியக் கட்சியின் அதிகாரமளிக்கப்பட்ட முகவர் திரு. விஜயமான்ன அவர்கள் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளர் திரு. எஸ்.எஸ். ஆரியரத்ன அவர்கள் சட்டவிரோதமான கட்சி அலுவலகமொன்றைப் பேணி செல்வதாகவும் GD-2591, VW-5888, QQ-5565 மற்றும் 206-2578 ஆகிய இலக்கங்களைக் கொண்ட முச்சக்கர வண்டிகள் அவரின் பிரச்சார அலுவல்களுக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. குறித்த கட்சி அலுவலகம் அனுமதிக்கப்பட்ட ஒரு கட்சி அலுவலகமென களுத்துறை பொலிஸ் அத்தியட்சகரால் அறிக்கையிடப்பட்டுள்ளது.
7. அஞ்சல் வாக்கு அத்தாட்சிப்படுத்தும் அலுவலராக பணியாற்றுகின்ற மேஜர் கே. ஜயவீர அவர்கள் அஞ்சல் வாக்குகளை அடையாளமிடும் போது குறித்த சிவில் பாதுகாப்பு அலுவலர்களுக்கு அழுத்தம் கொடுப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் திரு. திஸ்ஸ அத்தநாயக்க அவர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக அம்பாறை மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்ட பின்னர் உதவித் தெரிவத்தாட்சி அலுவலரொருவர் உள்ளிட்ட அலுவலர் குழுவொன்று அந்தந்த நிலையங்களின் அஞ்சல் வாக்கு அலுவல்கள் மேற்பார்வைக்காக அனுப்பி வைக்கப்பட்டதாக அறிக்கையிடப்பட்டுள்ளது

8. லாஹுகல பிரதேச சபை அதிகார எல்லையினுள் அஞ்சல் வாக்கு அடையாளமிடம் நிலையங்களுக்குள் பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் வீரசேகர அவர்கள் உட்பிரவேசிப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் திரு. திஸ்ஸ அத்தநாயக்க அவர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பில் அம்பாறை மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் குறித்த பாராளுமன்ற உறுப்பினருக்கு தொலைபேசி மூலம் அறிவித்ததாகவும் தற்போது இப்பிரச்சினை தீர்க்கப்பட்டுள்ளதாகவும் அறிக்கையிடப்பட்டுள்ளது..

9. ஐக்கிய தேசியக் கட்சி சார்பாக திரு. ஆர். செனவிரத்ன அவர்கள் தம்புள்ள பிரதேச சபை அதிகார எல்லையில் கலேவெல பிரதேசத்தில் சட்டவிரோத பதாகை மற்றும் சுவரொட்டிகளைக் காட்சிப்படுத்துவதாகவும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வாகனமொன்றில் ஆயுதம் தாங்கிய நபர்கள் நடமாடுவதாகவும் அறிக்கையிடப்பட்டுள்ளது. இது தொடர்பில் ஆராய்ந்து பார்க்கப்பட்டுள்ளதாகவும் சட்டவிரோத பதாகைகள், சுவரொட்டிகள் என்பன அகற்றப்பட்டதாக அறிக்கையிடப்பட்டுள்ளது
10. 2011.03.17 ஆம் திகதி பி.ப 1.25 மணியளவில் பெபரல் நிறுவனத்தினால் காலி மாவட்டத்தின் எல்பிட்டிய, கலபொட கனிஷ்ட வித்தியாலயம் மற்றும் மல்வென்ன கனிஷ்ட வித்தியாலயம் என்பவற்று அருகில் பெரும் எண்ணிக்கையானோர் ஒன்று கூடி நிற்பதாகவும் இது வாக்காளர்களுக்கு இடையூறானதெனவும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அவ்விடத்தில ஒன்றுகூடியிருந்தோர் கலைக்கப்பட்டதாக எல்பிட்டிய பொலிஸ் அத்தியட்சகரால் அறிக்கையிடப்பட்டுள்ளது.
11. பதியதலாவ பிரதேச சபையின் வேட்பாளரொருவரின் சுவரொட்டிகள் பதியதலான தேசிய பாடசாலைக்கருகில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதாக திரு. எல்.எச்.பீ. குமார அவர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த அனைத்து சுவரொட்டிகளும் அகற்றப்பட்டதாக பதியதலாவ பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அவர்களால் அறிக்கையிடப்பட்டுள்ளது

12. பியகம பிரதேச சபையின் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் திரு. பீ.கே.சீ. பனாப்பிட்டிய அவர்கள் தாக்கப்பட்டு அவரது முச்சக்கர வண்டியும்

சேதமாக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் சிரேட்ட பொலிஸ் அத்தியட்சகரிடம் முறைப்பாடு செய்யப்பட்டதை தொடர்ந்து அது தொடர்பான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

13. கலேவெல, தம்புள்ள, பல்லேபொல பிரதேச சபை அதிகார எல்லைகளினுள் சட்டவிரோத பிரச்சார பதாகைகள், சுவரொட்டிகள் என்பன காணப்படுவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் அதிகாரமளிக்கப்பட்ட முகவர் திரு. ரஞ்சித் அலுவிகார அவர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அனைத்து சட்டவிரோத பிரச்சார பதாகைகளும் அகற்றப்பட்டுள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது

14. மாத்தளை லக்கல பிரதேச சபைக்குரிய நாவுல பிரதேசத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஆதரவாளர்கள் சிலர் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்களுக்கு அச்சுறுத்தல் விடுப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் திரு. முகந்திரன்கே அவர்கள் முறைப்பாடு செய்துள்ளார். இது தொடர்பில் சிரேட்ட பொலிஸ் அத்தியட்சகருக்கு முறைப்பாடு செய்யப்பட்டதை தொடர்ந்து அப்பிரதேசத்திற்கு மேலதிக பொலிஸார் அனுப்பி வைக்கப்பட்டதாக அறிக்கையிடப்பட்டது .

15. பொலன்னறுவை திம்புலாகல பிரதேச சபைக்குரிய மகுல்தெணிய வித்தியாலத்தின் அதிகாலை 3.00 மணியளவில் குண்டு வெடிப்பொன்று இடம்பெற்றுள்ளதாக வாக்கெடுப்புத் தினம் மு.ப 7.30 மணிக்கு பெபரல் அமைப்பின் முகவரொருவர் முறைப்பாடு செய்துள்ளார். இது தொடர்பில் பொலன்னறுவை சிரேட்ட பொலிஸ் அத்தியட்சகர் அவர்களால் விசாரணை செய்யப்பட்டதாகவும் சம்பவம் அதிகாலை 3.00 மணியளவில் இடம்பெற்றுள்ளதாகவும் இதன் காரணமாக வாக்கெடுப்பு நிலைய அலுவல்களுக்கு இடையூறுகள் இல்லையெனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

16. கடுவலை மாநகர சபையின் வேட்பாளர்களான திரு. புத்ததாச மற்றும் திரு. புத்திக ஆகிய இருவரும் கடுவலை நகரில் இரண்டு பாரிய ஊர்வலங்களை ஏற்பாடு செய்துள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பில் அறிவிக்கப்பட்ட பின்னர் நுகெகொட பொலிஸ் பரீட்சகர் இத்தரப்பினரை அமைதியாக கலைத்தாக அறிவிக்கப்பட்டுள்ளது.

17. எம்பிலிப்பிட்டிய பிரதேச சபையின் வேட்பாளரான வணக்கத்துக்குரிய வேவல்துவே ஞானபிரபா தேரரின் விகாரைக்கு துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக திரு. என்.எஸ் வணசிங்க அவர்கள் முறைப்பாடு செய்துள்ளார். இது தொடர்பில் விசாரணை செய்யப்பட்டு வருவதாகவும் விகாரைக்கும் மதகுரு அவர்களுக்கும் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக அறிக்கையிடப்பட்டதாகவும் விசாரணை நிலையமொன்று தாபிக்கப்பட்டதாகவும் இரத்தினபுரி மாவட்ட சிரேட்ட பொலிஸ் அத்தியட்சகர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது.

18. அகலவத்த பிரதேச சபையின் மக்கள் விடுதலை முன்னணியின் வேட்பாளர் திரு. சமந்த சிறிவர்தன அவர்களுக்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் குழுவொன்றினால் பிம்புர கனிஷ்ட வித்தியாலயத்திற்கு அருகில் தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளதாக மக்கள் விடுதலை முன்னணியிள் செயலாளர் திரு. ரில்வின் சில்வா அவர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இச்சம்பவம் வாக்கெடுப்பு நிலையத்திலிருந்து 1 கிலோ மீற்றருக்கு அப்பால் இடம்பெற்றுள்ள ஒரு சம்பவமெனவும் இதனூடாக வாக்கெடுப்புக்கு இடையூறுகள் ஏற்படவில்லையெனவும் தாக்குதலுக்குள்ளானவர் வாக்களிப்பு நிலையத்திற்குச் சென்று வாக்களித்துள்ளாரெனவும் அறிக்கையிடப்பட்டுள்ளது .

19. கிளிநொச்சி மாவட்டத்தின் கரச்சி பிரதேச சபை அதிகார பிரதேசத்தில் வட்டக்கச்சி, இராமநாதபுரம், கிருஷ்ணபுரம், பாரதிபுரம், கொக்குவில் பிரதேசங்களில் இராணுவத்தினர் நடமாடுவதாகவும் இராணுவ சீருடை அணிந்த சிலர் வீடுகளுக்கு வருகைதந்து உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை சேகரித்ததாகவும் திரு. சிவஞானம் சிறிதரன் அவர்கள் அவர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பில் தேவையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக சிரேட்ட பொலிஸ் அத்தியட்சகர் அவர்களால் அறிவிக்கப்பட்டது..

20. கரச்சி, பச்சிளைப்பள்ளி பிரதேச சபைக்குரிய சந்தாரி, வட்டயம்மான், வட்டக்கச்சி பிரதேசத்தில் 2011.07.22 ஆம் திகதி முகமூடி அணிந்த சிலர் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை சேகரித்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் திரு. ரஜிவ செனவிரத்ன அவர்கள் முறைப்பாடு செய்துள்ளார். இவ்வாறனதோர் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும் சந்தேக நபர்கள் இனங்காணப்படவில்லையெனவும் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அறிக்கையிடப்பட்டுள்ளது.

21. கரச்சி, பச்சிளைப்பள்ளி பிரதேச சபைக்குரிய இராமநாதபுரம், வட்டக்கச்சி, மலையாலபுரம் மற்றும் பாரதிபுரம், பச்சிளைப்பள்ளி ஆகிய பிரதேசங்களில் வாக்காளர் அட்டை மற்றும் அடையாள அட்டைகள் அபகரிக்கப்பட்டதாகவும் சட்டத்தரணி ஹரேன் பானகல அவர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பில் விசாரணை செய்யப்பட்டு வருவதாக அறிக்கையிடப்பட்டுள்ளது..

22. ககொலன்னாவ நகர சபைக்குரிய தாஹும்புர மக்களுக்கு பாராளுமன்ற உறுப்பினர் திரு. துமிந்த சில்வா அவர்கள் அச்சுறுத்தல் விடுத்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் திரு. ரஜிவ செனவிரத்ன அவர்கள் முறைப்பாடு செய்துள்ளார.
இது தொடர்பாக விசாரணை செய்யப்பட்டு வருவதாக நுகெகொட பொலிஸ் அத்தியட்சகர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது.

23. தெஹிவளை, கல்கிஸ்ஸ சயன்ஸ் கொலஜ்ஜில் அமையப்பெற்றுள்ள வாக்கெடுப்பு நிலையத்திற்கு அருகில் 301-8312 ஆம் இலக்க வாகனத்தில் மதுபானம் பகிர்ந்தளிக்கப்பட்டு தேர்தல் பிரச்சார அலுவல்கள் மேற்கொள்ளப்படுவதாக திரு. சாந்த ஹேவகே அவர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அவ்வாகனம் அங்கிருந்து அகற்றப்பட்டதாக கல்கிஸ்ஸ பொலிஸ் நிலைய பொலிஸ் பரிசோதகரால் அறிவிக்கப்பட்டுள்ளது. .

24. கொழும்பு மாநகர சபை அதிகார பிரதேசத்திற்குரிய மட்டக்குளி மஹவத்த வாக்கெடுப்பு நிலையத்திற்கு அருகில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்கள் துண்டுப் பிரசுரங்களைப் பகிர்ந்தளித்து வருவதாக திரு. சாந்த ஹேரத் அவர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. கூடியிருந்தோர் அவ்விடத்தை விட்டும் அப்புறப்படுத்தப்பட்டதாகவும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் மோதரை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது..

25. கிருலப்பனை லங்கா சபா வித்தியாலயத்தின் வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்காளர்களுக்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின்

ஆதரவாளர்கள் இடையூறு விளைப்பதாக திரு. கே.ஏ. ட்ராவோ பிரனாந்து அவர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அவ்வாறான ஒரு சம்பவம் அறிக்கையிடப்படவில்லையென கிருலப்பனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது.

26. கொலன்னாவ மாநகர சபைக்குரிய வதுல்ல வாக்கெடுப்பு நிலையத்தில் திரு. துமிந்த சில்வா உள்ளிட்ட சிலர் வாக்காளர்களுக்கு இடையூரான விதத்தில் நடந்து கொண்டதாக திரு. கே.ஏ. ட்ராவோ பிரனாந்து அவர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. குறித்த நபர்கள் அவ்விடத்திலிருந்து வெளியேற்றப்பட்டதாகவும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் கிரேன்பாஸ் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தலில் மூன்று கட்டங்களுக்குமுரிய சட்டமுரணான செயற்பாடுகள் மற்றும் வன்முறை செயல்கள் தனித்தனியாக ஒவ்வொரு மாவட்ட அடிப்படையில் தேரதல்கள் அலுவலகங்களுக்குக் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் தொடர்பான எண்ணிக்கை குறிப்பொன்று 12 ஆம் இலக்க குறிப்பில் காட்டப்பட்டுள்ளது..